சுவடிக்கலை

ஆசிரியர்

கழக இலக்கியச்செம்மல்

புலவர் இரா. இளங்குமரன்

அரிமாப் பதிப்பகம்

அம்மாப்பேட்டை சேலம்-636003.

முதல் பதிப்பு 1981

இரண்டாம் பதிப்பு 1995

© பதிப்பு உரிமைபெற்றது

விலை உருபா 80-00

அரிமாப் பதிப்பகம் வெளியீடு

அச்சிட்டோர்

பொன்முடி அச்சகம்

அம்மாப்பேட்டை சேலம்.636 008

தொலைபேசி 240221

பதிப்புரை

அரிமாப் புலவர்

செந்தமிழ் நூற்பரப்பில் இச்சுவடிக்கலை நன்னூலாக போற்றப்பெறும். தமிழின் பெருமையைக் காலந்தோறும் பாராட்டிப் போற்றி வந்துள்ளனர் நம்முன்னோர்கள்.

பல்வேறு துறைகளில் தமிழ் ஏற்றம் பெற்றிருக்கிறது. ஏற்றத்திற்கு உழைத்த பெருமக்களை எண்ணி மகிழ்கிறோம்.

மங்காப் பெரும்புகழ்கொண்டது, தொன்மை வாய்ந்தது, மூத்த தொல்குடி மரபினோர் போற்றிவளர்த்த பெருமையது என்றெல்லாம் பாராட்டிமகிழ்வர். இத்துறையில் உழைத்து செம்மாந்த புலமையினைப் பெற்ற நன்மக்களை எண்ணி நயந்து போற்றுகிறோம்.

தமிழில் இந்நூல் புதுமை சேர்க்கிறது. இது போன்ற நூற்கள் நலம்பயப்பன. புதிய நூற்பதிப்புகள் அறிவுவளம், சிந்தனைத்திறன் முதலாம் செழுமை சேர்ப்பன. பதிப்பகங்கள் நாட்டின் அறிவுத்திரனில் உரமேற்றி ஒளி கூட்டுவதாகும்.

இச்சுவடிக்கலை காலங்கடந்து வெளி வருகிறது. இவ்வருமையான நூலை எங்கள் அரிமாப் பதிப்பக வெளியீடாக வெளியிட உரிமை அளித்த செந்தமிழ் வித்தகர் பெரும்புலவர் இரா. இளங்குமரனார் அவர்கட்கு நன்றியினை உரித்தாக்குகின்றோம். எங்கள் கவனக் குறைவால் நேர்ந்த கால நீட்டிப்பிற்காக வருந்தி மன்னிக்க வேண்டுகிறோம்.

அருமையான இந்நூலை வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

புலவர் மி. மு. சின்னாண்டார்
அம்மாப்பேட்டை, சேலம்-636003.

நூல்வருமுறையும் நன்றியுரையும்

ஒவ்வொரு தனிமனித வாழ்வும் குமுகாயத்தைச் சார்ந்தே இயல்கின்றது. முற்றும் துறந்த துறவு வாழ்வே எனினும் குமுகாயத் துணை அறவே இன்றி இயலாது. ஆகலின் ஒவ்வொரு மனிதரும் குமுகாயத்திற்குக் கடன்பட்டவரே என்பதும், அக்கடனைத் தீர்ப்பதற்குரிய கடப்பாடு உடையவரே என்பதும் அடிப்படை உண்மைகளாம்.

இருந்த இடத்திலே இருந்து கொண்டே உலக நடவடிக்கைகளை நேருக்கு நேர் கேட்கிறோம்; நேருக்கு நேர் அப்படி அப்படியே காண்கிறோம்; பல்வேறு ஊர்திகளில் உலா வருகின்றோம்; காலத்தையும் இடத்தையும் சுருக்கிக் கைவந்த நலங்கள் கொள்கிறோம். இவற்றையெல்லாம் எய்தித் துய்க்கும் பொழுதில் இந்நலங்களையெல்லாம் ஒருங்கே நாம் எய்துதற்குப் பாடுபட்ட பண்புசால் மக்களை எண்ணி நெஞ்சார வாழ்த்தி நேயம் கூர்ந்து இருக்க வேண்டுமேயன்றோ! அந்நினைவு நமக்குத் ததும்புகின்றதா ?

நம் ஊணுக்குள் எத்துணைப் பேர்களின் உழைப்பு அமைந்துள்ளது? நம் உடைக்குள், எத்துணைப் பேர்களின் பாடு ஊடாடியிருக்கின்றது? நம் உறைவிடத்துள், எத்துணைப் பேர்களின் முழுதுறு முயற்சி கெழுமிக் கிடக்கிறது? நாம் எண்ணிப் பார்த்து நம்மால் அவ்வுழைப்பாளர்க்குச் செலுத்தவேண்டிய கடனைக் குன்றாமல் குறையாமல் செலுத்த வேண்டும் அல்லவோ! அப்படிச் செலுத்துதல்தானே உலக நலங் குறித்த ஒழுக்கமாம். அதனால் தானே, பொய்யாமொழியார் ''பண்புடையார்ப் பட்டுண்டுலகம்'' என்றார்.

உண்டி, உடை, உறைவிடம், உதவும் ஏந்துகள் என்பனவெல்லாம் உயர்ந்தவையே! ஆனால் இவற்றுக்கெல்லாம் மூலமாகவும் மாந்தரை, மாந்தர் என அடையாளம் காட்டுவதாகவும் தாம் பெற்ற இன்பம் பிறரும் எய்துமாறு செய்விக்கவல்லதாகவும் வாய்த்தது மொழியேயன்றோ! ''மொழி இல்லாவிட்டால் என்ன? மொழியறிவால் வாழ்வுச் சிக்கலைத் தீர்த்துவிட முடியுமா?'' என்பவர் உளரானால், அவர்கள் அடிப்படைச் சிந்தனையை அறவே

துறந்து விட்டவர்கள் ஆவர் மொழியறிவில்லாத நாளில் வாழ்ந்த காட்டு விலங்காண்டு வாழ்வு படிப்படியே மாறி மாறி இதுகால் எய்திவரும் உயரிய எண்ணங்கள் ஏற்றங்கள் எல்லாம் மொழியால் நாம் அடைந்தனவேயாம் என்பதை மேலோட்ட மாக எண்ணுவாரும் அறிவர்.

மொழிவல்லாரெல்லாம் 'புதியது புனையும்' புலமையரோ என்பரேல், ''புதியது புனைந்தவர் புனைவெல்லாம் மொழிவழியே தாம் நாம் அடைகின்றோம்; அடையவும் செய்வோம். அவ்வாறு அடைவதை அன்றி மாற்று வழியோ. குறுக்கு வழியோ வேறொன் றும் இன்றும்'' என்க. இவற்றால், ஒவ்வொருவரும் அவர்தம் தாய்மொழியைப் போற்றிக் காத்தலும், புதுப்புதுத் துறைகளால் வளர்த்தலும் இன்றியமையாததாம்.

ஒரு பொருளின் மதிப்பு எவ்வாறு முடிவு செய்யப்படுகிறது? தங்கத்திற்கும், இரும்பிற்கும் ஏன் விலை மான வேறுபாடு? ஒரு பொருள் கிடைத்தற்கு அல்லது ஆக்குதற்கு எடுத்துக் கொள்ளப் பட்ட முயற்சி, அதன் பயனீடு, எளிதாகக் கிடைக்காத அருந்தல் நிலை, இவற்றைக் கொண்டெல்லாம் விலைமான ஏற்ற இறக்கம் எய்துகின்றது. அவ்வகையில், நம் தாய்த் தமிழ் மொழியையும், அதன் இலக்கண இலக்கிய நூல்களையும் மதிப்பிடுதற்கு இச்சுவடிக் கலை உதவும் – உதவவேண்டும் – என்னும் உந்தும் உணர்வால் இயற்றப்பெற்றதாம்.

கடல்கோளால் ஒழிந்த நூல்கள் எத்துணை எத்துணை! எரி நெருப்புக்கு இரையாய நூல்கள் எத்துணை எத்துணை? கறையானுக் கும் கால அழிப்புக்கும் உட்பட்ட நூல்கள் எத்துணை எத்துணை? ''அனலில் அழியாத தமிழ்; புனலில் போகாத தமிழ்'' என்று சொல்லிக்கொண்டே அறிவறியா மூடத்தையே அணிகலமாகக் கொண்டவர்கள் பதினெட்டாம் பெருக்குக்கும் 'ஆகுதித்' தீயிற் கும் படைத்தொழித்த நூல்கள் எத்துணை எத்துணை? இவற்றுக்கும் இடையேயும் அங்கொருவரும் இங்கொருவருமாக இருந்து ஏடு களைத் தொகுத்து வைத்த ஏந்தல்கள் தொண்டு எளிமை யானதோ?

''வண்டியில் ஏற்றும் அளவுக்கு ஏடுகள் மண்டியிருந் தன'' என்று பாராட்டுமளவுக்கு - தலைமறைக்குமளவுக்கு மலை போலக் குவிக்கப்பட்ட சுவடிகள் என்று வியப்புறுமளவுக்கு - ஏடு களைத் தொகுத்து வைத்திருந்தாரும், அவர்களுள் இருந்தனர் என்றால். அவர்கள் எத்தகு பாராட்டுக்கு உரியவர்கள் - அவர்கள்

அன்று காத்திராவிட்டால், அவற்றைப் பதிப்பித்தோ, பதிப்பாளர்க்கு உதவியோ நிலைபெறுத்தியிராவிட்டால் இன்று நாம் ஒல்காப்புலமைத் தொல்காப்பியம் உடையோம்; ''உள்ளுதோறுள்ளுதோறுள்ளம் உருக்கும் வள்ளுவர் வாய்மொழி'' உடையோம்; ''நெஞ்சையள்ளும் கொஞ்சு தமிழ்ச் சிலம்பை உடையோம்'' என்று கூறிக் கூறிப் பெருமிதம் அடைய முடியுமோ? ' தொல்பழந்தமிழ்'' என்பதையோ, ''ஞாலத்தின் முதன்மொழி'' என்பதையோ, ''என்றுமுள தென்றமிழ்'' என்பதையோ சான்று கொண்டு நிறுவவும் முடியுமோ?

மூலவைப்பகமாம் நூல்கள் கிட்டாத நிலைமையிலேயே கிடைத்த நூல்கள் அளவில் ஆராய்ந்த கால்டுவெலார், தமிழ் ''உயர்தனிச் செம்மொழி' என்பதையும், ''பிறமொழியின் தொடர்பு இல்லாமல் இயங்க வல்லது'' என்பதையும் வெளிப்படத் தெளிவாக்கினர். அவர்க்குத் தொல்காப்பியமும் கழகநூல்களும், காணும்பேறு வாய்த்திருந்தால் 'ஞாலமுதன்மொழி ஈதே' என்னும் முடிவுக்கும் வந்திருப்பார்! உலகெல்லாம் கூட்டுண்ணவும் வைத்திருப்பார்!

முகில் மூட்டம் எவ்வளவுதான் மறைத்தாலும் கதிரின் முழுதொளி வெளிப்படாது இருப்பதில்லையே! அந்நிலை, இந்நாட்டார் முயலாவிடினும்—தடைபல புரிந்து நடைமுறை கெடுத்தார் எனினும்—அயல்நாட்டு ஆய்வாளர்களால் வெளிப்படுதல் ஒருதலையாம்! இதற்கெல்லாம் அடிப்படையாய் அமைந்த பழந்தமிழ் நூற்சுவடிகளைப் போற்றிப் பாதுகாத்தும் பதிப்பித்தும் உதவிய பெருமக்களை நெஞ்சார நினைந்து நன்றி பாராட்டு முகத்தான் எழுந்ததே இச் சுவடிக்கலையாம்!

நம் நன்றியை நினைத்தோ அவர்கள் பாடுபட்டனர்? 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்னும் ஊற்றத்தில் பணிசெய்த அவர்கள் நம் பாராட்டை விரும்பிச் செய்தனர் அல்லர்; ஆனால், நாம் நினைவுகூர்தல், நம் நன்றிக் கடனாதலுடன், நம்மையும் நம் மொழியையும் வாழவைத்தற்கும், வழிவழி வருவார்க்கு வரலாற்றுண்மை எடுத்துரைத்தற்கும் வாய்ப்பாம் என்பதால் இத்தகு நூல்கள் வேண்டுவனவாம்.

''ஏடுகள் தொகுத்து வைக்கப் பெற்றுள்ள இடமே தமிழ்க் கோயில்'' என்பதுதொடங்கி நடையிடுகிறது இச் சுவடிக்கலை அக் கோயில் வழிபாடு செய்யும் தொண்டராவார் இவர்இவரெனச் சுட்டுகிறது.

சுவடி என்னும் சொல்லாய்வு பொருளாய்வுகளில் புகுந்து சுவடிக்கு அமைந்த அகப்பகை புறப்பகைகளை விளக்குகிறது; சுவடியில் எழுதும் எழுத்தாணிபற்றியும், தமிழ் எழுத்து வடிவம் பற்றியும் ஆராய்கிறது. ஏடுகளைப் போற்றிக் காத்தவர்களையும், ஏடுதொகுத்தவர்களையும், பதிப்பாளர்களையும் விரித்துச் சொல்கிறது. பொருட் செல்வர் போலவே சுவடிச் செல்வருள்ளும் இரு வேறு வகையர் இருத்தலைக் குறித்துக் காட்டுகிறது.

பதிப்புப் பணியைக் கால வரிசையில் கருதியுரைக்கிறது. பதிப்புப்பணியை எதிர்காலத்துச் செய்ய வருவார்க்குப் படிப்பினையாக நிறையும் குறையும், செய்யத்தக்கன என்பவற்றை விரிகின்றது. ஆய்வு நூற்பட்டியும், வெளியீட்டு நூல்பட்டியும், சிறப்புப் பெயர் அகராதியும் இணைப்பாகத் தொடர்கின்றன. இன்னும் எத்துணையோ விரிவாகவும் விளக்கமாகவும் வரவேண்டிய இச் சுவடிக்கலை, அறிமுக நூல் என்னும் பெயரால் இயன்ற அளவும் சுருங்கியே வெளிவருகின்றது. உள்தலைப்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு நூலாதற்குரியது என்பதை ஆராய்ச்சியாளர் நன்கு அறிவர் ஆகலின், ஒரு சிறியமுயற்சி எனக் கொள்வாராக.

1975–76 ஆம் ஆண்டுகளில் நான்கு திங்கள் காலம் சென்னை இலிங்கிச் செட்டித் தெருவில் அமைந்துள்ள 'மறைமலை யடிகள் நூல் நிலையத்து, 'வள்ளலார் திருவருள் மண்டபம்' என் உறையுளாக இருந்தது! அந்நான்கு திங்களும், ஆராவிருப்பால் அமைந்துண்ணும் அமுழ்தத் தமிழ்ச் சுவடிகளை அருளியது அடிகளார் நூலகம்! நூலக நிறுவனர் தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் தண்ணளியும், அவர்கள் மருகரும் இந்நாள் கழக ஆட்சியாளரும் அந்நாள் அடிகளார் நூலக நூலகருமாகிய திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிப்., அவர்கள் அரவணைப்பும், ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என்னும் இறைமொழியை நிறைமொழியாக்கி என்னைத் தளிர்ப்பித்தன. இடைஇடையே திருவான்மியூர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையமும், கன்னிமாரா நூல் நிலையமும் அரசினர் ஓலைச்சுவடி நூலகமும் என் ஆர்வமிக்க ஆய்வுக்கு நிழல் தந்துதவின. என் இளந்தைப் பருவந் தொட்டே யான் தொகுத்து வைத்துள்ள நூல்களும் உதவின. இவற்றால் உருக்கொண்டது இச்சுவடிக்கலையாம். ஆதலால் இங்குச் சுட்டப் பெற்ற பெருமக்களையும் நூலகப் பொறுப்பாளர்களையும் நெஞ்சார நினைந்து நன்றி செலுத்துகிறேன். பயன்கொண்ட

அந்நூல்களையெல்லாம் வெளியிட்ட பெருமக்களையும், அவர்களுக்கு ஏட்டுச் சுவடிகள் உதவிய சான்றோர்களையும் நினைந்து வழிபடுகிறேன்.

எட்டாண்டுகளுக்கு முன்னரே எழுதி முடிக்கப்பெற்று இப்பொழுது வெளிப்படுகின்றது. இதனை வெளியிடுபவர் சேலம் அரிமாப் பதிப்பகத்தார்; பதிப்பக உரிமையாளர் அரிமாப் புலவர் திருமலி மி. மு. சின்னாண்டார் ஆவர். இவர் மொழி ஞாயிறு பாவாணர்க்கு அன்பர்; அணுக்கர்; அவர்க்கு உற்றுழி உதவிய உரிமையர்; பாவாணர்க்கும் இவர்க்கும் இருந்த கடிதத் தொடர்பு பெரிது! சிந்திச் சிதறியவை போக எஞ்சியவையாக 173 கடிதங்களை கைவயம் கொண்டுள்ளார்! பாவாணர்க்கும் இவர்க்கும் உள்ள நெருக்கம் இதனால் வெளிப்படும். இத்தகு ஆர்வலர், சுவடிக்கலையை வெளியிடும் பொறுப்பைத் தம்பதிப்பக வழியே மேற்கொண்டார். அன்றியும் இதன் மெய்ப்பை முற்றாகத் தாமே பார்த்துதவும் கடமையையும் எடுத்துக்கொண்டுள்ளார். ஆகலின் ஒன்றாக இரண்டாக ஒன்றிய நன்றியை அவர்க்கு உரைத்துக் கொள்கிறேன்.

எத்தனை எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும் இத்தந்தையர் தாயர் மகவாப் பிறக்கும் பேறு வேண்டும் என்னும் ஏக்கத்தை எப்பொழுதும் எழுப்பிக் கொண்டிருக்கும்; எந்தையும் தாயுமாம் படிக்கராமர் வாழவந்தாள் பொன்னார் திருவடிகளுக்கு, இச் சுவடிக்கலையை 'அடியுரை' யாக்கி வழிபடுகின்றேன்.

பாவாணர் ஆராய்ச்சி நூலகம்
''தமிழ்ச் செல்வம்''
திருநகர், மதுரை-6.

தமிழ்த் தொண்டன்
இரா. இளங்குமரன்



பொருளடக்கம்

		பக்கம்
	பதிப்புரை	க
	நூல்வருமுறையும் நன்றியுரையும்	ரு
1.	தமிழ்க் கோயில்	1
2.	தமிழ்த் தொண்டர்கள்	4
3.	ஏடும் எழுத்தாணியும்	9
4.	இயற்கைக் கேடும் செயற்கைக் கேடும்	19
5.	நயத்தகு நலங்கள்	51
6.	தமிழ் வரிவடிவும் மாற்றங்களும்	63
7.	ஏடுபோற்றிய பீடுடையாளர்	77
8.	ஏடு தொகுத்த ஏந்தல்கள்	106
9	பழந்தமிழ்ப் பதிப்பாளர்கள்	134
10.	கொடையாளரும் கருமியும்	155
11	பதிப்புப் பணி	164
12.	நிறையும் குறையும்	305
13.	செய்யத்தக்கன	335
	இணைப்பு — 1	351
	இணைப்பு — 2	355
	இணைப்பு — 3	361

சுவடிக்கலை

1. தமிழ்க் கோயில்

உலகத்தில் தாய் வழிபாடே தொன்மையானது என்பர். தாய் வழிபாட்டில் இருந்தே தெய்வ வழிபாடு தொடங்கியது என்றும் கூறுவர். பெற்ற தாயையும், பேசும் மொழியையும், பிறந்த நாட்டையும் தெய்வமாகப் போற்றுவது தமிழர்களின் வழக்கமாகும். தாய் வழிபாடே, தாய்மொழி வழிபாடாகவும், தாய்நாட்டு வழிபாடாகவும் விரிவடைந்தது என்பது பொருந்தும்.

"தமிழ்த் தெய்வத்தை உள் நினைந்து ஏத்தல் செய்வாம்" என்று தமிழ்த் தெய்வத்தை வழிபட்டு நூல் தொடங்குவது புலவர்கள் வழக்கமாயிற்று. "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர், விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்று தமிழ்ப் பணியையே தெய்வத் திருப்பணியாகக்கொண்டு வாழ்ந்த புலவர் பெருமக்களும் இருந்தனர். அவர்கள் தமிழ் ஏடுகளைத் தொகுத்தும் படியெடுத்தும் பாதுகாத்தும் ஆராய்ந்தும் தம் பணியைத் தமிழ்த் தெய்வ வழிபாடாகவே செய்து வந்தனர். தம்மைத் தேடிவந்த மாணவர்களுக்கு உண்டியும் உடையும் உறையுளும்வழங்கி உள்ளார்ந்த அன்பொடும் தந்தை நிலையில் இருந்து தாய்மொழி இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்தனர். இத்தகைய தமிழ்த் தொண்டர்களின் தகுதி மிக்க செயல்களாலேயே, "எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே" என்று நாம் பெருமிதத்தோடு இன்று வாழ்த்துப் பாட முடிகின்றது. வாழ்த்துப் பாடுவது நமக்கு எளிமையானது! ஆனால் தமிழை வாழவைத்த பெருமக்கள் வாழவைப்பதற்காகப் பட்டபாடுகள் எத்துணை! எத்துணை!

வறுமைக்கும், முதுமைக்கும், நோய்க்கும், பகைக்கும், தீக்கும், நீருக்கும், செல்லுக்கும், அந்துக்கும் இடையே போராடிப் போராடிப் பட்ட அல்லல்கள் எத்துணை! எத்துணை!! 1 அவர்கள் செய்த செயற்கரும் தொண்டுகளைக் காண்பதே இச் 'சுவடிக் கலை' ஆகும்.

ஏடுகளைத் தொகுத்தலும், ஆராய்தலும், பதிப்பித்தலுமே தவவாழ்வாகக் கொண்டவர் பெரும்பேராசிரியர், தென்மொழிச் செல்வர் அறிஞர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஆவர். தாம் வாழ்ந்த இல்லத்தைத் 'தமிழ்க் கோயில்' ஆக்கிய பெருந்தகை அவர். தாம் கண்டு களிகூர்ந்து கனிந்துருகி வழிப்பட்ட தமிழ்க் கோயில்களை 'என் சரித்திர'த்தில் இயம்புகிறார்:

திருநெல்வேலி "மேலைவீதியில் உள்ள கவிராஜ ஈசுவர மூர்த்திப் பிள்ளை வீட்டில் புத்தக அறை இருந்தது. அதுதான் அவர்கள் பரம்பரை வீடு. புத்தக அறையைத் திறந்து காட்டினார்கள் பார்த்தவுடன் என் உடம்பு சிலிர்த்தது 'தமிழ்ச் சங்கத்தில் முன்பு இப்படித்தான் சுவடிகளை வைத்திருந்தார்களோ?' என்று விம்மிதமடைந்தேன். ஏட்டுச் சுவடிகளை அடுக்கடுக்காகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார்கள். சுவடிகளைக் கட்டிவைத்திருந்த முறையே திருத்தமாக இருந்தது. புழுதி இல்லை; பூச்சி இல்லை; ஏடுகள் ஒன்றோடொன்று கலக்கவில்லை. தமிழ்த் தெய்வத்தின் கோயிலென்று சொல்லும்படி இருந்தது அவ்விடம்" 2

பத்துப் பாட்டுச் சுவடிகளைத் தேடிக்கொண்டு ஐயரவர்கள் அலைந்த காலம் அது. அச்சுவடி அங்கேயும் முழுமையாகக் கிடைக்கவில்லை! 'இனி வேறு எங்கே கிடைக்கப்

---

1 "தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்" எனத் தாயின் மணிக்கொடியைப் புகழ்வது நமக்கு எவ்வளவு எளிதானது! ஆனல் தாயின் மணிக்கொடியினுள்ளே அடங்கிக்கிடக்கும் 'தியாக' வரலாறுகள் எத்துணை! எத்துணை! என்பதை எண்ணிப் பார்ப்பவர் இதனைத் தெள்ளிதின் உணரமுடியும்.

2 என் சரித்திரம் பக். 873.

போகிறது?' என்று துயருற்ருர். "சங்கப் புலவருடைய வீட்டைப்போல விளங்கும் இவ்விடத்தில் தமிழ்ச் செல்வம் முழுவதும் கிடைக்குமென்று முதலில் எண்ணினேன். நான் எதைத்தேடி வந்தேனே அது முற்றும் கிடைக்கவில்லையே! தமிழுலகத்தில் இந்தத் தமிழாலயத்தைக் காட்டிலும் சிறந்த இடம் எங்கே இருக்கப்போகிறது! இங்கே அகப்படாதது வேறு எங்கே அகப்படும்! சங்கத்துச் சான்றோர்கள் இயற்றிய நூல்களைத் தமிழுலகம் இப்படி ஆதரவின்றிப் போக்கி விட்டதே!" 1 என்று வருத்தத்தோடு கூறினர்.

மிதிலைப்பட்டி என்றவுடன் தமிழாராய்ச்சியாளர்களுக்கு அழகிய சிற்றம்பலக் கவிராயர் நினைவே உண்டாகும். அப்புலவர் பெருமகனர் வீட்டுக்கு ஐயர் ஏடு தேடிச் சென்ருர். அழகிய சிற்றம்பலக் கவிராயர் வீட்டிலுள்ள ஏட்டுச் சுவடிகளைக் கண்டார். 'அவர் வீடு தமிழ் மகள் ஆலயமாகத் 'தோற்றியது' 2 கண்டு விசுமிதம் அடைந்தார்.

ஏடுகளைத் தொகுத்துப் பாதுகாத்த புலவர் பெருமக்கள் இல்லங்களே 'தமிழ்க் கோயில்கள்' என்பது 'தமிழ்த் தாத்தா'வின் தேர்ச்சியுரை. அத்தமிழ்க் கோயில் தொண்டர்களாக விளங்கிய புலவர் பெருமக்களே தமிழ் ஆழ்வார்கள், தமிழ் நாயன்மார்கள், தமிழ்ப் பிக்குகள், தமிழ்த தீர்த்தங்கரர்கள், தமிழ் அடியார்கள்! 'அவர்கள் அடிப்பொடி எம் முடி மேலன' எனக்கொண்டு எழுப்பப்பெறும் தமிழ்க் கோயில் இச்'சுவடிக் கலே!'

1 என் சரித்திரம் பக். 874.

2 ,, பக். 944.

2. தமிழ்த் தொண்டர்கள்

தொல்காப்பியம் ஏறத்தாழ மூவாயிர ஆண்டுப் பழமையான நூல். அதனை இன்று நாம் அச்சு வடிவத்தில் காண்கிறோம் அதனை முதற்கண் பதிப்பித்த அறிஞர்களுக்கு ஏட்டுச் சுவடிகளே மூலமாக இருந்தன. அந்த ஏட்டுச் சுவடிகள், ஆசிரியர் தொல்காப்பியனார் கையெழுத்தில் இருந்தனவா? இல்லை! தொல்காப்பியனார் கையெழுத்து எவ்வாறு இருக்கும் என்பதை நாம் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு இல்லை. ஒருவேளை, தொல்காப்பியனார் எழுதிய எழுத்தே நம் கைக்குக் கிடைத்திருக்குமானால் அதனை நாம் படிக்கமுடியாமல் போகலாம்! நாம் இப்பொழுது எழுதும் எழுத்தைத் தொல்காப்பியனார் பார்ப்பாரானால் அவரால் படிக்கமுடியாமல் போகவும் கூடும்! ஏனெனில், அவர் காலத்தில் எழுதப்பட்ட எழுத்திற்கும் இப்பொழுது நாம் எழுதும் எழுத்திற்கும் இடைப்பட்ட வேறுபாடுகள் மிகுதியாம். இவ்வாறாகவும், தொல்காப்பியனார் நூலை, அவர் கூறியமுறையில் சரியான பொருளில் அறிந்துகொண்டு படிக்கவும் புலமை பெறவும் ஆராய்ச்சி செய்யவும் நம்மால் முடிகின்றன என்றால் வியப்பாகவே தோன்றும் அந்த வியப்பான வேலையைக் காலந்தோறும் தவறாமல் செய்துவந்த புலமைச் செல்வர்கள் எவர்கள் என்று அறியவும் ஆவல் தோன்றும்!

தொல்காப்பியர் தாம் இயற்றிய நூலைச் சுவடியிலே எழுதி வைத்திருப்பார். அவரிடம் பயின்ற மாணவர்களுக்கு அந்நூலை ஓதியிருப்பார்; அவர்களுக்கு அந்நூல் பாடம் செய்தற்கு வேண்டியதாக இருந்திருக்கும்; ஒரு சுவடியை

வைத்துக்கொண்டு பல மாணவர்கள் என்ன செய்ய இய லும்? தத்தமக்கு வேண்டும் என்னும் ஆர்வத்தால் ஒவ் வொரு படி அவர்கள் எழுதிக் கொண்டிருப்பார்கள். பின்னே அவர்கள் வெவ்வேறு இடங்களில் சென்று புலமைத் தொழில்நடாத்த நேர்ந்திருககலாம். அவர்களுக்கு மாணவ ராயினர் பலராகலாம் அவர்கள் அனைவருக்கும் ஒரு சுவடி போதாதே! ஆதலால், ஆசிரியர் வைத்திருந்த சுவடியைப் பார்த்து அவர் மாணவர்களும் படியெடுத்துக்கொண்டிருப் பார்கள். ஆசிரியர்க்கு நண்பர்களாகிய ஆசிரியர்களும், புலமையாளர்களும் தொல்காப்பியத்தின் அருமை பெரு மைகளைக் கேள்வியுற்றுத் தாமும் அதனைப் படியெடுத்துக் கொண்டிருப்பார்கள் இப்படியே தொல்காப்பியம் தமிழ் கூறு நல்லுலகத்துப் புலமைச் செல்வர் இல்லங்களிலெல் லாம் கோயில் கொண்டிருத்தல்வேண்டும்.

ஏட்டுச் சுவடிகள் எவ்வளவு காலம்தான் அழியாமல் இருக்கமுடியும்! அச்சிட்ட புத்தகங்களே நூற்றுண்டு வாழ் வது அரிதாக இருப்பது கண்கூடு. அவ்வாறாகவும் ஏட்டுச் சுவடிகள் கால வெள்ளத்தை - மூவாயிர ஆண்டுக் கால வெள்ளத்தைக் - கடந்து வெற்றி கொள்ள முடியுமா? சிறந்த சுவடியாகத் தேர்ந்து சீரிய பாடங்கள் செய்து, போற்றிக் காக்கப்பெற்று வரும் ஏட்டுச் சுவடிகளே முந் நூறு, நானூறு ஆண்டுக்காலட வாழமுடியும் என்பர்! அவ் வாறாக மூவாயிர ஆண்டுள் எத்துணையோமுறை, தவறாமல் படியெடுதது பாதுகாத்து வந்தமையால்தான் நம் கையில் தொல்காப்பியனார் அருளிய தொல்காப்பியம் கிடைத்தது. ஒவ்வொருவரும தாம் படித்துவரும் ஏட்டையே படி யெடுத்தமையால் காலந்தோறும் ஏற்பட்டுவந்த எழுத்து மாற்றங்கள் அவர்களுக்குப் புதிதாகத் தோன்றாமல் - மயக் கம் உண்டாக்காமல் - இயல்பாகத் தோன்றின. வழி வழியே படியெடுக்கவும் படிக்கவும் தடையின்றி ஆயிற்று. இத்தகைய படியெடுப்புப் பணி இல்லாது போயிருக்குமா ஞல் தொல்காப்பியனார் கையெழுத்துச் சுவடியே நமக்குக் கிடைப்பினும் நன்மை எளிமையாக வாய்த்திராது. கால

இடைவெளி வழித்தடத்தையே மாற்றியமைப்பது போல, மொழித் தடத்தையும் மாற்றியமைத்துவிடும் அல்லவா!

பிராமி எழுத்தில் சில கல்வெட்டுகள் கிடைத்தன. ஆனால் அவற்றைப் படிக்கமுடியவில்லை. படிக்கமுடியாத கல்வெட்டால் ஆகும் பயனென்ன? ஓர் அறிஞர் - 'ஜேம்ஸ் பிரினஸெப்' அயராது முயன்றார்! தொடர்பற்றுப் போன பிராமி எழுத்துக் கல்வெட்டைப் படிப்பதற்குத் தாழ்க்கோல் கண்டுபிடித்தார்.

"இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் மிகப் பழைய காலத்தில் வழங்கிவந்த நாணயங்களில் ஒருபக்கம் பிராமி எழுத்தும் மற்றொருபக்கம் கிரேக்க எழுத்தும் எழுதப்பட்டிருந்தன. கிரேக்க எழுத்துகளின் உதவியினால் அந்த நாணயங்களில் இருந்த பிராமி எழுத்துகளை இவர் வாசித்தார். இவ்வாறு சில பிராமி எழுத்துகளின் ஒலியைத் தெரிந்து கொண்டு. பின்னர் மேலும் ஆராய்ந்து மற்றைப் பிராமி எழுத்துகளின் ஒலியையும் கண்டறிந்தார். இவ்வாறு மறைந்து மறக்கப்பட்டுக் கிடந்த பிராமி எழுத்துக்களைப் படிப்பதற்குத் திறவுகோல் - கண்டுபிடிக்கப்பட்டபடியால், பிராமி எழுத்துச் சாசனங்கள் வாசித்துப் பொருள் அறியப்பட்டன,"[1] தொடர்பற்றுப்போனால் தொல்காப்பியத்தின் நிலைமையும் இவ்வாறுதானே ஆகியிருக்கும்! இந்நிலை ஆகாமல், வழிவழியே படியெடுத்துப் பாதுகாத்த புலமையாளர்களே, நமக்குத் தொல்காப்பியம் என்னும் கருவூலத்தைக் கைம்மேல் தந்த வள்ளல்கள் ஆவர். இவர்கள் தமிழ்த் தொண்டர் வரிசையில் முதல்வர் ஆவர்.

அடுத்துத் தமிழ் இலக்கிய இலக்கணங்களாக நமக்குக் கிடைத்துள்ளவற்றை நோக்குங்கால் சில செய்திகள் புலப்படுகின்றன.

க) பழமையானவற்றுள் மூலமாகமட்டும் இருந்த நூற்சுவடிகள் மிகுதியாக அழிந்துள்ளன.

---

1 19-ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் பக். 55, 6.

உ) உரையுடன் கூடிய நூற்சுவடிகளே மிகுதியாக நமக்குக் கிடைத்துள்ளன.

ஊ) 1 உரையாலேயே மூலபாடத்தைக் கண்டு நூலாக அமைத்துக்கொள்ளவும் நேர்ந்துள்ளது.

எ) உரைகளாலேயே நாம் இழந்துபோன தமிழ்ச் செல்வங்களின் பெயர்களையோ பகுதிகளையோ குறிப்புகளையோ அறிந்துகொள்ள முடிகிறது.

இவற்றால் உரைகண்ட பெருமக்கள் மூலநூல் அழிந்து படாமல் பெரிதும் காத்துள்ளார்கள் என்பது விளங்கும். மூல நூலில் இருந்த இருண்ட பகுதிகளையெல்லாம் ஒளிவிளக்கம் செய்து வெளிப்படுத்தியதுடன் அழியாவாழ்வு தந்தவர்களும் உரையாசிரியப் பெருமக்கள் என்பது தகும். ஆதலின் உரையாசிரியர்கள் தமிழ்த் தொண்டர்களுள் இரண்டாமவர் ஆவர்.

நாடறிந்த புலவர்களாக இருந்தவர்களிடமும் எல்லாச் சுவடிகளும் படியெடுக்கப்பெற்றோ, தொகுக்கப் பெற்றோ இருக்கும் என்பதற்கு இல்லை. பல நூல்களைத் தொகுத்தாரிடமும் சில அரிய நூல்கள் இல்லாமல் இருக்கக்கூடும் சில நூல்களே தொகுத்தாரிடமும், பல நூல்களைத் தொகுத்தாரிடத்தில் இல்லாத நூல்களும் இருக்கக் கூடும். வாழையடி வாழையாகவரும் புலமையாளர் வழியிலும் புலமையில்லார் தோன்றிவிடுவதும் உண்டு. புலமையில்லார் ஏடுகளின்மேல் அன்புகொள்வாரோ? போற்றிக் காக்கும். நாட்டமுடையவராக இருப்பரோ? இத்தகைய இடர்ப்பாடுகளையெல்லாம் ஒருங்கே போக்கும்வகையான் சில சான்றோர்களும், அமைப்புகளும், மடங்களும் ஏடு தொகுத்துப்போற்றும் கடைப்பிடியை மேற்கொண்டன. இக்கடைப் பிடியால் காலக்கோளின் வாய்ப்படாது காக்கப்பெற்ற சுவடிகள் பலப்பல. ஆகலின் ஏடுதொகுத்துப் போற்றிய சான்றோர்கள், தமிழ்த்தொண்டர் வரிசையில் மூன்றாமவர் ஆவர்.

---

1 பத்துப்பாட்டு முதற்பதிப்புக்கு மூலப்படி கிடைக்கவில்லை. பதிப்பு முடிந்த பின்னரே அதனை முதற்கண் வெளியிட்ட டாக்டர் உ. வே. சா. அவர்களுக்குக் களக்காட்டில் மூலப்படி கிடைத்தது.

என் சரித்திரம். பக். 938.

அடுத்த நிலையிலே போற்றத்தக்கவர்கள் ஏட்டுச் சுவடிகளை நூல்களாக்கிய பதிப்பாளர்கள் ஆவர். அவர்கள் அலைந்த அலைச்சலையும், இழந்த இழப்பையும், எடுத்த முயற்சியையும் எளிதில் கூறிவிடத் தொலையாது. வசையம்புகளை ஏவி, வாட்டுவார் இடையேயும், அசையாது நின்று, அமைந்த பணிசெய்த பெருமக்கள் பதிப்புப் பேராசிரியர்கள். அவர்கள் காலத்தால் பணிசெய்திரார் எனின் 'ஞாலத்தின் மூத்தமொழி' என் நாம் கூறும் பெருமிதம் நமக்கு எப்படி உண்டாகியிருக்கமுடியும்? ஆதலால் இவர்களும் நம் நன்றிக்கு உரியவர்கள். இந்நாற்கூறுபட்ட நன்மக்களும் தமிழ்த் தெய்வ வழிபாட்டில் தலைசிறந்த தொண்டர்கள் என்பது விளங்கும். இவர்களே தமிழ்த் தெய்வத்திற்கு எழுப்பப் பெற்ற திருக்கோயிலின் நான்கு தூண்கள் போன்றவர்கள்.

3. ஏடும் எழுத்தாணியும்

நம் முன்னோர் பயன்படுத்திய எழுதுபொருள் பனை ஓலையாகும். சில நாட்டினர் ஒருவகைக் கோரைப்புல்லின் தாள்களையும் மூங்கில் சில்களையும் எழுது பொருள்களாகப் பயன்படுத்தினர். ஆடு மாடு முதலியவற்றின் தோல்களையும் எழுதுபொருளாகப் பயன்படுத்திய நாடுகளும் உண்டு, நம் நாட்டின் இயற்கைக்கு ஏற்றவாறு பனையோலையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர் எனலாம்.

பனையுள் தாளிப்பனை என்பது ஒன்று. அதனைச் சீதாளம் என்றும் கூறுவர் அதன் ஓலையையும் எழுதுவதற்குப் பயன் படுத்தினர். மற்றும், 1 மாதவி கோவலனுக்குத் தாழைமடலில் முடங்கல் வரைந்த செய்தியைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. ஆதலால் தாழை மடலையும் எழுதுவதற்கு நம் முன்னோர் பயன்படுத்தினர் என அறியலாம்.

ஓலை என்பது வெற்று ஓலையை அல்லாமல் முடங்கல் எழுதப்பட்ட ஓலையையும் குறித்தது. ஓர் அரசர் மற்றோர் அரசருக்குத் தூதர் வழியே முடங்கல் அனுப்புதலை 'ஓலை போக்குதல்' என்பர். இத்தகைய முடங்கல் ஓலையின்மேல், முத்திரையிட்டு அனுப்பும் வழக்கமும் இருந்ததைக் 2 கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலியவற்றால் அறியலாம்.

---

1 ''தாழை முடங்கல் வெண்தோடு'' சிலப். 8 : 49. முடங்கல் என்பது ஓலையைச் சுருட்டுதலால் வந்த பெயர்.

2 கலித். 94 : 42; சிலப். 13 : 76.

ஓலைக்கடிதத்தை 'ஓலைப் பாசுரம்' எனவும் வழங்குவர் என்பதை 3 அடியார்க்கு நல்லார் உரையாலும் 4 நச்சினார்க்கினியர் உரையாலும் அறிய முடிகின்றது. 5 புலவர்கள் வள்ளல்களுக்கு எழுதும் கடிதக்கவி 'ஓலைத் தூக்கு' என்றும், சீட்டுக்கவி எனறும் பெயர்பெற்றது. சோழர் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த 'குடவோலை' முறை தனிச்சிறப்பு வாய்ந்தது. அவ்வோலை, பெயரும் குடும்பும் தகுதியும் பிறவும் எழுதப்பெற்ற சீட்டே ஆகும். கடன் ஒப்பந்தம் முதலியவை எழுதிய ஓலை 'ஆவண ஓலை' ஆகும். ஆவணங்கள் பாதுகாப்பில் வைக்கப்பெற்ற இடம் 'ஆவணக்களரி' எனப்பெற்றது. ஆவணத்தின் முதல் ஓலை 'மூல ஓலை' என்றும், அதற்குப் பதில் ஓலை 'படியோலை' என்றும் பெயர் பெற்றமை சுந்தரர் வரலாற்றால் விளங்கும்.

இனி, அரசராயினார் கூறும் செய்தியை ஓலையில் எழுதுவார் 'திருமந்திரவோலை' என்றும், அவர்கள் தலைவராக இருப்பார் 'திருமந்திரவோலை நாயகம்' என்றும் பெயர் பெற்றனர். அரசரின் செயல்நடவடிக்கை முதலியவற்றை எழுதுவார் 'பட்டோலை' என்றும், கணக்கெழுதுவார் 6 'ஓலைக் கணக்கர்' என்றும், ஊர் நடவடிக்கைகளை அவையோர்க்குப் படித்துக் காட்டுவார் 'நீட்டோலை' என்றும் பெயர் பெற்றனர். 7 நீட்டோலை வாசிக்கமாட்டாதவர் அறிவுடையார் பழிப்புக்கு ஆளாயினர். 8 "வெள்ளோலை கண்பார்க்கக் கையால் எழுதாரும்" இகழப்பட்டனர்:

3 சிலப். 13 : 93 - 95.

4 சிந்தா. 1653, 2147.

5 "மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்" - நன்.

6 "ஓலைக் கணக்கர் ஒலியடங்கும் புன்செக்கா மாலைப் பொழுது"
நாலடி - 397.

7 "சபைநடுவே, நீட்டோலை வாசியா நின்றான், குறிப்பறிய, மாட்டாதவன் நன்மரம்" - வாக். 13.
"எழுத்தோலை பல்லார்முன் நீட்ட விளியா, வழுக்கோலை கொண்டுவிடும்" - நாலடி. 253

8 "வெண்பா இருகாலில் கல்லானை வெள்ளோலை, கண்பார்க்கக் கையால் எழுதானைப் - பெண்பாவி, பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாளே, எற்றோமற் றெற்றோமற் றெற்று"
; ஔவையார்.

ஓலையுள் முதிர்ந்தது முற்றல் ஓலை, காய்ந்த ஓலை, வற்றல் ஓலை எனப்படும் இளவோலை குருத்தோலை, பச்சோலை, சாரோலை எனப்படும். இவ்விருவகை ஓலைகளும் எழுதுவதற்குப் பதனுக அமையா முதிரோலையோ இளவோலையோ நெடுங் காலம் உழைக்கவும்மாட்டா. ஆதலால் இவ்விருவகை ஓலைகளையும் விலக்கி இடைப்பட்ட ஓலையையே எழுதுவதற்குத் தேர்ந்தெடுப்பர்.

முதற்கண் வாளமான ஓலையைத் தேர்ந்து அவரவர் விருப்பம்போல் ஓர் அளவாக நறுக்கி எடுத்துக்கொள்வர். நறுக்கி எடுப்பதை ஓலை வாருதல் என்பர். ஓலையை ஒத்த அளவாக நறுக்கி இணை சேர்த்தலைச் 'சுவடி சேர்த்தல்' என்பர். சுவடி என்பது இணையான ஓலை என்பதேயாம். இணையான தடத்தைச் ,'சுவடு' என்பதும், இணையான காளைகளைச் சுவடிக் காளைகள் என்பதும், இணையான பிள்ளைகளைச் சுவடிப் பிள்ளைகள் என்பதும் இன்றும் கேட்கக் கூடியவையே யாம். இணை என்னும் பொருள் தரும் சுவடி, சோடியாயிற்று. அதனை 'ஜோடி' ஆக்கியது எழுத்து மாற்று வேலையாம்!

அளவாக [1] நறுக்கி எடுத்த ஓலைகள் வலுவுடையன வாகவும், பூச்சியால் அரிக்கப்படாதனவுமாக இருப்பதற்கு. வெந்நீரில் போட்டு ஒரு சீராக வெதுப்பி எடுத்துக் காய வைப்பர். பனிப்பதப்படுத்துவதும் உண்டு. அதன் பின்னர் ஓலையின் நீளத்திற்குத் தக்கவாறு ஒருதுளையோ, இரு துளைகளோ இடுவர் புத்தகங்களுக்கு அட்டை கட்டுவதுபோல, ஏட்டுச்சுவடியின் இரு பக்கங்களிலும் இரண்டு [2] மரச்சட்டங்களைச் சேர்ப்பர். இச்சட்டத்திற்குக் 'கம்பை' என்பது பெயர்.

ஏட்டுச் சுவடியைக் கட்டுவதற்குக் கயிற்றைப் பயன் படுத்துவர். கயிற்றின் தலைப்பில், பனையோலையை அதன்

---

1 ஓலைக்கு 'நறுக்கு' என்றும் 'முறி' என்றும் பெயர் வந்தது இதனாலேயாம்.

2 நிலைக்கதவு மேலுள்ள சட்டம் 'கம்பை' எனப்பெறுதல் இன்றும் வழக்கிலுள்ளது.

ஈர்க்குடன் கிளிமூக்குப்போலக் கத்தரித்துக் கட்டியிருப்பர். அதற்குக் 'கிளிமூக்கு' என்பது பெயர். அது கயிறு உருவிக் கொண்டு வராமல் தடுக்கும் தடையாகும். ஒற்றைத்துளை யுடைய சுவடியைக் கயிற்றால் மட்டும் கட்டுவர். இரட்டைத் துளைகளையுடைய சுவடிகளைப் பொருத்தும் சட்டத்தின் ஒரு துளையில் 'சுள்ளாணி' என்னும் ஒரு குச்சியைப் பொருத்தியிருப்பர் சுள்ளாணியை 'நாராசம்' என்றும் கூறுவர். ஏட்டின் ஒருதுளையைச் சட்டத்திலுள்ள சுள்ளாணியில் பொருந்துமாறு சேர்ப்பர். மற்றொரு துளைவழியே கயிற்றை இழுத்துக் கட்டுவர். சுள்ளாணியும், கட்டும் ஏடுகள் கலையாமலும், உதிர்ந்துபோகாமலும் காக்கும். சட்டங்களோ ஏடு பழுதுபட்டுப் போகாமல் உதவும்.

சுவடிச் சட்டங்களின்மேல் ஓவியங்கள் எழுதுவதும் வண்ணங்கள் தீட்டுவதும் உண்டு. ஓலைச் சுவடிகளை என்றாலும் காணக் காணக் களிப்பூட்டுவனவான அமைப்புகளில் அவற்றைச் செய்வர். 1 "சில ஏட்டுச் சுவடிகள் உருண்டைக் கழிகள் போலவும், சிவலிங்கம் போலவும் இருக்கும்" என்பர்.

மஞ்சளை அரைத்து ஏடுகளில் பூசுவர். வசம்பு, மணித்தக்காளி இலைச் சாறு, ஊமத்தை இலைச் சாறு, மாவிலைக் கரி, அறுகம்புல் கரி ஆகியவற்றைக் கூட்டிச் சேர்த்த ஒரு வகை 'மை'யையும் தடவுவர். இவற்றால் ஏட்டிலுள்ள எழுத்துத் தெளிவாகத் தெரியும்; கண்ணுக்கும் குளிர்ச்சியுண்டாகும்; ஏடும் பூச்சி முதலியவற்றால் அரிக்கபபடாது. ஏடுகளில் இவ்வாறு மை தடவிப் படிக்கத் தொடங்குவதால், ஏடு படிக்கத் தொடங்குவதை 'மையாடல்' என்று கூறும் வழக்கம் உண்டாயிற்று. தமிழைக் குழந்தையாக்கிக் கொஞ்சும் தமிழ்விடுதூது என்னும் நூல், ஏடுகளில் மஞ்சள் பூசுதலையும், மை தீட்டுதலையும் உட்கொண்டு,

"மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்"

என்று பாராட்டுகிறது.

---

1 நல்லுரைக்கோவை : I. பக். 143.

சுவடிகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் பயன்படுத்திய பலகையைத் 'தூக்கு' என்பர். 'அசை' என்றும் கூறுவர். 1 'கவளி' என்பார் சேக்கிழாரடிகள். செல்வக் குடும்பங்களில் தூக்குகளைத் தூக்கிச் செல்வதற்கெனத் தனி ஆள்களை ஏற்படுத்தியிருப்பர். அவர்களுக்குத் 2 'தூக்குத்தூக்கி' என்பது பெயர். சுவடிகள், குழந்தைகள் போல அசையாகிய தொட்டிலில் கிடப்பதைத் தமிழ்விடு தூது,

"பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட்
டிற்கிடத்தி
தள்ளிச் சிறூர்கூடித் தாலாட்டி"

என்று தாலாட்டுகிறது.

ஓலையும் ஏடும் மிகப் பழமையான சொற்கள். புல்லினத்தின் உறுப்புகளைக் கூறும் ஆசிரியர் தொல்காப்பியனார்,

3 "தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்"

என்று கூறுமுகத்தான், தமக்கு முந்தைப் புலவர்கள் காலந்தொட்டே வழக்குண்மையைத் தெரிவித்தார்.

இந்நாளில் 'தாள்' என நாம் வழங்குவதும் புல்லின் உறுப்புப் பெயரேயாம். 'பேபரைசு' என்னும் ஒருவகைப் புல்லின் தாளே 'பேப்பர்' என்னும் பெயர் பெற்றது என்பர். காலம் கடந்தும், இடங்கடந்தும் சில அடிப்படைகள் மாறா என்பதற்குத் தாளும் 'பேப்பரும்' எடுத்துக்காட்டாம்.

இனிச் சுவடி என்னும் சொல் இப்பொழுது பெருக வழங்குகின்றது. நூல் நிலையத்தைச் 'சுவடிச் சாலை' என்பார், பாவேந்தர் பாரதிதாசனார். ஆசிரியர் கொங்குவேளிர்,

---

1 "கையினிற் படைகரந்த புத்தகக் கவளி ஏந்தி" - மெய்ப்பொருள், 7.

2 தூக்குத்தூக்கி என்பதொரு நாடகம் அண்மைக் காலம்வரை நடந்தது.

3 தொல், பொருள், மரபு, 86.

1 "பட்டுச் சுவேதமொடு பாட்டுப்புற மெழுதிய
கட்டமை சுவடி பற்றிய கையினர்"

என்பார். 'பொத்தகம்' என்னும் சொல்லையும் அவர் வழங்கு கின்றார்:

2 "அறநிலை பெற்ற அருள்கொள் அவையத்து
நிறைநூல் பொத்தக நெடுமணை ஏற்றி"

என்பது அது. 'பொத்தகக் கட்டும்', 'பொத்தகக் கைவினை'யும் அவரால் பேசப்படுகின்றன. 3 சிந்தாமணியும் 'பொத்தகம்' என்னும் சொல்லை ஆள்கின்றது. 4 கலைமகள் வாழ்த்தாக உள்ள ஒரு வெண்பா "பொத்தகமும் ஞானத்து முத்திரையும்" எனத் தொடங்குகின்றது, மொழிக்கு முதலாம் எழுத்துகளுக்கு எடுத்துக்காட்டுத் தரும் 5 நேமிநாதவுரை பகர வரிசைக்குப் "படை, பாடி, பிறை, பீரம், புறம், பூமி, பெற்றம், பேதை, பைதல் பொத்தகம், போதம், பௌவம்" என்கின்றது இதனால் அவர் காலத்தில் புத்தகம் என்பதனினும் பொத்தகம் என்பதே பெருவழக்காக இருந்தது என்பது புலப்படும் ஏனெனில் அவர் பகர உகரத்திற்கு எடுத்துக்காட்டாகப் புத்தகம் என்பதையே காட்டியிருக்கலாம் அல்லவா; நன்னூல் உரையாசிரியர் சங்கர நமச்சிவாயர் பல பொருளான் இயைந்த ஒரு பொருள் என்பதற்கு,

"பலவின் இயைந்தவும் ஒன்றெனப் படுமே
அடிசில் பொத்தகம் சேனை அமைந்த
கதவ மாலை கம்பல மனைய"

என்பதை எடுத்துக்காட்டாக வழங்கியுள்ளார்.

புத்தகம் என்னும் சொல்லும் முன்னரே வழங்கியதை அறிய முடிகின்றது. புத்தகம் தொகுத்து வைத்தும் புலமை பெருதாரைக் கருதி,

---

1 பெருங். 3. 1 : 120 - 1

2 பெருங். 1. 36 : 225 . 6

3 பாடல் 2009.

4 பெருந்தொகை. 118.

5 நூற்பா, 7 உரை.

"புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தக மெல்லாம் நிறைப்பினும்-மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே;பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு"

என்கிறது நாலடியார், (318) 'புத்தகக் கவளி ஏந்தி' முத்த நாதன் செல்வதைச் சேக்கிழாரடிகள் உரைப்பதை முன்னே கண்டோம். இந் நாளில் புத்தகம் என்னும் சொல்லே பெருவழக்காக உண்மை எவரும் அறிந்ததே.

ஏட்டில் எழுதுவதற்குப் பயன்படுத்திய கருவி 'எழுத்தாணி' எனப்பெற்றது. ஆணி என்பது பல பொருள் தரும் சொல் ஆகலின் வெளிப்பட விளக்குவதற்காக எழுத் தாணி என்னும் பெயரைப் பெற்றது. 1 "பித்திகைக் கொழுமுகை ஆணி" என்று இளங்கோவடிகள் உரைப்பதால் 'ஆணி' என்னும் பெயர் வழக்கும் புலப்படும்.

எழுத்தாணியை 'ஊசி' என்னும் வழக்கே மிகுதியாக இருந்தது என்பதை இலக்கியங்களால் அறியலாம். 2 'மையெழுதநூசி' என்றும், 3 'செம்பொன் ஊசி' என்றும் சிந்தாமணி எழுத்தாணியைச் சுட்டுகின்றது. "மொய்யிலே வேல் மாறன் களிறு மருப்பு ஊசியாக மறங்கனல் வேல் மன்னர் உருத்தகு மார்பு ஓலையாக வையகமெல்லாம் எமது என்று எழுதுவதை 4 முத்தொள்ளாயிரம் எழில்மிக இயம்புகின்றது. சீவகன் அகன்ற மார்பம் ஓலையாக, அசனி வேகம் என்னும் களிற்றின் மருப்பு ஊசியாக எழுதுவிப் பேன் எனக் கட்டியங்காரன் கழறுவதைக் காட்டுகின்றது 5 சிந்தாமணி.

எழுத்தாணியை 'ஓலை தீட்டும் படை' என்று கூறுகிறது 6 திவாகரம். அதற்கு 'ஊசி, சுண்டம், ஆணி' என்னும் மூப்

1 சிலப். 8 55
2 பாடல். 1767.
3 பாடல். 369.
4 பாடல், 21.
5 பாடல். 1121.
6 செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி

பெயர்கள் உண்மையையும் அது வெளியிடுகின்றது. 'எழுது கோல்' என நாம் இப்பொழுது வழங்கும் பெயரைச் சூடாமணி நிகண்டு கூறுகின்றது. அதற்கு அடிப்படை 1 "எழுதுங்கால் கோல் காணுக் கண்ணேபோல்" என வள்ளுவர் வழங்கும் உவமையே என்பது புலப்படுகின்றது. 2 "நாளென ஒன்று போற் காட்டி" என்பதால் நாம் 'நாட் காட்டி' என்பதைப் படைத்துக் கொள்ளவில்லையா! அது போல் என்க.

3 "எழுத்தாணிகளில் குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி என 4 வெவ்வேறு வகையுண்டு. வாரெழுத்தாணிக்குப் பனையோலையினாலே உறை செய்து அதற்குள் செருகி வைப்பார்கள். மடக்கெழுத்தாணிக்குப் பிடி இருக்கும். மடக்கிக் கொள்ளலாம் அந்தப் பிடி மரத்தினாலோ தந்தத்தினாலோ மாட்டுக் கொம்பினாலோ அமைக்கப்படும்"

5 "ஒருபக்கம் வாருவதற்குக் கத்தியும் மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்ததைப் பார்த்தே 'பேனாக் கத்தி' என்ற பெயர் வந்ததென்று தோன்றுகின்றது. ஒருபக்கத்தில் இரண்டு கத்தியும் ஒருபக்கம் இரண்டு எழுத்தாணியும் உள்ள மடக்கெழுத்தாணிகளும் இருந்தன"

எழுத்தாணியும் கத்தியும் இணைந்திருப்பதைக்கண்ட ஒரு புலவர் காளமேகப் புலவரிடம் 'எழுத்தாணி' என்று எடுத்துச் 'சூரிககத்தி' என முடியுமாறு ஒரு வெண்பாப் பாட வேண்டினார். அப்படியே அவர் பாடினார்:

---

1 திருக். 1285.

2 திருக் 334.

3 என் சரித்திரம், பக். 81 - 2.

4 'இளிமுக்கு எழுத்தாணி' என ஒருவகை எழுத்தாணியும் உண்டு.

5 நல்லுரைக்கோவை I. பக். 144 - 5.

[1] "எழுத்தா ணிதுவெண் ணிதனைமுனி காதில்
வழுத்தா ரணக்குகனை வாதுக் - கழைத்ததுவும்
மாரன்கை வின்மான்முன் காத்ததுவும் நன்றாகும்
தீரமுள்ள சூரிக்கத் தி."

என்பது அப்பாடல்.

பொருள் மயக்காகிய பிசிச் செய்யுள் (விடுகவி) திணை திரிந்துவரும் என்பதற்குச் சேனாவரையர்

"எழுதுவரிக் கோலத்தார் ஈவார்க் குரியார்
தொழுதிமைக் கண்ணணைந்த தோட்டார் -
முழுதகலா
நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்
பேணற் கமைந்தார் பெரிது"

என்னும் வெண்பாவைக் காட்டிப், "[2] புத்தகம் என்னும் பொருள்மேல் திணை திரிந்து வந்தவாறு கண்டுகொள்க" என்று எழுதுகிறார் (தொல். சொல். 449) ஏடு எழுத்தாணி ஆகியவற்றின் செல்வாக்கை இவை காட்டுவனவாம்.

ஏட்டில் எழுதுவதுபற்றியும் இவ்விடத்தில் அறிதல் தகும். [3] "எழுதுபவர்கள் எழுத்தாணியை வலக்கையில் பிடித்துக்கொண்டு இடக்கையில் ஏட்டைப் பிடித்திருப் பார்கள். எழுதும் பொழுது இடக்கைப் பெருவிரல் நகத் தில் சிறிதளவு பள்ளஞ் செய்து அந்த இடத்தில் எழுத் தாணியைச் சார்த்திக்கொண்டு எழுதுவார்கள் நாம் இக் காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்ற வேகத் தோடே ஏட்டில் எழுதுவதுண்டு"

---

1 வாதுக்கழைத்தது - 'சூர்', வில் - 'இக்கு' (கரும்பு) காத்தது - 'அத்தி' (கஜேந்திரன் என்னும் யானை) எனப்பிரித்துத் பொருள் கொள்க.

2 ஏட்டை உயர்திணைப் பெண்டிராக்கிக் கூறியமையால் திணைதிரிதல் என்றார், இஃதிரட்டுறல் அணி, எழுதுவரிக் கோலம், ஈவார்க்குரிமை. மைக்கண் அணைதல், நாணிற் செறிதல், பேணற்கமைதல் ஆகியவை ஏட்டிற்கும் மகளிர்க்கும் பொது. வரிக்கோலம் - வரி வடிவம்; ஓவியத் தெழுதும் அழகிய வடிவம்; தொழுதி - தொகுதி, தோடு - இதழ், நாண் - கயிறும் நாணமும், பேணல் - விரும்பல்.

3 நல்லுரைக் கோவை I, பக். 145.

அழகுற எழுதுவதன் அருமையையும், அதனைப் பழுதற வாசிப்பதன் அருமையையும் உணர்ந்த ஔவையார்,

"எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்ப்
பழுதறவா சிப்பரிது"

என்ருர். பனையேட்டிலே முத்துக் கோத்தாற்போல எழுதுவார் இருந்தனர் என்றால் அவர்தம் கைவண்ணத்தை எவ்வளவு பாராட்டினும் தகும் அத்தகைய கைகளே ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கழிந்தும் நம் கலைச் செல்வங்களை அழியாமல் நமக்கு எடுத்து வழங்கிய வள்ளன்மைத் 'திருக்கை'களாம்!

4. இயற்கைக் கேடும் செயற்கைக் கேடும்

தமிழ்நாடு முப்பக்கமும் கடல் சூழ்ந்த நாடு. இயற்கை அரணாக முந்நீர் அமைந்தது நன்மையே ஆயினும் அதனால் நிகழ்ந்த தீமையும் உண்டு. அத்தீமை 'கடல் கோள்' என்பதாம்

கடல்நீர் பொங்கி எழுந்து நிலத்தின்மேல் படையெடுத்துவந்து நாடு நகரங்களைக் கொள்ளை கொள்வதே கடல்கோள். நாடு நகரங்களையே அழிக்கும் கடல்கோள் ஏடுகளைத் தாமா எஞ்சவிடும்? இத்தகைய ஒரு கடல் கோளால் அழிந்தவற்றை அடியார்க்குநல்லார் எழுதுகின்றார்.

[1] "தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவத வாறும் இவற்றின் நீர்மலிவான் எனமலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ்மதுரை நாடும். ஏழ்முன்பாலை நாடும், ஏழ்பின்பாலை நாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குணகாரை நாடும், ஏழ்குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண்டு ஒழித்த" து என்பது அது. இப்படியும் கடல்கோள் உண்டோ? அழிபாடும் நிகழுமோ என ஐயுறுவார் உளராயின் தெளிவிக்கிறது அறிவியல் உலகம்

---

1 சிலப், 8:

1961-ஆம் ஆண்டு மே மாதம் 21-ஆம் நாள் சிலி நாட்டில் ஒரு நிலநடுக்கம் உண்டாயிற்று. அதன் விளைவு கண்டும் கேட்டுமிராத கொடுமையாயிற்று.

சிலி நாட்டின் "நடு மையத்தில் உள்ள 'கன்செப்ஷன்' என்னும் நகரமும் அதை அடுத்த பகுதிகளும் கொடிய பூகம்பத்துக்கு உள்ளாயின. அப்போது அங்குள்ள வீடுகள் கிடுகிடுத்து ஆடி விழுந்தன. பாலங்கள் உடைந்து தகர்ந்து போயின. பல இடங்களில் தீப்பற்றிக்கொண்டது. வானம் கீறியதுபோல் பெருவெள்ளமாக மழை பொழிந்தது; அந்நகருக்கு 25 மைல் தெற்காக உள்ள 'காரனல்' என்னும் சுரங்கப்பட்டணத்தில் உள்ள வீடுகளில் பாதி தகர்ந்து விழுந்தன; இன்னும் பல வெடித்துப் போயின; அயலில் உள்ள 'கிலோவேக்' தீவிலும், லாங்கிவே, காஸ்டிரோ முதலிய இடங்களிலும் பூகம்பத்தால் மிகுந்த சேதம் உண்டாயிற்று.

"கன்செப்சன் நகரத்தில் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒருவரும் எதிர்பாரா நிலையில் திடீரென்று இந்தப் பேராபத்து அவர்களைத் தாக்கியது. அவர்களில் பலர் துரதிர்ஸ்டம்வாய்ந்த அந்த நகரைவிட்டு வெளியேறிக் காடுகளையும் வயல்களையும் அடைந்து அப்பாற்சென்று உயிர்தப்ப முயன்றூர்கள். வீடுகளும் கட்டிடங்களும் நொறுங்கி விழுந்தபோது அவற்றில் பலர் அகப்பட்டுக் கொண்டு மாண்டார்கள். உடைந்து விழும் பாலங்களில் இருந்து ஆற்றில் தள்ளப்பட்டுப் பலர் உயிர் இழந்தார்கள். அவர்கள் செல்லும் பாதைகள் பல கீறியும் வெடித்தும் வாய்பிளந்தும் வழி மறித்தன. பூகம்பத்தால் இடிந்துவிடும் கட்டிடங்களின் பேரோசையும் இங்கும் அங்கும் பற்றி வானை நோக்கிஎழும் தீயின் செந்நாவும் அவர்களை அச்சுறுத்தி வெருட்டின. ஆகாய விமானங்கள் வானில் ஏறிப் பறக்க முடியவில்லை. அதனுலும் தந்திக் கம்பிகள் டெலிபோன் கம்பிகள் முதலியன அறுந்துபோனதாலும் அங்கு நிகழும் செய்திகளை வெளியிடங்களுக்கு உடனே அறிவித்துத் துணை தேட வழியில்லாமல்

போய்விட்டது. சுமார் 70,000 சதுர மைல் பரப்புள்ள நிலப்பகுதி இவ்வாறு பெருஞ்சேதத்துக்கு உள்ளாயிற்று.

"நிலம் கிழிற வானம்பொழிய தீ சூழ நேர்ந்த சேதங்கள் போதா என்பதுபோல் கடலில் இருந்து ஆழிப் பேரலைகள் கிளம்பி, நிலத்தின்மீது படையெடுத்து வந்து அதை மோதிப் புடைத்து அழித்தன. கோரல் முதலிய சிற்சில இடங்களில் இந்த அலைகள் 30 அடி உயரம்வரை ஓங்கி உயர்ந்தன. 'லேபூ' முதலிய வேறு இடங்களில் 10 அடி உயரமும், வேறுசில இடங்களில் சற்றே குறைந்தும் மிகுந்தும் காணப்பட்டன. பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரிலும், மெக்சிகோவில் உள்ள ஸாண்டியாகோ துறைமுகத்திலும் சுமார் 5000 மைலுக்கு அப்பால் உள்ள நியூஜிலாந்திலும் இந்த ஆழிப் பேரலைகள் மோதின. அங்குள்ள படகுகளைத் தகர்த்தன. கடற்கரை ஓரத்தில் இருந்த கட்டிடங்கள் பண்டகசாலைகள் முதலியவற்றுக்குப் பெருஞ்சேதம் விளைவித்தன. சிலி நாட்டில் இருந்து பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்தில் உள்ள ஜப்பான் தீவுகளின் கிழக்கரையிலும், இவை மோதிப் புடைத்தன. அங்குச் சிற்சில இடங்களில் இவற்றின் உயரம் சுமார் 20 அடியாக இருந்தது. இந்த அலைகள் வெறிபிடித்தவைபோல் மீண்டும் மீண்டும் பின்வாங்கி முன்வந்து தாக்கிப் புடைத்தன. நூற்றுக்கணக்கான மீன்பிடி படகுகளும், பிறவகைப் படகுகளும் கட்டறுக்கப்பட்டுக் கடலில் இழுத்துச் செல்லப்பட்டும் கரையில் மோதப்பட்டும் சேதமுற்றன. டோக்கியோ நகரத்துக்குச் சுமார் 200 மைல் வடகிழக்காக உள்ள சேந்தை என்னும் பட்டிணத்தில் சுமார் இரண்டு இலட்சம் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆழிப் பேரலைகள் அந்த ஊரைத் தாக்கின. அவற்றின் தாக்குதலுக்குப்பின் கடல்நீரின் வெள்ளத்தையும், இடிந்த கட்டிடங்களையும், அவற்றின் மிதக்கும் பகுதிகளையும் தவிர வேறொன்றும் அங்கு உயரப் பறந்த விமானிகளின் கண்ணுக்குத் தெரியவில்லை. அந்த ஆழிப்பேரலைகள் சுமார் 20 நிமிடத்துக்கு ஒருமுறையாகப் பலமுறை மோதியதால் ஜப்பான் நாட்டில் கரை ஓரத்தில் உள்ள ஊர்களில் பல, வெள்ள நீரில் மூழ்கிப் பெருஞ்சேதம்

அடைந்தன. பல்லாயிரக் கணக்கான குடிசைகளும் வீடுகளும் அழிந்துபோயின. நியூஜிலாந்து, ஆஸ்திரேலியா, பார்மோஸா, ஹாவாய் முதலிய தீவுகளின் கிழக்குக் கரைகளிலும் தென்கிழக்குப் பகுதிகளிலும் மிகுந்த உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் உண்டாயின.

''சிலி நாட்டில் முதலில் தோன்றிய பூகம்பத்தைத் தொடர்ந்து சிலநாள்கள வரை பூமி சிறிதோ பெரிதோ ஆடிவந்தது அங்கிருந்து பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள பிலிப்பீனை தீவுகளில் ஒன்றாகிய யலெல்லாத் திவுப, தெற்கே உள்ள நியூஜிலாந்துத தீவின சிற்சில பகுதிகளும் ஆடி அசைந்தன. சிலி நாட்டில் உள்ள எரிமலைகள் நெருப்பு, புகை, கரி முதலியவற்றைக் கக்கத் தொடங்கின அவற்றுள் ஒன்றாகிய பூயேலே என்னும் எரிமலை அவற்றை 7000 மீட்டர் உயரம் வானத்தில் வீசிற்று அங்குள்ள எரிமலைகள் எல்லாமே விழித்தெழுந்தன. நெருப்பை உமிழ்ந்தன''[1]

அறிவியல் வளர்ந்த இந்நாளிலேயே இயற்கையின் சீற்றத்தைக் கட்டுபடுத்த இயலவில்லை! ஓடிப்போய் உதவ முடியவில்லை! ஓடித்தப்ப முடியவில்லை! மேலே பறந்தும் பார்க்க முடியவில்லை! 70000 சதுர மைல் பரப்பு நிலம் பாழாயிற்று! எண்ணத் தொலையா இழப்புகள்! நாடு நாடாக அழிவு பாடுகள்! இவை கடல் கோள் காட்சியைக் கண்முன் நிறுத்துதல் ஒருதலை

அடியார்க்கு நல்லார் கூறுமாறு கடல்கோளால் நாடும், மலையும், யாறும ஒருங்கே அழிந்துபட்ட நிலைமையில், ஆங்கிருந்த கலைச் செல்வங்களுள் எவையேனும் எஞ்சுமோ? அதிலும் சங்கம் இருந்த தென்மதுரையும் கூடல்வாயில் என்னும் கபாடபுரமும கடல்கோளால் அழிவுற்றன எனின், தமிழ் வளமனைத்தும் ஒருங்கே கடலுள் மாய்ந்தன என்பதன்றோ பொருள் 'எத்துணையோ பரிபாடலும, முதுநாரையும்,

1 அறிஞர் திரு. பெ. நா. அப்புசாமி அவர்கள், கலைக்கதிர் பொங்கல் மலர் . 1962 ''ஆழிப்பேரலை''

முதுகுருகும், களரியாவிரையும்'' என்றும் ''கலியும் குருகும் வெண்டாளியும், வியாழமாலை அகவலும்'' என்றும் ''மாபுராணமும், இசை நுணுக்கமும், பூத புராணமும்'' என்றும் இறையனார் களவியல் கூறும் நூல்கள் எல்லாம் எங்கே போயின?

''இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும், தேவ விருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலா உள்ள தொன்னூல்கள் இறந்தன; நாடகத் தமிழ் நூலாகிய பரதம, முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தன போலும் இறக்கவே வரும் பெருங்கல முதலிய பிறவுமாம் என்று இரங்கி ஏங்குமாறு அருந்தமிழ் நூல்கள் அழிவுற்றனவே! இறக்கவேவரும் பெருங்கலத்தைத் தானும் எவரும் உயிர்ப்பிக்க முடியாது ஒழிந்தமை கடல் கோளைக் காட்டித் தப்பக்கூடியதன்று! ஏனெனில், அடியார்க்கு நல்லார் காலத்திற்குப்பின் எக்கடல் கோளும் நிகழ்ந்திலது. தமிழர்தம் தாய்மொழி போற்றா மடிமையும் தடிப்புமே காரணங்களாம்

சோழர் தலைநகராகவும் துறைமுக நகராகவும் இருந்தது காவிரிப்பூம் பட்டிணம். செல்வவளம் போலவே கல்வி வளத்திலும் நிகரற்று விளங்கியது அப்பட்டிணம் ஆராய்ச்சியான் முதிர்ந்த அறிஞர்கள் உண்மை காண்பான் வேண்டி கொடி நாட்டி அறிவுப் போர்புரிந்த நகர் அது ஆயின் எத்தகைய விழுமிய ஏடுகள் எல்லாம் அங்கே இருந்த அறிஞர்கள் கைகளிலே தவழ்ந்திருக்கும்! அவ்வூரையும் முத்துக் கொழித்த கொற்கையையும் கடல்தானே கொண்டது! ஆதலால் பழமையான நூல்கள் பெரும்பாலும் கடலால் கொள்ளப்பட்டன எனலாம்

இனி நாட்டையே விழுங்குவது கடல் என்றால், ஊரை விழுங்கும் காட்டாற்று வெள்ளத்தால் உண்டாகியகேடும் இல்லாமல் ஒழியுமா?[1] ''முல்லையைக் குறிஞ்சியாக்கி

---

1 இராமா பால. ஆற்றுப் 17.

மருதத்தை முல்லையாக்கிப் புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரும் மருதமாக்கி எல்லையில் பொருள்களெல்லாம் இடைதடுமாறச்" செய்யும் வெள்ளத்தால் அள்ளிக் கொள் ளப் பெற்ற ஏடுகள் எண்ணற்றன ஆகலாம்.

நீரால் அழிந்தன எண்ணற்றவை என்றால், அந்நீரால் அழிக்கப்படும் தீயால் காலந்தோறும் ஏற்பட்ட அழிவுகளைக் கணக்கிட்டுரைக்க முடியாது.

வேயாமாடமும், எழுநிலை மாடத்து இடைநிலத்து அரங்கமும், குன்றுகண்டன்ன மாளிகையும், 'மான்கண் காலதர் மாளிகை' இடங்களும் பிறவும் ஆங்காங்கு காணப் பெற்றமை கொண்டு ஊரெல்லாம் அவ்வாறே இருந்தன என்று கொள்ளுதல் பொருந்தாது. எங்கோ ஒன்று இரண்டு என மிக அரிதாகக் காணப்பெற்ற காட்சி அது. ஆனால் பரவலாகக் [1]குரம்பைக் கூரையும் [2]குறுங்கூரையும் [3]'குறி யிறைக்'கூரையும் [4]கொடிக்கூரையும் [5]உவலைக் கூரையும் [6]புல்வேய்' குரம்பையும் [7]செறிப்பில் பழங்கூரையுமே மிக் கிருந்தன குறிப்பாக அரண்மனையை அடுத்தே குடிசையும் விளங்கியதுண்டு. 'கோயிலொடு குரம்பை கூடி' என் னும் [8]பெருங்கதை இதனைத் தெளிவிக்கும். [9]யானைவெண் தந்தத்தூண் நாட்டிய இல்லமே எனினும், கவரிவொண் மயிரின் வேய்ந்த காட்சியே புலப்படுகின்றது [10]செல்வர் கள் செழுமனையும் வைக்கோல் வேய்வதற்குப் பதில் செந் நெற்கதிர் வேய்ந்த தோற்றமே அளிக்கின்றது இந்நிலையில் வருந்திப் பெற்ற பரிசையும் "[11]எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே" எனறுவாழ்ந்த புலவர்கள் இல்லம் எத் தகையதாக இருந்திருக்கும்?

1 புறம். 332
2 பட். 81.
3 புறம் 129.
4 புறம் 22.
5 முல். 29.
6 புறம். 120.
7 நாலடி 231.
8 பெருங் 2 - 12 : 10.
9 சிந்தா. 1201.
10 புறம். 22
11 புறம் 163.

மாறுமாறுகத் தைக்கப் பெற்ற தையல் இடைப் புரையிலே ஈரும் பேனும் பற்றிக்கிடக்கும் நிலைமையில் புலவர் உடுத்த கூறை இருக்குமானால், அவர் உறைந்த வீட்டின் கூரை எவ்வாறு இருந்திருக்கக் கூடும்? "செறிப்பில் பழங்கூரை சேறணையாக இறைத்து நீர் ஏற்றும் கிடப் பார்" [1] என்னும் நிலைமையில் எத்துணையோ புலவர்களின் இல்லங்கள் இருந்திருக்கலாம். "நனை சுவர்க்கூரை" என்றுரே சத்தி முற்றப் புலவர் தம் இல்லத்தை! அந்நிலையில் இருந்த புலவர்கள் பலராகலாம்! அவர்கள் வீட்டின் இறைப்பே, ஏடு கள் வைக்கும் பேழைகளாக இருந்திருக்கும்; "ஏட்டைக் கட்டி இறைப்பிலே வை" என்னும் பழமொழியே இதற்குச் சான்று! இத்தகைய கூரை வீட்டில் வைக்கப் பெற்றிருந்த ஏட்டுக்கு என்ன பாதுகாப்புண்டு?

[2] சோறாக்குதற்கு மூட்டப்பெறும் தீயே வீட்டை எரித்துவிடுவது இல்லையா! வம்பர்களும் கோளர்களும் வைக்கும் 'வன்கண்மைத் தீ' என்று இல்லாமல் இருந்தது? வெற்றி கொண்ட வேந்தர் தோல்வியுற்ற வேந்தரின் நாடு நகரங் களை எரி பரப்பிய நிகழ்ச்சிகள் எத்துணை! எத்துணை! 'எரி பரந்தெடுத்தல்' என்பதை [3] ஒரு புறத்துறை யாக்கிப், "பகைவர் ஊர் சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலைக் கொள்ளை" மேவுதலை [4] இலக்கியமாக்கிப் போற்றிய இத் தமிழுலகில் எத்துணை முறைகள்தாம் எரியூட்டப் பெற்றனவோ? இத் 'தீவினை'யால் காலந்தோறும் அழிந்தவைபோக எஞ்சியும் சில நூல்கள் இருந்தன என்றால் வியப்புக்குரியதே யாம்.

---

1 நாலடி 231.

2 வேம்பத்தூர் பிச்சுவையர் வீடும் ஏடும் எரிந்தன. எழுந்ததொரு வெண்பா. "வீட்டையுந்தான் மேய்ந்தான் விளங்குமுன்னோர் தேடிவைத்த ஏட்டையுந் தான் மேய்ந்தான் இதுவெனனே - கேட்டிலையோ, தெண்டிரைசூழ் இந்தச் செகதலத்தவன் நிதமும் அண்டினரைக் கொல்லியாத லான்"

3 தொல். புறத் 8.

4 புறம் 7. "பகைவர் ஊரைத் தீமூட்டி, அத்தீயையே விளக்கொளியாகக் கொண்டு ஊரவர் அழுது அரற்றும் கலக்கத்திற்கு இடையே கொள்ளை யடித்தல்'

நீரும் தீயும் வெளிப்பட நின்றளிப்பன. இவற்றைப் புறப்பகை எனலாம். இனி, அகப்பகை இரண்டுண்டு அஞ்சத் தக்க பகை அவையே எனினும் சாலும். கறையான் முதலிய பூச்சிகளின் அரிப்பும் துளைப்பும் ஒரு பகை; ஏடுகள் நாட்பட நாட்பட மக்கி மடிந்து ஒழிவது மற்றொரு பகை.

இறைவன் படைப்பு அல்லது இயற்கை விந்தையானதே. எந்த ஓர் உயிரியும் தீமை செய்வதற்கே படைக்கப்பட்டன அல்ல பாம்பு தேள் முதலாய நச்சுயிரிகளாலும் நன்மையுண்டு எனினும் நமக்கு அவை கேடு செய்வதால் - நமக்கு அஞ்சித் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் என்னும் காத்தல் உணர்வால் கேடு செய்வதாயினும் - நாம் அவற்றைத் தீய உயிரிகளாகவே கருதுகின்றோம். கண்டதும் கிடைத்ததை எடுத்துக் கொல்லவும் சூழ்கிறோம். பாம்பு தேள் போல அஞ்சத்தக்கதாகக் கறையானை நாம் கருதாவிடினும், அது தீமை செய்யவே பிறவி எடுத்ததாகவே கருதிக் கொள்கிறோம் அதற்குக் காரணம் நாம் அருமையாகப் போற்றும் பொருள்களையும், ஈடு செய்ய இயலாத அருமைப் பொருள்களையும் அரித்துத் தொலைத்துவிடுவதாலேயாம். ஆனால் கறையான் மண்ணை வளமுடையதாக்குவதில் கொண்டுள்ள பங்கை அறிவியல் உலகம் விளக்கமாக உரைக்கத் தவறவில்லை.

கறையான் வெளிச்சத்தை விரும்பாது; வெளிச்சத்தில் வாழவும் செய்யாது இருளையே விரும்பும்; மண்ணின்மேலே உயர்ந்து புற்று இருந்தாலும் மண்ணின் உள்ளே இருட்டில் ஈரக்கசிவின் இடையேதான் வாழும் வெளியே இரைதேடப் போகும் வழியையும் 'மூடு பாலம்' போட்டு அதன் உள்ளேயே உலாவும்! ஒரே இரவில் 100 அடி நீளம்கூட மூடு பாலம் அமைத்துச்செல்லும் ஆற்றல் உடையவை கறையான்கள். இவ்வறிவியல் கருத்தெல்லாம் நன்கு அறிந்தே பெயர் சூட்டியிருக்கிறார்கள் நம் பண்டையோர். கறை என்பதன் பொருள் இருள் இருளிலேயே வாழும் உயிரிக்குக் கறையான் என்று பெயரிட்டது இயற்கை நிலையறிந்து வைத்த

பெயர் அல்லவா! இனி அதற்கு 'ஆழல்' என்பது மற்றொரு பெயர். நிலத்தை அகழ்ந்து ஆழத்தில் இருப்பதால் 'ஆழல்' என்னும் காரணப் பெயர் அதற்கு இட்டனர் அதற்கு மற்றொரு பெயர் - மிகப் பழம் பெயர் - சிதல் என்பது; சிதைப் பதையே கடனாக்கிச் சிதைப்பதால் கிடைக்கும் உணவையே உண்டு வாழ்வதால் பெற்ற பெயர் இது ஓயாமல் ஒழியாமல் ஊர்ந்து கடனாற்றுவதால் 'செல்' என்பது இதன் மற்றொரு பெயர்.

"சிதலை ஆழல் செல்லே கறையான்"

என்பது திவாகரம்

[1] கறையான் வாழும் சிறுபுற்று ஒன்றை ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள் அதனுள் இருந்த பணியாளர் 1,560,000 பேர் என்றும், போர் வீரர் 200,000 பேர் என்றும், இளவலர் 40,000 பேர் என்றும் கணக்கிட்டனர்! ஒரு சிறு புற்றில் 18 இலக்கம் கறையான்கள் இருந்தன என்றால் அவற்றின் படை எடுப்பைக் கருமமே கண்ணாயினர் அன்றிக் கடமை தவறியோர் தடுக்க இயலுமோ? கறையான் கூட்டத்தைப் 'பல்கிளைச் சிதலை' என்றும், 'நுண்பல சிதலை' என்றும் 'சிதலைத்தோடு' என்றும் கூறிய [2] சான்றோர் கூரறிவு அறிவியல் வழிபட்டது என்பது விளங்குகிறதல்லவா!

அகன்ற மரம் 'அகல்' எனப் பெற்றது. 'அகல்' பின்னர், 'ஆல்' ஆகியது. நாற்பெரும் படையும் தங்க நிழலாகும் என்று ஒரு வேந்தனை கூறவில்லையா! "அடி மரம் பெரியயானை" என்று பாவேந்தர் பகரவில்லையா! இத்தகைய அகன்ற மரத்தையும் சிதல் விட்டு வைத்ததா? அடி மரத்தையே தின்று அழித்துவிட்டது. "சிதலை தினப்பட்ட ஆலமரத்தை அதன் மதலை (விழுது - வீழ்து) தாங்கி" நிற்கும் மாட்சியை [3] நாலடியார் நம் முன்னே காட்சியாகக் காட்டுகின்றது.

---

1 கலைக்கதிர் மலர் 12. இதழ். 8. பக். 24.

2 அகம் 81; புறம் 51; நற். 325.

3 பாட்டு 197.

ஊரவர் கூடியிருந்து ஆராயும் மன்றத்தை விட்டு வைத்ததா சிதல்?

1 ''வரிநிறச் சிதலை அரித்தலில் புல்லென்று
பெருநலஞ் சிதைந்த பேஎமுதிர் பொதியில்''

என்று இரங்கியுரைக்க வைத்தது! கூரைவேய்ந்து வைத்த ஊர் மன்றத்தை முழுமையாக வேய்ந்து மூடிக்கொண்டிருக்கும் சிதலையை ஓவியமாக்கிக் காட்டுகிறார் சங்கச் சான்றோர் 2 கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

கொள்ளையடிப்பார்க்கு அஞ்சி ஊரே குடிபோகிவிட்டது; அங்கு ஆளரவமும் இல்லை; வளமையும் இல்லை; பீர்க்கிக்கொடி படர்ந்த அகன்ற பாழிடத்தில் நின்ற முருங்கைத் தழையைத் தின்ற யானை, ஊர் மன்றத்தின் கூரையில் முதுகை உராய்கிறது; அதன் சுவர்மேல் இருந்த விட்டமும் வீழ்ந்துபடுகிறது; கைம்மரங்கள் சிதைந்துபோகுமாறு வேல் முனை போன்ற கூரிய முகத்தையுடைய கறையான்கள் கூரையை மூடிவிட்டன!

வைக்கோலும் புல்லும் தழையும் வேய்ந்த கூரைகளைக் கறையான் அழித்ததில் வியப்புக்கு என்ன இருக்கிறது? தில்லைச் சிற்றம்பலத்தில் இருந்த தேவாரத் திருவேடுகளை பட்டபாட்டை நினைக்கும்போது கறையானுடன் கூடிக்கொண்டு கன்னித்தமிழ் அழித்த கேடர் செயலும் ஒருங்கே புலப்படும்.

3 திருநாறையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருளால் தில்லைச் சிற்றம்பலத்தில் தேவாரத் திருவேடுகள் சாப்பில் இருக்கும் செய்தியை அறிந்தார் நம்பியாண்டார் நம்பிகள். சோழ வேந்தனுடன் சிற்றம்பலம் சேர்ந்தார். மறையோர், தொண்டர், காவலாளர் ஆகிய அனைவருக்கும் பிள்ளையார் அருளிச்

1 அகம். 377.

2 அகம். 167.

3 திருமுறை கண்ட புராணம்.

செயலை மன்னன் கூறினான். அவர்களோ, "தமிழ் வைத்த மூவர் வந்தால் அறைதிறக்கும்" என உரைத்தனர். இறைவனோடு கலந்துவிட்ட மூவர்களையும் எழுந்தருளச் செய்ய இயலுமா? ஏடெல்லாம் அழிந்துபட வேண்டுவதை அல்லாமல் உய்வதற்கு ஒரு வழியில்லை! கதவு அடைக்கப்பட்டது போலவே ஏடுகளை அடையும் வழியும் அடைக்கப்பட்டு விட்டது! ஆனால் 'ஆகூழ்' இருந்தமையால் மன்னவன ஒருவழி கண்டான்.

மூவர் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து, ஏடுகள் வைத்துக் காப்பிட்ட அறைமுன்னே கொண்டு வரச் செய்தான். 'மூவர் வந்தார்' என மொழிந்தான் மூவர் கையே இலச்சினையாக இருந்த காப்பை நீக்கிக் கதவைத் திறந்தான்.

> "பொய்யுடையோர் அறிவுதனைப் புலன்கள் மூடும்
> பொற்பதுபோல் போதமிகும் பாடல் தன்னை
> நொய்யசிறு [1] வன்மீகம் மூடக் கண்டு
> நொடிப்பளவி னிற்சிந்தை" நொந்தான் வேந்தன்!.

ஏடுகளை தெரியாவண்ணம் மூடியிருந்த 'மண் மலையைச் சேரத் தள்ளச்' செய்தான். குடம் குடமாக நறுமண எண்ணெயைச் சொரிய ஏவினான். எனினும் என்ன? அலகிலா ஏடு பழுதாகக் கண்டு 'பரனே! பரனே!' என்னச் சிந்தை தளர்ந்து இருகணீர் சோற நின்றான். ஆண்டாண்டுதோறும் அழுதாலும் ஆவதென்ன? போனது போனதே! ஆதலால். "வேதச் சைவநெறித் தலைவரெனும் மூவர் பாடல், வேய்ந்தனபோல் மண்மூடச் செய்தே ஈண்டு, வேண்டுவன வைத்தோம்" என்று ஓர் ஓசை எழுந்தது என்று அமைதி கூறினார் சேக்கிழாரடிகள்.

---

1 வன்மீகம் - புற்று; இவண் கறையானைக் குறித்தது, வன் மீ அகம் - வலிய மேலிடத்தையுடையது என்னும் பொருளது அதன் வன்மை கற்பாறையையும் மழுங்கச் செய்வது என்பர். 'வன்மீயகம்' வன்மீகம் ஆயது அதன் சுரப்பு நீர் பட்ட மண்ணுக்கு அவ்வளவு வன்மை!

ஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் 16000; நாவுக்கரசர் அருளிய பதிகங்கள் 49000; சுந்தரர் அருளிய பதிகங்கள் 38000. மூவர் அருளியவற்றுள்ளும் முறையே கிடைத்த பதிகங்கள் 384, 307, 100. ஓரிலக்கத்து மூவாயிரம் பதிகங்களில் சேக்கிழாரடிகள் காலத்தில் கைக்கு எட்டியவை எழுநூற்றுத் தொண்ணூற்றொரு பதிகங்களேயாம்! தெய்வத் திருப்பாடல் எனக் கொண்டு, திருக்கோயிலில் காப்பில் வைக்கப்பெற்று, திருக்கோயிலாட்சியாளர் காவலிலே இருந்த தேவாரத் திருவேடுகளின் நிலையே இவ்வாறுனால், ஏனைப் புலவர்களின் 'புல்வேய் குரம்பைகளில்' வைக்கப்பெற்றிருந்த ஏடுகளையெல்லாம் கறையான்கள் எவ்வாறு உண்டிருக்கும்! அந்நிலையிலும் அப்புலவர்கள் காப்பாற்றினார்கள் என்றால் அவர்கள் தொண்டுக்கு இணையொன்றும் உண்டோ? அவர்கள் தொண்டே, "செய்கை அழிந்து சிதல் மண்டிற்றாயினும், பெய்யா ஒரு சிறை பேரில் உடைத்தாகும்" என்பதுபோல வண்டமிழில் ஒருபகுதி வையத்துத் தங்க வைத்தது

ஏடுகளைக் கறையான் மட்டுமோ கெடுத்தன? வல்வில் ஓரியின் அம்பெனத் துளைத்து ஒருபால் புகுந்து மறுபால் எழும்பும் துளைப் பூச்சி தன் கடன் மறந்ததா? புள்ளி வைப்பதும் பொருந்தாது என்று புலவர்கள் ஒதுக்கிய ஏட்டில், அவை வைத்த புள்ளிகள் எண்ணைத் தொலையா! 'இராமபாணப் பூச்சிகள்' என்று பெயர் சூட்டும் அளவுக்குக் கொள்ளை கொள்ளையாய்த் துளைத்த கொடும் பூச்சிகள் அவை. இன்னும் [1] பாச்சை முதலிய பூச்சிகளும் தம பங்கைத் தவறாமல் எடுத்துக் கொண்டன அவை தாம், என்ன செய்யும்! அவற்றுக்கு உணவுப் போராட்டம்! உயிர்ப் போராட்டம்! அக்கறையாக நாம் பேணிக் காத்திருக்கவேண்டிய முறையைப் பிழையறக் கற்பிக்கும் பேராசிரியர்கள் அவை. பேராசிரியன்மார் உரையை எத்தனை மாணவர்கள் பேணிப் போற்றுகிறார்கள்! அந்நிலையே தமிழர் நிலை ஆயிற்று!

---

1 பாய்ந்து செல்வதால் 'பாய்ச்சை' என்று பெயர் பெற்று பாச்சையாயிற்று.

ஏட்டிலே இவை செய்த கேட்டையும் நாட்படுதலால் ஏடுகள் தாமே பட்டிருக்கும் பாட்டையும் ஏட்டைக் காப்பதே வாழ்வாகக்கொண்ட ஏந்தல்கள் இயம்புகின்றார்கள்:

[1] "ஏடு எடுக்கும்போது ஓரம் சொரிகிறது; கட்டு அவிழ்க்கும் போது இதழ் முறிகிறது. ஒவ்வொன்றாகப் புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோவென்றால் வாலும் தலையும் இன்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கிறது"

"காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப்பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமும்தான் மீறும்"

ஏடுகள் இருந்த நிலைகண்டு யானுற்ற பரிபவத்திற்கு என் விழியினின்று பெருகிய கண்ணீரே சாக்ஷி"

-பதிப்புத்துறையின் முன்னோடியாகிய பெரியார் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் கலித்தொகைப் பதிப்புரையில் வெளியிட்டவை இவை.

"இவ்வேடு நென்னற்கண்ட திருமேனி இன்று பிறிதா நிலைதளரும் நிலையில் இருந்ததால் உடனே தொடங்கி முடிக்கும் இன்றியமையாமை எய்தியது.

- இது 1929-ஆம் ஆண்டில் தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரையை வெளியிட்ட கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் பதிப்புரையில் எழுதியது

"முதலில் அ0-ஏடுகள் காணப்படவில்லை. இறுதியிலும் ௬௧௧-ஆம் ஏட்டிற்கு மேலேயுள்ள ஏடுகள் இல்லை இறுதியேட்டில் முன்புறம் எழுதப்பட்டும் பின்புறம் எழுதப்படாமலும் இருந்தன; மேலே எத்தனையேடுகள் இருந்தனவோ தெரியவில்லை. கிடைத்தபகுதியுள்ளும் இடையிடையேயுள்ள

1 கலித்தொகை, பதிப்புரை சி. வை. தாமோதரம் பிள்ளை, 1887, பக். 12.

நிலைகுலைவிற்கும் எழுத்துக்களை விழுங்கிய இராமபாணத் துளைகளுக்கும் பின்னுமுள்ள புரட்சிக்கும் அளவில்லை.''

-இது டாக்டர் உ. வே சாமிநாதையர் அவர்கள் 1935ஆம் ஆண்டில் வெளியிட்ட பெருங்கதை முகவுரையில் அமைந்த பகுதி இவ்வாறே இன்னும் பலவாம்

நீராலும் நெருப்பாலும் பூச்சியாலும் காலநீட்டிப் பாலும் அழிந்த ஏடுகளை இயற்கைக்கேடு என அமைதி கொள்ளலாம். ஆனால் மாந்தன் மூடத்தால் நீரிலும் நெருப் பிலும் ஏடுகளைப் போட்டழித்த கேடே மிகமிகக் கொடுமை யானதாம்.

நாட்பட்ட ஏடுகள் தொறுங்கியும் முரிந்தும் சிதைந் தும் போதல் இயற்கை ஆதலின், அத்தகைய ஏடுகளைப்படி எடுத்துக் கொண்டு ஆற்று வெள்ளத்தில் விடுவதும், நெய்யில் தோய்த்து நெருப்பில் இடுவதும் நம் நாட்டில் வழக்கமாக இருந்தது எந்த ஏடு ஆயினும்படி எடுக்காமல் நீரிலும் நெருப்பிலும் போடுவது இல்லை. ஆனால் இவ் வழக்கம் காலம் செல்லச் செல்ல, ஆண்டுதோறும் ஆடித் திங்கள் 18ஆம் நாள் வெள்ளப் பெருக்கில் ஏட்டைவிடுவது 'புண்ணியச் செயல்' போலக்கருதப் பெற்றது. தீயில் ஏட்டைப் போடுவது தெய்வத்திற்கு 'ஆகுதி'செய்வது போலத் தீர்மானிக்கப் பெற்றது. ஆதலால் வழிவழிப் புலமையாளர் இல்லங்களில் தோன்றிய மடவர்கள், தம் இல்லங்களில் இருந்த ஏடுகளை எடுத்துப் பார்க்கவும் அறி வில்லாராய், அதன் அருமை உணர்ந்தாரிடம் கொடுக்கவும் மனமில்லாராய்ப் பதினெட்டாம் பெருக்குக்கு இரையாக் கினர்; தீக்குத் தீனியாக்கினர். இம்மடமையால் அழிந்த நூல்களே-நூற்றாண்டு நூற்றாண்டு காலமாகப் போற்றிக் காத்து வந்த அரிய நூல்களே கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாதவை போலாயின! அந்தோ குரங்கின்கைக் கொள்ளி கொடுத்த கதையாயிற்று இவ்வறிவிலார் செயல்!

'நெருப்பிலே எரியாத தமிழ்' என்றும் 'நீரிலே அழியாத தமிழ்' என்றும் கூறுவதற்கு இனிக்கலாம்!

ஆனால் நெருப்பிலும் நீரிலும் தமிழர் மடமையால் அழிந்து பட்ட ஏடுகளை எண்ண எண்ண,[1] "மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணுலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தா லெனக்" கம்பர் கூறியவாறு கழிபெருந்துயரே கப்பிக் கொள்ளுதல் ஒருதலை.

தமிழர் நல்லூழால் பிறந்து, ஆழ்கடலில் மூத்துக் குளிப்பார் போலத் தமிழகமெல்லாம் அயராது பல்கால் அலைந்து, அரிய நூல்களையெல்லாம் தேடித் தொகுத்து, அழிவினின்று காத்த பெரும் பேராசிரியர் சாமிநாதையர் ஏடழிவுபற்றித் தாம் கேட்டறிந்த இரண்டு நிகழ்ச்சிகளை என் சரித்திரத்தில் குறித்துள்ளார்.

ஒன்று ஏடுகளைத் தீயில் போக்கிய நிகழ்ச்சி; மற்றொன்று ஏடுகளை நீரில் போக்கிய நிகழ்ச்சி. இரண்டும் நெல்லை மாவட்டத்தில் "செந்தமிழும் சந்தனமும் திசையெல்லாம் பரிமளிக்க" விளங்கும் நெல்லை மாவட்டத்திலே நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அரிய ஏடுகளை அளவிறந்துதந்து எத்துணை ஏற்றம் பெற்றதோ, அத்துணை ஏற்றத்திற்கு எதிரிடையாகப் பெற்ற இறக்க நிகழ்ச்சிகள் இவை.

ஐயரவர்கள் ஏடுகள் தேடிக்கொண்டு கரிவலம் வந்த நல்லூர் சென்றார். வரகுண பாண்டியர் வைத்திருந்த ஏடுகள் எல்லாம் கரிவலம் வந்த நல்லூர் கோயிலில் இருப்பதைக் கேள்விப்பட்டிருந்தார். ஆதலால் கோயில் அறங்காவலரைக்கண்டு ஏடுபற்றி உசாவினார். ஐயரும் அறங்காவலரும் உரையாடுவதை ஐயர் வாக்காலேயே நாம் கேட்போம்:

"நான்: வரகுண பாண்டியர் வைத்திருந்த ஏட்டுச் சுவடிகள் எல்லாம் ஆலயத்தில் இருக்கின்றனவாமே!

அவர்: அதெல்லாம் எனக்குத் தெரியாது. என்னவோ வைக்கோற் கூளம் மாதிரி கணக்குச்

---

1 கம்ப. பால. கையடைப்.

சுருணையோடு எவ்வளவோ பழைய ஏடுகள் இருந்தன.

நான்: அப்படியா! அவை எங்கே இருக்கின்றன? தயை செய்து அந்த இடத்திற்கு அழைத்துப் போவீர்களா?

அவர்: அதற்குள் அவசரப்படுகிறீர்களே? வரகுண பாண்டியர் இறந்த பிறகு அவர் சொத்தெல்லாம் கோயிலைச் சேர்ந்துவிட்டதாம். அவர் வைத்திருந்த ஏட்டுச் சுவடிகளெல்லாம் அப்போதுதான் கோயிலுக்கு வந்தனவாம்.

நான்: அது தெரியும். இப்போது அவை எங்கே இருக்கின்றன?

அவர்: குப்பை கூளமாகக் கிடந்த சுவடிகளை நான் பார்த்திருக்கிறேன். எந்தக் காலத்துக் கணக்குச் சுருணைகளோ?

நான்: வேறே ஏடுகள் இல்லையா?

அவர்: எல்லாம் கலந்துதான் கிடந்தன.

(எனக்கு அவர் தாமசப்படுத்துவதனால் கோபம் வந்தது.)

நான்: வாருங்கள் போகலாம்.

அவர்: ஏன் கூப்பிடுகிறீர்கள்? அந்தக் கூளங்களையெல்லாம என்ன செய்வதென்று யோசித்தார்கள். ஆகம சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி செய்து விட்டார்கள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை 'என்ன செய்து விட்டார்கள்? என்று பதற்றத்துடன் கேட்டேன்.

பழைய ஏடுகளைக் கண்ட கண்ட இடங்களிலே போடக் கூடாதாம். அவற்றை நெய்யில் தோய்த்து ஹோமம் செய்து விடவேண்டுமாம் இங்கே அப்படித்தான் செய்தார்கள்.

'ஹா' என்று என்னையும் மறந்து விட்டேன்.

'குழிவெட்டி அக்கினி வளர்த்து நெய்யில் தோய்த்து அந்தப் பழைய சுவடிகள் அவ்வளவையும் ஆகுதி செய்து விட்டார்கள்' என்று அவர் வருணித்தார்.

'இப்படி எங்காவது ஆகமம் சொல்லுமா? அப்படிச் சொல்லியிருந்தால் அந்த ஆகமத்தை அல்லவா முதலில் ஆகுதி செய்ய வேண்டும்' என்று கோபம் கோபமாக வந்தது பழங்காலத்தில் பழைய சுவடிகள் சிதிலமான நிலையில் இருந்தால் புதிய பிரதி பண்ணிக் கொண்டு பழம் பிரதிகளை ஆகுதி செய்வது வழக்கம். புதுப்பிரதி இருத்தலி ஞல் பழம்பிரதி போவதில் நஷ்டம் ஒன்றும் இராது. பிற் காலத்து மேதாவிகள் பிரதி செய்வதை மறநது விட்டுச் சுவடிகளைத் தீக்கு இரையாக்கும் பாதகச் செயலைச் செய் தார்கள். என்ன பேதைமை! இத்தகைய எண்ணத்தால். எவ்வளவு அருமையான சுவடிகள் இந்த உலகிலிருந்து மறைந்தன!

'வரகுண பாண்டியர் ஏடுகள் அக்கினி பகவானுக்கு உணவாயிற்று என்ற செய்தியைக் கேட்டதுமுதல் என் உள்ளத்தில் அமைதி இல்லாமல் போயிற்று.' 'இனி இந்த நாட்டிற்கு விடிவு உண்டா?' என்றெல்லாம் மனநொந் தேன்.

'நான் இரண்டு நாட்கள் தங்கிப் பார்க்கலாம் என்ற விருப்பத்தோடு வந்தேன் எனக்குச் சிரமம் கொடுக்காத நிலையில் அவர்கள் செய்து விட்டார்கள். மறுபடியும் ஆலயத்துள் சென்றேன். 'இநத அக்கிரமம இனியாகிலும் நடவாதபடி திருவுள்ளம் இரங்க வேண்டும்' என்று இறை வனிடம் முறையிட்டேன்.

ஐயரவர்கள் வாக்கில் ''அந்த ஆகமத்தை அல்லவா முதலில் ஆகுதி செய்ய வேண்டும்'' என்று வரவேண்டு மாஞல் அஃது எவ்வளவு துயரூட்டியிருக்க வேண்டும்? ஏட்டின் அருமையை அவரைப்போல் எவரே உணர்ந்தார்? உணர்வுடையார்க்குத் தானே உணர்ச்சி தோன்றும்!

"இனி இந்த நாட்டிற்கு விடிவு உண்டா?" என்று உருகுவதும், "இந்த அக்கிரமம் இனியாகிலும் நடவாதபடி திருவுள்ளம் இரங்க வேண்டும்" என்று இறைவனிடம் முறையிடுவதும் உயர்வற உயர்ந்த உணர்வின் வெளிப்பாட்டினாலன்றி வெளிப்படக் கூடுமோ?

திருநெல்வேலித் தெற்குப் புதுத் தெருவில் இருந்த வழக்கறிஞர் சுப்பையா பிள்ளை என்பவரிடம் சில ஏடுகள் உண்டு என்பதை ஐயர் அறிந்திருந்தார். ஆதலால் ஆங்குச் சென்று அவரைக் கண்டார் ஏடு பற்றிக்கேட்டார். திரிகூடராசப்பக் கவிராயர் என்பவரும் உடனிருந்தார். அப்பொழுது சுப்பையா பிள்ளை, "எங்கள் வீட்டில் ஊர்க் காட்டு வாத்தியார் புத்தகங்கள் வண்டிக் கணக்காக இருந்தன. எல்லாம் பழுதுபட்டு ஒடிந்து உபயோகமில் லாமல் போய் விட்டன. இடத்தை அடைத்துக் கொண்டு யாருக்கும் பிரயோசனமில்லாமல் இருந்த அவற்றை என்ன செய்வதென்று யோசித்தேன். அவற்றில் என்ன இருக்கிற தென்று பார்ப்பதற்கோ எனக்குத் திறமை இல்லை அழகான அச்சுப்புத்தகங்கள் வந்து விட்ட இந்தக் காலத் தில் இந்தக் குப்பையைச் சுமந்து கொண்டிருப்பதில் என்ன பயனென்று எண்ணினேன் ஆற்றிலே போட்டு விடலாம் என்றும், ஆடிப் பதினெட்டில் சுவடிகளைத் தேர்போலக் கட்டி விடுவது சம்பிரதாயம் என்றும் சில முதிய பெண்கள் சொன்னார்கள். நான் அப்படியே எல்லா ஏடுகளையும் ஓர் ஆடிமாதம் பதினெட்டாம் தேதி வாய்க்காலில் விட்டு விட்டேன்" என்றார். இதனைக் கேட்ட ஐயர் மனம் மறுகினார்.

"உங்கள் வீட்டு ஏடுகள் எல்லாம் வெள்ளத்திலே போய்விட்டன என்று சொல்கிறீர்களே! இப்படிச் செய்வது நியாயமா?" என்று வருந்திக் கூறினார். அப்போது திரிகூட ராசப்பக்கவிராயர் "நான் வந்திருந்த சமயத்தில் கடைசித் தடவையாக ஏட்டுச் சுவடிகளை வாய்க்காலில் போட்டுக் கொண்டிருந்தார்கள் நான் அதைப் பார்த்தேன். கடைசி யில் மிஞ்சியிருந்த சில ஏடுகளைக் கொண்டு போன ஒரு பையன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்து அந்தக் கட்டைப் பிடுங்கி உள்ளே பீரோவின்மேல் வைத்திருக்

கிறேன். அதை எடுத்து வாருங்கள்" என்று வீட்டுக்காரரை நோக்கிக் கூறினார். அதில்தான் 'திருப்பூவண நாதர் உலா' இருந்தது. சிலப்பதிகாரத் துணுக்குகள் சில கிடைத்தன! திரிகூடராசப்பக் கவிராயர் அறைந்த ஓர் அறையால் திருப்பூவண நாதர் உலா நமக்கு எட்டியது! இத்திருப் பணியை ஆங்காங்கு இருந்தோர் செய்திருந்தால் எத்தனையோ அரிய நூல்களை அழியாமல் காத்திருக்கக்கூடும்?[1] கொடிறுடைக்கும் கூன் கையே! கொடுமையை ஒழிக்கும் போலும்!

ஒருவர் வீட்டில் இருந்த ஏடுகள் அழிந்து போவதற்கும் பலர் கூடித் தொகுத்து வைத்த ஏடுகள் அழிந்து போவதற்கும் வேறுபாடு மிகவுண்டு. ஒருவர் தம் சுவைக்கு ஏற்ற ஏடுகளையே தொகுத்திருப்பார்; அவரிடம் தாம் இயற்றியனவும் தம்முன்னோர் இயற்றியனவும் மிகுதியாக இருக்கக்கூடும் உயர்ந்த ஏடுகளாகவே இருக்கவேண்டும் என்பதின்றி வழிவழியாக வந்தனவற்றை எல்லாம் வைத்திருப்பார். அத்தகைய நிலையில் அவரிடம் அரிய ஏடுகள் அரிதாகவே இருத்தல் கூடும். ஆனால் இலக்கிய இலக்கணங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்தற்காக அறிஞர்கள் தேடித் தொகுத்த ஏடுகள் அனைத்தும் அரியனவாகவே இருக்கும். ஆயிரக்கணக்கான சுவடிகள் உள்ள இடங்களிலும் இரண்டு மூன்று சுவடிகளையே ஐயரவர்கள் எடுத்துவந்திருக்கிறார்கள் ஒன்றும் எடுக்காதும் வந்ததுண்டு ஆதலால், 'ஆராய்ச்சித் தொகுப்பு' என்பது தனித்தன்மை வாய்ந்தது என்பது புலப்படும் நாட்டில் உள்ள நல்ல அறிஞர்களையெல்லாம் ஒருங்கு கூட்டிவைத்த அவையம் போன்றது, ஆராய்ச்சி நோக்கில் தொகுத்து வைக்கப் பெறும் சுவடிச்சாலை. அத்தகைய சாலைகளுள் ஒன்றாகத் திகழ்ந்தது மதுரைத்தமிழ்ச் சங்கம். முச்சங்கமும் மூவேந்தரும் போயபின்னே இச் சங்கம் எழுந்தமையால் நான்காம் சங்கம் என்று புலவர்கள் பாராட்டும் புகழ்பெற்றது. பால்வண்ண நத்தம் குறுநில மன்னர் பொன் பாண்டித்துரைத் தேவரும், சேதுநாட்டுச் செந்தமிழ் வேந்தரும் சேர்ந்து தோற்றுவித்து அவர்கள்

1. திருக். 1077.

வள்ளன்மையால் வளர்ந்தது தமிழ்ச்சுவடி தொகுத்தல், ஆராய்தல், நூல்வெளியிடல் என்பனவற்றையன்றிப் பிறிதொரு நோக்கமின்றித் தொடங்கப் பெற்றது. இதற்கெனப் பெரும் புலவர் இரா. இராகவஐயங்கார், சேற்றூர்ப் புலவர் இரா. சுப்பிரமணியக் கவிராயர் முதலிய பெருமக்கள் ஏடு தேடித் தொகுத்தற்குரிய அருங்கடன் மேற்கொண்டிருந்தனர். நாடறிந்த புலவர்கள் அனைவரும், நற்றமிழ் உள்ளமமைந்த வள்ளற் செல்வர்களும் ஏடுகளும் நூல்களும் தாமே முன்வந்து தொகுத்தும் தந்தனர் இத்தகைய சங்கத்தேடுகள் எத்தகையனவாக இருந்திருக்கும்!

அரிய சுவடிகளும் நூல்களும் இருந்த தமிழ்ச் சங்கத்திலே தீ விளையாடியிருக்கிறது! நன்றாக விளையாடியிருக்கிறது எத்தகைய அழிவுகள் ஏற்பட்டிருக்கும்! அறிஞர்களையெல்லாம் கூட்டிவைத்த அவையிலே குண்டுபோட்டு அழித்தது போன்ற கொடுமை ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணம்? நன்றாக மறைக்கப்பட்டிருக்கிறது! புகை கப்பிக் கொண்டது போலவே, காரணமும் காரிருளில் கப்பிக் கொண்டிருக்கிறது!

தமிழ்ச் சங்கம் வெளியிட்ட மிக அருமையானதாய் தமிழ்ச் சொல்லகராதியின் மூன்றாம் பாகத்தின் முகவுரையிலே, "இம்மூன்றாம் பாகத்தை விரைவில் வெளியிடக்கருதி அச்சிட்டு வருங்கால் 1920-ம் ஆு ஜூன் மீ 20" சங்கத்தில் நேர்ந்த தீவிபத்தில் இம்மூன்றாம பாகத்தில் தா-முதல் நகரம் வரையுள்ள அச்சிட்ட பாகந்தவிர, அச்சிடுவதற்குப் பரிசோதித்து வைத்திருந்த அசலும் நகலும் ஆகிய காகிதக் கையெழுத்துப் பிரதிகள் முழுவதையும் இழந்து விட்டமை" யைக குறிப்பிடுகிறார் சே. ரா சுப்பிரமணியக் கவிராயர்.

1920 செப்டம்பர் 4 ஆம் 5 ஆம் நாள்களில் சங்கத்தின் 18 ஆம் 19 ஆம் ஆண்டுக் கூட்டம் நிகழ்ந்தபோது "சங்கத்திற்கு ஏற்பட்ட தீவிபத்தை உத்தேசித்து இரங்கி" இருக்கின்றனர். "சங்கத்திற்கு எதிர்பாராது நேர்ந்த தீவிபத்தினால் உண்டாகிய நஷ்டங்களைத் தீர்த்துச் சங்கத்தை முன்னினும் நன்னிலைக்குக் கொண்டு வரச்சங்கத்தின் கௌரவ காரியதரிசியவர்கள் செய்துவரும் அரும்பெரும் முயற்சி கண்டு" பாராட்டியிருக்கின்றனர்.

சூன் மாதக்கணக்கில் ரூ 541-4-0, சூலை மாதக்கணக்கில் ரூ 843-11 4. கட்டடம் பழுது பார்க்கச் செலவிட்டுள்ளனர் ஆகஸ்டு மாதம் 1ஆம் தேதியிலும் 24ஆம் தேதியிலும் கூடிய செயற்குழுவின் கணக்குப்படி ரூ. பத்தாயிரத்திற்குமேல் பணம் திரட்டியுள்ளனர். கட்டடம் பழுது பார்க்க ரூ. 3500 ஒதுக்கியிருக்கின்றனர் அச்சகத்தைச் சரிசெய்து முன்னை நிலைக்குக் கொண்டுவர ரூ. 2500 வழங்கியிருக்கின்றனர். நூல்கள் வாங்கி வளர்ச்சி செய்வதற்கு ரூ 3500 தந்திருக்கின்றனர் சங்க மாளிகை வாங்கும் பொருட்டு ரூ. 10000 நன்கொடை வழங்கியதுடன், சங்கம் நடைபெற்றுவந்த வாடகைக் கட்டடத்தையே சொந்தமாக வாங்குவதற்கு வேண்டியிருந்த தொகை முழுவதையும் கடனாகத் தந்த "மாக்ஷிமை தங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்கள் ராஜிநாமா" செய்திருக்கிறார். பாண்டித்துரைத்தேவர் மறைந்து 8 ஆண்டுகளே ஆகி இருந்தன! அதற்குள்ளாகவே சங்கத்து ஏடுகள் எரி நெருப்புக்கு ஆளாயின! மீண்டும் கொள்ளிக்கும் ஆயது! கொள்ளை கொள்ளையாகவும் வெளியேறியது! ஏடு வைத்தற்கெனவே தனிப்பெருமாளிகை வேண்டியிருந்த முன்னிலை எங்கே! ஏட்டுக்கட்டு இவ்வாறு இருக்குமெனக் காட்டும் கண் காட்சிக்காகக்கட்டி வைத்துள்ள பின்னிலை எங்கே! இடங் கடந்தவற்றை எபபடியும் முயன்று கண்டு கொள்ளலாம். காலங்கடந்தவற்றைக் கொண்டுவர வல்லார் எவரே?

இனிச்சமயக் காழ்ப்பும், அரசியல் குழப்பமும் இனிய நூல்கள் பலவற்றின் அழிவுக்குக் காரணமாக இருந்தனவாம்.

பண்டைத் தமிழர் நெறி இனம் கடந்தது; மொழி கடந்தது; நாடு கடந்தது; உலகளாவியது; "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் கொள்கைக்கு நிலைக்களமாயது. கல்வி பெறுதலே இவ்வுயர் கொள்கையைக் கடைப்பிடியாகக் கொள்வதற்கே என்னும் தெளிவுடையது ஆதலால்,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

என்று வினவி, விளக்கம் தந்தது

'உலகோரெல்லாம் தம் உறவினர்' என்றும், 'உலகத்து ஊர் எல்லாம் தாம்வாழும் ஊரே' என்றும் கொண்ட அவர்கள். எத்தெய்வத்தை எப்பெயரால் எவ்வுருவால் எவ்வகையால் வழிபட்டாலும் அத்தெய்வமெல்லாம் ஒன்றே என்னும் உறுதிப்பாட்டில் நின்று, "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என முடிவு கொண்டனர். அவ்விறைவன் வடிவும், பருப்பொருளன்று; "நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிற்கும் இயற்கையே" என்றும், "அன்பே கடவுள்" என்றும், "அறிவே கடவுள்" என்றும் தெளிந்து இருந்தனர். இந்நிலையில் அவர்களிடம் 'சமயச் சால்பு' அல்லது 'சமயப் பொறையே' விளங்கியது.

சமண் சமயப்பற்றுளர் என்று கொள்ளத்தக்க இளங்கோவடிகளார், புத்த சமயத்தில் அழுத்தமான பற்றுடைய சாத்தனார்க்கு அன்பு நண்பராக விளங்கினார். அச்சாத்தனார் சைவ சமயப் பற்றுளராகிய செங்குட்டுவனுக்கு நண்பராகவும் இருந்தார் புத்த நெறி சார்ந்த கோவலனுக்கும் கண்ணகிக்கும் சமணத் துறவி கௌந்தியடிகளார் வழிகாட்டுபவராக அமைந்தார். திருமால் வழிபாட்டில் ஊன்றிய மாதரியார் தம் இல்லத்துக் கோவல கண்ணகியரை வைத்துப் போற்றினார். கோவலன் கொற்றவை வழிபாடு செய்வாரொடும் கூடியும் இசைக்கிறான். ஒவ்வோரிடத்தும் இளங்கோவடிகள் பாடும் தெய்வநிலைப் பாடல்கள் அவ்வச் சமயத்தில் அழுந்தி நிற்பவர் என்று எண்ணுமாறே அமைந்துள்ளன இவையெல்லாம் அக்காலச் சமயப் பொறைச் சான்றுகள். இத்தகைய சமயப்பொறை இடைக்காலத்தும் பிற்காலத்தும் மாற்றமுற்றது. சமயப்பற்று என்பதே பிறசமயப் பழிப்பும் அழிப்புமே என்றாகி வெறிகொண்டாடியது. எந்த எந்தச் சமயங்கள் தத்தம் பொருள் என்று கொண்டு, தமிழ் மொழியை வளர்த்தனவோ, அந்த அந்தச் சமயங்களெல்லாம் சமயக் காழ்ப்பின் பெயரால் பிற சமய நூல்களை அழிக்கவும், அச்சமய நெறியைப் பழிக்கவும் முனைந்து நின்றன. இக்கேட்டாலும் அழிந்த தமிழ் நூல்கள் எண்ணற்றனவாம்.

அநபாய சோழன் சிந்தாமணிச் சுவையில் ஈடுபட்டிருந்ததைக் கண்ட சேக்கிழார், அவன் ஈடுபாட்டைத் திருப்புதற்காகப் பெரியபுராணத்தைப் படைக்கிறார். 'புறச் சமய நூல் கற்பது பொருந்தாது' எனப் புகட்டுகிறார். 'அனல் வாதம்' 'புனல் வாதம்' என்பவை 'சமண - சைவ' மதங்களின் மோதல் காட்சிகளேயாம்! 'குண்டலகேசி' சமண சமயத்தைக் கண்டித்து எழும்பிய நூல் என்றால், அதனைக் கண்டிப்பதற்கு எழும்புகிறது 'நீலகேசி' வன்மையான தாக்குதல் அமைந்த நூல் வலுவாக ஒழிக்கப்பட்டுப் போகின்றது! குண்டலகேசியும் வளையாபதியும் நமக்கு எட்டாப் பொருள்கள் ஆயின.

இலக்கணக்கொத்து இயற்றிய சுவாமிநாததேசிகர்,[1] "நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்காரம் முதலிய இலக்கணங்களையும் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, இராமன் கதை, நளன் கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஒரு பொருளாக எண்ணி வாணாள் கழிப்பர். அவர் இவைகள் (சைவ நூல்கள்) இருக்கவே அவைகளை விரும்புதல் என்னெனின், பாற்கடலுள் பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலை விரும்பாது வேறு யலவற்றை விரும்புதல்போல அவரது இயற்கை என்க" என்று எழுதுவது அவரது சமயக் காழ்ப்பை நன்கு புலப்படுத்தும் இக்கருத்தைக் கொண்டே மாதவச் சிவஞான முனிவரரும்,

[2]"சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே
தூக்கியுப தேசித்தார் சோமேசா - நோக்கிற்
பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

என்று பாடினார். "பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி" என்றார் உமாபதி சிவனார்.

1 இலக்கணக் கொத்து, பாயிரம், 7.

2. "சேக்கிழார் . . எனல்" என்று ஆசிரியர் சிவஞான யோகிகள் அருளிச் செய்தலின், சிந்தாமணிப் பயிற்சியும். சிந்தாமணி என்றது உபலக்கணமாதலின் அதுபோலும் சிலப்பதிகாரம் மணிமேகலை சூளாமணிப் பயிற்சியும் சைவ வைணவ நன்மாணாக்கர்களுக்கு ஆகாவெனின் - அஃ

[1]"தரணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க
மதிற்கபிலர்
பரணர் நக்கீரர் முதனாற்பத் தொன்பது
பல்புலவோர்
அருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே"

என்று நம்பியாண்டார் நம்பிகளால் புகழப்படும் பொய் யடிமை இல்லாத புலவர் பெருமக்கள் கபிலர், பரணர், நக்கீரர் முதலாயோர் பாடிய பாடல் தொகுப்பாகிய பாட்டு, தொகைகளையும் புறக்கணித்தமை தமிழர்தம் தீவினையே யாம்! சாமிநாத தேசிகர் போன்றவர் இவ்வகையில் தலை நின்று கேடு சூழ்ந்தோர் ஆவர்.

பிற சமய நூல்களைக் கற்பதற்கு எல்லைக் கோடு போட்டுக் கொண்டாற் போலவே, பிற சமயத்தவர்க்குக் கற்பிப்பதிலும் நாட்டம் செலுத்தினர் அரியர்; வெறுத்தாரும் உளர். பெயர் முதலியவற்றை மாற்றி வைத்துத் தம் ஆர்வத்தைக் காட்டி அரவணைத்தாரும் உண்டு.

[2]சைவ சமயம் சார்ந்தவர் எனப்பெறும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் சமண சமய நூலாகிய சிந்தாமணிக்கு உரைகண்டார். ஆனால் அவ்வுரை சமய நெறிக்கு முரணாகச் சில இடங்களில் அமைந்துள்ளதென

முன்பக்கத் தொடர்ச்சி

தொக்குமன்; ஆயினும் சிந்தாமணி முதலிய காவியங்களிற் பொதுவான உலகியல் நீதி வைராக்கியங் கூறப்படுதலானும், தொல்காப்பிய இயற்றமிழ்ப் பிரயோகம் மிக வருதலானும் அப்பயன் நோக்கிச் சைவ வைணவ நன்மாணுக்கர் அவையுங்கற்கப் பாலரென்று எடுத்தோதினும்.

"'இனிச் சைவ வைணவ நன்மாணுக்கர் அக்காவியங்களைக் கற்க வேண்டின் தத்தஞ் சமய சித்தாந்தப் பார்வையாற் கற்க ஆத்தன் நூல்களிற்போல அவற்றின்கண் அழுந்தற்க வென்பார் 'சிந்தாமணிப் பயிற்சி தீது' என்றார் பயிறல் - பலகால் உளங்கொள அழுந்தி ஆராய்தல்' மனம் ஒன்றில் அழுந்தின் அதன் வண்ணமாய் மாறுமென்பது அனுபவமாகலின்" - எனவரும் திராவிடப் பிரகாசிகை உரையும் நோக்குக
பதிப்பு, 1879 பக். 356 - 7.

சோமேசர் முதுமொழி வெண்பா, 20,

1. திருத்தொண்டத் திருவந்தாதி. 49.
2. சீவகசிந்தாமணி, நச் வரலாறு; என் சரித்திரம் 741.

அச்சமயத்தோர் கூறினர்: நச்சினார்க்கினியர் சமண சமய நூல்களைக் கற்கவும், சமணசமய நெறிமுறைகளை அறியவும் அவாவினார். அதனால் தம்மைச் சமணராகச் சொல்லிக் கொண்டு சிற்றாம்பூர் என்னும் இடத்தில் இருந்த சமணத் திருமடம் சார்ந்து உறைந்தார். சமய நூல்களைக் கற்றுத் தெளிந்தார் பின்னர் மீண்டுமோர் உரைகண்டார் சைவ நச்சினார்க்கினியர் சமண நச்சினார்க்கினியராகியே சமண சமய நூல்களைக் கேட்க முடிந்தமை அவர் காலச் சமயநிலை அழுத்தத்தை அறிவிக்கும்.

மற்றும்[1] பெரும்புலவர் இராசகோபாலப்பிள்ளை என்பார் வைணவர்; அவரிடம் கல்விகற்பதற்குத் திருமயிலை சண்முகம் பிள்ளை சென்றார். சைவம் சார்ந்த சண்முகம் பிள்ளைக்கு வைணவம் சார்ந்த இராசகோபாலப் பிள்ளை நூலோத விரும்பினார் அல்லர். சண்முகம் பிள்ளைக்கு இராமானுசன் என்னும் பெயர் சூட்டி வைணவராக்கியே ஓதினார்.

[2]டாக்டர் சாமிநாதையரின் பிள்ளைப் பெயர் சாமி நாதன் என்பதே. ஆனால் பூணூற்சடங்கின் (உபநயனத்தின்) போது 'வேங்கடராமன்' என்னும் பெயர் சூட்டப்பெறு கிறார். அந்த பெயரே நன்றாக உள்ளது என்று அவர் தந்தை யாரும் பிறரும் எண்ணினர். அது முதல் அப்பெயரையே வழங்கினர் பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையினிட மும் 'இவன் பெயர் வேங்கடராமன்' என்றே தந்தையார் உரைத்தார். பின்னே, 'உமக்கு வேறு பெயர் ஏதேனும் உண்டா?' என்று பிள்ளையவர்கள் வினவினார். 'சாமிநாதன்' என்ற பெயர் எனக்கு உண்டு என்று ஐயர் கூறியதும், "அப்படியா! சாமிநாதன் என்ற பெயர் எவ்வளவு நன்றாக இருக்கிறது! உம்மை நானும் அப்பெயராலேயே அழைக்க லாம் என்று எண்ணுகிறேன். நீரும் இனிமேல் அப்பெய ரையே சொல்லிக்கொள்ளும்" என்று கட்டளையிட்டார்!

பிள்ளையவர்களிடம் பயின்ற ஒரு மாணவர் [3]சாவேரி நாதபிள்ளை என்பார். அவர் கிறித்தவர். எனினும் திருநீறு

---

1 பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்.

2. என் சரித்திரம் பக். 120, 265. 3. ஷ பக். 241.

விளங்கவே ஆங்குத் திகழ்ந்தார் [1]பிள்ளையவர்கள் கையால் எழுதிய சிந்தாமணி நச்சினார்க்கினியர் விளக்கவுரையோடு கூடிய ஏடு திருவாவடுதுறை மடத்தில் இருந்தும், அதனைத் தம் மாணவர்களுக்குக் கற்பித்தது இல்லை! ஆதலால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை கூட இந் நிலைமை இருந்ததை அறியலாம்

இனி, அரசியல் குழப்பங்களும் அரிய சுவடிகள் பலவற்றின் அழிவுக்கு அடிப்படையாக இருந்தன. சேர சோழ பாண்டிய வேந்தர்கள் தமிழரே; அவ்வாறே வேளிர் முதலாய சிற்றரசர்களும் தமிழர்களே! மொழிவழியால் இவர்கள் ஒன்றுபட்டிருப்பினும் அரசியல் வழியால் மோதுதல் விளைத்தே வந்தனர் இருபெருவேந்தர்களோ, முப்பெருவேந்தர்களோ ஒன்றுபட்டிருக்கக் காண்பது அரிதாக இருந்தது. அவ்வாறு ஒன்றுபட்டிருக்கக் காண்பது விந்தையாகவும், காண்டற்கரியதாகவும் தோன்றிப் புலவர்கள் வியந்து பாராட்டுதற்கு உரியதாக விளங்கின "இத்நகைய இணைந்த காட்சி என்றும் ஆகுக" என்று பாராட்டினர், இவ்வேந்தர்கள மொழிக்கேடு செய்ய விழைந்திலர் எனினும், போர் விளைவால் ஏடுகள் பல அழியவே இடமாயின.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம் என்று பனம்பாரனாரால் கூறப்பெற்ற தமிழகத்தின் வடபால் பகுதி, ஆந்திர நாடாயிற்று. மேல்பால்பகுதி, கருநாடகமும் கேரளமும் ஆயின. விரிந்திருந்த தமிழ்நிலம் சுருங்கியது. அப்பகுதியில் வழங்கிய மொழித்திரிபால் ஆங்கு உலாவிய தமிழ்ஏடுகள் பொருளறி வாராவாயின. புலவர்கள் போற்றுதல் அற்றனர்.

பதிற்றுப்பத்தும், சிலப்பதிகாரமும், புறப்பொருள் வெண்பாமாலையும். பெருங்கதையும் படைத்துத்தந்த தமிழ்மண், மலையாளமொழி நிலமாயிற்று 13-14ஆம் நூற்றாண்டு அளவில் நேர்ந்த இம்மாற்றத்தால் தமிழ்நூற் பரப்பில் பெரும்பாலான ஒரு பகுதி, பெயர்தானும் அறியப்

1. என் சரித்திரம பக். 736.

பெருமல் ஒழிந்தது. தமிழ் வளர்த்த தலைநகர்கள் அழிந்தன; தமிழ் ஊர்ப் பெயர்கள் திரிந்தன; தமிழ் வழக்கும் சிதைந்தது; ஏடுகளோ மலையாள எழுத்தில் தமிழ்ச் செய்தியைத் தாங்கி வெளிப்போந்தன இதனால் தமிழராயினோர் அவ்வேடுகளைக் கற்க முடியவில்லை. ஏனெனில் எழுத்துக்கள் மலையாளத்தில் இருந்தன. மலையாளத்தவரும் படிக்கமுடியவில்லை. ஏனெனில் செய்தி தமிழாக இருந்தது, இவ்வாறு அமைந்த ஒன்று வலைவீசு புராணம் என்பர். இது திருவிளையாடற் புராணத்திலுள்ள வலைவீசு படலக் கதை போன்றதேயாம். இனித் தமிழ் மண்ணிலே எங்கும் கிடையாத ஒரு சுவடி திருவனந்தபுரம அரண்மனை சார்ந்த சுவடிச் சாலையில் கிடைத்துள்ளது. அதன்பெயர் 'அரிச்சந்திர வெண்பா' என்பது. அந்நூலே வீரகவிராயரால் பாடப்பெற்ற அரிச்சந்திர புராணத்திற்கு முன்னோடி நூல். தமிழ் நாட்டில் கிடையாத சுவடி ஆங்குக் கிடைத்தமை, அதுபோல் எத்தனை அரிய நூல்கள் இருந்து அழிந்துபட்டனவோ என்பதைத் நினைவூட்டுதல் ஒருதலை.

கி. பி மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கமுதல் ஐந்தாம் நூற்றாண்டுவரை தமிழகத்தின் இருண்ட காலம் என்பர். அக்காலத்தில் களப்பிரர் என்னும் ஒரு கூட்டத்தார் தமிழகத்தின்மேல் அடர்த்து வந்து அழிவு பல செய்தனர். பாண்டி வேந்தரை இருந்த இடம் தெரியாமல் ஆக்கி, மதுரையைப் பற்றித், தம் தலைநகராக்கி ஆட்சி மேற்கொண்டனர் மக்கள் தம் நாடும் ஊரும் விடுத்துக் காடும் கரையும் சேர்ந்து உறைந்தனர். உயிர் போற்றிக் கொள்ளுதற்கும் ஆற்றாராக அலைக்கழிந்த மக்கள் தம் கலைச் செல்வங்களைக் கட்டிக் காத்தற்கும் இயலாராய் அமைந்தனர். பாண்டிய சோழ நாடுகள் களப்பிரர் கையில் இருந்த காலத்தில் தொண்டைநாடும் நடுநாடும் பல்லவர் என்பார் ஆட்சிக்கு உட்பட்டன அவர்களும் களப்பிரர்போலவே வேற்று மொழியாளரே ஆவர் அவர்கள் காலத்தில் வடமொழிக்கும் பாலிமொழிக்குமே தனிச் செல்வாக்கு உண்டாயிற்று. வடமொழிக் கல்லூரிகளைத் தோற்றுவித்தனர். வடமொழிப் புலவர்களே போற்றப் பெற்றனர். தமிழே அறியாதவர் தமிழைப் போற்றிக் காத்தலும், அழிவு

சூழாதிருத்தலும் எதிர் பார்க்கக்கூடியன அல்ல, களப்பிரர் ஆட்சியால் மதுரைத தமிழ்ச் சங்கம் ஒழிந்தது பல்லவர் ஆட்சியால் வடமொழி கோலோச்சியது.

[1]"தமிழகத்தின் தென்பகுதியாகிய பாண்டி நாடு கி பி மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டியர் ஆட்சியை இழந்து களப்பிரர் ஆளுகைக்கு உட்பட்டது. அங்ஙனமே தமிழகத்தின்வடபகுதியாகியதொண்டைநாடும நடுநாடும் கி. பி மூன்றும் நூற்றாண்டின் இடையில் பல்லவர் ஆட்சிக்கு உள்ளாயின. நடுநாட்டிற்கும பாண்டி நாட்டிற்கும் இடையிலுள்ள சோழநாடும் களப்பிரர் ஆளுகைக்கு உட்பட்ட தாயிற்று. ஆகவே இக்காலப் பகுதியில் தமிழ் நாடு முழுவதும் வேற்றரசர் இருவரது ஆட்சிக்கு உள்ளாகி விட்டமை தெள்ளிது. அவ்விருவரும தமிழ்மொழியைத் தம் தாய்மொழியாகக் கொண்டவரல்லர். அவர்களது ஆட்சிக் காலத்தில் பிராகிருதமே அரசாங்க மொழியாக அமைந்திருந்தது. களப்பிரர் ஆட்சியில் பாலிமொழியும் அரசாங்கத்தில் பேராதரவிற்குரியதாய் அமைந்திருந்தமை அறியத்தக்கது. ஆகவே. கி பி மூன்றும் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட ஏதிலார் ஆட்சி, தமிழ் மக்களின் வீழ்ச்சிக்கு எத்துணையோ வகைகளில் அடிகோலியது என லாம். எனவே கி பி. மூன்றும் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் கி. பி ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் நடைபெற்ற அயலார் ஆட்சியில் தமிழ்மொழி போற்று வாரற்றுத் தன்வளர்ச்சியும பெருமையும் இழந்து தாழ்ந்த நிலையை எய்தி இருந்தமை உணரற்பாலதாகும்" என்றும்,

[2]'களப்பிரரது படையெழுச்சியினால் மதுரை மாநகரில் தமிழாராய்ச்சி செய்து கொண்டிருந்த கடைச் சங்கமும் அழிந்து போய்விட்டமை அறியத்தக்கது களப்பிரர் ஆட்சியால் ஏற்பட்ட தீமைகளுள் இதனினும் கொடியது வேறு இல்லை என்று கூறலாம் எனவே, இவர் களது ஆட்சிக்காலம் ஓர் இருண்ட காலமாகும்" என்றும்

1 தமிழ் இலக்கிய வரலாறு (கி. பி, 250 - 600) பக் 15-16.)

2, பாண்டியர் வரலாறு. பக், 37,

அறிஞர் டி வி சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கூறுவதால் இச்செய்திகள் விளக்கமாகும்.

இனி இடைக்காலச் சோழராட்சி தமிழ்மொழி வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டது ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார், புகழேந்தியார், சேக்கிழார், கம்பர் முதலாய புலவர் பெருமக்களைப் போற்றிப் புரந்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பத்திப்பாக்களைப் பொழிந்தனர். பாண்டியரும் ஓரளவு தமிழ்வளர்த்தனர். இவர்களுக்குப் பின்னர் நாட்டில் நிகழ்ந்த அரசியல் குழப்பம் - அயலார் ஆட்சி - ஆகியவை பல்வேறு போராட்டங்களுக்கு இடையே உயிர் தரித்துக் கொண்டிருந்த சுவடிகளில் பெரும்பாலனவற்றுக்கும் உலை வைத்து விட்டன.

[1]"விஜயநகர அரசரால் அனுப்பப் பட்டுத் தமிழ் நாட்டைப் பிற்காலத்தில் அரசாண்ட நாயக்க மன்னர்கள் பாண்டி நாட்டையும் சோழநாட்டையும் அரசாண்டனர். அவர்கள் சமயங்களையும் சமயப்புலவர்களையும் போற்றினார்களே தவிர, தமிழ் மொழிப் புலவரைப் போற்றவில்லை; பழைய தமிழ்நூல் நிலையங்களையும் போற்றவில்லை. பாண்டிய சோழ அரசர்களின் புத்தக நிலையங்கள் என்ன ஆயின என்பது தெரியவில்லை.

"பிற்காலத்தில் தஞ்சாவூரை அரசாண்ட மராட்டிய அரசர்களும் பழந்தமிழ் நூல்களைப் போற்றினார்கள் என்று கூறமுடியாது சரஸ்வதி மகால் புத்தகசாலையில் சில தமிழ் நூல்களும் இருந்தன என்றாலும் முக்கியமான சிறந்த தமிழ் நூல்கள் அங்கு இருந்ததாகத் தெரியவில்லை.

"இலங்கையில் யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கரவத்திகள் என்னும் பெயருடன் அரசாண்ட மன்னர்கள் தமிழர்கள்; அவர்கள் பாண்டியமன்னரின் தொடர்புடையவர்கள்; யாழ்ப்பாணத்தில் இவ்வரசர்கள் தமிழ்ச் சங்கங்கள் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள். சரஸ்வதி மகாலயம்

1. மறைந்துபோன தமிழ் நூல்கள் 370 - 372.

என்னும் புத்தகசாலையையும் வைத்திருந்தார்கள். பிற்காலத்தில் சிங்கள மன்னன் இம்மன்னர்களுடன் போர் செய்த போது, யாழ்ப்பாணத்தில் இருந்த இந்தப் புத்தகசாலையை அழித்து விட்டான் அவன் தமிழனல்லாத சிங்களவன் ஆகையால், தமிழ் நூல்களை அழிப்பது பற்றி அவன் கவலைப்படவில்லை.

"தமிழ்நாட்டிலே கி பி 17, 18ஆம் நூற்றாண்டுகளில் அரசியல் நிலை மிகமோசமாய் விட்டது. மத ஒற்றுமை இல்லாத வேற்று மதக்காரர்களும், வேற்று மொழிக்காரர்களும் நமது நாட்டிலேவந்து அரசியற் குழப்பங்களையும் போர்களையும் உண்டாக்கி நாட்டின் அமைதியைக் கெடுத்துப் பாதுகாப்பை அழித்தனர். பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும், முகமதியர்களும், மராட்டியரும் அந்த நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் நிகழ்த்திய அட்டூழியங்கள் சொல்லி முடியா! பெரிய நகரங்கள் முதல் சிறிய பட்டி தொட்டிகள் வரையில் அவர்களின் அட்டூழியம் மக்களைத் தாக்கியது குழப்பங்களும், கொலையும் கொள்ளையும், போர்களும், கலகங்களும், படையெடுப்புகளும் தென் இந்தியா முழுவதும் நிகழ்ந்தன.

"அந்தக் காலத்தில் தான் பெரும்பான்மையான பழைய நூல்கள் அழிந்து மறைந்தன உயிருக்கும் பொருளுக்கும் பாதுகாப்பில்லாமல் அல்லாடிக் கொண்டிருந்த மக்கள் நூல்களைப் போற்றி வைப்பதில் எவ்வாறு கவலை கொள்ள முடியும்? சமயப் பகைமைகளுக்கும் செல்லுக்கும் சிதலுக்கும் உயிர்தப்பி எஞ்சியிருந்த அருமையான சிலநூல்கள் 17, 18ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த அரசியற் குழப்பத்திலே பெரிதும் மறைந்து விட்டன"

கூட்டன்பர்க்கு என்னும் செருமானியர் கி.பி 1440இல் அச்சுப் பொறியைக் கண்டுபிடித்தார். அச்சுக் கலை மேலை நாடுகளில் வளமுற வளர்ந்தது ஆயினும் [1]கி பி. 1556 ஆம்

1. அச்சுக்கலை. பக். 142.

ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆரும் நாளிலேயே போர்த்துக்கீசியக் கப்பல் ஒன்றில் கோவாநகருக்கு, அச்சுப் பொறிகளுடன் அச்சடிப்பாளர்களும் வந்து சேர்ந்தனர். அம்பலக்காடு, புன்னைக்காயல் முதலிய இடங்களில் அச்சகம் அமைத்தனர். இக்கடமையை மேற்கொண்டவர்கள் ஏசுமத சபையினரே ஆவர் அவர்கள் தம் சமயம் தொடர்பாக முதற்கண் வெளியிட்ட நூல் 'கிறிஸ்தவ வேதப் புத்தகம்' (Doctrina Christam) ஆகும் இந்திய மொழிகளில் முதன் முதலாக வெளிவந்தது தமிழ்ப்புத்தகமே அது 1578ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது. இவ்வாறு அச்சக வாய்ப்பு ஏற்பட்டும். ஏட்டுபபடிகள் அச்சு நூல்கள் ஆவதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை. ஏனெனில் அச்சுச்சட்டம் ஒன்று தடையாக இருந்தது.

ஆள்பவர் தங்களுக்கு வாய்ப்பாகவும், தங்கள் சமயப் பரப்புதலுக் காகவுமே அச்சுப்பொறியைக் கொண்டுவந்து அச்சு எழுத்துகளைப் படைத்து அச்சடித்தனர். அவ்வச் சகத்தை இந்தியர் அமைப்பதற்கும், நூல்களை வெளியிடு தற்கும் தடுக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு தடுத்தற்கு அமைக்கப்பட்ட சட்டமே, அச்சுத்தடைச் சட்டமாகும். அச்சட்டம் கி. பி. 1835ஆம் ஆண்டுவரை இருந்தது. ஆனால் அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே சட்டத்தின் வன்மை சற்றே குறைந்து விட்டது ஆதலால் கி. பி. 1812ஆம் ஆண்டில் திருக்குறள் மூலமும், நாலடியார் மூலமும் ஒருங் கிணைந்த நூலாக வெளிப்பட்டன. அதன் முதற்பக்கத்தில் தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில், தஞ்சை நகரம் மலையப்பபிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச் சிற் பதிக்கப்பட்டது. மாசத்தினச் சரிதையின் அச்சுக்கூடம் இ ஆண்டு கஅகஉ 1812" என்றுள்ளது. அதே ஆண்டில் "Tirukkural on Virtue" என்னும் பெயருடன் 'F W. Elli's Commentary' இணைந்த முதற்பதிப்பும் வெளிப்பட்டுள்ளது. ஏறத்தாழ 250 ஆண்டுகளாக இருந்த அச்சுத்தடைச் சட்டம் அரிதில் இருந்த ஏட்டுச் சுவடிகளையும் காக்க முடியா வண்ணம் செய்து விட்டது.

கடல்கோள் முதலாக அச்சுத்தடைச் சட்டம் ஈறாகக் கண்டவை எல்லாம் உடலையும் உணர்வையும் உள்ளத்தையும் ஒருங்கே வெதுப்பத்தக்க பாலைவனக் காட்சிகள் போன்றவை! இக்காட்சிகளின் இடையேயும் ஏடுகளைக் காத்த இனிய பசுஞ்சோலைக் காட்சிகளும் சிலஉள அவற்றை மேலே காண்போம்.

5. நயத்தகு நலங்கள்

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா"

என்பது ஔவையார் பிள்ளையாரைப் பாடிய பாடல். இதில் 'தமிழ் மூன்றும் தா' என்று கூறுமல் 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று மொழிந்தது நினைவு கூறத்தக்கது. இவ்வாறே சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாம் ஆண்டாளார் தாம் பாடிய பாவைப் பாட்டின் இறுதியில், 'சங்கத் தமிழ் மாலை முப்பதும்' என்றுர் இவற்றுல் 'சங்கத் தமிழே தமிழ்' என்ற கருத்து ஆய்ந்துணர்ந்த பெருமக்கள் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தமை புலப்படும்.

புலவர் என்னும் பொதுமை சுட்டிய பெயர் தானும், சங்கப் புலவரையே சிறப்பாகக் குறித்தது 'புலவர் செந்நா' என்பதற்குச் 'சங்கப் புலவரது செந்நாவாலே' என அடியார்க்கு நல்லார் உரை விரித்தமை (சிலப். 13 : 130) இதனைப் புலப்படுத்தும் அன்றியும்,

"உங்களிலே யாரொருவன் ஒவ்வுவனே ஒவ்வேனே
திங்கள் குலனறியச் செப்புங்கள் - சங்கத்தீர்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழும் ஒக்குமோ
ஏடெழுதார் ஏழ்எழுவீர் இன்று"

என்னும் பொய்யாமொழிப் புலவர் வாக்கும் இக்கருத்தை வலியுறுத்தும்,

சங்கத் தமிழே 'தமிழ்' என்றும், சங்கப் புலவரே 'புலவர்' என்றும் அறிஞர்கள் தேர்ந்தமைக்குத் தக்க காரணம் உண்டு "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்பதுபோல அவர்கள் படைத்த நூல்களே கட்டளைக் கல்லாக இருந்து அவர்களுக்குப் பெருமையூட்டுதலால் அப்பேறு பெற்றனர்.

தகுதி வாய்ந்த புலவர் பெருமக்கள் சங்கத்தில் இருந்தனர். ஆங்கு வரும் நூல்களை விருப்பு வெறுப்பு இன்றி ஆராய்ந்தனர் 'தக்கவை இன்ன' தகாதவை இன்ன' என்று பகுத்துத் தமிழ் உலகத்தில் தக்கவற்றை மட்டுமே உலாவ விட்டனர். மற்றை நூலைத் தடுத்து நிறுத்தினர். தீயவரைப் பார்க்கிலும், தீய நூலே பெருங்கேடு புரியும் எனபதைத் தெளிந்து மொழிவளர்த்த செப்பம் இது. ஆதலால் நாட்டு நலங்கருதி ஏட்டைச் செவ்விதாக்கி வெளியிட்ட அப் பாட்டுடைப் பெருமக்கள், அறிஞர்களால் 'சங்கச் சான்றோர்' எனச் சிறப்பிக்கப் பெற்றனர்.

சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்த பெருமை பண்டைப் பாண்டியர்க்கு உண்டு. அதனை அவர்கள் கண்டது, நயத்தகு நலங்களுள் தலையாயது ஆகும். மற்றைச் சேர சோழ நாட்டுப் புலவர்களும் மதுரைப் பாண்டியர் சங்கப் புலவர்களாகத் திகழ்ந்தமை வெளிப்படை. ஆதலால் அந்நாட்டு வேந்தர்களும் தமிழ் வளர்ப்பதில் பாண்டியருடன் ஒன்றுபட்டு நின்றனர் என்பது போதரும். அன்றியும் அவரவர் அவைக்களங்களையும் அருந்தமிழ்க்கழகமாகக் கொண்டிருந்தனர் எனபதும் பழந்தமிழ் நூல்களை ஆராய்வோர் எளிதில் உணரத்தக்கதேயாம்.

சங்கப் பாடல்கள் தனித்தனி மலர் போன்றன. அவற்றை ஒருங்கு திரட்டி முறைபெற ஆராய்ந்து அடைவு செய்தமை அருஞ் செயலாகும். அதற்கு உறுதுணையாக வேந்தர் இருந்தமை வெளிப்படக் கிடக்கிறது.

இத்தொகை (குறுந்தொகை) முடித்தான் பூரிக்கோ. இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர். இத்தொகை

நாலடிச் சிற்றெல்லையாகவும் எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப் பெற்றது" என்றும்,

"இத்தொகை (நற்றிணை) ஒன்பதடிச் சிறுமையாகப் பன்னிரண்டடிகாறும் உயரப் பெற்றது இத்தொகை தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி" என்றும்,

"இத்தொகைப் பாட்டிற்கு (அகநானூறு) அடியளவு சிறுமை பதின்மூன்று; பெருமை முப்பத்தொன்று. தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுத்தான் மதுரை உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திர சன்மன் என்பான்" என்றும்,

"இத்தொகை (ஐங்குறுநூறு) தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்; இத்தொகை தொகுப்பித்தார் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையார்" என்றும்,

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே (தொல். பொருள் - 3) என்புழிச் சொல்லாத முறையாற் சொல்லவும் படுமென்றலின் இத்தொகை (கலித்தொகை) யைப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தலென இம்முறையே கோத்தார் நல்லந்துவனார்" என்றும் வருவனவற்றால் வேந்தர்கள் தொகுப்பித்தோராகக் குறிக்கப்பெறுதல் நோக்கத்தக்கது. தொகுத்த புலவர் பெருமக்கள் பெயரும் வெளிப்படுகின்றது. இவற்றால் பாடல்கள் சிதறுண்டு போகாவண்ணம் தொகையாக்கிய சீர்மை, ஏடுகளைக் காப்பாற்றியது என்க.

பண்டை மூவேந்தர்களும் புலவர்களைத் தக்கவண்ணம் போற்றிப் புரந்தனர் [1]புலவர்கள் பாடும் புகழையே புகழ் எனக் கருதினர். [2]புலவர்களையே நண்பர்களாகவும், அமைச்சர்களாகவும் கொண்டு இலங்கிய கோவேந்தர்களும்

1. புறம். 27; 72.
2. புறம். 212; 215 - 217; பதிற். பதி. 8.

உண்டு. [1]அரசர் தம் குடும்பப் பிணக்கு ஆயினும், நாட்டுப் பிணக்கு ஆயினும் புலவர்கள் முன்னின்று சந்து செய்யும் கடப்பாடு மேற்கொள்ளும் அளவுக்கு உரிமை பெற்று இருந்தனர். [2]தம் வழிமுறையைப் புலமையால் வளர்க்கும் பொறுப்பும், அவர்களை மேம்படச் செய்யும் பொறுப்பும் புலவர்களே மேற்கொள்ளச் செய்வித்த புகழ் வாய்ந்த வேந்தர்களும் இருந்தனர். [3]எந்நாட்டுப் புலவராயினும் அவரைக் காழ்ப்பு இன்றி அரவணைக்கும் சிறப்பு வேந்தர் பால் இருந்தது. இவையெல்லாம் மொழி வளர்ச்சியில் மூவேந்தர்களும் கொண்டிருந்த பற்றை விளக்கும் நற் செய்கைகளாம்.

தமிழ் மூவேந்தர்களும், வேளிரும் பிறரும் தமிழ்ப் புலவர்களைப் போற்றிப் புரந்தது போலவே, தமிழ் நூல்களை நன்கு ஆராய்வதையும் கடனாகக் கொண்டிருந்தனர். கவியரங்கேறிய காவலர்களும் பலராக இருந்தனர். நாவன்மையும் பாவன்மையும் ஒருங்கே கொண்ட வேந்தர்கள் தாம் பகைமேற் செல்லுங்கால் கூறிய வஞ்சின மொழிகளும் பிறவுமாகிய உணர்ச்சிமிக்க செய்திகள் பாவடிவில் பண்டை நூல்களில் திகழ்கின்றன இவ்வாறு மொழியைக் காத்தும் வளர்த்தும் சிறந்த அவர்கள், பகைவர் நாட்டிலும் நூல்களையோ கலைச் செல்வங்களையோ அழித்தாரல்லர். மாறாக மதித்துப் போற்றவும் செய்தனர் என்பதற்குச் சான்றுண்டு.

கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாடப்பெற்ற பட்டினப்பாலை புகார் நகரத்தில் பதினாறுகால் மண்டபம் ஒன்றில் வைத்து அரங்கேற்றப் பெற்றது. சோழன் கரிகால் பெருவளத் தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல் அது எனினும் பின்னாளில் சோழநாட்டின்மேல் படையெடுத்துச் சென்று வெற்றிகொண்ட வேந்தன் மாறவர்மன் சுந்தர பாண்டியன் பட்டினப்பாலை அரங்கேற்றமாகிய பதினாறுகால் மண்டபத்தை இடியாமல் காப்பாற்றினான். இதனைத் திருவெள்ளறைக் கல்வெட்டுப் பாடல் ஒன்று விளக்கமாகக் குறிக்கின்றது.

1. புறம் 143 - 147; 95. 2. பதிற். பதி, 8 3. புறம். 47.

[1]"வெறியார் தளவத் தொடைச்செய மாறன்
வெகுண்ட தொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டில்
அரமி யத்துப்
பறியார் தூணில்லை கண்ணன் செய் பட்டினப்
பாலைக் கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு
நின்றனவே"

என்பது அது.

ஏட்டிலே இருந்த நூல்கள் அழிந்து போவதைக் கண்ணேராகக் கண்டமையால் உண்டாகிய பட்டறிவினால் நூல்களைக் கல்வெட்டாகவும், செப்புப் பட்டயமாகவும் பொறித்து வைக்கும் வழக்கம் உண்டாயிற்று. இச்செயல்களை வேந்தர்கள் தோற்றுவித்தனர் பின்னர்ப், பொதுமக்களும் பெரும் பங்கு கொண்டனர் வரலாற்றுக் கருவூலமாகச் செப்பேடுகளும், கல் வெட்டுகளும் இருப்பதுடன், இலக்கியக் கருவூலமாகவும் அவை இருப்பதை அறிஞர்கள் நன்கு அறிவர்.

இறையனார் களவியல் அறுபது நூற்பாக்களும் மூன்று செப்பிதழகத்து எழுதியிருந்த செய்தியை அந்நூல், வரலாறு உரைக்கின்றது.

சோழன் முதற்குலோத்துங்கன் படைத்தலைவர்களுள் ஒருவன் மணவிற்கூத்தன் காலிங்கராயன் என்பான். அவன் தேவாரத் திருப்பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதச்செய்து தில்லைத் திருக்கோயிலில் வைத்தனன். இதனை,

"மூத்திறத்தார் ஈசன் முதற்றிறத்தைப் பாடியவர்
ஒத்தமைத்த செப்பேட்டின் உள்ளெழுதி-இத்தலத்து
எல்லைச் சிரிவாய் இசையெழுதி னன்கூத்தன்
தில்லைச்சிற் றம்பலத்தே சென்று"

என்னும் கல்வெட்டு வெண்பாவால் அறியலாம்.

1. செந்தமிழ் தொகுதி 41. பக் 215. இச்செய்தியுடன் 'தீப்சு' நகரை இடித்து நிலமட்டமாக்க ஆணையிட்ட அலெக்சாண்டர் 'பிண்டார்' என்னும் கவிஞன் வீட்டை மட்டும் இடிக்காமல் விட்ட செய்தி ஒப்பு நோக்கத்தக்கது - கிரீஸ் வாழ்ந்த வரலாறு.

'சிராமலை அந்தாதி' என்பதொருநூல் அது கல்வெட்டால் கிடைத்த நூலாகும் கவிராசவரோதயன் என்னும் புலவர், கல்லில் வெட்டுதற்கென்றே திருக்கோணேசுவரர் மேல்ஒரு நூல் இயற்றினர். அதில் 56 செய்யுள்கள் உள. இதனை,

"சொல்லுற்ற சீர்க்குளக் கோட்டுமன் சொற்படி
சொல்லிடவே
கல்வெட்டுப் பாட்டெனப் பாடினன் பாதி கதைப்
பொருளா
அல்லுற்ற கண்டர்தம் பொற்பாதம் நெஞ்சில்
அழுத்தியினல்
வெல்லுற்ற சீர்க்கவி ராச வரோதய விற்பனனே"

என்னும் பாடல் தெளிவாக்கும். தேவாரப் பதிகங்கள் சிலவும், மற்றைப் பதிகங்கள் சிலவும், வேறுபல பாடல்களும் கல்வெட்டுகளாலே கிடைக்கப் பெற்றுள்ளன. கல்மேல் எழுத்தும் செப்பேட்டு எழுத்தும் பனை ஏடு போல அழிந்து படமாட்டா என்பதை உணர்ந்து செயலாற்றிய சீர்மை பாராட்டுக்கு உரியதாம்.

இனி ஏடுகளைக் காப்பதற்கென ஒரு திட்டம் இடைக்காலத்தில் இருந்தது என்பதைத் 'திருக்கைக்கோட்டி' என்னும் கல்வெட்டுத் தொடர் விளக்குகின்றது. திருமுறைகள் வைத்து வழிபடப் பெற்ற கோயில் மண்டபம் திருக்கைக் கோட்டி என்று வழங்கப் பெற்றது. இதனைச் சீர்காழியிலுள்ள திருஞானசம்பந்தர் திருக்கோயில் கல்வெட்டு விளக்குகின்றது.

[1]திரிபுவனச் சக்கரவர்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ஆவது இராஜராஜ வளநாட்டுத் திருக்கழுமல நாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம் கற்கடக நாயிற்று முதல் கிராமகாரியஞ் செய்கிற பெருமக்களோம், ஆளுடைய பிள்ளையார்த் திருமாளிகைத் தமிழ்விரகர்

1. கல்வெட்டுகளால் அறியப்பெறும் உண்மைகள், பக். 73,

கண்டு இக்கோயில் திருக்கைக் கோட்டியில் எழுந்தருளி யிருக்கிற திருமுறைகள் திருக்காப்பு நீக்கி அழிவுள்ளன எழுந்தருளிவிக்கவும் திருமுறைகள் எழுந்தருளி வித்தும் திருமுறை பூசித்து மிருக்கைக்கு இவ்வூர் காசு கொள்ளா இறையிலியாக இட்டநிலம்" என்று வரும் அக்கல் வெட்டுப் பகுதி திருக்கைக்கோட்டி என்பதை நன்கு விளக்குகின்றது. ஏடுகள் பழுதுற்றபோது அவற்றைப் புதுக்குதற்கு ஒரு தமிழ் விரகர் (அறிஞர்) இருந்தார் என்பதும், தேவாரத் திருமுறைகள் வழிபடப் பெற்றன என்பதும், ஊர்ச்சபை யாரே இவற்றின் செலவுக்கு இறையிலிநிலம் அளித்துப் போற்றினர் என்பதும் தெளிவாம

திருக்காரயில், திருவீழிமிழலை, திருவுசாத்தானம் கல்வெட்டுகளும் திருக்கைக்கோட்டி பற்றி உரைக்கின்றன, திருவுசாத்தானக் கல்வெட்டு திருக்கைக் கோட்டியில் இருந்து தேவாரம் ஓதுவார்களைத் 'திருக்கைக்கோட்டி ஓதுவார்' என்றும், அதற்கு அளிக்கப்பெறும் நிவந்தத் தைத் 'திருக்கைக் கோட்டிப்புறம்' என்றும், அதனை ஆட்சி செய்பவரை 'திருக்கைக்கோட்டி இல்லத் துறையார்' என்றும் குறிப்பிடுகின்றது.

'திருக்கைக்கோட்டி' என்பதன் சொற்பொருள் விளங்கக் கிடப்பதே உலகை வாழவைக்கும் கை உழவர்கை ஆதலால் அவர்கை 'திருக்கை' என்று வழங்கப் பெறும். அவர் தம் உழுதொழிற் சிறப்பை உரைக்கும் நூல் 'திருக் கை வழக்கம்' என்பது. கம்பரால் இயற்றப்பெற்ற ஏரெழுப துடன் இணைந்த இத்திருக்கை வழக்கமும் கம்பர் அருளி யதே உழுதொழில் செய்த உயர்கை 'திருக்கை' எனப் பெற்றது போலவே எழுதுதொழில் செய்த எழிற்கையும் 'திருக்கை' எனப்பெற்றது. அக்கையெழுத்து அமைந்த ஏட்டை ஆகுபெயரால் பின்னர்ச் சுட்டியது ஆகலின், ஏடுகளைத் தன்னகத்துக் கொண்ட கோயில் மண்டம் திருக் கைக்கோட்டி எனப்பெற்றது. கோட்டம் என்பது கோயிலை யும், 'கோட்டி' என்பது கோயில் வாயிலையும் குறிக்கும் "ஆயிழை கோட்டத்து ஓங்கிரும் கோட்டி" என்னும் சிலப் பதிகாரத் தொடரும் (30:61-2) அப்பகுதியில் அரும்பத

உரையாசிரியர் 'கோட்டி-கோயில் வாயில்' என்று எழுதுவதும் இவன் கருதத் தக்கனவாம். ஆதலால் திருக்கைக் கோட்டி என்பது கோயில் வாயிற்கண் இருந்ததோர் மண்டபம் என்பது விளங்கும். ஏடுகளை அழியாமல் போற்றிக் காத்தற்கும் நாள்தோறும் ஓதுதற்கும் செய்த ஏற்பாடே திருக்கைக் கோட்டி ஆதலின் அச்செயல் நயக்கத்தக்கதாம்.

ஏடுகளைப் போற்றிக் காத்ததில் சமயங்களுக்கு மிகுந்த பங்கிருந்தது என்பது வெளிப்படை, [1]தேவாரப்பதிகங்களைக் கிடைத்த அளவிலேனும் பேணிக்காத்த பெருமை சைவப் பெருமக்களுக்கு உண்டு. இவ்வாறே அவ்வச்சமய நூல்களை அவ்வச் சமயத்தவர்கள் நாள்தோறும் ஓதுவதையும், ஊரவர்களைக் கூட்டிவைத்துப் 'பாராயணம்' செய்வதையும், அதன் நிறைவின் போது விழாக் கொண்டாடுவதையும் கடைப்பிடியாகக் கொண்டிருந்தனர்.

தமிழ் அறிஞர்களுக்கும் சிந்தாமணியின் பெயர் தானும் அறியாத காலம் ஒன்று இருந்தது. ஆனால் சமண சமயத்தினர் தாம் தாம் இருக்கும் இடங்களில் சிந்தாமணியை வரன்முறையாகப் பலமாதங்கள் ஓதுதலை (சிரவணம் செய்தலை) மேற்கொண்டிருந்தனர் ஓதிமுடித்துச் சிறப்பொடு விழாவும் எடுத்து மகிழ்ந்தனர் இதனால் நூலையன்றி, அந்நூல் கூறும் அரிய பொருள் விளக்கமும் வழிவழியே போற்றி வரப்பெற்று நாமும் அறிந்து இன்புறும் வாய்ப்புக் கிட்டுவதாயிற்று. இச்செய்தியை என் சரித்திரத்தில் (பக் 739) விளங்கக் காணலாம். இராமாயணத்தைப் பாராயணம் செய்து 'பட்டாபிசேகம்' நடத்துவது நாடறிந்த செய்தி.

புத்த சமயம் தமிழகத்தில் நிலைபெறாது போனமையால்தான். சமணசமய நூல்கள் நிலைபெற்ற அளவுக்கு அச்சமய நூல்கள் நிலைபெறாமல் போயின எனலாம். கிடைத்தவொரு மணிமேகலையும், உரையின்றிக்

---

1. ''திருமுறை எழுதுவோர் வாசிப்போர்'' திருத்தொண்டராகக் கருதப் பெற்றனர். பெரிய புராணம். கணநாதர் 3.

கிடைக்கப்பெற்ற பௌத்த சமய நூல்கள் போற்றுவாரற்றுப் போயினமையைப் புலப்படுத்தும்.

"தென்னுண்தேனின் செஞ்சொற் கவியின்பம்' என்றும், "கன்னற்பாகில் சோற்றெனில் கனியில் கனிந்த கவி" என்றும், கொங்குதேர் வாழ்க்கையராக அமைந்த சுவைஞர்களால் பாராட்டப் பெறும் பேறு வாய்ந்தது கவிச்சுவை. அச்சுவை ஈடுபாடு, சமயங்கடந்த கவிக்காதலையும் வழங்குவதாயிற்று. அதனால் அரியநூல்கள் பல நமக்குக் கிடைத்துள்ளன. சிந்தாமணி, சிலப்பதிகார, மணிமேகலை ஏட்டுச் சுவடிகள் கிடைத்துள்ள இடங்களைப் பற்றி அறிபவர் இதனைத் தெளிவர். அவற்றை அவ்வந்நூற்பதிப்புகளைப் பற்றிக் கூறும் பகுதிகளில் காணலாம்.

"ஏடாயிரம் கோடி எழுதாது தன்மனத்து எழுதிப் படித்த விரகன்" என்று அந்தகக் கவி வீரராகவர் தம்மைக் கூறுவார். மாம்பழக் கவிச் சிங்க நாவலரும் ஒரு பாடலை ஒரேமுறை கேட்ட அளவில் மனத்தில் வரப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் உடையவராக விளங்கினார் பேராசிரியர் கந்தசாமியாரை வைத்துக்கொண்டு சங்கநூல்கள் அனைத்தையும் கட்டிக் கடலில் போட்டுவிட்டாலும் அவற்றை எழுதிக் கொள்ளமுடியும் என்று கூறியவர்கள் உண்டு. மாதவச் சிவஞான முனிவர் வழியில் வந்த ஓரம்மையார் சிவஞான போதவுரையை மாவாட்டிக்கொண்டே கூறிவருவார் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இத்தகைய ஆற்றல் உடையவர்கள் வழியேதான் இறையனார் களவியல் உரை நமக்குக் கிடைத்திருக்கிறது என்பதைக் குறிப்பால் அறிய முடிகின்றது. இல்லையேல்,

"மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் தேனூர் கிழார்க்கு உரைத்தார்; அவர் படியங் கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்; அவர் மணலூர் ஆசிரியர் புளிங்காய்ப் பெருஞ் சேந்தனார்க்கு உரைத்தார். அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங்குமரனார்க்கு உரைத்தார்; அவர்

திருக்குன்றத்து ஆசிரியர்க்கு உரைத்தார்; அவர் மாதளவனார் இளநாகனார்க்கு உரைத்தார்; அவர் முசிறி ஆசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார்; இங்ஙனம் வருகின்றது உரை'' என்னும் பகுதி பொருந்தாதாய் முடியும்.

புறநானூறுக்குக் கிடைத்துள்ளது ஒரேஓர் பழையவுரை. அதன் கண். 'கழல் பரிந்தன' என்றோதி 'வீரக்கழல் நீங்கியவை' என்று உரைப்பாரும் உளர் என்றும், 'எறி பதத்தான்' என்பதற்கு 'ஒத்தும் காலையுடையான்' என்று உரைப்பாரும் உளர் என்றும் [1]கூறுவார். இவ்வாறே மேலும் பல இடங்களில் குறிப்பார். அவர் குறிப்பிடும் உரை சுவடி வழியாகக் கிடைத்திலது ஒருகால் வழிவழியே வாய்மொழியாக வழங்கிய உரையாகவும் இருத்தல்கூடும்.

சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரைக்கும் முந்துறை அரும்பதவுரை. அவ்வுரைக்கும் முந்துரை உண்டு என்பதை அவர் 'என்பாரும் உளர்' என்று சுட்டுதலால் அறியலாம். அவ்வுரையும் இவ்வாறே வழங்குரையாக இருத்தலும் கூடும். ஆதலால் நூலும் உரையுமாக வரப்படுத்திக் கொண்டு வாழ்ந்தோர் செயலும் சுவடிகளைப் போற்றிக் காத்த நயத்தகு செயல் என்று கொள்ளுதல் தகவாம்.

இடைக்கால பிற்கால சோழ பாண்டிய வேந்தர்களுக்குப் பின்னே சிற்றிலக்கிய வகைகளிலேனும் தமிழ் வளர்த்த பெருமை குறுநில மன்னர்களுக்கும், சைவ மடங்களுக்கும் உண்டு. சேதுபதி வேந்தர்கள் செய்த செந்தமிழ்ப் பணி[2] தனி நூலாகவே வெளிப்படும் அளவுக்கு அத்துணைப் பெருமையானது. மற்றும் சிவகங்கை, சேற்றூர், எட்டையாபுரம், ஊற்றுமலை முதலாய இடங்களை ஆட்சி செய்த குறுநில மன்னர்களும் பிறரும் பலப்பல தமிழ் இலக்கியங்கள் தோன்றுதற்கு மையமாக இருந்தனர். பெரும் பேராசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலாய புலவர்கள் கோயிற் புராணங்களும், பல்வேறு சிறு நூல்களும் படைத்தற்கு நிலைக்களமாகச் சைவ மடங்கள் இருந்தன.

---

1. புறநானூறு. 4. 2. சேதுநாடும் தமிழும்.

இடைக்காலத்தில் சமண சமயச் சான்றோர்கள் செய்த இலக்கண நூற்பணி தலைமேற்கொண்டு போற்றத் தக்கதாம். அவர்களைப் போல இலக்கணப் பணி எச்சமயத்தாரும் செய்திலர் என்றும் துணிந்து கூறலாம். சமயத்தில் கொண்டிருந்த அழுத்தம் எவ்வளவோ, அவ்வளவு அழுத்தம் மொழித் தொண்டிலும் கொண்டிருந்தனர் என்பது வெளிப்படை.

பிற்காலத்தில் கிறித்தவ சமயப் பரப்புநர்களாக வந்த பெருமக்களும், இசுலாமிய சமயப் புலவர்களும் பல நூல்களைப் படைத்தமை நாடறிந்த செய்தி. கிறித்தவ சமயப் பெரியார்களால் அகராதி, கலைக் களஞ்சியம் முதலாய புதுவகை நலங்களைத் தமிழ்மொழி பெற்றமையும், தமிழ்மொழி 'உயர்தனிச் செம்மொழி' என அறிஞர்களால் ஒப்பப் பெற்றமையும் கண்கூடு

"தமிழின் தொன்மையை உலகிற்கு அறிவித்தவர் கால்டுவெல் பெருமகனார். தனித் தமிழ்க்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர்; செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறை தமிழ் மலையாம் மறைமலையடிகளார்; நானே மரமாக வளர்த்து வருகிறேன்" என்று மொழிஞாயிறு திருமிகு தேவநேயப் பாவாணர் கூறுமாறு தனித்தமிழ் உணர்வை உண்டாக்கி, வளர்த்துவரும் பெருமக்கள் நினைவும் இவ்விடத்தே கொள்ளத்தக்கது.

20-4-1918, 21-4-1918 ஆகிய இருநாள்களிலும் சென்னை மாகாணச் சங்கச் சார்பில் தஞ்சை - திருச்சி மாநாடு தஞ்சையில் கூடியது. [1]அம் மாநாட்டில் "பொதுக் கூட்டங்களில் தமிழர்கள் தாய் மொழியிலேயே பேசுதல் வேண்டும்" என்றும, "அயல்மொழியில் பேசுதல் கூடாது" என்றும், 'எவரேனும் அயல் மொழியில் பேசப் புகுந்தால் அவரைத் திருத்தும் பொறுப்பைப் பொதுமக்கள் ஏற்றல் வேண்டும்" என்றும் தமிழ்த் தென்றல் திரு வி. கலியாண சுந்தரனார் வலியுறுத்தித் தீர்மானம் ஒன்று கொணர்ந்தார்

1. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள், பக். 261 - 2.

"தமிழில் பேசலாகாது" என்று ஆங்கிலத்தில் நாவன்மை காட்டிவந்த பெருந் தலைவர்களெல்லாரும் தமிழில் பேசப் புகுந்தனர். பொதுமக்கள் கிளர்ச்சியின் முன்னர் எந்தத் தலைவர் என்ன செய்தல்கூடும்? என் வாழ்வில் நிகழ்ந்த முதல் புரட்சி இஃது ஆகும்." என்று குறிப்பிடுகிருர் திரு. வி. க. இவ்வாறு மேடையில் தமிழ் முழக்கம் செழிப்ப தற்கு வழிகண்ட பெருந்தகை திரு. வி. க வும் இப்பகுதியில் நினைவு கூர்தற்கு உரியவர்.

இங்குக் கூறியனவும் பிறவும் தமிழின் நல்வாழ்வுக்கு வாய்த்த நயத்தகு நலங்கள் ஆகும். இனி, நூல் வெளியீடு கள் தொடர்பாகக்காணவேண்டிய நாம், அதற்கு முன்னோடி யாகத் தமிழ் எழுத்து வடிவங்கள். அதன் மாற்றங்கள் முதலியன பற்றி அறிவோம்.

6. தமிழ் வரிவடிவும், மாற்றங்களும்

ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திற்கு முற்பட்டே தமிழ்மொழி வரிவடிவம் பெற்றிருந்தது அவர் தமிழ் அடங்கல்முறை அல்லது நெடுங்கணக்கைக் கூறிய பின்னரே எழுத்திலக்கணம் முதலாயவற்றை விவரிக்கின்றார் எழுத்துகள் எல்லாவற்றுக்கும் வரிவடிவங்களைக் கூறினார் அல்லர், எனினும் சில எழுத்துகளின் வரிவடிவங்களையும் கூறியுள்ளார்.

எழுத்துகளை இருவகையாக முதற்கண் பகுத்துக் கொள்கிறார். 'அகர முதலாக னகர ஈறாக' உள்ளவையாகிய முப்பது எழுத்துகளையும் ஒருவகையாகவும். அவற்றைச் சார்ந்து வருவனவாகிய குற்றியலிகரம் குற்றியலுகரம், ஆய்தம் என்பவற்றை மற்றொரு வகையாகவும் கூறி, எழுத்துகள் முப்பத்து மூன்று என்பதைக் கணக்கிட்டு உரைக்கிறார்.

பின்னவை மூன்றும் சார்பெழுத்து என்றமையால், முன்னவை முப்பதும் முதலெழுத்து என்பது தெளிவாகும் அம்முப்பதனுள்ளும் அகர முதல ஔகார ஈறாயவை பன்னிரண்டும் உயிர்எழுத்து என்றும், ககர முதல் னகர ஈறுயவை பதினெட்டும் மெய்யெழுத்து என்றும் பகுத்துக் காட்டுகிறார், மேலும் குறில், நெடில், மாத்திரை, வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், குறுக்கம், அளபெடை ஆகியவற்றை விளக்கிச் செல்கின்றார். இவற்றின் இடையே எழுத்தின் வரிவடிவங்களையும் இயம்புகின்றார்.

'ம்' என்பது ஓர் எழுத்து இது மெய்யெழுத்து ஆக லின் அரை மாத்திரை அளவே பெறும். எனினும் 'ம்' என் னும் எழுத்து, 'கொண்ம்' 'சென்ம்' 'போன்ம்' போன்ற இடங்களில் வரும்பொழுது அரை மாத்திரை அளவினும் குறைந்தே ஒலிக்கும். அரைமாத்திரை யுடைய 'ம்' என்னும எழுததிற்கும், அதில் பாதியாகக்குறைந்து ஒலிக்கும் 'ம்' என் னும் எழுத்திற்கும் வடிவத்தில் வேறுபாடு காட்டுதல் இன்றி யமையாதது இதனால், தொல்காப்பியனார் ஒரு விதி கூறி னார். அவருக்கு முன்னரே அவ்விதி வழக்கில் இருந்திருக்க லாம். புறத்தே பெறும் புள்ளியுடன், உள்ளேயும் ஒரு புள்ளி வைத்தால் அவ்வெழுத்து, மாத்திரை குறைந்த 'ம' என் னும் எழுத்திற்கு அடையாளமாகும் என்றார்.

[1]உட்பெறு புள்ளி உருவாகும்மே''
என்பது அவர் கூறும் நூற்பா.

'க'என்பது உயிர்மெய்யெழுத்து. 'க்'என்பது மெய் யெழுத்து. இரண்டன் எழுத்திலும் வே று பா டு இல்லை. வேறுபாடாவது, மெய்யெழுத்திற்கு அடையாளமாக எழுத் தின் மேலே ஒரு புள்ளி வைப்பதே இப்புள்ளி வைக்கத் தவறினல் மெய்யிற்கும், உயிர் மெய்யிற்கும் வேற்றுமை இன்றி மயக்கம் நேரிடும் ஆதலால் அதனை வறபுறுத்தி யுரைக்க வேண்டிய கடமை அவருக்கு நேரிட்டது. ஆதலால்.

[2] 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்''
என்றார்.

தொல் காப்பியர் காலத்தில் 'எ' என்னும் எழுத்து நெடிலாக அதாவது நாம் எழுதும் 'ஏ' என்பது போல இருந்தது. அதுபோல் ஒ என்னும் எ ழு த் து ம் நெடிலாக அதாவது நாம் எழுதும் ஓ என்பது போல இருந்தது இவ் விரண்டு எழுத்துகளுக்கும் - நெடில் ஆதலால் - இரண்டு மாத்திரை அளவு உண்டு ஆனல் ஒருமாத்திரை அளவு டைய இவற்றின் குறில்களுக்கு அதாவது நாம் இப்பொழுது

1. தொல் எழுத்து. 14 2. தொல். எழுத்து. 15.

எழுதும் 'எ', 'ஒ' போன்ற எழுத்துகளுக்கு, வேறுபாடு காட்ட வேண்டிய கடப்பாடு அவருக்குத் தோன்றியது. ஒருவேளை அவருக்கு முந்துநூல் ஆசிரியர்களுக்கே அத்தகைய கட்டாயம் தோன்றியிருக்கவும் கூடியதே ஆதலால், மாத்திரையைக் குறைத்துக் காட்டுவதற்குக் கையாண்ட-மகரக் குறுக்கம், மெய் முதலியவற்றுக்குக் கையாண்ட - புள்ளி வைத்தல் முறையையே கைக்கொண்டார். எ, ஒ என்னும் எழுத்துகளின்மேல் புள்ளி வைத்தார் (எ், ஒ்) ஆதலால் புள்ளியால் குறில் எழுத்தைக் காட்டியவுடன், புள்ளி யில்லாத எ, ஒ நெடிலாகத் தெளிவாயிற்று இதனை,

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"

என்று கூறிய நூற்பாவைத் தொடர்ந்து.

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே"

என்று வரையறுத்தார்.

உலகு என்பதிலுள்ள 'உ' குறில், ஒருமாத்திரை அள வினது ஆனால் 'உலகு' என்பதன் இறுதியிலுள்ள 'கு' என்னும் எழுத்திலும் 'உ' இருக்கவே செய்கிறது. என்றாலும் அந்த 'உ' என்னும் எழுத்தின் மாத்திரை குறைவுடைய தாகும். ஆதலால், குற்றியலுகரம் என்பர். உகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் வரிவடிவில் வேறுபாடு காட்ட வேண்டிய முறைமை ஆசிரியருக்கு நேரிடுகின்றது. இவ் வாறே, 'இரும்பியாது' என்பதில் உள்ள 'இ' என்பதும், 'பி' என்பதும் இகர எழுத்தே ஆயினும், ஒலியில் வேறுபாடுடை யவை. முன்னது இகரம் பின்னது குற்றியலிகரம உகரம் போலவே இந்த இகரத்திற்கும் வரிவடிவில் வேற்றுமை காட்டுதல் வேண்டும். முன்னே மாத்திரையைக் குறைத்துக் காட்டுதற்குக் கையாண்ட வழியையே இவற்றுக்கும் கையாண்டார் குற்றியலுகரம் குற்றியலிகரம் என்பவற் றைத் தெளிவாகக் காட்டுதற்கு அவ்வெழுத்துகளின்மேல் புள்ளி வைக்கக் கட்டளை இட்டார்.

இன்னும் ஓர் எழுத்திற்கு வரிவடிவம் காட்டுதல் எஞ்சியிருந்தது. அஃது ஆய்த எழுத்தாகும் ஆய்தம் என்பது

நுணுக்கம் என்னும் பொருள் தரும் சொல் ஆதலால் தமிழ் எழுத்துகளுள் மிக நுணுகிய ஒலியுடைய எழுத்திற்கு ஆய்தம் என்று குறியிட்டு ஆண்டார். அதன் வரிவடிவையும் மாத்திரைக் குறைவுக்கு அடையாளமாகப் போற்றிய புள்ளிகளைக் கொண்டே அமைத்துக் கொண்டார்.

சார்ந்து வரும் மரபினையுடைய இம் மூன்று எழுத்துகளையும்,

[1]"அவைதாம்,
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன"

என்று விளங்கக் கூறினார்.

இனி, ஆய்தம் தனக்குரிய மாத்திரை அளவினும் குறைந்து வருதலைத் தொல்காப்பியனார் அறிந்தே இருந்தார். இதனை,[2] 'ஆய்தம அஃகாக்காலையான' என்பதால் 'அஃகும் (குறுகும்) காலையும் உண்டு' என்பதைக் குறிப்பால் அறியவைத்தார். ஆயினும் அஃகும் ஆய்தத்திற்குத் தனிவரி வடிவு கொண்டார் அல்லர். கொண்டிருநதார் எனின் சார் பெழுத்து மூன்று என அறுதியிட்டுக் கூறியிரார் என்க.

உயிரும் மெய்யும் கூடிய எழுத்தே உயிர்மெய் எழுத்து என்பது பெயரால் அறியக்கிடப்பினும் [3]'மெய்யின் வழி யேது உயிர்தோன்று நிலையே" என்று கூறி மெய்யொலி முன்னுதலையும், உயிரொலி பின்னுதலையும் தெளிவு செய்கிறார். அவ்வாறு உயிர்மெய்யாகும்போது [4]அகரத்தோடு சேருங்கால் மெய்யின் புள்ளி இழநத வடிவே வடிவாக அமையும் என விளககினார் மற்றை உயிர்களோடு கூடுங் கால் வடிவம் திரிந்து இயங்கும் என்றார். எவ்வாறு திரிந்து இயங்கும் என்பதை விரித்துரைத்தார் அல்லர் ஆனால் உரையாசிரியர்கள் விரித்துரைததனர்

1. தொல் 2 2 தொல் 40.
3. தொல். 18. 4 தொல். 17.

"உருவு திரிந்து உயிர்த்தல் மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்று உயிர்த்தலும், கோடுபெறுவன கோடு பெற்று உயிர்த்தலும், புள்ளிபெறுவன புள்ளிபெற்று உயிர்த்தலும், புள்ளியும் கோடும் உடன் பெறுவன புள்ளியும் கோடும் உடன்பெற்று உயிர்த்தலும் எனக் கொள்க" என்று இளம்பூரண அடிகள் உரை வரைந்தார். அக்காலத்து விளங்கக் கிடந்தன ஆகலின் விலங்கு, கோடு, புள்ளி இவற்றை எடுத்துக்காட்டால் விளக்கினார் அல்லர். ஆனால் அவருக்குப் பின்னே உரை வரைந்த நச்சினார்க்கினியர், "உருபு திரிந்து உயிர்த்தலாவது மேலும் கீழும் விலங்குபெற்றும் கோடு பெற்றும் புள்ளி பெற்றும் புள்ளியும் கோடும் உடன்பெற்றும் உயிர்த்தலாம்.

கி, கீ - முதலியன மேல்விலங்கு பெற்றன.

கு, கூ - முதலியன கீழ்விலங்கு பெற்றன.

கெ, கே - முதலியன கோடுபெற்றன.

கா, ஙா - முதலியன புள்ளிபெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர்.

மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினர்.

கொ, கோ, ஙொ, ஙோ - முதலியன புள்ளியும் கோடும் உடன் பெற்றன"

என்று [1]விளக்கினர் இவ்விளக்கத்தால் 'மேல்விலங்கு' என்பது மேல் வளைவு என்பதும், 'கீழ் விலங்கு' என்பது கீழ் வளைவு என்பதும், 'கோடு' என்பது 'ஒற்றைக் கொம்பும் இரட்டைக் கொம்பும் என்பதும், நச்சினார்க்கினியர் காலத்திற்கு முன்னே கா, கொ, கோ என்பன க., கெ., கே. என எழுதப் பெற்றன என்பதும் விளங்குகின்றன. ஆனால் ஐகார

1 "கோடு கொண்டன பல்ல கால் கொண்டன பல்ல
கூடு புள்ளிகள் கொண்டன பல்லமேல் விலங்கும்
பாடு கொண்டன பல்லகீழ் விலங்தல பல்ல
நீடு மின்னதால் நெடுங்கணக் கெனற்கைய மின்றே"

என்னும் மாயூரப் புராணச் செய்யுள் மரச் சோலைக்கும் நெடுங்கணக்குக்கும் இரட்டுற மொழியாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

ஔகார உயிர் மெய்களின் வடிவங்குறித்து இப்பகுதி விளக்கவில்லை.

யாழ்ப்பாணம் அறிஞர் ஆ. முத்துத்தம்பிப் புலவர் இவற்றை முறைப்படுத்தி விளக்குவதுடன், ஐகார, ஔகார உயிர் மெய்வடிவங்களின் அடையாளங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

முன் இரட்டைப் புள்ளிபெறுவன ..க (கை) புள்ளியும் கோடும் இரட்டைப் புள்ளியும் பெறுவன !க.. (கௌ)

ஆனால் இவர் கோடு என்பதனைக் கொம்பு (வளைவு) எனக் கொள்ளாமல், நட்டுக் கீற்றைக் கொண்டது பொருந்தாததாயிற்று. புள்ளியும் கோடும் இரட்டைப்புள்ளியும் பெறுவன ¦க.. (கௌ) என்றிருத்தல் பொருந்தும் மற்றை இடங்களிலும் கோடு என்பதை நட்டுக்கீற்றாகவே கொண்டார். "கணைகொடிது யாழ்கோடு" என்பதில் கோடுவளைவாதல் அறிக.

தமிழ் மொழியின் முந்தை வரிவடிவங்களைக்காணும் நமக்கு வியப்பும் திகைப்பும் ஏற்படக்கூடும். இன்றை எழுத்துக்கும் முந்தை எழுத்துக்கும் இடைப்பட்ட வேற்றுமை பெரிது தோன்றும் ஆனால் படிப்படியே மாற்றங்கள் நிகழ்ந்து வந்தமையால், எவருக்கும் மயக்கம் உண்டாகவில்லை. இந்நிலை தொல்காப்பியத்தின் பின்னூலாக எழுந்த நன்னூலார் காலம்வரையும்கூட இருந்தது. ஆதலால் அவர்,

[1]"தொல்லை வடிவின எல்லா எழுத்தும்
ஆண்டெய்தும் எகர ஒகர மெய்புள்ளி"

என்று நூற்பா யாத்தார். இதனால், எகரம், ஒகரம், மெய் ஆகிய மூவகை எழுத்துகளும் புள்ளிபெறும் என்பதைக் கூறினர் மற்றை எழுத்துகளின் வடிவு பழைமையானதே என்றார் இவ்வெழுத்துகளுக்குப் புள்ளியிட்டு எழுதுவார் அரியராகவே இதனை வலியுறுத்தல் கடன் எனக்

1. நன்.

கொண்டார் என்று எண்ண வேண்டியுள்ளது. குறுகிய இகர உகரங்கள் புள்ளி பெறுதலைப்பற்றி இவர் கூறாதுவிடுத்ததும் இவண் நினையத் தக்கதாம்.

புள்ளியால் நெடிலைக் குறிலாக்கும் இவ்விந்தை புலவர்களைக் கலைவிளையாட்டு விளையாடச் செய்தது; ஒரு சொல்லணியாகக் கொள்ளவும் தூண்டியது இதனை மாத்திரைச் சுருக்கம் என்பார் [1]தண்டியலங்கார முடையார். மாத்திரைச் சுதகம் அளவுச் சுதகம் என்பார் [2]யாப்பருங்கல விருத்தியுடையார்.

"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளிபெற நெருப்பாம்"

என்பது தண்டியலங்காரம் தரும் ஒருமேற்கோள். மகளிர் கூந்தல் 'ஓதி' ஆகும். முன்னாளில் ஓதியை 'ஒதி' என்றே எழுதினர் 'ஒ' என்பதன் மேல் ஒருபுள்ளி வைத்தால் (ஒ்) குறில் ஆகிவிடும். அப்பொழுது 'ஒதி' என்னும் மரத்தைக் குறிக்கும். நீர் நிலை 'ஏரி' ஆகும். ஏரியை 'எரி' என்று தானே முன்னோர் எழுதினர். 'எ' என்பதை ஒரு புள்ளி வைத்தனர் (எ்) அப்பொழுது ஏரி, 'எ்ரி' யாக மாறி நெருப்பு என்னும் பொருள் தரும். இதனையே,

[3] "மயிர்நீறுவி மற்றதற்கோர் புள்ளி கொடுப்பின்
செயிர்தீர் மரமாகும் சென்று"

என்றும் கூறினர்.

எல்லா எழுத்தும் புள்ளியுடையனவாகவே வரின் அதனைப் 'பிந்துமதி' என்னும் சொல்லணியாகக் கொண்டனர்.

"ெ்நய்ெ்காண்ெ்டன் ெ்நற்ெ்காண்ெ்ட
ெ்னட்ெ்காண்ெ்டன் ெ்காட்ெ்காண்ெ்டன்
ெ்சய்ெ்காண்ெ்டன் ெ்சம்ெ்பான்ெ்காண் ெ்டன்"

1. நூற்பா. 97. 2 பக். 548.
3. யா. வி. பக். 548; நன் 269.

என்றொரு வெண்பாவைக் காட்டி, "எல்லா எழுத்தும் புள்ளியுடையனவே வந்தமையால் இது பிந்துமதி" என்றார், [1]யாப்பருங்கல விருத்தியுடையார். எகர, ஒகரம், மெய் ஆகியவை புள்ளிபெறுதல் அந்நாள் வழக்கம் ஆகலின் "எல்லா எழுத்தும் புள்ளியுடையனவே வந்தன" என்றார்.

தொல்காப்பியனார் காலந்தொட்டே வரிவடிவ அமைப்பு வலியுறுத்தப் பெற்று வந்தும், ஏடு எழுதுவோர்களும், கல்வெட்டு, செப்புப் பட்டயம் தீட்டுவோர்களும் புள்ளி எழுத்தைப் புள்ளியில்லா எழுத்துப்போலவே எழுதினர், மேலும் ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு வேறுபாடும் கருதப் பெறவில்லை. காலுக்கும் (ா) 'ர'கரத்திற்கும் வேற்றுமை விளங்க எழுதினார் அல்லர். ஆதலால் தக்க பயிற்சியுடையார்க்கு அன்றிப் பிறர்க்கு அவற்றைச் செவ்வையாகப் படிக்க இயலவில்லை. படிக்க இயலாதவர் படி எழுதவும் பொறுப்பேற்றனர் என்றால் அவர்தம் எழுத்து எவ்வாறு அமைந்திருக்கும்? அரைகுறைப் படிப்பாளர் பலர் கூலிக்கு ஏடு எழுதியதாலும், கல்லில் வெட்டியவர் கல்வித் திறக் குறைவாலும் அவற்றில் ஏற்பட்டிருக்கும் பிழைகள் எண்ணத் தொலையா. ஏடுகளில் காணப்பெறும் மிகுந்த பாட வேறுபாடுகளும் கருத்தின்றிப் படி எடுத்தமையால் ஏற்பட்டவையேயாம்.

மற்றும் ஏடுகள் புள்ளி வைத்தற்கு ஏற்றவையாகவும் அமையவில்லை அழுத்திப் புள்ளி வைத்தால் கூராணி த்துளை மறுபக்கமும் வந்துவிடும். ஏடும், கீறியும் ஒடிந்தும் போம். ஆகலால் புள்ளி வைப்பதைப் போற்றினாரல்லர். மற்றும் ஏட்டிலும் கல்லெழுத்திலும் தவறு நேருமாயின் அவ்வெழுத்தை அழிக்க முடியாமல் அவ்வாறே விட்டுச் சென்றனர். கருத்துள்ள ஒரு சிலரே, "இது பிழை; இதனை விடுத்துப் படிக்க" என்பதற்கு அடையாளமாகப் புள்ளி வைத்தனர். இதனை, "எழுத்து உருவழியாதே கிடந்தாலும், புள்ளி குத்தினால் அத்தைக் கழித்து மேலே போமா போலே" என வரும் திருவாய்மொழி[2] ஈட்டுரையால் அறியலாம்.

---

1 யா. வி. பக். 548. 2. ஈடு 7 : 3. 4.

"ஆண்டார்க்கும் ஆளிய வருவார்க்கும் இடைநின்ற காலம்போல் இருள்தந்த மருள்மாலை" என்றாற்போல ஏடு எழுத்தாணிக் காலம் முடிந்து தாளும் எழுதுகோலும் கால் கொள்ள வந்த காலத்திற்கு இடைப்பட்ட காலத்தில் பேரிடர்ப்பாடாயிற்று. ஆதலால் அக்கால நிலையில் தமிழ் எழுத்துகளில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டியது உண்டாயிற்று. அதனைத் துணிந்து செய்தவர் வீரமாமுனிவர் என்பர் அவர் எழுதிய 'கொடுந்தமிழ்' என்னும் நூலில் [1] "குறிலுக்கும் நெடிலுக்கும் ஒரே மாதிரியாக எழுதப்பட்டு வருகிற கொம்பு என்று சொல்லப்படுகிற -ெ- இந்த எழுத்தைக் குற்றெழுத்தைக் குறிப்பிடவும், இக்கொம்பை மேலே சுழித்து - ே - இவ்விதமாக எழுதினால் நெட்டெழுத்தைக் குறிப்பிடவும் மாற்றியமைத்தேன். உதாரணமாக மெய், மேய்; பொய், போய்' என்பார்.

இனி வீரமாமுனிவர் தாம் இயற்றிய தொன்னூல் விளக்கத்தில் எ, ஒ முதலிய குற்றெழுத்துப் புள்ளிக்கும், மெய்யெழுத்துப் புள்ளிக்கும் ஒரு வேறுபாட்டை உண்டாக்குகிறார்.

[2] "நீட்டல் சுழித்தல் குறில்மெய்க்கு இருபுள்ளி"

என்பது அது. அதனால் குறிலுக்கு வைக்கும் புள்ளியை நீட்டியும் (-) மெய்க்கு வைக்கும் புள்ளியைச் சுழித்தும் (o) அமைத்துக்கொண்டார் என்பது விளங்கும்.

எகர ஏகாரங்களுள் வேறுபாடு காட்டுதற்கு வீரமா முனிவரே வழிவகுத்தார் என்பர் ஏகாரத்தில் உள்ள கீழ்க் கோட்டை உண்டாக்கியவர் அவரே என்பர். [3] "ஆனால், அங்ஙனம் கோடிழுப்பது அம்முனிவர்க்கு முற்பட்ட சாஸன வழக்காய் இருத்தலால் (T. A. S. vol I. P 202) அக்கூற்றுப் பொருந்தாதாம்" என மறுப்பார் அறிஞர் மு. இராகவை யங்கார்.

---

1. அச்சுக்கலை. பக். 138.
2. நூற்பா. 12.
3. ஆராய்ச்சித் தொகுதி. பக் 123.

'கெ' என்பது குறிலாகவும், 'கெ' என்பது நெடிலாக வும் கொள்ளப்பெற்றன அல்லவா. இவற்றையும் சீர்திருத்தினார் வீரமாமுனிவர். அவர் திருத்தியபடி 'கெ' என்பது குறிலாகும். 'கே' என்பது நெடிலாகும். இவ்வாறே ஒகர உயிர் மெய்க்கும் ஓகார உயிர் மெய்க்கும் வேறுபாடு செய்தார். இவ்வகையால் அவர் செய்த எழுத்துச் சீர்திருத்தம் தமிழறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்றுப் போற்றப் படுவதாயிற்று.

'ை' என்பது ஐகாரத்தின் அடையாளம். 'கை' என்பதில் தனித்து நிற்கிறது. ஆனால் 'ணை, லை, ளை, னை' ஆகிய எழுத்துகளில் 'ை' தனியே நிற்கவில்லை. இந்நான்கு எழுத்து களும் சுழிகளாக இருப்பதால் (ண, ல, ள, ன) இவற்றின் முன் அமைந்த இரட்டைச் சுழிகளும் வேறுபாடற இணைந்து எழுதப் பெற்றுவிட்டன. பின்னே இரட்டைச் சுழி ஒற்றைச் சுழியாய் மேலே ஏறி நிமிர்ந்திருக்கவேண்டும். ஆனால் இதே அமைப்புடைய 'ஒ' 'வ' என்பவை இம் மாற்றத்தைப் பெறாமை எண்ணத்தக்கது. இப்பொழுது ஐகார உயிர் மெய்களுக்கெல்லாம் 'ை' என்னும் பொது அடையாளம் ஒன்றாகவே இருத்தல்வேண்டும் என்று தோன்றியுள்ள எழுத்துச் சீர்திருத்தம் ஏற்றுப் போற்றத்தக்கதே. இம்முறை தட்டச்சு முதலியவற்றுக்கு மிக வாய்ப்பானதாம்.

பழங்காலத்தில் தமிழ் எழுத்து [1]'கண்ணெழுத்து' எனப்பெற்றது. அவற்றை எழுதியவர் [2]கண்ணெழுத்தாளர் எனப்பெற்றனர். இக்கண்ணெழுத்து, வடிவத்தால் பெற்ற பெயர் ஆகும். இவ்வெழுத்தே பின்னாளில் வட்டெழுத்து எனப்பெற்றது அதுவும் வடிவால் பெற்றபெயரே வட்டெழுத்துக் கல்வெட்டுகள் தமிழகத்தில் மிகுதியாகக் காணப் பெறுகின்றன இவை இன்று நாம் வழங்கும் தமிழ் எழுத்தின் முன்னோடிகளாம். காலந்தோறும் மாற்றமுற்றே இன்றை வடிவை இவை எய்தியிருக்கின்றன.

1 சிலப்பு 5 : 12; 26 : 36. 2. சிலப்பு. 26 : 170.

'எழுத்தை வடிவம் மாருமல் போற்றவேண்டும்' என்னும் கருத்து பண்டு தொட்டே இருந்து வந்திருக்கிறது. அதற்கான விதிகளையும் வகுத்தே வந்திருக்கின்றனர். எனினும் காலவெள்ளம் புதிய மாற்றங்களை உண்டாக்கிக் கொண்டே வந்திருக்கிறது. எழுது பொருள்களும் இந்த மாற்றத்திற்கு வகையாகவே இருந்திருக்கின்றன.

[1] "கொம்புசுழி கோணுமல் கொண்டபந்தி சாயாமல்
அம்புபோல் கால்கள் அசையாமல் - தம்பி
எழுதினல் நன்மையுண் டு"

என்று இளைய மாணவர்க்கு ஓதி வந்தாலும் எழுத்து வடிவ மாற்றங்களைத் தடுத்துவிட முடியவில்லை. 'அச்சு' வடிவம் பெற்ற பின்னரே எழுத்து ஒரு நெறிப்பட்டிருக்கிறது என்பது தகும்.

ஏட்டுப் படிகளைப் படித்துப் பொருள் காண்பது அரிது 'சிலப்பதிகாரமா? சிறப்பதிகாரமா?' என்னும் ஐயம் கூட எழும்பியது உண்டு. 'திருவிளையாடல் பயகர மாலை' என்பதொரு நூல் 'திருவிளையாடல் பயங்கர மாலை' என அச்சூர்தி ஏறி உலாவும் வந்தது. மதுரைச் சொக்கநாதர் ஆடிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் கூறும் அந்நூலின் பாடல்தோறும், "சொக்கே பரதேசி பயகரனே" என முடியும் 'பயத்தை அழிப்பவன்' என்னும் பொருளில் 'பயகரன்' என்றது, 'பயங்கரமாக' மாறியது.

களவியலில் கூறப்பெறும் "அவர்களாற் பாடப்பட்டன வெத்துணையோ பரிபாடலும்" என்பது "வேத்துணையோர் பரிபாடலும்" என்று பதிப்பிக்கப் பெற்றது. 'திருக்கைக் கோட்டி' என்பது 'திருக்கைக் கொட்டி' எனப் படிக்கவும், பதிக்கவும் பெற்றது. 'களவன்' 'கள்வன்'; 'நோதிறம்'-'நேர்திறம்'; 'சரகம்' - 'சாகம்' என்றெல்லாம் படிக்கவும், அச்சிடவும் பெற்றன.

---

1. நல்லுரைக் கோவை.I. பக். 130.

"விடியல வெஙகதிா காயும வெயம லகலறை" - இதனைப் பிரித்துணர்தற்கு எத்தனை புலவரிடம் கொண்டு திரிந்தேன். எத்தனை வித்துவான்களுக்குக் கடிதம் எழுதிக் கை சலித்தேன். எனக்குவந்த மறுமொழிகளை வெளியிட்டுச் சொன்னால் மிகவும் வெட்கக்கேடன்றறிக. அவை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் மகத்துவத்தை நன்கு விளக்கின" என்று [1] அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளை குறிப்பிடுகிறார். அவர் பதிப்பிப்பதற்காக எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்! இப்பாடுகள், எழுத்துகளைப் பிரித்து உணர்தற்கு உண்டாகிய மயக்கங்களால் நேர்ந்தவை அல்லவா! இவ்விடர்ப்பாடு, கல்வெட்டையும், செப்பேட்டையும் படித்தலிலும் நிகழக் கூடியதாகவே இருந்தது.

"தமிழ்ச் சாசனங்களைப் பதிப்பிக்கும்போது சில விஷயங்களைக் கவனிக்கவேண்டும். மூலசாசனத்திலே சில சொற்களின் எழுத்துக்கள் ஒரேவிதமாக எழுதப்படாமல் இருப்பதனாலே சாசனப் பதிப்பாளர் சரியான சொல்லையும் பிழையான சொல்லையும் விளக்கிக் காட்டவேண்டியவராக இருக்கிறார். உதாரணமாக எடுத்துக் காட்டுவோம்: ந, ர் என்னும் எழுத்துக்கள் ன், ற் என்னும் எழுத்துக்களாக மாறுகின்றன நெட்டெழுத்துக்களான ஏ, ஓ என்னும் எழுத்துக்களை எ, ஒ என்னும் குற்றெழுத்துக்களிலிருந்து பிரித்தறிந்து கொள்ள முடியவில்லை. இகர உகர நெட்டெழுத்துக்கள் மிக அருமையாகச் சாசனங்களில் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. மெய்யெழுத்துக்களின் மேல் இடவேண்டிய புள்ளிகள் இடப்படாமல் இருக்கின்றன மிக அருமையாக மட்டும் புள்ளிகள் இடப்பட்டுள்ளன. சில எழுத்துக்கள் உருவ அமைப்பு இன்ன எழுத்து என்று தெரிந்துகொள்ள முடியாதபடி எழுதப்பட்டுள்ளன. முக்கியமானது 'ா' என்னும் எழுத்து இந்த எழுத்து ஆகாரத்தைக் குறிக்கும் காலாகவும், 'ர'கரமாகவும் 'ர்' என்னும் மெய்யெழுத்தாகவும் இப்போதைத் தமிழ் எழுத்தில் காணப்படுகின்றது.

1. தொல். பொருள். முகவுரை. பக். 8. இதனை 'விடியல் வெங்கதிர் காயும் வேயமல் அகலறை' எனக்கண்டு பொருள் கொள்க.

'கொ' என்னும் எழுத்தைச் சாசனத்தில் 'ெக ா' என்றும், 'கோ' என்றும், 'கொ' என்றும் 'கோ' என்றும், 'கெர, கேர' என்றும் வாசிக்கலாம். பழைய தமிழ் எழுத்துக்கள் தமிழ ரைக் கூடச் சில சமயங்களில் மயக்குகின்றன என்பதற்கு ஓர் உதாரணம் காட்டுவோம்:

இராசேந்திர சோழ தேவரின் சாசனம் ஒன்றில் 'கொளா' என்று எழுதப்பட்டிருந்ததை ஒருவர் 'கொள்ள' என்று எழுதினர். இதன் சரியான வாசகம் 'கேரளர்' என் பது. இராசேந்திர சோழ தேவரின் சிறப்புப் பெயர் 'கொபாகெசரிபமை' என்று சாசனத்தில் காணப்படுகிறது. 'கோபரகேசரி பன்ம' என்று எழுதவும் படிக்கவும் படவேண் டிய இது 'கோபாகேசரீ வர்ம' என்று எழுதவும் படிக்கவும் படுகிறது'' என்று அறிஞர் திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள்[1] கூறும் குறிப்புகள் பதிப்பிப்பார்க்குள்ள இடர்ப் பாடுகளை நன்கு விளக்குவனவாம்.

எழுதி அழிக்க முடியாமையால் ஏற்படும் பிழைகளைக் கலாநிதி ஆ. வேலுப் பிள்ளை அவர்கள் நன்கு விளக்குகின் றனர்.

[2] ''அ ஆயின், ஆ அடுக்கு, இ இட்டு, நெ இல்லால் என அமைவன கல்லில் அல்லது செம்பில் படி எடுக்கப்பட்ட போது தவறுதலாக எழுதப்பட்டவற்றை அழிக்க முடியா மையால் விடப்பட்டனவாக இருத்தல்வேண்டும்.

[3] ''இரண்டு உயிர் எழுத்துக்கள் உடம்படு மெய்யில் லாது எழுதப்படும் முறை சாசனங்களில் காணப்படுகின்றது திசை ஓர், இறைஇலி, வழி இலார் என்பன ஒரே சொல் லில் அமைந்து காணப்படும் உதாரணங்களாம் கரை இன், குறி இல், தளி உடைய, முடி ஒடு, நெற்றி இல் முதலியன, பெயர்ச் சொல்லுக்கும் வேற்றுமை உருபுக்கும் இடையில்

---

1. 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் பக். 40 - 42; தென்னிந்திய சாசனங்கள் முதற்றொகுதி முன்னுரை, Dr. Hultzsch; மொழி பெயர்ப்பு.
2. சாசனமும் தமிழும் பக். 58.
3. ,, ,, 59.

உடம்படுமெய் அமையாமைக்கு உதாரணங்களாம். இத்தகைய சொற்கள் ஒலிக்கப்படும்போது உடம்படுமெய் அமைய வேண்டிய இடத்தில் விட்டிசை இருந்திருக்க வேண்டும்.

[1] "பதினைஞ்ங் கழஞ்சு, முட்டால்மல், கொண்ட்டு - இவை எழுதி அழிக்கமுடியாமையால் நேர்ந்த பிழைகள்.

[2] "நாகு (நான்கு) பன்னிண்டு (பன்னிரண்டு) இவை விட்டு எழுதுதலால் நேரும் பிழைகள்."

இங்குச் சுட்டப்பெற்ற தவறுகள் ஏடுகளிலும் ஏற்படக் கூடியனவேயாம். இவற்றையெல்லாம் உணரும்போது தான்,

"எழுதரிது முன்னம் எழுதியபின் னத்தைப்
பழுதறவா சிப்பரிது பண்பா-முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை"

என்னும் ஒளவையார் பாடற்பொருள் அருமை நன்கு புலப்படும்.

1. சாசனமும் தமிழும் பக் 60.
2. ,, ,, 60.

7. ஏடு போற்றிய பீடுடையாளர்

பழம் புலவர்கள் தாங்கள் படைத்த இலக்கண இலக்கியங்கள் முதலியவற்றை ஏடுகளிலேயே எழுதினர்; ஏடுகளிலேயே படியெடுத்தனர். அவர்கள் வழி வழியே வந்தவர்களும் தாம் புதிதாக இயற்றியவற்றை ஏட்டில் எழுதி வைப்பதுடன் முன்னையோர் வைத்த சுவடிகளையும் அவர்கள் வைத்த 'அருமணிக்குவை'யெனக் கருதிப் போற்றினர். அச்சுவடிப் பொருளையெல்லாம் தம் மனக்கருவூலத்து நிறைத்து வைத்திருந்து உற்றபோதெல்லாம் அள்ளி வழங்கி உவகையுற்றனர். தம் புலமை நலத்திற்கு விருந்தாகும் ஏடுகள் தமக்கு நண்பராயினர் குடும்பங்களில் இருக்குமாயின் அவற்றைப் படியெடுத்துவைத்தும் போற்றினர். தம் சுவடிகளுக்கு மாற்றுச் சுவடியாகப் பெற்றுக்கொண்டும் வழங்கினர். சுவடிப் பொருளை ஓதுதலும், உரை காணுதலும் தம் வாழ்வின் திருப்பணிகளாகப் போற்றினர். இத்தகைய நன்மக்களின் வழிமுறையில் நயனறியா மக்களும் பிறந்து போயமையால், அரும்பொன் அன்ன ஏட்டுச் சுவடிகளின் அருமை அறியாராய் இடத்துக்குக் கேடாக எண்ணி வறிதே ஒழித்திருக்கின்றனர். போற்றிக் காவாமையால் கறையானுக்கும் சிதைவுக்கும் விட்டுத் தொலைத்திருக்கின்றனர். அவர்களுக்கு ஈடுபாடுடைய ஒன்றைத்தானே இனிதில் காத்துப் போற்றுவர். இவ்வகையில் தமிழ் செய்த தவப்பயனால் சில சில வழிமுறையினர் ஏடுகளை நன்கனம் போற்றித் தாம் பெற்ற இன்பத்தை உலகும் பெற உதவியுள்ளனர். அவர்களே ஏடு போற்றிய பீடுடையாளர் ஆவர்.

க. அழகிய சிற்றம்பலக் கவிராயர்

பழந்தமிழ் ஏடுகளைப் பாதுகாத்துப் பதிப்பிப்பவர்களுக்கும் ஆராய்பவர்களுக்கும் வரையாது வழங்கும் வள்ளலெனத் திகழ்ந்தவர்களுள் தலையாயவர் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் வழிமுறையினர் ஆவர்.

மிதிலைப்பட்டி என்பது அண்மைக் காலத்தில் சிவகங்கை குறுநில மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. புதுக்கோட்டையைச் சார்ந்த திருமெய்யத்திற்குச் சில கல் தொலைவில் உள்ளது அவ்வூர், அழகிய சிற்றம்பலக் கவிராயருக்கு முன்னோரான மல்லைச் சிற்றம்பலக் கவிராயருக்கு [1] வெங்களப்ப நாயக்கர் என்னும் குறுநில மன்னரால் வழங்கப் பெற்றது இதனை,

"தானமாம் என்னவே சந்திராதித் தர்வரை
மானமாக் காப்பவனே மன்னவனும்-நீணிலத்தில்
சிற்றம் பலந்தனக்குச் [2]சிந்தைநகர் வெங்களையன்
உற்ற மடப்புறஞ்செய் ஊர்"

என்றும்,

மழைக்கன்ன தாரைக் கடாயானைச்
சிந்தையென் மன்னர்கைம்மா
அழைக்குமுன் னேவந்த வெங்கள
பூவன்சிற் றம்பலம்பால்
குழைக்கன்ன லாறு பெறுக
மிதிலைநல் லூரிறசெல்வம்
தழைக்கவெந் நாளும் மிதிலா
புரியெனத் தந்தனனே"

1. இதனைக் கூறியவர் அழகிய சிற்றம்பலக் கவிராயர் வழிமுறை இராமநாதக் கவிராயர் என்பவர் இவ்வழியில் வந்து பழந் தொடர்பை நினைவூட்டிக் கொண்டிருப்பவர் இவரே. இவ்வூரை முற்றூட்டாகப் பெற்றது சாலி. 1570 (1648) என்பர். (செந்தமிழ் தொகுதி - 6)

2. வெங்களப்ப நாயக்கர் ஊர் சிந்தை நகர். சிறுகூடல்பட்டி என வழங்குகிறது.

என்றும் செப்புப் பட்டயம் பொறித்துத் தந்தார். யானையும் சிவிகையும் பரிசிலாக வழங்கினார். யானை கட்டும் தறியும் சிவிகையும் நெடுங்காலம் போற்றப்பெற்றன. இன்று தறி மட்டுமே உண்டு அத்தறியிலேயே மேலேகண்ட பாடல்கள் தீட்டப்பட்டுள்ளன. வெங்களப்ப நாயக்கர் மேல் பாடிய குறவஞ்சிக்குப் பரிசு இவ்வூர் என்பர்.

மல்லைச் சிற்றம்பலக் கவிராயரின் ஊர், 'மல்லை' என்பதாம். அது கடல் மல்லை எனப்படும் மாமல்லையன்று 'கொல்லிமல்லை' என்பது அவ்வூர் சிதம்பரத்திற்கு அணித்தே இருப்பது அங்கே இன்றும் சிற்றம்பலக் கவிராயரின் வழியினர் உறைகின்றனர்,

மல்லைச் சிற்றம்பலக் கவிராயரின் மக்கள் இருவர். ஒருவர் குழந்தைக் கவிராயர்; சிவகங்கை அமைச்சர் முல்லையூர்த் தாண்டவராய பிள்ளைமேல் மான்விடு தூது பாடினார். மற்றொருவர் பாண்டிக் கவிராயர். அவர்தம் மைந்தரே அழகிய சிற்றம்பலக் கவிராயர். அவர்தம் மக்கள் மூவர். அவர்கள், சிங்காரவேல் கவிராயர், சாமிநாதக் கவிராயர். கனகையா என்னும் மங்கைபாகக் கவிராயர் என்பவர்கள், இவர்களுள் மங்கைபாகக்கவிராயர் நத்தம் குறுநில மன்னர் சொக்கலிங்க நாயகர்மேல் வருக்கக் கோவை பாடி பூசாரிப் பட்டி என்னும் ஊரைப் பெற்றார் கொடுங்குன்றப் புராணமும் இவர் இயற்றியதேயாம் மிதிலைப்பட்டிக் கவிராயருள் ஒருவர், தமக்கு இடையூறு செய்த ஒருவர்மேல் கழுதை விடு தூது' பாடியதும் உண்டு என்பர். அது வசை நூல்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் இரகுநாத சேதுபதியின் மேல் தளசிங்கமாலை பாடினார் சேதுபதிகளாலும், வெங்களப்ப நாயக்கராலும் 22½ ஊர்களைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தனர்[1] என்பர். இவரும் இவர் வழியினரும் சேதுபதி புரிந்தருளிய நன்றி பாராட்டி நாளும் தாம் தாம் உணவருந்து முன்னே சேதுபதிக்கு ஒரு வாழ்த்துக் கவி பாடுவது வழக்கம்"[2] என்பர்.

1. சங்கத் தமிழும், பிற்காலத் தமிழும் பக் 169
2 சேதுநாடும் தமிழும் பக் 24

மிதிலைப்பட்டிக் கவிராயர் வழியினர் செவ்வூர், காரைச்சூரான்பட்டி ஆகிய இடங்களுக்குச் சென்றும் வாழ்ந்தனர், அங்கும் தம் பழஞ்செல்வங்களைப் போற்றி வந்தனர்.

அவர்கள் வீடுகளில் இருந்த ஏடுகள் பல நூற்றாண்டுகளாகச் சேர்த்துவைத்த பழமையானவை; சிறந்த புலமையாளர்களால் எழுதப் பெற்றவையாதலால் செம்மையாகவும் திருத்தமாகவும் இருந்தன தமிழ் தந்த வளத்தால் வாழ்ந்துவரும் அவர்களிடம், பெருங்குணமும் பொருந்தியிருந்தது ஆதலால் தக்கார் எவரும் தமிழ்ச் சுவடி தேடிவரின் தடையின்றி உதவினர். புலவர்கள் புகழும் புகழுக்கு உரியவர்களாகத் திகழ்ந்தனர்.

''மிகப் பழமையானதும், பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்ததும், மற்றைப் பிரதிகளில் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் போகிய பாகங்களையெல்லாம் ஒழுங்குபடச் செய்ததும் கோப்புச் சிதைந்து அழகு கெட்டு மாசு பொதிந்து கிடந்த செந்தமிழ்ச் செல்வியின் மணிமேகலையை அவள் அணிந்துகொள்ளும் வண்ணம் செப்பம் செய்து கொடுத்ததும் மிதிலைப்பட்டிப் பிரதியே'' என்று டாக்டர் சாமிநாதையர் அவர்கள் மிதிலைப்பட்டிப் பிரதியைப் பற்றி மணிமேகலையின் முகவுரையில் குறிபபிடுகின்றனர். மேலும், ''தமிழ்நாட்டில் எவ்வளவோ புண்ணிய ஸ்தலங்கள் இருக்கின்றன. சிவ ஸ்தலங்களும், விஷ்ணு ஸ்தலங்களும், சுப்பிரமணிய ஸ்தலங்களும பல உள்ளன. அவற்றைப் போல் தமிழ்த் தெய்வம் கோயில் கொண்டுள்ள ஸ்தலங்களுள் ஒன்றாகவே மிதிலைப்பட்டியை நான் கருதியிருக்கிறேன்'' என்று[1] வியந்து பாராட்டுகின்றனர்.

குறுந்தொகையை முதற்கண் பதிப்பித்த பெருந்தகை, திருமாளிகை சௌரிப் பெருமாள் அரங்கனார். அவர் குறுந்தொகை ஏடு தேடிக்கொண்டு மிதிலைப்பட்டி

1. நான் கண்டதும் கேட்டதும் பக் 48.

சென்றார். அப்பொழுது கவிராயர் குடும்பத்தார் நடந்து கொண்ட பெருந்தகைமையை[1] உரைக்கின்றார்:

“பழந்தமிழ்ப் புலவர்கள் வீட்டில் சீரிய பிரதி இருக்குமெனக் கருதி மிதிலைப்பட்டி, செவ்வூர் முதலிய இடங்களுக்குச் சென்று தேடினேன் தங்கள் பால் பிரதிகளை நாடி வருவார் திறத்துத் தாம் வழக்கமாகச் செய்வதேபோல என்னை மறைத்திடக்கூடிய அத்தனை ஏடுகளை எடுத்து என் முன்னர்ப் போகட்டு விட்டுத் ‘தாங்கள் விரும்பும் ஏடுகள் கிடைப்பின் எடுத்துக்கொள்க’ என்று தம் தொழில்மேற் செல்வாராயினார்.”

அழகிய சிற்றம்பலக் கவிராயர் ஏடுகளுள் மணிமேகலை மூலம் ஏடு 1; புறநானூறு மூலமும் உரையும் ஏடு 2; சிலப்பதிகார மூலம் ஏடு 1; சிந்தாமணி நச் உரை ஏடு 2; மூவருலா ஏடு 1; திருவிளையாடல் பயகர மாலை ஏடு 1 ஆகியனவும் வேறுசில ஏடுகளும் டாக்டர் சாமிநாதையர் அவர்களுக்குக் கிடைத்தன. அவர்கள் வழங்கிய ஏடுகளுள் ஒன்றில் ‘முச்சங்க வரலாறு’ பற்றிக் கூறும் [2]அகவல் ஒன்று கிடைத்தது. திருவிளையாடல் பயங்கர மாலை என்பது ‘பயகர மாலையே’ என்று தெளிவாக்கியது அவர்கள் வழங்கிய ஏடே; மணிமேகலையின் காதைகள் பாட்டென்றே அவர்கள் ஏட்டில் குறிக்கப் பெற்றிருந்தன. “மணிமேகலை ஆறைம் பாட்டு” என்பதன் பொருத்தத்தை அச்சுவடி விளக்கிற்று புறநானூற்றில் பழையவுரை 266 ஆம் பாடல்வரை கிடைத்துள்ளது அவ்வுரை [3]முழுமையாகக் கிடைத்தது அவர்கள் வழங்கிய சுவடியாலேயாம். இக்கொடைகளெல்லாம் அழகிய சிற்றம்பலக் கவிராயரையும், அவர் வழிமுறையினரையும் சேர்ந்தனவேயாம்.

1. குறுந்தொகை. முகவுரை.

2. சிலப்பதிகாரப் பதிப்பில் இடம் பெற்றுள்ளது.

3. மற்றைப் பிரதிகளில் 261 ஆம் பாடல், 260 ஆம் பாடல் வரையுமே உரை கிடைத்தன.

உ. அம்பலவாண கவிராயர்

இப்பெரும் புலவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். திருநெல்வேலி மேலவீதியில் வாழ்ந்தவர். அவர் வழிமுறையைச் சேர்ந்த பெருமக்கள் கவிராச நெல்லையப்ப பிள்ளை, கவிராச ஈசுவரமூர்த்திப் பிள்ளை என்பவர்கள். இவர்கள் வீட்டில் ஏடுகள் வைக்கப்பெற்றிருந்த செவ்விய முறையைத் தொடக்கத்திலேயே கண்டிருக்கிறோம். ஏடுகளைப் போற்றிய இப்பெருமக்கள் ஏடுதேடி வருவார்க்கும் அவற்றை இனிதுவந்தளித்து இசை பெற்றனர்; பாடி வருவார்க்குப் பரிசில் வழங்கியுதவும் புரவலர்களாகவும் திகழ்ந்தனர்.

அம்பலவாண கவிராயர் பிறந்த மண்ணுக்கும் பேசும் மொழிக்கும் பெருமை தந்த பெருமகனார் ஆவர். அவரிடம் பயின்று பெருமையுற்ற பெருமக்கள் பலர். அவருள் திருப்பாற் கடனாதன் கவிராயரும், திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர்கள். அம்பலவாண கவிராயர் ஏடுகள் தமிழுலகுக்குப் பயன்பட்டாற் போலவே, அவர்தம் மாணவச் செல்வங்களாகிய இவர்கள் போற்றிய ஏடுகளும் பயன்பட்டுள்ளன. அப்பெருமையும் அம்பலவாணரைச் சேரும் என்பதில் ஐயமில்லை.

அச்சுத் தடைச் சட்டம் 1835ஆம் ஆண்டு வரை இருந்ததையும், ஆயினும் 1812ஆம் ஆண்டிலேயே திருக்குறளும் நாலடியாரும் வெளி வந்ததையும் முன்னர்க் கண்டுள்ளோம். மூலம் மட்டுமே உள்ள பதிப்புகள் அவை; இரண்டு நூல்களின் மூலமும் தனித்தனி நூலாகச் செய்து இணைக்கப் பெற்றவை அவற்றைச் செவ்வைப்படுத்தியவரும், தக்க புலவர்களுடன் ஆராய்ந்தவரும் அம்பலவாண கவிராயர் ஆவர். அதற்கு முகவுரையும் எழுதியுள்ளார். முதற்கண் அச்சுச் சட்டத்தையும் பொருட்டாக எண்ணாமல் துணிந்து பதிப்பித்த பதிப்பாசிரியர் அம்பலவாண கவிராயர், ஆதலால் இவர்தம் தமிழ்மொழிப் பற்றும், தொண்டுள்ளமும் துணிவும் விளங்கும். தமிழ் நூல்களில் முதற்கண் அச்சூர்தி ஏறியது திருக்குறளே என்பதும், அதனைப்

பதிப்பித்தவர் அம்பலவாணரே என்பதும் அவரை மிகப் பெரிய நிலைக்கு ஏற்றிச் செல்கின்றன!

புறநானூறு நானூறு பாடல்களும் ஒருங்கேகிடைத்த சுவடிகள் நாடெல்லாம் கூட்டியும் நான்கேயாம். அவற்றுள் ஒன்று அம்பலவாண கவிராயர் சுவடி. மற்றும் சிந்தாமணி, குறுந்தொகை, கலித்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சுவடிகளும் ஆங்குக் கிடைத்தன. ஐயரவர்கள் பதிப்புக்கும், 'சைவசித்தாந்த சமாஜப்' பதிப்புக்கும் துணையாயின.

அம்பலவாண கவிராயர் ஏடுகளுள் வேறு எங்கும் கிடையாத ஒன்று, 'கொங்குவேள் மாக்கதை' என்னும் பெருங்கதை. அதற்குரிய மற்றொருபடி திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையிலுள்ள திருப்பாற் கடனாத கவிராயர் படியாகும் முன்னதைப் பார்த்துப் படி எடுத்தமையால் முதிர்ந்த படியின் சிதைவை ஈடு செய்தற்குத் துணையாக அஃது இருந்தது. முதலும் ஈறும் இல்லாத பெருங்கதை, முழுவதும் இல்லாது போகாவண்ணம் காத்துக் கன்னித்தமிழுக்கு உதவியவர்கள் அம்பலவாண கவிராயர் வழியினரும், அவர்தம் அறிவறிந்த மாணவர் திருப்பாற் கடனாத கவிராயர் வழியினரும் ஆவர். நன்மக்கள் தேடிக்காக்கும் பொருள் நாட்டுப் பொருளாக விளங்கும் என்பதற்கு இவ்வேட்டினும் சான்று வேண்டுவதில்லை.

அம்பலவாண கவிராயர் படிகளில், சிந்தாமணி நச்சினார்க்கினியர் உரையுடன் கிடைத்தது அன்றியும் 'சிந்தாமணித் தெரிவு' என்னும் நூலும் கிடைத்தது அது சிந்தாமணியில் இருந்து சுவைமிக்க பாடல்களாகத் திரட்டி வைக்கப்பட்ட திரட்டு நூலாகும். இந்நூலால் ஓர் அரிய கலைச்சொல் தமிழுலகுக்குக் கிடைத்துள்ளது. தேர்ந்து தேர்ந்து பொருட்களைச் செழுமைத் தொகுக்கப் பெற்ற நூலைத் 'தெரிவு' என்பது எவ்வளவு பொருத்தமானது திரட்டு என்பதினும் 'தெரிவு' என்பது பொருள் பொதிந்த சொல் என்பது எளிதில் விளங்கும்.

இவ்வகையால் பெரும் புலவராகத் திகழ்ந்த அம்பலவாண கவிராயர் சிறந்த மாணவர்களை உருவாக்கியவர் என்பதும், சீரிய வழிமுறையால் சிறந்தோங்கியவர் என்பதும், முதற் பதிப்புப் பேராசிரியர் என்பதும், கலைச் சொல்லாக்கம் செய்தலில் தேர்ந்தவர் என்பதும், பெருங்கதை அவராலேயே நாடுபெற்றது என்பதும் விளக்கமாம்.

கவிராச நெல்லையப்ப பிள்ளை செய்த செயற்கரும் உதவியை நினைந்து உருகிய உ. வே. சாமிநாதையர்,

"சங்கத் தமிழைத் தளர்வின்றி யான்பெறவே
அங்கங் குடன்வந் தளித்திட்டான் - பொங்குபுகழ்
இன்போடும் ஈசனடி யெண்ணுநெல்லை
யப்பனைப்போல்
அன்போ டுதவிசெய்வார் ஆர்?"

என்று பாடிப் போற்றினர்.

௩. திருவம்பலத் தின்னமுதம் பிள்ளை

திருநெல்வேலியினராகிய இவர் அம்பலவாண கவிராயர் மாணவர்களுள் ஒருவர். பிற்காலத்தில் மயிலாப்பூரில் வாழ்ந்து வந்தார். தமிழ் நூல்களில் அழுத்தமான தேர்ச்சியும், பாடம் பயிற்றும் திறமும் இவருக்கு மிகுதியும் உண்டு. ஏட்டுச் சுவடிகள் பலவற்றை எழுதியும் தொகுத்தும் வைத்திருந்தார்.

திரிசிரபுரம் பெரும் பேராசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இவரிடம் சில நூல்களைப் பாடங் கேட்டுள்ளார். மயிலாப்பூர் பகுதியிலும், நெல்லைப் பகுதியிலும் அவர் புகழ் நன்கு பரவியிருந்தது. இவருக்கு மக்கட் பேறு வாய்க்கவில்லை. அதனால் இவர் வைத்திருந்த ஏடுகள் அண்ணுசாமி உபாத்தியாயர் என்பவரால் போற்றிக் காக்கப்பெற்றன.

இவர்தம் ஏடுகளாக மணிமேகலை, பத்துப் பாட்டு, சிந்தாமணி ஆகியவை தமிழுலகுக்குக் கிடைத்துள்ளன, திருமுருகாற்றுப்படை உரையொன்றும் கிடைத்தது.

இனிப் பதினெண்கீழ்க்கணக்கு நூல் வரிசையுள் சேர்ந்தது 'இன்னிலையா? கைந்நிலையா?' என்னும் ஐயுற்ற கருத்து தமிழ் உலகில் உலாவியது. இன்னிலையே என்பாரும், கைந்நிலையே என்பாரும் இருந்தனர். இரு திறத்தும் சொற் போரும், சொல்லெதிர்ப் போரும் பெருக நடந்தன. இன்றும் கூட அப்போர்க்கு முடிவு ஏற்பட்டுள்ளதாகக் கூற முடியவில்லை. ஆனால் திருவம்பலத் தின்னமுதம் பிள்ளையின் ஏட்டுச் சுவடி அதனைத் தீர்த்து வைக்கின்றது.

இன்னமுதம் பிள்ளையின் ஏட்டுத் தொகுதிகளுள் ஒன்று பதினெண்கீழ்க் கணக்குத் தொகுதியாகும். அது பதினெட்டு நூல்களையுமே ஒருங்குகொண்ட சுவடி. நாலடி முதலாக அமைந்த அச்சுவடித் தொகுதியில் கைந்நிலையே உள்ளது. அத்தொகை நூலை ஐயரவர்கள் பெற்றுச் சென்றனர். அண்ணுசாமி உபாத்தியாயர் வீட்டில் கிடைத்தது அத் தொகுதி.

கைந்நிலைச் சுவடியென வேறெங்கும் கிடைக்கவில்லை. மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த திரு. இ. வை அனந்தராமையர். ஐயரவர்களின் பதிப்பு முயற்சிக்கு நற்றுணையாக இருந்தார். அவர்கள் உதவியாலே 1925-ஆம் ஆண்டில் கலித்தொகையை வெளியிட்டார். அவர்க்கு இக்கைந்நிலைப்படி கிடைத்தது. இதனையும் ஆய்ந்து 1931-இல் அச்சிட்டார். அச்சிடும்போது அறிஞர் இரா. இராகவையங்கார் படி ஒன்று ஒப்புநோக்குதற்குக் கிடைத்ததைக் குறிப்பிடுகிறார். இவ்வகையால் திருவம்பலத் தின்ன முதனார் திருக்கை வளத்தால் கைந்நிலை தமிழுலகில் நிலை பெற்றது குறிப்பிடத்தக்கது

1893-ஆம் ஆண்டில் ஆசாரக்கோவை வெளிவந்தது அதனைப் பதிப்பித்தவர் செல்வக் கேசவராய முதலியார்.

அதன் பதிப்புரையில், "கைந்நிலையைக் கையில் நிலைபெறக் காணும் துணையும் உறுதி கூறல் ஆகாது" என்றார் அதனைக் கையில் நிலைபெறச் செய்த ஏடு இன்னமுதனார் ஏடு எனின் எத்துணை பாராட்டினும் தகும் அன்றோ!

ச. திருப்பாற்கடனாதன்கவிராயர்

இவர் திருநெல்வேலி வண்ணார்பேட்டையைச் சார்ந்தவர். அம்பலவாண கவிராயர் மாணவர்களுள் ஒருவர்: பெரும்புலவர்; ஏடுகள் பலவற்றைத் தொகுத்து வைத்தவர். முத்துவீரியத்திற்கு உரை செய்தவர்.

திருப்பாற் கடனாதன் கவிராயர் பேரர் திருப்பாற் கடனாதன் கவிராயர். பொருட்செல்வமும் அருட்செல்வமும் பொருந்தியவர். 'செல்விருந்தோம்பி வருவிருந்து' பார்த்திருப்பார்போல ஏடுதேடி வருவார்க்கு உதவும் வள்ளன்மையாளர். அவர் வீட்டில் ஏறத்தாழ 500 சுவடிகள் இருந்தன. பெரும்பாலும் கவிராயர் கையால் எழுதியவையே, அவற்றுள் அருமையான சில ஏடுகள் பழந்தமிழ்ச் செல்வங்களாக நாட்டுக்குப் பயன்பட்டுள்ளன.

அக்காலத்தில் திருநெல்வேலியில் உதவி நீதிபதியாகக் கனகசபை முதலியார் என்பவர் இருந்தார். அவர். தம் அன்புக்குரிய [1]பதிப்பாளர்களுக்கு ஏடுதேடித் தந்துதவும் பெருங் குணத்தினராக விளங்கினார். அவருக்குக் கவிராயர் எட்டுத் தொகை. பத்துப்பாட்டு பதினெண்கீழ்க் கணக்கு என்னும் மூன்று தொகுதி ஏடுகளையும் தந்தார். ஏறத்தாழ சங்க இலக்கியம் முழுமையும் திருப்பாற் கடனாதன் கவிராயர் இல்லத்தில் இருந்தமை இதனால்புலப்படும். பின்னர் டாக்டர்

1. திரு சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் பதிப்புக்கும் ஆய்விற்கும் இவை பயன்படுத்தப்பட்டன.

ஐயரவர்கள் ஏடுதேடிச் சென்றார். பத்துப்பாட்டு முழுமையும் அமைந்த சுவடி கிடைத்தது. அச்சுவடியின் இறுதியில் "ஸ்ரீ வைகுண்டத்தில் இருக்கும் கவிராயரிடத்தே தொல்காப்பிய ஏட்டைக் கொடுத்துக் கொல்லமாண்டு... வாங்கிவந்தேன்" என்னும் குறிப்பு இருந்தது. அவ்வேடு 150 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பெற்றது என்றும் ஏடு எழுதிய காலம் அதற்கு முன்னர் 200 ஆண்டுகள் இருக்கக் கூடும் என்றும் ஐயர் எண்ணினார். மேலும் சிந்தாமணியும், கொங்குவேள்மாக் கதையும், வேறு சில சிறு நூல்களும் கிடைத்தன. "பத்துப் பாட்டு முழுவதும் உள்ள பிரதி கிடைத்ததில் என் மனம் மிக்க இன்பமடைந்தது" என்று ஐயர் குறிப்பிடுமாறு கவிராயர் ஏடு நன்மை பயந்தது.

அம்பலவாண கவிராயர் வழியினராகிய கவிராச நெல்லையப்பபிள்ளை வழங்கிய கொங்குவேள்மாக்கதையைப் பார்த்துப் படியெடுக்கப் பெற்றது. திருப்பாற்கடனாதன் கவிராயர் வீட்டில் இருந்த சுவடி அதில் உள்ள அளவே இதிலும் இருந்தது. எனினும் பழமையான அச்சுவடியில் இருந்த சிதைவுகளை ஒழுங்கு செய்துகொள்வதற்கு மிகப் பயன்பட்டது. அன்றியும், பழஞ்சுவடி செப்பமாக இருந்த நாளிலேயே இச்சுவடி படியெடுக்கப் பெற்றது என்பதை அறிந்து கொள்ளுமாறும் இருந்தது.

கனகசபை முதலியார் வாங்கிச் சென்ற சுவடிகள், இராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையிடம் இருந்தன. அவற்றுள் புறநானூறு உரையுடன் கூடிய சுவடி டாக்டர் ஐயர் பதிப்புக்குத் துணையாயிற்று அச்சுவடியில் முதல் 260 பாடல்களுக்கு உரையிருந்தது. செவ்விய சுவடி, பிழை மலிந்த நூற்றுக்கணக்கான சுவடிகளினும் பிழையில்லாத ஒரு சுவடி எவ்வளவோ உயர்ந்தது அல்லவா! பெரும்புலவர்கள் வைத்திருந்த சுவடிகள் திருத்தமான படிகளாகவே அமைந்திருந்தன என்பதற்குத் திருப்பாற்கடனாதன் கவிராயர் சுவடிகள் சான்றாயின.

ரு. அண்ணுசாமி உபாத்தியாயர்

திருவம்பலத் தின்னமுதனார் திருமயிலையில் வாழ்ந்த காலத்தில், அங்கே ஆசிரியப் பணி நடாத்தி வந்த பெருமகனார் இவர் அமுதனாரிடம் அணுக்கராக இருந்து அருந்தமிழ் நூல்கள் பல கற்றிருக்கக்கூடும். அன்றியும் அவரை அறிவுத் தந்தையாகக் கொண்டு வாழ்ந்திருத்தலும், போற்றியிருத்தலும் கூடுவதே. ஏனெனில் அமுதனார்க்கு மக்கட் பேறு வாய்க்கப்பெறவில்லை ஆகலின்.

அமுதனார் அன்பில் ஈடுபட்ட ஆசிரியர் அண்ணுசாமி. அன்னைத் தமிழ் கற்பதில் ஊன்றினார். அவர் செய்த தொண்டு, பள்ளியில் பாடம் கற்பிக்கும் அளவில் நின்றுவிடவில்லை அக்கால ஆசிரியர்களுள் பெரும்பாலோர் அவ்வாறு நின்றாரும் அல்லர் அம்முறைப்படியே இலக்கிய இலக்கணங்களைக் கற்றலும், கற்பித்தலும் கடனாகக்கொண்டார், இவற்றினும் மேலாகப் பழஞ்சுவடிகளைப் பேணிக் காத்தலையும், படியெடுத்துப் போற்றுதலையும் பிறவிப் பெருங்கடமையாக ஏற்றார். அவ்வகையால் அவர் ஏற்றம் பெற்றதுடன், தமிழ் மொழியின் ஏற்றத்திற்கு ஓர் அரிய ஏந்தாகவும் வாய்த்தார்.

திருமயிலையில் அம்மை ஆண்டியப்பக் கிராமணி என்பார் ஒருவர். அவர் தம் மக்களுள் அண்ணுசாமி ஒருவர். அவர் தம் வழியினர் 'மந்தைவெளி'யில் வாழ்கின்றனர். அவர்கள், "பழம் பொருளைப் போற்றுவார் கையில் இருத்தலே பொருந்தும்; வீணே காத்தல் வேண்டா" என்னும் குறிப்பினர். ஆகலின் அண்ணுசாமி ஆசிரியர் காலமானதற்குப் பின்னர் ஏடு தேடிவந்த ஐயரவர்களிடம் வழங்கி 'ஈத்துவக்கும் இன்பம்' எய்தினர், இவ்வகையால் தொல், சொல். இளம்பூரணம், தொல். சொல். நச்சினார்க்கினியம், தொல் பொருள் நச். பேராசிரியம், பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, கலித்தொகை, சிலப்பதிகார மூலம், சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை. மணிமேகலை ஆகியன கிடைத்தன.

அண்ணுசாமி உபாத்தியாயர் ஏடு படி எடுத்தலை நோன்பாகக் கொண்டவர் என்பதை அவர்தம் ஏட்டுப்படியிலுள்ள குறிப்புகளால் உணரமுடிகின்றது.

தொல். சொல் இளம்பூரணத்திலும், சிலம்பிலும், மணிமேகலையிலும், "திருமயிலை அம்மை ஆண்டியப்பக் கிராமணி குமாரரில் அண்ணுசுவாமி உபாத்தியாயர் எழுதியது" என்று எழுதியுள்ளார்.

பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலியவற்றில் "இஃது அண்ணுசாமி உபாத்தி எழுதியது" என்று எழுதியுள்ளார்.

தொல். பொருள் செய்யுளியல் பேராசிரியர் உரையில், "கலியுகாதி 4981 பிரபவவாதி 12 பிரமாதி ஹூ மாசிமீ 6வ திருமயிலையில் ஆண்டியப்ப கிராமணி குமாரன் அண்ணுசாமி உபாத்தியாரால் எழுதி நிறைவேறினது" என எழுதி நிறைவேறிய காலத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் அண்ணுசாமி போன்றவராக ஆங்காங்கிருந்த ஆசிரியர்கள் உரிமையன்பும் உண்மை யுழைப்பும் உடையவர்களாய்ப் பணி செய்திருப்பாராயின், தமிழன்னையின் அணிகலங்கள் போன்ற அரிய நூல்கள் பல அழியாமல் காக்கப் பெற்றிருக்கும் என்னும் உணர்வு. நமக்குண்டாதல் ஒருதலை.

சா. திருமயிலை சண்முகம் பிள்ளை

சென்னைப் புரசவாக்கத்தில் இருந்த அட்டாவதானி சபாபதி முதலியார் மாணவர் பலர். அவர்களுள் திருமயிலை சண்முகம் பிள்ளை ஒருவர். சபாபதி முதலியார் மனப்பாடத் திறனே அவரை அட்டாவதானி ஆக்கிவைத்தது அப்புலமை அவர்தம் மாணவர் சண்முகம் பிள்ளைக்கும் அமைந்து

கிடந்தது. இவரிடம் பயின்று சிறந்தோர்களுள் பேராசிரியர் கா. நமசிவாய முதலியார் குறிப்பிடத்தக்க ஒருவர் ஆவர்.

சண்முகம் பிள்ளை திருமுல்லைவாயிற் புராணம், வட திருமுல்லைப் பதிற்றுப் பத்தந்தாதி, சென்னை விநாயகர் பதிற்றுப் பத்தந்தாதி, திருப்போரூர் ஆண்டவன் பதிற்றுப் பத்தந்தாதி, சந்தானகுரவர் நான்மணிமாலை, திருமயிலைக் கலம்பகம் முதலாய பல நூல்களை இயற்றினர்.

கந்தரனுபூதியுரை, கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் உரை, திருக்கைலாய ஞானவுலா வுரை, பொன் வண்ணத் தந்தாதியுரை, திருவாரூர் மும்மணிக் கோவை யுரை முதலியன எழுதினர்.

ஐம்பெருங் காவியங்களுள் ஒன்றாகிய மணிமேகலை மூலத்தை முதற்கண் வெளியிட்ட பெருமை திருமயிலை சண் முகம் பிள்ளையையே சாரும். அந்நூல் 1894 ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது. 'அதன் முகப்பில், "புரசை அட்டாவ தானம் சபாபதி முதலியார் மாணவர் திருமயிலை சண்முகம் பிள்ளை பார்வையிட்டு, கயப்பாக்கம் இரத்தின செட்டியார் குமாரர் முருகேச செட்டியாரால் பதிப்பிக்கப்பட்டது. விஜயஸ்ரீ தனுர்ரவி" என்னும் குறிப்புகள் உள்ளன.

பாவலராகவும், போதக ஆசிரியராகவும், உரையாசி ரியராகவும், பதிப்பாசிரியராகவும் விளங்கிய சண்முகனர் ஏடு தொகுப்பாளராகவும் விளங்கினர். இவரால் மணி மேகலை, புறநானூறு பதிற்றுப் பத்து, ஐங்குறுநூறு, குறுந் தொகை, தொல்காப்பியம் ஆகிய சுவடிகள் கிடைத் துள்ளன.

மயிலையார், மதுரைத் தமிழ்ச் சங்கத்துடன் மிகத் தொடர்பு கொண்டிருந்தார். விழாக்கள் தோறும் கலந்து கொண்டு உரையாற்றினர் சங்கப் புலவருள் ஒருவராகத் திகழ்ந்தார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளைக்கும் இவர்க்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவர் தம் புறநானூற்றுச்

சுவடி பேராசிரியர் சுந்தரம் பிள்ளை வழியாகவே உ. வே. சாமிநாதையருக்குக் கிடைத்தது. இவர்தம் ஐந்திணை ஐம்பது ஏட்டுச் சுவடியும், செல்வக் கேசவராய முதலியார் ஏட்டுச் சுவடியுமே மதுரைத் தமிழ்ச் சங்க,வழியாக ஐந்திணை ஐம்பது பழைய உரையுடன் வெளிவருதற்கு வாய்ப்பளித்தன. தமிழ்ச் சங்கத்தின் முதல் வெளியிடு இந்நூலேயாம். தொல். நச். உரை' - சங்கப் பதிப்புக்கும் இவர் சுவடி பயன்பட்டது.

"மயிலை சண்முகம் பிள்ளை, 'தொல்காப்பியம் சண்முகம் பிள்ளை' என்று போற்றப்பட்ட ஒரு பெருந் தமிழ்ப் புலவர்" என்றும், "கதிரைவேற் பிள்ளையின் கெழுதகை நண்பருள் சண்முகம் பிள்ளையும் ஒருவர்" என்றும், "கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்துக்கு ஒரு நல்லுரை அவரால் காணப்பட்டது. அவர் யாத்த நூல்களில் சிறந்தது திருமுல்லைவாயில் புராணம்" என்றும்[1] திரு. வி. க. குறிப்பிடுகிறார்.

எ. தே. இலட்சுமண கவிராயர்

இவர் திருக்குருகூர் எனப்பெறும் ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்தவர். வாழையடி வாழையாகப் பெரும்புலவர் வழியில் வந்தவர். மாறனலங்கார உரையாசிரியர் [2]தென் திருப்பேரை காரி இரத்தின கவிராயர், புலவராற்றுப்படை இயற்றிய சிறிய இரத்தின கவிராயர், தீராதவினை தீர்த்த திருமேனிக் கவிராயர் என்பவர்கள் வழியில் வந்தவர்.

1. வாழ்க்கைக் குறிப்புகள், பக். 179,

2 ஆழ்வார் திருநகரிக்குக் கிழக்கே மூன்றுகல் தொலைவில் உள்ளதொரு பழமையான ஊர் "877 ஆம் ஆண்டு மார்கழி மீ சதுர்த்தசியும் புதன்கிழமையும் உரோகிணியும் பெற்ற சுபதினத்திலே இரத்தின கவிராயர் வெண்பாமாலையுரை எழுதி முற்றும்" என்னும் குறிப்பு புறப்பொருள் வெண்பாமாலைச் சுவடியில் உள்ளது.

இவர்தம் முன்னோர் கோயிலில் 'வாகனமாலை' பாடு தற்காகச் சிறந்த 'மானியங்கள்' பெற்றிருந்தனர். அவற்றை வழிவழியே ஆட்சியுரிமை யுடையவர்களாய் வளமுற வாழ்ந்து வருகின்றனர்.

இலட்சுமண கவிராயர் புலமையால் சிறந்ததுடன் ஏடு வழங்கும் வன்மையாலும் சிறந்து விளங்கினார். ஆயிரக் கணக்கான ஏடுகளை அருமையாகப் போற்றி வைத்திருந் தார். இவர்தம் ஏடுகள் சி. வை. தாமோதரம் பிள்ளை, உ. வே. சாமிநாதையர், உ. வே. இரா. இராகவையங்கார் முதலியவர்களுக்கு வரையாது வழங்கப் பெற்றுள்ளன.

பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், ஐங்குறு நூறு, சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரை, புறப் பொருள் வெண்பாமாலை முதலிய சுவடிகள் ஐயருக்குக் கிடைத்தன.

இவற்றுள் பரிபாடல் சுவடிகள் இரண்டு பதிப்புக்குக் கிடைத்த மொத்தப் படிகளே மூன்றுதாம். அன்றியும் பரி பாடல் 2 முதல் 22 பாடல்முடிய உரையுடன் இருந்த படி கள் இவை, இவ்வளவே பரிபாடலில் நம் கைக்குக் கிடைத் துள்ள அளவு எனின், அதன் முழுப் பெருமையும் இலக்கு மணக் கவிராயரைச் சேர்ந்ததேயாம்.

ஐங்குறு நூறு பதிப்புக்குக் கிடைத்த சுவடிகள் நான் கேயாம். அவற்றுள் மற்றைச் சுவடிகள் மூன்றும் மூலமும் கருத்துரையும் மட்டுமே உள்ளவை இலக்குமண கவிராயர் வழங்கிய சுவடியே மூலமும் கருத்துரையும் பழையவுரையும் உடையது. ஆதலால் ஐங்குறு நூற்றின் பழையவுரையைப் பரிந்தளித்துப் பைந்தமிழுக்குத் தொண்டு செய்தவர் இக் கவிராயரே.

இவர்தம் புறப்பொருள் வெண்பாமாலைச் சுவடியில் "அ௲ய ஆம் ௵ ஆவணி மீ ௧௧-ம் ௳ வெண்பாமாலை எழுதி முடிந்தது" என்னும் குறிப்பும், சிலப்பதிகாரச் சுவடியில்

"கம்கஙு ஞூ ஆடி மீ கச உ எழுதியது" என்னும் குறிப்பும் உள்ளன.

இக்கவிராயர் குடும்பத்தின் ஏடுகளே, திருக்கோவையார் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் அல்லர் பேராசிரியரே என்றும், தாமோதரனார் வெளியிட்ட தொல்காப்பியச் செய்யுளியல் முதலாய பின்னான்கியல் உரை நச்சினார்கினியர் உரையன்று பேராசிரியர் உரையே என்றும், பரிபாடல் உரையாசிரியர் பரிமேலழகர் என்றும் அறிந்துக் கொள்ளச் செய்தன.

இன்னொரு சிறப்பையும் குறிப்பிடவேண்டும். இக்கவிஞர் பெருமான் வீட்டில் மூவாயிரம் சுவடிகளுக்கு மேல் இருந்தன. அவை என்னென்ன சுவடிகள் என்பதற்கு அடங்கல் செய்து தனியே ஒரு சுவடியில் எழுதி வைத்திருந்தனர். நூலகக் கலையே தோன்றாத நாளிலேயே அவர்கள் கண்டிருந்த நுண்கலை இஃதன்றோ!

இலக்குமண கவிராயர் பண்பால் சிறந்தவர்; தொண்டால் உயர்ந்தவர் அவர் இல்லத்திலே பித்தராக விளங்கினார் டாக்டர் ஐயர்! "நிலா ஒளி நன்றாக வீசியது. அப்பொழுது லக்ஷ்மண கவிராயர் எதையோ தம் மேலாடையால் மறைத்துக் கொண்டு மிகவும் வேகமாக எங்களை நோக்கி வந்தார், திருக்கோயில் பிரசாதங்களைப் பெற்று அவற்றை மறைத்துக்கொண்டு வருகிறார் என்று நான் நினைத்தேன். வந்தவர், 'இந்தப் புஸ்தகத்தைப் பாருங்கள். இந்த ஒன்றுதான் என் மாமனாரிடம் இருக்கிறது; பார்த்துவிட்டுத் திருப்பி அனுப்பிவிடுவதாகச் சொல்லி வாங்கி வந்தேன்." என்று கூறி மேல் வஸ்திரத்தால் மூடியிருந்த சுவடியை எடுத்தார். அவர் என்னிடம கொடுப்பதற்கு முன்பே ஆத்திரத்தால் நான் அதனைப் பிடுங்கினேன் மேலே கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து அந்த நிலாவின் ஒளியிலேயே பிரித்தேன். சட்டென்று முல்லைப்பாட்டு என்ற பெயர் என் கண்ணிற்பட்டது. நிலவில் மலர்ந்த அம் முல்லையினால் என் உள்ளம் மலர்ந்தது. எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையில்லை. மிகவும் விரைவாக முதலில் இருந்து திருப்பித்

திருப்பிப் பார்த்தேன். ஆரம்பத்தில் திருமுருகாற்றுப்படை, அப்பால் பெருநராற்றுப் படை, அதன்பின் சிறுபாணாற்றுப் படை - இப்படி நெடுநல் வாடை முடிய ஏழு பாட்டுக்கள் இருந்தன. ஒவ்வோர் ஏட்டையும் புரட்டிப் புரட்டிப் பார்க்கையில் என்னையே மறந்துவிட்டேன். சந்தோஷ மிகுதியினால் அப்பொழுது என் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அருகில் இருந்தவர்களுக்குப் பொருள்பட்டிரா. அந்தச் சமயத்தில் மட்டும் என்னை யாரேனும் புதிதாகப் பார்த்திருந்தால் எனக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகவே கருதியிருப்பார். என்னுடைய மன உணர்ச்சி அவ்வளவு தீவிரமாக இருந்தது."

அ. தி. த. கனகசுந்தரம் பிள்ளை

இவர் இலங்கையிலுள்ள திருகோண மலையில் பிறந்தவர். இவர் தந்தையார் தம்பிமுத்து என்பவர். இவர் சென்னை கிறித்தவக் கல்லூரியிலும், பச்சையப்பன் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினர்.

வான்மீகி இராமாயணம் சுந்தர காண்டத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். சுன்னுகம் அ. குமாரசாமிப் புலவருடன் சேர்ந்து நம்பியகப் பொருளுக்கும், கம்பராமாயணம் பாலகாண்டத்துக்கும் உரை எழுதினர். தமிழ் நாவலர் சரிதை, ஈழமண்டலத் தேவாரம் ஆகியவற்றைப் பதிப்பித்தார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி ஆசிரியர் குழுவின் தலைவராகவும் விளங்கினர்.

இவர் ஏடுகள் சிலவற்றைத் தொகுத்தலையும், படியெடுத்துப் பாதுகாத்தலையும் கடமையாகக் கொண்டிருந்தார் இவர்தம் ஏடுகளுள் புறநானூறு, பதிற்றுப் பத்து, குறுந்தொகை என்பன டாக்டர் சாமிநாதையர் பதிப்புகளுக்குப் பயன்பட்டன. நற்றிணைச் சுவடிகள் இரண்டு பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பதிப்புக்குப் பயன்பட்டன.

குறுந்தொகை, பதிற்றுப் பத்து, பரிபாடல், புறநானூறு ஆகியவற்றின் கடிதப் படிகள் சைவசித்தாந்த சமாசத்தின் சங்க இலக்கியப் பதிப்புக்குப் பயன்பட்டன. பதிப்பாசிரியராகத் தாமும் இருந்துகொண்டு பிறர் பதிப்புக்கு உள்ளார்ந்த அன்புடன் ஏடுகள் உதவிய இவர்தம் பண்பு நலம் போற்றத் தக்கதாம். இத்தகைய நலம் வாய்த்தல் அருமையாம்,

௬. பெரும்புலவர் திரிசிரபுரம்
மீனாட்சிசுந்தரம் பிள்ளை

நடமாடும் சுவடிச் சாலையாக விளங்கிய இப் புலவர் பெருமானை அறியாதவர் இரார். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுப் புலவர்கள் என்று விளங்கியவர்களுள் பெரும்பாலோர் இவர் வழங்கிய புலமைச் செல்வத்தை அள்ளிக் கொண்டவர்களே. பாவேந்தராகத் திகழ்ந்த இப் புலவர் பெருமான் பண்டையோர் ஏடுகளைப் படியெடுத்தலைப் பிறவிக் கடமையாகக்கொண்டு போற்றினார்.

கடல்போல் விரிந்த கம்பராமாயணத்தை ஒருவர் ஒருமுறை முழுமையாகப் படியெடுப்பதே அரிது. ஆனால் இவர் அதனை மூன்றுமுறை படியெடுத்துள்ளார்! ஏறத்தாழ 56000 பாடல்களைப் பாடிய இவர்தம் கையெழுத்து எத்தகையது?

[1]"இவருடைய எழுத்து அழகாக முத்துக் கோத்தாற் போல இருக்கும். ஒவ்வொரு வரியும் கோணாமல் ஒழுங்காக இருக்கும், எழுத்து ஒன்றுடன் ஒன்று சேராது இவரால் எழுதப்பெற்ற சுவடிகளுக்குக் கணக்கேயில்லை"

1. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் II. பக் 276.

தொல்காப்பியம், பத்துப் பாட்டு, சிலப்பதிகாரம், சிந்தாமணி, கம்பராமாயணம் முதலாய பழைய நூல்களையும், இடைக்கால, பிற்கால நூல்கள் பலவற்றையும் படியெடுத்துத் தழும்பேறிய இவர்க்குப் பழந்தமிழ் ஆய்வும் செறிந்திருக்குமானால் எத்துணையோ அரிய நூல்களை நாம் இழந்துவிடாமல் அடைந்திருக்கக்கூடும். ஆனால் பாடுங்குயிலாகத் திரிந்த இவர்க்கு அவற்றில் ஊன்றுதற்கு வாய்க்கவில்லை, இயற்கை அத்தகையதே பாவலர் பாரதியார், பாவேந்தர் பாரதிதாசனார் ஆகியோர் படைப்பிலக்கியச் சிற்பிகளாகத் திகழ்ந்தமை கண்கூடு. அவ்வாறே இவரும் படைப்பிலக்கியச் செல்வராகவே திகழ்ந்தார்.

பழைய தமிழ்நூல்களில் இவர் கையெழுத்தால் பயன்படுத்துதற்கு அமைந்த சுவடிகள், தொல். எழுத்து இளம்பூரணம், பத்துப் பாட்டு நச். உரை, சிலப்பதிகாரம் அடியார்க்குநல்லார் உரை, சிலப்பதிகாரம் மூலம், சிந்தாமணி நச். உரைச் சுவடிகள் இரண்டு ஆகியவை.

இவர் வழங்கிய ஏட்டுச் செல்வங்கள் இவையே எனினும், இத்தமிழ் வழங்கு நிலமெல்லாம் வழங்கும் ஏடுகளையெல்லாம் தொகுத்து, இணையற்ற அச்சுப் பதிப்பாகக் கொணர்ந்த பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதையரைக் கொடையாக வழங்கிய புலவர் கோமான் இவராகலின் தமிழர் போற்றுதலுக்குரிய தமிழ்த் தெய்வமும் இவராவார்!

தனித்தனியே கண்ட இப்புலவர்களை அல்லாமல் வேறு பல ஊர்களில் புலமைச் செல்வர்களாகத் திகழ்ந்து சுவடி படியெடுத்தும், போற்றிக் காத்தும், கற்பித்தும் தொண்டு செய்த பெருமக்கள் பலர். வேம்பத்தூர் சில நூற்றாண்டுகளாகத் தொடர் புலமையாளர் மல்கிய இடம். பாடு புலவர்கள் வீடுகளையே தன்னகத்துக் கொண்டது. அவ்வாறே திருநெல்வேலி, திருவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, கடையநல்லூர், தென்காசி, புளியங்குடி, சிவகிரி, சேற்றூர், சொக்கம்பட்டி, ஊற்றுமலை, காஞ்சிமாநகர், கோவை,

தஞ்சை, திரிசிரபுரம், சென்னை முதலிய இடங்களிலே இருந்து போற்றிய பீடுடையாளர்களாகத் திகழ்ந்தவர்களை எண்ணப்புகின் வரம்பு தமக்கு இன்மையின், இதுகாறும் அரிய பழந்தமிழ்ச் சுவடிகளை வைத்திருந்து பதிப்பிப்பாளர்க்கு உதவி, உயர்புகழ் கொண்ட பெருமக்களாக அறியப்பெறுபவர்களை மட்டும் குறிப்பிட்டுக் காட்டுவோம்.

சுவடி உதவிய தகைமையாளர்களும் அவர்கள் உதவிய சுவடிகளும் அகரமுறையில் வருமாறு :

அண்ணுசாமிப் பிள்ளை, திரிசிரபுரம்
சிலப் மூலம்; புறத்திரட்டு.

அப்பன் செட்டியார் கூ, சென்னை சிலப். அடியார்க்.

அப்பாசாமி நாயினுர், வீடூர் சிந்தா. நச்.

அப்பாசாமிப் பிள்ளை, சேலம் சிந்தா. நச்.

அய்யாசாமி நைனுர், கலவை நீலகேசி-திரட்டு.

இராதாகிருஷ்ணையர், புதுக்கோட்டை குறுந்.

இராசகோபாலாச்சாரியார் சக்கரவர்த்தி
தேரழுந்தூர் சிலப். அரும்

எட்டையாபுரம் - பெரிய அரண்மனை மணிமே.

கருப்பையாத் தேவர், டொம்மிச்சேரி நற்.

கவிராஜ பண்டாரம், செங்கோட்டை சிந்தா. நச்

கனகசபைப் பிள்ளை, ம. வி யாழ்ப்பாணம்
புறம் மூலம்; பத்துப்; சிலப் அடியார்க்; சிலப் மூலம்.

குமாரசாமி செட்டியார், யாழ்ப்பாணம் சிலப். அடியார்க்; சிலப். மூலம்; சிலப் (கையெழுத்துப்படி)
சிந்தா. நச்.

குமாரசாமி ஐயர், வேலூர் பத்துப். நச்.

குமாரசாமிப் பிள்ளை தூத்துக்குடி புறம் - உரை
(இரண்டு சுவடிகள்) சிலப். மூலம்; பத்துப், நச்,
சிந்தா. நச்.

குருசாமி ஐயர், சென்னை சிலப். அடியார்க்; சிலப், (கையெழுத்துப் படி) அரும்பதவுரை சில ஏடுகள்

கைலாச பிள்ளை, சிற். நல்லூர், யாழ்ப்பாணம் மணிமே.

கொண்டப்ப வாத்தியார், திருக்.

கோவிந்தசாமி ரெட்டியார், சீர்காழி ஐங்குறு.

சங்கர சுப்பிரமணிய தத்தசுவாமி, மந்தித்தோப்பு மடம் குறுந்; புறம். மூலம்.

சந்திரநாத செட்டியார், வீடூர் சிந்தா நச்; சிந்தா. மூலம்.

சபாபதி முதலியார் அட்டாவதானம், சென்னை சிந்தா. நச்.

சரவணப்பெருமாளையர், திருத்தணிகை புறம்.

சாமி ஐயங்கார், சிதம்பரம் சிலப். அடியார்க்.

சாமிநாத தேசிகர், களக்காடு பத்துப் மூலம்; உரைப்பிரதி சில.

சாமிநாதையர், அரியூர் புறம். மூலம்.

சாலிவாடீசுவர ஓதுவார், திருநெல்வேலி சிலப். அடியார்க்; சிலப். மூலம்; சிந்தா. நச்:

சிதம்பரம் பிள்ளை, வ. உ. தொல். இளம். பொருள்,

சிவகுருநாதன், திருவாரூர் கலித்.

சிவன் பிள்ளை, பொள்ளாச்சி பத்துப். நச்

சின்னசாமி பிள்ளை சிந்தா நச்.

சுந்தரமூர்த்திப் பிள்ளை, ஆறுமுகமங்கலம் மணிமே.

சுப்பராயச் செட்டியார், சோடசாவதானம் சிந்தா நச்; குறுந்.

சுப்பிரமணிய பிள்ளை, உடையூர் சிந்தா. நச்.

சுப்பையா பிள்ளை, தென்காசி புறம். (மூன்றுகுறைச் சுவடிகள்) சிற்றட்டகம் (சில ஏடுகள்)

சுவாமிநாத பண்டிதர், யாழ்ப்பாணம் புறம். உரை.

செங்கோல்மடம் குறுந்.

சோமசுந்தர தேசிகர், இலக்கண
விளக்கப் பரம்பரை தொல். பொருள். நச்.

ஞானியாார்மடம், திருப்பாதிரிப்புலியூர்
தொல். பொருள். நச் பேரா.

தருமலிங்க செட்டியார், சிதம்பரம் சிந்தா. நச்.

தாமோதரம் பிள்ளை புறம்; சிந்தா நச்;
சிலப் அடியார்க்.

தாயவலந்திர்த்த கவிராயர்,
ஆழ்வார்திருநகரி புறம். உரை; தொல். பொரு.
செய். நச் (சுவடி 2)

தியாகராச செட்டியார், திரிசிரபுரம்
சிலப். அடியார்க்; சிந்தா, நச்,

துரைசாமி முதலியார் எம், பி. எஸ். முருகு. மூலம்.

தேவர்பிரான் கவிராயர், ஆழ்வார்திருநகரி பத்துப்.

நமச்சிவாய முதலியார் கா. ரா சென்னை,
பத்துப் (கடிதப் பிரதி)

பச்சையப்ப வாத்தியார் சிந்தா, நச்; சிந்தா. மூலம்.

பார்சுவநாத நயினார் மணிமேகலை சுவடி 2.

பெரியதிருவடிக் கவிராயர் ஆழ்வார்திருநகரி
சிலப். (கையெழுத்துப் படி)
தொல். பொருள். நச். பேரா

பொன்னுசாமித் தேவர், இராமநாதபுரம்
சிந்தா மூலம்

மகாலிங்கையர், மழவை சென்னை சிந்தா. நச்

மருதமுத்து உபாத்தியாயர், தஞ்சை சிந்தா, நச்.

முத்துகிருஷ்ண வாத்தியார், கடையநல்லூர்
சிந்தா. நச்.

முத்துக்குமாரசாமி முதலியார், சென்னை மணிமே.

முத்தையா செட்டியார் சிவ, மு மு. புதுப்பட்டி நற்.

வானமாமலைத்தாதர் (கணக்கு), நான்குனேரி
சிந்தா. நச்

விசயபால நயினார், கூடலூர் சிந்தா. நச்.

விருஷபதாச முதலியார் சிந்தா. நச்.

வேலாயுத முதலியார், தொழுவூர், சென்னை
சிலப். அடியார்க் குறுந்.

வேலுப்பிள்ளை ஜெ. எம் பதிற் ; ஐங்குறு. மூலமும் கருத்துரையும்.

இவ்வேடுகள் அல்லாமல் வேறுபல ஏடுகளும் பதிப்பாளர்களுக்குக் கிடைத்துள்ளன ஆனால் அவற்றைப் பற்றிய விளக்கங்கள் கிடையாமையால் கிடைத்த அளவில் குறிப்பிடப் பெற்றுள்ளன இப்பட்டியல் முழுமையானது எனக் கொள்ளுதல் கூடாது என்பது கருதியே இதனைக் குறிப்பிடலாயிற்று.

இவ்வரிசையுள் இரண்டு சுவடிகளைக் குறிப்பிடல் இன்றியமையாதது. அவ்விரண்டும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. ஒன்று களக்காடு சாமிநாத தேசிகர் வழங்கிய பத்துப் பாட்டு மூலச் சுவடி! அதற்குமுன் மூலச்சுவடி பத்துப் பாட்டுக்குக் கிடைக்கவில்லை. அதனைப் பெற்ற மகிழ்வில் ஐயர் எழுதுகின்றார். 1"பத்துப் பாட்டு மூலம் முழுவதும் அடங்கிய பழையபிரதி அங்கே கிடைத்தது. ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினேன். இதற்காக நான் எவ்வளவு அலைந்திருக்கிறேன். முன்பே கிடைத்திருந்தால் எவ்வளவு அனுகூலமாக இருந்திருக்கும்! இரண்டாவது பதிப்புக்கு இதை உபயோகித்துக் கொள்வேன்! என்று கூறி அதைப் பெற்றுக் கொண்டேன்" கூறியவாறே இரண்டாம் பதிப்பிற்குக் களக்காட்டுச் சுவடியைப் பயன்படுத்திக் கொண்டார். பத்துப்பாட்டுக்கு ஒரே முழு மூலச்சுவடியாகத் தமிழ் உலகுக்குக் கிடைத்தது, களக்காட்டுச் சுவடியே எனின் அதன் பெருமை அளப்பரியதுதானே!

மற்றொரு சுவடி சிலப்பதிகார அரும்பதவுரைச் சுவடியாகும். அதனை வழங்கியவர் தேரழுந்தூர் சக்கரவர்த்தி

1; என் சரித்திரம் 938.

இராசகோபாலாச்சாரியார். இச்சுவடியொன்றே அரும்பத வுரைக்குக் கிடைத்தது. பின்னே சரவணப் பெருமாளையர் கொள் பேரர் குருசாமி ஐயர் வீட்டில் அரும்பதவுரையின் பத்து ஒற்றையேடுகள் மட்டுமே கிடைத்தன. ஆதலால், சிலப்பதிகார அரும்பதவுரை என்னும் அருமையான உரை நமக்குக் கிடைக்க உதவியவர் தேரழுந்தூராரே, இருக்கும் ஒன்றைக் கொடுப்பதும உயர்ந்ததே எனினும் பத்தொடு பதினொன்றாகவே எண்ணப்பெறும்! ஒன்றே ஒன்று எனின் கண்ணே கண் என்று போற்றப்பெறும் அன்றோ!

சில் படிகளே படி எடுத்தவரைப் பற்றிய குறிப்பு களும் காலக் குறிப்பும் கொண்டுள்ளன. அவை ஏட்டைப் படி எடுத்தவரையும், படி எடுக்கப்பெற்ற காலத்தையும் விளக்குவன

தொல். பொருள். நச், பேரா. உரைச் சுவடி ஒன்றில் உவம இயல் இறுதியில், "ஆழ்வார் திருநகரியில் இருக்கும் பெரிய திருவடிப்பிள்ளை குமாரர் பழனியப்ப பிள்ளை என்று பேர் விளங்கிய திருவேங்கடம் பிள்ளை எழுத்து" என்னும் குறிப்புள்ளது — உ. வே. ச. II, 103.

கலித்தொகை நச். உரைச்சுவடி ஒன்றில், "850 ஷு மாசி மீ 29உ திருவாரூரில் இருக்கும் செங்கமல பொற் பாதம் மறைஞான பண்டாரத்தின் புத்திரன் சிவகுரு நாதன் எழுத்து" என்னும் குறிப்புள்ளது

— உ. வே. சா. II. 224.

சிந்தாமணி நச் உரைச்சுவடி ஒன்றில், "ஸ்ரீ சகாப்தம் 1550க்கு மேல் செல்லா நின்ற ஈஸ்வர ஷுத்து தை மீத்து அமர பக்ஷத்து திரிதியையும் பெற்ற ஆதித்திய வார நாள் எழுதிமுடிந்த பிரதியோடு பார்த்து சகாப்தம் 1625க்கு மேல் செல்லா நின்ற சுபானு ஷுத்து சித்திரை மீத்து அமர பக்ஷத்து துவாதசி 5உ துவாதசி வெள்ளிக்கிழமை நாள் எழுதி முடிந்தது. இந்தச் சுவடி கண்ணங்குடை பொன்னம்பலத்தா பிள்ளை புத்திரர் முத்தய்யா பிள்ளை அவர்கள் சிந்தாமணி எழுதி முடிந்தது" என்று மிக விரிவாக எழுதப் பெற்றுள்ளது. ச. ம. நா. 145

இதனால் படி எடுத்த சுவடிக்கு முந்தைச் சுவடிக் காலமும் தெளிவு செய்யப்பெற்றுள்ளது.

சிந்தாமணி மூலமும் உரையும் அமைந்த சுவடி ஒன்றில் "880௵ சித்திரைமீ 15உ காரிமாறன் எழுதி முடிந்தது" என்றுள்ளது உ. வே. சா. II. 325.

'காரிமாறன் சடகோபன்' (திருவாய்மொழி) ஆதலால் அவர் பெயர் தாங்கிய புலவரொருவர் பின்னாளில் இருந்ததையும், அவர் இருந்த காலத்தை அறியவும் இக் குறிப்பு பயன்படுகின்றது. இவர் காரி ரத்னகவிராயர் வழியினராதலும் கூடும்.

உரையுள் 'வகுத்துரை' என ஒன்று உண்டென்பதை திருக்குறள் வகுத்துரை என்னும் சுவடியால் அறிய முடிகின்றது. "ருத்ரோத்காரி௵ ஐப்பசிமீ 28உ சுக்கிரவார நாள் வீராசாமி" என்று அச்சுவடியில் குறிப்புள்ளது.

அ. ஓ சு. நூ. 162.

திருக்குறள் உரைச் சுவடி மற்றொன்றில் "ருத்ரோத்காரி௵ ஐப்பசிமீ 18உ புதன்கிழமை ரோகிணி நக்ஷத்திரம் துவிதினம் இந்த நாளில் திருவள்ளுவர் குறள் எழுதி நிறைந்தது முற்றும். காளத்திலிங்கக் கவிராயர் அவர்கள் சுகஸ்த லிகிதம்" என்றுள்ள குறிப்பினால் இப்பெயருடன் ஒரு கவிராயர் இருந்தமை புலப்படுகின்றது.

இன்னும் வேறு சில விரிவான குறிப்புகளும் சுவடிகளில் உள்ளன. "அழகியநாதர் அபிராமி துணையாக வேணும். திருச்சிற்றம்பலம். வெகுதானிய ௵ ஆனி மீ 20உ ஆதிவாரநாள், காஞ்சிபுரத்துக்கு மேற்கு காவேரிப் பாக்கத்துக்குக் கிழக்கு மூனுநாழி வழியிலே கருவிடு களத்தூர் திருவேங்கட பிள்ளை குமாரன் பொன்னம்பலத்தா பிள்ளை, கருப்பூர் வேளாபிள்ளை குமாரன் வயித்தியனாத பிள்ளை எழுதிக்கொடுந்த நாட்டி தேவர் எழுதி முடித்தான்

அது அறியவும் முற்றும்" என்றுள்ள பகுதியால் முன்சுவடி எழுதிக்கொடுத்தவர் பெயரும், படியெடுத்தவர் பெயரும், ஊர்ப் பெயர்களும், காலக் கணிப்பும், நாழிகைக் கணக்கும் பிறவும் அறியவருகின்றன. ச. ம. நூ. 82.

சில குறிப்புகள் ஆராய்ச்சியாளரைத் தூண்டுவன வாகவும் உள்ளன. திருக்குறள் உரைச் சுவடி ஒன்று, பரிமே லழகர் உரைக் கருத்தைக் கொண்டு எழுதியதாக உள்ளது. எனினும் புதிய உரைகளும், வேறுபாடுகளும், எளிய நடை யும் உடையதாக அமைந்துள்ளது. அவ்வுரை டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடாக "திருக் குறள் மூலமும் ஓர் பழைய உரையும்" என்னும் பெயரில் வந்துள்ளது. ஆனால் அவ்வேட்டுச் சுவடியில் அமைந்துள்ள குறிப்பு ஆய்வுக்குரியதாக உள்ளது.

"...ஹு அற்பசிமீ 2உ ஆதிவாரநாள் பூச நக்ஷத்திரம் நவமி இந்தச் சுபதினத்தில், கொண்டப்ப வாத்தியார் எழு தின திருவள்ளுவருரையைப் பார்த்து எழுதி முடிந்தது. முற்றும் சிவனே துணை. தேவிசகாயம். திருச்சிற்றம்பலம்" என்னும் குறிப்புள்ளது. இதனால் இவ்வுரை 'திருவள்ளுவர் உரை' எனப் பெயர் பெறும் என்பதும், இதனை எழுதியவர் கொண்டப்ப வாத்தியார் என்பதும், அதனைப் பார்த்து ஒருவர் படிஎடுத்தார் என்பதும் புலப்படுகின்றது. ஆதலால் இவ்வுரை கொண்டப்ப வாத்தியார் என்பவர் எழுதிய உரையே என முடிவு செய்தற்கு உரியதாகின்றது.

சுவடியைப் படியெடுத்துப் பாதுகாப்பது போற்றுதற் குரிய செயலாகும் அத்தகைய செயலைச் செய்த ஒருவருக் குச் செல்வமும் புகழும் சேர்ந்துவாழ வாழ்த்துகின்றது ஒரு சுவடியின் பாடல்.

[1] 'முருகாறு பொருநாறு சிறுபா ணாறு
முல்லைபெரும் பாணாறு மதுரைக் காஞ்சி

---

1 சென்னை அரசுங்காட்சி நூல் நிலையப் பிரதி, பெருந்தொகை. 2090

பரிசாய பொருடழுவு நெடுநல் வாடை
பட்டினப்பா லைகுறிஞ்சி மலைக டாமும்
மருவாரும் பொழில்புடைசூழ் களந்தை மூதூர்
வருசிவப்ப பூபனருள் வேல பூபன்
உரையோடும் எழுதினன்ஆ தலினால் அன்னேன்
ஓங்குபெருஞ் செல்வமிசை யுற்று வாழி!"

களந்தை என்பது களத்தூர் என்பதாம். அவ்வூர் பொன்விளைந்த களத்தூர் எனப்படும். [1] புகழேந்தியாரும் அந்தகக்கவி வீரராகவரும் பிறந்த புகழ்மிக்க ஊர் அவ்வூர். அதில் சிவப்ப பூபன் என்பான் ஒருவன் இருந்தான் அவன் மைந்தன் வேலப்ப பூவன் என்பான் அவன் முருகாறு முதலாக மலைபடுகடாம் ஈருக அமைந்த பத்துப் பாட்டை யும் உரையோடு எழுதினான். ஆதலால் அவன் செல்வமும் புகழும்சேர வாழ்வானாக என்று வாழ்த்துகிறது இப்பாட்டு.

பெருங்கதைச் சுவடியை எழுதியவன் அன்பூர் நயி னான் அமுதகவி என்பவன். அவனை அவ்வாறு எழுதச்செய்த வன் தொண்டை நாட்டைச் சேர்ந்த பழைசை என்னும் ஊரினனாகிய அடைஞ்சான் என்பவன் மைந்தன் சின்ன டைஞ்சான் என்பவன். அவன் செயல், மூவர் பாடிய தேவாரத் திருமுறைகளைக் கண்ட திருமுறைகண்ட சோழன் செயல் போன்றது என்று போற்றுகின்றது பெருங்கதை மகத காண்டத்தின் இறுதியில் உள்ள ஒரு கட்டளைக் கலித் துறை.

"முன்னாளின் மூவர் உரைகண்ட
சோழன் முறைமையைப்போல்
இந்நாளி லேகொங்க வேண்மாக்
கதைகண் டெழுதுவித்தான்

1. முதுகளத்தூர் என்பாரும் உளர்.

பன்னுளுங் கீர்த்திப் பழைசை
யடைஞ்சான்மெய்ப் பாலனியல்
நன்று வலர்புகழ் சின்னடைஞ்
சான்தொண்டை நாட்டவனே"

என்பது அது. அன்றியும், "இந்தக் காவியம் எழுதினது அன்பூர் நயினன் அமுதகவி எழுத்து" என்றும் குறிப்புள்ளது. இத்தகைய குறிப்புகள் ஆய்வாளர்க்குப் பயன் மிக்கவையாம்,

8. ஏடு தொகுத்த ஏந்தல்கள்

புலவர்களின் வீட்டுப் பரணையில் கிடந்த ஏடுகள், அவ்வாறே கிடந்து அழிந்துபடாமல் காத்த பெருமைக்குரியவர்கள் 'ஏடு தொகுத்த ஏந்தல்கள்' என்னும் இப்பகுதியில் இடம்பெறுகின்றனர்.

ஏடுகள் புலவர்கள் வீடுகளில் மட்டும் இருக்கவில்லை. குறிப்பிடத்தக்க சில குறுநில மன்னர்கள், வளமனைகளிலும், சைவ வைணவ மடங்களிலும் தொகுத்து வைக்கப் பெற்றிருந்தன.

குறுநில மன்னர்களுள் மொழிப் புலமையும், புலவர்களைப் போற்றும் இயல்பும் இனிதே அமைந்த சிலர் அவையம் பொலிவோடு விளங்கியது. அவர்களும் புலவரோடு புலவராகவே அமர்ந்து ஆராய்ந்தும் கவிதையியற்றியும் மகிழ்ந்தனர். இவ்வகையில் தலைமையானது இராமநாதபுர அரசேயாகும். "புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனும்" என்பதுபோல், புவிவேந்தராகவும், கவிவேந்தராகவும் திகழ்ந்த சேதுபதிகளால் நூற்றுக்கு மேற்பட்ட புலவர்கள் போற்றிக் காக்கப்பட்டனர். அவர்கள் பாடிய நூல்கள் தனிப் பட்டியல் இட்டுக்காட்டும் தகைமையன. சேதுவேந்தர்கள் வளமனை, ஏடுகள் நிரம்பக்கொண்ட திருமனையாகத் திகழ்ந்தது. தமிழ்ச் சங்கம் மதுரையில் தோற்றுவிக்கும் முன்னரே, சேது அரண்மனையில் மிகுதியாகச் சுவடிகள் இருந்துள்ளன.

சிவகங்கைக் குறுநில மன்னரும் செந்தமிழ் வளர்த்தவர்கள் ஆவர். மங்காப் புகழ்கொண்ட மருது பாண்டியர்

அவையில் 21 புலவர்கள் இருந்தனர் என்பர். பலப்பல தனிப்பாடல்களும், நூல்களும் இயற்றினர். அரிய சுவடிகளையும் தொகுத்துப் போற்றினர்.

எட்டையபுரம் குறுநில மன்னர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டு மிகப் பெரிதாகும். கடிகை முத்துப் புலவர் முதலாக பல புலவர்களைப் புரந்து பாமாலை சூடிக் கொண்டுள்ளனர். பாரதியார் தொடர்பு பாரறிந்த செய்தி அவர்கள் வளமனையிலும் ஏடுகள் பல தொகுக்கப் பெற்றிருந்தன.

சேறை எனப்பெறும் சேற்றூரின் மன்னர்கள் நிலப் பரப்புச் சிறிதே எனினும் புலப்பரப்புப் பெரிதாக இலங்கினர். 'ஒரு குடியில் ஏழு புலவர்' என ஏற்றம்பெற்ற முகவூர் கவிராயர்களையும், எண்ணற்ற பிற புலவர்களையும் தாங்கித் தாமும் அவைக்களப் புலவருள் ஒருவராக வீற்றிருந்து பாடுபுகழ் பெற்றனர்.

இன்னும் சிவகிரி, சொக்கம்பட்டி, ஊற்றுமலை - குறுநில மன்னர்களும், வரதுங்கராம பாண்டியர், அதிவீரராம பாண்டியர், வடமலையப்ப பிள்ளையன் ஆகியோரும் ஏடு தொகுத்து வைத்தவர்களே ஆவர். ஆயினும் இவர்கள் தொகுத்துவைத்த ஏடுகளுள் பெரும்பாலானபிற்காலச்சிறு நூல்களும், அவர்களைப் பற்றிப் பல்வேறு புலவர்கள் பாடிய நூல்களுமே இருந்தன. அரிதாகவே அரிய நூல்கள் இருந்தன. சங்க நூல் படிகள் காண்டற்கு மிக அரிதாயிற்று. அன்றியும் தக்க வழிமுறை வாய்த்துத் தக்கவர்களிடம் ஏடுகளை வழங்கியுதவாமையால் நாட்டுக்குப் பயன்படாதும் ஒழிந்தன. ஆனல் சில மடங்கள் இப்பழிக்கு ஆளாகாமல் ஏடுகளை நன்முறையில் காப்பாற்றியுள்ளன. அவை போற்றியவற்றுள்ளும் பெரும்பாலும் சமயத் தொடர்பான நூல்களே இருந்தன எனினும், பழஞ் சுவடிகளைப் பாடம் சொல்வதை விரும்பின அல்ல எனினும்-படியெடுத்துப் பாதுகாத்து வந்துள்ளன அச்சிறப்புப் போற்றுதற்குரியதாம்.

சைவ மடங்களுள் திருவாவடுதுறைக்குத் தனிப் பெருமையுண்டு. அதன் தலைவர்களாக இருந்தவர்களுள் பலர் தமிழ்ப் புலமை நிரம்பியவர்கள். சமய நூல்களுடன் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள், தம்மை நாடிவந்த மாணவர்க்குத் தமிழ்ச் செல்வத்தையும் வாரி வழங்கியவர்கள். சிவஞான முனிவர், ஈசான தேசிகர், கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகியோர் திருவாவடு துறை மடத்திற்கு அணி செய்த புலவர் பெருமக்கள் ஆவர். பிற்காலத்தில் பதிப்புத்துறை வேந்தராகத்திகழ்ந்த சாமி நாதையரும் இம்மடத்தில் வளர்ந்த பெருமையுண்டு இம் மடத்தில் இருந்த சுவடிகள் ஆயிரக்கணக்கின. அவற்றுள் வளையாபதியும் ஒரு காலத்தே இருந்திருக்கக் கண்டிருக் கிறார் சாமிநாதையர் ஆனால் பின்னாளில் ஏடு தேடுங்கால் அகப்படாது போயிற்று அகநானூறு. நற்றிணை, குறுந் தொகை, பதிற்றுப் பத்து, பரிபாடல், ஐங்குறுநூறு, புற நானூறு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, நன் னூல் சங்கர நமச்சிவாயருரை முதலியன ஆங்குக் கிடைத் துள்ள சுவடிகளாகும். மற்றைப் பிற்காலச் சுவடிகளாகக் கிடைத்தவை எண்ணற்றவை. இவர்கள், ஐயர் பதிப்புக்குத் தேடிக்கொடுத்த அரிய சுவடிகளும் பலவாகும்.

தருமபுர மடமும் பழஞ்சுவடிகளைப் போற்றிக்காத்த இடமேயாகும். வெள்ளியம்பல வாணத்தம்பிரான், சம்பந்த சரணலய முனிவர், சீர்காழி சிதம்பர முனிவர் முதலாய புலவர்கள் இருந்து தமிழ் வளர்த்த இடம் இது. இங்கிருந்த சுவடிகளும் மிகப் பலவாம் எத்தகையவை அவை?

[1]"ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகள் இருந்தன.... எல்லாம் பழைய ஏடுகளே. புதிதாக எழுதப்பட்ட ஏடு ஒன் றேனும் அதில் காணப்படவில்லை,"

1. உதிர்ந்த மலர்கள், உ., வே. சா.

இந்தச் சுவடிகளிலும் பத்துப் பாட்டின் சுவடி இல்லை. ஆனால் பதினெட்டாம் பெருக்கில் விடுதற்கு அள்ளிக் கொண்டு போனவற்றிலிருந்து சில சிதறல் ஏடுகளை எடுத்துச் சுவாமிநாதத் தம்பிரான் என்பார் கட்டி வைத்திருந்தார். அந்த ஏடுகளுள் ஒன்றிலே பத்துப் பாட்டில் அகப்படாத பகுதி எதுவோ அது கிடைத்தது. குறிஞ்சிப் பாட்டில் வந்துள்ள பூக்கள் 99. அவற்றுள் உதிர்ந்து போயவை மூன்றே. மூன்றாக இருந்தால் என்ன? முப்பதாக இருந்தால் என்ன? குறை குறைதானே! குறை நீக்கிய நிறைவேயடாகிய ஒற்றை யேட்டைக் குறிக்கிறார் உ. வே. சா. "இழந்த குழந்தையைக் கண்டெடுத்த தாய்க்கு உண்டாகும் மகிழ்ச்சியைத்தான் நான் அதற்கு உவமானமாகக் கூறலாம்."

இழந்த குழந்தையைத் தேடிக் கண்டுகொள்ள உதவிய தருமபுர ஆதீனம், சிந்தாமணிச் சுவடிகள் 2, பரிபாடல், (இரண்டு ஒற்றையேடுகள்) தக்கயாகப் பரணி - உரை ஆகியவற்றையும் வழங்கியது. தக்கயாகப் பரணி உரை தருமபுரத்திற்குச் தனிச் சிறப்புத் தருவதாம். ஏனெனில் அவ்வுரைச் சுவடி, அவ்வொன்றேயாம்!

குமரகுருபர அடிகளால் தோற்றுவிக்கப்பெற்ற பெருமையுடையது திருப்பனந்தாள் மடம் அது செய்துள்ள தமிழ்த் தொண்டு பெரிது. பல அரிய வெளியீடுகளையும் வெளியிட்டுள்ள பெருமையுட அதற்குண்டு அவற்றுள் திருக்குறள் உரைவளம் முடிமணி போன்றது. ஏடுகள் தொகுத்து அறிஞர்களின் ஆய்வுக்கும் வாய்ப்பளித்துள்ளது.

மற்றும் காஞ்சி ஞானப்பிரகாசர் மடம், மதுரைத் திருஞான சம்பந்தர் மடம், நெல்லைச் செங்கோல் மடம், திருக்கோவலூர் ஞானியார் மடம் ஆகியனவும், குடந்தை, சிதம்பரம், திருவண்ணாமலை, துறையூர், மயிலம் முதலாய இடங்களில் உள்ள வீர சைவ மடங்களும் ஏடுகள் தொகுத்தும் வெளியீடுகள் புரிந்தும் தமிழ்த்தொண்டு செய்துள்ளன.

இனி ஏடுகள் தொகுத்தலையும், ஆராய்தலையும். நூல் வெளியிடுதலையுமே நோக்கமாகக் கொண்டு தொடங்கிய

சில அமைப்புகளும் உள்ளன. அவ்வமைப்புகளுள் சென்னை அரசினர் ஓலைச் சுவடி நூல் நிலையம், தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலையம், மதுரைத் தமிழ்ச் சங்கம் என்பவை தனிச் சிறப்பு வாய்ந்தன.

க. ஓலைச் சுவடி நூல் நிலையம்

சில எளிய தூண்டல்கள் அரிய துலங்கல்களை உண்டாக்கி விடுதல் அவ்வப்போது உலகியலில் காணவும் கேட்கவும் கூடியனவாக உள்ளன. மேலே குறிப்பிட்ட அமைப்புகள் மூன்றும் அவ்வாறு எளிய தூண்டல்களால் நிகழ்ந்தவையேயாம். இவ்வொற்றுமை விந்தையானதே.

[1]கர்னல் காலின் மெக்கன்சி என்பார் 'ஸ்காத்லாந்து' நாட்டினர். அவர் 1753ஆம் ஆண்டில் பிறந்தார். தமக்குப் பத்தொன்பதாம் வயது நடக்கும்போது அதாவது 1772 ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியில் பொறியியல் துறையில் அலுவல் பெற்று இந்தியாவுக்கு வந்தார். வரும்போதே ஒரு நோக்கத்தைக் கொண்டும் வந்தார்.

இங்கிலாந்தில் இருந்த நேப்பியர் பெருமகனார் ஒரு நூல் இயற்றினார். அந்நூல் அவர்தம் முந்தையராகிய 'ஜான் நேப்பியர்' வரலாற்று நூலாகும். ஜான் நேப்பியர் கணக்கியல் பேரறிஞர்; இந்திய நாடு கணக்குத் துறையில் மேம்பட்ட நாடு என்பதை அறிந்திருந்தார். ஆதலால் இந்திய நாட்டில் கணக்கியல் தொடர்பான சில ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தொகுத்து அனுப்புமாறு மெக்கன்சிக்கு அறிவுறுத்தியிருந்தார். நேப்பியர் பெருமகனார் விருப்பை நிறைவேற்றுதலில் பேரார்வம் கொண்டார் மெக்கன்சி. ஏனெனில் அவர்தம் தொடர்பே அவ்வளவு பெருமைக்குரியதாக மதிக்கப்பெற்றது.

1. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், பாகம் - 1 முன்னுரை.

மெக்கன்சி கணக்கியலில் ஆர்வமும் திறமும் மீக் கூர்ந்தவர். உவப்பான அப்பணியை உரிமையன்புடன் செய் தார். அவர் ஏற்றிருந்த பொறுப்பு 'சர்வேயர் செனரல்' என்பது அப்பொறுப்பினுல் கிருட்டிணுவில் இருந்து கன்னியாகுமரி வரையுள்ள எல்லா இடங்களுக்கும் பல்கால் சென்றுவரும் கடமையுண்டாயிற்று. அது தாம்எடுத்துக் கொண்ட பணிக்கு ஏற்ற வாய்ப்பு ஆயிற்று.

கணக்கியல் குறிப்புகளைத் தொகுத்து நேப்பியர் பெருமகனுர்க்கு உதவிய மெக்கன்சியின் உள்ளத்தில் இந் திய நாட்டு வரலாறு, பண்பாடு பற்றியவற்றை ஆராயும் உந்துதல் உண்டாயிற்று. அதற்கு அடிப்படையாக இருப் பவை ஓலைச்சுவடிகளும், கல்வெட்டுகளும் என்பதை உணர்ந் தார். தாமே தக்க சிலரைத் துணையாகத் தம் சம்பளத் திலே வைத்துக்கொண்டு ஓலைச் சுவடிகளை விலை கொடுத்து வாங்குவதிலும், கல் வெட்டுகளைப் படியெடுப்பதிலும் முழு மூச்சாக இறங்கினுர்.

1818 ஆம் ஆண்டு வரை தென்னுட்டில் இருந்தார். சில ஆண்டுகள் இலங்கைக்கும், சாவாவுக்கும் சென்றிருந் தது தவிர்த்து ஏறத்தாழ 31 ஆண்டுகள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டார். பின்னர் 'இந்தியாவின் சர்வேயர் செனரல்' என்னும் பதவி உயர்வு பெற்றுக் கல்கத்தாவுக்குச் சென்ருர். அங்கே தாம் தொகுத்த ஏட்டுச் சுவடிகளையும் கல்வெட்டுப் படிகளையும் கொண்டு சென்ருர். அவற்றை முறைப்படுத்திப் பட்டியற் படுத்தும் முயற்சியில் ஈடுபட் டார். ஆனுல் அங்குச் சென்ற மூன்ருண்டுகளில் அதாவது 1821 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினுர்.

செயற்கரிய செய்த இப்பெருமகனுர் தொகுப்புகளை நாடு அறிந்திருந்தது. ஆட்சியாளரும் அறிந்திருந்தனர். அவற்றின் அருமை பெருமைகளையும உணர்ந்திருந்தனர். அவர் தேடிவைத்த நயத்தகு செல்வம் நாட்டுக்குப் பயன் படவேண்டும் என அந்நாள் அரசப் பேராளராக இருந்த 'ஹேஸ்டிங்ஸ்' எண்ணினுர். கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்களின் இசைவைப்பெற்று மெக்கன்சி அவர்களின் மனைவியாரிடம் பதினுயிரம் பவுன் விலை கொடுத்து

வாங்கினர். அத்தொகுப்பில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, அரபி, பாரசீகம், வடமொழி ஆகிய மொழிகளில் சுவடிகள் இருந்தன. இச்சுவடிகள் கல்கத்தா வில் இருந்த ஆசிய சங்கத்தாரிடம் ஒப்படைக்கப்பெற்றன. இவற்றுக்கு அறிஞர் எச். எச். வில்சன் என்பார் ஒரு பட்டி யல் அமைக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப் பெற்ருர். பின் னர்த் தென்னிந்திய எழுத்துகளில் உள்ள சுவடிகள் 1828 ஆம் ஆண்டில் சென்னைக் கல்விச் சங்கம் என்னும் சங்கத் திற்கு அனுப்பப்பெற்றன.

பயனுள்ள சுவடிகள் வந்தும் படுத்துறங்கின. ஆத லால் கல்விச் சங்கத்தில் உள்ள ஏடுகளைத் தம்மிடம் தந்துவ வுமாறு சென்னை இலக்கியச் சங்கத்தினர் வேண்டினர். அர சும் அதனை ஏற்றுக்கொண்டு 1830 ஆம் ஆண்டு மெக்கன்சி யின் சுவடிகளை வழங்கியது. அதன் பின்னர்க் [1]கல்விச் சங் கத்தின் சுவடித் தொகுப்பு, டாக்டர் லேடன் என்பார் தொகுத்து இங்கிலாந்தில் இருந்த சுவடித் தொகுப்பு, சென்னைக் கல்விச் சங்கத்தின் தொகுப்பு, இலக்கியச் சங்கத் தின் தொகுப்பு ஆகியனவெல்லாம மெக்கன்சியின் தொகுப் புடன் இணைக்கப்பெற்றன. எல்லாமும் மீண்டும் சென்னைக் கல்விச் சங்கத்துக்கே தரப்பெற்றன. இந்நிலையில் 1858 ஆம் ஆண்டில் வில்லியம் டெய்லர் என்பார் விளக்கமான ஒரு பட்டியல் எழுதினர். பிறகு சென்னை மாநிலக் கல்லூரி நூல் நிலையத்துடன் இணைக்கப்பெற்றது. இந்நூல் நிலையம். "அர சினர் கீழை நாட்டுக் கையெழுத்து நூல் நிலையம்" எனப் பெற்றது. சுருக்கமாக 'அரசினர் ஓலைச் சுவடி நூல் நிலையம்' என்றும் வழங்கப்பெறும்.

கணக்கியல் தொகுப்பிலே சென்ற மெக்கன்சியின் நோக்கு ஓலைச் சுவடி, கல்வெட்டு ஆகியவற்றின் தொகுப் பிலே சென்று [2]அரியனவெல்லாம் உரிய பொழுதிலே

1. 19-ஆம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம்.
2. இதுகாறும் அறியவந்த கல்வெட்டுகள் 21464; இவற்றுள் வெளியா யினவும் வெளியாக அணியமாயினவும் 8479; வெளிப்பட வேண்டுவன 12985, பாண்டியர் செப்பேடுகள் பத்து, 11

சேர்த்துவைக்குமாறுசெய்தது உயர்வற உயர்ந்த நற்பேறேயாம். அவர் அக்கடமை செய்தமையால் இன்று நாம் காண இயலாத, அரிய கல்வெட்டுகளின் படிகளும் கிடைத்துள்ளன. அக்கல்வெட்டுகளுக்கு அவர் தொகுத்து வைத்த படிகளே சான்று; மூலச்சான்று போய இடம் தெரியவில்லை. இவ்வாறே ஓலைச் சுவடிகளிலும் அரியன உண்டு.

மேனாட்டவர் தமிழ் மொழிக்குச் செய்திருக்கும் ஆக்கப் பணிகள் பலப்பல. அவற்றுள் மெக்கன்சியின் பணி இணையற்றது. காலத்தை வெல்லுதல் அரிது! அதனை வெல்லும் வகையைக் கண்டு நமக்கு எடுத்துக்காட்டாக இலங்குபவர் அறிஞர் கர்னல் காலின் மெக்கன்சி என்னும் பெருமகனார்.

ஓலைச் சுவடி நூல் நிலையம் ஆங்குள்ள சுவடிகளுக்கு விளக்கப் பட்டியல் வெளியிட்டுள்ளது; நூல்களுக்குப் படியெடுக்கும் பணியும் செய்கின்றது; ஆராய்வார்க்குச் சுவடிகள் வழங்கியும் உதவுகின்றது; அவ்வப்போது சில நூல்களையும் அச்சிடுகின்றது.

சௌரிப் பெருமாளரங்கனாரின் குறுந்தொகைப் பதிப்பு, பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் நற்றிணைப் பதிப்பு, டாக்டர் சாமிநாதையரின் மணிமேகலை, பத்துப் பாட்டு, பதிற்றுப்பத்து, குறுந்தொகைப் பதிப்புகள், வையாபுரிப் பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பு (சை. சி. சமாசம்) முதலியவற்றுக்குச் சுவடி வழங்கியுள்ளது.

ஆங்குள்ள தொல்காப்பியம், பாட்டு, தொகை முதலியவற்றுள்ள சுவடிகள் எண்ணிக்கையைக் குறிப்போம். இவை சிதைவாகாதவை என்றோ, முற்றும் உள்ளவை என்றோ கொள்ளவேண்டா. அரைகுறையானவையும், சிதைவானவையும் உண்டு முற்றும் உள்ளவையும் உண்டு. இக்குறிப்பு மேலே வரும் அமைப்புகளிலுள்ள சுவடிகளுக்கும் பொருந்தும்.

தொல்காப்பியம்	சுவடிகள் -	11
முருகாற்றுப்படை	,,	5

பொருநராற்றுப்படை	சுவடிகள்	1
சிறுபாணாற்றுப்படை	,,	1
பெரும்பாணாற்றுப்படை	,,	1
முல்லைப்பாட்டு	,,	1
மதுரைக்காஞ்சி	,,	1
பட்டினப்பாலை	,,	1
மலைபடுகடாம்	,,	1
நற்றிணை	,,	1
குறுந்தொகை	,,	1
ஐங்குறுநூறு	,,	2
பதிற்றுப்பத்து	,,	8
கலித்தொகை	,,	4
அகநானூறு	,,	1
புறநானூறு	,,	1
சிலப்பதிகாரம்	,,	2
மணிமேகலை	,,	2
சிந்தாமணி	,,	6
சூளாமணி	,,	1
திருக்குறள்	,,	17

[1] இலக்கண, இலக்கிய, இதிகாச, புராண, சமய, தத்துவ நூற் சுவடிகளாக 1867 எண்ணிக்கை ஓலைச் சுவடி நூல் நிலயத்தில் உள்ளன.

உ. தஞ்சை சரபோசி மன்னா

சரசுவதி மகால் நூல் நிலையம்

மராத்திய மன்னர் சிவாசியின் வழிமுறையில் வந்தவர்கள் தஞ்சைப் பகுதியை கி. பி, 1676 முதல் 1855 வரையிலும் ஆட்சி செய்துள்ளனர். அவ்வேந்தர்களுள் ஒருவர் சரபோசி மன்னர்.

1. Descriptive Catalogues Vol. I to IV

சரபோசி கலைச்செல்வர்; பன்மொழிப் புலமையாளர்; அறம்பேணும் ஆர்வலர். அவரே தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தை நிறுவியவர். அவர் அதனை நிறுவுதற்கு நேர்ந்ததொரு தூண்டுதலை அறிவோம்.

சரபோசி மன்னர் ஒருமுறை காசிக்குச் சென்ருர். சென்றவர், கல்கத்தாவில் இருந்த ஆங்கில அரசின் அரசப் பேராளரைக் கண்டு உரையாடினர். அரசப் பேராளர் திருக்குறளை ஆங்கிலத்தில் கற்று அதன்மேல் ஆர்வம் கொண்டிருந்தார். தமிழ்நாட்டுப் பகுதியில் வாழும் அரசர் சரபோசி திருக்குறளை அறிந்திருப்பார் என்று எண்ணினர். தமிழில் அதனைக் கேட்க விரும்பினர். அவற்றுள் சிலவற்றைச் சொல்லுமாறு விரும்பினர். அதுகாறும் சரபோசி திருக்குறளைப் பற்றி அறிந்ததில்லை தமிழ்மொழி பற்றியும் அக்கறை காட்டியதும் இல்லை. நாட்டால் அயலார் போலவே மொழியாலும் அயலாராகவே இருந்தார். வடமொழி, மராத்தி மொழிப் புலவர்களையே ஆதரித்து வந்தார். அவர்களையே உடனழைத்தும் சென்றிருந்தார். ஆகலின் அரசப் பேராளர் வினவுதல் அவர் நெஞ்சில் ஆழத்தைத்தது. தாம் ஆட்சி செய்துவரும் மண்ணில் வழங்கும் மொழியைப் பற்றி எண்ணிப்பாராத தவற்றை உணர்ந்தார். அருகில் தம்முடன் இருந்த புலவர்களைக் கொண்டும் அரசப் பேராளர்க்கு விளக்கம் தர இயலவில்லை. ஆனல் திறமையாக "என்னுடைய புத்தக சாலையில் இதைப் போல ஆயிரக் கணக்கான தமிழ் நூல்கள் இருக்கின்றன. ஆனல் எல்லாவற்றையும் நான் தெரிந்துவைப்பது முடியாதசெயல். நான் ஊர்போய்ச் சேர்ந்ததும் அப்புத்தகத்தை அனுப்புகிறேன்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டார்.

தஞ்சாவூருக்கு வந்ததும் தமிழ்ச் சுவடிகளின்மேல் கருத்துச் செலுத்தினர் கிடைக்கும் சுவடிகளை எல்லாம் விலைகொடுத்து வாங்கினர். வறிய புலவர்களெல்லாம் வாய்ப்பாகக் கருதித் தத்தம் வீட்டில் முடங்கிக் கிடந்த சுவடிகளைக் கொடுத்து விலை பெற்றனர். புதிதாகவும் சுவடிகளை எழுதிக் குவித்தனர். சுவடிகளின் விலையும் ஏறியது. சுவடிகளின் எண்ணிக்கையும் பெருகியது.

சுவடிகளை ஒழுங்குபடுத்தி வைக்கத் தமிழ் புலமையாளர்கள் வேண்டுமே! அதனால் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், காரைக்குறிச்சி வேலாயுத உபாத்தியாயர், திருவேங்கடத்தா பிள்ளை, சுப்பராயக் கவிராயர், வேங்கடாசலம் பிள்ளை முதலியோரை அமர்த்தினர்.

முதற்கண் தக்க புலவர்கள் இல்லாமையால் நூலின் பெயரைக்கூட அவர்கள் செவ்வையாக எழுதி வைக்கவில்லை [1] 'நாலடியார்' என்பதொரு நூல் என்பதும் தெரியாமல், 'சிவமயம் நாலடியார்' 'கணபதி துணை நாலடியார்' 'ராம ஜயம் நாலடியார்' 'நன்றாக குருவாழ்க குருவே துணை நாலடியார்' என்றெல்லாம் பட்டியல் எழுதியிருந்தார்களாம். 'இத்தனை நாலடியாரா?' என்று அறியாதவர்களும் வியப்புற்றனராம்! ஆனால், தஞ்சையில் நீதிபதியாக இருந்த பர்னல்துரை என்பவர் இச்சுவடிப் பட்டியல் கண்டு வருந்தினார். ஒழுங்கான பட்டியல் ஒன்று அமைக்கச் செய்தார். சுவடிகளைக் கடிதத்தில் படி எடுக்கவும் ஏற்பாடு செய்தார். ஆனால் அவர் அக்கண்காணிப்பைத் தொடங்குமுன்னரே எண்ணற்ற சுவடிகள் கட்டிக் காப்பாரின்றிக் கைகடந்து போயின. அவற்றையும் ஒழுங்கு செய்தார் பர்னல்துரை.

சரசுவதி மகால் நூல் நிலையத்தில் பல்வேறு மொழி நூல் சுவடிகளும், கலை நூல் சுவடிகளும் பல்லாயிரம் உள்ளன. ஆனால் பழந்தமிழ்ச் சுவடிகள் ஆங்கே விரல்விட்டு எண்ணக்கூடியனவாகவே உள்ளன எவ்வளவுதான் ஆர்வம் கொண்டாலும், எவ்வளவுதான் செலவிட்டாலும் அவ்வத் துறையில் புலமை மிக்கார்க்கே அவ்வவற்றின அருமை புலப்படுவதாம்! டாக்டர் சாமிநாதையர் நூல் நிலையச் செல்வங்கள் 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி போல்' சேர்க்கப் பெற்றவை! அதன் மாண்பு, அப்பெருமகனார் கொண்டிருந்த.

1. புதியதும் பழையதும் பக். 50

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்னும் கொள்கை மாண்பு!

சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இருக்கும் பழந் தமிழ்ச் சுவடிகளாக அறியப் பெறுவன வருமாறு:

தொல்காப்பியச் சுவடிகள் 8. (மூலம் முழுமையானது ஒன்றே; எஞ்சியவை சிதைவுகளும், குறைச் சுவடிகளுமே யாம்) திருமுருகாற்றுப் படை சுவடி 2. சிலப்பதிகாரம் சுவடி 1. சிந்தாமணி சுவடி 8 திருக்குறள் சுவடி 9, 'நாலடியார் உரை வளம்', 'இலக்கண விளக்கம்' முதலாக இப் பொழுது வெளிவரும் நூல்கள் பயன்மிக்கன. நூல் நிலையத்தைப் போற்றும் மாண்பு, எடுத்துக்காட்டாக இலங்குகின்றது! அதனுள்ளே நுழைந்ததும் சரபோசியின் மேதகைமை காண்பாரை வயப்படுத்திக் கட்டுண்ணச் செய்தல் ஒருதலை!

ரு. மதுரைத் தமிழ்ச் சங்கம்

பால்வண்ணநத்தம் குறுநில மன்னர் பொ. பாண்டித் துரைத் தேவர் அவர் மதுரையில் ஒரு சொற்பொழிவாற்ற வந்தபோது திருக்குறளும் கம்பராமாயணமும் வேண்டியிருந்தன. அவற்றை எவரிடமிருந்தும் பெறமுடியாமல் புது மண்டபப் புத்தகக் கடையில் இருந்தே விலைக்குப் பெற வேண்டி இருந்தது. அந்நிலை அவரை வருத்தியது. "தமிழ்ச் சங்கம் இருந்து தமிழ் ஆய்ந்த மதுரையில் இந்நிலை இருக்கிறதே! தமிழ் மொழியின் தளர்நிலைதான் என்னே!" என இரங்கினார். அவ்விரக்கம் ஓயாமல் ஒழியாமல் வருத்திற்று.

பாண்டித்துரைத் தேவர் புலமையாளர் வழியில் வந்தவர் அவர் தந்தையார் பொன்னுசாமித் தேவர் புலவர் புலவராய் விளங்கியவர் பாண்டித்துரைத் தேவரும் தமிழும் ஆங்கிலமும் தெளிந்து கற்றவர். அழகர்ராசு, சதாவதானம் முத்துசாமி ஐயங்கார், பழனிக் குமாரத்தம்பிரான் மதுரை இராமசாமிப் பிள்ளை ஆகியோரிடம் தமிழ்

வளம் பெற்றார். வேங்கடேசுவர சாத்திரி என்பார் வழியே ஆங்கிலத் திறம் பெற்றார். பாடும் புலமையும், ஆயும் திறமும், நாவன்மையும், புலவரைப் போற்றும் புகழும ஒருங்கே கொண்டார். இத்தகையர் கொண்ட மனவுளேவு வறிதே போகவில்லை.

1901 ஆம் ஆண்டு மேத் திங்கள் 21, 22, 23-ஆம் நாள்களில் மதுரையில் சென்னை மாகாண அரசியல் மாநாடு கூடியது. பெருமைமிகு பி. அனந்தாசார்லு தலைமை தாங்கினார். பாண்டித்துரைத் தேவர் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். மூன்று நாள் அம்மாநாடு நடந்தது. அதன் முடிவில் பாண்டித்துரைத் தேவர், தமிழ் வளர்ச்சி பெருகியிருந்த மதுரை மாநகரின் பழம் பெருமைகளையும், அதன் வளர்ச்சி குன்றிய தற்கால நிலையையும் எடுத்துக் கூறித் தமிழ்மொழி நிலைபெற்று வளர்வதற்குச் சங்கம் ஒன்று வேண்டுவதன் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். மறுநாள் சேதுபதி உயர்பள்ளி மண்டபத்தில் கூடவிருக்கும் பேரவைக்கு, மாநாட்டுக்கு வந்த பெருமக்களும் பொது மக்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார். அவ்வாறே 1901 மேத்திங்கள் 24 ஆம் நாள் பேரவை கூடியது. சங்கம் அமைக்கும் திட்டம் உருவாகியது. முன்னேற்பாடுகள் உடனே தொடங்கப் பெற்றன.

1901 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 14 ஆம் நாள் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தொடங்கியது. புலவர்களும், புரவலர்களும், பொதுமக்களும் திரளாகக் கூடியிருந்தனர். பாற்கர சேதுபதி வேந்தர் தம் அரசியல் சுற்றம் சூழ வந்திருந்தார். உ. வே. சாமிநாத ஐயர், இரா. இராகவ ஐயங்கார், வை. மு. சடகோப ராமானுசாச்சாரியார், சோழவந்தான் அரசஞ்சண்முகனார், திருமயிலை சண்முகம் பிள்ளை, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், பரிதிமாற் கலைஞர் முதலாய புலவர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தக சாலை, நூலாராயச்சிச் சாலை முதலியனவும் சங்கச் சார்பில் தனித் தனியே தொடங்கப் பெற்றன. மூன்று நாட்கள்

தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது. திரு. நாராயண ஐயங்கார் செந்தமிழ்க் கலாசாலைத் தலைமையாசிரியராகவும், இரா. இராகவ ஐயங்கார் நூற்பதிப்பு ஆராய்ச்சித் துறைகளின் தலைவராகவும் நியமனம்பெற்றனர். பின்னர் மதுரை வடக்குவெளி வீதியில் உள்ள தம் மாளிகையைத் தமிழ்ச் சங்கத்துக்கெனப் பாண்டித்துரைத் தேவர் வழங்கினார். தமிழ்ச் சங்கப் பதிப்புக்கெனச் சிறந்த அச்சுக்கூடம் ஒன்று நிறுவப் பெற்றது. இலக்கண இலக்கிய ஆராய்ச்சி சிறந்து விளங்கச் 'செந்தமிழ்' என்னும் திங்களிதழ் தொடங்கப் பெற்றது. அதன் ஆசிரியராக இரா இராகவ ஐயங்கார் அமர்ந்தார். சேற்றூர் சுப்பிரமணிய கவிராயர் நூற்பதிப் பாசிரியர் ஆனார். ஏடுகள் தொகுப்பதும், அவற்றை ஆய்ந்து வெளியிடுவதும் இவர்கள் கடமைகள் ஆயின நாட்டில் இருந்த புலவர்களும், புரவலர்களும் சங்கப் பணியில் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். ஆயிரக்கணக்கில் ஏடுகள் தொகுக்கப்பெற்றன; ஆராயப்பெற்றன; செந்தமிழ் இதழ் வழியாக வெளியிடப்பெற்றன. இவ்வாறு ஒரே வேளையில் பலப்பல துறைகளில் தமிழ் வளர்த்த பெருமை சங்கத்திற்குண்டு அரிய பலநூல்கள் அழிந்துபடாவண்ணம் காப்பாற்றிய பெருமையும் அதற்கு உண்டு.

செந்தமிழ் முதல் இதழிலேயே ஐந்திணை ஐம்பதும், நேமிநாதமும் ஆய்ந்து வெளிவரத்தொடங்கின. கல்வெட்டு வரலாறு இவற்றின் களஞ்சியமாகச் செந்தமிழ்த் தொகுதிகள் விளங்கின ஆராய்ச்சிக் கருவூலம் என்னுமாறு அரிய கட்டுரைகள் வெளிப்பட்டன அறிவியல் துறைக்கு ஆக்கம் மிகச் செய்தது; சமய ஆராய்ச்சியிலும் தலைநின்றது. இவ்வாறு தமிழகத்தில் புதியதோர் விழிப்புணர்ச்சியைச் செந்தமிழ் உண்டாக்கிற்று. அதன் நாற்பதாம் தொகுதிவரை அமைந்த கட்டுரைகளை அடைவு செய்யின் தமிழ் அன்னையின் வாடாமலர் மாலையாக என்றும் விளங்குதல் திண்ணம்.

பாண்டித்துரைத் தேவர் தம்கண்ணினும், கண்ணின் மணியினும் பெரிதெனச் சங்க வளர்ச்சியில் ஈடுபட்டார். அவர் 1911 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். அதற்கு மேல் எட்டு ஆண்டுகளில் பெரும்பாலான சுவடிகள் தீக்கு

இரையாயின. சங்கத்தைப் பழையநிலைக்குக் கொண்டு வருதற்குப் பலர் முயன்றனர். அம்முயற்சி ஈடு செய்ய இயலாத இழப்பை ஈடு செய்தற்கு ஆகுமோ? விழாக்கள் நிகழ்ந்தன; வெளியீடுகளும் தொடர்ந்தன; பழஞ்சுவடிகள் வெளியேறின; மீண்டும் வராமல் ஒழிந்தன; இருந்த சுவடிகளும் சிதைந்தன! இருப்பவையும் கண்காட்சிப் பொருளாம் அளவில் அமைந்துள்ளன!

சௌரிப் பெருமாள் அரங்கனார் குறுந்தொகைப் பதிப்பு, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை ஆகியவர்களின் நற்றிணைப் பதிப்பு, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் புறநானூற்றுப் பதிப்பு, கம்பர்விலாசம் அ. இராசகோபாலையங்கார் அகநானூற்றுப் பதிப்பு, சைவ சித்தாந்த சமாசத்தின் சங்க இலக்கியப் பதிப்பு ஆகியவற்றுக்கும் பிறவற்றுக்கும் மதுரைச் சங்கச் சுவடிகள் பயன்பட்டுள்ளன.

சங்கம் தோன்றுவதற்கு முன்னரே பாண்டித்துரைத் தேவர் டாக்டர் சாமிநாதையர் பதிப்புக்கு உதவினார்.

"பயன்சிறிய தேனும் பனையளவாக் கொள்வர்
நயன்தெரிவோர் என்றவுண்மை நாடி - முயன்றிதுபோ
தைந்நூறு ரூபா அனுப்பினனஃ தேற்றருள்வாய்
மெய்ந்நூல் துரீஇயொழுகும் வித்தகா - மைந்நூறி
ஆமாலை யிற்சுவையுண் டாக்கும் புறப்பொருள்வெண்
பாமாலை யச்சிற் பதிவுசெயும் - மாமுயற்சி
ஊறிகந்து முற்றல் உறுவிப்பான்"

வேண்டினார். மணிமேகலையின் முதற் பதிப்புக்கும் பணம் உதவினார் பாண்டித்துரையார். சங்கம் தோற்றுவித்த பின்னர் வெளியிட்ட நூல்கள்பல. அவற்றுள் யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை தமிழ்ச்சொல்லகராதியை மூன்று பாகங்களாக வெளியிட்டதும், பச்சையப்பன் கல்லூரித்

தமிழ்ப்பேராசிரியர் அ.சிங்காரவேலு முதலியார் தொகுத்த கலைக் களஞ்சியம் போன்ற அபிதான சிந்தாமணியை வெளியிட்டதும் சங்கத்தின் பணிக்குப் பெருமையளிப்பனவாம்.

தமிழ்ச் சங்கப் பாண்டியன் புத்தகசாலையில் இப்பொழுது 5177 நூல்கள் உள்ளன. மிக அருமையான தமிழ் நூல்களும் ஆங்கில நூல்களும் உள பல்லாயிரக் கணக்கில் இருந்த ஏட்டுச் சுவடிகளில் இப்பொழுது 207 சுவடிகளே உள்ளன. அவற்றுள்

தொல்காப்பியச் சுவடிகள் - 6 உள்ளன. மற்றவை பிற்காலத்தவை. அவை:

நன்னூல்	சுவடிகள்	-	6
இறையனார் களவியல்	,,	-	7
புறப்பொருள் வெண்பாமாலை	,,	-	1
இலக்கண விளக்கம்	,,	-	3
வீரசோழியம்	,,	-	1
நேமிநாதம்	,,	-	2
யாப்பருங் கலக்காரிகை	,,	-	1
தண்டியலங்காரம்	,,	-	1
திருக்குறள்	,,	-	4
நாலடியார் பதுமனார் உரை	,,	-	4
இராமாயணம்	,,	-	9

எஞ்சியவை பல்வேறு நிகண்டுகள், பாட்டியல்கள், புராணங்கள், மருத்துவ, சமய நூல் சுவடிகள் ஆகும்,

ஏடுகள் தொகுத்த இம்மூன்று அமைப்புகளை அல்லாமல் தனிப்பட்ட சிலரும் ஆராய்ச்சி நோக்கில் தொகுப்பதையும் படி எடுப்பதையும் இனிய பொழுது போக்காகக் கொண்டிருந்தனர். அவர்களுள், அய்யம்பேட்டை முத்துரத்தின முதலியார், மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை, காவல்துறை ஆணையர் பவானந்தம் பிள்ளை, சேலம் இராமசாமி முதலியார் ஆகிய பெருமக்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ச. அய்யம்பேட்டை முத்துரத்தின முதலியார்

சௌரிப்பெருமாள் அரங்கனாரை மதுரையில் சென்று தமிழ் பயில ஏவியவரும், அவர்க்கு வேண்டுங்கால் வேண்டுவ உதவியவரும் இவரே ஆவர். இவர் தம் தூண்டுதலே, சௌரிப் பெருமாள் அரங்கனாரைச் சென்னைக்கு ஏவிக் குறுந்தொகைச் சுவடியை அரசினர் ஓலைச் சுவடி நிலையத்தில் கண்டு படியெடுக்க ஏவியது. சென்றவர் படியெடுத்து மீண்டு வந்து ஆராய்ந்ததில் பிழைகள் பல பொதிந்திருக்கக் கண்டார். ஒரு செய்யுள் முற்றும் விடுபட்டிருக்கவும் கண்டார். ஆகலின் முத்துரத்தினர் அரியதோர் குறுந்தொகைப் படியை வருவித்துத் தந்தார். அன்றியும் அகநானூறு, நற்றிணை, பரிபாடல் முதலிய தொகை நூல் சுவடிகளையும், பிற நூல்களையும் வழங்கினார். "அவர் தம் உதவிகள் இலவேல் இந்நூலை உரையுடன் பதிப்பித்தலில் இன்னும் பேரிடர்ப் பட்டிருப்பேன்" என அரங்கனார் எழுதுகின்றார் இடர்தீர ஏடுதந்துதவிய ஏந்தல் முத்துரத்தினர் என்பது இதனால் விளங்கும்.

"செந்தமிழ் நூலாராய்ச்சியே பொழுது போக்காகக் கொண்டு அரிய பெரிய தமிழ் நூல்களைப் பெற்றுத் தம் கையாலேயே பிரதி செய்துகொண்டு உடையவரிடம் கொடுக்கும் உயர்ந்தாரும் என்னுருயிரன்பினருமான மணக்கால் அய்யம்பேட்டை செந்தமிழ்விலாசம் ஸ்ரீமான் S. முத்துரத்தின முதலியார்" என்று அரங்கனார் தம் குறுந்தொகைப் பதிப்பின் உதவியுரைத்தல் பகுதியில் இப்பெருமகனாரைப் பாராட்டியுள்ளார். இவர் எழுதிய குறுந்தொகைக் கடிதச் சுவடி சமாசத்தினரின் சங்க இலக்கியப் பதிப்புக்கு உதவியது.

முத்துரத்தின முதலியார் தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையப் புலவராகவும், பதிப்பாசிரியராகவும் விளங்கியவர். இவரும் புலவர் எம். ஆர். கந்தசாமி பிள்ளை அவர்களும் பதிப்பித்துள்ள, 'நாலடியார் உரைவளம்' போற்றத்

தக்க பதிப்பாகும் அரிய அடிக்குறிப்புகளையும், சிறப்புக் குறிப்புகளையும் தன்னகத்துக் கொண்டது அப்பதிப்பு. சரசுவதி மகால் 59 ஆவது எண் வெளியீடாக 1953 இல் வெளிவந்துள்ளது நாலடியார் உரைவளம்.

ரு. மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை

நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரின் ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளை அவர்தம் திருமகனார் இச் சோமசுந்தரம் பிள்ளை ஆவர்.

சோமசுந்தரம் பிள்ளை தம் தந்தையாரிடம் தமிழ் பயின்றார். அவரை இளமையிலேயே இழந்தமையால் மேற் படிப்புப் படிக்க இயலாராய் அமைந்தார் அந்நிலையில் தந்தையார் பணிசெய்த மன்னார்குடிக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியப் பணி பெற்றார். ஆனால் அக்கல்லூரி எடுக்கப்பட்டு விடவே, சோமசுந்தரனார் வேலையும் போயிற்று.

சோமசுந்தரனார் காவல் துறையில் துணை ஆய்வாளராக அமர்ந்தார்; ஆயினும் தாம் கொண்டிருந்த தமிழ் அவையை மறந்தார் அல்லர்; தமிழ் ஓதுதலைத் துறந்தாரும் அல்லர். ஒருகால் ஒரு கொள்ளைக் கூட்டத்தைப் பற்றச் சென்று போராடி வெற்றி கொண்டார்; வெட்டுக் காயங்களும் கொண்டார்; அப்பொழுது சட்டைப் பையில் இருந்த தொல்காப்பிய நூலைத் தவறவிட்டு விட்டார். மருத்துவமனையில் கிடந்தபோதும அதனை நினைத்தே வருந்தினார். தேடிக்கொணர்ந்து தந்த பின்னரே அமைதியுற்றார்.

தொல்காப்பியப் புலமையில் தலை நின்றார் சோமசுந்தரனார் பாட்டு, தொகைகள் வெளிப்படாத காலத்தில் தாமே முயன்று அவற்றைப் படியெடுத்துப் பயின்றார். அரிய ஆராய்ச்சியும் செய்தார் தம் கையால் எழுதிய அகநானூற்றையும், நற்றிணையையும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்க்கு வழங்கினார். சைவசித்தாந்த சமாசம் வெளியிட்ட சங்க இலக்கியப்பதிப்புக்கு அவர் எழுதிய புறநானூறு

மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை ஆகியவற்றின் கடிதப் படிகள் பயன்பட்டன. அந்நாளைப் பெரும்புலவர்களுக்கெல்லாம் தோழராக விளங்கிய சோமசுந்தரம் பிள்ளையின் புலமையை அறிஞர் பா. வே. மாணிக்க நாயகர் பாராட்டுகிறார்:

[1]"பொதிய மலையில் அகத்தியரைக் காணச் சென்றேன்; அங்கு அவருடைய அடிச்சுவட்டைக்கூட கண்டிலேன். எதிர்பாராத இடத்திலே எதிர்பாராத உருவத்திலே தொல்காப்பியரைக் கண்டேன்."

காவல்துறையில் பணிசெய்து கொண்டு கன்னித் தமிழின் காவலராகவும் விளங்கிய இத்தகைய பெருமக்கள் என்றும் போற்றுதற்குரியவராவர்.

௬. சரவண பவானந்தம் பிள்ளை

இவரும் காவல் துறையில் பணி செய்தவரே, 1889 ஆம் ஆண்டில் காவல்துறையில் சேர்ந்த இவர் 1918 ஆம் ஆண்டில் துணை ஆணையர் (Deputy Commissioner) பதவியைப் பெற்றார். இவர் நாட்டுக்குச் செய்த நற்பணியைக் கருதி வாழ்நாள் அளவும் ஆண்டுதோறும் அறுநூறு ரூபா நிரந்தர வருவாய் தரும் நிலக்கொடையொன்று 1922 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12 ஆம் நாள் அரசினரால் வழங்கப் பெற்றார்.

மாண்புமிகு வேல்சு இளவரசரும் இளவரசியாரும் 1906 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தபோதும், மிண்டோ பெருமகனாரும், கார்டிஞ்சு பெருமகனாரும் சென்னையில் தங்கியிருந்தபோதும் இவரே மெய்காப்பாளராக இருந்து சிறப்புப் பெற்றார். சென்னை 'செரீப்'பாகவும் விளங்கினார்.

1. தமிழ்ப் புலவர் வரிசை தொகுதி 10, பக் 128.

[1] கடமைச் சிறப்பால் விருதும் பாராட்டும் பெற்றார். 'திவான் பகதூர்' என்னும் சிறப்புப் பட்டம் ஆங்கில அரசு வழங்கத் திகழ்ந்தார்.

இவர் பங்கு கொண்ட அமைப்புகள் மிகப்பல. சென்னைப் பல்கலைக் கழக நூல் வெளியீட்டுக் குழு, சொற்றொடராக்கக் குழு ஆகியவற்றின் உறுப்பினராக இருந்தார். தென்னிந்திய ஆராய்ச்சிக் கழகத் துணைத் தலைவராக இருந்தார். இலண்டன் மாநகர அரசியல் வரலாற்றுத் துறைக் குழுவிலும், ஆசிய அரசியல் சங்கக் குழுவிலும் உறுப்பினராகப் பணி புரிந்தார்.

கல்விச் சிறப்பில் மேலோங்கிய இவர் சட்டத்தேர்வுக்குப் பயன்படத்தக்க அரிய நூல்கள் பலவற்றை ஆராய்ந்து எழுதிப் பதிப்பித்தார். 'ஒப்புரவுமிக்க காவல் அலுவலர்' என்னும் சீர்மை பெற்றார். இவ்வெல்லாவற்றிலும் மேலாகத் தமிழ் நூல்களும், சுவடிகளும் தொகுப்பதும், அவற்றை ஆராய்வதும், வெளியிடுவதும தம் இனிய பணியாகக் கொண்டார்.

இவர், தம் பெயரால் 'பவானந்தர் கழகம்' என ஒரு கழகத்தை நிறுவினார். அதன் வளர்ச்சிக்காகவும், நூல் வெளியீட்டுக்காகவும் தாம் அரிதின் ஈட்டிய பெரும் பொருளை 'இறுதிமுறி' வாயிலாகப் படைத்தார். அக்கழகச் சார்பில் நிறுவப்பட்ட நூல் நிலையத்தில் பல்லாயிரம் நூல்கள் - ஏட்டு வடிவிலும், கையெழுத்திலும், அச்சிலும் அமைந்தவை - உள்ளன.

1. சரவண பவானந்தர் திரு வி. க. வுக்கு அன்பர். தேனாம்பேட்டையில் சிவசங்கர முதலியார் என்பார், 'கோயிலில பலியிடுதலை' அன்பு முறையில் கடிந்தார். ஊர் சீறியது சிவசங்கரர் வீட்டில் கற்கள் விழுந்தன; பாம்புகள் விழுந்தன; அம்மன் தெய்வம் சிலர்மேல் தலை விரித்தாடியது திரு. வி. க. பவானந்தருக்கு முடங்கல் தீட்டினார். "வந்தார் பவானந்தம பிள்ளை. மருளாடிய தெய்வங்கள் எல்லாம் மலையேறின; தலைகால் தெரியாது குதித்த வீரர்கள் எல்லாம் புற்றுப் பாம்பானார்கள்; குழப்பம் குலைந்தது; அமைதி நிலவிற்று"

பவானந்தர் செயல் மாண்புக்கு இஃதொரு சான்று.

திரு வி க வாழ்க்கைக் குறிப்புகள் 920 - 21.

தொல்காப்பியம் பொருளதிகாரம் (நச்சினார்க்கினிய ருரை, பேராசிரியர் உரை) யாப்பருங்கல விருத்தியுரை, இறையனாரகப் பொருளுரை, பேரகத்தியத் திரட்டு, நன னூல் காண்டிகையுரை, தமிழகராதி ஆகியவற்றை வெளி யிட்டார். இவர் அமைத்த கழக வழியாக இவர் காலத்திற் குப் பின்னர் வெளிவந்த நூல்களும் பல. அவற்றுள் கா. ர. கோவிந்தராச முதலியார் பதிப்பித்த வீரசோழியம் குறிப் பிடத்தக்கதாகும்

பவானந்தர் பதிப்பித்தவற்றுள் தனிச்சிறப்பு வாய்ந் தது யாப்பருங்கல விருத்தியாகும். அதன் முதற்பாகம் 1916 ஆம் ஆண்டும், இரண்டாம்பாகம் 1917 ஆம் ஆண்டும் வெளிவந்தன. அவ்வெளியீட்டால் தமிழ் இலக்கண இலக் கியப் பரப்பு வெளிப்பட்டது போல எவ்வெளியீட்டாலும் புலப்பட்டிலது. அழிந்துபோன நூல்களின் ஒருசில பாடல் களையேனும், குறிப்புகளையேனும், பெயர்களையேனும் அந் நூல் போல வேறெந்நூலும் காட்டிற்றில. பவானந்தர் பதிப்பே யாப்பருங்கல விருத்தியின் முதற் பதிப்பாகும். ஆதலால் அந்நூல் நின்று நிலவும் காலமெல்லாம் பவானந் தர் அதன் புகழொடும் கலந்து நிற்பார் என்பது உறுதி.

'பவானந்தர் கழகம்' ஆராய்ச்சியாளர்க்கு அணிநிழல் தந்தது; அரவணைப்புச் செய்தது; பிறர் வெளியீட்டுக்கும் பெருந்துணை புரிந்தது. சைவசித்தாந்த சமாசத்தின் சங்க இலக்கிய வெளியீட்டுக்கு அகநானூறு, கலித்தொகை, நற் றிணை, தொல்பொருள் நச். பேரா. ஆகிய கடிதச் சுவடி களையும், ஏட்டுச் சுவடிகளையும் வழங்கியது. இத்தகைய அரிய பெரிய சுவடிகளைக் கொண்ட பவானந்தர் கழகம் பணியற்று முடங்கியமை தமிழர் தவக்குறையேயாம்! இப் பொழுதிலேனும் தக்கார் ஈடுபட்டுச் செயலாற்றினும் தகுதி மிக்க நூல்கள் பல தமிழ்நாட்டின் செல்வமாக விளங்குதல் கூடும்! அந்நற்பேறு வாய்க்குமாக!

ஏ. சேலம் இராமசாமி முதலியார்

ஏடு தொகுத்த ஏந்தல்களுள் ஒருவர் சேலம் இராமசாமி முதலியார். அவர்களுள் ஒருவகையால் ஏற்றமிக்கவரும் ஆவார். சிறுநூல் பரப்பிலேயே சிக்கிக் கிடந்த பெரும் பேராசிரியர் சாமிநாதையரைப் பழந்தமிழ் நூற்பக்கம் பார்க்கத் தூண்டியவர் அவரே! [1]"அவருடைய தூண்டுதல் இராவிட்டால் சிந்தாமணியை நான் அச்சிடுவது எங்கே? சங்க நூல்களின் பெருமையை உணர்ந்து இன்புற்று வெளிப்படுத்தும் முயற்சிக்கும எனக்கும் என்ன சம்பந்தம்?" என்றெழுதும் ஐயரின் மணிமொழிகள் இராமசாமி முதலியாரின் தூண்டுதலை விளக்கும் சீரிய சான்றாம்.

சேலம் இராமசாமிமுதலியார் தந்தையார் கோபால் சாமி முதலியார்; பெரு நிலக்கிழார். அக்காலத்தில் இந்தியர்க்கு மிக உயர்ந்த பதவியாக இருந்த 'தாசில்தார்' பதவியை அடைந்தவர். தம் மைந்தரும் பதவியால் உயர்ந்து விளங்க ஆர்வம் கொண்டவர்.

இராமசாமி முதலியார் இளங்கலைத் தேர்வில் (பி.ஏ) மாநில முதன்மை பெற்றுத் தேறினார். முதுகலைப் பட்டமும் பெற்றார். சட்டக் கல்வித் தேர்ச்சியிலும் மாநில முதன்மை எய்தினார். 1876 ஆம் ஆண்டிலே மாவட்ட 'முனிசீப்' ஆனார். அவ்வேலையை ஆறு ஆண்டுகளின் பின்னர் விடுத்து. உயர் மன்ற வழக்கறிஞராகப் பணி புரிந்தார். 'இந்திய சட்ட இதழ்' என்னும் இதழின் ஆசிரியராக இருந்தார். பட்ட வகுப்புகளின் தமிழ்த் தேர்வாளராகவும் விளங்கினார். இங்கிலாந்து சென்று இந்திய மக்கள் உயர்வுக்காகப் பாடுபட்டார். விடுதலை இயக்கத்திலும் ஆர்வம் காட்டினார்.

காஞ்சிபுரம் பெரும்புலவர் சபாபதி முதலியார் மகனார் நாகலிங்க முதலியாரிடம் தமிழ் பயின்றார். இராமசாமியார் ஆங்கிலத்திலும், ஆங்கிலவர் வியந்து பாராட்டும்

1. என் சரித்திரம், பக். 969.

திறம் பெற்ருர். தமிழ்ப் புலவர்கள் அனைவரும் பிற்காலச் சிற்றிலக்கியங்களிலேயே பொழுதைப் போக்குவதை அறிந்து உவர்ப்புற்ருர். அவர் இளங்கலை பயின்ற காலத்திலே சிந்தாமணியின் சிறப்பினை உணர்ந்தவர். ஆதலால், அத்தகைய பழைய இலக்கியங்களைப் படிப்பாரும், பாடம் சொல்வாரும் இலரே என ஏங்கினுர். பழந்தமிழ் நூல்களைப் பாடஞ்சொல்வாரைத் தேடி அலமந்தார். இந்நிலையில் தற்செயலாகப் பெரும் பேராசிரியர் சாமிநாதையர் வந்து முதலியாரைக் கண்டார். அக்காட்சி ஐயரைப் புதுநெறியில் - புதிய உலகில் - புகுத்தியது. அதனை அவரே கூறுகிருர். சங்கத் தமிழ் உணர்வைத் தட்டி எழுப்பி அதிலேயே தம் வாழ்வை முழுதுறப் பதிப்பித்துக் கொள்ளுமாறு ஐயரைத் தூண்டிய நிகழ்ச்சி அஃதாலின் அதனை நிகழ்ந்தது நிகழ்ந்தவாறே அறிதல் நன்ரும்.

(திருவாவடுதுறை) ஆதீனத் தலைவர் "இப்போது அங்கே (கும்பகோணம்) முன்சீபாக வந்திருக்கும் முதலியார் தமிழில் நல்ல பயிற்சியுடையவரென்று தோன்றுகிறது. அவரை நீங்கள் போய்ப் பார்த்து வரவேண்டும்" என்று எனக்குச் சொல்லி அனுப்பினுர்.

"அவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் முதலில் என்னிடம் இல்லை; சுப்பிரமணிய தேசிகர் சொல்லியனுப்பினமையின் நான் சென்று பார்க்கலாம் என்று ஒருநாள் புறப்பட்டேன் அன்று வியாழக்கிழமை (21—10—1880) அவர் இருந்த வீட்டை அடைந்து அவரைக் கண்டேன். நான் காலேஜில் இருப்பதையும் மடத்தில் படித்தவன் என்பதையும் சொன்னேன். அவர் யாரோ அயலாரிடம் பாராமுகமாகப் பேசுவது போலவே பேசினுர். என்னேடு மிக்க விருப்பத்துடன் பேசுவதாகப் புலப்படவில்லை. 'அதிகாரப் பதவியினுல் இப்படி இருக்கிருர். தமிழ் படித்தவராக இருந்தால் இப்படியா நம்மிடம் பேசுவார்?' என்று நான் எண்ணலானேன்.

"நீங்கள் யாரிடம் பாடம் கேட்டீர்கள்"? என்று அவர் கேட்டார்.

"மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டேன்" என்றேன்.

பிள்ளையவர்கள் பெயரைக் கேட்டவுடன் அவரிடம் ஏதாவது கிளர்ச்சி உண்டாகுமென்று எதிர்பார்த்தேன். என்னுடைய உத்தியோகத்துக்காக என்னை மதிக்காவிட்டாலும் பிள்ளையவர்கள் மாணாக்கன் என்ற முறையிலாவது என்னிடம் மனம் கலந்து பேசலாமே. அவர் அப்படிப் பேச முன்வரவில்லை, கணக்காகவே பேசினார்.

பிள்ளையவர்கள் பெயரைக் கேட்டுப் புடைபெயர்ச்சியே இல்லாத இவராவது, தமிழில் அபிமானம் உடையவராக இருப்பதாவது! எல்லாம் பொய்யாக இருக்கும், என்று நான் தீர்மானம் செய்து கொண்டேன்.

அவர் கேள்வி கேட்பதை நிறுத்தவில்லை; என்ன என்ன பாடம் கேட்டிக்கிறீர்கள்? என்ற கேள்வி அடுத்தபடி அவரிடமிருந்து வந்தது. 'இதற்கு நாம் பதில் சொல்லும் வகையில் இவரைப் பிரமிக்கும்படி செய்து விடலாம்' என்ற நிச்சய புத்தியோடு நான் படித்த புஸ்தகங்களின் வரிசையை ஒப்பிக்கலானேன். குடந்தை யந்தாதி, மறைசை யந்தாதி, புகலூரந்தாதி, திருவரங்கத்தந்தாதி, அழகரந்தாதி, கம்பரந்தாதி, முல்லையந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ், சேக்கிழார் பிள்ளைத் தமிழ்.........' என்று சொல்லிக்கொண்டே போனேன். அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத் தமிழ்களில் மூப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் இப்படியே பிரபந்தங்களை அடுக்கினேன். அவர் முகத்தில் கடுகளவு வியப்புக்கூடத் தோன்றவில்லை.

'இதெல்லாம் படித்து என்ன பிரயோசனம்?' என்று திடீரென்று அவர் இடைமறித்துக் கூறினார். நான் மிக்க ஏமாற்றம் அடைந்தேன். 'இவர் இங்கிலீஷ் படித்து அதிலே

மோகங்கொண்டவராக இருக்கலாம். அதனால் தான் இப்படிச் சொல்கிறார், என்ற எண்ணம் எனக்கு உண்டா யிற்று. ஆனாலும் நான் விடவில்லை புராண வரிசையைத் தொடங்கினேன்.

'திருவிளையாடற் புராணம், திருநாகைக் காரோணப் புராணம், மாயூரப் புராணம், கந்தப் புராணம், பெரிய புராணம் குற்றாலப்புராணம்........'

அவர் பழைய படியே கற்சிலை போல இருந்தார்.

'நைடதம், பிரபுலிங்கலீலை, சிவஞானபோதம் சிவஞான சித்தியார் உரை......' என்னும் நூல்களின் பெயர் களைச் சொன்னேன். இலக்கண நூல்களை எடுத்துக் கூறி னேன், அப்பொழுதும் அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. 'அடடா! முக்கியமானவற்றையல்லவா மறந்துவிட்டோம்? அதை முதலிலேயே சொல்லியிருந்தால் வழிக்கு கொண்டு வந்திருக்கலாமே!'' என்ற உறுதியுடன் கம்பராமாயணம் முழுவதும் இரண்டு மூன்றுமுறை படித்திருக்கிறேன் பிள்ளை யவர்களிடமும் சில காண்டங்களைப் பாடம் கேட்டிருக் கிறேன் என்றேன் இராமசுவாமிமுதலியார் 'சரி, அவ்வளவு தானே?' என்று கேட்டார், எனக்கு மிகவும் அதிருப்தி ஏற் பட்டுவிட்டது 'கம்பராமாயணத்தில்கூடவா இவ்வளவு பராமுகம்! இவ்வளவு அசட்டை! என்ற நினைவே அதற்குக் காரணம் அதற்கு மேலே சொல்ல என்ன இருக்கிறது? ஆனால் அவர் என்னை விடுகிறவராக இல்லை மேலும் கேள்வி கேட்கலானார்.

"இந்தப் பிற்காலத்துப் புஸ்தகங்களெல்லாம் படித்தது சரிதான். பழைய நூல்களில் ஏதாவது படித்தது உண்டா?''

எனக்கு அவர் எதைக் கருதிக் கேட்டார் என்று தெரியவில்லை. 'பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களையே நான் படித்திருப்பதாக இவர் எண்ணிக் கொண்டாரோ? கந்தபுராணம் பெரிய புராணம் முதலியவைகள் எல்லாம் பழைய நூல்கள் அல்லவோ? கம்பராமாயணம்

பழைய நூல்தானே? பழைய நூலென்று இவர் வேறு எதைக் கருதுகிறார்?'' என்று யோசிக்கலானேன்.

'நான் சொன்னவற்றில் எவ்வளவோ பழைய நூல்கள் இருக்கின்றனவே!' என்று கேட்டேன்.

'அவைகளுக்கெல்லாம் மூலமான நூல்களைப் படித்திருக்கிறீர்களா?' என்று அவர் கேட்ட போதுதான் அவரிடம் ஏதோ சரக்கு இருக்கிறது என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று.

'தாங்கள் எந்த நூல்களை சொல்கிறீர்கள்' என்று தெரியவில்லையே?' என்றேன்.

'சீவக சிந்தாமணியை படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? சிலப்பதிகாரம் படித்திருக்கிறீர்களா?'

அவர் சொன்ன நூல்களை நான் படித்ததில்லை. [1]என்னுடைய ஆசிரியரே படித்ததில்லை புஸ்தகத்தைக் கூட நான் கண்ணால் பார்த்ததில்லை. ஆனாலும் இவ்வளவு புஸ்தகங்களைப் படித்ததாகச் சொன்னதை ஒரு பொருட்படுத்தாமல் எவையோ இரண்டு மூன்று நூல்களைப் படிக்கவில்லை என்பதைப் பிரமாதமாகச் சொல்ல வந்து விட்டாரே, என்ற நினைவோடு பெருமிதம் சேர்ந்துகொண்டது. 'புஸ்தகம் கிடைக்கவில்லை கிடைத்தால் அவைகளையும் படிக்கும் தைரியம் உண்டு' என்று கம்பீரமாக சொன்னேன்.

1. இது செவ்வியதன்று ஏனெனில் அவர் படியெடுத்த பத்துப்பாட்டு, சிலப்பதிகார, சிந்தாமணி, தொல். இளம. சுவடிகள் ஐயர் பதிப்புக்குக் கிடைத்துள்ளன. பொருநராற்றுப்படை வெயிலில் உலர்த்தியதை என் சரித்திரத்தில் கூறுகிறார். ஆனால், சிந்தாமணி சிலப்பதிகார நூல்களைப் பாடம் சொல்லியதில்லை எனலாம். ஐயர் சிந்தாமணியைப் பதிப்பித்ததையே கண்டித்தவர்களும் திருவாவடுதுறை மடத்தில் இருந்தனர் என்பதனால் இது விளங்கும்,

சாதரணமாகப் பேசிக் கொண்டு வந்த முதலியார் நிமிர்ந்து என்னை நன்றாக பார்த்தார். நான் புஸ்தகம் தருகிறேன். தந்தால் படித்துப் பாடம் சொல்வீர்களா? என்று கேட்டார்.

ஐயர் துணிவுடன் விடை கூறினார் அடுத்த ஞாயிற்றுக் கிழமை ஐயர், முதலியாரை மீண்டும் கண்டார், சிந்தாமணிச் சுவடியை வழங்கினார். அச்சுவடியைப்பெற்ற அருமையையும் முதலியார் உரைத்தார்.

"எனக்குச் சிந்தாமணீ முதலிய பழைய புஸ்தகங்களைப்படிக்க வேண்டுமென்ற ஆவல் மிகுதியாக இருந்தது. இந்தத் தேசத்தில் நான் சந்தித்த வித்துவான்களில் ஒருவராவது அவற்றைப் படித்ததாகவே தெரியவில்லை. ஏட்டுச் சுவடிகளும் கிடைக்கவில்லை. திருநெல்வேலிப் பக்கத்திலுள்ள கவிராயர்கள் வீட்டில் பிரதிகள் கிடைக்கலாம் என்று எண்ணி ஸ்ரீ வைகுண்டத்தில் முன்ஸீபாக இருந்த என் நண்பர் ஏ. இராமச்சந்திரையர் என்பவரிடம் விஷயத்தைச் சொல்லி வைத்திருந்தேன். அவர் யார் யாரையோ விசாரித்துப் பார்த்தார், ஒன்றும் கிடைக்கவில்லை.

"ஒரு சமயம் ஸ்ரீ வைகுண்டத்துக்கு அருகிலுள்ள ஓர் ஊரில் பரம்பரை வித்துவான்களாக இருந்த கவிராயர் குடும்பமொன்றில் உதித்த ஒருவர் ஒருவழக்கில் சாக்ஷியாக வந்தார். அவரை விசாரிக்கும் போது. அவர் கவிராயர் பரம்பரையைச் சேர்ந்தவரென்றும், அவருடைய முன்னோர்கள் பல நூல்களை இயற்றியிருக்கிறார்கள் என்றும் என் நண்பருக்குத் தெரியவந்தது, விசாரணையெல்லாம் முடிந்த பிறகு முன்ஸீப் அந்தச் சாட்சியைத் தனியே அழைத்து அவர் வீட்டில் ஏட்டுச் சுவடிகள் இருக்கின்றனவா என்று விசாரித்தார். அவர் இருக்கின்றன என்று சொல்லவே' சிந்தாமணிப் பிரதி இருந்தால் தேடி எடுத்துத் தரவேண்டும் என்று கூறினார், அதிகாரப் பதவியில் இருந்தமையால் அவர் முயற்சி பலித்தது. அந்தக் கவிராயர் சீவக சிந்தாமணிப் பிரதியைக் கொண்டு வந்து கொடுத்தார். அதற்கு

முப்பத்தைந்து ரூபாய் கொடுத்து வாங்கி எனக்கு அனுப்பினார், அதிலிருந்து காகிதத்திற் பிரதிபண்ணிய புஸ்தகம் இது"

இராமசாமி முதலியார் 'புதையல்' இருக்குமிடத்தை மட்டும் காட்டினார் அல்லர், புதையலையே எடுத்து வழங்கினார், பின்னர்ப் பதவியில் இருந்து விலகிச் சென்னைக்குச் சென்றார் ஆங்கிருந்த போது அறிஞர்கள் தொடர்பை ஐயருக்கு உண்டாக்கி வைத்தார், பதிப்பிக்கும் பணியின் போது தம் மாளிகையிலே தங்கும் வாய்ப்பை ஐயருக்கு வழங்கினார். வெளியீட்டுக்குப் பணவுதவியும் புரிந்தார். பிறர் அவ்வுதவி செய்யவும் தூண்டினார். ஏடுகளும் தொகுத்துத் தந்தார் அவ்வளவு தமிழ்க் காதல் முதலியாருக்கு!

இராமசாமி முதலியார் சாமிநாதையர் பதிப்புக்கு மணிமேகலைச் சுவடி, சிலப்பதிகாரச் சுவடி 2, சிந்தாமணிச் சுவடி மூன்று என ஆறு சுவடிகள் வழங்கினார். சி. வை தாமோதரம் பிள்ளை பதிப்புக்கும் பலசுவடிகளை வழங்கினார்! பழந்தமிழ்நூல்களின் ஒளிபரவும் இடங்களிலெல்லாம் இராமசாமி முதலியார் அவ்வொளியூடே புன்முறுவற்பொலிவோடு காட்சி வழங்குகிறார் என்பது ஒருதலை.

இனிப் பதிப்பு நோக்கத்தை வைத்துக்கொண்டு ஏடு தொகுத்து வைத்த ஏந்தல்கள் சிலர், அவர்கள், வினையால் வினையாக்கிக்கொண்ட வித்தகர்கள் ஆவர்: அவர்கள் வரலாற்றை அடுத்த பகுதியில் காண்போம்.

9. பழந்தமிழ்ப் பதிப்பாளர்கள்

இவ்வரிசையில் இடம் பெறத்தக்கார் பலராவர். எனினும், ஒரு நால்வர் இவண் குறிக்கப் பெறுகின்றனர். பிறரெல்லாம் அவர் பதிப்பித்த நூலைப்பற்றிய பகுதியிலே இடம்பெறுவர். இந்நால்வருள் முதல்வராவார் மூவர் அவர்

"பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால் கொண்டவர் ஆறுமுக நாவலர்: சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை; கூரை வேய்ந்து, நிலையம் கோலிவர் சாமிநாத ஐயர்" என்று திரு. வி. க வினால் [1]குறிப்பிடப்பெறும் மூவரே ஆவர்.

ஆறுமுக நாவலர்

நாவலர் கி. பி. 1822 இல் பிறந்தார். இவர் தந்தையார் கந்தப்பபிள்ளை. ஊர், ஈழத்தைச் சேர்ந்த நல்லூர்,

இவர் தந்தையார் சிறந்த நாடக வித்தகர்; பல நாடக நூல்கள் இயற்றியுள்ளார் ஒரு நாடக நூலை எழுதிக் கொண்டிருக்கும் போதே ஏடும் எழுத்தாணியுமாக இருந்த நிலையிலேயே இயற்கை எய்தினர் அப்பொழுது நாவலர்க்கு வயது ஒன்பது. தந்தையார் அரைகுறையாக விட்ட நாடகத்தைத் தாமே அவ்விளம் வயதில் முடித்தார் நாவலர் என்பர்!

---

1 திரு வி. க., வாழ்க்கைக் குறிப்புகள் பக் • 160,

நாவலர், சரவணமுத்துப் புலவர் இருபாலைச் சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் தமிழ்க்கல்வி பெற்றார். பள்ளியில் ஆங்கிலம் பயின்றார், சமய நூல்களில் ஆழ்ந்து தோய்ந்தார்; மழவை மகாலிங்கையர், பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை முதலாய தமிழ் அறிஞர் களுடன் தொடர்பு கொண்டார். பேச்சுவன்மை போலவே எழுத்து வன்மையிலும் சிறந்து விளங்கினார் உரை நடையை வளர்த்த பெருமக்களுள் நாவலர் குறிப்பிடதக்கவர் அவர் தம் பதிப்புகள் அருமை வாய்ந்தவை, எவ்விடத்திலேனும் ஒரு பிழையை எவரும் காண்டற்கு இயலாது என்னும் அரிய பதிப்பு அவருடையது.

நாவலர் சமயநூல்கள், இலக்கண நூல்கள், பாட நூல்கள் எனப் பலவகையில் பதிப்பித்துள்ளார் அவற்றுள் பழந்தமிழ் வளமெல்லாம் ஒருங்கு செறிநத திருக்குறளைப் பரிமேலழகர் உரையுடன் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாம அதனை இராமநாதபுரம் பொன்னுசாமித்தேவர் வேண்டுகோளின்படி துன்மதி ஸு வைகாசி மீ பதிப்பித்து உள்ளார். அதற்குத் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சி. தியாகராசச் செட்டியார், ச. தெய்வநாயகம் பிள்ளை சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் ஆகியோர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர்.

தொல்காப்பியம் திருக்குறள், பெரியபுராணம்முதலிய அவர் பதிப்புக்களின் பக்க எண், பாடல் எண் தலைப்பு எண் ஆகிய எல்லாமும் தமிழ் எண்ணாகவே இருத்தல் ஒரு தனிச் சிறப்பாகும். தொல்காப்பியம் சேனாவரையர் உரை நன் னூல் சங்கரநமச்சிவாயர் உரை, திருக்கோவையார் பேராசி ரியர் உரை என்பனவும் நாவலரின் பதிப்பால் வெளிப் பட்டன.

இவற்றுள் இவராய்ந்த தொல்காப்பியம் சேனா வரையர் உரை அறிஞர் சி. வை தாமோதரம் பிள்ளையால் பதிப்பிக்கப் பெற்றது. சேனாவரையத்தின் முதற்பதிப்பு அதுவேயாகும் ஆனால் அதே 1868 ஆம் ஆண்டிலேயே

கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையாலும் தொல். சேனாவரையம் வெளியிடப்பெற்றது. இரண்டற்கும் இடைப் பட்ட திங்கள் ஒன்றேயாம் விளக்கம் தொல்காப்பியப் பதிப்புப் பகுதியில் காண்க.

நாவலர் பதிப்பில் அடிக் குறிப்புகள் மிக அரியவை. "இருள்சேர் இருவினை" என்னும் திருக்குறள் உரையின் அடிக்குறிப்பாக, "ஈண்டு நல்வினை என்றது அழிதன் மாலைய வாய துறக்கவின்ப முதலிய காமியங்களைப் பயப்பனவாகிய வேள்வி முதலியவற்றை. இவை வீட்டுக்கு நேரே வாயிலாகிய தத்துவஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலு முடையனவாம். ஆதலால், இந்நல்வினை தீவினை இரண்டும் ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்த முறுத்தற்கண் பொன் விலங்கும் இருப்பு விலங்கும்போலத் தம்முள் ஒப்பன வாம் என்க. சரியை கிரியை யோகங்கள் ஞானம் வாயிலாக வீடு பயத்தலின் ஈண்டு நல்வினை என்றது அவற்றையன் றென்க" என்று விளக்கம் வரைகின்றார். இது பொருள் விளக்கம்.

'பழியஞ்சி' என்பதற்குப் பரிமேலழகர் பழியையஞ்சி என் உரை விரிப்பதற்கு, "பழியஞ்சி என்பதனைப் பழியை யஞ்சி பழியினஞ்சி என விரிக்கலாம் என்பது 'அச்சக்கிளவிக் கைந்து மிரண்டும், எச்சம் இலவே பொருள்வயினான" என் னும் தொல்காப்பியச் சூத்திரத்தான் அறிக என்கிறார். இஃதிலக்கண விளக்கம்,

'எந்நன்றி கொன்றார்க்கும்' என்னும் திருக்குறள் உரை விளக்கத்தில் "பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலையறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த் தபுத்தலும் முதலிய பாதகங்களைச் செய்தல்" என்று பரிமேலழகர் எழுதுவது புறநானூற்றுப் பாடலை அடியொற்றியது என்பதை அறியச் செய்வதுடன் அப்பாட லையும் எடுத்துக் காட்டுகிறார். அது வருமாறு:

[1] "ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவே
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென்
றறம்பா டின்றே ஆயிழை கணவ"

இதில் வரும் கோடிட்ட எழுத்திலுள்ள ஈரடிகளும், "பார்ப் பார்த்தப்பிய கொடுமையோர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென" என்றே சாமிநாதையர் புறநானூற் றுப் பதிப்பிலும், வையாபுரிப் பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பிலும் உள்ளன. பாடவேறுபாடாகக்கூடக் காட்டப் பெற்றில. இஃதாய்ந்து கொள்ளத்தக்க திருத்தமாம்! பரிமேலழகர் காலத்திற்கு முன்னமே இப்பாடம் அமைந்து விட்டது போலும்!

சைவ சமய நூல்களும், இலக்கண நூல்களும் அல்லா மல், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலாய நூல்களிலும் நாவலர் அழுந்தக்கற்ற அறிவினராக இருந் தலைத் திருக்குறள் அடிக்குறிப்புகளால் அறிதல்கூடும். அவர் ஏடுகளைக் கொண்டு கற்ற கல்வியே அஃதாம். ஏனெனில் இவை அந்நாளில அச்சிடப்பெற்றன அல்ல.

சி. வை. தாமோதரம் பிள்ளை

தாமோதரம் பிள்ளை ஈழத்திலுள்ள சிறுப்பிட்டி என் னும் ஊரில் பிறந்தவர். இவர் தந்தையார் வைரவநாத பிள்ளை தாயார் பெருந்தேவியம்மாள் இவர் பிறந்த நாள் கி. பி 1832 செப்டம்பர் 12.

1, புறம் - 34.

வட்டுக்கோட்டைக் கல்லூரியில் ஆங்கிலமும் பிறவும் பயின்றார். தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராயர் என்பவரிடம் பயின்றார். தம் ஆசிரியர்மேல் இவர் கொண்ட அன்பை,

"சுன்னை முத்துக் குமரன் துணைக்கழல்
சென்னி நாவொடு சிந்தை திருந்தவைத்
தன்ன மூதறி வாளர் பதந்துதித்
திந்நிலத் திவ்வுரை இன்றி யம்புகேன்"

எனக் கலித்தொகைப் பதிப்பில் குறிப்பிடுகின்றார்.

1857ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் முதன் முதலாக நடத்திய நுழைவுத் தேர்வில் வெற்றி கண்டார். அடுத்த நான்கு திங்களிலே இளங்கலைத் தேர்விலும் வென்றார் சென்னைப் பல்கலைக் கழக முதல் பட்டதாரி தாமோதரனாரே என்பர்.

தாமோதரனார் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆசிரியராகவும், 'தினவர்த்தமானி' என்னும் திங்கள் வெளியீட்டின் ஆசிரியராகவும், கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரித் தலைமையாசிரியராகவும், சென்னை அரசினர் வரவு செலவு கணக்கு நிலைய முதல்வராகவும், வழக்கறிஞராகவும், புதுக்கோட்டை அறமன்றத்து நடுவராகவும் கடமையாற்றியுள்ளார்! எவ்வெப் பதவியில், எவ்வெவ் விடத்தில் தாமோதரனார் இருந்தாலும் 'தாதி கண் தண்ணீர்க் குடத்தே' என்பதுபோல் அவர் கண் தமிழ் மேலேயே இருந்தது! அதற்குத் தொண்டு செய்தலே தம் பிறவிக் கடமையாகவும், பேரின்பமாகவும் உணர்ந்தார் அதனால் மற்றைப் பதவிகளில் தம்மைப் பதித்துக் கொண்டதைப் பார்க்கிலும், தமிழ் நூல் பதிப்பில் பதித்துக் கொண்ட பதிப்பே உயர்வற உயர்ந்ததாயிற்று!

தாமோதரனாரின் தமிழ்நூற் பதிப்புக் காதல் இவ்வளவு அவ்வளவு அன்று. நாட்டிலுள்ள ஏடுகளையெல்லாம் ஒருங்கே தொகுத்தல் வேண்டும்; அனைத்தையும் அச்சிட்டு விடவேண்டும்; தமிழறிந்தார் கைகளில் எல்லாம் அவை தவழவேண்டும்; நல்லோர் உள்ளத்தெல்லாம் தமிழ்ப்பற்று

களிநடம் புரியவேண்டும். இருக்கும் நூல்களில் எவ்வொன்றேனும் இறந்துபட்டுவிடுதல் ஆகாது! உழைப்பு! உழைப்பு! அயரா உழைப்பு! என்று காற்றுடி எனச் சுழன்று கடமையாற்றினார்.

[1] "பழைய சுவடிகள் யாவும் கிழமாய் ஒன்றொன்றாய் அழிந்துபோகின்றன புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதன் மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வசிக்கப்பெற்ற வித்வான்களோ அவள் மாமி எட்டியும் பார்க்கிறாளில்லை. திருவுடையீர்! நும் கருணை இந்நாள் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ் நூல்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றோ கிட்டுவதோ? காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்மையும் நாராசமும்தான் மீறும். அரைக் காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது. சங்கமரீஇய நூல்களுள் சில இப்போது தானும் கிடைப்பது சமுசயம். முப்பால் அப்பாலாய்விட்டது என் காலத்தில் யான் பார்க்கப் பெற்ற ஐங்குறு நூறு இப்பொழுது தேசங்கள் தோறும் தேடியும் அகப்பட்டிலது. எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா! ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கினும் மனம் தளம்புகின்றதே. தமிழ் மாது நும் தாயல்லவா! இவள் அழிய நமக்கென்ன என்று வாளா இருக்கின்றீர்களா?"

இப்பகுதியில் தாமோதரனார் ஆர்வமும் கடமை உணர்வும் நன்கனம் வெளிப்படும். தாமோதரனார் பதிப்புத் துறையில் ஈடுபட்ட காலநிலை எத்தகையது? இதனை மற்றொரு பதிப்பாசிரியராகிய பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அருமையாக விளக்குகின்றார்.

1. கலித்தொகை பதிப்புரை பக். 33 - 4

[1] "ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவ சமய நூல்கள் குறள் பாரதம் வெளியிடுவதோடு அமைந்து விட்டார்கள். வித்துவான் தாண்டவராய முதலியார் திவாகரம் முதலிய நூல்களையும் பள்ளி மாணவர்களுக்கு வேண்டும் வசன நூல்களையும் அச்சியற்றுவதில் ஒடுங்கிவிட்டார்கள் மழவை மகாலிங்கையர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்து வேறு சில நூல்களையும் வெளியிட்டு அத்துடன் நின்றுவிட்டார்கள். களத்தூர் வேதகிரி முதலியார் நாலடி நைடதம் முதலிய நூல்களை வெளியிட்டு அவ்வளவில் திருப்தியுற்றார்கள் திருத்தணிகை விசாகப் பெருமாளையர் முதலியோர் குறளுக்குத் தெளிபொருள், பிரபுலிங்க லீலை சூடாமணி நிகண்டு முதலியவற்றைப் பிரசுரித்து அவ்வளவில் தங்கள் முயற்சியைச் சுருக்கிக் கொண்டார்கள். திருவேங்கட முதலியார், இராசகோபாலப்பிள்ளை முதலானவர்கள் இராமாயணம் வெளியிடுவதிலும் நாலடி முதலியன பதிப்பித்தலிலும் ஈடுபட்டு நின்றனர். ஸ்ரீ உ. வே சாமிநாதஐயரவர்கள் அப்பொழுதுதான் சீவகசிந்தாமணிப் பதிப்பு முயற்சியில் போராடிக் கொண்டிருந்தார்கள் ஆகவே நமது பிள்ளையவர்கள் தன்னந்தனியாய்ப் பண்டைத் தமிழ்ச் செல்வப்புதையலைத் தமிழ் மக்களுக்கு அகழ்ந்தெடுத்து உதவும் பெருமுயற்சியை மேற்கொண்டனர்."

தாமோதரனார் பதிப்புப் பணி பரிதிமால் கலைஞரைக் கவர்ந்தது தாமோதரனார் 1901 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் இயற்கை எய்தினார். அப்பொழுது.

"காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போல்
நாமோது செந்தமிழின் நன்னூல் பலதொகுத்த
தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்"

எனப்பாடினார். "தாமோதரனார் தொகுத்தது நூலன்று; 'தண்டேன்' எனக்கொண்டார் பரிதிமால் கலைஞர்.

1. தமிழ்ச் சுடர்மணிகள், பக், 233 - 4.

தாமோதரனார் வண்டானார்! தமிழ் நூல் தேனுயது! யார் பார்வையில்? பரிதிமால் கலைஞர் பார்வையில்; ஆனால் அவ் வாறே பலரும் பார்த்தனரா? தாமோதரனாரை "எனக்கு நீர் தாமோதரரர்" என்று இடித்தாரும், அவர் எழுதும் பதிப்புரையைப் "பதிப்புரை" எனப் பிரித்துப் பொருள் கொண்டாரும், "நும் குழறுபடை விரிப்பிற் சாலப்பெருகும்" என இசழ்ந்தாரும் [1]இவற்றையெல்லாம் வாயளவில் ஒழி யாமல் அச்சிட்டு நிலைப்படுத்தினாரும் இருந்தனர். இவ்விடி பாட்டுக்கு இடையே தான் தாமோதரனார் தமிழ்ப்பணி இயற்றினார்.

பிற துறைகளின் ஈட்டாத பொருளை ஈட்டிவிடப் பதிப்புத் துறையை மேற்கொண்டாரல்லர். தாம் பதிப் பித்த நூல்கள் பிழையற்றன என்று பெரும் பறையறைந்தா ரும் அல்லர். ஏட்டில் இருக்கும் இனிய நூல்கள் இறந்து படு தல் ஆகாது என்னும் வேட்கை ஒன்றே அவரை ஏவிப்பணி கொண்டது. எதிர்த்து நின்றவர்கள் எத்துணை நூல்களை வெளியிட்டனர்? வெளியிட்டது எல்லாம் வசையே! பழியே! வாழவைக்க வந்த வாய், வசை பொழியாது!

தாமோதரம் பிள்ளை இயற்கை எய்தியதற்கு இரங்கிப் பாடினோர் பலர் அவ்விரங்கல் நிலையிலேனும் புலமைக் காய்ச்சல் ஒழிந்ததோ? பரிதிமால் கலைஞர் பாடிய [2]கையறு நிலையைத் தொல்காப்பிய விதிக்கு முரண்பட்டது என்று மூட்டிக் கொண்டாரும் இருந்தனர் என்றால், தாமோதரனார் உயிரோடு இருந்த காலத்து எத்தகைய இடர்ப்பாடு பட்டி ருப்பார்?

தாமோதரனார், நீதிநெறி விளக்கம், வீரசோழியம், தணிகைப்புராணம், இலக்கண விளக்கம், சூளாமணி, கலித் தொகை, தொல்காப்பியம் ஆகியவற்றை வெளியிட்டார்.

---

1. திராவிடப் பிரகாசிகை. பக். 31 - 46.

2. தாமோதரம் பிள்ளை வரலாறு (T. A. இராசரத்தினம்) பக் - 86.

தொல்காப்பியத்தை முற்றும் பதிப்பித்த பெருமை இவருக்கே உண்டு. இந்நூல் பதிப்பையும், கலித்தொகை, சூளாமணிப் பதிப்புகளையும் பதிப்பு நூல் வரிசையில் காண்க;

தாமோதரனார் பதிப்புப் பணியில் உள்ளந்தோய்ந்து திரு. வி. க. உரைத்ததை முன்னே கண்டோம். சைவ சித்தாந்த சமாசம் சங்க இலக்கியப் பதிப்பை அடக்க விலையில் வெளியிட்டது அதன் வெளியீட்டுச் செலவை ஏற்றுக் கொண்டவர் சைவ இளைஞர் நாராயணசாமி. அவர் அப் பதிப்பைத் திரு. வி. க. வின் நினைவுக் குறியாக்க விழைந்து வேண்டினார். [1]"உம் தந்தையார் நினைவுக்கோ தாமோதரம் பிள்ளை நினைவுக்கோ பதிப்பை அர்ப்பணஞ் செய்யுங்கள்" என்று திரு. வி. க. கூறினார் தாமோதரம் பிள்ளையைத் திரு. வி. க. மதித்த மதிப்பின் சான்று இது.

உ. வே. சாமிநாதையர்

தமிழ்ப் பதிப்புத் துறையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் ஒருதனி ஓங்கிய பெருமகனார் உ. வே. சாமிநாதையர். 'எவ்வாறு இத்திறம் வாய்க்கப் பெற்றார்?' என்னும் வியப்பு நோக்கு எவருக்கும் எழும்புதல் இயற்கை! அத்தகைய பதிப்பாக்கங்களை அவர் செய்தார்.

பதிப்புத் துறையில் ஈடுபட்ட பெருமக்களுள் பெரும்பாலோர் தமிழ்ப் பற்றாலும், ஏடுகள் அழிந்துபடாமல் காக்கவேண்டும் என்னும் ஆர்வத்தாலும் ஈடுபட்டவர்கள். அவர்கள் இளமைமுதலே அழுத்தமான தமிழ்ப்புலமையைப் பெற்றிருந்தாரல்லர்! அந்நிலையிலும் அவர்கள் செய்த பணி போற்றத்தக்கதேயாம்.

சில பதிப்பாசிரியர்கள் பயின்றதுறை வேறாகவும், பதிந்ததுறை தமிழாகவும் இருக்கும். அல்லது பணி

1. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள். பக். 944.

செய்த துறை ஒன்ருகும் அணிசெய்த துறை ஒன்ருகவும் இருக்கும். ஆதலால் முழுமையாக ஈடுபடுதற்கு அவர்கள் வேலை நிலை இடம் தருமாறமையவில்லை.

சில பதிப்பாளர்கள் சமயச்சாரிபு அவர்களைப் பழமை நூற்பக்கம் - சமயஞ்சாரா நூற்பக்கம் - பார்க்கவிடவில்லை, ஆதலால் குறிப்பிட்ட நூல்களை ஆ ரா யு ம் அளவுடன் நின்றனர்.

பதிப்பாளருள் சிலர் பன்மொழிப் புலமை எய்தி நின் றனர், அப் பன்மொழி தமிழுக்கு ஆக்கந்தந்ததே எனினும், முழுமையாகத் தமிழ் நூல் ஆய்வுக்கே தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விடவில்லை.

அரிய ஆராய்ச்சித் திறம்மிக்கார்க்கும் மனப்பாடத் திறம் வாய்ப்பது அரிது நூல் நூலாகவே ம ன ப் பா ட ம் செய்து கொண்டவர்களுக்கு நூலில் வரும் மேற்கோள்களை யும் ஒப்புமைப் பகுதிகளையும் நொடிப் பொழுதில் கண்டு குறிப்பதற்கு வாய்க்கும். பிறர்க்கு அவ்வாய்ப்புக் கூடுவது இன்று

தாமே உழல்வதினும் தக்க துணைவர்களை வைத்துக் கொண்டு ஆராய்வதிலே அவ்வணைவர் ந ல் ல றி வை யு ம் ஒருங்கு தொகுத்துக் கொள்ளும் வாய்ப்பு உண்டு அதற்கு அவர்களை அணுகி வேலைகொள்ளும் திறமும் பொறுமையும் போற்றுதலும் ஆகியனவெல்லாம் அமைதல் வேண்டும்.

உழைப்பின் செம்மை ஒன்றைக் கருதுதல் அல்லாமல் கால விரைவு பதிப்பின் சிறப்புக்குப் பயன்படாது. கால விரைவுடனும், ஒரு குறிப்பிட்ட நோக்குடனும் செய்யும் பதிப்பு, அவர் மற்றைப் பதிப்புடன் ஒப்புநோக்கப் பெரிதும் வேற்றுமைப்படுதல் கண்கூடு.

களஞ்சியத்தில் வைத்துக் கொண்டு ஆக்கியுண்பார் நிலைக்கும் அவ்வப்போது கடைக்குச் சென்று வாங்கி ஆக்கி யுண்பார் நிலைக்கும் உள்ள வேற்றுமை ஏடுகளைத் தொகுத்து வைத்துக்கொண்டு ஆய்வார்க்கும், அவ்வப்போது ஆராயும்

நூல்களைத் தேடித்தேடித் தொகுத்து ஆய்வார்க்கும் உண்டு. முன்னது இனிமையும், நிறைவும், பயனும் மிக்க தாம்.

பதிப்பு நூல்களில் எண்ணிக்கை பெருகப் பெருக அவற்றின் அடைவுகளும் மேற்கோள்களும் பெருகும் வண்ணம் வரன்முறையான தொகுப்புகள் வைத்திருத்தல் பதிப்பை எளிமையாக்குவதுடன், அருமையாக்கவும் செய்யும்.

நல்லவை எவரிடத்துக் காணினும் எந்நிலையில் காணினும் அவற்றையெல்லாம் தம்மவையாகப் போற்றி ஏற்றுக் கொள்ளும் நிறைமனமும், நன்றியுணர்வும் பதிப்பின் மணத்தைப் பெருகப் பரப்பும். சாமிநாதையர் எத்தகைய பதிப்பாளராக விளங்கினார்?

"சாமிநாத ஐயர் தமிழிலே பிறந்தார்; தமிழிலே வளர்ந்தார்; அவர் பிறப்பும் தமிழ்; வளர்ப்பும் தமிழ்; வாழ்வும் தமிழ்; அவர் மனமொழி மெய்களெல்லாம் தமிழே ஆயின; அவர் தமிழாயினார்; தமிழ் அவராயிற்று; அவர் தமிழ்; தமிழ் அவர்"

"ஐயர் புலமை தமிழ்த் தொண்டில் புகுத்தியது. அத்தொண்டு அவரை மஹாமஹோபாத்தியாயர் ஆக்கிற்று. தாக்ஷிணாத்திய கலாநிதி ஆக்கிற்று. டாக்டர் ஆக்கிற்று. தமிழ்த் தாத்தா ஆக்கிற்று; தமிழ்க்கோயில் ஆக்கிற்று"

"ஐயரிடம் அணுகிப் பேசுங்கால் அவர் முகத்தில் ஒருவித ஒளி கால்வது புலனாகும். காரணம் என்ன? ஐயர் ஓலைகளை ஒப்பிடும்போது அவர் மனம் ஆன்றோர் பாக்களில் ஆழ்ந்து ஆழ்ந்து செல்லும். மனம் ஆழ்ந்து செல்லச் செல்ல அது புலன்களின் கட்டிலிருந்து விடுதலையடையும். விடுதலையடைந்த நன்மனத்தினின்றும் எழும் ஒளி புறத்திலும் காலும். அவ்வொளியே ஒழுக்கங் காப்பது. ஒளியும் ஒழுக்கமும் ஐயரைத் தமிழ்க் கோயிலாக்கின."

இம்மணி மொழிகள் [1] திரு. வி. க. வினுடையவை என்பதைக் கூறவேண்டியது இல்லை!

பதிப்புத்துறையில் ஒன்றிய பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை மதிப்பிடுகிறார். பாம்பின் கால் பாம்பறியும் என்பது பழமொழியல்லவா! மற்றவர்களுக்குத் தோன்றாத தோற்றங்களெல்லாம் பேராசிரியர்க்குத் தோன்றும் சீர்மை பெரிது. அவர் திறனாய்வுத் திறம் பதிப்பாளர்களுக்கு ஒளி மிக்க வழிகாட்டியாகத் திகழ்கிறது! ஒரு பகுதி இவண் சொல்லப்படுகிறது மற்றொரு பகுதி மேலே காட்டப் பெறும்;

[2] "இவர்க்கு முன்பெல்லாம் நூல்களைப் பதிப்பிடும் தொழிலில் ஈடுபட்ட தமிழ் அறிஞர்களில் பெரும்பாலோர் தமக்குக் கிடைத்த இரண்டொரு பிரதிகளை வைத்துக் கொண்டு, அவற்றிலுள்ள 'கரலிகித வழுஉக்களைக் களைந்து திருத்தியும் புதுக்கியும் நூல்களை அச்சிடுதல் வழக்கமா யிருந்தது. ஆனால் ஐயர் இந்த முறையைப் பின்பற்றவில்லை. பல பிரதேசங்களில் இருந்தும் பலபிரதிகளை முயன்று தேடிப் பெற்றுத் தொகுத்து வைத்துக்கொள்வது இவர் முதலாவது செய்த வேலை."

"பின்னர், இவற்றுள் ஒரு பிரதியைக் கடிதத்தில் பெயர்த்தெழுதி மற்றைப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பாட பேதங்களைக் குறித்துக் கொள்வர். இவ்வாறு குறித்துக் கொண்டபின் நூலைப் பலமுறையும் வாசித்துப் பொருளை யும் நன்கு தெரிந்துகொள்ள முயல்வர். இதற்குப்பின் இந் நூற்பொருள் பற்றியெழுந்த பிற நூல்களையும் கற்றுப் பொருள் விளக்கம் செய்ய முற்படுவர். பின்னும் தெரியா தன உளவாயின் வடமொழி தென்மொழி நூல்களிலே வல்லவர்களையும் நூல் எந்தச் சமயத்திற்குரியதோ அந்தச் சமய சாஸ்திரங்களில் வல்லவர்களையும் அடுத்து விசாரித்துப் பொருள் தெரிந்து கொள்வர். விளக்கத்திற்குரிய

1. வாழ்க்கைக் குறிப்புகள் 160 - 3.
2. தமிழ்ச் சுடர் மணிகள் 294 - 5.

அனைத்தையும் முறைப்படக் குறித்து வைத்துக்கொண்டு அச்சிடுவதே தக்க முறை எனக் கருதி அவ்வாறு செய்து வந்தனர்.''

சாமிநாதையர் பதிப்பின் பெருமை நாடறிந்தது. ஆங்கிலவர்களும் பாராட்டும் அருமை வாய்ந்தது. அத் திறத்தை அவர் எவ்வெவ்வாறு வளர்த்துக் கொண்டார் என்பதை அறிந்து கொள்ளுதல் நமக்கு மிகப் பயனுடைய தாம்.

ஐயரின் முதற்பதிப்பு 'சுப்பிரமணிய தேசிக விலாசம்' என்பது பின் திருக்குடந்தைப் புராணம் வித்துவான் தியாகராசச் செட்டியார்க்கு உதவியாக இருந்து பதிப்பித் தார். அதனைச் சூளை சோமசுந்தர நாயகர் அச்சிட்டார். மூலம் மட்டுமே அச்சிடப்பட்டது.[1] குறிப்புரையுடன் வெளி யிட்டால்தான் படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்கு மென்ற கருத்து அப்போது எனக்கு எழவில்லை'' என்கிறார் ஐயர்.

திருக்குடந்தைப் புராணம் ஐயர் வெளியிட்ட இரண் டாம் நூலாகும்.[2] ''அப்புராணப் பதிப்பின் அச்சுத்தாள் களைத் திருத்தும் முறையை நான் தெரிந்துகொண்டேன். ஆனாலும் பதிப்பு எப்படியிருந்தால் அழகாயிருக்குமென்ற செய்திகளை நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை அச்சில் வந்துவிட்டால் கௌரவமாகக் கருதும் காலம் அது'' என்று குறிப்பிடுகிறார் ஐயர். 'அறிதோறும் அறியாமை காணுதல்' தானே இன்பமும் வளர்ச்சியும்!

சிந்தாமணிப் பதிப்பில் ஐயர் கருத்துச் சென்றது, ஆய்ந்து ஒப்பிட்டுச் சுவடி அணியம் செய்திருந்தார். பாட்டு, பொழிப்புரை, விசேடவுரை எல்லாம் ஒன்றாக இருந்தமையால் அவற்றை வேறு பிரித்து அறிவதும், அறி யும்படி செய்வதும் மிகவும் அரிய செயல்கள் என்று அக் காலத்தில் ஐயர் எண்ணினார், அச்சுக் கலையில் தேர்ந்த

1. என் சரித்திரம் பக். - 753.
2. என் சரித்திரம். 760.

தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் என்பவர், [1] "அவற்றை மிகவும் சுலபமாகத் தனித்தனியே அமைத்துவிடலாம், மூலத்தைப் பெரிய எழுத்திலும் உரைகளைச் சிறிய எழுத்திலும் அச்சிடவேண்டும். பொழிப்புரையையும், விசேட உரையையும் தனித்தனியே பாரா பாராவாக அமைத்துவிட்டால் அவை வேறு வேறு என்று தெரிய வரும். ஏட்டுப் பிரதியிலுள்ள குழப்பங்களையெல்லாம் அச்சில் மாற்றிவிடலாம். அதைப்பற்றி நீங்கள் சிறிதும் கவலையடையவேண்டாம்" என்று தெளிவுபடுத்தினார்.

சிந்தாமணி அச்சு வேலை தொடங்கியபோதும் சில மயக்கங்கள் ஐயருக்கு உண்டாயின. இராசகோபாலாச்சாரியார் எளிமையாகத் தீர்த்துவைத்தார். அவர் பயின்ற கலை அஃதாகலின்!

[2] "நூற் பெயர், இலம்பகப் பெயர், தலைப்பு, மூலம் உரை என்பவற்றை வெவ்வெறு எழுத்துக்களில் அமைக்கும்படி ராஜகோபாலாச்சாரியார் திட்டம் செய்தார்.

[3] "முதற்பாட்டிற்குரிய உரையில் மேற்கோள்கள் பல இருந்தன. அவற்றை அடிக்குறிப்பிலே எவ்வாறு தெரிவிப்பதென்று நான் மயங்கினேன். அவர் உடுக்குறி முதலிய அடையாளங்களை முறையே போட்டு அவற்றின் பெயரை எனக்குத் தெரிவித்தார்."

பின்னே பத்துப் பாட்டு பதிப்பு நடைபெற்றது. பத்துப் பாட்டுப் பதிப்புக்கு மூலமே கிடைக்கவில்லை. நச்சினார்க்கினியர் வரைந்த உரையின் வழியே தான் மூலத்தைத் துலக்க வேண்டியதாயிற்று இவ்விடர்ப்பாடு ஐயருக்கு மலைப்பைத் தந்தது. 'மலையேல்' என வாழ்த்துக் கூறினார் இராசகோபாலாச்சாரியார். அவர் சட்டென்று ஒருவழி கூறினார். [4] "அந்தச் சிறு பகுதிகளான மூலங்களையெல்லாம்

1. என் சரித்திரம். 796.
2. ,, 798 - 9.
3. ,, 799.
4. ,, 862.

தனியே எழுதி வைத்துக் கொண்டால் பிறகு பொருளைக் கொண்டும் வேறு ஆதாரங்களைக் கொண்டும் ஒழுங்குபடுத்திக் கொள்ளலாமே" என்றார்.' அவர் முல்லைப்பாட்டில் சில பகுதிகளை எழுதிக் காட்டினார்.

பத்துப்பாட்டின் பெருமையை உணர்ந்தார் இராச கோபாலாச்சாரியார். அதிலுள்ள அருஞ்சொற்களையும் அருந்தொடர்களையும் தொகுத்து அகராதியாக வெளியிடலாம் என்று வழிகாட்டினார். [1] அகராதி அமைத்தற்குக் கருவியாகவுள்ள பெட்டி ஒன்றைக் கொணர்ந்து, அகராதி செய்யும் முறையையும் காட்டினார். மிக எளிமையாக அகராதி முடிந்ததைப் பார்த்து ஐயர் வியந்தார். தமக்கென அப்பெட்டியைப் போல் இரண்டு பெட்டிகளைச் செய்து கொண்டார்.

பதிப்புத் துறையினால் தமக்கு உண்டாகிய வளர்ச்சி முறையை ஐயர் குறிப்பிடுகிறார்:

[2] "சிந்தாமணிப் பதிப்பைக் காட்டிலும் பத்துப்பாட்டில் சில புதிய பகுதிகளைச் சேர்த்தேன். அதைக் காட்டிலும் சிலப்பதிகாரத்தில் சில புதிய பகுதிகளை ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உதவியாகச் சேர்க்கவேண்டுமென்று தோற்றியது. அவற்றிற்குரிய விஷயங்கள் சிலப்பதிகார மூலத்திலும் உரையிலும் பல இருந்தன. அடியார்க்கு நல்லார் உரையினால் தெரியவரும் நூல்களைப் பற்றிய குறிப்புக்களை அவசியம் எழுத வேண்டுமென்ற ஆசை எனக்கு மிகுதியாக எழுந்தது. நூலாலும் உரையாலும் அறியப்படும் அரசர் முதலியோர் பெயர்களை வகைப்படுத்தி அகராதி வரிசையால் அமைக்கவேண்டும் என்பது மற்றொரு விருப்பம். இப்படி என்னுடைய ஆராய்ச்சி வகை விரிந்து கொண்டே சென்றது."

பதிப்பு முறையைக் கற்றுக்கொண்டதுடன் பதிப்புத் தூய்மை நோக்கு ஐயர் உள்ளத்தில் ஊறிக் கிடந்தமையை

1. என் சரித்திரம் 910.
2. ,, 964.

அவர் தம் பதிப்புரைகள் காட்டுகின்றன. அக்காலத்தில் உரையாசிரியர் பெயர் அகப்படவில்லை என்றால் பதிப்பிப்பவர் தம் பெயரையே உரையாசிரியராகப் போட்டுக் கொள்ளவும் துணிந்தனர். அவரவர் விருப்பம் போலெல்லாம் இடை இடையே சேர்க்கவும், விலக்கவும், மாற்றவும், மறைக்கவும், திருத்தவும் முனைந்தனர். இவற்றைக் கண்ணுறக் கண்டுகொண்டவர் ஐயர்.

கோமளீசுவரன் பேட்டை இராசகோபாலப் பிள்ளை பதிப்பாகப் 'பாகவதம்' வெளியிடப் பெற்றிருந்தது. அப் பதிப்பில் பாகவதம் இயற்றிய ஆசிரியர் பெயர் 'ஆரியப்பப் புலவர்' எனக் குறிக்கப்பெற்றிருந்தது. செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவதம் ஆரியப்பப் புலவர் இயற்றியதாக எவ்வாறு ஆயது? இராசகோபாலப் பிள்ளை கூறுகிறார்: "என் பெயரைப் போட்டு யாரோ அச்சிட்டுவிட்டார்கள்"

அவர் சென்னையில் உயிரோடு உலா வந்துகொண்டிருந்த நாளையிலே சென்னையிலே செய்த செயற்கருஞ் செயல் இது! முதற்பக்கம் இல்லாத சுவடியில் 'செவ்வைச் சூடுவார்' இருந்ததை எப்படிப் பதிப்பித்தவர் அறிவார். அப்படியே முதற்பக்கத்தை எடுத்தெறிந்துவிட்டு அச்சிட்டாலும் செவ்வைச் சூடுவார் எழுந்து வந்துவிடுவாரா? அவ்வளவு துணிவுமிக்க காலம் அது.

"பதிப்பிக்கத் தொடங்கிய நூல் எனக்கு ஒரு தெய்வ விக்கிரகம்போல் இருந்தது. அதன் அழுக்கைத் துலக்கிக் கவசமிட்டுத் தரிசிக்க வேண்டுமென்பதே என் ஆசை; "கைகோணி இருக்கிறது. வேறு விதமாக அமைக்கலாம். நகத்தை மாத்திரம் சிறிது திருத்தலாம்" என்ற எண்ணம் எனக்கு உண்டாகவில்லை. அதன் ஒவ்வோர் அணுவிலும் தெய்வீக அம்சம் இருக்கிறது என்றே நம்பினேன், அழுக்கை நீக்கி விளக்குவதற்கும் அங்கத்தையே வேறுபடுத்துவதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாக அறிந்திருந்தேன்." என்று தம் கொள்கையை வரையறுத்துக்கொண்டு பதிப்புப் பணி செய்தார் ஐயர். ஆதலால் அவர் பதிப்பு பாராட்டுக்குரியதாயிற்று; மற்றும் இக்கருத்து வலுவில் அவர் தம் உள்ளத்து

அழுந்தியிருந்தமை சிந்தாமணி, பெருங்கதை முதலாய பதிப்புகளின் முகவுரையாலும் புலப்படும்.

சாமிநாதையர் தாமே பட்டுப்பட்டுப் பதிப்பிக்கும் முறையை அறிந்து கொண்டார்! இராசகோபாலாச்சாரியார் துணை எய்ப்பினில் வைப்பாக வாய்த்தது அதற்கு முன்னரே பல்வேறு வகையில் ஆங்கில நன்மக்கள் வெளியிட்ட ஆங்கில நூல்களின் அமைப்பும், தமிழ் நூல்களின் அமைப்பும் எடுத்துக்காட்டாக விளங்கின. இவற்றையெல்லாம் போற்றி அயராமல் பொருத்திக்கொண்ட திறம் ஐயரைச் சேர்ந்ததாம்! ஏனெனில் அவர் பதிப்பை வெற்றி கொள்ளும்வகையில் எவர் பதிப்பும் தலைகாட்டவில்லை! அவரிடம் அணுக்கராக இருந்து பணி செய்தோரும், பயின்றோரும் கூட அவ்வகையில் பதிப்பிக்கவில்லை! அப்பணியில் ஈடுபடவும் அவர்கள் விரும்பினார் அல்லர்! விரும்பியிருப்பினும் ஐயர் பெற்ற வெற்றியைப் பெறுதல் அரிதேயாம்! ஏனெனில் அவர் வாழ்வு, தமிழ் வாழ்வு! தமிழ் வாழ்வே தவ வாழ்வாகக் கொண்ட வாழ்வு.

[1] "தமிழ்க்காதல் நிரம்பியமைந்த திருமேனி; தமிழ்ச் சுவடிகள் இருக்கும் இடங்கட்கெல்லாம் ஓடியோடிச் சென்ற திருவடிகள்; ஏட்டுச் சுவடிகள் பெற்று ஆனந்தாதிசயத்தால் விதிர் விதிர்க்கும் திருக்கரங்கள்; தமிழின் பெருமையையும் தமிழின் தொன்மையையும் நினைத்த மாத்திரத்தில் உள்ளத்தே ஓங்கி வருகின்ற உவகையால் ஓங்கியமைந்த திருப்புயங்கள். தமிழ் ஒளியும், தமிழ் அறிவும் ஒருங்கு விளங்குகின்ற திருநயனங்கள். தமிழ்த்தொண்டு என்னும் தவத்துறையிலே நெடுங்காலம் ஒழுகி முதிர்ந்த திருக்கோலம்" என்று பாராட்டப்பெறும் வாழ்விலே இருந்து வெளிப்பட்ட பதிப்புகள் தனிப்பெருமை வாய்ந்தனவே!

ஐயரின் இளமை புலவர்களைத் தேடித்தேடிக் கற்றது; அமைந்து நின்று ஆராய்ந்தது. ஐயரின் முதுமை ஓடி ஓடி

1. தமிழ்ச் சுடர் மணிகள் பக் - 306

ஏடுகளைத் தொகுத்தது; உள்ளார்ந்த அன்போடு பதிப்பித்தது

சாமிநாதையரின் தந்தையார் வேங்கடசுப்பிரமணிய ஐயர். தாயார் சரஸ்வதி அம்மையார். ஊர், உத்தமதானபுரம். 1855 ஆம் ஆண்டு பெப்ரவரி மீ இரண்டாம் நாள் பிறந்தார்,

'இசை' இவர் குடும்பச் சொத்து. ஆறும் வயதிலேயே தந்தையாரிடம் இசை கற்றார். நாராயணையர் பள்ளி, சாமிநாதையர் பள்ளி ஆகியவற்றில் எண்ணும் எழுத்தும் கற்றார். அரியலூர் கிருஷ்ண வாத்தியார், அரியலூர் சடகோபையங்கார், குன்னம் சிதம்பரம் பிள்ளை, கார்குடி கஸ்தூரி ஐயங்கார், கார்குடி சாமி ஐயங்கார், பாபநாசம் இராகவையர், செங்கணம் விருத்தாசல ரெட்டியார், பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகியவர்களிடம் பயின்றார். சுப்பிரமணிய தேசிகரிடமும் பிள்ளையவர்கள் காலத்திற்குப் பின்னர் பாடம் கேட்டதுண்டு.

வித்துவான் தியாகராசச் செட்டியார் உதவியால் கும்பகோணம் கல்லூரியில் பணியாற்றினார். பின்னர்ச் சென்னை மாநிலக் கல்லூரிப் பேராசிரியரானார். ஆங்கு ஓய்வு பெற்ற பின்னர் அண்ணாமலையரசரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரிக்குப் பொலிவூட்டினார்.

சாமிநாதையர் பதிப்பித்த நூல்கள் மிகப்பல. எழுதிய உரைநடை நூல்களும் பல. அவற்றுள் பத்துப் பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், ஐங்குறுநூறு, குறுந்தொகை, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை சிந்தாமணி என்பவை குறிப்பிடத்தக்கவையாம்.

இவர் தொகுத்துவைத்த சுவடிகள் நாட்டின் செல்வமாகப் போற்றத்தக்கன. அருமையாகப் பேணி அடைவு செய்து வைத்த அச்சுவடிகள், அடையாறு பிரம்ம ஞான சபைக்கு வழங்கப்பெற்றன, பெறலரும் அப்பெரும் பொருளைப் பெற்ற அச்சபை, திருவான்மியூரில் டாக்டர்

சாமிநாதையர் நூல் நிலையத்தை நிறுவி ஆங்கு வைத்தது ஐயர் திருப்பெயர் விளங்க வெளியீடுகளையும் தொடர்ந்து செய்கின்றது. ஆராய்ச்சியாளர்க்கு அருமருந்தன்ன கருவூலமாகத் திகழ்கிறது. ஐயர் சுவடிச்சாலை

பழந்தமிழ்ச் சுவடிகளாகச் சாமிநாதையர் நூல் நிலையத்தில் உள்ள சுவடிகள் வருமாறு:

தொல்காப்பியம்	சுவடிகள்	...	25
முருகாற்றுப்படை	,,	...	8
பொருநராற்றுப்படை	,,	...	2
சிறுபாணாற்றுப்படை	,,	—	4
பெரும்பாணாற்றுப்படை	,,	...	4
முல்லைப்பாட்டு	,,	...	2
குறிஞ்சிப்பாட்டு	,,	...	2
மதுரைக்காஞ்சி	,,	...	3
நெடுநல்வாடை	,,	...	3
பட்டினப்பாலை	,,	...	2
மலைபடுகடாம்	,,	...	2
ஐங்குறுநூறு	,,	...	1
பதிற்றுப்பத்து	,,	...	1
பரிபாடல்	,,	...	1
கலித்தொகை	,,	...	3
அகநானூறு	,,	...	5
புறநானூறு	.	...	9
சிலப்பதிகாரம்	,,	...	5
மணிமேகலை	,,	...	6
சிந்தாமணி	,,	...	15
பெருங்கதை	,,	...	1
சூளாமணி	,,	...	1
திருக்குறள்	,,	...	12

இவ்வரிசையில் இடம் பெறத்தக்க பெரியார் ஒருவர் உளர். அவர் எவர்? திரு. வையாபுரிப் பிள்ளை.

[1] "இப்பொழுது வையாபுரிப் பிள்ளை தமிழ்நாட்டுப் பதிப்பாசிரியர் உலகிலே ஒரு வான்மணியெனத் திகழ்கிறார். ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை, சாமிநாதையர் ஆகியவர் இனத்தில் சேர்ந்தவராவார்!"

"சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்புக்களாகிய சங்கஇலக்கியம், சிந்தாமணி, திருமந்திரம் முதலிய நூல்கள் நன்முறையில் வெளிவர ஏட்டுப் பிரதிகளை ஒப்பு நோக்கியும் பாடபேதங்களை ஒழுங்கு செய்தும், பிழை திருத்தியும் உதவி புரிந்தவர் வையாபுரிப் பிள்ளை என்பதை யான் நன்கறிவேன். யான் பெரிய புராணம் இரண்டாம் பதிப்பு முயற்சியில் தலைப்பட்டபோது, தமிழ் நாட்டிலுள்ள பல ஏட்டுப் பிரதிகளைத் திரட்டி என்னிடம் சேர்ப்பித்தது வையாபுரியின் தமிழன்பேயாகும்" என்று சான்றோர் பாராட்டும் சீர்மையைப் பதிப்புத் திறத்தால் பெற்றவர் வையாபுரியார்.

வையாபுரியார் கல்லூரியில் பயிலும் காலையிலேயே ஏடு தேடினார்; ஆராய்ந்தார்; படியெடுத்தார்; பின்னே வழக்கறிஞராகப் பயின்றும், பணியாற்றப் புகுந்தும், அவரைத் தமிழ்த் துறையே ஆட்கொண்டது! அவர்தம் தமிழ் ஈடுபாடு அது

[2] 'எப் ஏ' படிக்கும்போதே கலித்தொகை முழுவதையும் ஏட்டுப்படியுடன் ஒப்பிட்டுப் பயின்றார் வையாபுரியார். 'பி. ஏ' தேர்ச்சி பெற்றதும் தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரைச்சுவடியைத் த. கனகசுந்தரம் பிள்ளையிடமிருந்து பெற்று உரைமுழுவதும் படியெடுத்துக் கொண்டார். இளமையில் கொண்ட இவ்வுணர்வு வாளா ஒழியுமோ? வ. உ. சியின் தொல்காப்பியப் பதிப்புக்குத் துணையாயது. திரு. வி. கவின் பதிப்புக்கு உதவியது. சங்க இலக்கியப் பதிப்பைச் சால்புற முடித்தது. சிந்தாமணி, புறத்திரட்டு, களவியல் காரிகை, அரும்பொருள் விளக்க

1 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள், 208.
2. அகராதி நினைவுகள் பக். - 6.

நிகண்டு முதலாக நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்தது; பல்கலைக் கழக அ க ர ா தி ப் பணியை முடித்து வெளியிட்டது.

வையாபுரியார் கடிய உழைப்பாளர் ஏடுகளை இடைவிடாது ஆய்ந்தவர். அச்சிட்ட நூல்களையும் ஏடுகளுடன் ஒப்பிட்டுப் பாடம் தேர்ந்தவர். பிறர் பதிப்பிக்க விரும்பும் நூலையும், பொழுதையும், பொருளையும் கருதாமல் ஆய்ந்து தந்தவர்; தம்மிடம் இருக்கும் சுவடிகளைத் தட்டாமல் பிறர் ஆய்வுக்கு வழங்கியவர்; எவரெவர் எதிர்ப்பினும் தமக்குத் தோன்றிய கருத்தைத் துணிந்து உரைத்தவர். நூலுக்குச் சிறப்புச் செய்யும் அரிய ஆராய்ச்சி முன்னுரையை வரைந்தவர். இவர்தம் ஆராய்ச்சி முன்னுரைகளைத் தொகுப்பின் ஓர் அரிய ஆராய்ச்சி நூலாகத் திகழ்தல் உறுதியாம். இவர் பதிப்புத் துறையில் கொண்டிருந்த கொள்கைகள் மிகப் போற்றத்தக்கன. அவற்றை 'நிறையும் குறையும்' என்னும் தலைப்பில் காண்போம்.

10. கொடையாளரும் கருமியும்

செல்வருள், கொடையாளரும் கருமியும் உண்டு என்பது உலகறிந்த செய்தி. அதுபோல் அறிவாளருள்ளும் கொடையாளரும் கருமியும் உளர் என்பதை சிறிது நோக்கு வாரும் அறிவர். அறிவாளருள் கொடையாளர் ஆவார். தாம் பெற்ற கலைச் செல்வத்தைப் பிறருக்குச் சிறிதும் மறையாமல் வாரி வழங்குபவர். கருமியாவார் தாம்பெற்ற கலைச் செல்வத்தை எவரும் அறிந்து கொள்ளாவண்ணம் ஒளித்துக் கொள்பவரும், அரிதாக கொடுக்க நேரினும் இறுக்கி வைத்துக்கொண்டு ஏதோ கொடுப்பவரும் ஆவர். இத்தகையர் ஏடு வைத்திருந்தவர்களிலும் இருந்தனர். பயன்படும் இடத்தில், தாமே விரும்பியளித்த கொடையாளரும் இருந்தனர். வருந்தி வருந்திக் கேட்டு அலைந்தாலும் கால்கூலியும் இல்லாமல்விட்ட கருமிகளும் இருந்தனர்.

ஏடு வழங்குதலில் கருமியாக இருந்தவர் எத்தகையர்? 'பூதம் காக்கும் புதையல்' என்பார்களே, அத்தகையராக இருந்தவர். படிப்பறிவில்லாதவரும், படித்துத் தெளிந்தவர்களும் ஏடுகளை இன்முகத்துடன் பதிப்பாரிக்கும் தொகுப்பாரிக்கும் வழங்கினர். அரைகுறைப் படிப்பாளரும், ஏட்டின் பெருமை என்னவென்று உணராமல் 'பழம் பொருள்' என்று போற்றிய மடவருமே ஏடுகளை வழங்காதும் தாமும் துய்க்காதும் ஒழிந்தனர்.

ஏடுகள் தொகுத்தலில் ஈடுபட்ட பெருமக்கள் பட்டிருக்கும் துயர் எண்ணத் தொலையா! எழுதத் தொலையா! ஒரு பயனும் இல்லாத ஏட்டையும்கூட, தாம் குப்பையோடு குப்பையாகப் போட்டிருந்த ஏட்டையும் கூட, ஒருவர் கேட்டுவந்தபோதில் மனங்கொண்டு கொடாமல் மாணிக்கமாகக் கருதி மறைத்துக்கொண்டவர் உண்டு! பிறர் வாரிக்

கொண்டு போய்விட்டார்' என்று பழியும், 'முன்னமே வந்திருந்தால் முப்பது நாற்பது சுவடி தந்திருப்பேனே' என்று ஒரு பேச்சும் உரைத்து உவகை கொண்டாரும் இருந்தனர். ஏடுதேடிச் சென்றவர்கள் உள்ளம், உடையத்தக்க உரைகளை உரைத்தாரும் இருந்தனர். ஆயினும் ஏடுதேடிச் சென்றோர் தாம் எடுத்துக்கொண்ட தவப்பணியை நினைந்து புன்முறுவலுடன் தாங்கிக்கொண்டனர்! இன்னொரு கொடையாளர் தமக்கு வழங்கிய சுவடிகளை எண்ணிஎண்ணிப் பட்டதுயரை மறந்து மகிழ்ந்தனர்.

எத்தகைய பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை! அவருக்கு ஓர் ஏடு வேண்டியிருந்தது. அவ்வேடு 'சிவதருமோத்திரம்' என்பது! அவர் வாழ்ந்த காலத்தில் அவரை அறியாத அறிவாளர் இலர்! செல்வர் இலர்! எந்தப் பட்டி தொட்டியிலும் பிள்ளையின் புகழ் பரவிக்கிடந்த காலம். அச்சுவடியையும் தாம் வைத்துக் கொள்வதற்காகக் கேட்கவில்லை. பார்த்துவிட்டுத் தருவதற்காகவே கேட்டார். சுவடி திரிசிரபுரத்திலே குருக்கள் ஒருவரிடம் இருந்தது. தாமே பன்முறை கேட்டுப் பார்த்தார்; பிறர் வழியாகவும் வேண்டிப் பார்த்தார்; பயன்படவில்லை! பொருள் தருவதாகவும் தக்க பிணை தருவதாகவும் கூறியும் பார்த்தாகிவிட்டது. பிடிவாதம் மேலே சென்றதை அன்றி இறங்கவில்லை.

[1] மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர் ஒருவர் சுந்தரம் பிள்ளை என்பார். அவர், தம் ஆசிரியர் மனத்துயரை அறிந்தார் காரணம் வினவினார். தாம் ஆராய்ந்து வரும் தணிகைப் புராணத்திலுள்ள அகத்தியன் அருள்பெறு படலத்தின் பொருள் புலப்படாமல இருப்பதையும், சிவதருமோத்திரம் இருந்தால் அச்செய்தியைப் புலப்படுத்தக் கூடும் என்பதையும் கூறினார். சுந்தரம் பிள்ளை தம் ஆசிரியரின் தாழாக்கவலையைத் தாம் மாற்ற முனைந்தார்

சுந்தரம் பிள்ளை இரட்டைக் குதிரை வண்டியொன்றில் ஒரு பெருஞ்செல்வக் கோலத்தில் போய்க் குருக்கள்

1. புதியதும் பழையதும் - பக் 58

வீட்டின் முன்னே இறங்கினார். எடுபிடியாள். ஏவலர் சூழ இருந்தார். வீட்டுத் திண்ணையின்மேல் கம்பளம் விரித்துத் திண்டுவைத்துச் சாய்ந்திருந்தார். ஏவலர் கை பொத்தி வாய்பொத்தி நின்றனர். குருக்கள் இக்கோலக் காட்சியில் குளிர்ந்தார்! தம்மையறியாத பெருமிதத்தில் ஊர்ந்தார்! எத்தகைய பெருட்செல்வர் தேடி வந்திருக்கிறார்? பெருமிதம் ஏழாதா?

'தென்னாட்டுக் குறுநில மன்னராணர். சுந்தரம் பிள்ளை! அருமை அன்னையுடன் திருக்கோயில் உலா வந்த அவர், அன்னையைக் காய்ச்சல் நோயால் பறிகொடுத்தார்! அடக்கம் செய்தும் முடித்தார்! இறுதிக் கடனை இனிது முடித்து வைத்தற்கு வேண்டும் பொருள்களையெல்லாம் திட்டப்படுத்தித் தருதற்குத் தக்கார் இக்குருக்களே என ஊர்ப் பெரியவர்கள் உரைத்தமையால் அவரைத் தேடிக் கொண்டு வந்தார்!' புனைந்து கூறிய இப்புகழிலும் பொருட் பொலிவிலும் சிக்கிக்கொண்டார் குருக்கள்! "எக்கவலையும் வேண்டா! நானே எல்லா ஏற்பாடும் செய்கிறேன் பணம் மட்டுமே வேண்டும்! எல்லாம் இங்குக் கிடைக்கும்" என்று கூறி வேண்டும் பொருள்களுக்குப் பட்டியல் எழுதித் தந்தார்!

அப்பொழுது ஏவலருள் ஒருவர் கூறினார்: "செலவைப் பற்றிக் கவலை இல்லை; உதவி ஆள்களைப் பற்றியும் கவலையில்லை. இவர்களுக்கு ஓர் எண்ணம் இருக்கிறது. சிவதரு மோத்திரம் என்னும் புத்தகம் இருக்கிறதாம், இப்பொழுது அதைப் படித்துக் கொண்டே பொழுதுபோக்க வேண்டுமாம். அதற்காகவே தம் ஊர்க்குப் போக விரும்புகிறார். இல்லாவிடில் உங்களைக் கொண்டே எல்லாவற்றையும் முடித்துவிடலாம்."

"சிவதருமோத்திரம் என்னிடம் உள்ளது. வேண்டுமானால் பயன்படுத்திக் கொள்ளலாம் தங்களைப் போன்ற பெருமக்களுக்கு இல்லாமல் யாருக்கு இருக்கிறது?" என்று கூறிச் சுவடியைத் தந்தார் குருக்கள். "இறுதிக் கடனுக்கு ஒருவாரத்திற்கு முன்னே நீங்கள் வந்தால் போதும்" என்று

கூறினர் செல்வர் சுந்தரம்பிள்ளை! ஐந்து ரூபாயை எடுத்துக் குருக்களிடம் தந்துவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டார்!

ஆசிரியர் கையில் சுவடி கிடைத்தது! ஒரு வாரத்தில் முழுமையும் படியெடுத்துக் கொண்டனர். 'இறுதிக் கடன் இங்கே முடிக்க விரும்பவில்லை' என்று செல்வர் போய்விட்டதாகக் குருக்களிடம் கூறிச், சிவதருமோத்திரம் ஏட்டையும் ஒரு பவுனையும் கொடுத்துவிடுமாறு முன்னே ஏவலராக நடித்த ஒருவர் வழியே அனுப்பினர் சுந்தரம் பிள்ளை. இந்த நாடகத்திற்காகச் சுந்தரம் பிள்ளையின் மீசை மழிக்கப்பட்டது! ஆனல் ஆசிரியர் ஆசை நிறைவேற்றப்பட்டது.

ஒரு சுவடிக்காக பெரிய நாடகமே திட்டமிட்டு நடத்த நேர்ந்தது என்றால் ஆயிரக்கணக்கில் சுவடி தேடியவர்கள் எத்தனை நாடகங்கள் நடத்தியவர்களாகவும், நடிப்புத் திறம் மிக்கவர்களாகவும் இருக்கவேண்டும். "ஆடிக் கறப்பதை ஆடிக் கறக்கவேண்டும்; பாடிக் கறப்பதைப் பாடிக் கறக்கவேண்டும்" என்னும் பழமொழி ஏடு தொகுத்தலுக்கும் ஏற்கும் போலும்!

ஆசிரியர் சிவதருமோத்திரத்தைத் தேடி அலமந்தார். அவர் மாணவர் சாமிநாதையர் சிந்தாமணியைத் தேடிக் கொண்டு புறப்பட்டார். தஞ்சைக்குச் சென்றார். தமக்கு வேண்டிய செல்வர் ஒருவரை உடனழைத்துக்கொண்டு விருசுபதாச முதலியார் என்னும் சைனர் வீட்டுக்குச் சென்றார் சிந்தாமணிச் சுவடியை வைத்து வழிபட்டு வருபவர் முதலியார். ஐயர் அன்புடனும் பணிவுடனும் வேண்டினர். பூசையில் இருந்து எடுக்கக்கூடாது என மறுத்துவிட்டார். மேலும் வேண்டிக்கொண்ட போது, சைனர்களுக்குத்தான் கொடுப்பேனே அன்றி மற்றவர்களுக்குத் தரமாட்டேன்; அப்படித் தருவது எங்கள் வழக்கத்துக்கு மாறுபட்டது. அயல் மதத்தாராகிய உங்களுக்குக் கொடுப்பது எங்களுக்குப் பாவம்" என்று திட்டமாக மறுத்துவிட்டார்.

உடன்வந்த ஒருவர் சாமிநாதையர் திருவாவடுதுறை மடத்துக்கு வேண்டியவர் என்பதை உரைத்தார். பெரிய

இடம் எனக் கருதி உள்ளம் இரங்கலாம் அல்லவா! ஆனல் விளைவு வேருயிற்று சைவமடத்தில் பழகியவருக்குச் "சைன நூல்களில் அன்பு ஏற்படுவதற்கு முறையில்லை நான் கொடுக்கவே மாட்டேன்" என்று மீண்டும் மறுத்துவிட்டார்.

ஆயினும் ஐயர் அச்சுவடியைப் பெருமல்விட விரும்ப வில்லை. அவ்வூரில் இருந்த மராட்டிச் செல்வர் 'துக்காராம் கோல்கார்' என்பவரை அழைத்துக்கொண்டு சென்று வேண்டினர் அவர் மனம் இளகியது. சுவடியைத் தந்தார். ஆனல் சுவடி, சிறந்த சுவடி அன்று; விளக்கவுரையும் இல்லாதது!

தாமோதரம் பிள்ளை, கலித்தொகைச் சுவடியை ஓரன்பர் வழியே பெறுதற்கு விரும்பினர். அன்பர் அதனை யுடைய பெரியவரை அணுகிச் சுவடி பெறுதற்கு முயன்ருர்; மிக அரிதின் முயன்ருர். முயற்சியோ தோல்வியில் முடிந்தது ஏடு பெறத் தாம்பட்ட நிலைமையையும், அவர் தர மாட்டா நிலைமையையும் தாமோதரனுர்க்கு எழுதினர். எப்படி?

1 "அரவின் சுடிகை அரதனத்திற்கும் ஆழிவாய் இப்பியுள் முத்திற்கும் அவை உயிரோடு இருக்குங்காறும் ஆசை கொளல் வேண்டாவாறுபோல, இம்மகானுடைய சீவதிசையில் இவர் கைப்பட்ட புத்தகங்களைக் கண்ணுற் பார்க்கும் அவாவினை ஒழிக" எனப் பதில் எழுதினர்.

சுவடியின்மேல் அளவற்ற பற்றுடையவர் இவர் என்பதைத் தெரிந்துகொண்ட சிலர், அதனல் தாம் விரும்பும் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளவும் செய்துள்ளனர். 2 சொன்னல் என் மனங் கனியுமென்று பல உரைப் பிரதிகளை வருவித்துக் கொடுப்பதாகக் கூறித் தங்கள் காரியத்தை மட்டும் நிறைவேற்றிக்கொண்டு சென்ற புண்ணியவான்கள்

---

1. கலித்தொகை பதிப்புரை - பக். 30.
2. தக்கயாகப் பரணி முகவுரை XVIII

சிலர்" என்னும் குறிப்பு இத்தகையரை வெளிப்படுத்து கின்றது

சுவடி எதுவும் தாராமலே அவ்வளவும் அள்ளித்தந்து விட்டதாகக் கூறித், தமக்குத் தாமே வள்ளல் பட்டம் சூட்டிக்கொண்டாரும் இருந்தனர்.

கடையநல்லூர்ப் பள்ளிக்கூடத்து ஆசிரியர் ஒருவர் தாம் மிகுதியாக வைத்திருந்த சுவடிகளையெல்லாம் கும்ப கோணம் சாமிநாதையர் கொண்டு போய்விட்டார் என்று சாமிநாதையரிடமே கூறினார்! ஐயருக்கு ஆங்குக் கிடைத் தது அரைகுறையான சிந்தாமணிச் சுவடி ஒன்றேயாம். ஆக லால் "நீங்கள் அப்போது இருந்தீர்களா? என்று வினவித் தம்மை இன்னார் என்று ஐயர் சொன்னார். அப்போது 'நான் தெரியாமல் சொல்லிவிட்டேன்! நான் அப்பொழுது அங்கே இல்லை விடுமுறையில் ஊர்க்குப் போயிருந்தபோது என் வீட்டில் இருந்தவர்கள் அப்படிச் சொன்னார்கள்' என்றார் ஆசிரியர். எத்தனை பேரிடம் இதற்கு முன்னர் இச்செய்தி யைப் பரப்பினரோ ஆசிரியர்! எளிதாகப் புகழ் சேர்த்துக் கொள்ள அவ்வளவு ஆவல்!

ஏடு வைத்திருந்தவர்களுள் வள்ளன்மை மிக்கவர்கள் பலர் என்பதை முன்னரும் கண்டுள்ளோம் அத்தகைய வண்மையர் கொடையாலேயே வண்டமிழாகத் தமிழ்நடை போடுகின்றது. "குறுகுறு நடந்து சிறுகை நீட்டும்" இளஞ் செல்வர்களைக் காணும் பெற்றோர் மகிழ்ச்சிபோல, ஏட்டுச் சுவடியைப் பதிப்பித்து எழில் காண்பதற்கு விரும்பிய பெற் றோராக அவ்வள்ளல்கள் திகழ்ந்தனர்.

தாமோதரம் பிள்ளையின் கலித்தொகைப் பதிப்பு 1875 இல் வெளிவந்தது அதன் பதிப்புரையிலே குறிப்பிடு கிறார் "யான் முப்பத்தைந்து வருஷத்தின்முன் பிரமாதீச வருஷம் ஒருதரம் அருமையான தமிழ் நூல்கள் தேடி யாழ்ப் பாணத்திலிருந்து இக்கண்டத்தில் வந்து நடமாடியபோது கூடலூரில் மஞ்சககுப்பத்தில் சண்முக உபாத்தியாயர் என்றோர் வயோதிகரும், புதுச்சேரியில் நெல்லித்தோப்பில் சொக்கலிங்கம் பிள்ளை என்றோர் தமிழ்ப்பண்டிதரும்

கலித்தொகை வைத்திருந்தது என் ஞாபகத்திற்குவர அந்த இடங்களில் சென்று விசாரித்தேன். முன்னையவர் இருந்த இடமும் தென்பட்டிலது. பின்னையவர் இருந்த இடத்தில் விசாரித்து அவர்வமிசத்தில் அவரது தௌகித்திரியும் குடும்பமும் அடுத்த ஊரில் இருப்பதாகக் கேள்வியுற்று ஆங்கடைந்து தௌகித்திரியின் நாயகனை வினவியபோது அவர் ஏதோ கட்டுச் சுவடிகள் பூர்வார்ச்சிதமாக வைத்திருக்கிறோம். நமக்கு அவற்றின் பெயரும் தெரியாது. தங்களுக்கு வேண்டியதிருந்தாற் பார்த்து எடுத்துக் கொள்ளலாம் என்று மகா உதாரத்தோடு ஏட்டுக்கட்டை அளித்தனர்."

தேடிப்போய்க் கண்டடைந்த ஏட்டுச் செய்தி இது! தேடிவந்தும் ஏடு சேருமா? பயனெதிர்பாராமல் பயிருக்கு மழை தேடிப் போய்ப் பொழிவது இல்லையா! அப்படிப் பொழிந்தாரும் உளர்! வளமைப் பெருக்கினால் வாரி வழங்கினரா? ஆம்! உள்ளத்தின் வளமை, ஊற்றெனப் பெருகிப் பொங்கித் ததும்பியமையால் தந்த வண்கொடை அது! ஊரும் பேரும் சொல்லாமல் உதவிய வள்ளல் என வன்பரணரால் பாடுபுகழ் பெற்றனே வல்வில் ஓரி! அவனையேனும் 'பிறர் பிறர்' பேரும் ஊரும் கூறினர்! ஏடு வழங்கிய இவ் வள்ளல் பேரும் ஊரும் அறிந்தாரும் இலர்! உரைத்தாரும் இலர்! புகழும் வேண்டாப் புகழாளர் அவர்,[1]

1900 ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் நாள் கும்பகோணத்திற்கு ஒருவர் வந்தார். பெருஞ்செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த அவர், அவற்றை எல்லாம் இழந்து. வீடும் வீட்டில் இருந்த பொருள்களும் 'ஏலம்' போடும்படியான சூழ்நிலைக்கு ஆட்பட்டிருந்தார் ஆனல் அவர் தமிழ் நெஞ்சம் ஏடுகளை ஏலம் போட்டு எவர் கையிலோ போய்ப் பாழ்ப்பட்டுப் போதலை விரும்பவில்லை. தக்க இடத்தில் தமிழ் ஏடுகளைச் சேர்ப்பித்தல் வேண்டுமென எண்ணினர். எல்லாவற்றையும் கட்டிக் கொண்டு கும்பகோணத்திற்கு

1 கலித்தொகை. பதிப்புரை - பக் 29.

வந்தார். சாமிநாதையரே அவ்வேடுகளைப் போற்றுதற்குரிய புகழாளர் என்பதை உணர்ந்தே அங்கு வந்தார்.

தம் வருகையை அக்காலத்தில் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த சாம்பசிவம் என்னும் மாணவர் வழியே சாமிநாதையர்க்கு அனுப்பினார் ஏடுகள் கொண்டு வந்திருக்கும் செய்தி எட்டியதும் ஐயருக்கு இருப்புக் கொள்ளவில்லை. அப்பொழுதே அள்ளிப் பருக ஆவலுற்றார். 'மாலையில் நான் செல்லும்வரை விடுதியில் அவர் இருப்பார். அவர் தம் பெயரையும்கூற விரும்பவில்லை. தம்மை யாரும் பார்ப்பதையும் விரும்பவில்லை. தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமைக்கு மிக நாணி எவர் முகத்தையும் பார்ப்பதில்லை. ஏடுகள் நிரம்பக் கொண்டு வந்துள்ளார்'' என்றார். அவ்வளவு ஏடுகளுக்கும் பணம் தர இயலுமோ? எவ்வளவு கேட்பாரோ'' என்னும் திகைப்புக்கு ஆளானார் ஐயர். மாணவர்கூறினார்: ''ஏடுகளைப் போற்றிப் பயன்படுத்துவாரைத் தேடி வந்தேனே அல்லாமல் பொருளுக்கு விற்க வந்தேன் இல்லை என்று அவர் திட்டமாகக் கூறினார்'' ஐயர் இரட்டிப்பு மகிழ்ச்சிக்கு ஆட்பட்டார். அலைந்து அலைந்து ஆறாத் துயர் பட்டபாடு அவருக்கன்றோ தெரியும்! வீடுதேடி ஏடு ஒரு நூறுக்கு மேலே வருகிறது என்றால் விம்மிதம் அடையமாட்டாரோ?

வீட்டுக்குப் போனவுடனே மாணவர் சாம்பசிவம் தம்மால் சுமக்குமளவும் அள்ளிக்கொண்டு வந்தார். தாமும் வருவதாகக் கூறினார் சாமிநாதையர். ''வரவேண்டா! வந்தால் அவர் மறைந்துவிடுவார்; பார்க்க அவர் விரும்பவே இல்லை!'' என்று தடுத்தார். பின்னும் நாலைந்துமுறை சுமக்குமளவும் அள்ளிக்கொண்டு வந்தார் இறுதியாகத் தாம் பார்த்துத் தம் நன்றியையாவது சொல்லவேண்டுமே எனத் தவித்தார். அவர் விரும்பா விட்டாலும் தாம் சென்று அவரைக் காணல் கடமை எனக்கருதி விடுதிக்குப் போனார். ஏடு தந்த வள்ளலை அங்கே காணவில்லை. தக்க இடத்தில் ஏடுகளை ஒப்பித்த அமைதியிலே அவர் போய்விட்டார்! அப்[1] ''பேருபகாரியினிடம் உபகாரம் பெற்றும் நான் அவரை

1. நல்லுரைக் கோவை - III, 119.

அறியக்கூடவில்லை" எனவருந்தினர். அவர்தம் குணமாண்பை எண்ணி உருகினர்.

ஊரும் பேரும் சொல்லாமல் சுவடி வழங்கிய அச் செல்வர் ஏடுகளுள் ஒன்றாக இருந்ததே 'தமிழ்விடு தூது' "என் வாழ்க்கையின் லட்சியம் அந்த நூலில் இரண்டடிகளிலே சொல்லப்பட்டிருப்பதைக் கண்டேன்" என்று பூரிக்கிறார் ஐயர். பின்னே தாம் இரண்டடிகளை இயற்றித் தம் கொள்கை விளக்கப் பாடலாக அமைத்துக்கொண்டார். அப்பாட்டு வருமாறு:

1 "இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"
— திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர வடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்!

இன்னார் எனத் தம் பெயரைக் கூறவில்லை என்றாலும் 'ஏடு வழங்கிய வள்ளல்' என்னும் பெயரோடு என்றும் வழங்குவார். 'குப்பைக் கோழியார்' 'அணிலாடுமுன்றிலார்' 'வில்லக விரலினார் என்னும் புலவர் பெயர்கள் இல்லையா! 'அரும்பதவுரையாசிரியர்' 'உரையாசிரியர்' 'பழைய உரையாசிரியர்' 'தக்கயாகப் பரணி உரையாசிரியர்' என உரையாசிரியர்கள் பெயர்கள் நிலவவில்லையா! ஏன்? 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' என்றாரே அவர் பெயர் என்ன? 'தமிழ்விடு தூது ஆசிரியர்' என்பதுதானே!

"கைமாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றும் கொல்லோ உலகு"

1. தமிழ்த்தெய்வ வணக்கம். தக்கயாகப் பரணி முகவுரை.

11. பதிப்புப் பணி

வாழ்வு 'நீர் மேல் எழுத்துப்' போன்றது. அவ் வாழ்வைக் 'கல்மேல் எழுத்து' ஆக்கிக்கொண்ட பெருமக்கள் பதிப்புத் துறையில் ஈடுபட்டவர்கள் ஆவர். இவர்களை 'மன்னு உலகத்து மன்னுதல் குறித்துத் தம் புகழ் நிறீஇய' பெருமக்கள் எனலாம்.

மணல்மேல் தடம் வைத்தவர். மற்றை நொடியே மறையக் காண்பர். கல்மேல் தடம் பதித்து வைத்தவர் காலவெள்ளம் கடந்தும் கவினுறக் காட்சி வழங்குவர். வழி வழியே எம் தந்தையர், அவர் தந்தையர், அவர் முந்தையர் என்று பெருமிதம் எய்தப் பேருடன் வாழ்வர்.

[1] "பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே!"

என்னும் பாரதியார் வாக்கை நோக்குக.

மேல்நாட்டவர் தொடர்பால் நம் நாட்டினர் அச்சுக் கலையை அறிந்தனர் என்பதை முன்னரே கண்டுள்ளோம். அச்சு எழுத்து வார்க்கப்பட்ட எழுத்து. மரக்கட்டைகளில் எழுத்தைச் செதுக்கிப் பக்கம் பக்கமாக அச்சிட்ட காலமும் இருந்தது. பின்னர்த் தனித்தனி எழுத்தை அமைத்து அடுக்கும் வளர்ச்சியுற்றது. எழுதாமல் பதிக்கும் இவ் வெழுத்தை நம்முன்னோர் 'எழுதா எழுத்து' என்றனர்.

---

1 மகாமகோபாத்தியாயர் - 3.

1883 ஆண்டில் வெளிவந்த சீவக சிந்தாமணிப் பதிப்புக்குச் சிறப்புப் பாயிரம் வழங்கிய புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார்,

"கனக சபைமால் தனதுநல் லுதவியால்
எழுதா எழுத்தில் இயைவித் தனனால்"

எனக் குறிப்பிடுகிறார். இதனைத் 'தீட்டுதலிலா எழுத்து' என்றும் கூறினர். ஆறுமுக நாவலரின் திருக்குறள் பதிப்புக்குச் சிறப்புப் பாயிரம் வழங்கிய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை,

"தீட்டுதலி லாவெழுத்தி லியைவியென உலகுபுகழ்
செய்பி நாடன்"

என்பதால் இதனை அறியலாம்.

முதற்கண் வெளியிட்ட அச்சு நூல்கள் பல ஏட்டுச் சுவடியில் எழுத்துகள் இருப்பது போலவே இருந்தன, திருத்தக் குறிகளோ, ஒற்றைக்கொம்பு இரட்டைக்கொம்பு வேறுபாடுகளோ, மெய்யெழுத்தில் புள்ளிகளோ இல்லை சான்றாக 1812-ஆம் ஆண்டில் அறிஞர் எல்லிஸ் (F. W. Ellis) வெளியிட்ட திருக்குறள் பதிப்பை மேலே காண்க

பட்டறிவு முதிர முதிர எழுத்தின் வடிவம் செப்பமாகியது; குறியீடுகளும் பயன்படுத்தப் பெற்றன. குறியீட்டு விளக்கத்தை ஒரு நூல் விளம்பரப்படுத்துகின்றது.

,இப்புள்ளி கூட்டுச் சொல் முதலியவற்றின் பின்னும், - இச்சிறு கீற்றுச் சொற்களின் பிரிவுக்குப் பின்னும், — இப் பெருங்கீற்றுப் பதசாரத்துக்குப் பின்னும், ( ) இவ்விரு தலைப்பிறை வருவிக்கப்பட்ட சொற்களுக்கும், இக்குத்து முற்றுச் சொல்லுக்குப் பின்னும். [ ] இவ்விருதலைப் பகரந் தாத்பரியத்துக்கும், * இத்தாரகை அடியிற் காட்டபட்டவற்றிற்கும் வைக்கப்பட்டன.

—இது 1875-ஆம் ஆண்டில் சென்னை, பூமகள் விலாச அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்ட 'நிட்டானுபூதி' என்னும் நூலில் காட்டப்பட்டுள்ளது ஆகும்.

இனிப் பழந்தமிழ் நூல்கள் அச்சிடப் பெற்ற வரலாற்றை அவற்றின் காலமுறைப்படி காண்போம். இத் தொடக்கத்துக்கு முன்னரும், இடையிடையேயும் இடைக் கால பிற்கால இலக்கிய இலக்கணங்களும், உரைநடை நூல் களும், பிறவகை நூல்களும் வெளிப்பட்டுள்ளன. அவற்றை யெல்லாம் வரன்முறையே குறிப்பிடவில்லை. நாம் ஆராய்வது பழந்தமிழ் நூல்களின் பதிப்புகளைப் பற்றியேயாம்.

திருக்குறள் - நாலடியார் - மூலம்

1812

'திருக்குறள் மூல பாடம்' 'நாலடியார் மூல பாடம்' என்னும் இரண்டு நூல்களும் ஒன்றாக 1812-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. திருக்குறள், நாலடியார் ஆகிய இரண் டன் முதற்பதிப்பு இந்நூல்களே ஆகும்.

மரஎழுத்தால் அச்சிடப்பெற்ற நூல்கள் இவை. முற்றுப்புள்ளி, கீற்று ஆகிய குறிகள் மட்டும் உள்ளன. மெய் யெழுத்துகளுக்குப் புள்ளியிடப் பெறவில்லை. ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு வேறுபாடுகள் இல்லை. ஏறக் குறைய ஏட்டுப்படி எழுத்தெனவே அமைந்துள்ளது.

[1] இதன் முதற்பக்கம் வருமாறு:

திருக்குறள்

மூலபாடம்

தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார்
அருளிச் செய்தது

[2] இது

பொத்தகம்

---

1. நாம் எழுதும் முறையில் எழுதப்பெற்றுள்ளது.

2 ஒன்றனுள் ஒன்றடங்கிய இருவட்டங்களின் இடையே அமைந்துள்ளது

இலக்கண விலக்கிய வாராய்ச்சி யுடையவர்களா லிகிதப் பிழையற வாராய்ந்து சுத்தபாடமாக்கப்பட்டது

தொண்டை மண்டலம்
சென்னைப் பட்டினத்தில் தஞ்சைநகரம்
மலையப்பபிள்ளை குமாரன்
ஞானப்பிரகாசனால்
அச்சிற்பதிக்கப்பட்டது

மாசத் தினச் சரிதையின் அச்சுக்கூடம்
[1] இ. ஆண்டு ௧௮௧௨
1812

இந்நூலின் இரண்டாம் மூன்றும் பக்கங்களில் நூல் வரலாறு, ஆராய்ந்தமுறை, ஆராய்ந்தவர், ஒப்புக்கொண்டவர் பற்றிய விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இதனை ஆராய்ந்து பதிப்பித்தவர் திருநெல்வேலி அம்பலவாண கவிராயர்.

இதன் இரண்டாம் மூன்றும் பக்கங்களின் செய்திகள் வருமாறு:

திருக்குறளும் நாலடியாரும்

(உ)

வரலாறு

கற்றுணர்ந்த தமிழாசிரியர்கள் அருமையின் இயற்றிய - இலக்கண விலக்கியங்களாகிய - அரிய நூல்களெல்லாம் - இந்நாட்டில் - அச்சிற் பதிக்கும் பயிற்சியின்றிக் கையினாலெழுதிக்கொண்டு வருவதில் - எழுத்துக்கள் குறைந்தும் மிகுந்தும் - மாறியுஞ் சொற்க டிரிந்தும் பொருள் வேறுபட்டும் பாடத்துக்குப் பாடம்-ஒவ்வாது பிழைகள் மிகுதியும்

1. இ. ஆண்டு இங்கிலீசு ஆண்டு.

உண்டாகின்றவாதலால்-அவ்வாறு பிழைகளின்றிச் சுத்தப் பாடமாக நிலைக்கும்படி அச்சிற் பதித்தலை வழங்குவிப்பதற் குத்தேசித்து நூலாசிரியர்களுள் தெய்வப்புலமைத் திருவள் ளுவ நாயனாரருளிச் செய்த அறம் பொருள் இன்பமென்னும்-முப்பாலையும் நுட்பமாக விளங்க வுணர்த்துந் திருக்குறள் மூலபாடமும் - முனிவர்கள் அருளிச் செய்த நீதி நூலாகிய நாலடி மூல பாடமும் இப்போ தச்சிற் பதிக்கப்பட்டன.

—

இவை அச்சிற் பதிக்குமுன் தென்னாட்டில் பரம்பரை ஆதீனங்களிலும் வித்துவ செனங்களிடத்திலுமுள்ள சுத்த பாடங்கள் பலவற்றிற்கு மிணங்கப் பிழையற - இலக்கண விலக்கிய வாராய்ச்சி யுடையவர்களா லாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டன

—

இஃதுண்மை பெற - திருப்பாசூர் முத்துச்சாமிப் பிள்ளை திருநெல்வேலிச் சீமை - அதிகாரி - ம - ராமசாமி நாயக்கர் முன்னிலையிலன்னாட்டிலிருந் தழைப்பித்த சுத்த பாடங்களுடனெழுதி வந்த வரலாறு

(௩)

இந்தப் பொத்தகத்தி லெழுதிய தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனா ரருளிச் செய்த திருக்குறள் பாடமும் நாலடியார் மூல பாடமும் திருவள்ளுவ மாலையும் - ஆக - மூன்று சுவடியும் வெகு மூல பாடங்கள் - உரை பாடங்கள் அதற்குக் கருவியாகவேண்டும் - இ ல க் க ண விலக்கியங்க ளெல்லாம் வைத்துப் பரிசோதித்துப் பாடந் தீர்மானம் செய்து - ஒரெழுத்து ஒரு சொல் நூதனமாகக் கூட்டாமற் குறையாமலனேக மூல பாடங்களுரை பாடங்களுக் கிணங் கினதாகத் தீர்மானம் பண்ணி யந்தப் பாடம் பார்த்தெழு திச் சரிபார்த்த பாடமாகையாலும் - அந்தப்படி தீர்மானம் பண்ணியெழுதின பாடமென்பதும் - இவடங்களிலிருக்குந்

தமிழாராய்ச்சியுடைய மகாவித்துவ செனங்களாற் பார்க்கும்போது மவர்கள் கருத்திற்றோன்றப்படும் - ஆகையாலும் பாடங்களி லெவ்வளவேனுஞ் சந்தேகப்பட வேண்டுவதின்று

இப்படிக்கு
திருநெல்வேலி
அம்பலவாண கவிராயர்

—

இந்தப் பாடங்களை இவடம் வந்திருந்த திருவாவடுதுறை - ஆதீன வித்துவான் அம்பலவாணத் தம்பிரான் சீர்காழி வடுகநாத பண்டாரம் - இவர்களாலு மறுபடி கண்ணோட்டத்துடனாராயப் பட்டன

—

இந்த உரைநடைப் பகுதியில் நிறுத்திப் படிக்கவேண்டிய இடங்களுக்குக் கீற்றுக் குறியிட்டிருப்பது நோக்கத்தக்கது. காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலாய நிறுத்தக்குறிகள் பயன்படுத்தப்பெறவில்லை மூலபாடத்தில் முற்றுப் புள்ளியுண்டு. ஆனால் ஆங்கிலத்தில் அச்சிடப்பெற்ற இக்காலப் பதிப்புகளிலும் குறியீடுகள் செப்பமாகப் போற்றப் பெற்றுள்ளன. அதனை 'எல்லீசரின்' திருக்குறள் பதிப்பிலே காணலாம்.

திருக்குறளுக்கு அமைந்த வரலாறு, ஆராய்ச்சி முதலியவனவெல்லாம் நாலடியார்க்கும் உண்டு. முதற்பகுதி திருக்குறளும், பிற்பகுதி நாலடியாரும் அச்சிடப்பெற்று ஒரே நூலாக வெளிப்பட்டன. இதே ஆண்டில் அறிஞர் 'எல்லிசு' திருக்குறள் பதிப்பு வெளிவந்தது இரண்டிலும் 1812-ஆம் ஆண்டே குறிப்பிடப்பெற்றுத் திங்கள் குறிக்கப் பெறுமையால் எப்பதிப்பு முன்னையது எப்பதிப்புப் பின்னையது என்பதைத் தெளிவு செய்ய முடியவில்லை ஆனால் திருக்குறளின் முழு மூலப்பதிப்பு அம்பலவாண கவிராயருடையது

ஆகலின் அதனை முதற்கண் வைக்கப்பெற்றது மற்றொரு காரணம் பின்னே கூறப்பெறும்.

திருக்குறள் - 1812

TIRUKKURAL
ON VIRTUE

F. W. ELLIS' COMMENTARY

FIRST EDITION

1812

இது தலைப்புப் பக்கம். இதன் முதற்பக்கச் செய்தி வருமாறு தமிழ் எழுத்து அதிலுள்ளவாறே அமைக்கப்பட்டுள்ளது.

அறபபால

ON VIRTUE

CHAP - 1.

கடவுள வாழததது The prase of god

The literal meaning of the title of this chapter is preserved in the translation According to established rule all Tamil Compositions ought and with few exceptions all do commence by an invocation of the brity, Varying according to the seat of the writer. Tiruvalluvar has devoted the whole of this chapter to this subject.

1

அகர முதல வெழுததெலலா மாதி
பகவன முதறறே யுலகு (க)

As ranked in every alphabet the first the self - same vowel stands, so in all words.

Th' elernal God is chief

முதற்குறளுக்கு மூன்றுபக்க அளவில் உரை விளக்கம், ஆங்கிலம் தமிழ் மேற்கோள்கள் ஆகியனவற்றைத் தந்துள்ளார்.

பிறவிப் பெருங்கடல் என்னும் குறளுக்கு 9 பக்கங்களில் உரை விளக்கம் வரைந்துள்ளார். திருவாய்மொழி, திருவாசகம், சிவவாக்கியர் பாடல்கள், தேம்பாவணி முதலியவற்றில் இருந்து 26 செய்யுள்களை மேற்கோள் காட்டி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ஆங்கிலப் பதிப்புகளில் அந்நாளிலேயே கொள்ளப் பெற்றிருந்த செப்பங்களெல்லாம் எல்லீசர் திருக்குறள் பதிப்பால் புலப்படுகின்றன. எல்லீசர் பதிப்பில் அம்பலவாணர் பதிப்பில் காணாத ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு வேறுபாடுண்டு. ஆதலால் அதற்கு இது பிற்பதிப்பு ஆகலாம். மேலும் தமிழ் எழுத்துகளில் மெய்யெழுத்திற்குப் புள்ளியும் உண்டு; புள்ளியில்லாமையும் உண்டு. இவ்வாறு ஒருபாற் படாதமைந்துள்ளன.

1812-ஆம் ஆண்டு சிறப்பாகக் குறிக்கத்தக்க ஓர் ஆண்டு ஆகும். திருக்குறள் அச்சு வடிவில் வெளிப்பட்டதனால் அன்று. அஃது அச்சு வடிவில் வருதற்குரிய சூழல் 1812-ஆம் ஆண்டிலேயே உண்டாயிற்று. அச்சுத் தடைச் சட்டம் 1835-ஆம் ஆண்டிலேதான் நீக்கப் பெற்றது என்பதை அறிந்துள்ளோம். அந்நிலையில் அதற்கு 23 ஆண்டுகளுக்கு முன்னரே திருக்குறள் அச்சில் வெளிப்பட நேர்ந்த வாய்ப்பு அருமையானதாம்.

வாணிகம் செய்தற்கு வந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்திய நாட்டை ஆளும் உரிமை பெற்றனர் அவர்கள் ஆட்சிக்கு வேண்டிய அலுவலர்களை இங்கிலாந்து நாட்டிலிருந்து கொணர்ந்தனர். அவர்களுக்கு இந்நாட்டு மொழியில் பயிற்சி தரவேண்டிய இன்றியமையாமை ஆங்கிலக் கம்பெனிக்கு ஏற்பட்டது. அதனால் சென்னைக் கல்விச் சங்கம் என்னும் ஓர் அமைப்பை நிறுவினர் சென்னை மாநிலத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளைப் பேசும் மக்கள் இருந்தனர். அவ்வம்மொழியில்

ஓரளவேனும் பயிற்சியிருந்தால் அல்லாமல் அம்மக்களுடன் அலுவலர்கள் தொடர்பு கொள்ள இயலாது. எனவே தக்க புலவர்களை அமர்த்தி அவ்வம் மொழிப்பயிற்சி தந்தனர். இதனை நிறுவியவர்கள், நாம் முன்னே கண்ட கர்னல் காலின் மெக்கன்சியும், எல்லீசு துரைமகனாரும் ஆவர். எல்லீசு துரைமகனார் அந்நாளில் சென்னையில் மாவட்ட ஆட்சியாளராக இருந்தார். மெக்கன்சி பொறியாளராக இருந்தார். இருவரும் புலமையாலும், மொழித் திறத்தாலும் ஒன்றுபட்டிருந்தனர். செயலாலும் நெருங்கி நின்றனர்.

நாட்டு மொழிப் புலமை இருந்தால் அன்றி அலுவலர்க்கு ஆண்டு ஊதியக் கூடுதல் இல்லை என்றால் ஆர்வத்துடன் படிக்கமாட்டாரா? 'பணம் பத்தும் செய்யும்' என்பது பழமொழியல்லவா! அலுவலர் படிப்பதற்கு இரண்டு வாய்ப்புகள் வேண்டும். ஒன்று ஆசிரியர்கள்; மற்றொன்று நூல்.

சென்னைக் கல்விச் சங்கத்திற்குச் சிதம்பர உபாத்தியாயர் என்பார் தமிழாசிரியராக இருந்தார். பின்னே தாண்டவராய முதலியார், முத்துசாமிப் பிள்ளை, புதுவை நயனப்ப முதலியார், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர். மதுரைக் கந்தசாமிப் புலவர் ஆகியோர் தமிழாசிரியர்களாக விளங்கினர் இனிப், படிப்பதற்கு இன்றியமையாதவை நூல்கள். இதனை நிறைவு செய்தற்கு எழுந்த நூல்கள் [1] 'திருக்குறள் நாலடியார்' பதிப்புகள் என்க. சங்கத்தைத் தோற்றுவித்த எல்லீசரே நூலும் உருவாக்கிப் படைத்தமை அவர்தம் செயல் மாண்பை வெளிப்படுத்தும்.

---

1. 1811-ஆம் ஆண்டில், ஆங்கிலேயர் தமிழ் கற்பதற்காகத் 'தமிழ் விளக்கம்' என்றொரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. அதனை எழுதியவர் திருவேற்காடு சுப்பராய முதலியார் என்பார். இதன் விளக்கத்தை 19-ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் 130, 131-ஆம் பக்கங்களில் காண்க.

திருக்குறள் மூலமும் உரையும்
(1830)

"தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறளினுரை" என்பது இதன் தலைப்புப் பெயர் இவ்வுரை "திருத்தணிகைச் சரவணப் பெருமாளையரால் பரிமேலழகர் உரையைச்சுருக்கி வெளிப்படையாக்கிப் பதவுரையும் தாற்பரியவுரையுமாகச் செய்யப்பட்டது. இதனோடு திருவள்ளுவமாலைக்கும் உரைசெய்து சேர்த்திருக்கின்றது" சரவணப்பெருமாளையர் உரைவரைந்தாராயினும் விசாகப் பெருமாளையரும் இணைந்தே பதிப்பித்தார் என்பது நூலின் இறுதிப் பகுதியால் வெளிப்படுகின்றது. அன்றியும் அவர்கள் முந்தையோரைப் பற்றிய அரிய குறிப்புகளும் ஆங்கு விளங்குகின்றன,

"திருத்தணிகைச் சிர்கருணீகர் மடாலயத்திற்கு அதிபர் விருபாட்சையர் - இவர் குமாரர் முத்தையர் - இவர் குமாரர் சாம்பசிவ ஐயர் - இவர் குமாரர் கந்தப்பையர் - இவர் குமாரர்களாகிய விசாகப்பெருமாளையரும், சரவணப் பெருமாளையரும் அச்சிற் பதிப்பித்த திருவளளுவர் உரையும் திருவள்ளுவமாலையும் முற்றுப் பெற்றன" என்பது அது.

இப்பதிப்பே திருக்குறளின் மூலமும் உரையும் கூடிய முதற்பதிப்பு எனலாம். விசாகப் பெருமாளையர் 1828-ஆம் ஆண்டிலேயே பதிப்பாசிரியராக விளங்கினார். அவர் அப்பொழுது பதிப்பித்தது இலக்கணச் சுருக்க வினாவிடை என்பது.

1833-ஆம் ஆண்டில் வெளிவந்த 'வாக்குண்டாம்' என்னும் நூல் 'பிரசித்த பத்திரிகை' என்பதில் திருவள்ளுவர் குறளுரை ரூ. 8-00 என்று விளம்பரம் செய்யப் பெற்றுள்ளது இப்பதிப்பே ஆகலாம்.

சரவணப் பெருமாளையர் பதிப்பித்த திருக்குறள் உரை அச்சிடப் பெற்ற நூலின் 'நகல்' ஏட்டுப் படியாக[1] எனக்குக் கிடைத்தது. அதன் முகப்புப் பக்கம் வருமாறு:

"தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறளினுரை

சென்ன பட்டணத்திற் கனம் பொருந்திய பிரபுக்க ளேற்படுத்தின விவேகக் கல்விச் சாலைத் தமிழ்த் தலைமைப் புலவராகிய திருத்தணிகைச் சரவணப் பெருமாளையராற் சிறுவர் முதலிய யாவரு மெளிதினுணரும் படியாகப் பரிமே லழகருரையைச் சுருக்கி வெளிப்படையாக்கிப் பதவுரையுந் தாற்பரியவுரையுமாகச் செய்யப்பட்டது - இதனோடு திரு வள்ளுவ மாலைக்கு முறை செய்து சேர்த்திருக்கின்றது. கலியுக ௵ சகூ௩௧ சாலிவாகன சக ௵ ௧எ௫௨ இங்கிலீசு ௵ ௧௮௩௰ - இதில் நிகழ்கின்ற விகிர்தி ௵ சென்னபட்டணத் தில் அச்சிற் பதிக்கப்பட்டதுக்கு நகல்"

அச்சிற் பதிப்பிக்கப் பெற்ற நூலுக்கும் ஏட்டுச் சுவடி யில் படியெடுத்து வைத்திருப்பது வியப்பான செய்தி அன்றோ! இவ்வேட்டின் எழுத்தும் தடையின்றிப் படிக்கும் வகையில் திருத்தமாக அமைந்துள்ளது இதனை எழுதிய திருக்கை மாண்பை இவ்வேடு பறையறைதல் ஒருதலை.

திருக்குறள்

இராமாநுச கவிராயர் பதிப்பு 1840

திருக்குறள் இல்லறவியல் 24 அதிகாரங்களும் உரை யுடன் கூடிய பதிப்பு இது. இதன் பதிப்பாசிரியர் இராமாநுச கவிராயர் அதில் "இராமாநுசர் வெள்ளுரை யும் புத்துரையும், துறு ஐயர் செய்த ஆங்கிலமொழி

---

1. இதனை அன்புடன் வழங்கியவர் புலவர் திரு. மார்க்கண்டேயனார். இதனை எழுதி யவர் இவர் தாய்வழிப் பாட்டனாரும், மயூராச புராணம் இயற்றியவருமாகிய வி. தியாகராச கவிராயர் என்பார்.

பெயர்ப்பும்'' என்னும் குறிப்புள்ளது. ஆங்கில மொழி பெயர்ப்பு, நூலின் இறுதிப் பகுதியில் தனியே உள்ளது. அமெரிக்கன் மிசியோன் அச்சுக் கூடத்தில் 1840ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது.

இராமாநுச கவிராயர் பதிப்பித்த திருக்குறளின் இரண்டாம் பாகம் 1852இல் வெளிவந்தது கவிராயரும் துரு ஐயரும் இணைந்து பதிப்பித்த பதிப்பு இது இதில் திருக்குறள் துறவறவியலுடன் அரசியலும் இணைந்து (குறள் 630 முடிய) உரைவிளக்கம் பெற்றுள்ளன. இதில் பின் இணைப்பு (Index Verborum) 11 பக்கம் உள்ளது இது வேப்பேரி மிசியோன அச்சுக் கூடத்தில் பதிக்கப்பட்டது.

இதன் தலைப்புப் பக்கம் ;

Cural of Tiruvalluvar
Second Part
Ramanuja Kavirayar
and
W. H. Drew
Madras 1852.

திருக்குறள் தெளிபொருள் விளக்கம்

வேதகிரி முதலியார் பதிப்பு 1849

களத்தூர் வேதகிரி முதலியார், திருக்குறளுக்கு எழுதிய 'தெளிபொருள் விளக்கம்' என்னும் உரையுடன் வெளிவந்த நூல் இது. 'திருவள்ளுவர் என்கிற திருக்குறள் மூலமும் தெளிபொருள் விளக்கம் என்கிற புதன் உரையும் கருத்துரையும் நிறைவேறின'' என்றும், ''இக்காமத்துப் பாலுக்குக் காமத்தைக் குறித்துச் செம்பொருளாகச் சொல்லப்பட்ட இச்சிற்றின்பப் பொருளன்றி மோட்சத்தைக் குறித்துக் குறிப்புப் பொருளாகச் சொல்லப்பட்ட பேரின்பப் பொருளும் உண்டு'' என்றும் குறிப்புகள் இந்நூலில் உள்ளன.

திருக்குறள் மூலமும் உரையும்

வேதகிரி முதலியார் 1856

"மதுரை புதுவை சென்னை இச்சங்கங்களில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய களத்தூர் வேதகிரி முதலியார் செய்த பதவுரை கருத்துரை விசேடவுரைகளுடன் பல இலக்கண மேற்கோள் கொடுத்துப் பதித்த பிரதிக்கிணங்கச் சிந்தாதிரிப்பேட்டை நெல்லுமண்டி வேங்கடராம முதலியார் குமாரர் கேசவ முதலியாரால் பிரபாகர அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது." இதில் திருவள்ளுவமாலை உரையுடன் உள்ளது இராட்சத ஞூ தை மீ. வெளிவந்தது இது.

திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்

நல்லூர் ஆறுமுக நாவலர் பதிப்பு 1861

"இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுசாமித் தேவர் வேண்டுகோளின்படி யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரால் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து வெளியிட்ட" பதிப்பு இது. சென்னபட்டணம் வாணிநிகேதன வச்சுக் கூடத்தில் துன்மதி ஞூ வைகாசி மீ பதிப்பிக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு யுவ ஞூ ஆடி மீ வெளியாயது (1875)

இப்பதிப்பில் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அவர் மாணவர்கள் சி. தியாகராச செட்டியார், ச. தெய்வநாயகம் பிள்ளை, சோடசாவதானம் வீ. சுப்பராயச் செட்டியார் ஆகியவர்கள இயற்றிய சிறப்புப் பாயிரச் செய்யுள்கள் உள்ளன.

ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும் பக்க எண், அதிகார எண், அதிகாரப் பெயர் ஆகியவை அடங்கியுள்ளன. குறளுக்குத் தொடர் எண் கொடுக்கப்பட்டுள்ளது அது அவ்வக் குறளின் முன்னே தொடுக்கப்பட்டுள்ளது. அவ்வக் குறளின் இரண்டாம் அடி இறுதியிலும், அக்குறளின் உரை

முடிவிலுமாக இரண்டிடங்களிலும் அவ்வதிகாரத்தில் அஃது எத்தனையாவது குறள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளன. பயன்படுத்தப்பட்டுள்ள எண்கள் எல்லாமும் தமிழ் எண்களே; எட்டுப் பக்கங்கொண்ட படிவக் குறிப்பு எண்களும் தமிழ் எண்களே! நாவலர் பதிப்பு மாண்புநூலில் நன்கு வெளிப்படுகின்றது. அடிக்குறிப்பு, பாலியலதிகார வகராதிகள், திருக்குறளகராதி என்பவற்றை நோக்க ஒரு நூற்றுப் பதினாறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பதிப்பு என்னும் எண்ணமே எழுவதில்லை.

வேதகிரி முதலியார் பதிப்பும், சரவணப் பெருமாளையர் பதிப்பும் பின்வந்த பலராலும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பதிப்பாசிரியர் பெயர்களால் வெளியிடப் பெற்றுள்ளன. 'அவர்கள் ஆய்ந்தது' என்று பெயரைப் போட்டுக்கொண்டு எவரும் வெளியிடலாம் என்ற அளவில் அவர்களுக்குச் செல்வாக்கு இருந்தது. இவருரையை அவருரை என்றும், அவருரையை இவருரை என்றும் பதிப்பித்தாரும் உளர். அப்பதிப்புகள் பலவாக இருத்தலின் விரிவஞ்சி விடுத்தாம்.

திருக்குறளதிகார ஸ்வருப சூசகம்
1863

இந்நூல் திருக்குறள் அதிகாரம் ஒவ்வொன்றன் பொருள் பற்றிய பொதுக் குறிப்புடையதாகும். இதனை இயற்றியவர் திருவல்லிக்கேணி வரதப்ப முதலியார். பதிப்பித்தவர் சிந்தாதிரிப்பேட்டை முனிசாமி முதலியார். பதிப்பிக்கப்பட்ட காலம் ருத்ரோத்காரி ௵ கார்த்திகை ௴

திருக்குறள் - மணக்குடவர் உரை
1917

திருக்குறள் மணக்குடவர் உரையை முதற்கண் பதிப்பித்தவர் வ. உ. சிதம்பரனார் ஆவர். மணக்குடவர் உரை, வள்ளுவர் கருத்தைத் தெள்ளென விளக்குவதாகவும், இனிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்றதாகவும் இருக்கக் கண்டு அதனை ஆய்ந்து பதிப்பிக்க விரும்பினார்.

மணக்குடவர் உரைப் பிரதி ஒன்றைத் தேடிப் பெற்றார். வ. உ. சி. அதனை அரசினர் கையெழுத்துச் சுவடி நூல் நிலையச் சுவடியுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தார். டாக்டர் சாமிநாதையரிடத்திருந்தும் ஒரு சுவடி கிடைத்தது. இவற்றை வைத்துக்கொண்டு, தி. செல்வக்கேசவராய முதலியார், த. கனகசுந்தரம் பிள்ளை, சகசானந்த சுவாமிகள் ஆகியவர்கள் உடனிருந்து ஆய்ந்தார். தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்திய அன்பர்கள் பொருளுதவியால் வெளியிட்டார்.

மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் ஒப்பிட்டு ஆராயும்போது அதிகாரமுறையில் சிறிதும், குறட்பாக்களின் முறையில் பெரிதும் வேறுபட்டிருக்கக் கண்டார். பல குறள்களில் வெவ்வேறு பாடங்களும் பலவற்றுக்கு வெவ்வேறு பொருள்களும் இருக்கத் தெளிந்தார்.

எளிதில் கற்குமாறு மூலத்தையும் உரையையும் சந்தி பிரித்துப் பதிப்பித்தார் வ உ சி. மணக்குடவர் உரையுடன் தம் சொந்தச் சரக்குகளையும் சேர்ந்துள்ளதை இருதலைப் பகரத்துள் இணைத்துள்ளார். மற்றும் [1]"ஸ்ருஷ்டி ஸ்திரி ஸம்ஹாரம்' என்னும் மூன்றையும் புரிந்து மணக்குடவர் உரையை அச்சிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

'வ. உ. சிதம்பரம் பிள்ளை, பிரம்பூர் சென்னை' என்றும் முகவரியும், 'K. R. Press Madras 1917' என அச்சுக்கூடப் பெயரும் உள. பிரம்பூர், சென்னை. பிங்கள ஹூ சித்திரை மீ 13௳ வ. உ. சிதம்பரம் பிள்ளை' எனப் பதிப்புரை இறுதியில் இடமும் காலமும் பெயரும் குறிப்பிட்டுள்ளார். அதிகார அட்டவணை முன்னிணைப்பும், எனது நூல்களுக்குத் தென்னாப்பிரிக்காவிலிருந்து பொருளுதவிய இந்திய சகோதரர்களின் பெயர்கள் முதலியன" என்னும் ஒரு பின்னிணைப்பும் உள. அதில் பவுன், ஷிலிங், பென்ஸ் கணக்கில் 73. 14. 1. மொத்தம் குறிக்கப்பெற்றுள்ளது

1. படைப்பு, காப்பு அழிப்பு

திருக்குறள் மணக்குடவருரை
1925

ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் மாணவருள் ஒருவராகிய கா. பொன்னுசாமி நாட்டாரால் ஆராய்ந்து பதிப்பிக்கப்பெற்ற பதிப்பு இது இப்பதிப்புக்கும் சென்னை அரசினர் கையெழுத்துச் சுவடி நூல்நிலையச் சுவடியே துணை செய்துள்ள குறிப்புள்ளது. மணக்குடவர் உரை 32 திருக்குறள்களுக்குக் கிடைக்கவில்லை என்றும், அவற்றுக்குப் பரிமேலழகர் உரையையே பதிப்பித்துள்ளதாகவும், அவற்றுக்கு அடையாளமாக உடுக்குறியிடப்பெற்றுள்ளதாகவும் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் ஆங்கிலத்தில் முன்னுரை வழங்கியுள்ளார். பாலியல் அதிகார அட்டவணை, திருவள்ளுவர் வரலாறு. ஆ. ச. அண்ணுமலை முதலியார், சீ. வேணுகோபால நாயகர் ஆகிய இருவரும் இயற்றிய பாராட்டுப் பாடல்களும் முன்னிணைப்பாகவும். திருவள்ளுவ மாலை திருக்குறள் முதற் குறிப்பகராதி. உரையின் அரும்பத உரைகள். இலக்கண விளக்கம். மேற்கோள் விளக்கம் முதலியவை பின்னிணைப்பாகவும் உள சென்னை திருவல்லிக்கேணி நோபில் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்ட இந் நூல் விலை ரூ. 2-00 ஆகும்.

திருக்குறள் - உரைவளம்
1950

இப்பதிப்பு பெரும்புலவர் தண்டபாணி தேசிகரால் ஆய்ந்து தொகுத்துப் பதிப்பிக்கப் பெற்றதாகும். குறிப்புரை, ஆராய்ச்சிப் பேருரை ஆகியனவும். பரிமேலழகருரை. மணக்குடவருரை, பரிதியாருரை, பரிப்பெருமாள் உரை காளிங்கருரை, பழையதோர் உரை, திருக்குறள் நுண்பொருள் மாலை, புதுவை இராமநுச கவிராயர் விளக்கவுரை ஆகியனவும் இத்தொகுப்பில் தொகுக்கப் பெற்றுள்ளன. மேலும் தருமர், தாமத்தர், நச்சர் முதலியோர் உரையாகக் கிடைத்துள்ள அளவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்கோளாகத் திருக்குறள் காட்டப்பெற்றுள்ள இடங்கள்

எல்லாம் தொகுத்து 'மேற்கோள் பகுதி' என்றொரு பகுதியில் காட்டப் பெற்றுள்ளன. திருக்குறள் கருத்துக்கு ஒப்பான இலக்கியச் செய்திகள் ஒப்புமைப் பகுதியில் காட்டப் பெற்றுள்ளன.

இப்பதிப்புக்குக் கிடைத்த ஏட்டுச் சுவடிகள் 5.

அவை:

1. தருமபுர ஆதீனத்துப் புத்தகசாலை பரிமேலழகர் உரைச்சுவடி 1
2. சைவ எல்லப்ப நாவலர் வீட்டு பரிமேலழகர் உரைச்சுவடி 1
3. இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை சோம சுந்தர தேசிகர் [1]பழைய உரைக் காகிதச்சுவடி 1
4. ஈரோடு வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் பரிதியார் சுவடி 1
5. ஷை ஷை காளிங்கர் உரைச்சுவடி 1

பரிதியார் பெயர் பரி... என்ற அளவிலேயே ஏட்டில் காணப்பெற்றதாம். இதனைக்கொண்டு பரிதி, பரிமேலழகர், பரிப்பெருமாள் என்னும் மூவரையும் எண்ணலாம் எனினும் வெளிவந்துள்ள பரிமேலழகர், பரிப்பெருமாள் உரைகளுக்கு வேறானதாகலின் பரிதியார் உரை எனக் கொள்ளப்பெற்ற தெனப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். மணக்குடவர் உரைக்கு வ. உ. சிதம்பரனார் பதிப்பையும், கா. பொன்னு சாமி நாட்டார் பதிப்பையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார். பரிப்பெருமாள், காளிங்கர் உரைகளுக்குத் திருப்பதி கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகத் தமிழ் பேராசிரியர் டி. பி. பழனியப்ப பிள்ளை 1948 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள பதிப்பைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

1 ''இது சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையிலிருந்து அவர்கள் பிரதி செய்தது. இதற்குச் சைவவுரை என்று பெயர் சூட்டப்பட்டுளது. முதல் 11 அதிகாரம் வரையில் சிறிது வேறுபட்டு, பிற்பகுதி முழுதும் பரிதியார் உரையையே ஒத்துளது'' என்னும் குறிப்புளது.

நுண்பொருள்மாலை முழுவதும் செந்தமிழ்த் தொகுதியில் இருந்து எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளது. தருமர் நச்சர் உரைகள் தமிழ்ப் பொழில் வெளியீட்டிலிருந்து எடுக்கப் பெற்றுள்ளன.

பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பழைய வுரை, பரிதியார், காளிங்கர், தாமத்தர், நச்சர், தருமர் ஆகிய உரைகளை முறையாக அமைத்து அதன்பின்னே உரை விளக்கப் பகுதியில் நுண்பொருள் மாலை, இராமாநுச கவி ராயர் விளக்கங்களை அமைத்து அதன்மேலே மேற்கோள் பகுதி, ஒப்புமைப் பகுதி, குறிப்புரை ஆகியவற்றை நிரலே அமைத்துள்ளார். ஆங்காங்கே அடிக்குறிப்பாகப் பாட வேறுபாடுகளும், கவிராச பண்டிதர் உரையும், பிறர் உரை களும், பிறவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன் இரண்டாம் பதிப்பு 1957 ஆம் ஆண்டில் (ஏவிளம்பி) வெளிவந்துள்ளது, இதன் மேற்கோள் பகுதி, ஒப்புமைப் பகுதி முதலியன நீங்கிய [1]உரைப் பகுதி மட்டும் "உரைக் கொத்து" என்னும் நூலாக வெளிப்பட்டுள்ளது. திருப்பனந்தாள் காசி மடத்தின் வெளியீடாகிய இதன் முதற்பதிப்பு 1957 இல் வெளிவந்துள்ளது. இதன் பதிப் பாசிரியர் தி. பட்டுசாமி ஓதுவார் ஆவர். திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் நிறுவிய ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் திருக்குறள் பதிப்பு நிதியிலிருந்து வெளியிடப் பெற்றதாகும்.

நாலடியார் - வெளியீடுகள்

நாலடியார் மூலம் 1812 ஆம் ஆண்டு வெளிவந்த செய்தியை அறிந்துள்ளோம். அதனைத் தொடர்ந்த நாலடி வெளியீடுகளைக் காண்போம்.

1. பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர் உரைகள், ஆங்கில மொழி பெயர்ப்பு புதிய இணைப்பாகும்.

'நீதி மொழித் திரட்டு' என்னும் தொகுப்பில் நாலடியாரையும் இணைத்து வாக்கர் என்பவர் (J Walker) அச்சிட்டார். அது 1841 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

இதற்கு அடுத்த பதிப்பு 1843 இல் வெளிவந்தது. 'நாலடி நானூற்றின் மூலம்' என்பது அதன் பெயர். 'காஞ்சிபுரம் லக்ஷ்மண முதலியாரால் திருத்தி வெளியிடப்பெற்றது' வெளியிடப்பெற்ற 'காலம் "சாலிவாகன ஸ்ரீ ௲௭௱௯௰௬; நிகழ்கின்ற சோபகிருது பங்குனி ௧ மீ" என்றுள்ளது. சாலிவாகன 1796 சோபகிருது ஆண்டு என்பது கி. பி. 1843 ஆம் ஆண்டாகும்.

இப்பதிப்பில் அச்சடுக்கியவர் இன்னார் என்னும் குறிப்புள்ளது. அவ்வழக்கம் அக்காலத்து இருந்தமை சிறப்பாகக் கருதுதற்கு உரியதாம். "இப்புத்தகம் வேங்கடாசல முதலியாரால் அச்சடுக்கப்பட்டது" என்பது அக்குறிப்பு.

நாலடியார் - மூலமும் உரையும்
1844

இப்பொழுது கிடைத்துள்ள அளவில் நாலடியார் மூலமும் உரையுமாக வெளிப்பட்டதில் இப்பதிப்பே முதலாவதாகும். இதற்குப் பதுமனார் உரையைத் தழுவி உரை வரைந்தவர் புதுவை நயநப்ப முதலியார் ஆவர் இதன் தலைப்புப் பக்கத்தில் உள்ள செய்திகள் வருமாறு:

"முநிவர்கள் அருளிச் செய்த நீதி நூலாகிய நாலடியார் இதற்கு கூடலூர் சபாபதி முதலியார் சிறுவர் முதலிய யாவரும் எளிதில் உணரும்படி பதுமனார் உரையை வெளிப்படையாக்கிப் பதப் பொருளுங் கருத்துமாக உரை செய்து தருகவெனக் கேட்டுக்கொண்டதால் சென்னைக் கல்விச் சங்கத் தமிழ்ப் புலவராகிய புதுவை நயநப்ப முதலியார் அவர்களால் உரை செய்யப்பட்டு வளவனூர் சுப்பராய முதலியார் அவர்கள் குமாரராகிய முத்துசாமி முதலியாரால் ரிக்கார்டு அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. சாலிவாகன சகவருடம் ௲௭௱௬௰௬ நிகழும் குரோதி ஸ்ரீ கார்த்திகை மீ இதன் விலை ரூ .....௭"

இந்நூலின் உரைப் பாயிரத்தில் நாலடியாரின் பெயர்க் காரணம் செவ்விதிற் கூறப்பட்டுள்ளது. நாலடி தொலைவு வையை யாற்றில் சென்ற நானூறு ஏடுகளைத் தொகுத்து அமைக்கப்பெற்றது நாலடியார் என்னும் கதை வழக்கை மறுக்குமாப் போல அக் குறிப்புள்ளது.

"நூலடி முறைமுறை நுவலளவ தனால்
நாலடி எனப் பெயர் நாட்டினர்"

என்பது அது "அளவினால் பெற்ற பெயர் நாலடி நானூறு" என்று [1]இலக்கண நூலார் குறிப்பிடுவதற்குத் தக்க விளக்கமாக இவ்வுரைப் பாயிரப் பகுதி அமைந்துள்ளமை உணரத் தக்கதாம்.

நாலடியார் - மூலமும் உரையும்
1852

இந்நூல் பரிசோதித்தவர், பதிப்பித்தவர், காலம் ஆகியவற்றைக் கீழ்வருமாறு குறிக்கின்றது. "வேதகிரி முதலியார் பரிசோதித்த பிரதிக்கிணங்க, சேதுனப்பட்டு இராமசாமிக் கவிராயரால் பரிசோதிக்கப்பட்டு, ஆறுகாடு முனியப்ப முதலியாரால் பதிப்பிக்கப்பெற்றது. பரிதாபி ௵ பங்குனி மீ"

நாலடியார்
களத்தூர் வேதகிரி முதலியார் உரையுடன்
1855

வேதகிரி முதலியார் வரைந்த இவ்வுரை, பின்னர்ப் பல்கால் பலரால் பதிப்பிக்கப்பெற்றது. அதனைத் தழுவியும், பரிசோதித்தவர் பெயரை மாற்றியும் வெளியிட்டவர் பலர்.

---

1. அளவினால் பெயர் பெற்றன பன்னிரு படலம், நாலடி நானூறு முதலாயின — நன். 49, சங்.

நாலடியார் - மூலமும் உரையும்
1860

வேதகிரி முதலியார் பதிப்பைத் தழுவிச் செய்யப் பெற்ற பதிப்புஇது. இப்பதிப்புப் பற்றிய குறிப்பு வருமாறு:

"வேதகிரி முதலியார் பதிப்புக்கு இணங்க திரு நின்றையூர் அருணாசல சுவாமிகளால் பார்வையிடப்பட்டு, பூவிருந்தவல்லி கந்தசாமி முதலியாரால் தமது இயலிசை நாடக விலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது இரௌத்திரி ஹூ ஆவணி மீ"

நாலடியார் - மூலமும் உரையும்
1863

இப்பதிப்பும் கந்தசாமி முதலியார் பதிப்பே. எனினும் சில குறிப்புகள் வேறுபட்டுள்ளன.

"களத்தூர் வேதகிரி முதலியாரால் பதவுரையும் கருத்துரையும் செய்து பல விலக்கண மேற்கோளுங்காட்டி அச்சிற் பதிப்பித்த பிரதிக்கிணங்க, பூவிருந்தவல்லி கந்தசாமி முதலியாரால் நுங்கம்பாக்கம் இரத்தந முதலியார் சண்முக விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. கஅசுங ஹூ

இப்பதிப்பின் இறுதியில், "நாலடியாருக்கு களத்தூர் தமிழ்ப்புலவர் வேதகிரி முதலியாரால் செய்யப்பட்ட பதவுரையும் கருத்துரையும் முற்றுப்பெற்றது இஃது முன் பதிப்பித்த பிரதிக்கிணங்க எழுத்துப்பிழை மாத்திரம் ஷெ புலவர் குமாரர் சுப்பராய முதலியாரால் ஒருவாறு பரிசோதித்து நிறைவேறியது." என்னும் குறிப்புகள் உள்ளன.

நாலடியார் - மூலமும் உரையும்
1869

இப்பதிப்பும் வேதகிரி முதலியார் பிரதிக்கிணங்கப் பதிப்பிக்கப் பெற்றதேயாம். பரிசோதித்தவர் சிதம்பரம்

கருணாநந்த சுவாமிகள். "சிந்தாதிரிப்பேட்டையில் இருக்கும் கேசவ முதலியார் அவர்களால் தமது பிரபாகர அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன" என்னும் முகப்புள் ளது

இதில் போடப்பட்டுள்ள ஆங்கில ஆண்டுடன் ஆங்கிலத் திங்களும் உள்ளது. மற்றைப் பதிப்பில் காணப்பெற வில்லை. ௧அ௬௬ ஞூ ஆகஷ்டு மீ" என்பது அது.

காஞ்சீபுரம் மகாவித்வான் சபாபதி முதலியார், பழையநல்லூர் மங்கைபாகப் புலவர் குமாரர் சரவணப் பெருமாள் புலவர், தரங்காபுரம் சண்முகக் கவிராயர், வேதகிரி முதலியார் குமாரர் சுந்தர முதலியார், திரிசிர புரம் தமிழ்த் தலைமைப்புலவர் வி. கோவிந்தசாமிப் பிள்ளை குமாரர் நாராயணசாமி பிள்ளை ஆகியோர் 'சாற்று கவிகள்' வழங்கியுள்ளனர்.

இவ்வுரை பதப் பொருளும், தாற்பரியமும் (கருத் துரையும்) இலக்கணக் குறிப்பும், அரிதாகச் சில அடிக் குறிப்புகளும் உடைய பதிப்பு. உரையும் குறிப்பும் இடை வெளியின்றித் தொடர்ந்து வருதலால் பகுத்துக் காட்டற் காகத் தாற்பரியத்தின் முன்னர் உடுக்குறியும். இலக்கணக் குறிப்புக்கு முன்னர்ச் சுட்டிக் காட்டுதல் போன்ற கைக்குறி யும் உள்ளன. முதற்பாடலின் அடிக்குறிப்பில் அகத்தியம் "தொகுத்த கவியைச் சொல்சொல் லாகப், பகுத்துப் பொருள்சொலல் பதவுரை யாமே" "கவிப்பொருள் சுருக் கிக் காட்டுறற் பரியம்" என்பனவுள.

திருக்குறள் நாலடியார் வெளியீடுகள் குறித்துக் கண்டோம். அந்நூல்களின் முதற்பதிப்பை அடுத்து வெளிப் பட்ட நூல் தொல்காப்பியமாகும். ஆயினும் 35 ஆண்டு களின் பின்னரே வெளிப்பட்டது. அதனை வெளிக் கொணர்ந்த பெருமைக்குரியவர் மழவை மகாலிங்கையர் என்பவர்,

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம்
1847

இந்நூல் சாலிவாகன 1770 இக்குச் சரியான பிலவங்க ஆவணியில்' வெளியிடப் பெற்றது. பல பிரதிகளைக் கொண்டு மழவை மகாலிங்கையர் ஆராய்ந்து, திருவண்ணாமலை வீரபத்திர ஐயரால் தமது கல்விக்கடல் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

மழவை மகாலிங்கையர், "கனம் பொருந்திய கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்ட' யூனிவர்சிட்டி யென்னும் சகல சாஸ்திர சாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தியவர்"

"கரலிகிதங்களாலாய வழுக்களை நீக்கி அச்சிட்டுத் தருகவெனச் சில வித்துவான்கள் கேட்டுக் கொண்டபடி செய்யப்பெற்றதாக" இந்நூல் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குத் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் தாண்டவராய சுவாமிகள் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார் இந்நூல் கையால் செய்யப்பட்ட தாளால் அச்சிடப் பெற்றது. நூலின் இறுதியில் எழுத்ததிகார இயல்கள் ஒன்பதன் பெயரும் ஒரு வெண்பாவிலும், நூற்பாக்களின் தொகை ஒரு வெண்பாவிலும் குறிக்கப்பட்டுள்ளன. அவ்வெண்பாக்கள் வருமாறு:

"நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகைமரபு - பாலாம்
உருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கத்
தெரிவரிய குற்றுகரஞ் செப்பு"

"எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லாம்
ஒழுக்கிய வொன்பதோத் துள்ளும் - வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கள்
மேனூற்று வைத்தார் விரித்து"

மறைமலையடிகள் நூல் நிலையம் A 55 என்னும் எண்ணி லுள்ள இந்நூலில், "திருநெல்வேலி ஒளிமுத்து தொண்ட மான் குமாரன் அருணசலத் தொண்டமான் புத்தகம்" என்று எழுதப்பட்டுள்ளது.

தொல்காப்பிய - நன்னூல்
1858

தொல்காப்பிய நன்னூல் ஒப்புமை வேற்றுமை விளங்கச் செய்யப்பெற்றது இந்நூல். இது முதற் பகுதி யாகும். இதன் முகப்புக் குறிப்பு:

Comparative Reference Edition
of the
Tholcapyam and the Nunnool
S. Samuel Pillay
Reviced By
Walter Joys Esq.
Part - I. Madras 1858.

நன்னூல் மூலம் 1835 ஆம் ஆண்டிலேயே வெளிவந் தது. இலக்கணப் பஞ்சகம் என்னும் தொகுப்பில் தாண்டவ ராய முதலியாரால் அச்சிடப்பெற்றது 1840 இல் விசாகப் பெருமாளையர் காண்டிகையுரை அவரது கல்வி விளக்க அச்சுக்கூடத்தின் வழி வெளிவந்தது. 1847 ஆம் ஆண்டில் முகவை இராமாநுச கவிராயரால் விருத்தியுரை எழுதப் பெற்று அவர் தம் அச்சகத்தின் வழியே வெளிவந்தது. அடுத்த ஆண்டிலேயே (1848) நன்னூல் ஆங்கில விளக்கத் துடன் ஜோயஸ், சாமுயல் பிள்ளை என்பவர்களால் வெளி யிடப் பெற்றது. 1851 இல் நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை ஆறுமுக நாவலரால் வெளியிடப்பெற்றது. 1855இல் சிவஞான முனிவர் விருத்தியுரை தில்லையம்பூர் சந்திரசேகர பண்டிதர் பார்வையில் வெளிவந்தது. ஆதலால் நன்னூற் பயிற்சி பெருகிய நிலையில் தொல்காப்பியத்துடன் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்யும் நிலைமை உண்டாயிற்று.

இத்தொல்காப்பிய நன்னூற் பதிப்பில் 'ஆங்கிலேய துரைத்தனத்தார்' என்பது 'ஐங்கிலிய துரைத்தனத்தார்' என்றுள்ளது.

தொல். சொல். சேனாவரையம்
1868

இப்பதிப்பை ஆராய்ந்தவர் நல்லூர் ஆறுமுக நாவலர் ஆவர். இதனைப் பதிப்பித்தவர் இராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை. இது, 'ஊ. புஷ்பரதச் செட்டியார்து கலாரத் நாகர அச்சுக்கூடத்தில்' பதிப்பிக்கப் பெற்றது. காலம்: 'விபவ ஹூ புரட்டாசி மீ' இதில் முன்னுரை, பதிப்புரை ஆகிய எவையும் இல்லை.

தொல். எழுத்து. இளம்பூரணம்
1868

இப்பதிப்பு, "மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கர்களில் ஒருவராகிய சென்னைக் கவர்ன்மெண்ட் நார்மல் பாடசாலைத் தமிழ்ப் புலவர் திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராய செட்டியாரால் பல ஏடுகளைக்கொண்டு பரிசோதித்து" வெளியிடப் பெற்றதாகும்.

சென்னை, "மலைச்சாலையில்" இருக்கும் அத்திநியம் அண்ட்டெலி நியூஸ் பிரான்ச் அச்சுக் கூடத்தில்" பதிப்பிக்கப்பட்டது

இப்பதிப்பிற்குச் சிறப்புப்பாயிரம், திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, கும்பகோணம் தியாகராச செட்டியார், திரிசிரபுரம் பெரியண்ணப் புலவர் ஆகியவர்கள் வழங்கியுள்ளனர்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே, 'Mound Road' 'மலைச் சாலை' என்று குறிக்கப் பெற்றுள்ளமை வியப்புத் தருவதாம்.

'விபவ ஹு கார்த்திகை மீ' இப்பதிப்பு வெளிவந்தது. இதே ஆண்டில் பூவிருந்தவல்லி சு. கன்னியப்ப முதலியார் தொல். எழுத்து. இளம்பூரணம் வெளியிட்டார், அது பொழிப்புரையாக அமைந்தது.

தொல். சொல். சேனாவரையம்
1868

சி. வை. தாமோதரம் பிள்ளை வெளியீடாகிய சேனா வரையம் வெளிவந்த ஒரு திங்கள் இடைவெளிக்குப்பின்னே இப்பதிப்பு வெளிவந்தது. இதனைக் கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை ஆராய்ந்தார். இதன் முகப்பிலுள்ள குறிப்பு வருமாறு:

"கா. பச்சையப்ப முதலியார் தர்ம விசாரணை சபாத்தியக்ஷகராகிய மேலைமணம்பேடு சீனிவாச சடகோப முதலியாரவர்கள் வேண்டுகோளின்படி சென்னை நார்மல் ஸ்கூலென்னும் போதனா சக்தி விர்த்தி வித்தியாசாலைத் தமிழ்த் தலைமைப் புலவர் கோமளபுரம் இராசகோபால் பிள்ளையவர்களால் பல ஏடுகளைக்கொண்டு வழுவறப் பரி சோதிக்கப்பட்டு வர்த்தமான தரங்கிணி சாகை அச்சுக் கூடத்தில் பதிக்கப்பட்டது "விபவ ஹு கார்த்திகை மீ"

இப்பதிப்பில் சாற்றுகவி, முன்னுரை முதலிய எவை யும் இல்லை.

தொல். பொருள். நச்சினார்க்கினியம்
1885

இப்பதிப்பு சி. வை. தாமோதரம் பிள்ளையால் கொண்டுவரப்பெற்றது. திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிர மணிய தேசிகர், யாழ்ப்பாணம் சதாசிவப் பிள்ளை, திருநெல் வேலி தாசில்தார் சின்னத்தம்பிப் பிள்ளை ஆகியோர் ஏடுகள் தேடித் தந்துள்ளனர்.

திருத்தணிகை சரவணப் பெருமாளையர் பேரர் துரைசாமி ஐயர் பிரதி 1. புரசவாக்கம் சாமுவேல் பண்டிதர் பிரதி 1. தொல்காப்பியம் வரதராச முதலியார் பிரதி 1. இவை முதலாகப் பன்னிரண்டு பிரதிகள் கொண்டு ஆராயப் பெற்றது என்னும் குறிப்பு நூலில் உள்ளது.

இப்பதிப்பின் தாள் செலவுக்காக மைசூர் தலைமை மன்ற நீதிபதி அ இராமச்சந்திர ஐயர் ரூ. 125-ம், சென்னை மாநிலக் கல்லூரிக் கணக்கியல் பேராசிரியர் இராவ்பகதூர் பூ. அரங்கநாத முதலியார் ரூ. 100-ம் வழங்கியுள்ளனர்.

பார்த்திப ஆண்டு ஆவணித் திங்களில் இப்பதிப்பு வந்துள்ளது இதிலுள்ள செய்யுளியல் மெய்ப்பாட்டியல் உவமஇயல், மரபியல் ஆகியவை நச்சினார்க்கினியர் உரையாகவே குறிக்கப்பெற்றுள. ஆனால் அவை பேராசிரியர் உரை என்று செந்தமிழ்த் தொகுதி 1, பகுதி 1, செந்தமிழ்த் தொகுதி 2, பகுதி 11 ஆகியவற்றிலும், தமிழ்ச் சங்க வெளியீடாகிய தொல். நச். உரைப்பதிப்பிலும் பெரும்புலவர் ரா. இராகவ ஐயங்காரால் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன.

இதன் பதிப்புரை விரிவானது. அதிலுள்ள சில பகுதிகள் வருமாறு:

"திரவிய லாபத்தை எவ்வாற்றானும் கருதி முயன்றிலேன். நஷ்டம் வாராதிருப்பதொன்றே எனக்குப் போதும். இதுவரையில் பதிப்பித்த நூல்களால் எனக்குண்டான நஷ்டம் கொஞ்சமல்ல இவ்வித முயற்சியில் கையிடுவோர் நஷ்டமுறாதிருத்தற் பொருட்டுச் சர்வகலாசாலைப் பரீட்சையில் தேறி ஆங்காங்குப் பெரும் உத்தியோகம் வகித்திருப்போர் தத்தம் சுயபாஷையில் அச்சிடப்படும் பூர்வகிரந்தங்களில் ஒரு பிரதி வாங்குதல் அவர் கடமை என்றெண்ணுகின்றேன்."

— இக்குறிக்கோள் தமிழ்ப் பட்டம்பெற்றுத் தக்க நிலையில் இருப்பார் உள்ளத்தை அசைத்திருந்தால் கூட அரிய பழந்தமிழ் நூல்கள் ஒருமுறையில் 5000 படிகள் செலவாகக்கூடும். ஆனால் 1000 படிகள் 5 ஆண்டுகளில் செலவாவதுகூட இன்றும் அரிதாகவே உள்ளது!

தம் பதிப்புக் குறித்து ஒரு கருத்தை வெளியிட்டு விளக்கம் செய்கிறார் தாமோதரனார்:

"வழுவுற அச்சிட வேண்டியதென்னை? என்று யாரும் வினவுவராயின், வழுச்செறிந்த தாயினும், அடியோடழிந்து போகிற நூலை அடியேன் பாதுகாத்தது பேருபகாரம் அன்றோ என்க.

அன்றியும் சும்மா கிடந்த அம்மையார்க்கு அரைப் பணத்துத் தாலி போகாதா? காண்டற்கும் அரிய நூலைக் கைக்கெட்டப் பண்ணினது கேடாமா? பிரதி கிடைப்பதே மிக அருமையாயும். கிடைப்பினும் குறைப் பிரதிகளாயும், அவை தாமும் ஒரோஒரு வரிக்குப் பல வழுவாக ஆயிரக் கணக்கான வழு உடையனவாகவும் இருக்க அடியேன் அவ் வழுத்தொகையைக் குறைத்து நூற்றுக்கணக்காக்கி விட்டதா என்மேற் குறையாயிற்று?"

— தம்பதிப்பைக் குறை கூறுவாரை நோக்கித் தமக் குள்ள இடர்ப்பாட்டையும், பதிப்பித்தல் அருமையையும் கூறுமுகத்தாற் கூறியது. தொல்காப்பியப் பயிற்சி அருமையை விளக்குவாராய் எழுதுகிறார்:

"சென்னபட்டணத்தில் இற்றைக்கு ஐம்பதறுபது வருஷத்தின் முன்னிருந்த வரதப்ப முதலியாரின் பின் எழுத்துச் சொல்லுமேயன்றித் தொல்காப்பியப் பொருளதி காரத்தை உரை உதாரணங்களோடு பாடங்கேட்டவர்கள் மிக அருமை. முற்றாய் இல்லை என்றே சொல்லலாம். வரதப்ப முதலியார் காலத்திலும் தொல்காப்பியம் கற்றவர்கள். அருமை என்பது அவர் தந்தையார் வேங்கடாசலம் முதலி யார் அதனைப் பாடங்கேட்கும் விருப்பமுடையராயின பொழுது பறையூரிற் திருவாரூர் வடுகநாத தேசிகர் ஒருவரே தொல்காப்பியம் அறிந்தவர் இருக்கிறார் என்று கேள்வியுற்றுத் தமது ஊரைவிட்டு அதிக திரவியச் செலவோடு அவ்விடம் போய் இரண்டு வருஷமிருந்து பாடங் கேட்டு வந்தமையாலும் வரதப்ப முதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தையாற் கேட்டறிந்தவர் என்பதனாலும்

அது காரணமாக அவருக்குத் தொல்காப்பியம் வரதப்ப முதலியார் என்று பெயர் வந்தமையாலும் பின்பு அவர் காலத்திருந்த வித்துவான்கள் தமக்கு யாராயினும் இலக்கண சமுசயம் நிகழுந்துழி அவரையே வினவி நிவாரணஞ் செய்தமையாலும் நிச்சயிக்கலாம்"

— நூல் திருத்தமாக வரவேண்டும் என்பதிலே தாமோதரனுக்கு இருந்த பேரார்வம் கீழ்வரும் பகுதியால் விளங்கும்;

"ஐம்பது புதுத்திருத்தங்களுக்கு ஒரு பிரதி என் நன்றியறிவிற்கோர் அடையாளமாக அனுப்புவேன். இந் நூல் பிழையற வழங்கச் செய்தல் ஓர் பெரும் லோகோபகாரமென்று உணர்வாராக"[1]

தொல்காப்பியம் எழுத்ததிகாரம். நச்சினார்க்கினியம் 1891

1847 இல் மழவை மகாலிங்கையர் தொல் எழுத்து நச்சினார்க்கினியர் உரையை வெளியிட்டார். அதற்குப் பின்னர் வந்த இரண்டாம் பதிபபு இஃதாகும். இதனைப் பதிப்பித்தவர் சி வை. தாமோதரம் பிள்ளையே புதுக்கோட்டை நீதிபதி ம அண்ணாமலைப் பிள்ளையின் பொருளுதவிகொண்டு இப்பதிப்பு வெளிவந்துள்ளது. வெளிவந்த காலம்: "கர ஹூ வைகாசி மீ"

தொல்காப்பியத்தைப் பதித்துவரும்போதே தாமோதரனார் புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகியவற்றையும் ஆராய்ந்து வந்தார் என்பது இந் நூல் முன்னுரையால் புலப்படுகின்றது.

"புறநானூற்றுரை ஈற்றில் 140 செய்யுளும் பரிபாடல் பூரணபிரதியும் பதிற்றுப் பத்தில் முதற் பத்தும்

1. இவர் ஆராய்ந்த தொல், எழுத். நச். தொல். சொல். நச், இரண்டும் 1901, 1902-ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன.

கடைசிப்பத்தும் இன்னும் அகப்படவில்லை. இவற்றை வைத்திருக்கும் மகான்கள் யாவராயினும் சிலநாளைக்கு அவற்றை இரவலாக அனுப்புவாராயின் அவர்க்கு மிக்க கடமைப்படுவதுமன்றி அன்னோர் அனுப்பிய பிரதிகளோடு கூட எனது வழக்கப்பிரகாரம் இவ்விரண்டு அச்சுப் பிரதியும் அனுப்புவேன்''

''மழவை மகாலிங்கையரவர்களும் யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களும் வெளியிட்ட தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியருரை அச்சுப் பிரதிகளில் சிறப்புப் பாயிர வுரைக்கண், 'இக்கருத்தானே வள்ளுவ நாயனாரும் முப்பாலாகக் கூறி' என்றவிடத்து எமக்குக் கிடைத்த அந்நூற் பழைய ஏடுகள் பலவற்றினும், 'இக்கருத் தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி' என்பதே உள்ளது'' என்று செந்தமிழ் இதழாசிரியர் எழுதினார் (தொகுதி 1. பகுதி 1. பக். 56) இதனால் அக்காலத்தில் இருந்த அறிஞர்கள் ஒருநூல் அச்சில் வெளிப்படுமானால் அதனை ஏட்டுச் சுவடியுடன் ஒப்பிட்டுப் பார்த்து ஆராய்ந்தனர் என்பது தெளிவாகும்.

தொல். பொருள். நச்சினார்க்கினியம் 1916

இப்பதிப்பில் அகத்திணை இயல், புறத்திணை இயல் ஆகிய இரண்டியல்களும் நச்சினார்க்கினியர் உரையுடன் உள்ளன. இதனை ஆய்ந்து பதிப்பித்தவர் இராவ்பகதூர் ச. பவானந்தம் பிள்ளை. பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் இப்பதிப்பு வெளிவந்துள்ளது. இது தாம்ஸன் கம்பெனியாரது மினெர்வா அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது ஆண்டு 1916 மிக அழகிய பதிப்பு. முன்னுரை முதலிய எவையும இல்லை.

தொல். பொருள். நச்சினார்க்கினியம் 1916

இப்பதிப்பும் ச. பவானந்தம் பிள்ளை பதிப்பே. இதில்

களவு, கற்பு, பொருள் இயல்கள் நச்சினார்க்கினியர் உரையுடன் உள்ளன இதுவும் முன்னைப் பதிப்புப் போன்றதே.

தொல். பொருள். பேராசிரியம்
1917

இவ்வெளியீடும் ச. பவானந்தம் பிள்ளை வெளியீடேயாம். இதில் மெய்ப்பாட்டியல், உவம இயல் செய்யுளியல் ஆகிய மூன்று இயல்களும் பேராசிரியர் உரையுடன் உள்ளன. முன்னைப் பதிப்புப் போன்றதே இப்பதிப்பும். இதே ஆண்டில், செய்யுளியல், மரபியல் ஆகிய இரண்டியல்களும் பேராசிரியர் உரையுடன் தனிப் பதிப்பாகவும் வெளிவந்துள்ளன.

தொல்காப்பியம்
செய்யுளியல் - நச்சினார்க்கினியம்
1917

மதுரைச் தமிழ்ச் சங்கத்தின் 10-ஆம் வெளியீடாக இந்நூல் வெளிவந்தது இதனைப் "பரிசோதித்தவர் சேது சமஸ்தான வித்வான் ரா இராகவையங்கார்." இதன் பதிப்பு, "தமிழ்ச் சங்க முத்திராசாலை"யில் நடந்துள்ளது. நச்சினார்க்கினியர் உரையுடன், உரையாசிரியர் உரையும் இணைந்து பதிப்பிக்கப் பெற்றுள்ளது இதன் முகவுரையில் இந்நூல் சுவடிகள் தேடி ஆய்ந்து பதிப்பித்த விளக்கம் கூறப் பெற்றுள்ளது

"செய்யுளியல் நச்சினார்க்கினியருரை இற்றைக்குப் பதினைந்து வருடங்கட்குமுன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொருட்டுப் பழைய தமிழ் ஏடுகள் தேடிச் சென்ற காலத்து ஆழ்வார்திருநகரியிற் கவிராஜகேசரி திருமேனி இரத்தின கவிராயர் வழித்தோன்றிய தாயவலந்தீர்த்தான் கவிராயர் வீட்டில் இரண்டு ஏட்டுப் பிரதிகள் கிடைத்தன. இவற்றுடன் திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையவர்கள் உதவிய தொல்காப்பியப் பிரதியிலும் இச் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை இருத்தலைக்கண்டு அதனையும் ஒப்பு நோக்கிக்கொண்டு இம்மூன்று பிரதியுமே வைத்து

இச்செய்யுளியலுரை என் சிற்றறிவிற் இயன்றவரை பரி சோதிக்கப்பட்டதாகும். இந்நச்சினூர்க்கினியர் உரையுடன் ஆழ்வார் திருநகரித் தேவர் பிரான் கவிராயரவர்கள் உதவி யதும் இதுகாறும் அச்சிடப்படாததும் ஆகிய செய்யுளியல் உரையாசிரியருரைப் பிரதி மிகவும் சிதலைமடைந்திருந்த தனை அவ்வேட்டிலுள்ளவாறே ஆராய்ந்துகொண்டு இவ் விருரையினையும் இப்புத்தக வாயிலாக வெளியிடலாயிற்று"

தொல். பொருள். இளம்பூரணம்
1920

அகத்திணை இயல், புறத்திணை இயல் ஆகிய இரண் டியல்களும் இளம்பூரணர் உரையுடன் பதிப்பிக்கப்பட்ட பதிப்பு இஃதாகும். இதனைப் பல ஏட்டுப் படிகளைக்கொண்டு ஆராய்ந்தவர் கா நமச்சிவாய முதலியார். இது சென்னைத் தமிழ்க் கழக வெளியீடாக வெளிவந்துள்ளது.

சென்னை 'காக்ஸ்டன் பிரஸ்'சில் 'ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்' பதிப்பித்துள்ளனர்.

இப்பதிப்புக்குத் துணையாக இருந்த ஏடுகள்:

அநவரத விநாயகம் பிள்ளை ஏடு 1. (இது கனக சுந்தரம் பிள்ளை ஏடு) ஷெ யார் பெயர்த்தெழுதிய கையெ ழுத்தேடு 1

திருமயிலை சண்முகம் பிள்ளை ஏடு 1.

சே. சிவஞானம் பிள்ளை ஏடு 1. (இது திருநெல்வேலி சொர்ணம் பிள்ளையினுடையது)

தாம் இந்நூல் வெளியிடுதற்குரிய காரணத்தைப் பதிப்புரையில் ஆசிரியர் எழுதியுள்ளார்.

"இளம்பூரணத்து எழுத்ததிகாரம் ஒன்றே சோட சாவதானம் சுப்பராயச் செட்டியார் அவர்கள் வெளியிட்ட னர். சொல்லும் பொருளும் இதுகாறும் வெளிவந்தில. என் ஆசிரியர் திருமயிலைச் சண்முகம் பிள்ளையவர்கள் கட்டளை யைத் தலைமேற்கொண்டு அவற்றை வெளியிட முயன்றேன்"

1920 இல் வெளிவந்த இப்பதிப்பு ரூ. 2-0-0 விலையாகும். "காவேரியகம் சென்னை - கி; கா. நமச்சிவாயன்" என்று பதிப்பாசிரியர் ஒப்பமிட்டுள்ளார். அப்பொழுது சென்னை கிழக்கு, மேற்கு எனப் பகுக்கப்பட்டிருந்தமை புலப்படும்.

மிக அழகான இப்பதிப்பு, மேற்கோள் செய்யுள் முதற் குறிப்பு, மேற்கோள் நூல் முதற் குறிப்பு, சூத்திர முதற் குறிப்பு, பாட வேறுபாடு ஆகியனவெல்லாம் கொண்டுள்ளது.

தொல். சொல். சேனாவரையம்
1923

இப்பதிப்பு திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 18 ஆம் வெளியீடாகும். இதனை ஆய்ந்து பதிப்பித்தவர் பேராசிரியர் கந்தசாமியார். உருத்திரோத்காரி ஞூ சித்திரை மீ வெளியிடப்பெற்றது.

கந்தசாமியார் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பயிலுங் காலத்து அச்சங்கத்துத் தொல்காப்பிய ஏட்டுச் சுவடி ஒன்றை உடன்வைத்துப் பயின்றார் அச்சுவடியால் சில பாட வேறுபாடுகளும் திருத்தங்களும் கிடைத்தன. பின்னர்த் திருவாவடுதுறை ஆதீன மடத்தில் கல்வி பயிலுங்கால் அவ்வாதீனத்துச் சுவடியால் சில பாட வேறுபாடுகளும், திருத்தங்களும் கிடைத்தன. இவை சொல்லதிகாரம் பயில்வார்க்குப் பெரிதும் பயன்படும் என்னும் எண்ணத்தால் கழக ஆட்சியாளர் திருவரங்கனார் அச்சில் பதிப்பித்தார். இப்பதிப்பினைக் "கரும்பயிலைக் கூலி தருமாப் போல உண்டியும் மருந்தும் உறையுளும் முறையும் உதவிக் கைம்மாறு கருதாது கல்வி பயிலச்செய்த பேருதவிக்கறிகுறியாக இத்திருத்தங்களை முத்தமிழ்ப் புலமையும் முறையரசுரிமையும் இத்தலத்தெய்திய இறைமகனாகிய அப்பாண்டித்துரைச் சாமி அவர்களுக் குரிமையாக்குகிறேன்" என உரிமையுரை வழங்கியுள்ளார். மிக அருமையான பதிப்பாக உள்ளது

தொல். பொருள். மூலம்
1924

இப்பதிப்பு கா. நமச்சிவாய முதலியாரால் பதிப்பிக்கப்பெற்றதாகும். மூலப்பதிப்பின் பயன் உணர்ந்து இதனைத் தனியே வெளியிட்டுள்ளார் என உணரமுடிகின்றது.

தொல். சொல். இளம்பூரணம்
1927

இதனை வெளியிட்டவரும் கா. நமச்சிவாய முதலியாரே ஆவர். அவர்தம் மற்றைப் பதிப்புகள் போலவே அழகியதாம்.

தொல். எழுத்து. இளம்பூரணம்
1928

வ. உ. சிதம்பரனார் தொல்காப்பியத்தின் சிறப்பை உணர்ந்து, அதனைத் தமிழ் மக்களிடையே நன்கு பரவச் செய்தலை விரும்பினார். அதனால் தொல் எழுத்ததிகாரத்தில் சில இயல்களுக்கு உரை எழுதினார். அவர் நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டதற்காகச் சிறை சென்று. விடுதலை பெற்றுச் சென்னை பிரம்பூரில் வாழ்ந்த காலம் அது. அப்பொழுது, தொல்காப்பிய மூன்று அதிகாரங்களுக்குமுரிய இளம்பூரணருரை ஏட்டுச் சுவடியும், தொல். எழுத்ததிகார இளம்பூரணம் அச்சுப் புத்தகமும் தி. த. கனகசுந்தரம் பிள்ளை வ. உ. சியினிடம் வழங்கினார். அவ்வுரையைக் கண்ட சிதம்பரனார் உரை எழுத வேண்டுவதில்லை என்று கொண்டு இளம்பூரணம் எழுத்ததிகாரத்தை அச்சிடத்தொடங்கினார் அப்பதிப்பே இஃதாகும்

தி. த. கனகசுந்தரம் பிள்ளை வழங்கிய அச்சுப் புத்தகம் பூவிருந்தவல்லி சு. கன்னியப்ப முதலியார் பதிப்பாகும். அதில் பொழிப்புரையாக இருந்ததைப் பதவுரையாக வ. உ. சி. அமைத்து வெளியிட்டார் 1920இல் தொடங்கிய பதிப்பு 1928இல் வெளிவந்தது, 1-9-1928. கோயில்பட்டி எனப் பதிப்புரையில் உள்ளது.

தொல். பொருள். இளம்பூரணம்
1928

அகத்திணை இயல் புறத்திணை இயல் ஆகிய இரண்டு இயல்களுக்கு மட்டும் இளம்பூரணர் உரையுடன் கூடிய பதிப்பு இது. இதனைப் பதிப்பித்தவரும் வ. உ. சிதம்பரனாரே ஆவர். இதுவும் பதவுரையாகப் பதிப்பிக்கப்பெற்றதே. இதுவும் 1920 இல் பதிப்பிக்கத் தொடங்கப்பெற்று 1928 இல் நிறைவாகியது. எழுத்து இளம்பூரணத்திற்கு முன்னரே இது வெளியாகிவிட்ட குறிப்புள்ளது.[1] தூத்துக்குடி வேலாயுதம் பிரிண்டிங் பிரசில் வெளியான இப்பதிப்பில் முகவுரை முதலியன இல்லை.

தொல். சொல். தெய்வச் சிலையார் உரை
1929

இவ்வுரையை ஆராய்ந்து வெளியிட்டவர் கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை ஆவர். இது கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு ஆகும்.

தொல். சொல் தெய்வச் சிலையார் உரைச்சுவடி ஒன்று தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இருந்தது. அதனைப் பண்டித எல். உலகநாத பிள்ளையின் வழியாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் உமாமகேசுவரம் பிள்ளை அறிந்தார். அதனைச் சங்க வழியாக வெளிக்கொணர விரும்பினர், அவ்வெளியீட்டுக்கு வேண்டிய தொகையைப் பண்டிதமணி கதிரேசச் செட்டியார், பலவான்குடி கும. சு. குமரப்பச் செட்டியார் வழியாகப் பெற்றுத் தந்தார்.

சரசுவதி மகாலில் இருந்து பெற்ற சுவடி மிகப் பழுதுபட்டிருந்தது; பிழையும் மலிந்து கிடந்தது இடை இடையே மயங்கியும் பிறழ்ந்தும் பொருள் துணிதற்கியலாவகையிலும் இருந்தது. பின்னர் அரித்துவாரமங்கலம் வா. கோபாலசாமி ரகுநாத ராசாளியாரிடம் தெய்வச்சிலையார் உரைச் சுவடி ஒன்று இருப்பதறிந்து கவியரசு ஆங்குச்

1. தொல் எழுத். இளம், முகவுரை.

சென்று அதனைப் பெற்றார். அச்சுவடியும் முன்னைச் சுவடிக்கு முழுதொப்பவே தோன்றியது. வேறு ஏடு கிடைக்குமாறும் இல்லை. இவ்வேடும் நிலைக்குமாறும் இல்லை. ஆதலால் இவ்வேடொன்றையே துணையாகக் கொண்டு அச்சிட்டார்.

இவ்வுரை பேராசிரியர் உரையென்றே சிலர் கூறினர். ஆதலால் பேராசிரியர் உரையென்றே விளம்பரமும் செய்தார். ஏனெனில் இன்னார் உரையெனச் சுவடியால் அறிந்து கொள்ளுதற்கு வாய்ப்பு இல்லாது போயிற்று. இவ்வாறாகவும் டாக்டர் உ. வே. சாமிநாதையரிடம் இவ்வுரைச் சுவடி ஒன்று இருப்பதை அறிந்தார். அதனால் அறியப்பெற்ற திருத்தத்தை நூல் அச்சிட்டு முடிந்தமையால் சேர்க்க முடியாமல் பின் இணைப்பாகச் சேர்த்தார். அச்சுவடியின் வழியாகவே இவ்வுரை பேராசிரியர் உரையன்று; தெய்வச் சிலையார் என்பவர் உரையேஎன அறிந்தார். அதன்பின்னர் அப்பெயரிட்டே நூலை வெளியிட்டார்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதனார் திருமகனார் சுந்தர பாண்டியனார் தம் 'லாலி' அச்சுக்கூடத்தில் அச்சுக்கூலி முழுதும் நன்கொடையாக அச்சிட்டுத் தந்தார்.

இத் தெய்வச் சிலையார் உரை 1963 ஆம் ஆண்டில் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழியே மறுபதிப்பாக வெளிவந்தது. இதனை ஆய்ந்து திருத்தியும், புதுக்கியும், விளக்கவுரை வரைந்தும் பதிப்பித்தவர் பண்டித வித்துவான் கு. சுந்தரமூர்த்தி ஆவர்.

தொல். பொருள். இளம்பூரணம்
1933 - 1936

இப்பதிப்பு வ. உ. சிதம்பரனார் பதிப்பாகும். இதில் பொருளதிகாரத்தின் அகத்திணை, புறத்திணை இயல்கள் நீங்கிய ஏழு இயல்களும் இளம்பூரணர் உரையுடன் அமைந்துள்ளன. இதனை ஆராய்ந்தவர் அறிஞர் ச. வையாபுரிப் பிள்ளை ஆவர்.

பொருளதிகார இளம்பூரணப் பிரதியைக் காண்பது அரிதாக இருந்தது. "பொருளதிகாரத்தில் செய்யுளியல் தவிர ஏனைய இயல்களுக்குத் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஏட்டுப்பிரதி ஒன்றேயாம். இரண்டாவது ஒரு பிரதி இல்லை" என்று [1]இலக்கிய மணிமாலையில் வையாபுரிப் பிள்ளை எழுதியுள்ளார்,

வ உ. சி. தம் பதிப்புரையில் இக்கருத்தை விளக்கி எழுதியுள்ளார், "தமிழ்நாடு முழுவதிலும் பொருளதிகார இளம்பூரணருரை முற்று மடங்கிய பிரதி ஒன்றேயுள்ளது. இப்போது அங்கங்கே ஒரு சிலரிடத்துள்ள பிரதிகள் அனைத்தும் இவ்வேட்டுப் பிரதியைப் பார்த்தெழுதிக் கொண்ட கடிதப் பிரதிகளேயாகும். இக்கடிதப் பிரதிகள் சிலவற்றில் ஒருசிலவிடங்களில் ஏட்டுப்பிரதியிற் காணப்பெறுக விஷயங்கள் ஆதாரமின்றி நுழைத்தெழுதப்பட்டன. அவ்வாறு நுழைத்தெழுதியவற்றையெல்லாம் களைந்து ஏட்டுப் பிரதியில் உள்ளவாறே இப்பதிப்பு என் நண்பர் வையாபுரிப் பிள்ளையவர்களாற் சித்தஞ் செய்யப்பட்டுள்ளது"

இப்பதிப்புக்குப் பயன்பட்ட சுவடிகள்:

வையாபுரிப் பிள்ளை ஏட்டுச் சுவடி 1.

த. மு. சொர்ணம்பிள்ளை கடிதச் சுவடி 1.

வ உ. சி. கையெழுத்துச் சுவடி 1.

தி. நா. சுப்பிரமணிய அய்யர் கடிதச் சுவடி 1.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை சுவடி 1.

ரா. ராகவ ஐயங்கார் செய்யுள் மரபியல் சுவடி 1.

மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப் பள்ளி வி. துரைசாமி ஐயர் செய்யுளியல் கடிதச் சுவடி 1.

"இவ்வுரை இளம்பூரணருடையதே என்பது அறிதற்குத் தக்க சான்றுகள் இருந்தபோதிலும் கிடைக்கப் பெற்ற படிகளில் இன்னார் உரை என்ற குறிப்பொன்றும் காணப்படவில்லை" என்னும் குறிப்புள்ளது. சென்னை வாவிள்ளா அச்சுக்கூடத்தில் இது பதிப்பிக்கப் பெற்றது. இதன்

1. பக். 81,

முன்னுரையில் வாவிள்ளா வேங்கடேச சாஸ்த்ருலு தமக்கும் வ. உ. சி. க்கும் உள்ள தொடர்பை விளக்குகிறார்.

தொல். பொருள். இளம். மூன்று பகுதிகளாக வெளிப்பட்டது. அவை: 1. அகத்திணை புறத்திணை இயல்கள். 2. களவு, கற்பு, பொருளியல்கள். 3, பின்னான்கு இயல்கள். அவை முறையே; 1928, 1933, 1936 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன.

தொல். பொருள். நச்சினார்க்கினியம்; பேராசிரியம்

1934

இப்பதிப்பு இருதொகுதிகளைக் கொண்டது. முதல் தொகுதி தொல். பொருள். நச்சினார்க்கினியம் ஐந்து இயல்களையும் ஒருங்கே கொண்டது. இரண்டாம் தொகுதி பின்னான்கு இயல்களையும் பேராசிரியர் உரையுடன் கொண்டது.

இவற்றை ஆராய்ந்து பதிப்பித்தவர்கள் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையும், மயிலாப்பூர் பி எஸ். உயர்தரப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வே. துரைசாமி அய்யரும் ஆவர்,

இவற்றை வெளியிட்டவர் எஸ். கனகசபாபதிப் பிள்ளை என்பவர்.

தொல். எழுத்து. நச்சினார்க்கினியம்

1—1—1937

இப்பதிப்பு பெரும் புலவர் புன்னாலைக்கட்டுவன் சி. கணேசையரால் ஆராயப்பெற்று உரைவிளக்கக் குறிப்புகளுடன் வெளிவந்ததாகும்.

தாமோதரம்பிள்ளை தமிழ்நாட்டிற்குச் செய்த அரும் பெரும் தொண்டை நினைவு கூர்ந்து என்றும் போற்றுதற்கு வழியாக இப்பதிப்பை ஈழம் மயிலிட்டி தெற்கு, திருமகள் நிலைய உரிமையாளர் நா. பொன்னைய பிள்ளை பதிப்பித்தார்.

சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் இப்பதிப்பு உருவாகியது.

முன் ஐந்தியலும் நச்சினார்க்கினியர் உரையும், பின் நான்கு இயலும் பேராசிரியர் உரையுமாக அமைந்த தொல்காப்பியப் பொருளதிகாரத்தையும், நச்சினார்க்கினியர் உரையுடன் கூடிய சொல்லதிகாரத்தையும் வெளியிட்டவர் தாமோதரம் பிள்ளையே. மழவை மகாலிங்கையர் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியத்தைப் பதிப்பித்தனர் ஆயினும் பல ஏட்டுச் சுவடிகளுடன் ஒப்பிட்டு மீண்டும் பதிப்பித்தவர் தாமோதரனாரே. ஆதலால் தொல்காப்பியம் முழுமையும் கொணர்ந்த பெருமை அவருக்கே உண்டு ஆதலால், அவர் பதிப்புகளை மீண்டும் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து செப்பப்படுத்தி வெளியிடும் திட்டத்தை மேற்கொண்டார் ஈழகேசரி நா. பொன்னையபிள்ளை.

சி. கணேசையர் எழுதிய அரிய உரை விளக்கக்குறிப்பு, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, உதாரண அகராதி, அரும்பத விளக்கம் முதலியவற்றின் அகராதி மேற்கோள் விளக்கம் ஆகிய நலங்களை ஒருங்கே கொண்ட சிறந்தபதிப்பு இது. இதில் தாமோதரம் பிள்ளை வரலாற்றுச் சுருக்கமும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி
1937

தொல்காப்பியப் பொருளதிகார உரைகளுள் காணப்படும் மேற்கோள்கள் மிகப்பல. அவற்றை எல்லாம் அகர வரிசையில் தொகுத்து வெளியிடப்பெற்ற அரிய நூல் இது.

பொருளதிகாரப் பதிப்புகள் பலவற்றுள்ளும் இன்னார் இன்னார் பதிப்பில் இன்ன இன்ன பக்கத்தில் வந்த இன்ன இன்ன செய்யுள் பகுதிகள் இன்ன இன்ன நூலில் இன்ன இன்ன பகுதியைச் சேர்ந்தன என்று தெளிவாக விளக்கும் தொகுப்பு நூலாகிய இது மிகத் தேர்ந்த உணர்வோடும்

செய்யப்பெற்றது ஆராய்ச்சியாளர்க்குக் கருவி நூலாக அமைந்தது இதனை முயன்றுதொகுத்து அடைவு செய்தவர் ம. ஆ. நாகமணி என்பார். "2/21, கேசவப் பெருமாள் தெற்கு வீதி, மயிலாப்பூர் சென்னை" என்பது அவர் முகவரி.

இத்தொகை நூலின்கண் நச்சினார்க்கினியர் வரலாறு, பேராசிரியர் வரலாறு, பொருட்குறிப்பு ஆகியன விரிவாக எழுதப்பட்டுள்ளன. செவ்விய தாளில் 300 பக்கங்களுக்கு மேற்கொண்ட நல்ல பதிப்பு. அந்நாளில் அட்டைக் கட்டு ரூ. 1-4-0ம், கலிக்கா கட்டு ரூ. 1-8-0ம் விலையிடப்பெற்றுள்ளது.

தொல். சொல். சேனாவரையம்

1938

ஆறுமுக நாவலரால் ஆராயப்பெற்று சி. வை. தாமோதரம் பிள்ளையால் பதிப்பிக்கப் பெற்ற தொல். சொல். சேனாவரையப் பதிப்பை மூலமாகக்கொண்டு மேற் கூறிய சி. கணேசையரால் பதிப்பிக்கப்பெற்ற மறுபதிப்பு இஃதாகும். பதிப்பிக்கும்போது "பிரதிகள் நோக்கித் திருத்தப்பட்டுள்ள" பகுதிகளும் உண்டு. அவற்றை முகவுரையில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார் பதிப்பாசிரியர்.

"திருநெல்வேலி சி. சபாபதிக் குருக்கள் ரூ 50

தென்மயிலை சேவையர் க. சின்னப்பு ரூ. 25

அளவெட்டி பொ. அருணாசல ஆசிரியர் ரூ. 25"

என்று பலர் அச்சுச் செலவுக்கு நன்கொடை வழங்கியுள்ளனர். எஞ்சியசெலவை ஈழகேசரி இதழாசிரியர் பொன்னையபிள்ளையே ஏற்றுக்கொண்டு வெளிப்படுத்தினர்.

இப்பதிப்புக் குறித்துப் பதிப்பாசிரியர் குறிப்பிடும் சில செய்திகள் பதிப்பாசிரியர் கடமையை நன்கு உணர்த்துவன.

"யாம் எழுதிய இக் குறிப்புக்களெல்லாம் திருத்தமுடையன என்று எம்மாற் சொல்லுதல்கூடாது. ஏனெனில்

முற்கணத்து எமக்குச் சரியாகத்தோன்றியதே பிற்கணத்துப் பிழையாகத் தோன்றுகின்றதாகலின், ஆதலால் இவற்றுள் வரும் பிழைகளைப் பேரறிஞர்கள் திருத்திக் கொள்வார்களாக. அன்றியும் இவற்றுள் தாங்கண்ட பிழைகளை எமக்கு அறிவிப்பின் அவற்றை நோக்கி உண்மையென்று கண்டவற்றை அவர்கள் பெயருடனே இரண்டாவது பதிப்பில் வெளியிடுவேம். அதற்கு ஒருபோதும் நாணமாட்டேம். ஏனெனில் சிற்றறிவையே இயற்கையாகவுடைய மக்களுள் யாமும் ஒருவேமாகலின், இன்னும் பிழைகளையறிவிக்குங் கால் இக்குறிப்புத் திருத்தமுற்றுத் தமிழ் மக்களுக்கு மரபு மரபாகப் பயன்படும் என்பதற்கு ஐயமே இல்லை.''

நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் தென்கோவை ச. கந்தைய பிள்ளை, மட்டுவில் வே. மகாலிங்கசிவம் ஆகியோர் சிறப்புப்பாயிரப் பாடல்கள் பாடியுள்ளனர். 'தொல்காப்பியத்தின் தொன்மை' முதலான பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் இணைக்கப் பெற்றுள்ளன. முன்னைப் பதிப்புப் போலவே போற்றத்தக்க பதிப்பு.

தொல். சொல். நச்சினார்க்கினியம்
1942

இது பவானந்தர் கழகப் பதிப்பாக வெளிவந்ததாகும். இதன் பதிப்பாசிரியர் மே. வீ வேணுகோபாலப் பிள்ளை. இந்நாளில் இணையற்ற பதிப்பாசிரியராக விளங்கும் இவர்தம் பதிப்பருமை அப்பதிப்பிலேயே நன்கு வெளிப்படுதல் கண்கூடு.

இப்பதிப்பு இராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பை மூலமாகக்கொண்டு ஏட்டுச் சுவடிகளுடன் ஒப்பிட்டுத் திருத்தங்கண்ட பதிப்பாகும். இதனை வெளியிடுதற்கு வாய்ப்பாக இருந்த பெருந்தகை, பவானந்தம் பிள்ளைக்கே உரிமை செய்யப்பெற்றுள்ளது ''பலவகைக் கொடையினும் நூற்கொடை சிறந்தது. அதிலும் பொருளுணர்ச்சிக்குக் காரணமான சொல்லிலக்கண வரன்முறையெல்லாம் அறுதியிடும் தொல்காப்பியச் சொல்லதிகார

உரைநூற் கொடை சிறந்தது. இந்நூற் கொடையால் பவானந்தர் கழகத்தார் அக்கழகத்தை நிறுவியவருடைய நோக்கம் நன்கு நிறைவேற முயன்றிருப்பது போற்றற்குரியது''[1] என்று அறிஞரால் பாராட்டப்பெற்றது.

பல திருத்தங்களைக் கொண்ட இப்பதிப்பில் நூற்பா முதற் குறிப்பு, அரும்பத அகராதி, பொருளகராதி, மேற்கோளகராதி, சரவண பவானந்தம் பிள்ளை வரலாறு ஆகிய இணைப்புகள் இடம் பெற்றுள்ளன. பவானந்தர் கழகத்திற்கென இயல்பாக அமைந்த பதிப்பழகுகள் அனைத்தும் கூடியும் விளங்குகின்றது. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையின் உழைப்புக்கும், ஊன்றிய ஆய்வுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குதலை எவரும் எளிதில் காண்பர்.

தொல். பொருள். பேராசிரியம்

1943

இப்பதிப்பும் ஷை சி. கணேசையர் பதிப்பேயாம். சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பு, ச. பவானந்தம் பிள்ளை பதிப்பு, ச வையாபுரிப் பிள்ளையும், வே. துரைசாமி ஐயரும் இணைந்து பதித்த பதிப்பு ஆகிய மூன்று பதிப்புகளையும் மூலமாகக் கொண்டு வெளிப்பட்ட பதிப்பு இது

முப்பதிப்புகளாலும் திருந்தியவற்றைவிட இன்னும் திருந்தாத பகுதிகள் மிகப்பல இருப்பதை உணர்ந்தார் பதிப்பாசிரியர். ஆதலால் திருத்தமான பல ஏட்டுப் படிகளைப் பெற விரும்பி முயன்றார். சாமிநாதையர் வழியாகச் செய்யுளியல் பேராசிரிய ஏட்டுப்படி ஒன்றும், எஞ்சிய மூன்றியல்களுக்கும் அமைந்த பேராசிரிய கையெழுத்துப் படி ஒன்றும் பெற்று ஆராய்ந்து செய்தார். மேலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருந்த சில சுவடிகளும், கோப்பாய் அரசினர் கல்லூரி ஆசிரியர் கா. பொ. இரத்தினம் அவர்கள் வழங்கிய ஏட்டுச் சுவடி ஒன்றும் கிடைத்தன. இவற்றாலெல்லாம் பல திருத்தங்கள் கிடைக்கப்பெற்றன.

---

1 செந்தமிழ். தொகுதி 39; பகுதி. 4 பக். 224

"உண்மையான பிழைகளை அறிஞர்கள் எமக்கு அறிவிப்பின் அவற்றை அவர்கள் பெயரோடும் இரண்டாம் பதிப்பில் வெளிப்படுத்துவேம். அன்றி நன்னூல், சின்னூல் முதலிய சிற்றிலக்கணங்களைத் தானும் முறையுறக் கல்லாதும் ஆழ்ந்து நோக்காதும் பேர்வேண்டிப் பிழைகூறி ஆரவாரிக்கும் அவலமாக்கள் செயலை யாம் ஒரு பொருட்படுத்தேம். அவர்கள் தாமேகூறித் தாமே மகிழ்ந்து கொள்வார்களாக எனவரும் முகவுரைப் பகுதியால் இவ்வரிய பதிப்பையும் பிழைகூறித் திரிந்தாரும் உளர் என்பது உணரக் கிடக்கிறது. இவர் தம் சேனாவரையப் பதிப்பின் குறிப்புக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு பட்டறிவால் நேர்ந்ததாம்.

நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர், தென்கோவை ச கந்தைய பிள்ளை ஆகிய இருவரும் இயற்றிய சிறப்புப் பாயிரச் செய்யுள்கள் இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

தொல். பொருள். நச்சினார்க்கினியர்
1948

இதுவும் கணேசையர் பதிப்பேயாம்

தொல். சொல். கல்லாடருரையும், பழையவுரையும்
1964

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழியாக வெளிவந்த நூல் இது. கல்லாடர் உரை கிடைத்த வகையைக் கழக ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார்:

"அச்சிடப்பெற்று வெளியிடப் பெறாமல் உள்ள நூற்படிகளில் ஒன்று எவ்வாறோ எனக்குக் கிடைத்தது. அவை யாரால் எப்போது அச்சிடப்பெற்றன என்பது தெரியக் கூடவில்லை"

இதனை ஆராய்ந்து பதிப்பித்த பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தியவர்கள், பழையவுரையின் முதற்பதிப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறார்:

"தொல்காப்பியச் சொல்லதிகார உரைக் கோவை என்ற பெயரில், சொல்லதிகாரத்திற்குள்ள உரைகளையெல்லாம் தொகுத்து அதன் முற்பகுதியை மட்டும் திரு ஆபிரகாம் அருளப்பன் திரு வி. ஐ. சுப்பிரமணியம் ஆகிய பேரறிஞர்கள் வெளியிட்டுள்ளார்கள். அவ்வுரைக்கோவையிலேயே இப்பழையவுரை முதன் முதல் வெளிவந்தது".

கல்லாடனார் உரை தொல். சொல். இடையியல் பத்தாம் நூற்பா அளவுக்குமே கிடைத்துள்ளது.

பழையவுரை தொல். சொல். கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் நூற்பா ௩௩ வரையுள்ள பகுதிக்கே கிடைத்துள்ளது.

இவ்விரண்டுரையும் தனித்தனியே முன்னும் பின்னும் ஆராய்ச்சி முன்னுரை விளக்கவுரை ஆகியவற்றுடன் ஒரு தொகுதியாக வெளிவந்துள்ளன.

இங்குக் கூறப்பெற்ற எல்லா உரைகளையும், எல்லாப் பகுதிகளையும் ஒருங்கே பெற்று ஆராய்தற்கு வாய்ப்பாக வெளியிட்டுள்ள பெருமையும் அருமையும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு உண்டு. பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் அனைத்தையும் சிதைவுறாமல் வைத்துப் பேணிக் காத்தற்குத் தக்கவாறு பழந்தமிழ் நூல் பேழையினை உருவாக்கித்தந்துள்ள பெருமையும் அதற்குண்டு. இவ்வகையால் முழுத்தமிழ் விழுமிய இன்பமும் ஒருங்கே பெற வாய்ப்பு உண்டு. இனிப் பாட்டு, தொகை காவியப் பதிப்புகளைப் பார்க்கலாம்.

பாட்டு - தொகை - காவியம்

பாட்டு

"நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய அடியின ஈரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே"

"அதுவே,
அகவலின் வருமென அறைகுவர் புலவர்"

என்பன [1]பன்னிருபாட்டியல் நூற்பாக்கள்

திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டின பாலை, மலைபடுகடாம் என்பன பத்துப் பாட்டுகளாம்

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

இதனை நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப் பாயிரப் பாட்டு.

"ஆன்றோர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து
சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டு"

என்று கூறும்.

தொகை

பொருள்வகையாலும். அடிவகையாலும், பாவகை யாலும் தொகுக்கப்பெற்ற நூல்கள் தொகை எனப் பெற்றன. தொகை நூல்கள் எட்டாகும். அவை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு. பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறம்என்
றித்திறத்த எட்டுத் தொகை"

என்னும் பாடல் தொகை நூல்கள் இவை என்பதைக் காட்டும்.

1. நூற்பா, 182, 183, நூற்றுப்பத்தளவு - ஆயிர அடி அளவு.

காப்பியம்

காப்பியம், பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்னும் இருதிறத்தன; பிறவகைக் காப்பியங்களும் உள்ளன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, குண்டல கேசி, வளையாபதி என்பன ஐம்பெருங் காப்பியங்கள் அல்லது காப்பியங்கள். இவற்றுள் முதல் மூன்றுமே முழுமை யாகக் காணக்கூடியனவாயின. எஞ்சிய இரண்டும் சில சில பாடல்கள் அளவில் மேற்கோள் அளவால் கிடைத்துப் பெயர் நிறுவிக் கொண்டுள்ளன.

சூளாமணி, நீலகேசி, நாககுமார காவியம், உதயண குமார காவியம், யசோதர காவியம் என்பன சிறு காப்பி யங்கள் என்னும் வரிசையுள் அடங்குவன. இவற்றுள் சூளா மணி, நீலகேசி என்பன காவியச் சுவை மல்கியன.

இவ்வகையில் சேராதது ஆயினும் பழமையும், செறி வும், சுவையும் அமைந்தவொரு நூல் கொங்குவேள் மாக் கதை என்னும் பெருங்கதை இந்நூல்களை ஏட்டுச் சுவடியி னின்று அறிஞர்கள் அரிதின் முயன்று ஆராய்ந்து பதிப்பித் துள்ளனர். இவற்றைப் பதிப்பித்த காலவொழுங்கின்படியே காணலாம்.

சீவகசிந்தாமணி - முதற் புத்தகம்
1868

நாமகள் இலம்பகம் - நச்சினார்க்கினியம்

இப்பதிப்பு திருத்தகு எச். பவர் (Rev. H. Bower) வெளியீடாகும். இவ்வெளியீட்டுக்கு உதவியவர் திருநெல் வேலித் தமிழ்ப் புலவர் இ. முத்தையா பிள்ளை. நச்சினார்க் கினியர் உரை. ஆங்கிலத்தில் எழுதிய முன்னுரை, குறிப்பு விளக்கம் ஆகியவற்றையுடைய பதிப்பு இது இதன் முன்னுரை 42 பக்கங்களாகும்.

ஒவ்வொரு பாடலிலும் சில ஆங்கிலக் குறிப்புகள் உள்ளன. (எ-டு) "முந்நீர் Also three kinds of water, virz the spring, the rain and river water" இது முந்நீர்ப் பிறந்த என்னும் பாடலில் (5) அமைந்துள்ள குறிப்புரை,

மிக அருமையான பதிப்பாசிரியர்களுக்கு வழிகாட்டுவதான பின்னிணைப்பு இந்நூலில் உள்ளது.

இணைப்பு

Index

எண்கள் செய்யுள் எண்கள்

அகம் - உள், இடம் Inside 40, 281

அஃகுதல் - சுருங்குதல் to reduce 255

அகலம் - மார்பு brest 256

அகலல் - to remove 23

வெளவுதல் - அபகரித்தல் to usurp 38

இவ்வாறு எட்டுப்பக்க அளவில் உள்ளன,

உரையில் காணும் அருஞ்சொல் அடைவுகள் - ஆங்கில இணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

இதன் முன்னுரையில் ஒரு பகுதி இந்நூல் வந்த வரலாறு குறிக்கின்றது:

"இருபதாண்டுகளுக்கு முன் திருத்தகு எச். துறு (H. Drew) என்பவர் சீவகசிந்தாமணி முழுமையும் அச்சிட விரும்பி அறிக்கை ஒன்று வெளியிட்டார். அவரிடமும் என்னிடமும் தமிழ்ப் புலமைப் பணியாற்றிவந்த திரு. சாஸ்திர மையர் என்னும் சமணத் தமிழ்ப்புலவர் திருத்தகு எச். துறு அவர்களின் கருத்தைத் தெரிவித்துச் சிந்தாமணியை அச்சிடுமாறு கூறினார்; அதன்படி ஏட்டுச்சுவடியில் இருந்து முழு நூலையும் காகிதத்திலே படி எடுக்கச்செய்து ஒப்பிட்டுத் திருத்தம் செய்யப்பட்டது. அதனைத்தாம் வெளியிடுவதாகச் சொல்லி அமெரிக்கன் சமயகுழுவைச்சார்ந்த திருத்தகு டாக்டர், எச். எம் ஸ்கடர் விலைகொடுத்துப் பெற்றனர்.

பின்னர் உடல் நலமின்மையால் அமெரிக்காவுக்கு அதனை எடுத்துச் சென்று நூலக மொன்றிலே சேர்த்து விட்ட தாகத் தெரிகிறது. முன்னமே என்னிடமுள்ள எட்டுச் சுவடியில் இருந்து வேறு ஒரு படி காகிதத்தில் எழுதப் பெறலாயிற்று. அதனைச் சரிபார்த்துத் திருத்தித் தந்த சமணப் புலவரும் இரண்டாண்டுகளில் காலமானார். அவர் காலமானதற்குப்பின் திருநெல்வேலித் தமிழ்ப்புலவர் திரு. வி. முத்தையாபிள்ளையின் உதவிகொண்டு முதல் இலம்பகத்தைமட்டும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன் இதனை வாங்கி உதவினால் முழுநூலையும் அச்சிட்டு வெளிப் படுத்த ஊக்கமூட்டுவதாகும்"

சீவக சிந்தாமணி - முதற்பாகம்,

முதல் ஐந்து இலம்பகங்கள்

1883

இது புதுக்கோட்டை அரசவைப்புலவர் ப. முருகேச கவிராயர் உடன்பிறந்த ப. அரங்கசாமிபிள்ளை பல எட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து வெளியிட்ட பதிப்பு இது சென்னை அட்டலட்சுமி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இவர் ஊர் பனையஞ்சேர்; தந்தையார், பரசுராமபிள்ளை

இப்பதிப்புக்குச் சென்னை, மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ஈ. சினிவாசராகவாச்சாரியார், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், பல்கழக்கழகத் தமிழ்ப்புலவர் கோ. இராச கோபால பிள்ளை, மீனாட்சி சுந்தரப் பிள்ளை மாணவர் வேங்கடசுப்பு பிள்ளை ஆகியோர் சாற்றுகவி வழங்கியுள்ளனர்.

"பதிப்பித்தான் பிரதிகளிற் கரலிகித வழுக்களைந்து
பாவ லோருள்
உதிப்பித்தான் பேருவகை யஃதேபோற் கொல்லாத
ஒழுக்கத் தோரைக்
குதிப்பித்தான் தம்மதநூல் எம்மதத்தும் பரவவருங்
கொள்கை யாலே

மதிப்பித்தான் தலையுலகில் எழிலரங்க சாமிநல்லோன்
வல்லோன் மாதோ"

என்பது வேங்கட சுப்புபிள்ளை பாடியது.

இப்பதிப்பில், பதுமையார் இலம்பகம் முடிய (பாடல் 1406) உள்ளது.

சீவகசிந்தாமணி
1887

இது டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பாகும். சேலம் இராமசாமி முதலியாரின் தூண்டுதலால் சிந்தாமணி ஆராய்வதற்கு ஐயர் தொடங்கினுர் என்பதை முன்னரே அறிந்துள்ளோம்.

[1]"சிந்தாமணியின் முதற் பதிப்பு 1887 ஆம் வருஷ முடிவில் நிறைவேறியது. அப்பொழுது உண்டான மகிழ்ச்சிக்கு இணையாக என் வாழ்க்கையில் இதுகாறும் வேறொன்றைக் கண்டிலேன்" என்று சாமிநாதையர் மகிழ்ந்துரைக்கும் அளவுக்கு நிறைவு தந்த பதிப்பு இச்சிந்தாமணி. பழந்தமிழ் நூல் பதிப்பு உலகில் ஐயர் இறங்கி வெளியிட்ட முதல் வெளியீடு இது. இப்பதிப்பே அவருடைய மற்றைப் பதிப்புகள் தொடர்ந்து வெளிவருதற்கு வழிவகுத்துத் தந்த மாண்பினதும் ஆகும். இதனை ஆராய்தற்குக் கொண்ட முயற்சியே தமிழ் இலக்கியப்பரப்பை யெல்லாம் உணர்த்தி, அவர்தம் பணியின் விரிவை எடுத்துரைத்தது.

சிந்தாமணியை நெடுங்காலம் ஐயர் ஆராய்ந்தார். ஏடுகளை மிகுதியாகத் தொகுத்து ஒப்பிட்டுப் பார்த்துத் தெளிந்தார். சமண சமயப் புலமை, வடமொழிப் புலமை மிக்கவர்களை அணுகித் தெளிவு செய்தார். அதன் பின்னர்ச் செப்பமாகக் கைப்படி எழுதி எடுத்துக் கொண்டு கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு அச்சிடச் சென்றார்.

1. நல்லுரைக்கோவை I. பக். 114.

'ராயல்' எட்டுப்பக்க அளவில் ஐந்நூறு பிரதிகள் அச்சிடுவதென்றும், ஒரு படிவத்திற்கு 3-50 ரூபா அச்சுக் கூலி என்றும் முடிவு செய்தார். சென்னையில் இருந்த தமிழறிஞர்களைக் கண்டு தாம் சிந்தாமணி வெளியிட வந்திருக்கும் கருத்தை உரைத்துக் கலந்துரையாடினார், அவர்களுள் ஒருவர், புரசபாக்கம் அட்டாவதானம் சபாபதி முதலியார் என்பவர்.

"என்ன ஐயா! சிந்தாமணியுரையாவது நீங்கள் பதிப்பிக்கிறதாவது? அஃது எளிய செயலா? இம்முயற்சியை நிறுத்திக்கொள்வது நல்லது" என்றார். சபாபதி முதலியார் அவர் மேலும்" நானும், என் ஆசிரியர் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரும் இதைப் பதிப்பிக்க எண்ணினோம். படிக்கவும் தொடங்கினோம். கடினம் என்று நிறுத்திவிட்டோம் துறு என்னும் பாதிரியார் ஒருதிட்டம் வகுத்துக்கொண்டு அதனை விளக்கி விளம்பரம் செய்தார், அதை நிறைவேற்ற அவரால் முடியவில்லை, போப் முயன்றார். அவராலும் முடியவில்லை ஆறுமுக நாவலர் பதிப்பிக்க எண்ணினார். திருச்சிற்றம்பலக் கோவையார் முதற்பதிப்பில் இனிவெளிவரும் நூல்கள் என்ற விளம்பரத்தில் சிந்தாமணியின் பெயர் காணப்படுகிறது அவரும் பதிப்பிக்கவில்லை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும், சோடசாவதானம் சுப்பராய செட்டியாரும் பதிப்பிக்க எண்ணினர். இது பெரிய தொல்லை எனக் கை விட்டனர். இப்படி யார் தொட்டாலும் நிறைவேறாத நூலைப் பதிப்பிக்கத் துணிந்தீர்களே" என்று பலப்பல கூறினார். ஐயர் உள்ளம் தமிழ் செய்த தவப்பயனால் அசையாமல் அயராமல் துணிந்து நின்றது, பதிப்பைத் தொடங்கினார் தொடர்ந்து நடத்தினார்.

சிந்தாமணிப் பதிப்பினால் ஐயர் உற்ற இடர்ப்பாடுகள் மிகுதி. அவர்தம் முதன்முயற்சி அஃதாகலின் அதனை நோக்கவும், அதன் வெளியீட்டுச் செம்மையை நோக்கவும் அவர்பட்ட அரும்பாடுகள் வெள்ளிடைமலையென விளங்கும்.

"எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டுக் கிலமுற்றிருந்த

இந்நூலுரைப் பழையபிரதிகள் பலவற்றையும்பல்கால் ஒப்பு நோக்கி இடையறாது பரிசோதனை செய்துவந்த பொழுது. கவிகளின் சுத்தவடிவத்தையும் உரையின் சுத்தவடிவத்தையும் கண்டுபிடித்தற்கும், உரையினும் விசேடவுரை இன்னது பொழிப்புரை இன்னது என்று பிரித்தறிதற்கும் மேற்கோள்களின் முதலிறுதிகளைத் தெரிந்து கோடற்கும் பொழிப்புரையை மூலத்தோடும் இயைத்துப் பார்த்தற்கும் பிழையைப் பிழையென்று நிச்சயித்துப் பரிகரித்தற்கும் பொருள் கோடற்கும் எடுத்துக்கொண்ட முயற்சியும் அடைந்த வருத்தமும் பல அப்படியடைந்தும் சிலவிடத்துள்ள இசைத் தமிழ் நாடகத் தமிழின் பாகுபாடுகளும் மற்றுஞ் சில பாகமும் நன்றாக விளங்கவில்லை; அதற்குக் காரணம் அவ்விசைத்தமிழ் நாடகத் தமிழ் நூல் முதலியவைகள் இக் காலத்துக் கிடையாமையே!'' என்று வரும் முன்னுரைப் பகுதியால் ஐயர்தம் முயற்சியருமையும் பெருமையும் விளங்கும்.

சிந்தாமணியை ஆராயத் தூண்டிய சேலம் இராமசாமி முதலியார், விரைந்து வெளியிடத்தூண்டிய சி. வை. தாமோதரம் பிள்ளை, சமண சமயக் கோட்பாடுகளை விளங்கவுரைத்த வீடூர் சந்திரநாத செட்டியார், பதிப்பு முறைக்கு வழிகாட்டிய தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராசகோபாலாசாரியார், ஒப்புநோக்கி உதவிய திருமானூர் கிருஷ்ணையர், ஏடுகள் பலவற்றைத் தந்தும் தருவித்தும் உதவிய திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் ஆகியவர்களை நினைவுகூர்ந்து பாராட்டுகிறார் சாமிநாதையர்.

இந்நூலை ஆராயும் புலமையாளர்க்கு ஒரு வேண்டுகோள் விடுகின்றார். அவ்வேண்டுகோள், வேண்டுகோள் அளவிலேயே நின்றுவிடுவதால் நாட்டுக்கும் ஏட்டுக்கும் பயன் வாய்ப்பதில்லை. வேண்டுகோளை அறிஞருலகம் ஏற்றுப் போற்றுவதைக் கடனாகக் கொண்டிருக்குமானால் தமிழ்நூல் பதிப்பு எவ்வளவோ சீர்மை பெற்றிருக்கக்கூடும். அம் முயற்சி இந்நாளிற்கூட அரும்பிற்றில்லை.

"இப்பதிப்பில் காணப்படும் எழுத்துப்பிழை சொற்பிழை வாக்கியப்பிழை முதலியவற்றையும் அவற்றின் திருத்தங்களையும் தயைசெய்து விவேகிகள் தெரிவிப்பார்களாயின், அவர்கள் பேருதவி செய்ததாக எண்ணி எழுமையும் மறவேனாகி அவற்றைப் பின்பு அச்சிற்பதிப்பித்துப் பலர்க்கும் பயன்படும்படி செய்வேன். விளங்காத மேற்கோள்களுள் ஏதாவது இன்ன நூலில் இன்ன பாகத்துள்ளதென்று காணப்படின் அதனையும் தெரிவிக்குமாறு அவர்களை வேண்டுகிறேன்" என்பனவே அவ் வேண்டுதல்.

இனிய நண்பர்கள் சிலர் சில குறிப்புகளை நண்புமுறையில் கூறினரேயன்றித் தமிழுலகம் செவிசாய்த்துக் கேட்கவில்லை. ஆதலால் பின்னைப் பதிப்புகளில் அவ்வேண்டுதல்களை ஐயர் விடுத்தாரல்லர். ஆனால் தமிழறிஞர் என்று இருந்தவர் குறை கூறாமல் இருந்தனரா? ஒரே 'போடாக'க் குறை கூறினர் பொறாமைக் காய்ச்சலால் பொறுமிப் பொறுமிக் குறை கூறினர். தாமும் செய்யாராய்ப், பிறரும் செய்யப் பொறாராய்க் குறை சொல்வார்க்கு மருத்துவம் செய்தற்கு எவரால் இயலும்?

"சிறந்த நூலாகிய சிந்தாமணியைப் பதிப்பிக்கத் தக்க தகுதி சாமிநாதையர்க்கு இல்லை" என்பது ஒருபுரளி. சிந்தாமணி நச்சினார்க்கினியருடன் பதிப்பாகிக் கொண்டிருக்கிறது விரைவில் வெளிவரும்" என்பது வேறொரு 'கட்டுக் கதை'. "சாமிநாதையர் சிந்தாமணியை உரையுடன் பதிப்பிப்பதாகத் தெரிகிறது. அது நச்சினார்க்கினியர் உரையாக இருந்தால்தான் தமிழ் நாட்டினரால் ஏற்றுக் கொள்ளப்படும், சாமிநாதையர் உரையாக இருந்தால் பயன்படாது" என்பது இந்து செய்தித்தாளில் ஒருவர் எழுதிய மறுப்புரை, சைவமடத்துக்கு வேண்டிய சாமிநாதையர் உமாபதி சிவாச்சாரியார் 'பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி என்று சொல்லியிருக்கும் சைன நூலை அச்சிட்டது தவறு என்று மடத்திலேயே கண்டித்தனர். கண்டித்த அளவுடன் நில்லாமல் அந்நூல் பரவாமல் இருப்பதற்குத் தக்க முழுமுயற்சியும் செய்தல் வேண்டும்

என்று சீரடியார்கள் தீர்மானமும் செய்தனர்! இவ்வளவுக்கும் மேலேயும் சிந்தாமணிப் பதிப்புப் பற்றிய எதிர்ப்புத் தாவியது. பதிப்பில் இவை இவை பிழையெனச் சிலர் எழுதினர். எழுதினவற்றுள் உண்மையான பிழைகளும் உண்டு, திருத்தத் தக்கனவும் உண்டு ஆனால் பிழை கூறியவர்கள் நோக்கம் திருந்த வேண்டும் என்பதனைப் பார்க்கிலும், பதிப்பாசிரியர் வருந்த வேண்டும் என்பதேமிக்கிருந்தது. அவர்கள் வெளிப்படுத்திய துண்டு வெளியீடுகள் பெருநகரங்களிலெல்லாம் பரவின. சிந்தாமணிப் பதிப்புக்கு உதவியவர்கள் வீடுகளுக்கெல்லாம் தேடிச் சென்றன, சாமிநாதையர் பணியாற்றிய கும்பகோணத்து வீதிகளில் எல்லாம் உலாக்கொண்டன! பதிப்புப்பணியில் ஈடுபடுவதா? பழிப்புரைக்குப் பதிலெழுதிப் பொழுதைக் கழிப்பதா?

> "மலர்கொண் டுனையே வழிபட் டிடுவேன்
> அலர்கொண் டுவிளங் கலைவா விகள்சூழ்
> கலர்கண் டறியாக் கவினே ரக! எற்
> பலர்கண் டிகழும் படிவைத் ததெனே"

என்பன போல இறைவனை வேண்டிக்கொண்டு மறுமொழிகூறுது அமைந்தார். பின்னே. "சீவகசிந்தாமணிப் பிரகடன வழுப் பிரகரணம்" என்னும் பெயரால் ஒரு வெளியீடுவந்தது. அதற்குப் பதிலெழுதியே ஆகவேண்டும் என்னும் எண்ணம் ஐயரை அலைத்தது. அவ்வாறே விடையும் எழுதினுர். தம்பால் பேரன்புடைய சாது சேசையர் என்பாரைக் கண்டு, சிந்தாமணி மறுப்புக்குத் தாம் எழுதிய மறுப்புரையைக் காட்டினுர்! சாதுசேசையர் அதை அப்படியே கிழித்துக் குப்பைக்கூடையில் போட்டார் "நான் கிழித்து விட்டதைப்பற்றி வருத்தப்பட வேண்டாம்" நீங்கள் சமாதானம் எழுதுவதென்ற வேலையையே வைத்துக்கொள்ளக் கூடாது ...... இதற்கு நீங்கள் பதில் எழுதினுல் உங்களுடைய எதிரிகளின் பேர் பிரகாசப்படும். உங்கள் பதிலுக்கு மறுப்பு அவர்கள் எழுதுவார்கள், நீங்கள் மறுப்புக்கு மறுப்பு எழுத நேரும். இப்படியே உங்கள் காலமெல்லாம் வீணுகிவிடும். நல்லகாரியத்துக்கு நானூறு விக்கினங்கள்வருவது உலகவழக்கம் சீமையிலும் இப்படியே

வீண் காரியங்கள் நடைபெறுவதுண்டு. அவற்றைத் தக்கவர்கள் மதிப்பதில்லை. உங்கள் அமைதியான நேரத்தை இந்தக் காரியத்திலே போக்க வேண்டாம். இம்மாதிரி யாரேனும் தூசித்தால் பதிலெழுதுகிறதில்லை என்று வாக்குறுதி அளியுங்கள்" என்றார். மேலும் விளக்கிக் கூறினார் ஐயர், 'மறுமொழி எழுதுவதில்லை' என்று அன்று சாது சேசையரிடம் உறுதி கூறினார். வாழ்வின் இறுதிவரை சிக்கெனக் கடைப்பிடித்தார் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னே கண்டன நிகழ்ச்சிகளையும், தாம் எழுதிய பதிலையும், சாது சேசையர் அறிவுரையையும் எண்ணிப் பார்க்கிறார் ஐயர்:

[1]"தென்றலும் சந்தனமும் பிறந்த இடத்திலே வளர்ந்த தமிழ் மென்மையும் இனிமையும் உடையது. அந்தச் செந்தமிழ்த் தெய்வத் திருப்பணியே வாழ்க்கை நோக்கமாக உடைய என்பால் உலகியலில் வந்துமோதும் செவ்விய அலைகளெல்லாம் அத்தெய்வத்தின் மெல்லருளால் சிறிதளவும் துன்பத்தை உண்டாக்குவதில்லை, அவர்கள் இந்த வகை மொழிகளை வெளியிட்டுத் திருப்தியடைகிறார்கள். அவர்கள் திருப்தியடைவது கண்டு நாமும் சந்தோசிப்போமே என்று அமைதிபெறும் இயல்பை நான் பற்றிக் கொண்டிருக்கிறேன். அந்த இயல்பு, நன்மையோ தீமையோ அறியேன். அதனால் என் உள்ளம் தளர்ச்சி பெறாமல் மேலும் மேலும் தொண்டு புரியும் ஊக்கத்தைப் பெற்று நிற்கிறது. இது கைகண்ட பயன், இதற்கு மூல காரணம் சாது சேசையரென்பதை என்றும் மறவேன்"

இவ்வளவு மறுப்புக்கும் கண்டனத்துக்கும் இடையே சிந்தாமணி தமிழ்க்கடல் என்னும் பொருள்தரும் 'திராவிட ரத்னாகரம்' என்னும் அச்சுக் கூடத்தில் இருந்து வெளிப்பட்டுத் தன்னொளி பரப்பிக் கொண்டிருந்தது! என்றும் பரப்பிக்கொண்டும் இருக்கும்.

1. என் சரித்திரம், பக். 900 - 1

சிந்தாமணியின் முதற் பதிப்பு 1887 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளிப்பட்டது. இரண்டாம்பதிப்பு 1907 ஆம் ஆண்டு திசம்பர் மாதமும், மூன்றும் பதிப்பு 1922 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதமும், நான்காம் பதிப்பு 1942 ஆம் ஆண்டு அக்டோபர் மாதமும் வெளிப்போந்தன. ஒவ்வொரு பதிப்பும் புதுப்புது விளக்கங்களையும் வளர்ச்சியையும் பெற்றன. ஐயர் பதிப்பின் வளர்ச்சி முறையை இச்சிந்தாமணிக்கு அறிந்து கொள்ளின் மற்றை நூல் வெளியீடுகளுக்கும் பொருந்துமாகலின் அதனைக் கருதுவாம்.

முதற்பதிப்புக்கு நச்சினார்க்கினியர் உரையுடன் கிடைத்த சுவடிகள் 19. மூலச்சுவடிகள் 4 ஆகச்சுவடிகள் 23. இவற்றை ஆய்ந்து முதற்பதிப்பு வெளிப்பட்டது. இரண்டாம் பதிப்புக்கு மேலும் ஆராய்ச்சிக்குக் கிடைத்த உரைச்சுவடிகள் 15. மூலச்சுவடிகள் 2, ஆகச்சுவடிகள் 17. மூன்றும் பதிப்பு ஆய்வுக்குச் சில கையெழுத்துச் சுவடிகள் கிடைத்தன. எண்ணிக்கை இத்துணை எனக்குறிக்கப் பெறவில்லை இவற்றால் 'முதற்பதிப்புப் போன்றதே இரண்டாம் பதிப்பு' என்று கூறுதற்கு இடமில்லாத திருத்தங்களைப் பெற்றுப்புதிய பதிப்புகள் வெளிவந்தன என்பது போதரும். ஏட்டுப் படிகளின் துணையால் ஏற்பட்ட திருத்தங்கள் ஒழியப் பட்டறிவால் ஏற்பட்ட நலங்கள் பலப்பலவாம்.

சீவகன் வரலாறு, ஒப்புமைப்பகுதி ஆகியவற்றைக் கொண்ட 'சீவகசிந்தாமணி ஆராய்ச்சி விளக்கம்', மூலத்திலும் உரையிலும் உள்ள கடினமான பகுதிகளின் பொருளைப் புலப்படுத்தும் 'விசேடக் குறிப்பு' அருஞ்சொற்கள் சீரிய தொடர்கள், செய்திகள், பழமொழிகள், சிறப்புப் பெயர்கள் முதலியவற்றைத் தெரிவிக்கும் 'அரும்பத அகராதி என்பவை இரண்டாம் பதிப்பில் புதிதாக இணைக்கப் பெற்றன,

இன்னும் கையெழுத்துப் படிகளில் மிகுதியாகக் காணப்பெற்ற செய்யுள்கள் உரிய இடங்களில் தனித்தனியே சேர்க்கப் பெற்றன. முதற் செய்யுள் முதல் முடிவு

காறும் ஒன்று முதல் தொடர் எண்கள் தரப்பெற்றன. இவையும் இரண்டாம் பதிப்பில் இடம் பெற்ற திருத்தங்களாம்.

மூன்றும் பதிப்பில் சிந்தாமணி ஆராய்ச்சி விளக்கம் என்ற பெயருடன் 41 பக்கங்களில் வெளியான பகுதி ஒப்புமைப்பகுதிகள் என்ற பெயருடன் 113 பக்கம்கொண்டு வெளியிடப் பெற்றது. விசேடக்குறிப்பும், அரும்பதமுதலியவற்றின் அகராதியும் விரிந்தன, உரையாசிரியர்கள் அவ்வவ்விடங்களில் இந்நூலில் இருந்து மேற்கோளாக எடுத்துக்காட்டியிருக்கும் பகுதியைப் புலப்படுத்தும் 'பிரயோக விளக்கம்' என்பது இம்மூன்றும் பதிப்பில் புதிதாகச் சேர்க்கப்பெற்றது.

ஒப்புமைப் பகுதி, விசேடக்குறிப்பு, பிரயோக விளக்கம் (மேற்கோளாட்சி) என்று தனித்தனியே அமைந்திருந்தவை படிப்பவர்களுக்கு வாய்ப்பாக அவ்வப்பக்கத்தில் அடிக்குறிப்பாகச் சேர்க்கப் பெற்றது. நான்காம் பதிப்பின் சிறப்பாகும் குறிப்புரை நச்சினார்க்கினியர் உரையைத்தழுவி எழுதி அவ்வப்பக்கத்தின் அடிக்குறிப்பாகச் சேர்க்கப் பெற்றது இந்நான்காம் பதிப்பின் முத்தி இலம்பகம், அச்சாகிக்கொண்டிருக்கும் பொழுதிலேயே ஐயர் திருக்கழுக்குன்றத்தில் இயற்கை எய்தினர். சிந்தாமணியில் தொடங்கிய அவர் பதிப்புப்பணி. அந்நூற் பதிப்புப் பொழுதிலே நிறைந்தமை அவர்க்கும் சிந்தாமணிக்கும் இருந்த தொடர்பை வெளிப்படுத்தும் இயற்கைக் குறிப்புப்போலும்!

சிந்தாமணி முதற் பதிப்புக்குக் கிடைத்த சுவடிகள்: 23. இரண்டாம் பதிப்புக்குக் கிடைத்த சுவடிகள் 17. ஆகச் சுவடிகள் 40. இவற்றின் விளக்கம் வருமாறு:

திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர்	சுவடி	1
திருசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை	,,	2
,, தியாகராச செட்டியார்	,,	1
யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம்பிள்ளை	,,	2
மழவை மகாலிங்கையர்	,,	1

அட்டாவதானம் சபாபதி முதலியார்	சுவடி	1
தி. க சுப்பராய செட்டியார்	,,	1
சின்னசாமி பிள்ளை	,,	1
சேலம் இராமசாமி முதலியார்	,,	3
உடையூர் சுப்பிரமணிய பிள்ளை	,,	1
நெல்லை சாலி வாடீசுவர ஓதுவார்	,,	1
,, ஈசுவரமூர்த்தி கவிராயர்	,,	1
தூத்துக்குடி குமாரசாமிப்பிள்ளை	,,	1
சிதம்பரம் தருமலிங்கசெட்டியார்	,,	1
தஞ்சை மருதமுத்து உபாத்தியாயர்	,,	1
விருஷப தாசமுதலியார்	,,	1
கூடலூர் விசயபால நயினார்	,,	1
வீடூர் சந்திர நாத செட்டியார்	,,	3
இராமநாதபுரம் பொன்னுசாமித்தேவர்	,,	1
கொழும்பு தி. குமாரசாமி செட்டியார்	,,	1
தருமபுர ஆதினம்	,,	2
அழகிய சிற்றம்பலக் கவிராயர்	,,	2
செங்கோட்டை கவிராசபண்டாரத்தையா	,,	1
கடைய நல்லூர் முத்து கிருஷ்ண உபாத்தியாயர்	,,	1
சென்னை பச்சையப்ப உபாத்தியாயர்	,,	1
வானமாமலை தாதர் கணக்கு, நான்குநேரி	,,	2
சேலம் அப்பா சாமிப்பிள்ளை	,,	1
நெல்லை திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை	,,	1
,, திருப்பாற் கடனாதன் கவிராயர்	,,	1
வீடூர் அப்பாசாமி நயினார்	,,	1
நெல்லை அம்பலவாண கவிராயர்	,,	1

சிலப்பதிகாரம்

புகார்க் காண்டம் - 1876

ஐம்பெருங் காவியங்களுள் முன்னதாகிய சிலப்பதிகாரத்தின் புகார்க் காண்டம் 1876 இல் வெளிவந்தது. இது மூலம் மட்டுமே அமைந்த வெளியீடாகும். இதனை வெளியிட்டவர் சென்னை மாநிலக் கல்லூரி முதன்மைத் தமிழ்ப் பேராசிரியர் தி. ஈ. சீனிவாச ராகவாசாரியார். இந் நூல்

ஊ. புஷ்பரத செட்டியாரின் கலாரத்நாகரம் அச்சுக் கூடத்தில் அச்சிடப்பெற்றது.

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளாரால் செய்யப் பெற்றது என்பதை இந்நூல் எவரும் அறிவர். ஆனால் அந் நூல் நிலைமை அஃதன்று. "சேரமான் பெருமாணாயனார் இயற்றிய சிலப்பதிகாரம் என அச்சிடப்பெற்றது" ஆசிரியர் இயற்பெயர் முதலாகிய சரித்திரம் ஒன்றும் தெரியவில்லை. இவருடைய தமயன் பெயர் செங்குட்டுவன் என்பது மாத்திரம் தெரிகிறது" என முகவுரையில் பதிப்பாசிரியர் எழுதினார்.

"கரும்பும் இளநீரும் கட்டிக் கனியும்
விரும்பும் விநாயகனை வேண்டி - அரும்பவிழ்தார்ச்
சேரமான் செய்த சிலப்பதிகா ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி"

என்னும் காப்புப் பாடலைக் கொண்டு இம்முடிவுக்கு வந்திருக்கவேண்டும்.

சேரமான் என்றதும் பதிப்பாசிரியர் எண்ணம் சேரமான் பெருமாள் நாயனாரை நினைந்தது. பின்னர்த் தவறென உணர்ந்தது. இதனை "இந்தச் சேரமான் அறுபத்து மூவருள் ஒருவராகிய சேரமான் பெருமாள் நாயனாராய் இருக்கலாம் என்று முன் முகவுரையில் ஒருவாறு எழுதினேன். ஆயினும் நன்றாய் நோக்குமளவில் அது தவறாய் முடிகின்றது" என்று எழுதுகின்றார்.

காதைப் பெயர்களுள் அரங்கேற்று காதை 'அரங் கேற்றுக் காதை' என்றும், இந்திரவிழவூர் எடுத்த காதை 'இந்திரன் விழவூர் எடுத்தகாதை' என்றும் கடலாடு காதை, 'கடலாட்டுக் காதை' என்றும் அச்சிடப் பெற்றுள்ளன. "தகுந்த பிரதிகள் கிடைக்காமையால் சிறிது பிழை இருக்கக்கூடும்" என்கிறார். பாடவேறுபாடுகள் காட்ட முயன்றிருக்கிறார். அம்முயற்சியால் கானல்வரியில் ஒன்றும், கனாத் திறத்தில் ஒன்றும் ஆக இரண்டு பாட வேறுகளே காட்டப்

பெற்றுள்ளன. ஆதலால் ஒத்துப் பார்ப்பதற்கு ஒரு பிரதியேனும் கிடைத்திருக்கிறது என்பது புலப்படுகின்றது ஆய்வுக்குக் கிடைத்த சுவடிக் குறிப்பு ஒன்றும் இல்லை.

சிலப்பதிகாரம்

புகார்க் காண்டம் – உரையுடன் 1880

இதனை வெளிப்படுத்தியவர் பெரும் புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மாணவர் தி. க. சுப்பராய செட்டியார். இவர் கானல்வரிக்கு எழுதிய உரையுடன் இப்பதிப்பு வெளிவந்தது. மற்றைப் பகுதிக்கு, அடியார்க்கு நல்லாருரையை அடிப்படையாக வைத்துக் கொண்டு இவரே உரை வரைந்துளளார்.

"இந்நூலுக்கு உரை பல உளவேனும் அவற்றுள் அடியார்க்கு நல்லார் உரையே பெரும்பாலும் வழி வகுக்கின்றது. அவ்வுரை பரந்தவுரையாய்க் கடினமான நடையாய் இருந்ததுமன்றி உரையின் தொடக்கம் இஃது, இறுதி இஃது எனவுணர்தல் அரிதாதலால் யாவரும் எளிதினுணரத் தொடக்கம் இறுதிகளைப் புலப்படுத்தியும், கடின நடையில் உள்ளனவற்றை எளியநடைகளாற் செய்தும் வேண்டிய இடங்களில் விரித்தும் சுருக்கியும் கரலிகிதங்களால் வந்து பொருந்தாதனவற்றை விலக்கியும், கானல் வரிக்கு உரையின்மையால் உரை எழுதியும் அரங்கேற்றுகாதையுள் வரம்பின்றிப் பரந்த இசை நாடக இலக்கணங்கள் பலவிடங்களினும் வருதலால் ஆங்காங்குணர இங்குச் சுருக்கியும் இவ்வாறு புகார்க்காண்டமும் மதுரைக் காண்டமும் தனித்தனியாய் அச்சிற் பதிப்பிக்கத் தொடங்கிப் புகார்க்காண்டம் உரையோடு அச்சிட்டிருக்கின்றேன்." என்று எழுதும் முகவுரைப் பகுதியால் இனிது விளங்கும்.

இவருக்குக் கிடைத்த சுவடிகளில் வஞ்சிக் காண்டம் இல்லை. அதனை உரையோடு வைத்திருப்பவர்கள் தந்து உதவுமாறு வேண்டினார். அவ்வாறு உதவினல் "இந்நூல் நிலைபெறுமளவும் அவர் பெயரும் நிலைபெறும்படி அச்சிற் பதிப்பிப்பேன்" என்றார், அவருக்குக் கிடைத்த பிரதிகளுடன்

திருமயிலை அண்ணுசாமி உபாத்தியாயர் ஒரு பிரதி தந்த உதவியைக் குறிப்பிடுகிறார்.

நூல் வெளியிடுதற்குள்ள அருமையையும், அதற்கு அறிவாளர் செய்யவேண்டிய உதவியையும் உருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

"பழங் காலத்தில் அச்சில் பதிப்பிக்கும் வழக்கம் இன்மையால் தமிழிலுள்ள பெருநூல்கள் உரைகளோடு பல இறந்தன; எஞ்சியிருக்கின்ற சில நூல்கள் சிலரிடத்து அருகி வழங்குதலால் அவற்றுளொன்றை அவரிடத்து அலைந்து; திரிந்து பெறலரிது. பெறினும் எழுதுவோர் கிடைப்பது அரிது; கிடைப்பினும் கூலி பெரிதாகலிற் கொடுத்து எழுதுவித்தலரிது; எழுதுவித்துக் கற்கப்புகின் கரலிகிதங்களால் பொதிந்த வழுக்களை நீக்கிப் பொருள் கொள்ளல் அரிது என்பது தெரிந்த தமிழ் நூலில் விருப்பமுடையோர் பலரும் பொருளுதவி செய்வராயின் மதுரைக் காண்டமும் உரையோடு விரைவில் அச்சிட்டு முடியும். இதுபோல இன்னும் சில நூல்கள் அச்சிடக் கருதியிருக்கின்றேன்"

பதினாறுவகை அவதானங்களில் தேர்ந்தவர் சுப்பராய செட்டியார். ஆதலால் சோடசாவதானம் சுப்பராய செட்டியார் எனப்பெற்றார். இவர் சென்னை அரசினர் நார்மல் பள்ளியின் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார், இவரே பதினோராந்திருமுறை நூல்களைச் சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து முதற்கண் (1869) அச்சிட்டவர். மாயூரப் புராணம், நாகைக் காரோணப்புராணம், காஞ்சிப்புராணம் புலியூர் வெண்பா, காங்கேயன் உரிச்சொல் நிகண்டு திருப்போரூர் சந்நிதிமுறை ஆகிய நூல்களையும் அச்சிட்டார். இவர்குறித்துவாறு, மதுரைக் காண்டம்; வெளிப்பட வில்லை இப்புகார்க் காண்டம் சென்னை மெமோரியல் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது. பதிப்பிக்கப் பெற்ற காலம், "விக்கிரம ஹூ சித்திரை மீ."

சிலப்பதிகாரம்

அடியார்க்கு நல்லாருரை — அரும்பதவுரை ஆகியவற்றுடன்,

1892

சிலப்பதிகார முதற்பதிப்பு வெளிப்பட்டுப்பதினாறு ஆண்டுகளின் பின்னே வெளிவந்த பதிப்பு இது. இதனைப் பதிப்பித்தவர் உ. வே. சாமிநாதையர். ஒன்றிரண்டு சுவடிகளையே கொண்டு ஆராய்ந்து மற்றவர்கள் பதிப்பித்தனர். இவர் தம் முதற்பதிப்புக்குப் பதினான்கு உரைச் சுவடிகளும், எட்டு மூலச்சுவடிகளும், இரண்டாம் பதிப்புக்கு மூன்று கையெழுத்துப் படிகளும் கிடைத்தன இதற்காகப் பட்டபாடுகள் இவ்வளவு என்று கூறமுடியாது. சிலப்பதிகார அரும்பத உரைச் சுவடி ஒன்றே ஒன்று கிடைத்தது. அதுவும் சிதைவு உடையது. வேறொரு பிரதியைக் கண்டு ஒப்பிட்டு ஆராயலாம் என்று போற்றி வைத்தற்கும் தாங்காத அவ்வளவு சிதைவு உடையது. அதனை வழங்கியவர் தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராசகோபாலாசாரியர் என்பவர். அதனைக் குறித்துப் பதிப்பாசிரியர் எழுதுகின்றார்;

"அது மிகவும் பழுதுபட்டு ஏடுகள் குறைந்தும் உள்ள ஏடுகள் தேய்ந்தும் முன்னுள்ளவைகள் பின்னும் பின்னுள்ளவைகள் முன்னுமாக மாறி எழுதப்பட்டும் அதிகமாகப் பிழைகள் விரவியும் இருந்தது. அதனோடு ஒப்புநோக்கிப் பொருளை ஒழுங்கு படுத்துவதற்கு இன்னும் கையெழுத்துப் பிரதிகள் கிடைத்தால் அனுகூலமாக இருக்கும் என்று பல விடங்களிலே தேடிப்பார்த்தும் வேறுபிரதி அகப்படவில்லை. அந்த ஒரு பிரதியை மட்டும் சோதித்துப் பதிப்பித்தற்கு எனக்குச் சிறிதும் மனமில்லையாயினும் அவ்வொருபிரதியும் சிலநாளில் இறந்துவிடின் அதனோடு இவ்வுரை இறந்துவிடும் ஆகையால் இதனைச் சோதித்துப் பதிப்பிக்க வேண்டும் என்று சில அன்பர்கள் கூறியமையால் துணிந்து பரிசோதித்து வெளிப்படுத்தலானேன்"

சிலப்பதிகாரம் ஏழாவது பகுதியாகிய கானல் வரிக்கும், இருபதாவது வழக்குரைகாதை முதலாகிய பிற்பகுதிக்கும் அடியார்க்கு நல்லார் உரை கிடைத்திலது. முழுவதும் பெறவேண்டுமென்று பெரிதும் முயன்றார். திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருவண்ணாமலை ஆதீனம், செங்கோல் மடம் முதலிய ஆதீன மடங்களிலும், சென்னையிலும் தஞ்சையிலுமுள்ள கையெழுத்துச் சுவடிநூல் நிலையங்களிலும், ஆழ்வார் திருநகரி, திருவைகுண்டம், வெள்ளூர், திருச்செந்தூர், ஆறுமுகமங்கலம், ஊர்க்காடு, ஊற்றுமலை, கடையநல்லூர், கிருஷ்ணாபுரம், பூழியன்குடி, கல்லிடைக் குறிச்சி, விக்கிரம சிங்கபுரம், களக்காடு, மேலகரம், செங்கோட்டை, தென்காசி, திருநெல்வேலி, வண்ணார்பேட்டை, பாளையங்கோட்டை, கும்பகோணம், கொட்டையூர், சீகாழி, சிதம்பரம், சேலம், பாகற்பட்டி, தஞ்சை, திரிசிரபுரம், திருப்பாதிரிப்புலியூர், துழாவூர், மதுரை, மிதிலைப்பட்டி, செவ்வூர், சென்னை, திருமயிலை முதலிய பலவூர்களிலுமுள்ள பரம்பரைத் தமிழ்ப் புலவர் வீடுகளிலும் சென்று தேடினார், தாம் செல்லக் கூடாத இடங்களிலும் இங்கிலாந்து பாரிசு நகரம் இவற்றிலுள்ள கையெழுத்து நூல் நிலையங்களிலும் ஆங்காங்குள்ள அன்பர்களைக்கொண்டு தேடச் செய்தார் அவ்வுரை முற்றும் கிடையாமையால் கிடைத்த அளவில் பதிப்பித்தார்.

அரிதின் முயன்று அகப்படுத்திய சுவடிகளுள் பல இனி வழுப்பட வேண்டும் என்பதற்கு இடமில்லாமல் பிழை பொதிந்து, பல்லாண்டுகளாகத் தம்மைப் படிப்போரும் படிப்பிப்போரும் இல்லை என்பதையும், நூல்களைப் பெயர்த்தெழுதித் தொகுத்து வைத்தலையே நோன்பாகக் கொண்ட அறவோர்களாலேயே தாம் உருக்கொண்டிருத்தலையும் நன்கு புலப்படுத்தின. "இவற்றை ஆராய்ந்த துன்பத்தை உள்ளுங்கால் உள்ளம் உருகும்" என்று உரைக்கின்றார் ஐயர்

சிலப்பதிகாரத்தின் இரண்டாம்பதிப்பு 1920 ஆம் ஆண்டு வெளியாயிற்று. முதற்பதிப்பில் நூலின் இறுதியில் தனியே அச்சிடப்பெற்றிருந்த அரும்பதவுரை அவ்வப் பக்கத்திலேயே அச்சிடப் பெற்றது. 'என' என்று முடித்த

அகவற்பாவின் ஈறுகள் 'என்' என, மாற்றப் பெற்றன. மேற்கோள் பகுதியும் அவ்வப்பக்கத்திலேயே அச்சிடப்பெற்றது. முகவுரையை அடுத்து இருந்த தொகையகராதிமுதலியன 'அரும்பத முதலியவற்றின் அகராதி' என நூலின் இறுதியில் இணைக்கப்பெற்றது. இவ்வாறே பல செப்பங்களை இரண்டாம் பதிப்புப் பெற்றது. பிற்பதிப்புகளிலும் இவ்வாறே சிலச்சில திருத்தங்கள் பெற்றன.

ஐந்தாம் பதிப்பு 1950-ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்பொழுது ஐயர் தம் நூற்பதிப்பை மேற்கொண்டிருந்தவர் அவர் திருமகனார் கலியாண சுந்தரையர். அவர்க்குச் சென்னை அரசினர் கையெழுத்துச் சுவடி நூல் நிலையத்தில் அரும்பத உரைப் பிரதி ஒன்று இருப்பது அறியவந்தது ஆங்குச் சென்று அதனைப் படியெடுத்துப் பதிப்பிட்ட அரும்பதவுரையுடன் ஒப்பிட்டுப் பார்த்தார். அதில்கண்ட வேறுபாடுகளை அப்பதிப்பிலே பின்னிணைப்பாக இணைத்தார்.

1891-ஆம் ஆண்டு சூன் மீ சிலப்பதிகார முதற்பதிப்பு அச்சிடத் தொடங்கப் பெற்றது பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள வெள்ளைய நாடார் வெள்ளி விழா (ஜூபிலி) அச்சுக் கூடத்தில் அச்சிடப் பெற்றது திருவாவடுதுறை, குன்றக்குடி, திருப்பனந்தாள் மடங்களின் தலைவர்களும், கொழும்பு பொ. குமாரசாமி முதலியாரும், கும்பகோணம் சாது சாது சேசையர் முதலிய சிலரும் பொருளுதவி புரிந்தனர்.

சிலப்பதிகாரம் வெளியிடப் பெற்றது. பலர் உதவி இருந்ததெனினும் கடனும் இருந்தது அந்நிலையில இராமநாதபுரம் அரசர் பாற்கர சேதுபதி நவராத்திரி விழாவுக்கு ஐயரை வரச் செய்து இரண்டு பட்டுத் துப்பட்டிகளைப் பரிசாக வழங்கினர் போக்கு வரவுக்கென ரூ. 100 வழங்கினர். துப்பட்டிகளைக் கொண்டு சென்ற ஐயருக்குக் கடன் பற்றிய கவலை எழுந்தது. திருவாவடுதுறை அம்பலவாண தேசிகரைக்கண்டு சேதுபதி செய்த சிறப்பினை உரைத்தார்! அவர் வியந்து பாராட்டினர் துப்பட்டியின் சிறப்பினையும் உரைத்தார். 'இவை என்ன விலை பெறும்?' என வினவினர் ஐயர். இரண்டும் முந்நூறு ரூபா பெறும் என்றார் தேசிகர்!

'சிலப்பதிகாரம் அச்சிட்ட கடன் இருக்கிறது அதனைத் தீர்க்க வழியில்லை; இவற்றை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன். தமிழ்த் தாயின் திருப்பணியால் வந்த பெருமை இது. இதனை மீண்டும் அப்பணிக்குப் பயன்படுத்துவதே முறை' என்றார் ஐயரின் எண்ணத்தை அறிந்துகொண்ட தேசிகர் ரூ. 300 தந்து துப்பட்டிகளை வாங்கிக் கொண்டார்! சிலப்பதிகாரப் பதிப்பால் நேர்ந்திருந்த கடன் நீங்கிப் பிற நூல்களின் பதிப்பிலே ஊன்றினார். தாம் நூலாடையாகிய மேலாடை போர்த்தி மகிழ்வதினும், தமிழன்னைக்குத் தாம் நூலாடையாகிய மேலாடை போர்த்தி மகிழ்வதிலேயே ஐயர் உள்ளம் நிலைத்திருந்தமை இதனால் புலப்படும்.

சிலப்பதிகாரப் பதிப்புக்குக் கிடைத்த சுவடிகளை உதவியவர்கள் பெயர்களும், சுவடி எண்ணிக்கையும் வருமாறு:

திருவாவடுதுறை ஆதீனம்	சுவடி	1
திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை	,,	2
,, சி தியாகராச செட்டியார்	,,	1
திருநெல்வேலி சாலிவாடீசுவர ஓதுவார்	,,	2
சேலம் இராமசாமி முதலியார்	,,	1
சிதம்பரம் சாமி ஐயங்கார்	,,	1
சென்னை தொ. வேலாயுத முதலியார்	,,	1
,, கூ. அப்பன் செட்டியார்	,,	1
,, குருசாமி ஐயர்	,,	2
திருமயிலை அண்ணுசாமி உபாத்தியாயர்	,,	2
யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை	,,	1
,, தி. குமாரசாமி செட்டியார்	,,	3
,, வி. கனகசபைப் பிள்ளை	,,	2
ஆறுமுகமங்கலம் குமாரசாமி பிள்ளை	,,	1
திரிசிரபுரம் அண்ணுசாமி பிள்ளை	,,	1
மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர்	,,	1
கொழும்புத்துறை குமாரசாமி செட்டியார்	,,	1
ஆழ்வார் திருநகரி பெரிய திருவடிக் கவிராயர்	,,	1
	ஆகச் சுவடிகள்	25

கலித்தொகை - மூலமும் உரையும்
1887

கலித்தொகையின் முதற்பதிப்பு 1887-ஆம் ஆண்டில் வெளிவந்ததே ஆகும். இதனைச் சுவடிகளில் இருந்து ஆய்ந்து வெளியிட்டவர் அறிஞர் சி. வை தாமோதரம் பிள்ளை ஆவர். இவ்வெளியீடு ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையுடன் கூடியதாகும்.

கலித்தொகையின் பதிப்புரை முப்பத்து நான்கு பக்கங்களைக் கொண்டது. அதில் மற்றைப் பதிப்பாளர் நோக்கம் யாது என்பதையும், தம் நோக்கம் யாது என்பதையும் ஒரு பகுதியில் வெளிப்படுத்துகிறார்.

[1] "இக்காலத்தில் புத்தகங்களைத் தேடிப் பரிசோதித்து அச்சியற்றும் வித்துவான்களோ தமக்குப் பொருள் வரவையே கருதி விரைவில் விலைபோகும் விநோத நூல்களையும் பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமான பாடப் புத்தகங்களையும் சர்வகலாசாலையாரால் பற்பல பரீக்ஷைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட போதனா பாகங்களையுமே அச்சிடுகின்றனர். சரஸ்வதியின் திருநடனம் செலிக்கப் பெற்றனவாகிய சங்கமரீஇய நூல்கள் சிதைந்தழியவும் அவைகளில் அவர்களுக்குச் சற்றேனும் திருட்டி சென்றிலது,

"இதனைக் கண்டு சகிக்கலாற்றாது மனநொந்து அழிந்துபோகும் சுவடிகளை இயன்ற மட்டும் தேடி அவற்றுள் தமிழிற்குப் பேரிலக்கணமாகிய தொல் சொல். சேனாவரையம், அதன் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம், வீரசோழியம். இறையனாரகப் பொருள், திருத்தணிகைப் புராணமென்று இன்னவற்றைப் பலதேசப் பிரதிகள் கொண்டு பரிசோதித்து அச்சிடுவித்தேன். இதனால் எனக்குப் பிரதிகள் விலை போகாமல் மூவாயிரத்தைந்நூறு ரூபாவரை திரவிய நஷ்டம் நேரிட்டது"

1. கலித்தொகை, பதிப்புரை பக். 12 - 13.

கலித்தொகை ஏடுகள் தொகுக்கத் தாம் பட்ட துயரும், சுவடிகள் இருந்த நிலைமையும் பிறவும் முன்னரே விளக்கப் பெற்றன "ஏடு எடுக்கும்போது ஓரஞ்சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ்முரிகிறது ஒன்றைபுரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது, இனி எழுத்துக்களோ வென்றால் வாலும் தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கிறது" என்று இவர் எழுதும் பகுதி தன்மை நவிற்சியணிக்கு ஒப்பற்ற எடுத்துக் காட்டாக இலங்கத்தக்கது, உண்மையாக உணர்ந்த உணர்வே உரை வடிவு கொண்டு திகழ்கின்றது.

கலித்தொகை முதலாய சங்கநூல் மாண்பைப் பதிப்புரையில் சுட்டியுள்ளார். "ஒன்றேயாயினும் தனித் தமிழ் உண்டோ? என்று இலக்கணக் கடலாகிய ஈசான தேசிகர் கூறியது இந்நூல்களில் பயிலாமைக்குச் சான்று" என்றும். "இது சமற்கிருத மொழி தமிழோடு வந்து கலக்கப் பெறாத தூயதமிழ்க் காலத்த தென்பது இப்பாடல்களுள் வடமொழி மணமும் இல்லாமையே தெரிவிக்கும். நற்றிணை முதல் புறநானூறு ஈறாகக் கிடந்த தொகையனைத்தும் இப் பெருஞ்சிறப்பு வாய்ந்தனவாகும்" என்றும் கூறுகிறார் தம் பதிப்பையும், பதிப்புரையையும் மறுத்துரைப்பார்க்கு மறு மொழி விரித்துரைக்கிறார். அவர் தம் தொண்டின் சிறப்பை யும், சீரியஉணர்வையும், செந்தமிழ்ப்பற்றையும்உணராராய் "நல்லாசிரியர் வழிப்பெற்ற தமிழ்க்கல்வி வலியில்லாதவர்" என்பன போலப்பலர் எழுதியும் பேசியும் வந்தமையே அவர் தம் பதிப்புரைகளை நொந்து நொந்து எழுதவைத்தன என்பதை உணரமுடிகின்றது.

கலித்தொகையின் பதிப்புச் செலவினைப் புதுக் கோட்டை அரசரின் அமைச்சர் அ சேசைய சாத்திரியார் ஏற்றுக்கொண்டார். அவருக்குத் தம் நன்றியறிதலைத் தெரிவித்துப் பிறரும் அவ்வழியைப் பின்பற்றினால் நல்லபல பழந் தமிழ் நூல்கள் வெளிப்பட முடியும் என்பதைத் தெளிவிக் கிறார். இவர்தம் பதிப்புக்கு யாழ்ப்பாணம் நல்லூர் சிற். கைலாசம் பிள்ளை படி எடுத்தல், ஒப்பிடுதல், ஆராய்தல் முதலிய வகைகளில் உழுவலன்புடன் உதவி செய்துள்ளார்.

தாமோதரனாரின் கலித்தொகைப் பதிப்புக்குக் கிடைத்த சுவடிகள்.

யாழ்ப்பாணம் வி. கனகசபைப்பிள்ளை	சுவடி	1
திருமணம் கேசவ சுப்பராயமுதலியார்	.	1
மயிலை இராமலிங்கம் பிள்ளை	,,	1
தஞ்சை சரசுவதிமால் சிதறல் ஏடுகள்		
புதுச்சேரி நெல்லித்தோப்பு சொக்கலிங்கம் பிள்ளை பேர்த்தி	,,	1
திண்டிவனம்	,,	1
சென்னை பிராசிய கிரந்த மண்டபம்	,,	1
புதுவை நயனப்ப முதலியார்	,,	1
ஆறுமுக நாவலர்	,,	1
திருவாவடு துறை ஆதினம்	,,	2
ஷை ஆதீனத்தார் உதவியால்பெற்ற	,,	2

ஆகியவையாம். இவற்றுள் பின்னருள்ள ஆறு சுவடிகளும் மூலச்சுவடிகள். மற்றவை நச்சினார்க்கினியர் உரையுடன் கூடிய சுவடிகள்.

கலித்தொகை - மூலமும் உரையும்
1924

இப்பதிப்பு இ. வை. அனந்தராமையருடைய தாகும் தஞ்சை மாவட்டம் இடையாற்று மங்கலம் என்னும் ஊரினர் இவர். வைத்தீசுவர ஐயர், தைலம்மாள் என்பார் இவர்தம் பெற்றோர். பல்வேறு உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றிய இவர், பின்னே மாநிலக் கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறையிலும் அமர்ந்தார். உ. வெ. சாமிநாதையர் பதிப்புகளுக்கு உடனிருந்து அருந்தொண்டாற்றினார். அத்தொண்டின் முதிர்ச்சியும், சாமிநாதையர் கொண்ட நன்றியுணர்வுமே கலித்தொகைப் பதிப்புக்கு இவரை ஆளாக்கிற்று என்பது வெளிப்படை. கலித்தொகைப் பதிப்பின் அமைதியும் முறைமையும் செப்பமும் இன்ன பிறவும் ஐயர் பதிப்பை நினைவூட்டுவன.

வாகவே உள்ளன. கலித்தொகைப்பதிப்பை அன்றி இவர் கைந்நிலை, ஐந்திணை எழுபது, களவழி நாற்பது என்பனவற்றையும் சீருறப்பதிப்பித்தார்.

கலித்தொகைப்பதிப்பு நச்சினார்க்கினியர் உரையுடன் 1887-ஆம் ஆண்டிலேயே அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளையால் வெளியிடப் பெற்றிருந்தும், இப்புதிய பதிப்பு வேண்டியதென்னை? என்னும் எண்ணம் பலர்க்கும் உண்டாதல் இயல்பு. ஆனால் புதிய புதிய செப்பங்களும், திருத்தங்களும் கிடைக்கும்போது புதுப்புதுப்பதிப்பு வெளிப்படுதல் இன்றியமையாததே என்பதை அறிஞர் எவரும் ஏற்றுக் கொள்வர், இல்லையேல் அத்திருத்தங்கள் வாளா ஒழிந்து விடும் அன்றோ! தாம் புதிய பதிப்புக் கொணதற்குரிய காரணத்தை அனந்தராமையரே குறிப்பிடுகிறார்.

"ஸ்ரீமான் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பதிப்பித்த கலித்தொகையை ஊன்றிப்படிக்கும் காலத்தில் பலவிடத்து மூலமும் உரையும் செய்திகளும் பொருந்தாமை கண்டு பல்வேறு வழிகளில் மிக முயன்று அவற்றின் உண்மைகளையறிந்து அமைத்துக்கொண்டேன். அவற்றுட் சிற்சில பிரஹ்மஸ்ரீ மஹா மஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்களுடன் நான் வேறு நூலாராய்ச்சி செய்யுங் காலத்தில் அவர்களிடம் சொல்லும்படி நேர்ந்தன. அவற்றைக் கேட்டபொழுது அவர்கள் இவ்வரிய விஷயங்கள் விளங்கும்படி குறிப்புக்கள் எழுதி நீங்கள் இந்நூலைப் பதிப்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள்."

"இக்கலித்தொகையைப் பதிப்பிக்க என் அகத்தே துணிவைத் தந்தது புறத்தின் ஓரடியாகிய

'பெரிதே உலகம் பேணுநர் பலரே'

என்பது"

உலகம் பரந்து கிடப்பது; ஒரு பதிப்பு என்ன? ஒன்பது பதிப்பு வந்தாலும் செல்லும்! என்னும் துணிவு இப்பதிப்பைத் தூண்டித் துலங்கச் செய்தது. இவ்வளவு போதுமா?

இப்பதிப்புக்குச் சாமிநாதையர் கலித்தொகை அச்சுப்படி ஒன்றும், ஒப்புநோக்கி ஆராய்தற்கு ஏட்டுச்சுவடிகள் இரண்டும் வழங்கினார். வெளியீட்டுச் செலவுக்காக வற்புறுத்தி ரூ. 150-0-0 வழங்கினார் ஒப்பிட்டுக் கொள்ளுதற்குத் தக்க துணை நூல்களும், சுவடிகளும் வழங்கினார். காணும் போதெல்லாம் கலித்தொகைப் பதிப்பு முன்னேற்றங் குறித்து வினவியும், ஊக்கியும் வந்தார்.

கா. நமச்சிவாய முதலியாரிடமும், அனவரத விநாயகம் பிள்ளையிடமும் கலித்தொகைச் சுவடிகள் வேண்டினார் அனந்தராமையர். அவர்கள் சில சுவடிகளுடன் ஒப்பிட்டுத் திருத்தி வைத்திருந்த அச்சுப் புத்தகங்களை வழங்கினார். அரிய உதவிகளெல்லாம் ஒருங்கு கூடி உரிய வகையில் வந்து சேரவே கலித்தொகைப் பதிப்புச் சிறப்புறுவதாயிற்று. இவற்றுள்ளும் கா. நமச்சிவாய முதலியார் தாம் அச்சிடுதற்குத் திட்டப்படுத்தி வைத்திருந்த தொல்காப்பிய இளம்பூரணர் உரைப் பகுதியை அச்சிடுதற்கு முன்னரே தடையின்றி வழங்கிய தனிப்பெரும் தகைமை குறிப்பிடத் தக்கதாம்.

நயத்தக்க நிலையில் தமிழறிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறார் பதிப்பாசிரியர்:

"நற்றிணையிற் பிறந்து தமிழறிவுடையரான செல்வர்கள், இதில் பதிப்பித்திருக்கும் குறிப்புக்களை ஒருவன் சேர்த்தற்கும் பல பிரதிகளோடு கண்ணூன்றி ஒப்பு நோக்குதற்கும் எவ்வளவு காலம் உழந்திருக்க வேண்டுமென்பதை மனத்தால் நோக்கி இதன் விலையைக் குறுந்தொகையாக மதித்து, தத்தம் தகுதிக்கேற்ப இதனில் ஐந்து பத்துப் பிரதிகளைப் பெறத் துணிந்து ஐங்குறுநூறும் பதிற்றுப் பத்தும் ஆகிய ரூபாய்களை முன்பணமாக உதவி இதனைக் கைக்கொண்டு பரிபாடல் (பரிபு ஆடல்-பரிந்தாளுதல்) செய்வதைத் தமது கடமைகளுள் ஒன்றென்று கொள்வராயின் அஃது இக்கலித்தொகை முழுவதும் விரைவில் வெளிவருவதற்கும் பெரிதும் உதவி செய்வதாகும்."

கலித்தொகை மூன்று பகுதிகளாக வெளிவந்தது. 1924-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் பாலை, குறிஞ்சிக் கலிகள் அடங்கிய முதல் தொகுதியும், 1925-ஆம ஆண்டு சூன் திங்களில் மருதம், முல்லைக் கலிகள் அடங்கிய இரண்டாம் தொகுதியும். 1931-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் நெய்தற்கலியும் சொற்குறிப்பு அகராதியும் அடங்கிய மூன்றும் தொகுதியும் வெளிவந்தன.

இப்பதிப்பில் 4000-க்கு மேற்பட்ட விளக்கக் குறிப்புகள் உள்ளன இவர்தம் ஊன்றிய நோக்கையும், உலையா உழைப்பையும் நிலைபெறக் காட்டும் சான்றுகளாக இவை மிளிர்கின்றன.

ஒரு பதிப்பு மீண்டும் பதிக்கப்பெற்ற காலையில் எய்தும் திருத்தங்கள் இத்தகையன என்பதை உணரும் அறிஞர் இத்தகைய பதிப்புகளை மேலும் மேலும் விரும்புவர் என்பது ஒருதலை. ஏறத்தாழ 1600 நூல்களைச் செவ்விதின் வெளியிட்டுச் சிறந்து விளங்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ சுப்பையா பிள்ளை அவர்கள் இப்பதிப்பின் வழியே தமக்கு ஏற்பட்ட படிப்பினையைத் தமிழுலகுக்கு வழங்குகின்றார்.

1 "இப்பதிப்பினை நோக்கும் போது தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் கிடைக்கப் பெறும் பழந்தமிழ் இலக்கண இலக்கிய ஏட்டுச் சுவடிகளையெல்லாம் தொகுத்து ஆராய்ச்சிப் பதிப்புக் குழு ஏற்படுத்தி முன்னர் அச்சிடப்பட்டு வெளிவந்த இலக்கண இலக்கிய நூல்களையெல்லாம் ஆராய்ந்து செப்பஞ் செய்தும் விளக்கங்களை எழுதியும் வெளியிட வேண்டுமென்று கருத வேண்டியிருக்கிறது. அதனால் திருத்தமான பாடங்கள் கிடைக்கும் விடுபட்ட மூலப் பகுதிகளும் உரைப் பகுதிகளும் கிடைத்தல்கூடும். மேற்கோள்களுக்கும் விளக்கங்கள் கிடைக்கும். இது செய்யத் தக்க அரும்பெருஞ் செயலாகும். இதனை அரசு அல்லது பல்கலைக் கழகங்கள் செய்தல்வேண்டும். புலவர் கல்லூரிகளில் ஏடு படிப்பதற்கும் பயிற்சியளிக்கவேண்டும்."

1. பதிப்புத் துறையில் பட்டறிவு. செல்வி 45, பக். 556.

கலித்தொகை மூலம் மட்டும் இவரால் 1930-ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது மூலமும் உரையும் கூடிய முதற்பெருகுதியின் முகவுரையில், 'ரத்தாட்சிஹு மார்கழிமீ 15வ' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கலித்தொகைப் பாடல்கள் நூற்றைம்பது:

"இறைவாழ்த்தொன் றேனைந்து பாலைநா லேழ்ஒன்
றிறைகுறிஞ்சி யின்மருதம் ஏழைந்-துறைமுல்லை
ஈரெட்டொன் றுநெய்தல் எண்ணுன்கொன்
றைங்கலியாச்
சோரண்ணு மீவைப்ப தே"

இதனைத் தொகையாக்கியவர் நல்லந்துவனார்:

"நாடும் பொருள்சான்ற[1] நல்லந் துவனுசான்
சூடும்பிறைச் சொக்கன் துணைப்புலவோர் -
தேடுவார்
கூட்டுணவே வாழ்த்தோடு கொங்காங்
கலியினையே
கூட்டினன் ஞாலத்தோர்க் கு"

கலித்தொகையின் திணைக் கோப்பு முறை பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்பது;

"போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கமளி ஊடல் அணிமருதம் — நோக்கொன்றி
இல்லிருத்தல் முல்லை இரங்கியபோக் கேர்நெய்தல்
புல்லுங் கலிமுறை கோப்பு"

இத்திணையை இவர் பாடினர் என்பது;

"பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்
நல்லுருத்தி ரன்முல்லை நல்லந்து வனெய்தல்
கல்விவலார் கண்ட கலி"

---

1. இவர் பெயரை நல்வந்துவன் என்பார் இ. வை. அனந்தராமையர்.

கலித்தொகை மாட்சி.

"திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்-திருக்குறளோ
கொங்குவேள் மாக்கதையோ கொள்ளேம்:
நனியார்வெம்
பொங்குகலி யின்பப் பொருள்"

சூளாமணி

1889

ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான சூளாமணி 1889-ஆம் ஆண்டில் அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளையால் முதற்கண் வெளிப்படுத்தப் பெற்றது. தாமோதரனாருக்குக் கிடைத்த சூளாமணிச் சுவடிகள் 8 அவை;

திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர்	சுவடி	1
ஷை ஆதினம் மகாலிங்கையர்	,,	1
கரூர் வேங்கட ராமையங்கார்	,,	1
பெருமண்டூர் சைனர் ஒருவர்	,,	1
வேதாரணியம் அனந்தவிசய முதலியார்	,,	1
வீடூர் அப்பாசாமி சாத்திரியார்	,,	1
வி. கனகசபைப் பிள்ளை	,,	1
காஞ்சிபுரம்	,,	1

இவற்றுள் ஐந்தாம்சுவடி தஞ்சை நீதிபதி கனகசபை முதலியார் உதவியால் கிடைத்தது. ஆறும் சுவடி விழுப்புரம் முன்சீப் இராமச்சந்திர ஐயர் உதவியால் கிடைத்தது. ஏழாம் சுவடியைத் திருச்சிராப்பள்ளியில் இருந்த ஒரு தமிழாசிரியர் வாங்கி வைத்திருந்தார், அவர் இறந்து போகக் கும்பகோணம் தலைமைக் காவலர் ஒருவரிடம் அஃதிருந்தது. அதனை ஆங்கு ஆய்வாளராக இருந்த கிருஷ்ணசாமி நாயுடு என்பார் வாங்கியனுப்பியிருந்தார்.

இப்பொழுது போலப் பாட்டு தொகை கீழ்க்கணக்கு பெருங்காவியம் சிறுகாவியம் என்பன எவை என்பதைத் தெளிவாக அறியாதிருந்த காலம் அது. ஆகலின் "சூளாமணி இரண்டாவது காவியமென அதன் பிரதிகளிலிருக்கும் குறி யீட்டினுல் தெரிய வருகின்றது. முதலாவது காவியம் எது வென்றும் மற்றைய காவியங்களின் வரிசைக்கிரமம் என்ன தென்றும் விளங்கவில்லை" எனத் தாமோதரனுர் எழுதினர்.

தாமோதரனுர் சூளாமணிப் பதிப்பைத் தொடங்கு முன்னரே பல நூல்களைப் பதிப்பித்திருந்தார். 1881-இல் வீரசோழியமும், 1883-இல் தணிகைப் புராணமும், 1885-இல் தொல் பொருளதிகாரமும் 1887-இல் கலித்தொகை யும் பதிப்பித்திருந்தார். இச்சூளாமணிப் பதிப்பை எடுத்துக் கொண்ட இவ்வாண்டிலே இலக்கண விளக்கப் பதிப்பையும் மேற்கொண்டிருந்தார். இப்பதிப்புகளுக்கும் சூளாமணிப் பதிப்புக்கும் தாம் செய்துகொண்ட ஒரு பதிப்பு மாற்ற முறையைக் குறிப்பிட்டுள்ளார்:

"இதுகாறும் அச்சிட்ட நூல்களில் ஒரு பிரதியின் ஆதாரமாவது இல்லாமல் பாடபேதத்தைத் திருத்துதல் ஒழிந்தயான் இப்பொழுது பிரதிகள் அனைத்தும் பிழை யென்றும் பிரதிகளில் இருக்கும் பாடம் ஆக்கியோன் வாய் மொழியாய் இருக்கமாட்டாது என்றும் எந்தப் பிரதி வழிச் சென்றுலும் அச்சில் வருவது ஆசிரியரினின்றும் வேறுபட்ட பிழைபாடென்றும் நிச்சயிக்க ஏது உண்டான இடங்களில் இரண்டொரு எழுத்தையாவது மொழியையாவது சந்தர்ப் பத்திற்கும் பொருளுக்கும் இயையுமாறு திருத்தத் துணிந் தேன் அவ்வாறு செய்யாவிடில் நூலின் சிறப்பு அழிவது மன்றிச் சில பாடங்கள் ஒரு பலனும் தராமலும் சில முன் பின்னேடும் பிற நூல்களோடும் விரோதப்பட்டும் நிற்கு மாதலிற் திருத்தம் அத்தியாவசியமாயிற்று இதனை உலகம் அறியச் சொல்லாமல் விடுவதே தப்பென்று உணர்ந்து இங் ஙனம் தெரிவிக்கலானேன்."

சூளாமணி சைனசமயம் தொடர்பான நூல் ஆக லின் அச்சமயக் கொள்கை விரவப் பெற்றிருத்தல் இயற்கை. அக்கொள்கையை அறிந்து பொருள் செய்தற்குரிய சமய

நூற் புலமையும், கோட்பாடுகளும் பதிப்பாளர்க்கு வேண்டும். சீவக சிந்தாமணி பதிப்பு தொடர்பாக டாக்டர் சாமிநாதையர் எடுத்துக் கொண்ட முயற்சிகளை முன்னே அறிந்துள்ளோம் அம்முயற்சியை மேற்கொண்டார் தாமோதரனார். வீடூர் அப்பாசாமி நயினார் சமண சமயத்தினர். சமயப் புலமையும் தெளிவும் மிக்கூர்ந்தவர் பேராசிரியர் சக்கரவர்த்தி நயினார் என்பார் தந்தையாரே இவ் அப்பாசாமி நயினார். இவரைத் தம்மிடத்து வருவித்து மூன்று திங்கள் காலம் கூட வைத்திருந்து தமக்கு உண்டாகிய ஐயப்பாடுகளையெல்லாம் அகற்றிக் கொண்டார் தாமோதரனார். பின்னரும் தமக்கு ஐயம் உண்டாகிய பொழுதெல்லாம் கடிதம் எழுதித் தெரிந்துகொண்டார். அவ்வப்போது சில தமிழறிஞர்களையும் கலந்து தெளிவு செய்தார். இவ்வகையால் தம்பதிப்பைச் செப்பமாக்கி வெளியிடப் பெரிதும் முயன்றார் தாமோதரனார்.

சூளாமணிப் பதிப்பு நிகழுங்கால் தாமோதரனார் நண்பர்கள், சிந்தாமணிக் கதைச் சுருக்கத்தைச் சாமிநாதையர் எழுதியிருப்பது போலச் சூளாமணிக்குக் கதைச் சுருக்கம் எழுதி வெளியிடுமாறு வேண்டினர். இதனால் சாமிநாதையரின் பதிப்பு மக்களைக் கவர்ந்தமை நன்கு புலனாகும்.

சூளாமணிக் கதையை எழுதிச் சேர்க்க நண்பர்கள் தூண்டினாலும் தாமோதரனார் அவ்வாறு செய்தார் அல்லர். அதனை விளக்கமாக எழுதி, "தோலாமொழித்தேவர் இயற்றிய சூளாமணிக் காவியத்தை மாணாக்கர் எளிதிற் கற்றுணரும்படி கத்திய ரூபமாகச் செய்த திவிட்ட குமாரன் கதை அல்லது வசன சூளாமணி" என்னும் பெயரால் 1898-ஆம் ஆண்டில் வெளியிட்டார். பின்னர்ச் சூளாமணி உரைநடை 1918-ஆம் ஆண்டில் பரிதிமால் கலைஞர் மாணவர் ந. பலராமையரால் எழுதி வெளியிடப் பெற்றது. அதில், "பிள்ளையவர்கள் செந்தமிழ் நூல்களை ஆய்வதே தமது பொழுது போக்காகக் கொண்டதுமன்றிப் பல அரிய தமிழிலக்கண இலக்கிய நூல்களை அச்சுவாகனமேற்றித் தமிழுலகில் நின்று நிலவி யுலாவச் செய்துள்ளார். அன்னார் தமிழிற்குச் செய்த பேருதவியினை யாவரும் நன்கறிவர்" என்று அவ்வுரைநடை நூல் முகவுரைக்கண் எழுதினார்.

அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளையின் உடன் பிறந்தார் சி. வை. இளையதம்பிப் பிள்ளை இரங்கூனில் இருந்தார். அவர் சூளாமணிப் பதிப்புச் செலவுக்கு உதவ முன் வந்தார். தம் தொகையாக ரூ 100-ம், தம் அன்பர்கள் வழியாக ரூ. 400-ம், ஆக ரூ 500 அனுப்பினார், அதனைக் குறிப்பிடும் தாமோதரனார்,

"இவர்கள் முன் மாதிரியைப் பின்பற்றி இன்னும் அநேகர் தத்தமக்கு ஏற்ற வித்துவான்களைக் கொண்டு பற்பல பழைய தமிழ் நூல்களை வெளிப்படுத்தி நிலைநிறுத்தக் கலைமகள் கடாட்சிப்பாளாக" ;என எழுதினார். இதில் "தத்தமக்கு ஏற்ற வித்துவான்களைக் கொண்டு" என்றும், "பழைய தமிழ் நூல்களை" என்றும் எழுதும் செய்தி தாமோதரனாரின் பேருளப் பெரும்பான்மையையும், பழந்தமிழ்ப் பற்றையும் ஒருங்கே புலப்படுத்துவனவாம்,

சூளாமணி, 'விரோதிஸ்ரூ கார்த்திகைமீ' வெளி வந்தது.

சூளாமணி
குறிப்புரையுடன
1954

இப்பதிப்பு டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடாக வந்ததாகும்.

சூளாமணிப் பிரதி ஒன்று டாக்டர் ஐயரால் ஆராய்ந்து குறிப்புகள் எழுதி வைக்கப்பெற்று இருந்தது. அச்சுவடி அவர் பெயரால் அமைந்துள்ள நூல் நிலையத்தில் இருந்தது. அதனை மூலமாக வைத்துக்கொண்டு, மற்றைப் பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பாட வேறுபாடு குறிக்கப் பெற்றது இவ்வகையில் ஒப்பிட்டு ஆராய்வதற்குக் கிடைத்த சுவடிகள் 5 ஆகும்.

அவை: *பாண்டிப் பிரதி 1*
வீடூர்ப் பிரதி 1
பெருமண்டூர்ப் பிரதி 1

ஆலக்கிராமப் பிரதி 1
சென்னை அரசினர் கையெழுத்து நூல் நிலையக்
கடிதப் பிரதி 1

. இவற்றுள் முதல் நான்கு சுவடிகளும் பேராசிரியர் அ. சக்கரவர்த்தி நயினார் வழங்கியவையாகும். இவற்றை அவரிடமிருந்து பெற்று ஐயர் குறிப்புகளுடன் நூல் வடிவில் கொணர்வதில் பேரார்வம் காட்டியவர் ஐயரின் திருமகனார் கலியாணசுந்தர ஐயராவர் பாட வேறுபாடு குறிக்கும் பணியில் ஈடுபட்டவர் "ச. கு. கணபதி ஐயர், எல். ஸ்ரீநிவாச ஐயர், வியாகரண சிரோமணி தி. இராமாநுசம் ஐயங்கார். செல்வர் பாலகிருஷ்ணன் ஆகியோர் வி. மு சுப்பிரமணிய ஐயர் முழுமையும் பார்வையிட்டுள்ளார். வி. துரைசாமி ஐயர் இடையிட்டு நின்ற இப்பணியை இனிது நிறைவேற்றி வைத்துள்ளார்

இந்நூற்பணி நடைபெற்று வருங்காலையில் கலியாண சுந்தரையர் இயற்கை எய்துதல் நேர்ந்தது. அவர் தம் ஆர்வத்தின் உந்துதலால் உருவாகிய இப்பணி நிறைவேறி முடியுமுன்னே இயற்கை அழைத்துக் கொண்டமை அவர் தம் எண்ணத்தின் ஆழ்ந்த பதிப்பொன்றை வைத்திருக்கவே செய்யும். அதனை நிறைவேற்றுதலால் அவர் தம் உயிர் விருப்பை நிறைவேற்றினர் நூல் நிலையப் பொறுப்பாளர் என நன்றியுடன் பாராட்டுதல் வேண்டும்.

சூளாமணிக்கு மூலப் பொருள் வழங்கிய நூல் "ஸ்ரீ புராணத்தின் பதினொன்றாவது புராணமான சிரேயாம்ஸ ஸ்வாமி புராணம் ஆகும்." அப்பகுதி இச்சூளாமணிப் பதிப்பில் காட்டப்பெற்றுள்ளது ஒரு நூலை மொழி பெயர்க்குங்கால் ஆங்கு வரும் பெயர்களைத் தமிழ் மொழி இயல்புக்கேற்ப எவ்வாறு முன்னையோர் மாற்றிக்கொண்டனர் என்பதை அறியமுடிகின்றது. அம்முறை நம் காலத்தவர்க்கும், பின்னே வருவார்க்கும் வழிகாட்டியாகவும் அமைகின்றது. ஆனால் அம்முறையை அறிந்து உரைப்பவர்களும் அம்முறையைப் போற்றவில்லையே என்பது நம்மை வருத்தவே செய்கின்றது. 'திருபிருஷ்டன்' என்பான் 'திவிட்டன்'

என்றும் 'விஜயன்' என்பான் 'விசயன்' என்றும், 'ஜ்யோதிர் மாலா' என்பாள் 'சோதிமாலை' என்றும் பிறரும் இவ்வாறே யும் தமிழியல்புக்கு ஏற்ப மாற்றப் பெற்றுள்ளமையும் எதுகை மோனை நயம் பொருந்த இயைக்கப் பெற்றுள்ள மையும் அறிந்துகொள்ளவும் தோலா மொழியார் அமைத் துக்கொண்ட கதையுடன் ஒப்பிட்டுக் காணவும் இப்பகுதி பயனுடையதாம்.

பன்னிரு சருக்கங்களையுடைய இந்நூலின் ஒவ்வொரு சருக்கக் கதைச் சுருக்கமும் ஆங்காங்கே எழுதப் பெற்றுள் ளது. அருஞ்சொல் பொருளும், சில மேற்கோள்களும் அடிக் குறிப்பாகத் தரப்பெற்றுள பாட வேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன. அரும்பத முதலியவற்றின் அகராதியும், அபி தான விளக்கமும் (சிறப்புப் பெயர்) இணைப்பாகத் தரப் பெற்றுள.

இதன் முதற்பதிப்பு 1954-ஆம் ஆண்டிலும் இரண் டாம் பதிப்பு 1962-ஆம் ஆண்டிலும் வெளிவந்தன

சூளாமணி - மூலமும் உரையும்

1962

சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்த சூளா மணியை ஏட்டுப் படிகளுடன் ஒப்பிட்டுத் திருத்தம் செய்த பதிப்பு இது. ஒரோ ஓர் செம்மையான சுவடி கிடைப்பினும் நல்ல பல திருத்தங்கள் கிடைத்தலுண்டு. அவ்வகையில் சில சுவடிகளை தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தொகுத்தார். அப்பொழுது அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகி விளங்கினார். அத்துறையில் பணியாற்றிய ஔவை சு. துரைசாமி பிள்ளையும், க. வெள்ளை வாரணனாரும் அச்சுப் படியைக் கைச் சுவடிகளுடன் ஒப் பிட்டு ஆராய்ந்து திருத்தம் செய்திருந்தனர். பாட வேறு பாடுகளும் காட்டியிருந்தனர். அத்திருத்தப் புத்தகத்தைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பெற்றது. கழகப் புலவர் சு. அ. இராமசாமிப்புலவர் பெருமழைப்புலவர்

பொ. வே சோமசுந்தரனுர் ஆகியவர்களைக் கொண்டு உரையும் விளக்கமும் எழுதச் செய்து வெளியிட்டது. ஏட்டுச் சுவடிகளுடன் ஒப்பிட்டு ஆராயப்பெற்றபதிப்பு இஃதாகலின் இதனைக் குறித்தலும் வேண்டுவதாயிற்று. இவ்வாராய்ச்சிக்குப் பயன்பட்ட சுவடிகள் நான்கு என்பதும், அவற்றை விடுர் பூரணசந்திர நயினுர் உதவினுர் என்பதும் கழக வெளியீடாகிய புறநானூற்றின் முன்னுரையால் விளங்குகின்றது.

இச்சூளாமணிப் பதிப்பு கழகத்தின் 1078-ஆம் வெளியீடாக 1962-இல் வெளிவந்தது. இஃதிரண்டு பகுதிகளாக வெளிவந்தது. முதற்பகுதியில் நாட்டுச் சருக்கம் முதல் கல்யாணச் சருக்கம் ஈருகிய எட்டுச் சருக்கங்களும், இரண்டாம் பகுதியில் அரசியற் சருக்கம் முதல் முத்திச் சருக்கம் ஈருகிய நான்கு சருக்கங்களும் அடங்கியுள்ளன, நூல் வரலாறு, நூலாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம், அருஞ்சொற்பொருள் ஆகிய இணைப்புகள் இடம் பெற்றுள்ளன.

பத்துப் பாட்டு

பத்துப்பாட்டில் முதற்பாட்டாகிய திருமுருகாற்றுப்படை சமயப் போற்றுதலும், ஓதுதலும் உடைய நூலாகலின் அதுமட்டும் தனியே மிகமுற்பட்டே வெளிப்போந்தது. அதன் பலப்பல பதிப்புகளும் வந்தன.

திருமுருகாற்றுப் படை

1839

இவ்வாண்டில் வந்த இப்பதிப்பே முதற்பதிப்பு ஆகலாம். இதற்கு முன்னே ஏதேனும் பதிப்பு உண்டா என்பது தெரியவில்லை. இது பதவுரையுடன் கூடிய பதிப்பாகும். நச்சினுர்க்கினியர் உரையைத் தழுவிச் செய்யப்பட்ட பதவுரை என்னும் குறிப்பு நூலில் உள்ளது.

இதனை ஆராய்ந்து அச்சிட்டவர் இலக்குமணன் என்பவர். இவர்தம் தந்தையார் அரங்கனுர் என்பவர். இதனை

இந்நூலில் உள்ள கட்டரம்பாக்கம் சுப்பராமையர் சொல்லிய சிறப்புப் பாயிரத்தால் அறியலாம்.

"எழுதா எழுத்தில் எழுது வித்தனன்
அரங்க மகிபன் அளித்தருள் புதல்வன்
இலக்கு மணனென் றியம்பு நாவலன்"

என்பது அது.

திருமுருகாற்றுப் படை
1853

இதனை ஆராய்ந்து பதிப்பித்தவர் நல்லூர் ஆறுமுக நாவலர் ஆவர். இவ்வுரையும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவி ஆறுமுக நாவலரால் எழுதப் பெற்றது என்பது அறியக் கிடக்கிறது. இந்நூல் பிரமாதிச ஹு ஐப்பசி மீ வெளியிடப் பெற்றுள்ளது.

பத்துப் பாட்டு
1889

நச்சினார்க்கினியர் உரை

இப்பதிப்பை முழுமையாக முதற்கண் வெளிக் கொணர்ந்தவர் டாக்டர் சாமிநாதையர் ஆவர். பத்துப் பாட்டுள் முருகாற்றுப்படை மட்டுமே அவர் வெளியீட்டுக்கு முன்னே வெளியிடப் பெற்றிருந்தவை அவர் பத்துப் பாட்டை முறையே ஆராய்ந்து வெளியிட்டமையாலேயே அறிஞர் உலகம் பத்துப் பாட்டுகள் எவை என்பதை அறிந்து கொள்ள முடிந்தது பழந்தமிழ்ச் சுவடிகளைத் தேடி ஐயர் தொகுத்து ஆராய்ந்த தொடக்க காலத்தில் அவருக்கே [1] பத்துப் பாட்டுகள் எவை என்பதை அறிந்துகொள்ள முடியாமல் இருந்தது.

சிந்தாமணியை ஐயர் பதிப்பித்து வந்தபோது நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோள்கள் வந்துள்ள இடங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பழஞ்சுவடிகளை ஆராய்ந்தார்.

1. என் சரித்திரம். பக். 764.

ஒருநாள் இரவு ஒரு பழஞ் சுவடியை எடுத்தார். அதில் முதலும் இல்லை. ஈறும் இல்லை. 'பொருநராற்றுப் படை' என்ற பெயர் முதலேட்டில் இருந்தது. பின்னே சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி ஆகியவை தொடர்ந்திருந்தன. அதனைப் பார்க்கும்போது "முருகு பொருநாறு" என்ற தனிப்பாடல் நினைவுக்கு வந்தது. திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை எழுதிய சுவடி அது. தம்மிடமே அச்சுவடியிருந்தும் அதனைப் பத்துப் பாட்டு என்று அறியாமையால் ஆராயவில்லை. அது பத்துப்பாட்டு என்பதை அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டார். [1] "நான் பத்துப் பாட்டைக் கண்டு பிடித்தேன்!" என்று மகிழ்ந்தார். ஓர் அரிய புதையல் கிடைத்ததாகப் பூரிப்படைந்தார்,

சிந்தாமணிப் பதிப்பு செவ்வையாக நிறைவேறியது. அந்நிலையில் இயற்றமிழாசிரியர் விசாகப் பெருமாளையர் பேரராகிய குமாரசாமி ஐயரென்பவர் "இந்தாருங்கள் பத்துப் பாட்டு" என்று சொல்லி ஓர் ஏட்டுச் சுவடியைத் தந்தார். அவர் பழம் புலவர்கள் வீடுகளில் பயனின்றிக் கிடக்கும் ஓலைச் சுவடிகளைக் காசில்லாமலோ, ஒரு சிறு தொகை தந்தோ வாங்கித் தக்கவர்களிடம் சேர்ப்பித்து ஒரு தொகை வாங்கிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தமிழ் வளர்த்த வழிமுறையில் வந்த அவர், தம் முன்னோர் போலத் தொண்டு செய்ய இயலவில்லை எனினும் இத்தொண்டைத் தேர்ந்துகொண்டது பாராட்டுக்குரியதே. அவர் தொண்டால் சில அரிய சுவடிகள் காக்கப் பட்டிருக்கக்கூடும். சில சுவடிகள் அச்சேறியிருக்கவும், திருந்தியிருக்கவும் கூடும். அவர் வழங்கிய பத்துப் பாட்டுச் சுவடியைக் கண்ட "ஐயர், "தமிழன்னையே இவர் மூலம் மேலும் தமிழ்த் தொண்டு புரியவேண்டுமென்று கட்டளையிடுகிறாள்" என்று கருதினார். அடுத்துப் பத்துப் பாட்டையே பதிப்பிக்க உறுதி கொண்டார். இத்தூண்டல் குமாரசாமி ஐயரால் நேர்ந்ததல்லவா!

1. என் சரித்திரம். பக். 821 - 23.

பத்துப் பாட்டுச் சுவடியைத் தேடிக்கொண்டு ஐயர் பல ஊர்களுக்குச் சென்றார். திருநெல்வேலியைச் சேர்ந்த வண்ணார் பேட்டையில் உள்ள திருப்பாற்கடனாதன் கவிராயர் வீட்டில் பத்துப்பாட்டின் பழஞ்சுவடி ஒன்று கிடைத்தது. பின்னே ஆழ்வார்திருநகரி சென்று புலவர்கள் வீடுகளிலெல்லாம் தேடினார். இலட்சுமண கவிராயர் உதவியால் முருகாற்றுப்படை முதல் ஏழு பாட்டுகள் அடங்கிய சுவடியொன்று கிடைத்தது. ஆயினும் என்ன?

கிடைத்த சுவடிகளை வைத்துக்கொண்டு ஆராய்ந்தார். சிலவற்றில் பத்துப் பாட்டுகளும் இல்லை. சிலவற்றில் இடை இடையே சில பகுதிகள் இல்லை. ஒன்றிலேனும் தனியே மூலம் இல்லை திருத்தமான சுவடி எங்கே கிடைக்கும் என்று தேட வேண்டிய நிலைமையே உண்டாயிற்று, திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் பத்துப் பாட்டுச் சுவடிகளைப் பெற்றுத் தரப் பெருமுயற்சி செய்தார். அவர் முயற்சியால் ஒரு சுவடி கிடைத்தது. அது வீரபாண்டிய கவிராயர் சுவடியைப் பார்த்து தூத்துகுடி கால்டுவெல் கல்லூரித் தமிழாசிரியர் குமாரசாமிப் பிள்ளை என்பார் எழுதிய சுவடியாகும். அதிலும் மூலமில்லை! ஆனால் பத்துப் பாட்டுகளும் அமைந்திருந்த திருத்தமான சுவடி அது. அதனை ஆராய்ந்தபோது குறிஞ்சிப் பாட்டில் ஒரு பகுதி விட்டுப் போயிருந்தது எல்லாச் சுவடிகளிலும் அப்பகுதி விடுபெற்றே இருந்தன! குறை சிறிதானால் என்ன? பெரிதானால் என்ன? குறைதானே!

ஐயர் தருமபுர ஆதீன மடத்திற்குச் சென்றார், அரிது முயன்றும் பத்துப் பாட்டுச் சுவடி கிட்டவில்லை. ஆனால் சில ஒற்றையேடுகள் கிடைத்தன! திருவருட் செயலால் அவர் எப்பகுதி இல்லை என்று தேடி வந்தாரோ அப்பகுதிக்குரிய குறையை நிரப்பும் ஏடு கிடைத்தது!

முதற் பதிப்புக்கு மூலச் சுவடி கிடைக்கவே இல்லை. நச்சினார்க்கினியர் உரையைக்கொண்டே மூலத்தை ஒழுங்கு செய்து பதிப்பித்தார். அப்பதிப்பின் பின்னே ஏடுகள் தேடிய காலத்தில் களக்காட்டில் இருந்து ஒரு சுவடி கிடைத்தது.

அது பத்துப் பாட்டின் மூலம் முழுவதும் அடங்கிய பழஞ் சுவடியாகும். அதனைத் தெற்கு மடம் சாமிநாத தேசிகர் என்பவர் வழங்கினர்.

பழந்தமிழ் நயம் உணராத சிலர் "பாட்டை எவர் படிப்பார்? அதன் கருத்தை வாங்கிக்கொண்டு எளிய உரை நடையில் புத்தகம் போட்டுவிடுங்கள். விலையாகும்" என்று தெளிவுரை வழங்கினர். சாமிநாதையர் பத்துப் பாட்டை அச்சிடுவதாகச் சொல்லிக் கையொப்பம் வாங்கிக் கொண்டிருக்கிறார், இது பணம் தேடும் வழி என்று தோன்றுகிறது" என்று சிலர் தூற்றிவிட்டனர். அதனால் ஐந்தாறு பேர்களிடம் பத்துப் பாட்டுக்குக் கையொப்பம் வாங்கிய ஐயர் அதற்குமேல் வாங்குதலை நிறுத்திக் கொண்டார். தமிழறிஞர் தி. த. கனகசுந்தரம் பிள்ளை "யான் சில காலமாகப் பத்துப் பாட்டு பிரதி தேடி இயன்றவரையும் பிழை திருத்தி எழுதிக்கொண்டு வருகிறேன். எட்டுத் தொகை நும்போலியரே அச்சிடவேண்டும். எம்மாலியன்ற பத்துப் பாட்டையாதல் யாமச்சிடுவோம் என்று ஐயருக்கு எழுதினார். ஆனால் ஐயர் எடுத்த முயற்சியில் சோர்வுறவில்லை "நீங்கள் உங்கள் முறையிலே அச்சிடுங்கள்; நான் என் முறையிலே அச்சிடுகிறேன் இருவர் புத்தகங்களையும் வாங்கிப் படிக்கத் தமிழ் நாட்டில் இடம் உண்டு" என்று எழுதினார். பதிப்பிலே ஊன்றினார். கனகசுந்தரம் பிள்ளையின பத்துப் பாட்டுப் பதிப்பு நின்று போயிற்று

ஐயரின் பத்துப் பாட்டுப் பதிப்புக்குக் கிடைத்த சுவடிகள்.

திரிசுரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை	சுவடி	1
தருமபுர ஆதினத்துப் புத்தக சாலை	,,	1
வேலூர் குமாரசாமி ஐயர்	,,	1
ஆறுமுகமங்கலம் குமாரசாமி பிள்ளை	,,	1
திருநெல்வேலி கவிராச நெல்லையப்ப பிள்ளை	,	1
வண்ணாரப்பேட்டை திருப்பாற்கடனாத கவிராயர்	,,	1
ஆழ்வார்திருநகரி தேவர்பிரான் கவிராயர்	,,	1
பொள்ளாச்சி வித்துவான் சிவன் பிள்ளை	,,	1

திருவம்பலத் தின்னமுதம் பிள்ளை	சுவடி	1
ம. வி. கனகசபைப் பிள்ளை	,,	1
சென்னை அரசாங்கக் கையெழுத்து நூல் நிலையம்	,,	1
களக்காடு சாமிநாத தேசிகர் மூலச்	,,	1

ஆகச் சுவடிகள் பன்னிரண்டும் வேறு சில சுவடிகளுமாம்.

பத்துப் பாட்டின் இரண்டாம் பதிப்பு 1918-ஆம் ஆண்டு வெளிவந்தது. வழக்கம் போலவே மறு பதிப்பில் திருத்தம் பெற்றதுடன், ஏறத்தாழ 300 பக்க அளவு மிகுதியும் ஆயிற்று. அருஞ்சொற்கள், மேற்கோள்கள், ஒப்புமைப் பகுதிகள், ஆராய்ச்சிக் குறிப்புகள் ஆகியன மிகுதியும் பெருகின. இதன் மூன்றும் பதிப்பு 1931-ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதே ஆண்டில் பத்துப் பாட்டின் மூலம், வரலாறு, பொருட் சுருக்கம், அரும்பத அகராதி ஆகியவற்றுடன் வெளிவந்தது.

மூல பாடம் பயிலுதல் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வந்த பழக்கம். புலவர்கள் இலக்கணங்களையும், நிகண்டுகளையும் இலக்கியங்களில் சுவையான பகுதிகளையும் மனப் பாடம் செய்து வைத்துக் கொள்வதும், அவற்றை வேண்டும் வேண்டும் பொழுதுகளில் களஞ்சியத்தில் சேர்த்து வைத்த தவசத்தையும், கருவூலத்துப் போட்டு வைத்த பணத்தையும் எடுத்துக்கொளவது போல எடுத்துப் பயன்படுத்தினர். அதற்குத் துணையாகும் வகையால் அழுந்தக் கற்றுத் தெளிந்த பட்டறிவால் மூலப் பதிப்பை ஐயர் வெளிப்படுத்தினர்.

இவ்வாறே அறிஞர் கா. நமசிவாய முதலியாரும் பத்துப் பாட்டு மூலப் பதிப்பு 1920-இல் வெளிப்படுத்தியதாக அறியப்பெறுகின்றது. அதனைப் பதிப்பித்தவர் குமாரசாமி நாயுடு அண்ட் ஸன்ஸ் என்பர். ஐயர் பத்துப் பாட்டு மூலத்தை வெளிப்படுத்து முன்னரே திருமுருகாற்றுப்படை மூலப் பதிப்புகள் சில தமிழகத்தில் உலாவின. அவை பாராயணம்' செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் பொருட்டுப் பதிப்பிக்கப் பெற்ற பதிப்புகளாகும்.

மணிமேகலை - மூலம்
1891

மணிமேகலையின் மூலம் 1891-ஆம் ஆண்டில் [1]திருமயிலை சண்முகம் பிள்ளையால் அச்சிடப் பெற்றது என்னும் செய்தியை டாக்டர் சாமிநாதையர் எழுதிய குறிப்புகளால் அறிய முடிகின்றது. அதனைப் பதிப்பிக்கும் காலத்திலேயே அதைப் பற்றி நன்கறிந்த தி. த. கனகசுந்தரம் பிள்ளை 29—3—1891-இல் [2]ஒரு கடிதம் எழுதியுள்ளார். மணிமேகலையில் அச்சிடப் பெற்ற மூன்று படிவங்களைப் பார்த்த பின்னர் அக்கடிதத்தை வரைந்துள்ளார்.

பின்னர் மணிமேகலைப் பதிப்பை ஐயர் எடுத்துக் கொண்டபோது (1898) "அப்பதிப்பு வெளிவந்து ஏழு வருஷங்களாயினமையின் நான் செய்த ஆராய்ச்சியின் பயனாகப் பலவகைக் குறிப்புகளுடன் மணிமேகலையை வெளியிடுவதில் பிழையில்லை என்று கருதினேன்" என்று குறிப்பிடுகிறார். ஆதலால் 1891-இல் சண்முகம் பிள்ளை மணிமேகலையைப் பதிப்பித்தார் என்பது விளங்குகின்றது. ஆனால் அப்பதிப்பு நூலைக் காண்டற்கு இயலவில்லை. 1894-ஆம் ஆண்டி வெளிவந்த நூலை அறிய முடிகின்றது. அதனை மேலே காண்போம்.

மணிமேகலை - மூலம்
1894

கையில் கிடைத்துள்ள அளவில் மணிமேகலையின் முதற்பதிப்பு இதுவேயாகும். புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் மாணவர் திருமயிலை சண்முகம் பிள்ளை தமக்குக் கிடைத்த சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து அச்சுக்கு அணியம் செய்தார். சுயப்பாக்கம் இரத்தின செட்டியார் மைந்தர் முருகேச செட்டியார் சென்னை 'ரிப்பன்' அச்சுக் கூடத்தில் பதிப்பித்தார். வெளியிடப்

1. என் சரித்திரம் பக். 1018 - 19.
2. கடிதச் செய்தியை ஐயர் பதிப்புப் பகுதியில் காண்க.

பெற்ற காலம் 'விஜய ஸ்ரீ தனுர் ரவி' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. சண்முகம் பிள்ளையின் 1891-ஆம் ஆண்டு மணிமேகலைப் பதிப்பையே முருகேச செட்டியார் பதிப்பாசிரியராக இருந்து மீண்டும் பதிப்பித்திருக்கக்கூடும். இந்நூலின் முற்குறிப்பில் விலை 12 அணு என்றுள்ளது. பிற்குறிப்பில் விலை ரூ. க. என்றுள்ளது இவர்தம் வரலாற்றுக் குறிப்பு 'ஏடு தொகுத்த ஏந்தல்கள்' வரிசையில் இடம் பெற்றுள்ளது.

சண்முகனுர் மணிமேகலை ஏடுகள் சிலவற்றைக் கொண்டு ஆராய்ந்து மூலத்தை ஒழுங்கு செய்து கொண்டார் பதிகத்திலும், மணிமேகலை முப்பது காதைகளிலுமாகப் பாட வேறுபாடுகள் 21 காட்டியுள்ளார் பின்னேயும் சில சுவடிகள் கிடைத்தன. அச்சுவடிகளால் மேலும் சில திருத்தங்களும் பாட வேறுபாடுகளும் கிடைத்தன. அவ்வகையால் கிடைத்த பாட வேறுபாடுகள் 51 ஆகும். ஆக மொத்தம் 72 பாடவேறுபாடுகள் இவர் பதிப்பில் காட்டப் பெற்றுள்ளன. ஆனல் டாக்டர் சாமிநாதையர் பதிப்பில் 1357 பாடவேறுபாடுகள் காட்டப்பெற்றுள்ளன. இவற்ருல் அவர் எடுத்துக்கொண்ட முயற்சியும், சுவடிப் பெருக்கமும் இனிதின் விளங்கும்.

மணிமேகலை - அரும்பதவுரையுடன்
1898

இது டாக்டர் சாமிநாதையர் பதிப்பாகும். நான்கு ஆண்டுகளின் முன்னே திருமயிலை சண்முகம் பிள்ளையின் மணிமேகலை மூலப் பதிப்பு வந்ததைச் சாமிநாதையர் அறிவார். அதனை ஆராய்ந்து பார்த்தார். அதில் திருத்தம் பெறவேண்டிய பகுதிகள் மிகுதியாக 'இருப்பதை உணர்ந்தார். அவர் தொகுத்து வைத்திருந்த சுவடிகள் அவர் செய்யவேண்டிய திருத்தங்களை எடுத்துரைத்தன. அன்றியும் அறிஞர்கள் சிலரும் மணிமேகலைப் பதிப்பு உரையுடன் வெளிவருதலை மிக விரும்பி வலியுறுத்தினர் குறிப்பாக யாழ்ப்பாணம் தி. த. கனகசுந்தரம பிள்ளை "ஏட்டுப் பிரதியில் இருக்கின்றபடியே இருக்கின்றது. ஏட்டுப் பிரதியில்

இருப்பது இதிலும் நலமென்று சொல்லலாம். ஏட்டில் சொக்கலிங்கம் என்றிருப்பதை ஒருவர் முழுவதும் கலிங்கமென்று பொருள் பண்ணி வாசித்தபோதிலும், மற்ெருருவராவது சந்தர்ப்பம் நோக்கிச் சொக்கலிங்கமென்று வாசிப்பார் இவர்கள் அதனைச் சேரக் கலிங்கமென்று அச்சிலிட்டதன் பின் ஏட்டைக் காணுதவர்களெல்லாம் சேரக் கலிங்கமென்றுதானே படிக்கவேண்டும்? 'எட்டி குமரன் இருந்தோன் தன்னை' என்பது 'எட்டிருமானிருந்தோன்' என்றும், 'ஆறறியந்தணர்' என்பது 'ஆற்றியந்தணர்' என்றும் அச்சிடப்படுமாயின் அதனுல் விளையும் பயன் யாதென்பதைத் தாங்களே அறிந்துகொள்ளவும் (29—3—1891) என்று எழுதியிருந்தார்.

தம் வேட்கையும் அன்பர்கள் தூண்டுதலும் மணிமேகலைப் பதிப்பை விரைவு படுத்தின. தமிழ் நூல்களில் பௌத்த சமயம் தொடர்பாக வரும் பகுதிகளைத் தேடித் தொகுத்தார். நீலகேசி உரையில் பௌத்த சமயக் கண்டனமாக வரும் இடங்களில் அமைந்த புத்தர் வரலாற்றையும், புத்த சமயக் கொள்கைகளையும் ஆய்ந்து எழுதிக்கொண்டார். வீரசோழியத்தில் புத்த தேவனைப் பற்றி வரும் வாழ்த்துப் பாடல்களை எழுதி ஆய்ந்தார். சிவஞான சித்தியார் - பரபக்கம், ஞானப் பிரகாசர் உரை இவற்றில் வரும் பௌத்த சமயக் கருத்துக்களைத் தெளிந்து கொண்டார். ஆங்கில நூல்களில் பௌத்த சமயம் தொடர்பாக உள்ள கருத்துகளை இராவ்பகதூர் மஞர் அரங்காசாரியர் வழியாக அறிந்தார் வடமொழித் தொடர்களில் எழுந்த ஐயங்களை, பெருகவாழ்ந்தான் அரங்காசாரியராலும், திருமலை ஈச்சம்பாடி சதாவதானம் சீனிவாசாசாரியராலும் அகற்றிக் கொண்டார். மணிமேகலை இலங்கைக்குச் சென்றது பற்றிய செய்தியைக் கொழும்பு பொ. குமாரசாமி முதலியார் வழியே ஆங்கிருந்த பௌத்த சமய ஆசிரியர் சுமங்களர் என்பவரால் தெளிவு செய்து கொண்டார். இவ்வாறு பல்வேறு அறிஞர்களின் அருந்துணையாலும், தம் அயராமுயற்சியாலும் மணிமேகலை நூல்நுட்பம் கண்டார். அரும்பதவுரை எழுதி அதனுடன் பதிப்பிக்கத் தொடங்கினர். இப்பதிப்பின் செலவை பொ. பாண்டித்துரைத் தேவர் ஏற்றுக்

கொண்டார். உடனிருந்து ஆராய்வார்க்குச் சிறுவயல் குறுநில மன்னர் முத்துராமலிங்கத் தேவர் மாதஊதியம் வழங்கினார். கொழும்பு பொ. குமாரசாமி முதலியார் அவ்வப்போது தக்க உதவி புரிந்தார்.

இதன் முதற் பதிப்பு 1898-ஆம் ஆண்டிலும் இரண்டாம் பதிப்பு 1921-ஆம் ஆண்டிலும் வெளியிடப் பெற்றன. இப்பதிப்புகளுக்கு 12 சுவடிகள் ஆராய்வுக்குக் கிடைத்தன

திருவாவடுதுறை ஆதீனத்துச்	சுவடி	1
எட்டையபுரம் பெரிய அரண்மனை	,,	1
மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர்	,,	1
திருநெல்வேலி திருவம்பலத் தின்னமுதம் பிள்ளை	,,	1
சேலம் இராமசாமி முதலியார்	,,	1
நல்லூர் சிற். கைலாச பிள்ளை	,,	1
ஆறுமுகமங்கலம் சுந்தரமூர்த்திப் பிள்ளை	,,	1
திருமயிலை சண்முகம் பிள்ளை	,,	1
சென்னை தி. முத்துக்குமாரசாமி முதலியார்	,,	1
சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலை	,,	1
மதுரைத் தமிழ்ச் சங்கப் பாண்டியன் புத்தகசாலை	,,	1
சென்னை பார்சுவநாத நயினார்	,,	1

வழக்கம் போலவே முதற் பதிப்பினும் பின் வந்த பதிப்புகளில் பலவகைத் திருத்தங்களும், சீரிய அமைப்புகளும் பெற்று வந்தன. ஆராய்ச்சிக்குக் கிடைத்த சுவடிகளில் மிதிலைப்பட்டிச் சுவடியின் சிறப்பு தன்னிகரற்றதாகும். "மிகப் பழமையானதும் பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்ததும் மற்றைப் பிரதிகளில் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் போகிய பாகங்களையெல்லாம் ஒழுங்குபடச் செய்ததும் கோப்புச் சிதைந்து அழகுகெட்டு மாசு பொதிந்துகிடந்த செந்தமிழ்ச் செல்வியின் மணிமேகலையை

அவளணிந்து கொள்ளும் வண்ணம் செப்பஞ் செய்து கொடுத்ததும் மிதிலைப்பட்டிப் பிரதியே" என்று ஐயர் எழுது வது இதன் சிறப்பை நன்கு உணர்த்துவதாம்.

இச்சுவடியிலேதான் 'பதிகம்', 'கதைபொதி பாட்டு' எனவும், விழாவறை காதை முதலியன 'விழாவறைந்த பாட்டு' முதலியனவாகவும் குறிக்கப் பெற்றிருந்தன. இக் குறிப்பால் காதைகளைப் பாட்டு என்று வழங்குவது உண்டு என்பதும், 'ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனன்' என் னும் பதிகக் குறிப்பு விளக்கமும் புலப்படும். இன்னும் சில காதைகளின் தலைப்பை விரித்து விளக்குமாப் போலவும் இச்சுவடித் தலைப்புகள் இருந்தன. பளிக்கறை புக்க காதை என்பது மணிமேகலை உதய குமாரனைக் கண்டு பளிக்கறை புக்க பாட்டு என்றும் 'மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை' என்பது மணிமேகலை உதயகுமரன்பால் உள்ளத்தாளென மணிமேகலை தனக்கு மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய பாட்டு என்றும், சக்கர வாளக் கோட்டமுரைத்த காதை என்பது. மணிமேகலா தெய்வம் சக்கரவாளக் கோட்டமுரைத்து அலளை மணிபல்லவத்துக் கொண்டுபோன பாட்டு என்றும் இவ்வாறே பிறவும் விளக் கம் பெற வந்துள்ளன.

புறநானூறு - மூலமும் உரையும்
1894

எட்டுத் தொகையுள் எட்டாவதாகிய புறநானூறு 1894-ஆம் ஆண்டில் டாக்டர் சாமிநாதையரால் பழைய வுரையுடன் பதிப்பிக்கப் பெற்றது. இதற்குமுன்னே எட்டுத் தொகையுள் பதிப்பிக்கப் பெற்ற ஒரே ஒரு நூல் கலித் தொகையேயாம்,

பண்டைத் தமிழகத்தின் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழும் புறநானூற்றுப் பதிப்பின்போது ஐயர் பதிப்புத் துறையில் பகலவனென ஒளி செய்து கொண்டிருந்தார். முந்து வந்த தம் பதிப்புகளிலும் இப்பதிப்பில் எத்தகைய புதுமையை ஆளலாம் என ஆராய்ந்தார். அதற்கு

வழிகாட்டியாக ஓர் அரிய நூலைக் கண்டார் அக்காட்சி அவர்தம் பதிப்புக்கு ஒப்பில்லாத ஒரு தனிச் சிறப்பை நல்குவதாயிற்று

கும்பகோணம் கல்லூரியில் வரலாற்றுத் துறைப் பேராசிரியராக விளங்கியவர் கே. ஆர். துரைசாமி ஐயர் என்பவர். அவர் ஒருநாள் ஓர் ஆங்கிலப் புத்தகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தார். அப்பெரிய புத்தகத்தைக் கண்ட சாமிநாதையர் அஃதென்ன புத்தகம் என்பதை அறிய ஆவலுற்றார். 'பைபிள்' என்று துரைசாமி ஐயர் கூறினார் ஐயர் 'பைபிள்' புத்தகத்தைப் பார்த்திருக்கிறார். இவ்வளவு தடியாக அஃதிருந்ததில்லை. ஆதலால், 'மிகப் பெரிதாக இஃதிருக்கிறதே' என்றார். துரைசாமி ஐயர் இது சிறந்ததொரு பதிப்பு ஒரே மாதிரியான சொல்லும் கருத்தும் உள்ள பகுதிகளை அங்கங்கே காட்டிப் பதிப்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பக்கத்தின் நடுவிலும் தனியே இந்த ஒப்புமைப் பகுதி இருக்கிறது. இதனைக் கன்கார்டன்ஸ் (Concordance) என்று ஆங்கிலத்தில் சொல்வர் என்று கூறி விளக்கிக் காட்டினார். அவ்வொப்புமைப் பகுதியால் ஆகும் பயன் என்ன என்றார் ஆர்வமிக்க சாமிநாதையர்.

"ஒப்பான பகுதிகளைக் கொண்டு ஆராய்வதால் உண்மையான பொருளும், சில சொற்களின் திருத்தமான வடிவங்களும் புலப்பட்டனவாம்" என்று பதில் மொழிந்தார் துரைசாமி ஐயர். [1]"அப்போது எனக்குப் புறநானூற்று ஆராய்ச்சியில் புதுமுறை ஒன்று தோற்றியது புறநானூற்றிலுள்ள விஷயங்களையும் சொற்களையும் முதலிலே அகராதியாகச் செய்து கொண்டு ஆராய்ச்சி செய்தால் உண்மை உருவத்தைக் கண்டுபிடிப்பது சுலபமாக இருக்குமென்று அறிந்தேன். அங்ஙனமே செய்து வைத்துக் கொண்டேன்" என்று எழுதுகிறார் சாமிநாதையர்.

புறநானூற்றுச் சுவடிகளை ஆராய்ந்து சரியான பாடத்தையும், பாட வேறுபாட்டையும் அமைத்துக்

1, என் சரித்திரம், பக். 986b.

கொண்டார் ஐயர். அருந்தொடர்களுக்கு அகராதி அமைத்தார். பாடிய புலவர்கள் பெயர்களை அடைவு செய்து கொண்டார். அப்புலவர்கள் பாடிய பாடல்கள் வேறு தொகை நூல்களில் காணக்கிடைக்குமாயின் அவற்றையும் தொகுத்து அப்புலவர்களின் வாக்கின் போக்கையும், நோக்கையும் அறிந்தார். ஆதலால் புறநானூற்று ஆராய்ச்சிக்கு முற்றுமாகச் சங்க இலக்கியங்களையெல்லாம் ஆராய்தலை மேற்கொண்டார். உரையாசிரியர்கள் மேற்கோளாகக் காட்டியுள்ள பகுதிகளைக் குறித்துக் கொண்டார். இதற்காகப் பழைய உரைகளையெல்லாம் பார்த்தாக வேண்டிய நிலைமையுண்டாயிற்று. மேற்கோள் காட்டும் உரையாசிரியருள் சிலரே இன்ன நூல் என்றோ, இன்னார் பாடியதென்றோ குறிப்பர். பலர் குறிப்பதில்லை. 'என்றார் பிறரும்' என்ற அளவில் அமைவர். ஆகலின் அவ்விடங்களைத் தேடிக் காண்டல் அருமையினும் அருமை இவற்றுடன் ஒப்புமைப் பகுதியைப் பார்த்துக் குறிப்பிடும் இப்புதிய முயற்சி பெருவேலையாயிற்று. பலர் உழைப்பையும் - பல கால உழைப்பையும் வேண்டிற்று. ஆனால் அவ்வுழைப்பின் பயன் அந்நூலுடன் மட்டும் அடங்கிவிடுவதில்லை, அதற்குப் பின்னே வெளிவரும் நூலுக்கு அவ்வுழைப்பு அரணாக அமைந்து விடுகின்றது.

இவ்வளவு பாடுபட்டும் புறநானூற்றின் 267, 268-ஆம் பாடல்கள் கிடைக்கவில்லை, அதன் பழைய உரையும் 266 - ஆம் பாடல்களுக்குமேல் கிடைக்கவில்லை சுவடிகள் இருந்த நிலைமையும் சொல்லத் தக்கதாக இல்லை, "உரையில்லாத மூலங்கள் எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்ததன்றி, இவற்றுள் சில பாடங்களின் பின்திணை எழுதப்படாமலும் சிலவற்றின் பின்துறை எழுதப் படாமலும், சிலவற்றின் பின் இரண்டுமே எழுதப்படாமலும் சிலவற்றின்பின் பாடியவரின் பெயர் சிதைந்தும் சிலவற்றின்பின் பாடப்பட்டோர் பெயர் சிதைந்தும் சிலவற்றின்பின் இருவர் பெயருமே சிதைந்தும், சில பாடல்கள் இரண்டிடத்தெழுதப்பட்டு இரண்டெண்களை யேற்றும் வேறு வேறிடத்தில் இருத்தற்குரிய இரண்டு பாடல்கள் ஒருங்கெழுதப்பட்டு ஓரெண்ணை

யேற்றும் சில முதற்பாகம் குறைந்தும், சில இடைப்பாகம் குறைந்தும், சில கடைப்பாகங் குறைந்தும், சில முற்றுமின்றியும் ஒரு பாடலின் அடிகளுள் ஒன்றும் பலவும் வேறு பாடல்களின் அடிகளோடு கலந்தும், ஓரடியே ஒரு பாட்டுள் சிலவிடத்து வரப்பெற்றும், பொருளுண்மை காணுதவண்ணம் இன்னும் பலவகைப்பட மாறியும் கையெழுத்துப் பிரதிகள் இருந்தன."

1894-ஆம் ஆண்டு செப்டம்பர்மீ புறநானூறு பதிப்பித்து நிறைவேறியது அதற்கு விரிவான முகவுரை எழுதப் பெற்றது ஆராய்ச்சி செய்வார்க்கு உதவத்தக்க வண்ணம் புறநானூற்றிற் கண்ட நாடுகள் கூற்றங்கள் ஊர்கள் மலைகள் ஆறுகள் என்பவற்றின் பெயர்கள் அகராதி முறையில் அமைக்கப்பெற்றன. பாடினோர் பாடப்பட்டோர் வரலாற்றுச் சுருக்கங்கள் எழுதப் பெற்றன பொருளடக்கம், துறை விளக்கம், துறைக் குறிப்பு, அரும்பத அகராதி, மேற்கோள் விளக்கம் ஆகியன எழுதிச் சேர்க்கப் பெற்றன. புத்தகத்தை முடித்துப் பார்த்த ஐயருக்குத் தாங்கொணு வியப்பாக இருந்தது! [1] "நானு இவ்வளவும் செய்தேன்" என்று தமக்கு உண்டாகிய வியப்பைக் குறிப்பிடுகிறார் கண்கவர் வனப்புக் கலைமாளிகை கட்டி முடித்துக் காண்பாரி கொள்ளும் வியப்பு இது! ஆனல் தொடக்கத்திலே அவர் புறநானூற்றை எப்படிக் கண்டார்?

ஒருநாள் முதலும் முடியும் இல்லாத ஓர் ஏட்டுச் சுவடியைத் திருப்பிக் கொண்டிருந்தார். அப்பொழுது சிந்தாமணியை ஆராய்ந்து கொண்டிருந்த நேரம் அதில் 'கொற்றுறைக் குற்றில' என்னும் பகுதி கண்ணிற்பட்டது. ஏனெனில், அத்தொடரை நச்சினார்க்கினியர் [2]சிந்தாமணியில் மேற்கோள் காட்டி அவர் வழக்கத்தை விடாமல் 'என்றார் பிறரும்' என எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது. 'கொற்றுறைக் குற்றில' எனத் தொடங்கும் பாடலில் 95 என்ற எண் இருந்தது. நற்றிணை முதலியவற்றின் மூலம் மட்டும் அடங்கிய கையெழுத்துச் சுவடி ஐயரிடம் இருந்தது.

1. என் சரித்திரம் பக். 998.

2. சிந்தா. கனக. 309.

அவற்றுள் ஒவ்வொன்றாகப் பார்த்து வந்தபோது, புறநானூற்றின் 95-ஆம் பாடலில் 'கொற்றுறைக் குற்றில' என்னும் தொடர் இருக்கக் கண்டார். ஆதலால் அச்சுவடியில் கிடைத்தவற்றையெல்லாம் புறநானூறென்று குறித்துக்கொண்டார். புறநானூற்றைக் கண்டுபிடித்த வகை இஃதாகும். அவ்வாறு கண்டவர்க்குத் தாமே அக்காட்சிக்கும் இக்காட்சிக்கும் உள்ள வேறுபாடு தெளிவாகப் புலப்படும்.

புறநானூற்றின் இரண்டாம் பதிப்பு 1923-ஆம் ஆண்டிலும், மூன்றாம் பதிப்பு 1935-ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. வழக்கம் போலவே பிற்பதிப்புகளில் திருத்தங்கள் பல ஏற்பட்டன; செய்திகளும் விரிவாயின. பத்துப் பாட்டு மூலம் போலவே புறநானூற்றிற்கு மூலப்பதிப்பும் தனியே ....இல் வெளிவந்தது

இப்பதிப்புக்கு உதவிய சுவடிகள்: (மூலம்)

திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தேசிகர்	சுவடி	1
திருத்தணிகை சரவணப் பெருமாளையர்	,,	1
யாழ்ப்பாணம் நல்லூர் சதாசிவப் பிள்ளை, த. கனகசுந்தரம் பிள்ளை	,,	1
,, வி. கனகசபைப் பிள்ளை	,,	1
திருமயிலை சண்முகம் பிள்ளை	,,	1
மந்தித்தோப்பு சங்கர சுப்பிரமணிய தத்த சுவாமிகள்	,,	1
திருநெல்வேலி கவிராச ஈசுவரமூர்த்திப் பிள்ளை	,,	1
அரியூர் சாமிநாதையர்	,,	1

(உரைச்சுவடி)

திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தேசிகர்	சுவடி	1
,, அம்பலவாண தேசிகர்	,,	1
ஆழ்வார்திருநகரி தாயவலந்தீர்த்த கவிராயர்	,,	1
மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர்	,,	2

வண்ணார்பேட்டை திருப்பாற்கடனாத கவிராயர்	,,	1
தென்காசி சுப்பையா பிள்ளை	,,	3
தூத்துக்குடி குமாரசாமிப் பிள்ளை	,,	2
மதுரைத் தமிழ்ச் சங்கம்	,,	1
யாழ்ப்பாணம் வண்ணை நகர் சுவாமிநாத பண்டிதர்	,,	1
மூலமும் உரையும் ஆக மொத்தச் சுவடிகள்		21

புறநானூற்றில் வரும் வரலாற்றுக் குறிப்புகள் சில வற்றை அறிஞர் வி வெங்கையா இராவ்பகதூர் வி. கனக சபைப் பிள்ளை ஆகியோர் விளக்கி உதவினர். புறநானூற் றுப் பதிப்புக்கு கே. சுந்தரராச ஐயர், சிறுவயல் குறுநில மன்னர் முத்துராமலிங்கத் தேவர், அ. இராமநாத செட்டி யார் ஆகியோர் பொருளுதவி புரிந்தனர்.

புறநானூறு - மூலமும் உரையும்
1947 - 1951

புறநானூற்றின் முதல் இருநூறு பாடல்களை ஒரு பகுதியாகவும், பின் இருநூறு பாடல்களை மற்றொரு பகுதி யாகவும் கொண்டு திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக வழியே வெளியிடப் பெற்ற வெளியீடு இஃ தாகும். முற்பகுதி 1947-ஆம் ஆண்டிலும், பிற்பகுதி 1951-ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. அச்சுப் பதிப்புடன், ஏட்டுச் சுவடி கொண்டு ஆய்ந்து உரைவிளக்கம் எழுதியும், 269-ஆம் பாடல் முதல் பழையவுரை இல்லாமையால் அவற்றுக்கு உரையும் விளக்கமும் வரைந்தும் பதிப்பித்தவர் உரைவேந் தர் சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை ஆவர்.

அரித்துவார மங்களத்தில் வாழ்ந்த பெருஞ் செல்வ ரும் வள்ளலும் புலவருமாகிய வா. கோபாலசாமி ரகுநாத ராசாளியார் என்பார் தம் நண்பர் பள்ளியூர் கிருட்டிண சாமி சேனைநாட்டார் என்பாரிடம் புறநானூற்றுச் சுவடி ஒன்றனைத் தந்து படியெடுத்துத் தருமாறு வேண்டினார்.

நாட்டார் அவர் விரும்பியவண்ணம் நன் முறையில் படியெடுத்து வைத்திருந்தார். அவர் தொடர்பு உரைவேந்தர்க்கு உண்டாயிற்று. ஒருநாள் டாக்டர் ஐயர் வெளியிட்ட புறநானூற்றின் இரண்டாம் பதிப்பைப் புதிதாக வாங்கிக் கொண்டு நாட்டாரிடம் சென்றார். அவர் தாம் வைத்திருந்த புறநானூற்றுச் சுவடிக் கைப்படியை நினைந்து ஒப்பிட்டு ஆராய்வதற்குத் தந்தார். அதனை உவகையோடு பெற்றுக் கொண்ட உரைவேந்தர் முற்பகுதியில் அச்சுப் புத்தகத்துடன் வேறுபாடுகள் மிகுதியும் இல்லாமையைக் கண்டார். 200 பாடல்களுக்கு மேலுள்ள பகுதிகளை ஒப்பு நோக்கியபோது சில பாடல்களில் அச்சுப் பிரதியில் விடுபட்டிருந்த சில அடிகளும், சிலவற்றில் சில திருத்தங்களும் காணப்பெற்றன. இவ்வாறு ஒப்புநோக்கும் பணி 1927-ஆம் ஆண்டு சூன் மீ 27உ முடிவுற்றது.

உரைவேந்தரின் புறநானூற்றுப் பதிப்பு ஒவ்வொரு பாட்டுக்கும் பாடினோர் பாடப்பட்டோர் வரலாறு, பாட்டின் கருத்து, உரை, உரை விளக்கம், ஆகியவற்றையுடையது பாட வேறுபாடுகளும் அவற்றைப் பற்றிய குறிப்புகளும் அவ்வப்பாடலின் உரைவிளக்கம் முதலிய பகுதிகளில் இடம் பெற்றுள்ளன. பாடப்பட்டோர் பெயர் தெரியாதவிடத்து பாடினோர் பெயரும் இருவர் பெயரும் தெரியாதவிடத்து புறத்துறைப் பெயரும் பாடலுக்குத் தலைப்பாகத் தரப்பெற்றுளளன. பழையவுரையுள்ள பாடல்களுக்கு அப்பழையவுரையின் பொழிப்புரையினையே சிறிதும் மாற்றாது பதவுரையாக்கி விளக்கவுரை தரப்பெற்றுள்ளன. அவ்வுரையில்லாத பாடல்களுக்குத் தாமே பதவுரையும் விளக்கவுரையும் உரையாசிரியர் வரைந்துள்ளார்.

இப்புதிய பதிப்பால் புறநானூறு பெற்றுள்ள விளக்கங்கள் பலப்பல. மறு பதிப்பால் நூல்கள் எய்தும் விளக்கத்திற்கும் செப்பத்திற்கும் உரைவேந்தரின் புறநானூற்றுப் பதிப்புச் சீரிய சான்றாகும். இவர் சங்கப் புலவர்கள் பெயர்களுள் சிலவற்றை உய்த்துணர்ந்தும் பாடவேறுபாடு கண்டும் திருத்தியுள்ளார். அவற்றுள் சில வருமாறு:

பாடல்	பழம் பதிப்பு;	புதிய பதிப்பு;
283.	அடை நெடுங்கல்வியார்	அண்டர் நடுங்கல்லினார்
227.	ஆடுதுறை மாசாத்தனார்	ஆவடுதுறை-மாசாத்தனார்
298	ஆலியார்	ஆவியார்
224	கருங்குழலாதனார்	கருங்குழவாதனார்
253	குளம்பாதாயனார்	குளம்பந்தாயனார்
249	தும்பி சொகினனார்	தும்பைச் சொகினனார்
291	நெடுங் கழுத்துப் பரணர்	நெடுங் களத்துப் பரணர்
251	மாற்பித்தியார்	மாரிப்பித்தியார்
296	வெள்ளைமாளர்	வெள்ளைமாறனார்
271	வெறிபாடிய காமக்-கண்ணியார்	வெறிபாடிய காமக்-காணியார்

ஐயர் பதிப்பில். 340-ஆம் புறப் பாடலைப் பாடியவர் 'அ...' என்னும் அளவில் சிதைந்துள்ளது. கழகப் பதிப்பில் 'அள்ளூர் நன்முல்லையார்' எனப் பெயர் முழுமை எய்தியுள்ளது. ஐயர் பதிப்பில் 337, 346, 357, 362, 370, 377 379, 384, 393-ஆம் பாடல்களில் சிதைவுடன் காணப்பெறும் சில சொற்களும் தொடர்களும் கழகப் பதிப்பில் நிறைவுடன் காட்சியளிக்கின்றன. 328, 335, 352, 353, 355, 361, 366, 373, 387, 388. 390, 391, 395, 396. 398, 399, 400 ஆகிய பாடல்களில் விடுபகுதிகள் சில கழகப் பதிப்புக்குக் கிடைத்துள்ளன எனினும் பாடல் நிரம்பிற்றில்லை. 321, 323, 333, 334, 371. 380, 383 ஆகிய பாடல்களின் சிதைவு இரண்டு பதிப்புகளிலும் மாறும் வாய்ப்பு ஏற்படவில்லை.

267, 268-ஆம் புறப் பாடல்கள் ஐயர் பதிப்புக்கு அகப்படாமை போலவே, 'ஔவை'க்குக் கிடைத்த கிருட்டிணசாமி நாட்டார் சுவடியாலும் அகப்படாதே ஒழிந்தது.

உரைவேந்தர் பதிப்புக்கு கல்வெட்டுப் பேரறிஞர் தி. வி. சதாசிவப் பண்டாரத்தார். அறிஞர் க. வெள்ளைவாரணனார் மிகுதியும் உதவியிருக்கின்றனர் அவர்கள் துணையும், 'ஔவை'யின் பேருழைப்பும் புறநானூற்றை

வரலாற்றுப் பெட்டகமாக ஆக்கி வைத்துள்ளன. "இன்னும் எத்துணையோ பல கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பழந் தமிழ் நூல்களும் வெளிவராமல் தெளிவின்மை, பற்றின்மை, பொருளின்மை, உள்ளமின்மை முதலிய மையிருட் பிழம்பில் புதைந்து மறைந்து கிடத்தலால் இந்நூற்கண் காணப்பட்ட வரலாற்றுக் குறிப்புக்களை முடிந்த முடிபாகக் கோடற்கு இடமில்லை. ஆயினும் அவை முழுதும் வெளியாகுங் காறும் இக்குறிப்புக்களை மேற்கொள்வது அறிஞர்கட்குத் தவறு காது" என்று ஔவை சு. துரைசாமி பிள்ளை தம் மூன்னுரை யிற் குறிப்பிடுவது ஆராய்ச்சியின் வளர்ச்சிக்கு இடந் தருவ துடன், அதனை ஊக்குவதாகவும் அமைகின்றது.

ஐங்குறு நூறு
1903

எட்டுத் தொகையுள் மூன்றாவதாகிய ஐங்குறு நூறு 1903-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதனை முதற்கண் ஆய்ந்து பதிப்பித்தவர் டாக்டர் உ. வே. சாமிநாதையரே.

ஐங்குறு நூறு மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் திணைவைப்பு முறையில் நூறு நூறு பாடல் களைக் கொண்டது இவற்றை முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் என்பார் பாடினர்.

"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் - கருதிய
பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு"

என்பது இதனை விளக்கும் பழைய வெண்பா: ஐங்குறு நூற் றின் பாடல்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல் லையும் உடையன. இதனைத் தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் என்பதும் தொகுப்பித்தார் யானை கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையார் என்பதும் இந்நூலின் இறுதியில் உள்ள குறிப்பினால் புலப்படுகின்றன.

இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. இது பதவுரையும் அன்று; பொழிப்புரையும் அன்று! அகத்திணை நூல்களுக்கே உரிய உள்ளுறையுவமம் இறைச்சிப் பொருள் முதலியவற்றை விளக்கிச் சிற்சில இடத்துமட்டும் அருஞ் சொற்பொருளைப் புலப்படுத்துவது. இவ்வுரையும் 469-ஆம் பாடலுக்குமேல் இல்லை, இடையேயும் சில பாடல்களுக்கு இல்லை, இவ்வுரை நூலைப் போலவே பொருள் நுணுக்கத் தால் சிறந்தது. இதனையுடைய பிரதியும் ஒன்றே ஒன்றும். இது ஆழ்வார் திருநகரி தே. இலட்சுமண கவிராயர் வழங் கியதாகும்.

பழைய உரையில்லாத பகுதிக்கு உரை எழுதிப் பதிப் பிக்கலாம் என ஐயர் எண்ணியதுண்டு. ஆனால் இந்நூலையும் இவ்வுரையையும் உற்று நோக்க அவ்விருப்பம் அடியோடே மாறிவிட்டது. இந்நூல் முழுமைக்கும் யான் எழுதிவைத்த அரும்பதவுரையை இதனுடன் பதிப்பியாமைக்கும் காரண மும் இதுவே" என்கிறார்.

ஐங்குறு நூற்றின் 129, 130-ஆம் செய்யுள்கள் ஒரு பிரதியிலும் கிடைக்கவில்லை 416, 490-ஆம் செய்யுள்களின் இரண்டாமடிகளிற் சீர்கள் குறைந்துள்ளன. இவற்றை நிறைவு செய்தற்குத் தக்கவாறு சுவடிகள் கிடைக்கவில்லை.

ஏட்டுச் சுவடிகளில் சில சொற்களின் வடிவங்கள் இருந்தமையை முகவுரையில் ஐயர் குறிப்பிடுகிறார்; அடுப்பு (அடம்பு) அணுமை (அணிமை) அலம்வருதல் (அலமருதல்) அற்சிரம் (அச்சிரம்) இற்றி (இத்திமரம்) கலிழ்தல் (கலுழ்-தல்) குருசில் (குரிசில்) துடக்கம் (தொடக்கம்) துடங்கின்று (தொடங்கிற்று) நெருனை (நெருநை) பஞ்சாய் (பைஞ்சாய்) பழநி (பழுனி) வல்லினை (வல்லுனை) வேணும் (வேண்டும்).

ஐங்குறு நூற்றுப் பதிப்பைத் திரிசிரபுரம் தியாகராச செட்டியார்க்கு உரிமையாக்கி மகிழ்கின்றார் ஐயர். "திருவா வடுதுறை ஆதீனத்து மகாவித்துவானும் என் ஆசிரியருமாக விளங்கிய திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர் களுடைய கண்மணி போன்ற முதன் மாணாக்கரும் பாடஞ்

சொல்லுதல், செய்யுள் செய்தல், நூலாராய்தல் முதலிய வற்றில் அவர்களைப் போன்றவரும், முன்பு கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் தமிழ்ப் பண்டிதராயிருந்தவரும், வேறு கவலையின்றி நூலாராய்ச்சியையே செய்துகொண்டு காலங்கழிக்கும்படி வற்புறுத்திக் கூறி அவ்வாறே யான் நடத்தற்குக் கரும்பு தின்னக் கூலி கொடுத்தாற்போலத் தம்முடைய அரிய வேலையை அன்புடன் எனக்கு எளிதிற் கிடைக்கச் செய்தவரும் "இரந்துபுன் யாக்கடமை யென்றுந் துதியா, வரந்தரவென் முன்னின்ற" வள்ளலு மாகிய திரிசிரபுரம் வித்துவான் ஸ்ரீ தியாகராச செட்டியார் அவர்களுடைய பேருதவி எழுமையும் மறக்கற்பாலதன்று. அவர்கள் செய்த மேற்கூறிய அரிய உதவி இல்லையேல் எனக்கும் பழைய தமிழ் நூலாராய்ச்சிக்கும் இக்காலத்தில் யாதோரியையும் இன்றென்பது திண்ணம் ஆதலால் இனி யதும் அரியதுமான இந்நூற் பதிப்பை அவர்களிடத்துள்ள நன்றியறிவிற்கு அறிகுறியாக அவர்களுக்கு உரியதாக்கு கின்றேன்."

இந்நூல் ஆய்வுக்குக் கிடைத்த சுவடிகள் நான்கு; வேறுசில சுவடிகள் ஒப்புநோக்க அவ்வப்போது கிடைத்தன வாம்.

திருவாவடுதுறை ஆதீனத்துச் சுவடி		1
கே. எம். வேலுப் பிள்ளை	,,	1
திருமயிலை சண்முகம் பிள்ளை	,,	1

இம்மூன்று சுவடிகளும் மூலமும் கருத்துரையும் உள்ளவை.

ஆழ்வார் திருநகரி தே. இலட்சுமண கவிராயர் சுவடி 1.

இது மூலமும் கருத்துரையும் பழையவுரையும் கூடிய சுவடி. தென்காசி சுப்பையா பிள்ளை வீட்டுச் சுவடியில் வேறு சுவடிகளில் கிடையாத ஆறு பாடல்கள் கிடைத்தன. அவற்றைத் 'தனிப் பாடல்கள்' என்ற தலைப்பில் நூலிறுதி யில் சேர்க்கப்பெற்றன.

ஐங்குறு நூற்றின் இரண்டாம் பதிப்பு 1920-இலும் மூன்றும் பதிப்பு 1944-இலும் வெளிவந்தன.

ஐங்குறு நூறு

மூலமும் - விளக்கவுரையும்

1957 - 58

ஐங்குறு நூற்றின் அருமையும் பெருமையும் விளக்கும் பதிப்பு இது. உரைவேந்தர் ஔவை சு. துரைசாமி பிள்ளை எழுதிய விளக்கவுரையுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக இது வெளிவந்தது. இது மூன்று தொகுதி களாக வெளிவந்தது. முதல் தொகுதியில் மருதமும், நெய் தலும் இரண்டாம் தொகுதியில் குறிஞ்சியும், பாலையும் மூன்றும் தொகுதியில் முல்லையும் இடம் பெற்றுள்ளன. இம் மூன்றும் தொகுதியில் ஆராய்ச்சியாளர்க்குப் பயன படும் வகையில் இரண்டு அகர நிரல்கள் அமைந்துள்ளன. ஒன்று அருஞ்சொல் அகரநிரல்; மற்றொன்று அரும்பொருள் அகர நிரல். முன்னது 193 பக்கங்களையும், பின்னது 39 பக்கங்களை யும் கொண்டது. இவை ஐயர் பதிப்பை நன்கு நினைவூட்டு கின்றன. ஐங்குறு நூற்றின் விளக்கவுரைப் பரப்பை 1305 பக்கங்களாக அமைந்துள்ள மூன்று தொகுதிகளின் பக்க எண்ணிக்கையே தக்கவாறு நிறுவும் என்பது ஒருதலை.

இன்னும் தக்கவண்ணம் முயன்றால் பழந்தமிழ்ச் சுவடிகள் கிடைக்கக் கூடுமோ என்னும் ஆர்வத்தை உரை வேந்தர் பதிப்பு உண்டாக்குகின்றது. அவர்தம் ஆராய்வுக்கு அவர்தம் இளந்தைக் கால ஆசிரியரும் திண்டிவனம் ஏ. ஏ. எம். உயர்பள்ளித் தமிழாசிரியருமான சீர்காழி கோவிந்தசாமி ரெட்டியார் சுவடி ஒன்று கிடைத்துள்ளது அதில் ஐயர் பதிப்பில் காணப்படாத சில திருத்தங்கள் சில பாடல்களுக்குரிய [1] குறிப்புரைகள் கிடைத்துள்ளன. அவற்றை ஆங்காங்குக் காட்டியுள்ளார் உரையாசிரியர்.

"வெறி செறித் தனனே" என்னும் 246-ஆம் பாட லின் மூன்றும் அடி, ஐயர் பதிப்புக்குக் கிட்டவில்லை. அவ்வடி

1. பழையவுரை.

"புன்புலம் வித்திய புனவர் புணர்த்த" என்று உரைவேந்தர் பதிப்பில் நிரம்புகிறது. இது கோவிந்தராசனூர் சுவடியிற் கண்டது.

"அந்திங் கிளவி தான்தர வெம்மையின்
வந்தன்று...
....
வாய்மணி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே"

என 490-ஆம் பாடலின் இரண்டாம் மூன்றும் அடிகள் சிதைவுற்றன.

அவ்வடிகள்;

"வந்தன்று மாதோ காரே ஆவயின்
ஆய்தொடி அரும்படர் தீர"

என உரைவேந்தர் பதிப்பால் முழுமையுறுகின்றன.

258, 375, 412 ஆகிய பாடல்கள் கோவிந்தராசனூர் சுவடியால் சில பாடவேறுபாடுகளைப் பெறுகின்றன. ஐயர் பதிப்பில் 242, 248, 290, 327, 356 ஆகிய பாடல்களுக்குப் பழைய உரை உண்டு. ஆனல் ஔவை பதிப்பில் இப்பாடல்களுக்குப் பழையவுரை இல்லை. 291, 305, 338 339, 343, 416, 430, 450 ஆகிய பாடல்களுக்கு ஐயர் பதிப்பில் பழைய வுரை இல்லை. ஆனல் ஔவை பதிப்பில் இவற்றுக்குப் பழையவுரை உண்டு. 458, 465, 467, 469 ஆகிய பாடல்களுக்கு ஐயர் பதிப்பில் பழையவுரை சிதைவுற்றுள்ளன. அக்குறை ஔவை பதிப்பில் அகல்கின்றது.

416-ஆம் பாடலில் அடிகுறைவாகக் கொண்டார் ஐயர். அதனை முகவுரையிலும் குறிப்பிட்டார். ஆனல் ஔவை அதனை ஐஞ்சீரடியாக்கி நிறைவு கொள்கிருர்; குறிப்பிட்டார் இல்லை.

ஐயர் பதிப்பில் நிரம்பாத 129, 130-ஆம் பாடல்கள் கோவிந்தராசனூர் சுவடியாலும் நிரம்பவில்லை என்பதை ஔவை பதிப்புக் காட்டுகின்றது.

மருதம் 100 பாடல்களுக்கும் 295 பக்க அளவில் விளக்கவுரை எழுதும் ஔவை பின்னே உள்ள பகுதிகளுக்குச் சுருக்கி எழுதுகிறார். இதனை, "இனி நெய்தல் முதலாக வரும் நானூறு பாட்டுக்கட்கும் இம்மருதப் பகுதியிற்போல உரைப்பின், நூலுரை பெரிதும் விரிவது கருதி உரையின் கண் சில பகுதிகள் விலக்கிச் சுருங்க உரைக்கின்றோம்" என்கிறார்.

இப்பதிப்பை இவண் குறிப்பிட்டமை ஓர் ஏடு கொண்டாயினும் ஆய்ந்து ஒப்பிட்டுப் பதிப்பிக்கப் பெற்றதாகலின் என்க.

அகநானூறு - மூலமும் உரையும்
1904

இப்பதிப்பு மதுரைச் சங்கத்தினின்று வெளிவந்ததாகும். இதனை ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு பழைய உரையுடன் ஆராய்ந்து வெளியிட்ட அறிஞர் இரா. இராகவ ஐயங்கார் ஆவர். இதில் 1 முதல் 36 பாடல்கள் மட்டுமே உரையுடன் உள்ளன. 37-ஆம் பாடல் மூலமும் முதலடிக்கு மட்டும் உரையும் அமைந்துள்ளன. இப்பதிப்பு 1904-ஆம் ஆண்டே பதிப்பிடப் பெற்றதாயினும் 1951-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றதென்பது அதன் முகப் பட்டையால் புலப்படுகின்றது. இப்பதிப்பின் தொடர்பாகவே-இப்பதிப்பாசிரியர் உதவியைக் கொண்டே-பின்னே வரும் பதிப்புகள் வந்துள்ளன. ஆகலின் இவ்வுரை பற்றிய குறிப்புகளை மேலே காணலாம்

அகநானூறு - மூலமும் உரையும்
1923

இதனைக் கம்பர் விலாசம் வே. இராசகோபாலையங்கார் பதிப்பித்தார். இப்பதிப்புக்கு இரா. இராகவ ஐயங்கார், மு. இராகவ ஐயங்கார் ஆகிய இருவரும் பேருதவி புரிந்துள்ளனர்.

சோழநாட்டைச் சேர்ந்த இடையள நாட்டு மணக்குடி என்னும் ஊரில் இருந்த பால்வண்ண தேவனை வில்லவ தரையன் என்று பெயர் சிறந்தவர் நெடுந்தொகைக்குக் கருத்து அகவலால் பாடினார் என்ற செய்தி அறியப் பெறு கின்றது. ஆனால் அது கிடைக்கவில்லை இதற்குப் பழைய உரை ஒன்றுண்டு. அதுவும் முதல் 90 பாடல்களுக்கே கிடைத் துள்ளது. அவ்வுரையுடன் ஒரோ ஓர் ஏடு கிடைத்தது. அவ் வேடு பற்றி இரா. இராகவ ஐயங்கார் குறிப்பிடுவது வருமாறு:

"பழைய உரையுடன், ஆறு நாட்டுக்குச் சேர்ந்த பெரும்பழனையில் இருக்கும் நல்லையப் புலவர் மகன் பொன் னையன் நெடுந்தொகை" என்று எழுதப்படிருந்தது. திரு நெல்வேலியைச் சேர்ந்த நான்குநேரி சேகரத்துப் பெரும் பழஞ்சி என்ற ஊரொன்றுளது. அதுவே இவ் வூர் என்று ஊகிக்கலாம.

"இப்பழனை ஏடும் 244-ஆம் பாட்டின் 13-ஆம் அடி முதல் 292-ஆம் பாட்டு முதலடி வரை எழுதப்படாத வெள்ளிதழுடையது. இவ்வேடு பிங்கல நிகண்டு அச்சிட்ட ஸ்ரீமான் சிவன் பிள்ளையவர்களால் தேடி எடுக்கப்பட்டது. இதனை மதுரைத் தமிழ்ச் சங்க ஸ்தாபனத்திற்கு முன்னே அந் நற்சங்க ஸ்தாபகரும் சிறந்த தமிழபிமானியும் பால் வண்ணனத்தம் ஜமீந்தாருமான ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் ஷெ சிவன் பிள்ளை குமாரரிடத்தினின்று விலை கொடுத்து வாங்கி என்போர் பலரும் கற்றுத் தெளியு மாறு தம் முகவை அரண்மனைப் புத்தக சாலையில் நிலைபெறு வித்தனர்[1]."

இப்பிரதியைப் பெற்று அறிஞர் மு. இராகவ ஐயங் கார் வழியே படியெடுத்து ஆராய்ச்சி செய்தார் இரா. இராகவ ஐயங்கார். பின்னர்ச் சங்கத்தில் பதிப்பாசிரியராக வும், செந்தமிழ் இதழாசிரியராகவும் பணியேற்று அக நானூற்றை ஆராய்ந்து வெளியிட முயன்றார். அம்முயற்சி,

நோயால் தடைப்பட்டது. அவ்வேடும் குறிப்பும் பாண்டித் துரைத் தேவரால் வாங்கப்பெற்று டாக்டர் சாமிநாதைய ரின் ஆராய்ச்சிக்குத் தரப்பெற்றது அவ்வேடு கொல்லம் 460-இல் எழுதப் பெற்றதாகக் குறிப்புண்மையால் இற் றைக்கு 691 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனலாம் அதனை ஆராய்ந்த இராகவ ஐயங்கார் 1923-ஆம் ஆண்டில் 638 ஆண்டுகளுக்கு முன் என்று குறிப்பிட்டுள்ளார். பனையேட் டின் வாணுள் ஏழு நூற்றாண்டுகளுக்கு உண்டு என்பது வியப் பானதேயாம். அவ்வேட்டைத் தேர்ந்தார் திறமும், பேணிப் போற்றினர் திறமும் அந்நீடு வாழ்வை நல்கினவாம்.

இவ்வாராய்ச்சிக்குக் கிடைத்த சுவடிகள்:

பொ பாண்டித்துரைத் தேவர் உதவிய பெரும்பழனை ஏட்டுச் சுவடியைப் பார்த்தெழுதிய	சுவடி	1
சென்னை ஓலைச் சுவடி நூல் நிலையச்	,,	1
உ. வே. திருநாராயண ஐயங்கார் தமிழ்ச் சங்கத்திற்குஉதவியதேவர்பிரான்கவிராயர்,		1
திருநெல்வேலி நெல்லையப்பக் கவிராயர்	,,	1
தி. த. கனகசுந்தரம் பிள்ளை	,,	1
௸ யார் கடிதச்	,,	1
கா. ரா. நமச்சிவாய முதலியார்	,,	1
திருமயிலை சண்முகம் பிள்ளை	,,	1
ஆகச் சுவடிகள்		8

இப்பதிப்புக்குச் சென்னை நீதிபதி டி. வி. சேசகிரி ஐயர், சேதுவேந்தர் பாற்கரசேதுபதி, ஆண்டிபட்டிப் பெரு நிலக்கிழார் பெத்தாச்சி செட்டியார், சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், மதுரை வழக்கறிஞர் டி. சி. சீனிவாச ஐயங்கார், தஞ்சை வழக்கறிஞர் கே எஸ். சீனிவாச பிள்ளை, சென்னை கா. ரா. நமசிவாயமுதலியார், சென்னை க. குமாரசாமி நாயுடு சன்ஸ் க. ஜயராம நாயுடு, ௸ மேலாளர் ஆதிகேசவலு நாயுடு ஆகியோர் பொருளுதவி செய்துள்ளனர்.

பழைய உரை முதல் 90 பாட்டுகளுக்கு உண்மையால், அவ்வுரையையும், அதற்குமேல் புத்துரையையும் கொண்டு வெளிவந்தது இராசகோபாலையங்கார் பதிப்பு. ஆயினும் புத்துரை 90-க்கு மேல் 70 பாடல்களுக்கே அமைந்தது. எஞ்சிய பகுதி மூலமாகவே இருந்தது

இது ருத்ரோத்காரி௵ ஆனிமீ 13௳ எழுதப் பெற்ற முகவுரையுடன் வெளிவந்துள்ளது, இவ்வாண்டு 1923 ஆகும் இதன் பின்னே 1933-ஆம் ஆண்டில் (ஸ்ரீமுக ஆவணி) நித்திலக்கோவை மூலப் பதிப்பு இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. இராசகோபால ஐயங்கார் பதிப்பை மூலமாகக் கொண்டு நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரும், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையும் இணைந்து எழுதிய பதவுரை விளக்கவுரைகளுடன் பாகனேரி தனவைசிய இளைஞர் சங்க வெளியீடாக 1944 - 1946-ஆம் ஆண்டில் அகநானூறு மூன்று பாகங்களாக வெளிவந்தது

"நெடுந்தொகை பாடிய கவிகள் நூற்று நாற்பத்தைவர்"

"இத்தொகைப் பாட்டிற்கு அடியளவு சிறுமை பதின் மூன்று; பெருமை முப்பத்தொன்று"

"தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி தொகுத்தான் மதுரை உப்பூரி குடிகிழான் மகனுவான் உருத்திர சன்மன் என்பான்."

'வண்டுபடத் ததைந்த கண்ணி' என்பது முதலாக 'நெடுவேண் மார்பின்' என்பதீறாகக் கிடந்த பாட்டு நூற்றிருபதும் களிற்றியானை நிரை எனப்படும். இப்பெயர் காரணத்தாற் பெற்றது. இது பொருட் காரணமாகக் கொள்க.

"நாணகையுடைய" என்பது முதலாக, "நாள்வலை முகந்த கோள்வலைப் பரதவர்" என்பதீறாகக் கிடந்த பாட்டு நூற்றெண்பதும் மணிமிடை பவளம் எனப்படும். இதுவும் காரணப் பெயர். என்னை? செய்யுளும் பொருளும் ஒவ்வாமையால்,

"வறனுறு செய்தி" என்பது முதலாக "நகைநன் றம்ம தானே யவனொடு" என்பதீறாகக் கிடந்த பாட்டு நூறும் நித்திலக்கோவை எனப்படும். செய்யுளும் பொருளும் ஒக்கு மாகலின்,

"ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை யோதாது
நின்றவற்றில் நான்கு நெறிமுல்லை-அன்றியே
ஆறு மருதம் அணிநெய்தல் ஐயிரண்டு
கூறு தலைகுறிஞ்சிக் கூற்று"

என்பவை நெடுந்தொகை அடங்கன் முறை பற்றிய முந்தையோர் மொழிகள்.

நெடுந்தொகையைப் பதிப்பித்து இராசகோபாலையங்கார் சோழ நாட்டுத் திட்டாணி வட்டம் என்னும் ஊரினர். இவர் தந்தையார் வேங்கடேச ஐயங்கார் தாயார் அரங்க நாயகியம்மாள். இவர்தம் தமிழாசிரியர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர். நாராயணசாமி ஐயர் தொடர்பால் சங்க இலக்கியப் பற்றும், திறமும் பெற்றார். அதனால் சங்கப் பாடல் நயங்களை இளைஞர் உணருமாறு இனிய உரைநடையில் எழுதிச் சில நூல்களாக வெளியிட்டார். நாலடியார், நான்மணிக் கடிகை ஆகிய நூல்களை வெளியிட்டார், அகநானூறு முழுமையும் உரையுடன் வெளியிடவேண்டும் என்பது இவர்தம் பேராவலாக இருந்தது. அதனால் நூல் முழுமைக்கும் உரையும், ஆராய்ச்சிக் குறிப்பும், பொருட்குறிப்பும் எழுதி முற்றுவித்தார். ஆனால் அவ்வாறு அச்சிட்டு முடிக்கும்பேறு வாய்க்காமல் 1935-ஆம் ஆண்டு சூன் திங்கள் 24-ஆம் நாள் இயற்கை எய்தினர். கம்பர்மேல் இவர் கொண்டிருந்த பற்றால் தாம் திருமயிலையில் கட்டிய மனைக்குக் 'கம்பர் விலாசம்' எனப் பெயரிட்டார். ஆதலால் கம்பர் விலாசம் இராசகோபாலையங்கார் என அறிஞர்களால் வழங்கப்பெற்றார்.

அகநானூற்றின் ஆராய்ச்சிப் பொறுப்பை மேற்கொண்ட பெரும்புலவர் ரா. ராகவ ஐயங்கார் தென்னவராயன் புதுக்கோட்டையில் பிறந்தார். இவர் தந்தையார்

இராமாநுச ஐயங்கார். இவர் தம் தாய் மாமனர் சேது வேந்தர் அரசவைப் புலவர் சதாவதானம் முத்துசாமி ஐயங்கார். இவரிடமே தமிழ்க் கல்வி பயின்றார். வடமொழி ஆங்கில மொழி ஆகியவற்றிலும் தேர்ந்தார் பாவன்மையும் நாவன்மையும் ஆய்வுத் திறமும் ஒருங்கே கொண்டு விளங்கினார். தமிழ்ச் சங்கச் செந்தமிழ் ஆசிரியராக விளங்கினார். அவ்விதழ் வழியே சில நூல்களை ஆராய்ந்து வெளியிட்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராகவும் விளங்கினார். பதிப்புத் துறையில் இவர் கொண்டிருந்த உயர்வற உயர்ந்த பண்பு நலன் பிறர்க்கு வாய்ப்பது அரிது! அதனை நிறையும் குறையும் என்னும் பகுதியில் காணலாம், இவர் பதிப்பித்த நூல்கள்; தொல்காப்பியப் பொருளதிகாரம் செய்யுளியல் நச்சினார்க்கினியம்; ஐந்திணை ஐம்பது; கரை நூல்; இனியவை நாற்பது; நேமிநாதம்; பன்னிருபாட்டியல்; திருநூற்றந்தாதி என்பவை.

பதிற்றுப் பத்து

1904

பதிற்றுப் பத்தினைப் பழைய உரையுடன் முதற்கண் வெளியிட்டவர் டாக்டர் சாமிநாதையரே ஆவர் அவர் புறநானூற்றுப் பதிப்பை நிறைவு செய்தார். அப்பதிப்பைக் கண்டு மகிழ்ந்த யாழ்ப்பாணம் பொ. குமாரசாமி முதலியார் பதிற்றுப் பத்தையும், அகநானூற்றையும் ஆராய்ந்து வெளியிடவேண்டும் என்றும், அவற்றுக்குத் தக்க பொருளுதவி செய்வதாகவும் கூறினார். ஆனல் பாண்டித்துரைத் தேவர் புறநானூற்றுப் பதிப்பைக் கண்டு பாராட்டி "இனிமேல் எந்த நூலை அச்சிடப் போகிறீர்கள்?" என வினவினார். ஐயர் எண்ணம் புறநானூற்றில் அழுத்தம் பெற்றிருந்தமையால் அந்நூலில் கண்ட துறைகளுக்கு விளக்கம் தேடுகையில் புறப்பொருள் வெண்பாமாலையின் சிறப்பை உணர்ந்தார். ஆகலின் அதனை வெளியிடக் கருதினார். "புறப்பொருள் வெண்பாமாலைக்குப் பழைய உரை ஒன்று என்பால் இருக்கிறது, மூலம் மாத்திரம் சரவணப் பெருமாளையரால் முன்பு

வெளியிடப்பட்டிருக்கிறது. இப்போது உரையுடன் வெளியிடலாம் என்று எண்ணுகிறேன்'' எனப் பாண்டித்துரைத் தேவரிடம் உரைத்தார். அவ்வெளியீட்டுக்கு அவர் ரூ. 500 வழங்கினார். அம்பலவாண தேசிகரும் ரூ. 300 வழங்கினார். ஆதலால் புறப்பொருள் வெண்பாமாலையை ஆய்ந்து வெளியிடும் பணியில் ஊன்றினார். அதற்குப்பின்னே மணிமேகலைப் பதிப்புத் தொடர்ந்தது. எதற்கும் ஆகும் நாள் ஒன்று வேண்டுமே! அந்நாள் 1904-ஆம் ஆண்டில் வாய்ந்தது.

எட்டுத் தொகையுள் நான்காவதாகிய பதிற்றுப் பத்து நூறு பாடல்களை யுடையதேனும் முதற்பத்தும், பத்தாம் பத்தும் கிடையாமையால் எட்டுப் பத்துகளுடனும் முதலாம் பத்தையோ, பத்தாம் பத்தையோ சார்ந்தன வாய் உரையாசிரியர்களாலும், புறத்திரட்டுத் தொகுப்பாசிரியராலும் குறிக்கப்பெறும இரண்டு பாடல்களும், மூன்று பாடல் பகுதிகளுமே கிடைத்துள்ளன.

பதிற்றுப் பத்துள் இரண்டாம் பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனாரும், மூன்றும்பத்து இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனாரும், நான்காம்பத்து களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாம் பத்து கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணரும், ஆறும்பத்து ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம் பத்து செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், எட்டாம்பத்து தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில்கிழாரும், ஒன்பதாம் பத்து குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழாரும் பாடியவை.

பதிற்றுப் பத்துக்குப் பழையவுரை ஒன்றுண்டு அது சுருக்கமாக அமைந்த உரையாகும் பதவுரையைப் போன்று விரிவாகவும் குறிப்புரையைப் போன்று சுருக்கமாகவும் இல்லாமல் இடைப்பட்டதாக உள்ளது.

"ஒவ்வொரு செய்யுளின் பின்னும் அமைந்துள்ள துறை வண்ணம் தூக்கு பெயர் என்பன உரையில்லாத மூலப் பிரதிகளிலெல்லாம் இருத்தலின் அவை உரையாசிரியரால் எழுதப்பட்டன அல்ல என்பதும், நூலாசிரியர்களாலோ தொகுத்தாராலோ எழுதப்பட்டன என்பதும் பதிகங்கள் உரைப் பிரதிகளில் மட்டும் காணப்படுதலின் அவற்றை இயற்றிஞேர் நூலாசிரியரோ தொகுத்தோரோ அல்லர் என்பதும் தெரிகின்றன" என்பார் ஐயர்.

சிந்தாமணி ஆராய்ச்சியின்போது பாட்டு தொகைகளின் பழமையையும், சுவையையும் ஐயர் அறிந்துகொள்ள வாய்த்தது. மேற்கோள்களைத் தெரிந்து கொள்வதற்காகச் சங்க இலக்கிய நூல்களையெல்லாம் பெயர்த்தெழுதி ஒருங்கு வைத்து ஆராயும் இன்றியமையாமை உண்டாயிற்று. புறநானூற்றுப் பதிப்பால் உண்டாகிய ஊக்கம் பதிற்றுப் பத்தைப் பதிப்பிக்க அடித்தளம் அமைத்துத் தந்தது இதன் முதற் பதிப்பு 1904-ஆம் ஆண்டு சூன் மாதத்திலும், இரண்டாம் பதிப்பு 1920-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும், மூன்றும் பதிப்பு 1941-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும் வெளிவந்தன மூன்றும் பதிப்பில் குறிப்புரை எழுதி அடிக் குறிப்பாகச் சேர்க்கப்பெற்றது. பதிற்றுப்பத்து ஆராய்ச்சிக்குக் கிடைத்த சுவடிகள் 6. அவை:

திருவாவடுதுறை ஆதீனச்	சுவடி	2
அரசினர் ஓலைச் சுவடி நூல் நிலையச்	,,	1
ஆழ்வார்திருநகரி தே. இலட்சுமண கவிராயர்	,,	1
ஜே எம். வேலுப்பிள்ளை	,,	1
தி. த. கனகசுந்தரம் பிள்ளை	,,	1
திருமயிலை சண்முகம் பிள்ளை	,,	1

இவற்றுள் இரண்டு சுவடிகளில் உரை இருந்ததென அறியப் பெறுகிறது. வேறு சில சுவடிகள் ஆராய்வதற்கு அவ்வப் போது கிடைத்தன என்பது குறிக்கப் பெற்றுள்ளது

முதற் பதிப்புக்கு இராசராசேசுவர சேதுபதியும், இரண்டாம் பதிப்புக்குத் திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகரும் பொருளுதவி புரிந்தனர்

பதிற்றுப் பத்து - மூலமும் உரையும்
1950

இப்பதிப்பு உரைவேந்தர் ஔவை துரைசாமி பிள்ளையின் உரையும் விளக்கமும்பெற்றுக் கழக வழியே 1950-ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்பாகும். இப்பதிப்பின் ஆராய்ச்சிக்கு ஏடுகள் இரண்டு பெற்று அச்சுப்படியுடன் ஒப்பிட்டுச் சில பாட வேறுபாடுகளும் சில பாடங்களில் காணப்பட்ட ஐயங்களுக்கு விளக்கமும் பெற்றதாகக் 'குறிப்பிட்டுள்ளார். ஆனால் அச்சுவடிகள் எவரிடமிருந்து பெற்றவை என்பது பற்றிய குறிப்பு இல்லை.

இப்பதிப்பில் ஐயர் குறிப்பிடும் பாட வேறுபாடுகள் அனைத்தும் காட்டப் பெற்றில. தக்கவை எனக் கருதப் பெறுவன மட்டும் காட்டப்பெற்றுள. பொருந்திய பாடங்களைத் தேர்ந்து மூலத்தில் ஏற்றிப் பொருள் கூறவும் பெற்றுள ஐயர் பதிப்பில் காணப்பெறாத சில பாட வேறுபாடுகளும் இப்பதிப்பில் உள. சான்றாக 15, 53-ஆம் பாடல்களைக் காண்க சில பாடங்கள் திருந்தியதற்கு 42-ஆம் பாடலில் 'சேர்ந்தோ ரல்லர்' என்பது 'நேர்ந்தோ ரல்லர்' என்றும்' 51 ஆம் பாடலில் 'நாடுடன் கமழ. என்பது 'நாகுடன் கமழ' என்றும் திருத்தம் பெற்றமை கொள்க. அடிமுழுமையும் திருத்தம் பெற்றமை 'அரும்பறை வினைஞர் புல்லிகல் படுத்து' என்பது (75) 'மருபுல விளைஞர் புலவில் படுத்து' எனத் திருத்தப்பெற்றமையால் அறிக.

முற்பதிப்பினும் பிற்பதிப்புகள் திருத்தம் பெற்று வருதலை 'முரரை முழுமுதல்' என்ற பாடம் (ஐந்தாம்பத்து-பதிகம்) அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. என்று ஔவை சு. துரைசாமிப்பிள்ளை குறிப்பிடும் பாடம் ஐயரின பதிற்றுப் பத்து மூன்றும் பதிப்பில் முழாரை முழுமுதல், எனப்பாடம் பெற்று 'முழாரை; மருஉ முழவுத்தாள் எரிவேங்கை

(கலி. 44; 4) முழாரைப் போந்தை "(புறநா. 85; 7) என்று விளக்கம் பெற்று வந்தமையால் தெளிக.

இவ் வாய்வுக்குக் கிடைத்த சுவடிகள் இரண்டனுள் ஒன்று மூலச் சுவடி என்பது "மூலமட்டுமுள்ளதில் 'வெருவர' என்ற பாடமே உள்ளது" என்னும் அடிக்குறிப்பால் (86) புலப்படுகின்றது. தம் ஆசிரியரும் திருவையாற்று அரசர் கல்லூரிப் பேராசிரியருமாகிய அரங்க வேங்கடாசலம் பிள்ளை எழுதிய உரையொன்று கிடைத்ததென்றும், இவர் எழுதிய உரையை நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் பார்வையிட்டு ஊக்கப்படுத்தினர் என்றும் முன்னுரையில் உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

நற்றிணை - மூலமும் உரையும்

1914

எட்டுத்தொகையுள் முதலாவதாகிய நற்றிணை முதற்கண் பின்னத்தூர் அ நாராயணசாமி ஐயரால் ஆய்ந்து வெளியிடப் பெற்றது. நூல் அச்சிட்டு முன்னுரையும் முடித்து பாடினோர் பாடப்பெற்றோர் வரலாறுகளையும் எழுதி வந்தார். பாடப் பெற்றோர் வரலாற்றுள் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாற்றின் ஒரு பகுதி எழுதிய அளவில் இயற்கை எய்தினர். அச்சிட்ட படிவத்தை அட்டை கட்டிப் பார்க்கவும் இயலாமல் இயற்கை விளையாடியது! அவர் தம் அருந்தமிழ் அன்புக்கும் அறிவுக் கூர்மைக்கும் நற்றிணை என்றும் அழியாச் சான்றாக இலங்கும்.

தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி வட்டத்தைச் சார்ந்தது பின்னத்தூர். அவ்வூரில் வாழ்ந்தவர் அப்பாசாமி ஐயர். அவர் தம் அருமைக் கிழத்தியார் சீதாலட்சுமி அம்மாள். இவர்கள் குடி விளக்கப் பிறந்த மைந்தர் நாராயணசாமி ஐயர். இவர் பிறந்த நன்னாள் 10—9—1862 ஆகும்.

மன்னார்குடி ஆங்கிலப் பள்ளித் தமிழாசிரியர் நாராயணசாமிப் பிள்ளையின் கம்பராமாயண விரிவுரை கேட்டு

அதனைக் கற்க விரும்பினார். மனப்பாடம் திறம் இயல்பாக வாய்த்திருந்த இவர் எண்ணற்ற பாடல்களை மனப்பாடம் செய்தார். "பத்துப்பாட்டு முதலியவற்றின் சுவடிகள் கிடையாமல் போயினும் அவற்றின் அடிபிறழாமல் ஒப்பிக்க வல்ல திறனுளர் நாராயணசாமி ஐயருள்ளார்" என்று டாக்டர் சாமிநாதையர் பாராட்டும் சிறப்புப் பெற்றார் அவர் தம் பதிப்புகளுக்கு நற்றுணையாக இருந்துதவினார். குறுந்தொகை, அகநானூறு ஆகியவற்றுக்கும் உரை காண விரும்பினார். அகநானூற்றில் பல பாடல்களுக்கு உரையும் எழுதினார். 1899-ஆம் ஆண்டு முதல் தம்வாழ்நாள் அளவும் கும்பகோணம் நகரவை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக விளங்கினார். 30—7—1914-இல் இறையடி சேர்ந்தார்.

நற்றிணையை ஆய்ந்து வெளியிட விரும்பினார் நாராயணசாமி ஐயர். அவர் தம் ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளையின் மைந்தர் சோமசுந்தரம் பிள்ளை பொருள் முட்டுப்பாடு நேராவண்ணம் உதவியதுடன் ஏடுகள் தருவித்தும் ஆராயும்படி செய்தார். மறைமலையடிகளார் உதவியால், சென்னை அரசினர் ஓலைச் சுவடி நூல் நிலையத்தில் இருந்து நற்றிணைக் கடிதச் சுவடி ஒன்றைப் பெற்று ஆராய்ந்தார். அதன் பின்னர்ச் சாமிநாதையர் சுவடிகள் 2, மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடி 1, தி. த. கனகசுந்தரம் பிள்ளை சுவடிகள் 2. ஆக 5 சுவடிகள் கிடைத்தன இவற்றை ஆராய்ந்து உரை கண்டார். ஆயினும் இச்சுவடிகளில் 234-ஆவது பாடலும் 385-ஆம் பாடலின் பிற்பகுதியும் கிடைக்கவில்லை. அரிது முயன்று தேடியும் அகப்படாமையால், பின்னே கிடைப்பின் மறுபதிப்பில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்னும் எண்ணத்தால் பதிப்புப் பணியில் ஈடுபட்டார்.

அரித்துவார மங்கலம் வி. கோபாலசாமி இரகுநாத ராசாளியார், கெ சுந்தரராமையர், டி. ஏ. பாலகிருஷ்ண உடையார், இராவ்பகதூர் கே. கிருஷ்ணசாமி ஐயங்கார், தோலி க. ப. சிதம்பர தேவர். முத்துப்பேட்டை சி. வயி அருணாசலம் செட்டியார், மண்ணுக்கு முண்டான் சிதம்பர சபாபதிப் பிள்ளை, பாலைக்காடு ஐ சின்னசாமிப் பிள்ளை முதலிய தமிழன்பர்களின் பொருளுதவியால் நற்றிணையை அச்சிட்டு முடித்தார்

ஏட்டுப்படியை ஒப்பிட்டு ஆய்தல் அரிது. அதனை ஆய்ந்து பதிப்பித்த பின்னைச் செப்பப்படுத்தி மறுபதிப்புக் கொணர்தல் எளிது; ஏட்டுப் படிகளிலும் உரையமைந்த நூலை ஆராய்ந்து பதிப்பித்தற்கும் அஃதிலா நூலை ஆய்ந்து, அதற்கு உரைகண்டு பதிப்பது மிகமிக அருமையானது. மூலத்தை ஒழுங்குபடுத்த வேண்டும்; உரையைத் திட்டப் படுத்தவேண்டும் அதிலும் புறப்பொருள் நூலினும் அகப் பொருள் நூலுக்கு உரைகாணல் எளிது. புறப்பொருள் நூல் எனின் சொல்போகும் போக்கிலே பொருள் போகும். சில வழக்கங்கள் மட்டுமே கால இடைவெளிப்பட்டு அறிதற்கு அருமைப்படுமே அன்றிப் பொருள் வகையால் அறிதற்கு இடர்ப்பாடு தளராது. ஆனல் அகப்பொருள் நூலோ எனின் சொற்பொருள் விளக்கம் கண்ட அளவில் அமையாது குறிப்புப் பொருளும் உள்ளுறை இறைச்சி என்பவையும் ஒருங்கே மலிந்து உள்ளுறுத்து மயக்கும். திக்குத்திசை தெரியாத காட்டில் தன்னந்தனியே புகுந்து திண்டாடுவது போன்ற நிலைமையை உண்டாக்கும். அவ்வகையில் அவர் களுக்கு அவர்களே துணை! இத்தகைய இடர்ப்பாடான வழி துறையில் முழுமையாக அழுந்தித் துயருற்ற பெருமக்கள் இருவர். அவருள் இப்பின்னத்தூரார் ஒருவர்; மற்றொருவர் திருக்கண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்க ஞர். இவர் உரையில்லா நற்றிணையை வைத்துக்கொண்டு அலமந்து அலமந்து ஆய்ந்து அருமையுறச்செய்து முடித்தார். அரங்கனர் பட்டுப்பட்டு மயங்கிய பாடுகளோ பன்னுதற் கரியன. அவர்தம் குறுந்தொகைப் பதிப்பில் காண்க. சங்கத் தொகைகளுள் இவ்விரண்டுமே முற்றிலும் உரையிலா நூல் கள். அகநானூற்றுக்கேனும் ஓரளவு உரை கிடைத்தது. மணிமேகலை ஆய்வும் உரையிலாத் திண்டாட்டம் உடை யதே ஆயினும் பொருட்டொடர் நிலைச் செய்யுள் ஆகலின் பல பகுதிகள் உரைகாண்டற் கெளிதாம்.

இனி இந்நற்றிணை உரையோ முதலுரை எனினும் முதன்மை வாய்ந்த உரையாக வாய்ந்தது. பின்னத்தூரார் பெறலரும் புலமைத் திறத்தைக் காட்டுவதாம். ஒவ்வொரு பாடலும் இன்னார் பாடல் என்பதை முதற்கண் அமைத்து.

அப்பாடலின் திணை துறைகளைக் கூறி, அதனை விளக்கமுறுத் திப் பாடலைக் காட்டுகிறார். பாடலின் முழுப் பொருளும் தெள்ளிதின் உணருமாறு முறையுறக் கிடந்தவகையில் உரை யமைக்கிறார்; அருஞ் சொற்பொருளும், அருந் தொடர் நய மும், அணி நலங்களும், தண்டாத் தமிழின் பொருள் நலங் களும் பொதுள விளக்கவுரை வரைகிறார். 'உள்ளுறை'யை நயமுறப் பொருத்தி உரைக்கிறார்; மெய்ப்பாடும் பயனும் மெச்சும் வண்ணம் குறிக்கிறார். மேற்கோளாட்சியைக் காட்டு கிறார்; ஒப்புமை சார்த்தி உவப்புறுத்துகிறார். இவர் எழுதி யுள்ள பாடினோர் வரலாறும் பாடப்பட்டோர் வரலாறும் செறிவும் செம்மையும் மிக்கு இன்புறுத்துவதாம். "நற்றிணை நாராயணசாமி ஐயர்" என்னும் பெயரை நிலை நிறுத்திய ஆராய்ச்சிப் பதிப்பு இஃதாகும்.

நற்றிணையின் இரண்டாம் பதிப்பு 1952-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழியே பதிப் பிக்கப் பெற்றது. இப்பதிப்பு கடினமும் மயக்கமும் தரும் சந்திகள் பிரித்தும், அரிதுமுயன்று பாடவேறுபாடுகள் குறித் தும், இதுகாறும் காணப்பெறாத இருநூற்று முப்பத்து நான்காம் பாட்டினைக் கண்டு இணைத்தும், ஆயிரத்துக்கு மேற்பட்ட அருஞ்சொற்பொருள் எடுத்தமைத்தும் பதிப் பிக்கப் பெற்றுள்ளது. உரையாசிரியர் படமும், வரலாறும் இப்பதிப்பில் இணைக்கப்பெற்றமை நினைகூரத்தக்கதாம்.

"நற்றிணை ஒன்பதடிச் சிறுமையாகப் பன்னிரண்டடி காறும் உயரப் பெற்றது. இத்தொகை தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி" என்பது இத் தொகுப்பு பற்றிய பழங்குறிப்பு.

நற்றிணை

மூலமும் – விளக்கவுரையும்

1966

உரைவேந்தர் பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை எழுதிய விளக்கவுரையுடன் கூடிய பதிப்பு இஃதாகும்.

இதனை வெளியிட்டவர் சென்னை அருணா வெளியீட்டகத்தார் ஆவர்.

உரைவேந்தர் ஆய்வுக்குக் கிடைத்த ஏடுகள் நான்கு. அவை:

அரசினர் கையெழுத்து நூல் நிலைய ஏடு - 1.
மதுரைத் தமிழ்ச் சங்க ஏடு - 1.
டொம்மிச்சேரி கருப்பையாத் தேவர் ஏடு - 1.
புதுப்பட்டி சிவ. மு. முத்தையா செட்டியார் ஏடு - 1.

இவ்வேடுகளை ஒப்பு நோக்கியபோது பாடவேறுபாடுகள் பலப்பல கிடைத்தன' அவற்றைக் காண நற்றிணைக்கு வேறு ஓர் உரையே எழுதவேண்டும் என்னும் எண்ணம் அவர்க்குப் பிறந்தது "ஏறத்தாழ 1500-க்கு மேற்பட்ட பாட வேறுபாடுகளும், பெயர் தெரியாதிருந்த பல பாட்டுகளின் ஆசிரியர் பெயர்களும் தெரியவந்தன. சில ஆசிரியர்களின் பெயர்கள் திருத்தமடைந்தன." என்று உரையாசிரியர் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கிடைத்தஏடுகள் மிகப் பழமைவாய்ந்து பாட்டுகளைப் பாடிய புலவர்களின் பெயரை ஒவ்வொரு துறையின் இறுதியிலும் விடாது எழுதப் பெற்றிருந்தமை ஆசிரியர் ஆராய்ச்சிக்கு ஊக்கமூட்டின. பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் பதிப்பும், சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசச் சங்க இலக்கியப் பதிப்பும் தொல்காப்பியம், அகப் பொருள் விளக்கம், யாப்பருங்கலம், இலக்கண விளக்கம், வீரசோழியம் முதலியவற்றின் உரைகளில் காட்டப்பட்ட நற்றிணைப் பாடல்களும் மிக உதவின.

அச்சிட்ட நற்றிணைச் சுவடியில் "அல்குபடர் உழந்த" என்னும் எட்டாம் பாடலைப் பாடிய புலவர் பெயர் குறிக்கப் பெறவில்லை. அதனைப் பாடியவர் கண்ணகனார் என்பற கண்டார் உரைவேந்தர் "இச்சான்றோர் பெயர் அச்சுப்படிகளில் காணப்படவில்லை. ஆயினும் புதுப்பட்டி ஏட்டிலும் தேவர் ஏட்டிலும் கண்ணகனார் என்ற குறிப்பு ஒன்று துறைக் கூற்றின் இறுதியில் காணப்படுகிறது" எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறே "அண்ணாந் தேந்திய" என்னும் பத்தாம் பாடலைப் பாடியவர் பெயர் முற்பதிப்பில் அறியப் பெறவில்லை. சங்கச் சுவடி ஒழிந்த மூன்று சுவடிகளிலும் இப்பெயர் இருந்தமையைக் குறிப்பிடுகிறார் உரைவேந்தர். இவ்வாறே, "கொடிச்சி காக்கும்" என்னும் இருபத்திரண்டாம் பாடலைப் பாடியவர் பெயர் 'நல்வேட்டனார்' என்பதைத் 'தேவர் ஏட்டிலும் செட்டியார் ஏட்டிலும்' கண்டதைத் தெரிவிக்கிறார். 45, 46-ஆம் பாடல்களைப் பாடியோர் முறையே உலோச்சனார்' கோட்டம்பலவனார் என்பதைக் குறிக்கிறார், இவ்வாறே இன்னும் சில உள.

இனிச் சில பெயர்கள் பழைய பதிப்பில் உள்ளதற்கு வேறுபட ஏட்டில் கண்டதைக் குறிப்பிடுகிறார். பின்னத்தூரார் பதிப்பில் 24-ஆம் பாடல் பாடியவர் கண்ணத்தனார் என்றும், 56-ஆம் பாடல் பாடியவர் பெருவழுதி என்றும் 64-ஆம் பாடல் பாடியவர் உலோச்சனார் என்றும் உள. அப்பெயர்கள் முறையே குன்றூர்க்கிழார் மகனார் கண்ணத்தனார், இளங்கீரனார், உரோகடத்தனார் எனக் குறிக்கிறார். இவ்வாறே வேறுசில பெயர்களும் உள.

சில பெயர்கள் பிழைபட வழங்கு நிலையை விளக்கி எழுதுகிறார் பேராசிரியர் ஔவை; 34-ஆம் பாடலைப் பாடியவர் 'பிரமசாரி' எனப் பின்னத்தூரார் பதிப்பில் உள்ளது. "பிரமன் என்பாரக்கு மகனாதலின் பிரமன்காரி எனப் பெற்றார். பிரமன் என்றும் காரி என்றும் பெயர் பூண்டவர் பலர் சங்க காலத்தும் இடைப்பட்ட கல்வெட்டுக் காலத்தும் இருந்துள்ளனர். இவர் பெயர் ஏடு பெயர்த்தெழுதினோரால் பிரமசாரி எனப் பிழைக்கப்பட்டுள்ளது. கிடைத்த ஏடுகளில் பிரமன்காரி எனக் காணப்படுவதே இதற்குச் சான்று" என்று குறிப்பிடுகிறார்.

'நெடுநா ரெண்மணி' என்னும் நற்றிணை நாற்பதாம் பாடலைப் பாடியவர் 'கோண்மா நெடுங் கோட்டனார்' என முன்னைப் பதிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ளார். அப்பெயர் கோமால் நெடுங்கோடனார்' என்பதை விளக்குகிறார்.

பேராசிரியர்: "இப்பெயர் கோமான் நெடுங்கோடனூர் எனவும் கோமால் நெடுங்கோடனூர் எனவும் கொள்ளப்படும் பறம்பிற்கோமான் கொல்லிக்கோமான் என இடஞ்சுட்டிக் கூறப்படாமையின் கோமால் நெடுங்கோடன் எனக்கோடல் பொருத்தமாக உள்ளது. கோமால் என்பது சோழ நாட்டு ஊர்களில் ஒன்று. அதனைக் கல்வெட்டுக்கள் 'சயங்கொண்ட சோழ மண்டலத்துத் திருவழுந்தூர் நாட்டுக் கோமாலான குலோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலம்' என்று கூறுவது நோக்கத்தக்கது இந்நாளில் அது கோமல் என வழங்குகிறது. கோடன் என்ற பெயருடையார் பலர் தமிழகத்து இருந்துள்ளனர். கோடனூர் என்ற பெயருடைய ஊர்கள் இருப்பது அதற்குச் சான்று. 'கோமானெடுங்கோடனூர்' என்பது அச்சுப்படியில் கோண்மா நெடுங்கோடனூர் என உளது. புதுப்பட்டி ஏடும், தேவர் ஏடும் கோமானெடுங் கோடனூர் என்றே கூறுகின்றன. ஆகவே கோமான் என்பது ஈற்றெழுத்து மாறிக் கோண்மா எனப் பிழைப்பட்டுத் திரிந்ததன்திரிபாய்க் கோண்மா என்று ஆகியதாம்." என்று விரித்து விளக்குகிறார். இவ்வாறே 'கொட்டம்பலவனார்' எனக் காணப்பெறும் புலவர் பெயர் 'கோட்டம்பலவனார்' என்றும், (46, 95) 'இனிச்சந்த நாகனார்' பெயர் 'மிளைக் கந்தன் நாகனார்' என்றும் (66) பிரான சாத்தனார் பெயர் 'விரான் சாத்தனார்' என்றும் (68) இளம்போதியார் பெயர் இளம்பூதியார் என்றும் (72) நல்விளககனார் பெயர் நல்விளக்குன்றனார் என்றும் (85) முடத்திருமாறன் பெயர் முட்டத்திருமாறன் என்றும் (105) அருமையின் ஆய்ந்துரைக்கிறார். இவ்வாறே குறிப்பிடும் பெயர்த் திருத்தங்கள் பல. இத்திருத்தங்களை அறிவோர் சங்க இலக்கிய ஆய்வுக்குக் கல்வெட்டு செப்பேடு முதலியவற்றைக் கற்றுத் தெளிதலின் இன்றியமையாமையை நன்கு உணர்வர். அன்றியும் மானிட வியலறிவு, விலங்கியலறிவு, செடி கொடியியலறிவு, சமய நூல்திறம் முதலியனவெல்லாம் ஒருங்கே கொண்டார் உரைத்திறம் சிறக்குமாறு இஃதெனக் காட்டும் உரை, உரைவேந்தரின் நற்றிணையுரை என்பது எளிதுற விளங்கும், விரிக்கின் அகலுமென அமைவாம்

நற்றிணையுரை இருபாகங்களாக வெளிவந்துளது. ஒவ்வொன்றும் இருநூறு பாடல்களுக்கு விளக்கத்தையுடையன.

குறுந்தொகை - மூலமும் உரையும்
1915

எட்டுத் தொகையுள் இரண்டாவதாகிய இக் குறுந் தொகையை அரிதின் ஆய்ந்து முதற்கண் வெளியிட்ட பெருந்தகை திருக்கண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கனார் ஆவர்.

அரங்கசாமி என்பது இவர்தம் பெயர். இவர் தந்தையார் சௌரிப் பெருமாள் ஐயங்கார். பிற்காலத்தில் சங்க இலக்கிய ஆய்வுக்குத் தூண்டுதலாக இருந்த அய்யம் பேட்டை முத்துரத்தின முதலியாரே இவரைத் தமிழ்க் கல்வி பெறுதற்கு மதுரை செல்லுமாறு தூண்டினார். சோழவந்தான் கிண்ணிமடம் சிவப்பிரகாச சுவாமிகளிடமும், பெரும்புலவர் அரசஞ்சண்முகனாரிடமும் அருந்தமிழ் கற்றார். வாணியம்பாடி மகமதியர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தைச் சிலமுறை பயின்றார். அதில் வந்துள்ள தொகை நூற் செய்யுள்களில் உளந்தோய்ந்தார் குறுந்தொகை எனக் குறிக்கப்பட்ட செய்யுள்கள் பெயருக்கேற்பச் சிறியவையாய்க் காணப்பட்டமையாலும், அந்நூல் முழுவதும் கிடைக்கலாம் என்ற துணிவுண்டாயமையாலும அதனைத் தேடி உரைசெய்து வெளிப் படுத்தலாம் என முயற்சி மேற்கொண்டார். அந்நிலையில் முத்துரத்தின முதலியார் சென்னை அரசினர் ஓலைச் சுவடி நூல் நிலையத்திலுள்ள குறுந்தொகைச் சுவடியைப் படியெடுத்து உதவுமாறு அரங்கனாரை வேண்டினார். அதனால் சென்னை சென்று அச்சுவடியைப் படியெடுத்துக் கொண்டு திரும்பினார். அப்படியோ பிழைபொதிந்து பொருளறிவாரா நிலையில் சிதைவு மிக்கூர்ந்து இருந்தது. அந்நிலையறிந்த முத்துரத்தின முதலியார் அரங்கனார் ஆர்வம் அறிந்து சீரிய தோர் குறுந்தொகைச் சுவடியை வருவித்துத் தந்துதவினார். மற்றும் அகநானூறு, நற்றிணை, பரிபாடல் ஆகிய சுவடிகளையும் உரைவரைதற்கு ஏதுவாக வழங்கினார். அரங்கனார்க்குக்

கிடைத்த குறுந்தொகைச் சுவடிகளில் ௩௰௭-ஆவது செய்யுளின் மேலே ஒரு செய்யுள் அகப்படவில்லை அதனை அகப்படுத்துதற்காக மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடிச் சாலைக்குச் சென்று ஆங்கிருந்த சுவடியைப் பெற்று ஒப்பிட்டார். பாட வேறுபாடும் குறித்துக்கொண்டார். அவ்விடுபட்ட செய்யுள் "ஆய்வளை ஞெகிழவும்" என்னும் ௩௯௬-ஆவது செய்யுளாக இருக்கக் கண்டு மகிழ்ந்தார். அதன்பின்னே மிதிலைப்பட்டி, செவ்வூர் முதலிய இடங்களுக்குச் சென்று ஏடு தேடினர்,

பழந்தமிழ் ஏடுகளுள், ஓர் ஏட்டில் குறைவான பகுதிகள் மற்றை ஏடுகளிலும் குறைவாகவே இருப்பதும், எத்துணை ஏடுகளைத் தேடிக் காணினும் அக்குறை நிரம்பாதே போதலும் கண்கூடாகலின் ஒரு பாட்டுப் புதிதாகக் கிடைத்தமைக்கு மகிழ்ந்து உரை எழுதத் தொடங்கினர். வேறு சுவடிகள் கிடைக்குமோ என வேண்டுகோள் விடுத்து வேண்டியும் பயன் பெற்றிலர்.

இத்தொகையை ஆய்ந்து மூல பாடங்காணலும், உரை வரைதலும் எத்தகு அருமை என்பதை அரங்கனர் குறிப்பிடுகிறுர்:

பேரறிவும் பேராற்றலுமுடைய தக்க தமிழறிஞர் பலர் ஒன்றுகூடிப் பல பிரதிகளை வைத்துக்கொண்டு பன்னெடு நாளும் ஆராய்ந்து பதிப்பிப்பதாயினும் மூலமளவிலும் முற்றும் திருத்தமாகப் பதிப்பித்தல் முடியாததாகுமென்பது சங்கத்துத் தொகை நூல்களைப் பொறுத்த வரையிலும் எட்டுணையும் மறுக்க முடியாத ஒருண்மையாகும். இத்தகைய அருமைவாய்ந்த ஒருவகைத் தொகை நூலுள் ஒன்றைச் சிற்றறிவும் வலிக்குறைவுமுடைய யான் 'அசலுக்குச் சரியான நகல்' என்பதாக வெளிப்படுத்தத் துணியினும் அஃதெனக்கே நகைவிளைவித்திடும் செய்கையாகவும் அவா வெள்ளத்தில் அச்சிற்றறிவும் வலிக்குறைவு மாழ்ந்திடவே, பேராசிரிந்த சீராசிரியரான பேராசிரியர்க்கே இருபது பாட்டிற்பொருள் புலப்பட்டிலதெனஓராசை உலகினிறுவி உயரிய இக்குறுந்தொகை நூற்குப் பொருள் காணத் துணிந்தேன. 'மூலமளவிற் பதிப்பித்தல் சிறிதும் பயன்

தராததாகும்' 'பொருளெழுதியே பதிப்பித்திடுக' 'முயன்றால் முடியாததென்' என்றின்னோரன்ன அன்பர்களின் வற்புறுத்துக்களும் என்னை வலியுள்ளோனாக மயங்கச் செய்து ஊக்கங்கொள்ளச் செய்திட்டன. ஆதலின் அவாவின் பெருக்கிலாழ்ந்து அதனிடைப்பட்டு முற்றும் உரையெழுதி இற்றைக்கு மூவாண்டின் முன்னர் (1912) முடித்தேன்."

குறுந்தொகை மூலத்துள் சில மாறுபாடுகள் செய்துள்ளார் அரங்கனார். இடக்கர்ச் சொல்லாகிய குஃறொடரன்மொழி இந்நூலில் ஒன்பதிடங்களில் வந்திருந்தவற்றை அறவொழித்துச் செய்யுளிற் குறை தோன்றுதவாறு ஏற்றவற்றைச் சேர்த்து உரையெழுதியமை ஒன்றாகும். "இங்ஙனம் செய்தமைக்குக் காரணம் பழந்தமிழ் நூல்கள் பலவற்றைத் தமிழுலகிற்குத் தந்த தக்காராகிய ஸ்ரீமான் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் கலித்தொகையகத்து மாற்றிவைத்துக் காட்டிப்போந்த காரணமேயாம்!' என்று இதற்குச் சான்று காட்டுகிறார் அரங்கனார்.

இனிச், 'செய்யுள், கருத்துரை, பாடினோர் பெயர்' எனச் சுவடிகளில் கண்டமுறையை மாற்றி கருத்துரை, பாடினோர் பெயர், செய்யுள் என அமைத்துக்கொண்டு உரை வரைந்துள்ளார். கருத்துரையின் முன்னே என்பதன் அறிகுறியாக இருந்த 'எ-து' என்பதை 'இது' என மாற்றியுள்ளார் கருத்துரையில் இவர் செய்த மாற்றங்கள் 24 அவற்றை ஆங்காங்கு உரைக் குறித்துள்ளார். முற்றிலும் உரை காணவொண்ணாவாறு கிடந்த 364, 366, 367, 372, 376 எண்களுள்ள ஐந்து செய்யுள்களையும் சுவடிகளில் உள்ளவாறு உணருமாறு மாற்றாமல் அப்படியே பதிப்பித்துள்ளார்.

குறுந்தொகை பாடினோர் 205 பேர் என்னும் குறிப்பை உட்கொண்டு, இறை வணக்கம் பாடிய பெருந்தேவனார் ஒருவரையும்சேர்த்து 206 பேர் ஆகுமாறு ஒழுங்கு செய்து 'பாடினோர் பெயரும் பிறவும்' என்னும் தலைப்பில் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். "புறநானூற்று அச்சுப்

புத்தக முகவுரையில் இருநூற்று நால்வர் எனக் குறிப்பிட்டிருக்கிறது'' என்றும் குறிப்பிடுகிறார்.

''அறிஞர்களின் திருத்தங்களை வந்தனத்தோடு ஏற்றுக்கொண்டு மறுபதிப்பில் அவற்றைத் தழுவி இன்ன இன்ன திருத்தங்கள் இவ்விவ்வறிஞர்களால் அறிவிக்கப்பட்டன வென்றும் மகிழ்ந்து சுட்டி அவர்கள் செய்தருளிய பேருதவியைப் பலர்க்கும் பயன்படச்செய்து என் நன்றியறிவையும் மறவாமற் கூறுவேன்:'' என்று தம் பணிவும் ஆர்வமும் தோன்ற 'உதவியுரைத்த'லில் வரைகின்றார்.

150-ஆவது செய்யுள்வரை விரிவாக உள்ள உரை. பின்னே சுருங்கிவிடுகிறது. அதற்கு அச்சகத்தில் நேரிட்ட தொல்லையே காரணமாம். எட்டுப் பக்கம் கொண்ட படிவங்கள் 18 அச்சிடற்குப் பதினெட்டுத் திங்கள் ஆயினவாம். அதனால் விளக்கவுரைப் பகுதியைச் சுருக்கிப் பத்தொன்பதாவது படிவத்திலிருந்து முப்பத்தொன்பதாவது படிவம் வரை இருபத்திரண்டு நாள்களுள் பதிப்பித்து முடித்திருக்கிறார். அதனை அவ்வளவு விரைவில் அச்சிட்டுதவிய வேலூர் வித்யாரத்நாகரம் அச்சுக்கூடத் தலைவர் ஏ. டி. இராசகோபால் பிள்ளைக்கு நன்றி கூறியுள்ளார். ''அச்சுக் கூடத்தாரிடத்துப் பெரிதும் அஞ்சி நின்ற எனது அச்சத்தை அறவே ஒழித்து'' விட்டார் என்று எழுதும் தொடரால், அதற்குமுன்னே அச்சிட்ட அச்சகத்தாரிடை இவர் பட்ட பாடு புலப்படுகின்றது.

உதவியுரைத்தலும், ''குறுந்தொகைக் குறுந் துணையாக அருந்தொகை யுதவிய பெருந்தகைச் செல்வர்கள் பெயரும் உதவிய தொகையும்'' என்னும் பட்டியும், மேற்கோளாட்சி விளக்கமும், அருங்குறிப்புக்களும் பிறவும், எஞ்சியவைகளும் பிறவும், உரையில் மேற்கோள் கொண்ட நூல்கள், பாடினோர் பெயரும் பிறவும் என்னும் பகுதிகளை 43 பக்க அளவில் முற்பகுதியாக உடையது அரங்கனார் குறுந்தொகை. இன்னும் சோழவந்தான் கிண்ணிமடம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவுருவப் படம் பதித்து உரிமையுரை

வழங்கியதும், வேலூர் ஊரீசு கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் பு. க. சீனிவாசாசாரியர் வழங்கிய சிறப்புப் பாயிரமும், மணக்கால் அய்யம்பேட்டை முத்துரத்தின முதலியார் வழங்கிய முகவுரையும் முதற்கண் முறையே இடம்பெற்றுள. பின்னிணைப்பாக அரும்பத அகராதி, குறுந் தொகைச் செய்யுள் முதற் குறிப்பகராதி, பிழையும் திருத் தமும், விளம்பரம் என்பவை இடம்பெற்றுள. 'இதன் விலை ரூ. 2-0-0 தபாற் கூலி வேறு' என்னும் குறிப்புள்ளது.

அரங்கனார் உரையை, "திணை, உள்ளுறை, இறைச்சி, மேற்கோள், இலக்கணக் குறிப்பு முதலியவற்றைச் சுட்டிச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தலாகிய புத்துரை" என்று பாராட்டுகிறார் முத்துரத்தின முதலியார். இவற்றுடன் ஒவ் வொரு பாடலுக்கும் 'மெய்ப்பாடு, பயன்' என்பவற்றையும் உரையாசிரியர் குறிப்பிட்டுச் செல்கிறார். பாடவேறுபாடு ஆங்காங்குக் காட்டியுள்ளார். மேற்கோள்களைச் செவ்விதில் அடிக்குறிப்பாக அமைத்துள்ளார். தாம் ஆய்ந்த பிரதிகளின் நிலைமையையும் ஆங்காங்குச் சுட்டுகிறார்.

"கருங்கால் வேம்பின்" என்னும் 24-ஆம் பாடலில், "இவ்வடியில் (ஈற்றயலடியில்) ஒருசீர் விடுபட்டதுபோலும்; இவ்வடியும் ஈற்றடியும் பிரதிகள்தோறும் சிதைந்து காணப் பட்டன. ஆதலின் ஒருவாறு அனுமானித்துக் குறிக்கப்பட் டன" என்றும், "முட்டுவன் கொல் தாக்குவேன் கொல்" என்னும் 28-ஆம் பாடலில், ';இப்பாட்டுப் பிரதிகளில் சிதைந்து காணப்பட்டது ஆதலின் ஒருவாறு வரையப்பட் டது" என்றும் அடிக்குறிப்பாகக் குறிக்கிறார். இவ்வாறே அனுமானிக்கப்பட்ட பாடங்களை 178, 277, 383 ஆகிய பாடல்களில் சுட்டுகிறார், சில பாடல்களில் மிகைபோலும் (259, 392) என்றும, இடம் விடப்பட்டுள்ளது (200, 394) என்றும், கருத்துரை குறைவாக உள்ளது (366) என்றும், வரலாறு புலப்படவில்லை (328, 393) என்றும், பொருள் விளங்கவில்லை (172, 223, 330, 364, 369, 379, 385, 388) என்றும் ஆங்காங்குக் குறிப்பிடுகிறார். ஒன்பதடிப் பாட்டாக உள்ளது என்றும் (391) இப்பாட்டு ஆறடியினதாதல் உணர

ஒரு பிரதியில் 4. 5 அடிகளுக்கு இடம் விடப்பட்டிருக்கிறது (266) என்றும் சுவடியில் பாடல் இருந்த நிலைமையைத் தெளிவிக்கிறார். சேஞேன் என்பதற்கு (150) இராக்காலத்து மரத்துச்சியில் இருப்பவன்' என ஒரு பிரதியில் உரையுண்மையைச் சுட்டுகிறார். சுவடியில் உள்ள துறையினும் இத்துறையே பொருத்தமென (319) ஓரிடத்தும், இத்துறை வேறு சுவடியில் உண்டு என்பதை மற்றோரிடத்தும் (353) குறிப்பிடுகிறார்.

அரிதின் முயன்று தேடியும் தகுதிவாய்ந்த சுவடி கிடையாமையால் இவர்பட்டுள்ள இடர்ப்பாடுகள் இனிதின் விளங்குகின்றன. அவ்விடர்ப் பாடுகளுக்கிடையே உரை கண்டு தம் பெயரை நிலைகொண்ட அரங்கனார் உள்ளமும் உழைப்பும் ஒன்றை ஒன்று விஞ்சியனவேயாம்

'தாமரை புரையும் காமர் சேவடி' என்னும் கடவுள் வாழ்த்துப் பாடலில் 'சேவலங் கொடியோன்' என்பதற்கு "சேவல் - கோழிச் சேவல்; அது முருகன் கொடியின் கண்ணதாதலை 'கோழியோங்கிய வென்றடு விறற்கொடி' என்றதனுன் (திருமுரு. 38) ஓர்க. இனி, சேவல்-ஆண்மயிலுமாம். என்னை? 'பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ' எனவும் (திருமுரு. 122) மணிமயில் உயரிய மாறு வென்றிப், பிணிமுக வூர்தி ஒண்செய் யோனும்' எனவும் (புறம். 56) ஆசிரியர் நக்கீரர் கூறுதலான். 'சேவற் பெயர்க் கொடை சிறகொடு சிவனும், மாயிருந் தூவி மயிலலங் கடையே' என்றதனுல் (தொல். மரபு. 48) தோகையோடு கூடி மென்மைத்தன்மை பேவிப் பெணடன்மை கொண்ட மயிலிடத்துச் சேவற் பெயர்க் கொடை சேராதேனும், வேலன் கொடியில் வீறு பெற்றுப் போர் முகத்து நின்று ஆண்டன்மை மிக்க மயிலிடஞ் சேறற்கு இழுக்கின்றென்க இதனை அச்சூத்திரத்து உரையிறுதியில், 'செவ்வேளூர்ந்த மயிற்காயின் அதுவும் நேரப்படும்' என்று ஆசிரியர் உச்சிமேற் புலவர் கொள்' [1] நச்சினார்க்கினியர் வரைந்தமையும் வலியுறுத்தும்; அன்றியும் இங்குத் தேவிற் சிறந்த திருமாலும் சிவபெருமானும்

1. இது பேராசிரியர் உரை. ஆயின் அந்நாள் அவ்வுரை நச். பெயரால் வெளியிடப்பெற்று உலா வந்தது என்க.

ஊர்தியையும் கொடியையும் ஒன்றாகக் கொண்டிருத்தலும் கருதத்தக்கது'' என்று இவர் விரித்தெழுதும் திறம் அறிந்து இன்புறற் பாலதாம். இவ்வாறே பின்னும் நயமுற எழுது வார்.

இத்தொகை நூல் பற்றிய பழங்குறிப்பு ''இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகை பாடிய கவிகள் இரு நூற்றைவர்; இத்தொகை நாலடி சிற்றெல்லையாகவும் எட் டடி பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது'' என்பது.

''மாணவர்கள் தம் ஆசிரியரிடத்திலிருந்து தகவுரை யோடு கையெழுத்து வாங்கி எமக்கனுப்புவார்களாயின் அவர்கட்கு இரண்டு ரூபா விலையுள்ள குறுந்தொகை மூலமும் உரையும் ஒன்றரை (1-8-0) ரூபாவிற்கு அனுப்பப்படும் ஒரு மாணவர் ஒரு புத்தகத்திற்குத்தான் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம் (தபாற்கூலி வேறு)'' என்று இவர் பொறித் துள்ள குறிப்பு இவர்தம் மாணவர் நிலையில் பட்ட முந்திய பண முட்டுப்பாடும், நூல் கிடைத்தல் தட்டுப்பாடும் எழுப் பிய உணர்வின் விளைவாகலாம்!

குறுந்தொகை - மூலம்
1920

குறுந்தொகை மூலம் மட்டும் அறிஞர் கா. நமசிவாய முதலியாரால் 1920-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. அது குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது. ஆனால் அப்பதிப்பு வெளிப்பட்டு உலாவியது பற்றி அறியக் கூடவில்லை.[1] 'வெளிவந்ததாகத் தெரியவில்லை' என அறிஞர் வையாபுரிப் பிள்ளை குறிப்பிட் டுள்ளார்.

குறுந்தொகை - மூலமும் உரையும்
1930

மூலமும் உரையும் கூடிய இப்பதிப்பு, இராமரத்தின ஐயரால் எழுதப் பெற்ற புத்துரையுடையதாகும். இதனைப்

1. தமிழ்ச் சுடர்மணிகள்

புரசபாக்கம் சேசாசல ஐயர் என்பார் 'கலாநிலையம்' பதிப்பாக வெளியிட்டார். ஆயினும் புத்தக வடிவில் வெளியாகவில்லை என அறியப் பெறுகிறது.

குறுந்தொகை - மூலம்
1933

இப்பதிப்பு புரசபாக்கம் சர், எம், சி. டி. உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் சோ. அருணாசல தேசிகரால் பதிப்பிக்கப் பெற்றதாகும்.

இப்பதிப்புகள் சுவடி கொண்டு ஆராய்ந்து பதிக்கப் பெற்றன அல்ல. அரங்கனார் பதிப்பை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை பதிப்புதோறும் சில திருத்தங்களையுடையனவாயினும், சுவடி கொண்டு ஆராய்ந்தவை அல்ல என்பர்

"குறுந்தொகை மூலத்தை மட்டும் முதன் முதல் வெளியிட்டவர் தமிழறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளை" என்பவர் என [1]டாக்டர் மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுவார். ஆனால் அச்செய்தி அறியப் பெறவில்லை. அவர்தம் வரலாற்றிலும் இச்செய்தி குறிப்பிடப் பெற்றிலது.

குறுந்தொகை - மூலமும் உரையும்
1937

டாக்டர் சாமிநாதையர் எழுதிய பதவுரை, விளக்கவுரை முதலியவற்றைக் கொண்ட பதிப்பு இது. ஐயர் முழுமையாக உரை எழுதிய நூல் இக்குறுந்தொகையேயாம், மற்றை நூல்களையெல்லாம் அரும்பதவுரை, மேற்கோள், ஒப்புமைப் பகுதி முதலியன எழுதி எழிலும் பயனும் கெழுமப் பதிப்பித்தார். இந்நூற்கே முற்றிலும் உரைகண்டு வெளியிட்டுள்ளார். இதனை ஆய்ந்து வெளியிட்ட வகையையும் காரணத்தையும் முகவுரையில் கூறுகிறார்:

---

1. தமிழ் மொழி இலக்கிய வரலாறு பக். 152.

"பலவகையான குறிப்புக்களும் அகராதிகளும் எழுதி வைத்துக்கொண்டு பொருள் வரையறை செய்யத் தொடங்கினேன். நாளடைவில் பெரும்பாலான செய்யுட்களின் பொருள்கள் விளங்கின 'இனி இதனை அச்சிட்டு வெளிப்படுத்தலாம்' என்று எண்ணியிருந்தேன். இடையே வாணியம்பாடி ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராக இருந்த தி.செள. அரங்கசாமி ஐயங்காரென்பவர் குறுந்தொகைக்கு உரையெழுதி 1915-ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டனர். அப்பால் குறுந்தொகை ஆராய்ச்சியில் எனக்கிருந்த ஊக்கம் சிறிது தளர்ந்தது பிற நூலாராய்ச்சியில் கருத்தைச் செலுத்தலானேன். பின்பும் சிலர் சில பத்திரிகைகளில் இந்நூலை வெளியிடுவதாகக் கேள்வியுற்றேன்...... பழைய உரை இல்லாமையால் புதிய உரை எழுதி இந்நூலை நான் வெளியிடவேண்டுமென்ற கருத்து சில தமிழன்பர்களுக்கு இருந்ததை உணர்ந்தேன். பல அன்பர்கள் அடிக்கடி தூண்டி வந்தார்கள். முற்கூறிய ஐயங்காரவர்கள் உரைப் பிரதி இப்பொழுது எங்கும் கிடைக்கவில்லை. பல வருஷங்களாக உழைத்துத் தொகுத்த குறிப்புக்கள வீணாகாமல் இருக்கும் பொருட்டு இந்நூலை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு மீண்டும் உண்டாயிற்று"

குறுந்தொகை உரை விரிவுமிக்கது. ஒவ்வொரு பாடலும் கூற்று, கூற்று விளக்கம், மூலம், பிரதிபேதம், பழைய கருத்து, ஆசிரியர் பெயர், பதவுரை, முடிபு கருத்து, விசேடவுரை, மேற்கோளாட்சி, ஒப்புமைப் பகுதி என்னும் பன்னிரு பகுதிகளைக்கொண்டு இயல்கின்றது. முன்னே முகவுரையும், பின்னே செய்யுள் முதற் குறிப்பகராதியும், அரும்பத முதலியவற்றின் அகராதியும் சேர்க்கப்பட்டுள்ளன பாடிய புலவர்கள் பெயர்களும் பாடிய பாடல் எண்களும் காட்டப்பட்டுள்ளன. 'பிரதிபேதங்கள்' எனத் தனியே எட்டுப் பக்கங்களும் உண்டு.

இவ்வாராய்ச்சிக்கு இடைத்த சுவடிகள்

திருவாவடுதுறை ஆதீனம்	சுவடி	1
திருநெல்வேலி அம்பலவாண கவிராயர்	,,	1

மந்தித்தோப்பு மடத்தில் கிடைத்த	சுவடி	1
செங்கோல் மடத்தில் கண்ட	,,	1
திருமயிலை சண்முகம் பிள்ளை கடிதச்	,,	1
சோடாசவதானம் சுப்பராய செட்டியார்	,,	1
தொழுவூர் வேலாயுத முதலியார்	,,	1
சென்னை அரசினர் கையெழுத்துப் புத்தக சாலைச்	,,	1
புதுக்கோட்டை ராதாகிருஷ்ணையர் கடிதச்	,,	1
திருக்கோணமலை த. கனகசுந்தரம் பிள்ளை கடிதச்	,,	1

இப்பத்துச் சுவடிகளும் மூலச் சுவடிகளே, அதிலும் ஒன்றைப் பார்த்து ஒன்று எழுதினவாகவே இருந்தனவாம். குறுந்தொகை 380 பாடல்களுக்குப் பேராசிரியர் உரை எழுதினர் என்றும், அவர் எழுதாதுவிட்ட 20 பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதினர் என்றும் நச்சினார்க்கினியர் உரைப்பாயிரம் குறிக்கின்றது.

"நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி அறியப்
பொருள்தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவன் எழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப உரைத்தும்"

என்பது அது. இப்பேரறிவாளர்கள் எழுதிய உரையுடன் கூடிய சுவடி சௌரிப் பெருமாளரங்கருக்கோ, சாமிநாதையர்க்கோ கிட்டிற்றில்லை. நச்சினார்க்கினியர் உரைப்பாயிரச் செய்யுள் கிட்டாக்கால் இவ்வுரை தானும் இருந்ததென்னும் குறிப்புமின்றி ஒழிந்திருக்கும் என்றே எண்ணவேண்டியுளது அவ்வுரையின்மையை ஒருவகையான் நிறைவு செய்யும் பணியையே மேற்கொண்டார் ஐயர்.

அரங்கனார் அரிதின் முயன்றும், அறிக்கை விடுத்தும் கிடையாத சுவடிகள் பல ஐயருக்குக் கிடைத்தன. அவை

அவர்தம் செல்வாக்கை எளிதில் விளக்குவன. அவர் தேடிக் கொண்ட சுவடிகளை அல்லாமல், அவரைத் தேடிக் கொண்டு வந்த சுவடிகள் உண்மையை அறிவோம் அல்லவோ! அப் பேறு எளிதில் எவர்க்கும் வாய்ப்பதோ? ஆகலின் ஓரிரு சுவடிகளைக் கண்ட அளவில் பலரும் அமைந்து பதிப்பித்தா ராகப் பல சுவடிகளை ஆய்ந்து வெளியிட்டார் ஐயர். ஆதலால் பிறர்பதிப்புகளில் காணக்கூடாத பாடவேறுபாடு களும், திருத்தங்களும் ஐயர் பதிப்பில் கிடைப்பன ஆயின. இஃது அரங்கனார் பதிப்பையும் ஐயர் பதிப்பையும் ஒப்பிடும் அளவானே அறியக்கூடியதாம். இக்குறிப்பால் ஐயர் பதிப்பு அறவே குறையற்றது என்றோ, நாட்டிலுள்ள சுவடிகள் அனைத்தையும் கண்டு ஆய்ந்தது என்றோ கூறுவது ஆகாது. இன்னும் எத்துணைப் பதிப்புகள் வரினும் மேலும் திருந்துதற் காம் நிலைமை இருந்து கொண்டே இருக்கும்! "அறிதோறும் அறியாமை கண்டற்று" என்னும் தேர்ச்சியுரை பதிப்புத் துறைக்கு மிகப் பொருந்துவதே. இதனைக் குறையும் நிறை யும் என்னும் தலைப்பில் காண்போம்.

ஐயரின் குறுந்தொகைப் பதிப்புக்குச் சென்னைப் பல்கலைக் கழக உதவி 1934-இல் கிடைத்தது. அவ்வுதவியால் 1937-இல் குறுந்தொகை மூலமும் உரையும் வெளிவந்தது. பல்கலைக் கழக உதவி கிடைக்குமாறு உதவியவர் தமிழ்ப் பாடநூற் குழுவின் தலைவராக இருந்த டி. சிவராம சேதுப் பிள்ளை ஆவர். உதவித் தொகை ரூ. 1500. இதனைப் பற்றிக் குறிப்பிடும் ஐயர், "இவ்வளவு வருஷங்களாக நான் வெளி யிட்டுவரும் நூற் பதிப்புக்களுக்கு இதைப் போன்ற பேருதவி கிடைத்ததில்லை என்பதைத் தமிழ்நாட்டினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்கிறார்.

குறுந்தொகையின் இரண்டாம் பதிப்பு ஐயரின் திரு மகனார் கலியாண சுந்தரையரால் 1947-இல் வெளியிடப் பெற்றது. பாடினோர் வரலாறு எழுதி இணைக்கப் பெற்றது. சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. பாட வேறுபாடுகள் அவ்வப் பக்கத்துக் குறிக்கப்பெற்றன. இப்பதிப்புக்குப் புதி தாக ஏடொன்றும் ஆராயப் பெறவில்லை. ஆதலால் பதிப்பு வகைத் திருத்தமன்றிப் பழஞ் சுவடியால் நேர்ந்த திருத்தம் இல்லை.

பரிபாடல் - மூலமும் உரையும்
1918

'ஓங்கு பரிபாடல்' எனச் சான்றோர்களால் புகழப் பட்ட பரிபாடல் டாக்டர் உ. வே. சாமிநாதையரால் ஆய்ந்து முதற்கண் பதிப்பிக்கப் பெற்றது. இந்நூலைப் பதிப் பிக்க வேண்டும் என்று சௌரிப் பெருமாள் அரங்கனாரும் எண்ணினார்; ஆராய்ந்தார்; ஆனால் அவர் எண்ணம் நிறை வேறிற்றில்லை. அரிதின் முயன்றும் 22 பாடல்கள் அளவே தொடராகக் கிடைத்தது. இரண்டு பாடல்களும், சில பகுதி களும் உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிய வகை யாலும் புறத்திரட்டாலும் கிடைத்தன. பரிபாடல் எழுபது என்பது பழம்பாடல் ஒன்றால் புலப்படுகின்றது திருமாலுக்கு எட்டுப் பாடல்களும், முருகனுக்கு முப்பத்தொரு பாடல் களும், காடுகிழாள் ஆகிய காளிக்கு ஒரு பாடலும், வையை யாற்றுக்கு இருபத்தாறு பாடல்களும், மதுரைக்கு நான்கு பாடல்களுமாக 70 பாடல்கள் இருந்தன என்றும் அப் பாடல் கூறுகின்றது.

"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று - மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்"

என்பது அப்பாடல்.

இப் பரிபாடலைப் பெயர் கண்டறிந்ததும் அருமை யேயாம் என்னெனின் முதலும் ஈறும் இல்லா நூலாக அகப்பட்டதாகலின் என்க.

திருவாவடுதுறை ஆதீனத்துச் சுவடி ஒன்றை-முதலும் ஈறும் இல்லாமல் சிதைந்து போயிருந்த ஒன்றை - இன்ன நூலென்று புலப்படாமல் வைத்திருந்தார் ஐயர். என்ன நூலென்று ஆராயும் நோக்கால் பிரித்துப் பார்த்தபோது 'வண்ண வண்டின்குரல் பண்ணைபோன் றனவே' என்னும் பகுதியைக் கண்டார். அஃது இலக்கணக்கொத்தில் மேற் கோளாக வந்திருந்த தாகலின் பழையதொரு நூலாக

இருக்கலாம் என்ற அளவில் எண்ணினார் பிறகு திருமுரு காற்றுப்படையை நச்சினார்க்கினியர் உரையுடன் ஆராய்ந்த போது "அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி" (அடி 58) என்பதன் விளக்கவுரையில் திருமுருகன் வரலாற்றைக் கூறி "இதனைப் பாயிரும் பனிக்கடல் என்னும் பரிபாடற் பாட் டானுணர்க" என்றிருந்ததை அறிந்து, அப்பாடல் தாம் ஆராய்ந்த சுவடியில் ஐந்தாம் பாடலாக இருக்கக்கண்டு இது பரிபாடல் என்பதைத் தேர்ந்தார். இவ்வாறே நூற் பெயரைக் காண்டற்கே ஒரு பெரிய முயற்சி வேண்டிய தாயிற்று.

கிடைத்த சுவடியில் முதற்பாடல் இல்லை. அதன் உரைப் பகுதியில் இருந்தே சுவடி கிடைத்தது. செய்யுள் இருந்தால் முயன்று உரை காணலாம். சிதைந்து போன உரைகொண்டு பாடலைக் காணமுடியுமோ? காண ஒரு வாய்ப்பு ஏற்பட்டது தொல்காப்பியம் செய்யுளியல் கட் டுரைவகையின் என்னும் நூற்பா (119) உரையில் இளம்பூர ணர் காட்டிய 'ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை' என்னும் பாடல், பாடலில்லாத இவ்வுரைப் பகுதிக்குரிய பாடலாக இருந்தது கண்டார். தமிழ்த் தெய்வத்தின் திரு வருட் செயலை நினைந்து இன்புற்றுப் பரிபாடலின் முதற் பாடலாக இணைத்துக் கொண்டார். வழிதடம் புலப்படு மாயின் கழிபெரு முயற்சியால் காலமெல்லாம் உழன்றும் கண்டடையக்கூடும். ஆனல் வழி அறவே மூடப்பட்டுப் போகுமாயின் எவரே என் செய்வர்? இழந்துபோன பிற் பகுதியை எங்கெங்கு முயன்றும் நிறைவு செய்ய முடிய வில்லை. முக்கால் நூற்றாண்டின் முன்னரே முயன்று கிட்டாத பகுதி, ஏடும் எழுத்தாணியும் வழக்கொழிந்து தாளும் எழுது கோலும் வழக்கிலுள்ள இக்காலத்துக் கிட்டும் என்பது எண்ணவும் இயலாததே எனச் சோர வேண்டியதில்லை! கிடைப்பினும கிடைக்கலாம். அவ்வாறு கிடைப்பின் தமிழ்த் தெய்வத்தின் திருவருட் செயலே என்று ஐயர் போலவே நாமும் நினைந்து இன்புறலாம்

பரிபாடல் இசைப்பா என்பது 'பரிபாட்டென்பது இசைப்பா ஆதலான்' எனவரும் பரிபாடல் உரையால்

அறியப்பெறும். அது பலவகைப் பாவும், பலவகை அடியும் பொருந்த விரிந்துவருவது என்பது பரிபாடலாலும், தொல் காப்பியத்தாலும் அறியப் பெறும். இது பண்வகையால் தொகுக்கப்பெற்றது என்பது 12-ஆவது பாடல்வரை பாலை யாழ் என்றும், அதற்குமேல் 17-ஆவது பாடல்வரை நோ திறம் என்றும், அதற்குமேல் காந்தாரம் என்றும் அடைவு செய்யப்பெற்றுள்ள முறைமையால் அறியப் பெறும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்காகப் பெரும்புலவர் இரா. இராகவையங்கார் ஆழ்வார் திருநகரித் திருமேனி இரத்தின கவிராயர் வழியில் வந்த தாயவலந்தீர்த்த கவி ராயர் வீட்டிலும், தேவர்பிரான் கவிராயர் வீட்டிலும் ஏடு கள் தேடினர். அவர்கள் வீடுகளில் கிடைத்த திருக்குறள் பரிமேலழகர் உரைச் சுவடிகளின்மேல் பரிபாடல் உரையாசி ரியர் பற்றிய பாயிரச் செய்யுள் ஒன்று கிடைத்தது அதனால் பரிபாடலுக்கு உரை செய்தவர் பரிமேலழகரே என்பது புலப்பட்டது. அன்றியும் பரிமேலழகர் உரைசெய்ய நேர்ந்த வகையும் விளக்கப்பட்டிருந்தது. மற்றும், திருமேனிக் கவி ராயர் திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு 'நுண் பொருள் மாலை' என ஒரு விளக்கவுரை வரைந்திருந்தார். அந் நுண் பொருள் மாலைச் சுவடியில், "இவ்வுரையாசிரியரே பரிபாட லுள் ஓதிய வாற்றான் உணர்க" என்று குறிப்பிடப் பெற்றி ருந்தது. ஆதலால் திருக்குறளுக்கு உரைகண்ட பரிமேலழ கரே பரிபாடலுக்கும் உரைகண்டார் என்பது தெளிவா யிற்று. இச்செய்தியை விளக்கிச் செந்தமிழ் முதற்றொகுதி பக்கம் 87 - 90-இல் 'ஆராய்ச்சி - பரிபாடலுரையாசிரியர்' என்னும் தலைப்பில் வரைந்தார்.

அவ்வுரைப் பாயிரச் செய்யுள் வருமாறு:

"கண்ணுதற் கடவுள் அண்ணலங் குறுமுனி
முனைவேல் முருகன் எனஇவர் முதலிய
திருந்துமொழிப் புலவர் அருந்தமிழ் ஆய்ந்த
சங்கம் என்னும் துங்கமலி கடலுள்
அரிதின் எழுந்த பரிபாட் டமுதம்
அரசுநிலை திரீஇய அளப்பருங் காலம்
கோதில் சொல்மகள் நோதகக் கிடத்தலில்

பாடிய சான்றவர் பீடுநன் குணர
மிகைபடு பொருளை நகைபடு புன்சொலில்
தந்திடை மடுத்த சுந்திதன் பிழைப்பும்
எழுதினர் பிழைப்பும் எழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த ஒவ்வாப் பாடம்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலில்
சிற்றறி வினர்க்கும் தெற்றெனத் தோன்ற
மதியின் தகைப்பு விதியுளி யகற்றி
எல்லையில் சிறப்பில் தொல்லோர் பாடிய
அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய உரையின் விளங்கக் காட்டினன்
நீணிலங் கடந்தோன் தாள்தொழு மரபிற்
பரிமே லழகன் உரிமையின் உணர்ந்தே!

இப்பரிபாடலுக்குரிய "(பரிமேலழகர்) உரை" பலவிடத்துப் பொழிப்புரையாயும் சிலவிடத்துப் பதவுரையாயும் சிலவிடத்துக் கருத்துரையாயும் சிறிதும் புலப்படாத சொற்களின் பழைய வடிவங்களைப் புலப்படுத்தியும் உரிய இடங்களில் இலக்கணக் குறிப்புக்களைப் பெற்றும் சிலவிடத்து மிக அழகான பதசாரத்துடன் கூடியும் விளங்காத சிலவற்றைத் தக்க தமிழ் நூல் மேற்கோள்களாலும் வேதம் உபநிடதம் முதலியவற்றின் கருத்துக்களாலும் விளக்கியும் மிக விரிவாக அமைந்துள்ளது. நுணுகி ஆராயின் திருக்குறளுரையிலும் இவ்வுரையிலும் ஒத்த கருத்துக்களும் ஆசிரியர் பரிமேலழகருடைய கொள்கைகளும் பல காணலாகும்."

இப் பரிபாடலை ஆய்ந்து வெளியிட வலியுறுத்தியவர் கொழும்பு பொ. குமாரசாமி முதலியார் ஆவர். சுவடிகளைப் படி எடுத்துத் தந்தவர் திருப்பெருந்துறை அ. பொன்னுசாமி பிள்ளை ஆவர். இவ்வாராய்ச்சிக்குக் கிடைத்த சுவடிகள்:

திருவாவடுதுறை ஆதீனம் சுவடி 1
(முதற்பாட்டு உரைமுதல் 19-ஆம் பாடல்
38-ஆம் அடி மூலம் வரை)

ஆழ்வார்திருநகரி தே. இலட்சுமண கவிராயர் சுவடி 2
(இரண்டாவது முதல் இருபத்திரண்டாவது பாடல் உரை வரை)

தருமபுர ஆதீன ஒற்றை ஏடுகள் 2
(பாயிரும் பனிக்கடல் (5) என்னும் பாடல் மட்டும் எழுதிய ஏடுகள்)

இரா. இராகவ ஐயங்கார் உதவிய மூல ஒற்றை ஏடுகள் 2

மூலமும் உரையும் தொடர்ச்சியாக இருந்த கையெழுத்துப் படிகளில் காணப்படாமல் உரையாசிரியர்களால் காட்டப் பெற்ற மேற்கோள்களிலிருந்தும், புறத்திரட்டில் இருந்தும் தெரிந்த பரிபாடல்கள் பின்னிணைப்பாகப் 'பரிபாடற்றிரட்டு' என்னும் தலைப்பில் தரப் பெறறது. அதில் திருமாலுக்குரிய முழுப் பாடல் ஒன்று, வையைக்குரிய முழுப்பாடல் ஒன்று; உறுப்பு ஒன்று; மதுரைக்குரிய உறுப்புக்கள் ஆறு. இன்னவகையைச் சார்ந்தன என்று அறியக் கூடாத உறுப்புக்கள் இரண்டு. ஆகப் பதினொன்றுள்ளன.

பரிபாடலின் முதற்பதிப்பு பரிமேலழகர் உரையுடன் 1918-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றது. பின்னே 1935-ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பு வந்தது. ஆனல், புதிய சுவடிகள் அதன் ஆய்வுக்குக் கிடைத்தில. வழக்கம போலத் திருத்தங்களும், இணைப்புகளும் பெருகின ஒவ்வொரு பாடல் தலைப்பிலும் அப்பாடற் பொருளை எளிய இனிய வகையில் விளக்கும் பொருட் சுருக்கம் பரிமேலழகர் உரையைத் தழுவி எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளது,

பெருங்கதை

1924

இப்பெருங்கதையை முதற்கண் ஆய்ந்து பதிப்பித்தவர் டாக்டர் சாமிநாதையரே ஆவர். முதலும் இறுதியும் இல்லாத நூல்களின் பெயர்கள் தாமும் கண்டுபிடித்தற்குப் பட்ட அரும்பாடுகள் அனைத்தும் இப்பெருங் கதைக்கும் பட்டதுண்டு. பழிப்புரையும்கூட ஒரோருகால் பயனுரையாக மாறிவிடக்கூடும் என்பதற்குப் பெருங் கதையைக் கண்டுபிடித்த வகையே சான்றும்.

ஐயர் பத்துப்பாட்டு ஏடுகளைத் தேடிக்கொண்டு உலாவந்த பொழுதில் திருநெல்வேலிக்குச் சென்றார். ஆங்கு அம்பலவாண கவிராயர் வழித்தோன்றல்களாகிய கவிராச நெல்லையப்ப பிள்ளை, கவிராச ஈசுவரமூர்த்திப் பிள்ளை ஆகியவர்கள் வீட்டில் ஏடுதேடினார். அப்பொழுது, 'கொங்குவேள் மாக்கதை' என்று வரைந்திருந்த ஒரு சீட்டை மேலே கொண்ட பழஞ்சுவடி ஒன்று கிடைத்தது. அதைக் கண்டதும் இலக்கணக் கொத்துப்பாயிரம் ஏழாம் நூற்பாவில், தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார், மூன்றினும் முழங்கும் ''என்பதன் உரையில் 'திருவைக் கோவைக்குங் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணம். அன்றியும் அழகிய சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற்கு அலந்து இரந்து அருமைத் திருக்கையால் எழுதினர். அப்பெருமையை நோக்காது சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை சங்கப்பாட்டு கொங்குவேண் மாக்கதை முதலியவற்றோடு சேர்த்து அச்செய்யுட்களோடு ஒன்றாக்குவர்'' என்று சாமிநாத தேசிகர் எழுதிய பகுதியில் உள்ள 'கொங்குவேண் மாக்கதை' என்பது ஐயர் நினைவுக்கு வந்தது ''சாமிநாத தேசிகர் வெறுத்துக் கூறிய வாக்கியப் பகுதி அப்பொழுது ஞாபகத்திற்கு வரவில்லையேல் இந்நூலை வாங்கி வைத்துக்கொள்ளுதற்கு இடமில்லை. அவர் வைதது இந்நூலுக்கு வாழ்த்தாக முடிந்தது'' என்று இதனைக் குறிப்பிடுகிறார் ஐயர்.

கிடைத்த சுவடியிலும் முதல் 80 ஏடுகள் காணப்படவில்லை. இறுதியிலும் 319-ஆம் ஏடுகளுக்கு மேற்பட்டவை காணப்படவில்லை. இடையேயும் சில பகுதிகள் இல்லை. பூச்சியரிப்புக்கும் துளைப்புக்கும் ஆட்பட்டு இருந்தது.

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் ''முந்து நூல்களில் காப்பியமென்னும் வடமொழிப் பெயரின் றேனும ''கூத்திய ரிருக்கையும சுற்றிய தாகக் காப்பிய வாசனை கலந்தவை சொல்லி''.... என உதயணன் கதையுள்ளும்'' என்று எழுதிய பகுதி கொங்குவேண் மாக்கதையில் (4.8:41.2) இடம் பெற்றிருக்கக் கண்டு இக்கதை உதயணன் கதை' என்பது தெரிந்து மகிழ்ந்தார். அதில்

கதை, பெருங்கதை என்று குறிப்பனவும் இக்கதையையே என்றும் தெளிந்தார்.

பின்பு, அம்பலவாண கவிராயர் மாணவராகிய வண்ணார்பேட்டை திருப்பாற்கடனாத கவிராயரி வீட்டில் பெருங்கதைச் சுவடி ஒன்று கிடைத்தது. அச்சுவடியும் முன்னதைக் கண்டு படியெடுத்ததே ஆயினும் முன்னதில் கண்ட சிதைவுகளைச் சரிசெய்து கொள்ள உதவியது. அச்சுவடி, முதற் சுவடி சிதைவுறுதற்கு முன்னரே படியெடுக்கப் பெற்றது என்பது விளங்கிற்று. ஏனெனில் அதில் சிதைவாக இருந்த பகுதிகளும் சிதைவின்றிக் காணப்பட்டன. ஆயினும் முன்னும் பின்னும் இடையேயும் விடுபெற்ற பகுதிகள் நிரம்புதற்குத் தக்கதாக இல்லை இக்குறையை நிறைவு செய்தற்கு ஐயர் பெரிதும் முயன்றார்; தாமே தேடியலைந்தார்; தம் அன்பர்களுக்கு எழுதியும் தேடுவித்தார் எங்கும் சுவடி கிடைக்கவில்லை. ஆகவே கிடைத்த அளவிலேனும் வெளியிடத் துணிந்தார்.

இச்சுவடிகளைக் கண்டு படியெடுக்கும் பணியைத் தஞ்சையைச் சார்ந்த அவளிவணல்லூர்க் கணக்கர் ஏ. ஐயாசாமி ஐயர் மேற்கொண்டார். அக்கடிதப் படியும் நாளடைவில் சிதைவுற்றது அந்நிலையில் ஐயர் நூலாராய்ச்சிக்கு உடனிருந்து உதவிவந்த பின்னத்தூர் அ நாராயணசாமி ஐயர் வற்புறுத்தித் தாமே வலிந்து பெற்று அதற்கு வேறு படி எடுத்துத் தந்தார்.

இப்பெருங்கதைப் பதிப்புக் குறித்து ஒரு செய்தியை முதுபெரும் புலவர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் குறிப்பிடுகிறார். [1]அப்பொழுது ஐயரிடம் கொங்குவேள் மாக்கதை ஏட்டுச் சுவடி ஒன்றே இருந்தது. அது கவிராச நெல்லையப்ப பிள்ளையினுடையதாகும். அதனைச் சரி பார்த்து வெளியிட ஐயருக்கு நெடுங்காலம் வேண்டியிருந்தது. ஆனால் நெல்லையப்ப பிள்ளை அந்த ஏட்டை உடனே அனுப்பிவிடும்படி கண்டிப்பாக எழுத்துமேல் எழுத்து விட்டுக்கொண்டிருந்தார்.

1. செந்தமிழ் தொகுதி 39, பக். 369.

அதற்குப் பதிலுரைக்க முடியாமல் ஐயர் தவித்தார். 'உதட்டுக்குள் உற்ற அமிழ்தத்தை உண்ணாமல் உமிழும்படி நேர்ந்தாற்போல அருமையாக அகப்பட்ட ஏட்டை அச்சிடாமல் அனுப்பவேண்டியிருக்கிறதே என வருந்தி, முதலியாரிடம் கூறினார். "அந்த ஏட்டைத் திருப்பி அனுப்ப வேண்டா! நான் நெல்லைக்குச் சென்று கவிராயரைக் கண்டு அது புத்தகமாகுமட்டும் பொறுக்குமாறு செய்விக்கிறேன்" என்றார். அவ்வாறே கவிராயரைக்கண்டு தக்கவாறு உரைத்தார், "ஐயர் மிகப் பாதுகாப்பாக வைத்திருப்பார். அந்த ஏடு தங்களிடம் வந்தால் [1]வளையாபதி ஏடு ஒன்றே ஒன்றிருந்தது தவறிப்போனது போலத் தவறி ஒருவராலும் வெளியிடப்படாமலும் உலகத்துக்கு உதவாமலும் இறக்கக்கூடும்" என்று விளக்கினார். கவிராயர் இணங்கினார். பின்னே ஐயரின் பெருங்கதைப் புத்தகத்தைப் பெற்றபோது கவிராயர் அடைந்த மகிழ்ச்சி அளவில் அடங்காததாக இருந்தது! அச்சிறப்பில் கவிராயர் பங்கு பெரிதல்லவா!

இத்தகைய நெருக்கடியையும், ஏடு இருந்த நிலையையும் கருத்தில் கொண்டு எழுதுகிறார் ஐயர் எனக் கருத வேண்டியுள்ளது. அப்பகுதி வருமாறு;

"ஒரு பழைய நூலைப் பதிப்பிக்கும் காலத்துள்ள உடற்றுன்பம் மனக்கவலை பொருட்செலவு காலப்போக்கு முதலியவற்றைக் காட்டிலும் அதனை முதலில் ஆராய்ச்சி செய்யுங் காலத்தில் உண்டாவன மிக அதிகமென்று முன்பு அறிந்ததைவிட இந்நூற் பதிப்பால் மிகத் தெரிந்து கொள்ளலானேன்."

தொண்டை நாட்டுப் பழைசை அடைஞ்சான் என்பவன் மைந்தன் சின்னடைஞ்சான் என்பான் கொங்குவேள் மாக்கதையை எழுதுவித்தான் என்னும் செய்தி ஒரு

1. ஐயருக்காக முதலியார் ஏடு தேடும் பணியில் உதவினார், இரட்சணிய யாத்ரிகம் இயற்றிய புலவர் கிருட்டிண பிள்ளையின் வழியே ஆறுமுக மங்கலத்தில் வளையாபதிச் சுவடி இருப்பதாக அறிந்தார், அவர் நண்பர் வழக்கறிஞர் சுப்பராய முதலியார் வழியே தேடினார், ஆனால் அவ்வேடு அகப்படவில்லை, அதனை உள்ளத்துக் கொண்டு உரைத்தார். (செந்தமிழ் 39 ; 371)

பாடலால் புலப்படுகின்றது இதனை எழுதினன் அன்பூர் நயினன் அமுதகவி என்பது. 'இந்தக் காவியமெழுதினது அன்பூர் நயினன் அமுதகவி எழுத்து' என்னும் உஞ்சைக் காண்டத்தின் இறுதியில் எழுதப்பட்டுள்ள குறிப்பால் புலப் படுகின்றது. இதனை முன்னேயும் குறிப்பிட்டுள்ளோம்.

பெருங்கதையின் இரண்டாம் பதிப்பு 1935-ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதில் முதற்பதிப்பில் மூலத்திற்குப் பின்னே தனியே பதிப்பிக்கப்பட்டிருந்த குறிப்புரை அவ்வப் பக்கத்தின் அடிக்குறிப்பாகச் சேர்க்கப்பட்டது. 'உதயனன்' என்பது 'உதயணன்' எனத் திருத்தம் பெற்றது. 'அபிதான விளக்கம்' அரும்பத முதலியவற்றின் அகராதியாக உருக கொண்டது 'உதயணன் சரித்திரச் சுருக்கம்' என்பது மட்டும் தனியேயும், மூலம் மட்டும் தனியேயும் பதிப்பிக்கப் பெற்ற பதிப்பும் உண்டு. பெருங்கதைக்கு முழுதுரை பொ. வே. சோமசுந்தரனாரைக் கொண்டு கண்டு, வெளி யிட்ட பெருமை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற் குண்டு.

சங்க இலக்கியம்
1940

இது சைவசித்தாந்த சமாசத்தின் அரிய பதிப்பாகும். சங்க இலக்கியத்தை முழுமையாக ஆராய்வார்க்குக் கலைக் களஞ்சியமாக விளங்கும் கவின் பதிப்பு இது. அன்றியும் புலவர் வரிசையாக ஆராய்வார்க்குப் புதையலாகத் திகழும் பெற்றியது. இப்பதிப்பை இம்முறையில் ஆய்ந்து வெளி யிட்ட பெருமை அறிஞர் வையாபுரிப் பிள்ளையைச் சேர்ந்த தாகும்.

சங்க இலக்கியம் என்பது பாட்டும் தொகையுமாம். அப்பாடல் எண்ணிக்கை 1381 அவற்றைப் பாடிய புலவர் பெருமக்கள் அகம்பன்மாலாதனார் முதல் வேம்பற்றூர் குமரனார் ஈறாக 473 பேர்கள். ஆசிரியர் பெயர் காணாத பாடல்களாக 102 பாடல்கள் உள. 1443 பாடல்கள் முதற் பகுதியாகவும், எஞ்சியவை இரண்டாம் பகுதியாகவும் இரு பகுதிகளாக வெளிவந்துள

சங்கப் புலவர்களின் பெயர்களை ஆசிரியர் அகர வரிசையில் அமைத்துப், பாட்டுதொகை நூல்களையும் அவ்வாறே அகராதி அடைவில் வைத்தும் பாடல்களை அவ்வந் நூல்களின் தொடர் வரிசையில் கொண்டும் பதிப்பிக்கப் பெற்றது இப்பதிப்பு.

சங்க நூல்களுக்கு அமைந்த பழைய உரைகளின் திட்பத்தைப் பாதுகாத்து இக்காலத்தில் எவரும் அறிந்து கொள்ளும்வண்ணம் புத்துரை எழுதுதல்வேண்டும் என்னும் குறிக்கோளைச் சைவ சித்தாந்த சமாசம் மேற்கொண்டது. அதன் முதற்பணியாக மூலபாடத்தை வெளியிடவெனத் துணிந்தது. ஏட்டுப் பிரதிகள், கையெழுத்துப் பிரதிகள், ஆகியவற்றைத் திரட்டியது அறிஞர் குழுவொன்றைத் தேர்ந்து ஆய்வில் புகுத்தியது "பிரதிகளில் கிடைக்கும் பாடங்களைக் குறிக்காமலும் வெளியிடாமலும் வாளாவிருத்தல் தமிழ்க் கல்வியின் முன்னேற்றத்தைக் கெடுப்பதாகும்; தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியைத் தடுப்பதாகும். தமிழன்னைக்கே தீங்கிழைப்பதாகும்; ஏட்டுப் பிரதிகளின் தொகை அருகிவரும் இந்நாளில் அவற்றைப் பயன்படுத்தும் தொண்டர் படை பன்மடங்கு பெருகுதல் வேண்டும். அவற்றால் கிடைக்கும் பயன் அவ்வப்போது வெளிவருதல் வேண்டும்" எனத் திட்டமிட்டுக் கொண்டு செயலில் இறங்கியது.

பிரதிகளை ஒப்பிட்டு உண்மைப்பாடம் தேர்ந்தெடுத்த வகையை முகவுரை குறிப்பிடுகின்றது.

1. உரையின்றி நூல்களின் மூலம்மட்டும் கிடைக்குமிடத்து பிரதிகளில் உள்ள மூலத்தால் மட்டும் திருத்தம் செய்தல். 2. உரைகளும் உள்ளவிடத்து அவைகளின் துணை கொண்டு பிரதிகளில் உள்ள மூலத்தை நோக்கிப் பொருத்தமுள்ள பாடங் கொள்ளுதல். 3. தொல்காப்பிய உரை முதலியவற்றில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட விடத்து அவ்வுரையிற் காணும் பாடத்தோடு ஒப்புநோக்கித் தகுதியான பாடங்கொள்ளுதல்.

இம்முறையால் பெற்ற பயன் பெரிது. அச்சுப் பிரதியில் காணப்படாது மறைந்துவிட்ட அடிகள் மீண்டும் கிடைத்தன; ஒரு சில இடங்களில் அப்பிரதியில் காணப் படாது மறைந்துவிட்ட சொற்கள் புலப்பட்டன. ஒருசில இடங்களில் அப்பிரதியில் மாறுபட்டுக் காணும் சொற்கள் திருத்தமடைந்தன. ஒருசில இடங்களில் இலக்கணக்குறிப்பு பாடினோர் பாடப்பட்டோர் குறிப்பு முதலியவற்றில் திருத்தங்கள் கிடைத்தன.

பதிப்புச் செம்மையை முகவுரை குறிப்பிடுகின்றது: "இவ்வளவு முயற்சி செய்தும் பொருள் விளங்காத பகுதிகள் பலவுள்ளன. அப்பகுதிகளில் பாடம் சிதைந்துள்ளதென்பது எளிதில் அறியக் கிடக்கின்றது. பாடம் இவ்வாறிருத்தல் வேண்டும் என்று ஊகிக்கவும் இடமுண்டு. ஊகங்கள் உண்மையெனத் துணிந்தவிடத்தும் அவை பதிப்பிற் பிழை திருத்தமாக உடுக்குறியுடன் கொடுக்கப் பட்டுள்ளனவே யன்றி, மூலங்கள் திருத்தப்படவில்லை. பிரதிகளின் உதவி இன்றிக் கேவலம் ஊகத்தையே கடைப்பிடித்துப் பாடங் களை மாற்றிவிடுதல் ஆடாத காரியம், இப்பதிப்பில் ஒரு பாடமேனும் ஊகத்தால் மாற்றப்படவில்லை. விளங்காத பாடங்கள் திருந்துதற்குரிய வழி ஒன்றேயுள்ளது, அது பெரு முயற்சிகள் செய்து மேன்மேலும் ஏட்டுப் பிரதிகளைத் தேடிச் சேகரித்து அவற்றின் துணைகொண்டு ஆராய்ந்து உண்மை காணுவதே"

இப்பதிப்பில் விரிவான முகவுரை, சங்க இலக்கியங் களின் வரலாறு, சங்க இலக்கியங்களின் பதிப்பு விவரம், சிறப்புப் பெயர் அகராதி புலவர்களும் பாடல் தொகையும் பாட்டெண்களின் ஒப்புநோக்கு அட்டவணை, புலவர்களின் பெயர்வகை, புலவர்களும் அவர்களாற் பாடப்பட்டோரும், அரசர் முதலியோரும் அவர்களைப் பாடினோரும் புலவர்கள் அகராதி, பாட்டு முதற்குறிப்பு, பதிப்பிற்குதவிய ஏட்டுப் பிரதிகள் முதலியன ஆகிய பயன்மிக்க இணைப்புகள் இடம் பெற்றுள்ளன இதன் இரண்டாம் பதிப்பு பாரி நிலையத்தின் வழியே 1967-இல் வெளிவந்துள்ளது.

இதற்குப் பயன்பட்ட சுவடிகள்:

அகநானூறு;		சுவடிகள்;
கம்பர்விலாசம் வே. இராசகோபாலையங்கார்	ஏடு	1.
,,	கடிதம்	1.
சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறை	,,	1.
பவானந்தர் கழகம்	,,	1.
ஐங்குறுநூறு:		
சென்னை அரசாங்க நூல் நிலையம்	,,	2.
கலித்தொகை:		
நெல்லை அம்பலவாண கவிராயர்	ஏடு	1.
பவானந்தர் கழகம்	கடிதம்	1.
குறுந்தொகை.		
மதுரைத் தமிழ்ச் சங்கம்	ஏடு	1.
தி. த. கனகசுந்தரம் பிள்ளை	கடிதம்	1.
இரா. இராகவையங்கார்	,,	1.
முத்துரத்தின முதலியார்	,,	1.
சென்னை அரசாங்க நூல் நிலையம்	,,	1.
நற்றிணை:		
மதுரைத் தமிழ்ச் சங்கம்	ஏடு	1.
இரா. இராகவையங்கார்	கடிதம்	1.
சென்னை அரசாங்க நூல் நிலையம்	,,	1.
பவானந்தர் கழகம்	,,	2.
பதிற்றுப்பத்து;		
இரா. இராகவையங்கார்	,,	1.
தி. த. கனகசுந்தரம் பிள்ளை	,,	1.
பரிபாடல்:		
தி. த. கனகசுந்தரம் பிள்ளை	,,	1.
புறநானூறு;		
மதுரைத் தமிழ்ச் சங்கம்	ஏடு	1.
சென்னை அரசாங்க நூல் நிலையம்	கடிதம்	1.
தி. த. கனகசுந்தரம் பிள்ளை	,,	1.
மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை	,,	1.
பத்துப்பாட்டு மூலம்:		
கா. ரா. நமச்சிவாய முதலியார்	,,	1.
திருமுருகாற்றுப்படை;		
எம். பி. எஸ். துரைசாமி முதலியார்	ஏடு	1.

பொருநராற்றுப்படை:
அம்பலவாண கவிராயர் ஏடு 1.
சென்னை அரசாங்க நூல் நிலையம் கடிதம் 1.

சிறுபாணாற்றுப்படை:
அம்பலவாண கவிராயர் ஏடு 1.
சென்னை அரசாங்க நூல் நிலையம் கடிதம் 1.

பெரும்பாணாற்றுப்படை:
அம்பலவாண கவிராயர் ஏடு 1.
சென்னை அரசாங்க நூல் நிலையம் கடிதம் 1.

முல்லைப்பாட்டு:
அம்பலவாண கவிராயர் ஏடு 1.
சென்னை அரசாங்க நூல் நிலையம் கடிதம் 2.

மதுரைக்காஞ்சி:
சென்னை அரசாங்க நூல் நிலையம் ,, 1.
மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை ,, 1.

நெடுநல்வாடை } மன்னார்குடி ,, 1.
குறிஞ்சிப்பாட்டு } சோமசுந்தரம் பிள்ளை ,, 1.

பட்டினப்பாலை:
மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை ,, 1.
சென்னை அரசாங்க நூல் நிலையம் ,, 1.

மலைபடுகடாம்:
சென்னை அரசாங்க நூல் நிலையம் ,, 1.

ஔவையார் பாட்டு:
இரா. இராகவையங்கார் ,, 1.

தொல். பொருள். நச்
பேரா. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடம் ஏடு 1.

தொல். பொருள். நச். பேரா
பவானந்தர் கழகம் ,, 1.

தொல். பொருள். இளம்.
வ உ. சிதம்பரம் பிள்ளை ,, 1

தொல். பொருள். நச்.
இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை
சோமசுந்தர தேசிகர் ,, 1.

இலக்கண விளக்கம்:
ஆனந்தரங்கம் பிள்ளை வழியினர் ,, 1.

புறத்திரட்டு:
சென்னை அரசாங்க நூல் நிலையம் கடுதம் 1.

இவ்வேடுகள் பற்றிய மற்றை விளக்கங்களை அந்நூல் அட்டவணையில் கண்டு கொள்க.

பழந்தமிழ் இலக்கியப் பேழை
1970

பழந்தமிழ் இலக்கண இலக்கிய காவிய நூல்களை யெல்லாம் உரைகளுடன் ஒருங்கே பெற்றுப் பயன்பெறும் வகையில் இப்பேழை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப் பெற்றதாகும். ஏடுகள் கொண்டே இப்பதிப்புகள் வெளிவந்தில ஆயினும் சில பதிப்புகள் ஏடுகளின் துணையால் திருத்தம் பெற்றது உண்டு என்பது குறிப்பிடத்தக்கது மற்றொன்று சங்க நூல்கள் அனைத்தையும் பல்வேறு இடங்களில் தேடி அலையாமல் ஓரிடத்தே ஒருங்கே ஒரு பேழையுள் வைத்துப் பெறும் தனிப் பெருஞ் சிறப்புடையது.

தொல்காப்பியத்தின் அனைத்து உரைகளும், கீழ்க்கணக்கு, காவியங்கள், பாட்டுதொகை எல்லாமும் பழைய புதிய உரை விளக்கங்களுடன் வெளிவந்துள்ளது. இவற்றுள் பலவற்றுக்குப் புத்துரை கண்டவர் பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் ஆவர். பழைய உரையாசிரியர்களின் இலக்கண உரைகள் விளக்கவுரை குறிப்புரை ஆகியவற்றைப் பெற்று விளக்கம் பெற்றுள்ளன.

தொல்காப்பிய உரைகள் பதினொரு தொகுதிகளாகவும், பத்துப்பாட்டு இரண்டு தொகுதிகளாகவும் எட்டுத்தொகை பதினொரு தொகுதிகளாகவும், பதினெண் கீழ்க்கணக்கு ஏழு தொகுதிகளாகவும் காப்பியங்கள் பதினொரு தொகுதிகளாகவும் அமைந்துள்ளன. இதில் அமைந்துள்ள காப்பிய நூல்கள்: சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை. சூளாமணி, வளையாபதி குண்டலகேசி உதயணகுமார காவியம், நீலகேசி, யசோதர காவியம் என்பன. வளையாபதி குண்டலகேசிகளில் இதுகாறும் கிடைத்த பாடல்கள் உரை விளக்கம் பெற்றுள்ளன.

12. நிறையும் குறையும்

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்பது தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தில் அடங்கிய திருக்குறள் மணி. இத்தெரிந்து தெளிதல், நட்பாடல், வினைவகை, வாழ்க்கைத் துணை முதலாய பலவற்றுக்கும் பொதுவகையால் கிடைத்த பொருளுரையாகும். இவ்வுரை பதிப்புத் துறையில் பணிசெய்த பெருமக்களைத் தெரிந்து தெளிந்து தேர்ந்து போற்றுதற்கும் கட்டளைக் கல்லாக அமையத் தக்கதாம்.

பதிப்புப் பணியில் ஈடுபட்ட பெருமக்களெல்லாரும் நம் போற்றுதலுக்கு உரியவரே. அவர்கள் எவ்விழப்புக்கும் துணிந்தும், எவ்வுழைப்புக்கும் அஞ்சாராகப் பணி செய்தமையானன்றே இத்துணைச் தமிழ்ச் செல்வங்களை எய்தி இறுமாப்புறுகின்றோம்." யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று ஆடிப் பாடி மகிழ்கின்றோம்! சமயப் பரப்புநராக வந்த அயல் நாட்டுச் சான்றோர்களும் தமிழ்ச் சால்பிலே தோய்ந்து நாம் நம் மொழியாக்கம் எண்ணிப்பாராத நாளிலேயே நல்ல பல பணிகள் புரிந்து மகிழ்வுற்றனர்! உலகளாவிய புகழுக்குரியது ஒண்டமிழ் என்னும் உயர்வை வழங்கினர்! இத்தகைய அருமைக்கும் பெருமைக்கும் அடிப்படையான பதிப்புத் தொண்டு செய்த பண்பாளர்களிடம் குறையும் உண்டோ? எனின் உண்டு என்க. அக்குறை, 'என்னே! என்னே!' என எள்ளி நகையாடித் தூற்றும் குறையன்று! நாம் வழிவழியே செய்யவேண்டிய வாய்த்த கடமைக்கு வழிகாட்டியாகக்கொண்டு போற்றும் நிறையை நினைவூட்டும் குறையாகும். திங்களியே படிந்த மாசை எண்ணிக் குறையுறுவார் எவர்? அதன் ஒளியுள் இருள் மங்கிப்போவது

இல்லையா? அதுபோல் இங்குக் காணப்பெறும் குறைகள் அவர்கள் கொண்டிருந்த நிறையுள் இருந்த இடம் தெரியாமல் மறைவது உண்மையாயினும், நமக்குப் பாடமாகத் தக்கதாகலின் பார்க்கவேண்டுவதேயாம்.

வழியில்கிடந்த கல்லால் ஒருவன் காலிடறி வீழ்வான் எனின், அக்கல்லைப் பெயர்த்தெறியப் பின்னேவரும் ஒருவனுக்கு உணர்வு உண்டாகுமன்றே! அவ்வுணர்வைத் தட்டி எழுப்புவது யாது? முன்னே வீழ்ந்தவன் இடறுதலேயன்றோ! அவ்வகையால் நம் கடனை நன்முறையில் வலியுறுத்துவதற்கே இப்பகுதியாம் என்க! உண்மையில் இத்தகையதொரு பகுதியை எழுதுதலும் வேண்டா எனக் கருதவே முடிகின்றது. பிறர்க்கும் அவ்வுணர்வு தோன்றலாம்! நன்றி பாராட்டுதல் இடையே இந்நலிவுக் கருத்தும் வேண்டுமோ எனவும் ஐயுறலாம் ஆனல் பல்கால் எண்ணிச் சோர்ந்து சோர்ந்து தேர்ந்த பின்னரே எழுதுவது இப்பகுதி ஆதலால் பயில்வார்க்குத் தோன்றும் எண்ணத்தில் ஓர் எள்ளளவும் குறையாத அளவு எண்ணித் தயங்குதலோடு எழுதும் பகுதி இஃதென்க. அதுவும், "முழுநிறைவுடையாரே பதிப்புப் பணியில் ஈடுபடுதற்குறியர்; பிறர் உரியர் அல்லர்" என்னும் எண்ணம் தோன்றிவிடுமாயினும் முத்தமிழ் வளர்ச்சி முனைப்புடன் செல்லாது என்னும் கருத்தை வலியுறுத்திப் பேரளவு நல்லுணர்வும் நல்லறிவும் உடையாரே அன்றி ஓரளவு நல்லுணர்வும் நல்லறிவும் வாய்த்தாரும் மொழிப் பணியில் ஊன்றி நின்று உழைத்துதவலாம் என்னும் கருத்தை வலியுறுத்தி ஈடுபடுத்துதற்கும் வாய்ப்பாம் எனக் கருதி எழுதப் பெறுவதுமாம் என்க.

பதிப்புத்துறையின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த டாக்டர் சாமிநாதையர் உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரைபற்றிக் கூறியுள்ள ஒரு கருத்தும் அவரைப் பற்றிக் கூறியுள்ள ஒரு தெளிவும் இவண் நோக்குதல் இப்பகுதிக்கு மிக மிக ஏற்புடையதாம்.

"நச்சினார்க்கினியர் உரையினால் புதிய புதிய விஷயங்களை உணர்ந்தேன் இரண்டு விஷயங்களில் அவரிடம் சிறிது

வருத்தம் உண்டாயிற்று. பல இடங்களில் மாறிக் கூட்டிப் பொருள் விளக்குகிறார். ஓரிடத்துள்ள பாட்டில் இருக்கும் சொல்லைப் பலபாட்டுக்கு முன்னே மற்றோரிடத்துள்ளதோடு இணைத்து மாட்டெறிகின்றார். அத்தகைய இடங்களில் அவர் உரையில் சிறிது வெறுப்புத் தட்டியது. ஒரு விஷயத்துக்கோ சொற்பிரயோகத்துக்கோ ஒரு நூற் செய்யுட் பகுதியை மேற்கோள் காட்டுமிடத்தில் அந்த நூற் பெயரைச் சொல்வதில்லை, 'என்றார் பிறரும்' என்று எழுதி விட்டு விடுகிறார், சிந்தாமணிப் பாட்டாக இருந்தால் [1]சந்திரநாத செட்டியார் இருக்கிறார். வேறு நூலாக இருந்தால் என்ன செய்வது அவர் மேற்கோளாகக் காட்டும் உதாரணங்களோ நான் படித்த நூல்களிலே இல்லாதன. அவர் உதாரணங்கள் காட்டும் அந்த நூல்களின் தொகுதியே ஒரு தனி உலகமாக இருக்குமோ என்ற மலைப்பு எனக்குத் தோற்றியது. "நூற் பெயரையாவது இந்த மனிதர் சொல்லித் தொலைக்கக்கூடாதா?" என்று அடிக்கடி வருத்தம் உண்டாகும். ஆனாலும் அந்த மகோபகாரியின் அரிய உரைத்திறத்தின் பெருமையை நான் மறக்கவில்லை. சுருக்கமாக விஷயத்தை விளக்கிவிட்டு எது நுணுக்கமான விஷயமோ அதற்கு அழகாகக் குறிப்பு எழுதுகிறார். அவர் எழுதும் பதசாரங்கள் மிக்க சுவையுடையன அவர் அறிந்த நூல்களின் பரப்பு ஒரு பெருங் கடலென்றே சொல்லவேண்டும். இவ்வளவு சிறப்புக்களுக்கிடையே முன்சொன்ன இரண்டு குறைபாடுகளும் மறைந்து விடுகின்றன"[2]

ஐயர் எண்ணத்தில் ஆழப்பதிந்த இக்குறைகள் அவர் பதிப்பில் தலைகாட்டுமோ? நூலும், பாடல் எண்ணும், அடி எண்ணும்கூடத் தவறாமல் சுட்டும் அருமையுடையது அவர் பதிப்பு. ஒரோ ஓர் அருஞ்சொல் நினைவு இருப்பினும் அதனைக்

1. இவர் ஐயரின் சிந்தாமணிப் பதிப்புக்கு மிக உதவி செய்தவர், கும்பகோணத்தில் வாழ்ந்த சைனர் சிந்தாமணியில் நிகரற்ற புலமையும், சைன சமயத் தேர்ச்சியும் மிக்கவர். 'சிந்தாமணி விஷயத்தில் அவர் ஓர் அகராதி' என்கிறார் ஐயர்,

2. என் சரித்திரம் 743 - 4.

கொண்டு பாடலையோ, பக்கத்தையோ கண்டுகொள்ள வாய்ப்பான அருஞ் சொல் முதலியவற்றின் அகராதி அமைந்த சீர்மையது. அவர் காலத்தே வந்த பதிப்புகளும் சரி, அவர் வழிகாட்டிய பின்னர்த்தோன்றிய பதிப்புகளும் சரி இம்மாண்புகளை ஏற்றதுண்டோ? அரிதாகவே சில ஏற்றன; மற்றவை 'நச்சர்' போக்கிலே போயின! 'கையிலே என்ன இலை இருக்கிறது?' என்பதை எவரும தெரிந்து கொள்ளக் கூடாது என்று. 'கசக்கித் தந்தாலே பயன் செய்யும்' எனச் சொல்லும் நாட்டு மருத்துவர் சிலரும் இன்றும் இருக்கத்தானே செய்கின்றனர்!

1949-ஆம் ஆண்டிலே வெளிவந்த 'வை மு.கோபால கிருஷ்ணமாசார்யார்' இயற்றிய உரையுடன் கூடிய கம்ப ராமாயணம் - அயோத்தியாகாண்டப் பதிப்பை எடுக்கிறேன். அதன் ஏழாம் பக்கத்தைப் புரட்டுகிறேன், "தன் கோபத்தை மறைத்தற்குரிய காலத்தே மறைத்து, வெளிப்படுத்தற்கு உரிய காலத்தே வெளிப்படுத்தலால் 'படர்சின யானை' என்றார்: 'கடுஞ்சினங்கடிந்த காட்சியர்' என்ற இடத்து ஆசிரியர் நச்சினர்க்கினியர் 'சினமென்பது கோபத்தின் பின்னுகச் சிறிது பொழுது நிற்பது' எனக் கூறியது இங்குக் காணத்தக்கது" என்னும குறிப்பு உள்ளது நல்ல வேளை! ஆசிரியர் நச்சினர்க்கினியர்[1] என்று ஆசிரியர் பெயரையாவது சுட்டியுள்ளார்! ஆயினும் என்ன? ஆசிரியர் நச்சினர்க்கினியர் ஒரு நூலுக்கோ உரை எழுதியுள்ளார்? 'அடியார்க்கு நல்லார்' என்றால் சிலப்பதிகாரத்தோடு அமையலாம். நச்சினர்க்கினியர் உரையமைந்த நூல்கள் ஒன்று இரண்டா?

"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையுள் ஐஞ்ஞான்கும் - சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னர்க்கினிய மே"

1. "நூற் பெயரும், ஆசிரியர் பெயரும் சுட்டாமல் செல்வதும் இப்பதிப்பாளர்க்கியல்பே, "பொன் + கழல் = பொலக்கழல்: "பொன்னென் கிளவி யீறுகெடமுறையின், முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ், செய்யுண் மருங்கிற்றொடரியலான" என்பது விதி" அயோ 7 காண்க

என்று நச்சினார்க்கினியர் உரைப் பாயிரச் செய்யுள் கூறும் நூல்களுள் குறுந்தொகை இருபது பாடல் ஒழிந்தவற்றுக் கெல்லாம் உரை கிடைத்துளவே. இவற்றுள் எதனைத் தேடுவது? சரி; பாடல் முதலாக இருந்தால் ஒவ்வொரு நூலாகத் தேடிக்காணலாம். இடைப்பகுதி கடைப் பகுதி களாக இருந்தால் எத்தகைய இடர்ப்பாடு? ஒரு சொல்லைக் காணத் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி ஆகியவற்றைத் திருப்பவேண்டும். தொல்காப் பியம் ஒரு பகுதியா? பத்துப் பாட்டும் தான் சுருங்கிய அள வினதா? சிந்தாமணி, கலித்தொகைகளும் சிறியநூல்களா? நம்மைத் திணறச் செய்யும் இப்பதிப்புக்கு முன்னே, 'அஞ்சேல்' என ஐயர் பதிப்பு அழைக்கிறது! அப்பொழுதும் ஓர் அச்சம்; இத்தொடர் 'பத்துப்பாட்டுள்ளோ சிந்தாமணி யுள்ளோ இருத்தல் வேண்டுமென 'இறைவனை வணங்கி' எடுத்துப் புரட்டவேண்டும்! பத்துப் பாட்டிலே அமைந்த அரும்பத முதலியவற்றின் அகராதியைத் திருப்பிக் 'கடுஞ் சினம்' என்னும் சொல் இருக்கும் இடத்தைக் கண்டு இடம் பெற்ற பக்கத்தைப் புரட்டினால் திருமுருகாற்றுப் படையில் 135-ஆம் அடியாகக் 'கடுஞ்சினங் கடிந்த காட்சியர்' காட்சி யளிக்கக் கண்டு களிப்பர்! அதற்கு உரைப் பகுதியைத் திருப்பினால், "ஆசையோடே சடிய சினத்தையும் போக்கின அறிவினையுடையவர். கோபத்தின் பின்னாகச் சிறிது பொழுது நிற்பது சினம்" என்பதனைக் காண்பர். அவ்வள வுடன் ஐயர் அமைவாரா? ஓர் ஒளி விளக்கேந்தி வழிகாட் டிச் சிறுபாணாற்றுப்படை 210-ஆம் அடியின் உரையிடத்துக் கொண்டு செல்வார்! ஆனால் அங்கே இழுத்துப்போய் அலைக்கழிக்க விரும்பாமல் அடிக் குறிப்பிலேயே "கோபம் நீட்டித்து நிற்கின்றது சினம்' என்பார்பின்; சிறுபாண் 210 உரை" எனப் பதிப்பார். வை. மு. கோ. பதிப்பிலேயே திரு முருகாற்றுப்படை அடி 135 என்ற குறிப்பிருந்தால் பயில் வார்க்கு எவ்வளவு வாய்ப்பாக இருக்கும்? கண்ணைக்கட்டிக் காட்டில் ஏன் விடவேண்டும்? என எவரும் எண்ணுவர் அல்லரோ? அன்றியும் அதனைக் குறிப்பிடுவதால் வரும் இடர்ப்பாடுதான் என்னே? நச்சினார்க்கினியர் உரையைக் கண்டுதானே உள்ளது உள்ளவாறு குறிப்பிடமுடியும்! உரைநடையை எத்துணை நினைவு வித்தகர் எனினும் ஒரு

சொல்லும் அதன் பகுதியும் ஒழியாமல் செவ்விதாக உள்ளது உள்ளபடி எழுத இயலாதே! உரையைப் பார்த்து எழுது வதை அதன் எண்ணுடன் சேர்த்து எழுதினால் என்ன? என் னும் எண்ணம் எவருக்கே உண்டாகாது? அரிதின் முயன்று நுணுக்கமான உரையும் விளக்கமும் மேற்கோளும் கண்டுள்ள இராமாயண பாரதப் பதிப்புகளுக்கு — வை. மு. கோ — பதிப்புகளுக்கு — உள்ள பெருங்குறை இது! தலைவலியாக உள்ள குறை இது! இத்தகைய பதிப்பில் பழஞ்சுவடிக் குறிப்போ. பழம் பதிப்புக் குறிப்போ காணமுடியுமா? பின் வரும் பதிப்புகளிலேனும் இக்குறைகள் அகலல் தமிழ்த் தொண்டெனக் குறித்துக் காட்டல் கடமையாம். இனிப் பழநூல் பதிப்பாளர்களிடத்துக் காணக் கிடக்கும் குறை நிறைகளுள் குறிப்பிடத் தக்கவற்றைக் காண்போம்.

எந்நூலாயினும் முன்னுரை இன்றியமையாதது. "மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும் ஆடமை தோள் நல்லார்க்கு அணியும் போன்றது" பாயிரம் ஆகிய முன்னுரை என்று மூந்தையோர் புகழ்ந்த பெற்றியது அது. ஆனால் பல பதிப்புகளில் முன்னுரை எழுதுவதே இல்லை. அழகு ஒன்றைக் கருதியோ முன்னுரையை வேண்டுவது? இல்லை! நூலை முற்று முடியக் கற்க இயலாதவரும நூலின் முன்னுரையைத திரக்கற்ற அளவிலேயே அந்நூல் பற்றிய தெளிவினராதற்குரிய வாய்ப்பினது முன்னுரை. நூற் பொருள்-நூல் ஆசிரியர்-உரையாசிரியர்-ஏடுகள் கிடைத்த வகை-ஏடு வழங்கியோர்-ஆய்ந்த வகை-உடனிருந்து ஆய்ந் தோர்-உதவியாளர்-அச்சிட்டோர்-பதிப்பித்தோர் ஆகிய வரலாறுகளையெல்லாம் ஒருங்கே அறிந்துகொளள வாய்ப் புச் செய்வதும் முன்னுரையேயாம் இம் முன்னுரையைச் சீரிய வகையில் பதிப்பிக்கும் சீர்த்தியினரும் போற்றினரல் லர் என்பது ஒரு குறையேயாம். எழுவாய் முதல் இறுவாய் வரை எத்துணை முறை ஆராய்ந்தாலும் ஒரோ ஓர் பிழை யைக் காட்டுதலும் அரிதெனப் பதிப்பித்த ஆறுமுக நாவல ரும் முன்னுரைஎழுதுதலைப்போற்றவில்லை.சிறப்புப்பாயிரம் சாற்றுகவி எனப் புலவர்கள் பாராட்டும் புகழை நூன் முகப்பிலே இடம்பெறச் செய்திருந்தும் முன்னுரையில்லாக்

குறை அவர்தம் பதிப்புகளில் உண்டு; அவர்க்கு நெடுங் காலத்திற்குப் பின்னே வந்த சரவண பவானந்த பிள்ளை பதிப்பு, பதிப்பழகெல்லாம் கூடியதாக இருந்தும் இக்குறை வுடையதாகவே இருந்தது இவர்கள் நிலையே இவ்வாறாயின், மழவை மகாலிங்கையர் பதிப்போ, சோடசாவதானம் சுப்பராய செட்டியார் பதிப்போ முன்னுரை பதிப்புரை ஆகியன இல்லாமல் இருக்கிறதெனக் குறைகூற ஒண்ணுமோ?

ஆனால் முன்னுரை எழுதும் வழக்கம் அக்கால நிலையில் அரும்பிற்றில்லை என அமைதி கூறமுடியுமோ எனின் முடியாது. 1812-ஆம் ஆண்டில் வெளிப்பட்ட திருக்குறள்-நாலடியார் மூலப் பதிப்பிலேயே அம்பலவாண கவிராயர் முன்னுரை வரைந்துள்ளார். பதிப்பிக்க நேர்ந்த காரணம்-உடனிருந்து ஆராய்ந்தவர் - மீண்டும் ஆய்ந்தவர் பற்றிய குறிப்புகளையெல்லாம் பொறித்துள்ளார். ஆகலின் அம் முறை இருந்தும் போற்றாமை குறையேயாம்.

இனி மற்றொரு குறை. "பல பிரதி ரூபங்களைக் கொண்டு ஆராய்ந்து பதிப்பிக்கப்பெற்றது" "பல ஏடுகளைக் கொண்டு ஆராய்ந்து பதிப்பிக்கப் பெற்றது" "கரலிகிதங் களாலாய வழுக்களை நீக்கி அச்சிடபபெற்றது" என்பன போன்ற குறிப்புகள் அளவில் அமைந்து பல பழம்பதிப்பு கள் உள்ளன இதனால் பல உண்மைக் குறிப்புகள் மறைக்கப் பட்டுப் போயுள்ளன. அன்றியும் ஏமாற்று வேலைகளுக்கும் இடமளித்துள்ளன எவரும் எவர் பதிப்பையும் வைத்துக் கொண்டு "பல பிரதி ரூபங்களைக் கொண்டு ஆராய்ந்து பதிப்பிக்கப் பெற்றது" என்று பெயருக்குப் போட்டுக் கொண்டு ஒருவர் பதிப்பை அப்படி அப்படியே அச்சிடவும், அச்சிடுங்கால் ஏற்படும் வழுக்கள் எண்ணற்றுவிளங்கவும் சில பதிப்புகள் வெளிப்பட்டன. "இன்னார் பரிசோதித்த பிரதிக் கிணங்க இன்னார் பதிப்பித்தது" என்னும் முகப்புடன் பல வெளியீடுகள் வந்தன முகப்புப் பக்கம் கிடையாமல் போன புத்தகங்கள் கிடைக்குமானால் எவர் பெயரிலாவது வெளி யிட்டுக் கொள்வதும், அல்லது துணிந்து தம் பெயரையே போட்டுக் கொள்வதும் ஆகிய குறைகள் நிகழ்ந்துள்ளன.

ஆனால் இப்பெருங்குறைகள் பெரும் புலவராயினர் செய்தன அல்ல. அச்சகத்தாரோ, தமிழ்ப் புலமை இன்றி வணிக நோக்கே நோக்காகப் பதிப்பிப்பவரோ செய்த வேலைகள் இவை. இன்னும் பெரும் புலவர் பெயரைப் போட்டுக்கொண்டு அவர் தாமும் அறியாமல் வெளியிடுவதும், அவர் முன்னிலையில் ஆராய்ந்தது எனப் பதிப்பிடுவதும் நடைமுறையில் இருந்ததனை அறியச் சான்றுகள் பல உள. 'இன்ன புலவர் மாணவர்' என்பதிலே பெருமை கொண்டு, அவரிடம் அணுகியே இராதவரும் 'இன்னார் மாணவர் ஆராய்ந்து' அல்லது 'இன்னார் மாணவர்க்கு மாணவர் ஆராய்ந்து' பதிப்பித்தது என்று மகிழ்வுற்றாரும் பலர். இத் தகையவர்கள் தகவிலாத் திருவிளையாடல்கள் தமிழுலகிலே மிகப் பல்கிய காலம் 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியும் ஆகும்.

கணக்கதிகாரம் என்பதொரு நூல். கொறுக்கையூர் காரி என்பவர் அருளிச் செய்தது அந்நூல்.
இதனை,

"பொன்னி நாட்டுப் பொருந்திய புகழோன்
மன்னர் கோமான் வழிமுதல் உடையோன்
முத்தமிழ் தெரிவோன் முகரியம் பெரும்பதி
மத்திமத் தளத்தின் மறையவர் வாழும்
குற்றமில் காட்சிக் கொறுக்கையர் கோமான்
புத்தன் புதல்வன் காரிஎன் பவனே"

என்னும் பாயிரச் செய்யுளால் அறியலாம். இவ்வாறாகவும் 1855-ஆம் ஆண்டில் வெளிவந்த கணக்கதிகாரத்தின் முதற் பக்கம் எவ்வாறு இருந்தது என்பதைக் காண்க:

கடவுள் துணை

கணக்கதிகாரம்

புத்தர் குலத்தில் உதித்தவராகிய முத்தமிழில் தேர்ந்த
புராரி அய்யர்
செய்தது
இஃது

கையேட்டுப் பிரதிகளில் பாடங்கள் தோறும் பலவாறாக
பிழைப்பட்டிருப்பதை சில கனவான்கள்
நோக்கிச் சீர்திருத்தித் தருகவெனக்
கேட்டுக் கொண்டமையால்
சீகாழி
அருணகிரி வுபாத்தியாயரால்
பல பிரதிகளைக் கொண்டு குற்றங்களைந்து
வாலாஜாபேட்டை
சுந்தர முதலியாராலும்
மேழியனூர்
வாசுதேவ முதலியாராலும்
வேதாந்த விளக்க அச்சுக் கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது
இராக்ஷத ஸூ சித்திரை மீ

காரியார் எப்படிப் 'புராரி அய்யர்' ஆனார் என்பது விந்தை அல்லவா! இதற்கேற்பப் பாயிரத்தில் காட்டிய செய்யுள் ஈற்றடி "புத்தன் புதல்வன் புராரி என்பவனே" என இப் பதிப்பில் உள்ளது. 'பு ரா ரி' என்பது 'பாட வேறுபாடு' என்றோ 'புத்தன் புதல்வன்' என்பதுடன் மோனைப் பொருத்தங்கண்டு அமைத்தது என்றோ வைத்துக் கொள்வோம். அ ய் ய ர் எப்படி நுழைந்தார்? முதலியார் பதிப்பல்லவா இது? எனத் திகைக்கிறோம். 'ம றை ய வ ர் வா ழு ம்... கொறுக்கை' என்று பாயிரம் கூறுவதால் 'அ ய் ய ரை' ச் சேர்த்துக் கொண்டார். ஆனால் 'மன்னர் கோமான் வழி முதலுடையோன்' எனவரும் இரண்டாம் அடியைப் பற்றிக் கவலைப்படவில்லை! இத்தகைய மாற்றம் கணக்கதிகாரத்திற்கு மட்டும்தான் என் ப து இல்லை! இவ்வாராய்ச்சியே தனி நூலாதற்குரிய அளவு விரிவுடையதாகும்.

அறிஞர் சி. வை. தாமோதரனார் பதிப்பித்த தொல்காப்பியப் பின்னான்கியல் உரை பேராசிரியர் உரையாகவும், 'நச்சினார்க்கினியர் உரை' என்றே அச்சாகியது. பின்னே பேராசிரியர் உரை என்று ஆராய்ச்சியாளரால் எடுத்துக் காட்டித் திருத்தப் பெற்றது. திருக்கோவையார் உரை

பேராசிரியர் உரையாகவும் அதனை, 'நச்சினார்க்கினியர் உரை' என்றே ஆறுமுக நாவலரால் வெளியிடப்பெற்றது. இதற்குத் தாண்டவராய சுவாமிகள், திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார், சோடசாவதானம் சுப்பராயசெட்டியார் திரிசிரபுரம் முருகைய பிள்ளை ஆகியோர் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளனர். சுவடியில் உரையாசிரியர் பெயர் இல்லாமல் இருப்பின் அவ்வாறே பதிப்பதை விடுத்துப், பிறிதொருவர் பெயரால் அமைக்குங்கால் பேரிடர்ப்பாடு உண்டாதல் தெளிவு. ஆனால் இப்பிழை கண்டுபிடிக்கப்பட்டது பிறர் பதிப்பில் செப்பமாக்கப் பெற்றது. திருத்தக்க தேவர் சிந்தாமணியைச் சங்கப் புலவரிடம் கொணர்ந்து அரங்கேற்றம் செய்தார் எனச் செய்தியுண்டாயின் 'கடைச் சங்கமே' டாக்டர் ஐயருக்கும் நினைவில் தோன்றியிருக்கிறது. வச்சிர நந்தி என்பவரால் தோற்றுவிக்கப் பெற்ற சமண சங்கம் அஃதெனும் விளக்கம் அப்போது கிடைக்கவில்லை கிடைத்த பின்னர்த் திருத்திக்கொண்டார்.

1855-இல் களத்தூர் வேதகிரி முதலியார் உரையுடன் கூடிய திருக்குறள் பதிப்பு வெளிவந்தது. 1861-இல் அதே அச்சுப் பதிப்பு வெளிவந்துள்ளது. அதன் முகப்பில் "பரிமேலழகர் உரையைக் கொண்டியற்றிய பதவுரையும கருத்துரையும் விசேடவுரையும் திருவள்ளுவமாலை மூலமும் உரையும் திருத்தணிகை சரவணப் பெருமாளையர் பரிசோதித்தபடி திருநெல்வேலிப் பேட்டை பண்டிதர் அபுதுரகிமான் இராவுத்தர் குமாரர் வாவாகாசீன் இராவுத்தர் முயற்சியால தி. கந்தசாமி பிள்ளையால் இலட்சுமி விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" என்று குறிக்கப்பட்டுளது. இக்குறிப்பே வேதகிரி முதலியார் பதிப்புக்கும் இப் பதிப்புக்கும் உள்ள வேறுபாடு. மற்றொரு வேறுபாடு. அதில் இல்லாத செய்யுள் முதற்குறிப்பகராதி இதிலுண்டு என்பதே.

சிந்தாமணியில் கந்தியாரும், பெரிய புராணம், இராமாயணம் ஆகியவற்றில் வெள்ளியாரும் இடை இடையே பாடிச் சேர்த்ததுண்டு! பெரும் புலவர்கள் வாக்கொடும் நோக்கொடும் தம் வாக்கையும் நோக்கையும்

ஒட்டிவைத்துப் பார்த்து மகிழ்வது அவர்க்கு இயற்கையாயி ஞற்போலப் பதிப்பாளருள்ளும் பலர் பலர் தம் விருப்பம் போல் பலவற்றை இடை இடைச் சேர்த்துப் பதிப்பித்து இன்புற்றனர்.

[1]யாப்பருங்கலக் காரிகை உரையைப் பதிப்பித்த ஒருவர் 'பொருளொடு அடிமுதல் நிற்பது கூன்' என்னும் கலித்துறையின் உரையில் செந்தமிழ் நாடு இன்னதென்று கூறுமிடத்து 'மன்றவாணன் மலர் திருவருளால்' என்னும் அகவலொன்றைப் பாடுவித்து அதன் இடையிலே புகுத்திப் பதிப்பித்துக்கொண்டு திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகரிடம் காட்டினர். இப்பாடல் ஒரு பழைய ஏட்டுப் பிரதியில் இருந்தது; அதை நான் சேர்த்துப் பதிப்பித்திருக் கிறேன். மன்றவாணன் என்பதனுல் சிவபெருமானையும், சைவமாதரும் என்றதனுல் சைவ மடங்களையும் இச்செய் யுள் தெரிவிக்கின்றது என்று கூறி மகிழ்ந்தார் அந்நூலின் உரையாசிரியர் சமணர் என்பதையும் எண்ணினர் அல்லர், இடைச்செருகலார்!

பெற்றதாய் தன் பிள்ளையைப் பேணிக்காத்தல் போலக் காக்கபெற்ற பெருமையுடையது சுவடி. அச்சுவடி யைப் 'பண்டையோர் வைத்த பழநிதி'யெனப் போற்றிப் புரந்த செல்வர்கள் புலவர்கள். அவருள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரால் பெருங்குணங் கொண்டு பெரிதுவந்து வழங்கிய பெருமையுடையது பதிப்பாளர்க்குக் கிடைத்த சுவடிகள்! ஆடிப் பெருக்கிலோ அழிநெருப்பிலோ விடாமல் அன்னைத் தமிழைக் காத்த அடபெருமக்கள் வாரி வழங்கிய ஏட்டைப் பெற்றுக் கொண்டவர்கள், அவ்வேட்டை வழங் கிய பெருமக்கள் பெயரைச் சுட்டிக் காட்டுதல் கடமை யன்றோ! இக்கடமையைத் துறந்து 'பல சுவடிகளை ஆய்ந்து பதிப்பித்தது' என்று வாளா அமைந்தது நயத்தகு செயலா குமோ? மற்றும் ஓரிரண்டு சுவடிகளை வழங்கியவர்களின் பெயர்களைப் பொறித்து இவ்வாறு பன்னிரண்டு சுவடிகளை

1. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும். பக். 182.

ஆராய்ந்து பதிப்பித்தது என்பதனால் என்ன பயன்? உண்மையில் ஓரிரண்டு சுவடிகளை ஆராய்ந்த அளவில் பதிப்பித்தவரே இக்குறைபாட்டுக்கு இடமாயினர்! ஆனால் அவ்வகையில் ஓர் ஒற்றை ஏடு கிடைப்பினும் மறவாது மறையாது சுட்டும் பதிப்புச் செப்பம் வாய்ந்தது ஐயர் பதிப்பேயாம். [1]அவர் கடற்கரையில் காற்று வாங்கச் சென்றபொழுதில், 'பக்கிங்காம் கால்வாய் ஓரத்தில் கிடந்தன' என்று ஒருவர் தந்த இரண்டு ஒற்றையேடுகளையும் குறிப்பிடுகிறார். [2]பாயிரும் பனிக்கடல்' என்னும் பாட்டு மட்டுமே எழுதிய ஒற்றையேட்டைக் குறிப்பிடுகிறார். சிலப்பதிகார அரும்பத உரைக்குக் கிடைத்த் சில ஒற்றையேடுகளைக் குறிப்பிடுகிறார். ஐங்குறு நூற்றில் மிகுதியாகக் கிடைத்த சில பாடல்களுக்குரிய ஏடுகளை வழங்கிய தென்காசி சுப்பையா பிள்ளையையும், [3]முச்சங்கம் குறித்த ஒரு பாடலை வழங்கிய மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பல கவிராயர் வழியினரையும் நினைவு கூர்கிறார் இக்குறிப்புகள் எல்லார் பதிப்புகளிலும் இடம் பெற்றிருக்குமாயின் ஏடு பற்றிய ஆய்வுக்குப் பெரும்பயனாக அமைந்திருக்கும்.

இனிப் பதிப்பாசிரியர் கடமை வழுவற ஆய்ந்து வெளியிடல் என்பதேயாம். வழுவற ஆய்ந்து வெளியிடல் வேறு; தாம் தாம் வேண்டுமாப்போல மாற்றிக் கொள்வது வேறு. இவ்விரண்டும் நேர் நேர் மாறுபட்டவை. தம் ஆய்வுக்கு எட்டாதவை - சரியெனத் தமக்குத் தோன்றாதவை பிறர்க்குச் செவ்வையாக விளங்கத்தக்கவை ஆகலாம். அந்நிலையில் ஏட்டில் இருந்தவண்ணம் பதிப்பித்து விடுதலே சால்பாம். பின்னர் அதனை ஒருகால் ஆய்ந்து வெளிப்படுத்துவார் ஆய்வுக்கு அஃது இடமாக அமையலாம் அவ்வாறு செய்யாவிடின் பதிப்பாசிரியரின் தவறு, நூலாசிரியர் தவறாகவும் உரையாசிரியர் தவறாகவும் தோன்ற இடமாகிவிடும்.

"புராதனமான தமிழ் நூல்களும் உரைகளும் பண்டைய வடிவம் குன்றாதிருத்தல் வேண்டும் என்பதே எனது

1. தக்கயாகப்பரணி, முகவுரை, XVIII
2. பரிபாடல்,
3. சிலப்பதிகாரம்.

நோக்கமாதலின் பிரதிகளில் இல்லாதவற்றைக் கூட்டியும் உள்ளவற்றை மாற்றியும் குறைத்தும் மனம் போனவாறே அஞ்சாது பதிப்பித்தேனல்லேன். ஒருவகையாகப் பொருள் கொண்டு பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன். யாதுக ஒன்றும் செய்திலேன்" என்று [1]பழந்தமிழ் நூற் பதிப்பின் தொடக்கத்திலேயே டாக்டர் ஐயர் எழுதுகின்றார். 'பழைய நூல்கள் பழைய வடிவத்தினின்றும் வேறுபடாமல் இருக்க வேண்டும் என்பதே எனது முழுநோக்கமாதலால் உழைக்க வேண்டும் அளவு உழைத்து இப்பதிப்பு நிறைவேற்றப் பெற்றது' எனத் தம் நோக்கைப் பல்லாண்டுகள் கழித்தும்[2] வெளியிடுகின்றார். ஆயினும், ஊகத்தால் கொண்ட யாடங்களும் உண்டு என்பதும் வெளிப்படுகின்றது

பழம் பதிப்பாசிரியர் தாமோதரனார் தாம்கொண்ட பதிப்புக் கொள்கையைப் புலப்படுத்துகின்றார்:

[3] "தற்காலத்தில் தமிழ்நாடுகளில் வழங்கும் பிரதிகள் அனைத்தினும் இப்பொழுது யாம் அச்சிட்டு வெளிப்படுத்தும் ரூபம் மேலானதென்று கொள்வதேயன்றி, ஏட்டுப் பிரதியின் ஆதாரமில்லாது யாம் ஒரு மொழியும் மாற்றிலேம் ஆயினும், இதுதான் ஆசிரியர் எழுதிய சுத்த ரூபம் என்று கொள்ளற்க. அனைத்து மாறுபாடுந் திருத்தி ஆதி ரூபங் காட்டுதல் இனி எத்துணை வல்லார்க்கும் அரிது. பிறநூற் துணிவிற்கு மாறுபட்டுந் தற்கால வழக்கத்தை விரோதித்தும் சரியான அர்த்தம் புலப்படாமலும் சமுசயம் நிகழ்ந்த இடத்தும் எல்லாத் தேசத்துப் பிரதியும் ஒத்திருந்தன வற்றையாம் சிறிதும் திருத்திப் பதிப்பித்திலேம். அவற்றைத் தம் மதத்தின்படி திருத்துதல் அறிவுடையோர்க்கு இயல்பன்று"

ஆனால் கலித்தொகை சூளாமணிப் பதிப்புகளின் போதில் இவர் நோக்கு வேறொரு வகையில் சாய்கின்றது:

1. சிந்தாமணி. முதற்பதிப்பு. 1887.
2. பெருங்கதை ,, 7924.
3, வீரசோழியம் பதிப்புரை பக். 28 - 9

"இதுகாறும் அச்சிட்ட நூல்களில் ஒரு பிரதியின் ஆதார மாவது இல்லாமல் பாடபேதத்தைத் திருத்துதல் ஒழிந்த யான், இப்பொழுது பிரதிகள் அனைத்தும் பிழையென்றும் பிரதிகளில் இருக்கும் பாடம் ஆக்கியோன் வாய்மொழி யாய் இருக்கமாட்டாது என்றும் எந்தப் பிரதி வழிச் சென் ருலும் அச்சில் வருவது ஆசிரியரினின்றும் வேறுபட்ட பிழை பாடென்றும் நிச்சயிக்க ஏது உண்டான இடங்களில் இரண் டொரு எழுத்தையாவது மொழியையாவது சந்தர்ப்பத் திற்கும் பொருளுக்கும் இயையுமாறு திருத்தத் துணிந் தேன். அவ்வாறு செய்யாவிடின் நூலின் சிறப்பு அழிவது மன்றிச் சில பாடங்கள் ஒரு பயனும் தாராமலும் சில முன் பின்ளுேடும், பிற நூல்களோடும் விரோதப்பட்டும் நிற்கு மாதலில் திருத்தம் அத்தியாவசியமாயிற்று. இதனை உலகம் அறியச் சொல்லாமல் விடுவதே தப்பென்று உணர்ந்து இங்ஙனம் தெரிவிக்கலானேன்"

இவ்வுரையால் தாமோதரனுர் வாய்மை நெஞ்சம் புலப்படுகிறது. ஆனுல் ஏட்டின் இயல்பான வாய்மை போற்றப் பெறவில்லை என்பதே ஆகின்றது. இதன் விளைவு என்ன ஆகும்! தாமோதரனுர், ஏடுகளைத் திருத்திப் பதிப் பிப்பதற்கு முன்னேடி ஆகிவிடுவார் அல்லரோ? மிக அரிதின் முயன்று அரும்பாடுபட்டுக் குறுந்தொகையைப் பதிப்பித்த அரங்கனுர் கூறுகிறுர்,

"இந்நூலுள் யான் செய்துள்ள மாறுபாடுகளும் சில உள. அவற்றையெல்லாம் கூறவேண்டிய கடமையையுடை யேனுதலின், 'எஞ்சியவைகளும பிறவும்' என்னும் தலைப்பின் கீழ்த் தெரிவித்திருக்கின்றேன். அவற்றுள் இடக்கர்ச சொல் லாகிய குமெருடரன் மொழி இந்நூலகத்து ஒன்பதிடத்து வந்திருந்தமையின் அவற்றை அறவொழித்துச் செய்யுளிற் குறைவு தோன்றுவாறு ஏற்றவற்றை என் சிற்றறிவிற் கெட்டியவாறு சேர்த்து அதற்கேற்ப உரை எழுதியிருப்ப தும் ஒன்று. இங்ஙனம் செய்தமைக்குக் காரணம் பழந்தமிழ் நூல்கள் பலவற்றைத் தமிழுலகிற்குத் தந்த தக்காராகிய ஸ்ரீமான் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் கலித் தொகையகத்து மாற்றிவைத்துக் காட்டிப்போந்த காரண மேயாகும்."

வ. உ. சிதம்பரனார் பதிப்பிலும் இத்துணிவான செயல் மிகப் பலவுண்டு. "எனது பிரதியில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் மூன்றையும் புரிந்து மணக்குடவர் உரையை ஒருவாறு பூரணமாக்கி அச்சிற்குக் கொடுத்தேன்" என்று திருக்குறள் மணக்குடவர் உரைப் பதிப்புரையிலே எழுதியுள்ள செய்தி இதனை விளக்கும். இன்னிலை என்பதைப் பதினெண் கீழ்க் கணக்குள் ஒன்றாகக் கொண்டவர்கள் தாமோதரனாரும், சிதம்பரனாரும், சிதம்பரனார்க்கு இன்னிலை என்னும் பெயருள்ள ஏட்டுச்சுவடி ஒன்றை த. மு சொர்ணம் பிள்ளை தேடித் தந்தார். அதனை இயற்றியவர் பொய்கையார் என்றும். தொகுத்தவர் மதுரையாசிரியர் என்றும், கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்றும் வ. உ. சி. குறிப்பிடுகிறார். இந்நூல் செய்யுள்கள் இளம் பூரணத்தில் இடம் பெற்றுள்ளதாக ஐந்து இடங்களில் குறிப்பிடுகிறார். ஆனால் இளம் பூரண ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்த வையாபுரிப் பிள்ளை[1] "இவை யனைத்தும் இளம்பூரணருரை ஏட்டுப் பிரதியிலும், அச்சுப் பிரதியிலும் காணப்படவில்லை" பொருளதிகாரத்தில் செய்யுளியல் தவிர ஏனைய இயல்களுக்குத் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஏட்டுப் பிரதி ஒன்றேயாம். இரண்டாவது ஒரு பிரதி இல்லை என்பது இங்கே மனங்கொள்ளத் தக்கது. பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இந்நூலை எடுத்தாண்டதாக ஸ்ரீ பிள்ளையவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் காட்டும இரண்டு இடங்களிலும் பூதத்தார் அவையடக்கு எனக் காணப்படுகிறதேயன்றிப் பொய்கையாரைப் பற்றியேனும் இனனிலையைப் பற்றியேனும் ஒன்றும் குறிப்பிடப் படவில்லை. கடைசியாக யாப்பருங்கல விருத்தியில் ஒரு செய்யுள் இன்னிலையின் கண்ணே உள்ளது எனப் பிள்ளையவர்கள் காட்டுகிறார்கள் ஆண்டும் அச்செய்யுள் ஒளவையார் பாடியதாகக் கொள்ளக் கிடக்கின்றது" என்கிறார். இக் குறிப்பை நோக்க வ. உ. சி. தாம் விரும்பியவண்ணம் சுவடிகளை மாற்றித் துணிவுடன் பதிப்பித்தார் என்பது வெளிப்படுகின்றது. தாமோதரனார், அரங்கனார், சிதம்பரனார் இவர் தம் சீரிய ஆக்கப் பணிகளுக்கிடையே இத்திருத்தக்குறை

1 இலக்கிய மணிமாலை. பக். 80 : 1

தலைகாட்டவே செய்கின்றது. ஏட்டின் தூய்மைக்கும் வாய்மைக்கும் இந்நெறி ஏற்றதன்றாம்

இன்னும் சிலர் ஏட்டில் செய்த கேடுகள் எவ்வகையானும் ஏற்கக்கூடாத கொடுமையுடையனவாம். தாம் தாம் வழிபடும் கடவுளர் வாழ்த்துகளை நூன்முகப்பிலே போட்டுக் கொண்டனர். அந் நூல் எச்சமயம் சார்ந்தது என்பதும் கருதாராய்ச் செய்தனர். இடை இடையேயும் தம் சமயச் சார்புக்கு மாறான கொள்கைகளை மாற்றினர்; உரைநடையில் இல்லை! செய்யுளிலேயே மாற்றினர்; முன்பின் வரும் பொருள் பற்றியும் கவலைப்பட்டார் அல்லர். அவர்க்கு வேண்டுவதெல்லாம் தாம் விரும்புவது போலத் தாம் படிக்கும் நூலும் இருத்தல்வேண்டும் என்பதே. சமயக் கண்டனங்களும், கண்டனங்களுக்குக் கண்டனங்களும், ஏசல்களும் பெருக வழங்கிய காலத்தின் வேலை! துண்டு வெளியீடுகளும், கண்டனப் பதிப்புகளும் அச்சாகி உலாவந்த பொல்லாத வேளை! அவ்வேளை, பதிப்பிக்கும் ஏடுகளிலும் விளையாடியது.

பாரதத்தைப் பதிப்பிப்பவர்க்கு அந்நூல் இடையே சிவபெருமானுக்கு ஏற்றம் தரும் பகுதி வரக் காணுங்கால் கண்ணடைப்பது இல்லை. திருக்கை வழக்கத்தைச் செய்வார்! சமண சமயப் பாடலில் சைவத்தார் திருக்கை வைப்பார்! இவ்வாறே பிறர் பிறரும் செய்தனர்! ஏடு என்ன செய்யும்? "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்! படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்ற நிலையில் ஏடு என்ன செய்யும்? பாட்டுத்தான் என்ன செய்யும்?

இதனைக்குறித்துச் "சென்னைக் கல்விச் சாலைத் தமிழ்ப் புலமை சமரச வேத சன்மார்க்க சங்கம் மகாா ஸ்ரீ தொழுவூர் வேலாயுத முதலியார்" தாம் எழுதிய [1]ஏரெழுதுபது-திருக்கை வழக்கம் என்னும் நூலின் முகவுரையில் குறிப்பிடுகிறார்:

"அச்சிடுமுன்னே ஆனவை பல; பின்னிட்டால் ஆனவற்றுக்கு வரம்பில்லை. படலப் பெயர்களையே முற்றும்

1. ஆண்டு 1886.

வரம்பழிய மாற்றினர். இராமேசுரப் படலத்தை முற்று மெடுத்தெறிந் தொழிந்தனர்

"அச்சிட்ட பிரதிகளில் ஐயமுற்றுச் சோதிப்பான் புக்கவழிப் பழைய வேட்டுப்பிரதிகளோடு மாறுபட்டுக் கேட்டுப் பிரதியாகவே கிடந்திருக்கக் கண்டோம். இச் சிதைவு பாலகாண்டம் அயோத்தியாகாண்டம் ஆரணிய காண்டத்தினும் கிட்கிந்தை காண்டத்தும் சுந்தர காண்டத் தும் மிகுதி இவ்விரண்டினும் உயுத்த காண்டம் பெருங் கேடுற்றது என்செய்வோம்; கடவுள் செய்கை அறியோம்"

"தேயம், பாஷை, நூல், சாதி, சமயம், தருமம், மாதர், திரவியம், குழவிகள் முதலிய பொருள்களெல்லாம் தம்மது என்று அபிமானித்துக் காக்குந் தலைவனில்லாவழி இயற்கை திரிந்து கெடும் என்பது யாவருமுணர்ந்தபடி யன்றோ"

நிகண்டு நூல்களைப் பதிப்பித்தவர்களும், ஏட்டில் படியெடுத்தவர்களும் விளையாடிய விளையாட்டு மிகக் கொடுமையானது. அவர்கள் வைத்ததே வழக்காக இருந் திருக்கிறது என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன. 'தெய்வப் பெயர்த் தொகுதியும்' 'பன்னிரண்டாம் தொகு தியும்' அவர்களுக்கு ஆட்டக் களங்களாக இருந்திருக்கின் றன. நிகண்டுப் பதிப்பு பற்றிய ஒரு முகவுரை, நிகண்டுநூல் பதிப்பைப் பற்றி நாம் நன்றாக அறிந்துகொள்ள வைக்கின் றது.

"இது புத்தகங்கடோறும் ஒன்றற்கொன்று ஒவ்வாது வழூஉக்களாற் பொதிவுற்றுக் கிடந்தமையால் அவ்வழூவுக் களைப் பல புத்தகங்களைக் கொண்டு களைந்தும், வேண்டு மிடத்துப் புதுச் சூத்திரங்கள் செய்து உடுக்குறியிட்டுச் சேர்த்தும், பெயர் பிரித்தும் இவ்வாறு எட்டுத் தொகுதி களும் சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய தாண்டவராய முதலியாராலும் அவ் வாறே மேலிரண்டு தொகுதிகளும் அவரனுமதிப்படி மேற் படி சங்கத்து வித்துவானாகவிருந்த புதுவை பு. நயநப்ப முதலியாராலும் வழூவறுத்துப் புதுக்கப்பட்டு அக் கல்விச்

சங்கத்துப் புத்தகப் பரிபாலகராகிய கொற்றமங்கலம் இராமசாமி பிள்ளையால் அச்சிடப்பட்டன. மற்றை இரண்டு தொகுதிகளும் பின்னர் வெளிப்படுத்தப்படும்.

இதே நூலில் கொற்றமங்கலம் இராமசாமி பிள்ளைக்குத் தாண்டவராய முதலியார் எழுதிய ஒரு கடிதமும் பதிப்பிடப் பெற்றுள்ளது.

"நாம் அச்சிற் பதிப்பிக்கத் தொடங்கிய சேந்தன்றிவாகரத்தில் ஒன்பான் பெருகுதி தொடங்குவதற்குமுன் எனக்குய்த்த வேறுதேயத் திருக்கையாலும், பிறிது கருமத்தைக் கருத்திருனுந் தீண்ட வொண்ணுக் கருமந் தலைப்படலாலும் நான் கருதியவாறு முற்றுவித்தற்கியலாத மற்றைத் தொகுதிகளையுமொருவாறு புதுக்குவித்துச் சேர்த்துப் புத்தகத்தை நிறைத்து வெளிப்படுத்துவீராக வென்ற என் வேண்டுகோளை மேற்கொண்டு அவற்றிலிரண்டாயினும் சேர்த்தமைக்கு மகிழ்வுறு நின்றேன். மறவியால் விடுபட்ட சில பொருள்களுஞ் சொற்களும் பின்னர் சேர்ப்பித்தற் பொருட்டு நான் முற்குறித்திருந்த குறிப்பேடெனக்குக் காணப்பட்டாற் காலந்தாழ்க்காமற் பயன்படுத்துவேன்."

1839-ஆம் ஆண்டு ஆகஸ்டு மீ 7உ விசாகப்பட்டினத்திலிருந்து தாண்டவராய முதலியார் எழுதியுள்ளார். இது கல்வி விளக்க அச்சுக் கூடத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. பதிப்பு முறை எப்படியெல்லாம் நடந்தன என்பதை இப் பதிப்பும், கடிதமும் செவ்விதில் விளக்குகின்றன அல்லவா! புலமை நலம் சிறந்த இவர்கள் தனி நிகண்டே செய்திருக்கலாமே! புதுக்குவித்துச் சேர்க்க வேண்டுவானேன்? என நாம் நினைக்கலாம். ஆனால் அவர்கள் நினைக்கவில்லையே! இனி வேறொரு குறையைக் காணலாம்.

பாடவேறுபாடு என்பது உரை காணுதற்கு முந்திய மூலநூல் நிலையிலே ஏற்பட்டுள்ளது. அது பெயர்த்து எழுதுவோரால் நேரிட்டதாகும் அப்பாடவேறுபாடுகளை உள்ளது உள்ளவாறு குறித்தலால் பெரும்பயன் உண்டு. அதனை ஆராய்வார் உள்ளத்தில் பதிந்து மூலநூல் ஆசிரியர்

கொண்டபாடம் இவ்வகையால் இஃதாக இருக்கும் என்னும் தெளிவு உண்டாக்குதற்குத் துணையாம். ஒன்றுக்கும் உதவாக் கல் என ஒதுக்கிவைக்கப்பெற்ற கல்லே, உயரிய இடத்தில் வைக்கத்தக்க கல்லாகவும் கூடும்! அது, சிற்பியின் கைவண்ணத்தையும் கலை வண்ணத்தையும் பொறுத்தது. அவ்வாறே பாடவேறுபாடெனப் பொருந்தாது தள்ளப் பெற்ற ஒன்று ஆராய்ச்சியால் பொருத்தமானதெனக் கொள்ளத் தக்கதாகலாம். அதற்குச் சான்றுகள் முன்னேயும் கண்டோம்; பின்னேயும் வரும். ஆனால், பாடவேறுபாடே காட்டாமல் ஒழியின் அவ்வாராய்ச்சிக்கு இடமே இன்றி ஒழியுமன்றே!

சிலப்பதிகார முதலுரை அரும்பதவுரை; அவ்வுரைக்குப் பின்னே வந்தது அடியார்க்கு நல்லாருரை. இரண்டுரைகளுக்கும் பாடவேறுபாடுண்டு. அவற்றைக் காட்டுதல் இன்றியமையாததன்றே, இனித் திருக்குறளில் மணக்குடவர் பாடத்திற்கும் பரிமேலழகர் பாடத்திற்கும் வேறுபாடு உண்டு. இவற்றைத் தெளிவித்தல் கடமையாம். உரையாசிரியர்களே பாடவேறுபாடு காட்டுதல் வழக்காக இருத்தலை ஆராய்வார் எவரும் அறிவர். சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் 'வருநிதி பிறர்க் கார்த்து மாசாத்துவான் என்பான்' என்னும் பகுதிக்கு உரைவரையும் அடியார்க்கு நல்லார், "பலர்க்கென்றும் பாடம்; அதற்கு இல்லாராகிய பலர்க்கென்க" என எழுதுகின்றார். அதனை அடுத்து வரும் 'பண்டேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டி' என்பதில் "மொழியினால் என்று பாடமாயின் மடவார் திரள் நடுவே மொழியாலே புகழினான் செவ்வேள் என்று இசையைப் பரப்ப ஏனையோரும் காதன்மையாற் கொடை அழகு வீரம் இவற்றிற்குரியான் யாவனெனிற் கோவலனென்று பெயர் சொல்லப்படுவான் என்றலுமொன்று; இப் பொருளுக்குப் 'போக்கி', - 'போக்க'வென்க" என விரித்தெழுதுகிறார். இவ்வாறே இவரும் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலிய உரையாசிரியர்களும் ஆங்காங்குச் சுட்டிச் செல்வர்.

மூல பாடத்தை இருவேறுரையாசிரியர் இருவேறு வகையாகக் கொண்டனர் என்பதை அடியார்க்கு நல்லார்

'வாரொலி கூந்தலைப் பேரியற் கிழத்தி' (மனைய. 84) என்று கொண்டார். ஆனால் அவர்க்கு முன்னை உரையாளராகிய அரும்பத உரையாசிரியர், 'பேரிற் கிழத்தி' என்று கொண்டு 'கோவலன் மாதா' என எழுதினார். அடியார்க்கு நல்லார் இருநிதிக் கிழவன் மனைக்கிழத்தி' என்று உரைவிரிக்க, நேர்ந்தது பாட வேறுபாட்டால் தானே! 'பேரில்' என்பது இல்லத்தளவில் நிற்க. 'பேரியல்' என்பது இல்லத்தையுடையானையும் தழுவிச் செல்லக் காட்டுகிறார் அல்லரோ! இவையெல்லாம் பாட வேறுபாடு காட்டாக்கால் அறிதற்குக் கூடுமோ? இவ்வாறாகவும் பேரறிஞர் ஆறுமுக நாவலர் பாட வேறு காட்டுதலை அறவே ஒதுக்கியே பதிப்பித்தார். தேர்ந்த ஒன்றைப் பாடமாகக் கொண்டாரே அன்றிப் பிறர் தேர்ச்சிக்கும் உதவும்வகையில் பாடவேறு காட்டினார் அல்லர்! சுவடிகளைத் தெள்ளிதின் ஆய்ந்து வெளியிட்ட அப் பெருமகனார் பாடவேறுபாடும் காட்டியிருப்பாராயின் சில திருந்திய பாடங்கள் நமக்குக் கிடைத்திருக்கக்கூடும். அவர் பதிப்பில் பாட வேறுபாடு மருந்துக்கும் இல்லாமை குறையேயாம்! ஏனெனில் நாம் எதிர்பார்க்கத் தக்க அருஞ் பெருஞ் செல்வர் அவர்! ஒருவர் அச்சிட்டதைப் பார்த்துப் 'பல பிரதி ரூபங்களைக் கண்டு' ஆராய்ந்து வெளியிட்டது என்று தலைப்பில் மட்டும் போட்டுவிட்டு அப்படி அப்படியே அச்சிட்டுவிடுவார் பாட வேறுபாடு காட்டுவரோ? அவ்வாறே காட்டின் பாடவேறுபாடு காட்டப் பெற்றது என்று குறிப்பிடும் அளவுக்கு மட்டுமே பயன்படுவதன்றி வேறு பயனும் செய்யுமோ?

மாங்குடி கிழார் என்பார் புறம், நற்றிணை, குறுந்தொகை, மதுரைக் காஞ்சி ஆகிய பாட்டு தொகை நூல்களால் அறியப்பெறும் புலவர் அவர் பெயரைக் குறிப்பிடும் புறம் 24-ஆம் பாடல் 'மாங்குடி மருதனார்' என்னும் பாட வேறுபாட்டையும் தருகின்றது இப்பாட வேறுபாட்டால் மாங்குடி கிழாரும், மாங்குடி மருதனாரும் ஒருவரே என அறிய வாய்ப்பு ஆகின்றது. 'மாங்குடி மருதன்' என்று பாண்டின் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடுபுகழ் நமக்குப் புலப்படுகின்றது "தஞ்சை மாவட்டத்து மாங்குடி என்னும் ஊரும், அதனை அடுத்துள்ள மருதனூரும்"

[1] ஆராய்ச்சியாளர் விருந்துக்கு இடனாகின்றன இவ்வகை யால் பாடவேறுபாடு காட்டலின் பயன் இனிது விளங்கும். இஃது இவ்வாறு அமைய வேறொரு குறையைக் காணலாம். அது பதிப்புக் குற்றமாக மட்டும் குறிக்கப்பெறாமல் முந்தை உழைப்பாளர் முயற்சியைப் போற்றாத குற்றமுமாம். "முந்தையோர் சிந்தையில் ஆயிரம் எண்ணம் சிறந்து வளர்ந்ததைப் பாராட்டுதல் வழி வழிக் கடமையன்றோ!

ஒருபதிப்பு வெளிப்படும்போது அதற்குப் பயன்பட்ட சுவடிகளைக் குறிப்பிடுவது எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது அதற்கு முன்னைப் பதிப்புகளைக் குறிப்பிடுவது. ஒரு சிறு பகுதியே எனினும்' மூலம் மட்டுமே எனினும் முன்னே வெளிப்பட்ட பதிப்பை ஒளிவு மறைவு இன்றிக் குறிப்பிடுதல் பதிப்பாசிரியர் அறம் ஆகும். அன்றியும் அது நூல் வரலாற்றுக் கருவியுமாம் இதனை நன்றாகப் போற்றினாரும் உளர். போற்றாதவரும் உளர். இவ்வகையில் டாக்டர் ஐயர் பதிப்பு குறையுடையதேயாம். கலித்தொகை பதிப்பித்த இவை. அனந்தராமையர் தாமோதரனார் பதிப்பைக் குறிப்பிடுகிறார். "ஸ்ரீமான் சி வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பதிப்பித்த கலித்தொகையை ஊன்றிப் படிக்கும் காலத்தில் பலவிடத்து மூலமும் உரையும் செய்திகளும் பொருந்தாமை கண்டு பல் வேறு வழிகளில் மிக முயன்று அவற்றின் உண்மைகளை அறிந்து அமைத்துக் கொண்டேன்" என்பது அவர் உரை. தம் பதிப்பொன்று வெளிவர வேண்டியதற்குரிய காரணத்தை விளக்குவதற்காகவேனும் குறிப்பிட்டார் எனலாம்.

வீரசோழியம் தாமோதரனார் பதிப்பாகும். அதன் மறு பதிப்பொன்றும் அவரால் கொண்டு வரப்பெற்றது. பின்னர்க் கா. ர. கோவிந்தராச முதலியார் ஆராய்ச்சியுடன் பவானந்தர் கழக வழியே வெளிவந்தது. அதன்பின்னர் பவானந்தர் கழக இசைவுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வழி வெளிவந்தது. இத்தகைய பெருவரவும் வரலாறும் உடைய வீரசோழியப் பதிப்புகள் சுட்டப்படாது

1. நற்றிணை, 120. ஒளவை. சு, துரைசாமிப் பிள்ளை.

ஒழியின், புதிய பதிப்பு வாங்கிக்கற்பார்க்கு அதற்குமுன்னே உழைத்துக் கொணர்ந்த உயர்ந்தோர் முயற்சிகள் மூடு திரையிட்டு ஒழிக்கப்படுதல் உண்மையன்றோ! தாமோதரனார் பதிப்பைப் பவானந்தர் பதிப்பில் குறித்தலும், அவ்விருவர் பதிப்பையும் கழகப் பதிப்பில் குறித்தலும் சால்பு அவ்வாறு குறிப்பிடப்பட்டதுடன், பவானந்தர் வரலாறும், கா ர. கோவிந்தராச முதலியார் வரலாறும், அவர் எழுதிய பழைய முகவுரையும் கொண்டு கழகப் பதிப்பு விளங்குகிறது' இத்தகைய பதிபபுமுறை நன்றியுடன் வரவேற்கத் தக்கதாகும்' இவ்வாறு பழம் பதிப்புகளை அறிந்த அளவும் முயன்று பெற்றுப் போற்றுதலும், ஆராய்தலும, அவற்றைக் குறிப்பிடுதலும் ஆகிய நயத்தகு செயல்களை அதன் [1]பிற்காலப் பதிப்புகளில் செவ்விதிற் காணலாம். இலக்கிய வரலாறு. மொழி வரலாறு, புலவர் வரலாறு ஆகியன எழுதுவார்க்கு இக்குறிப்புகள் தேடிவைத்த திருவாக விளங்கிவருதல் ஒருதலை!

டாக்டர் ஐயர் பதிப்புக்கு முன்னே சிந்தாமணியில் சில பகுதிகள் சிலரால் வெளிப்படுத்தப்பட்டிருந்தன, சிலப்பதிகார - புகார்க் காண்டம் வெளியாகி இருந்தது. மணிமேகலை மூலம் முற்றிலும் வெளிவந்திருந்தது இவற்றைப் பற்றி அவ்வந்நூல் முகவுரைப் பகுதியில் குறிப்பிட்டிருத்தல் முறைமையாகும. ஐயர் அவ்வாறு செய்தாரல்லர். ஆனல், ஐயர் அவற்றை அறியார் என நினைப்பார் உளராயின், அவர் தம் பேரறிவுப் பெரும் பரப்புக்கும் நினைவாற்றலுக்கும் குறை நினைப்பவரே ஆவர். அவர்தம் நினைவாற்றல் 'அவதானிகள்' என்பார்க்கும் வாய்த்தற்கு அரிய வலிமையினது. ஆதலால் அறியாமைக் குறை ஐயர்மேல் ஏற்றுதல் அடாது. அதனை வெளிப்படுத்த அவர் விரும்பவில்லை! தமக்குமுன்னே ஒருவர் பதிப்பித்தார் என்பதைச் சுட்டுதலைத் தமக்குச் சிறப்பு என்றோ, தம் பதிப்புக்குப் பெருமை என்றோ அவர் கொள்ளவில்லை. ஆதலால் போற்றுதும் தூற்றுதும் தூரவிட்டார்!

1. அதன் தொடக்ககாலப் பதிப்புகள் இந்நெறியைப் போற்றினவல்ல.

"சேரமான் பெருமாள் நாயனார் செய்த சிலப்பதிகாரம்" என்று அச்சாகியதையும், சிந்தாமணியை வெளியிட்ட பவர் துரையின் கைப்பிரதியையும், மணிமேகலை மூலப் பதிப்பையும் என் சரித்திரத்திலே குறுப்பிடும் ஐயர் அப் பதிப்புகளை அறியார் என்று எவரே கூறமுடியும்? அறிந்தும் வெளியிட்டுரைக்க விரும்பினார் அல்லர் என்பதே உண்மை யாம் பழுதுபட்ட ஓர் ஒற்றை ஏட்டையும் மறவாது குறிக்கும் ஐயர், இவ்வாறு 'முற்பதிப்பாளர்களை மறைத்தது வேண்டத்தக்கதன்றாம்.

நாம் கருதும் கருத்து பலர்க்கும் தோன்றக்கூடியதே. அன்பு நண்பராக இருந்தோரும் சரி, பதிப்புவகையில் குறை கண்டு கூறினோரும் சரி இதனை ஐயர் செவிக்குப்படச் செய் திருத்தல் வேண்டும். அதற்குப் பயன் என்பதுபோலக் குறுந் தொகைப் பதிப்பு வெளிவந்தது

"இனி, இதனை அச்சிட்டு வெளிப்படுத்தலாம் என்று எண்ணியிருந்தேன். இடையே வாணியம்பாடி ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராக இருந்த தி. சௌ. அரங்கசாமி ஐயங்கார் என்பவர் குறுந்தொகைக்கு உரை எழுதி 1915-ஆம் ஸு பதிப்பித்து வெளியிட்டனர். அப்பால் குறுந்தொகை ஆராய்ச்சியில் எனக்கிருந்த ஊக்கம் சிறிது தளர்ந்தது. பிற நூலாராய்ச்சியிற் கருத்தைச் செலுத்தலானேன். பின்பும் சிலர் சில பத்திரிகைகளில் இந் நூலை வெளியிடுவதாகக் கேள்வியுற்றேன். 1933-ஆம் ஸு புரசபாக்கம் ஸர். எம் ஸி. டி. ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராகவுள்ள ஸ்ரீமான் வித்வான் சோ. அருணசல தேசிகரவர்கள் குறுந்தொகை மூலத்தை மட்டும் பதிப்பித்து வெளியிட்டார்கள்." என்று குறுந்தொகை முதற்பதிப்பு முகவுரையில் (12—8—1937 இல்) எழுதினார்கள். இதற்குமுன் ஏறத்தாழ 40 ஆண்டுகள் பதிப்புலகில் திகழ்ந்த ஐயர். இப்பொழுது இதனை ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கதாம்.

ஐயர் காலத்துக்குப் பின்னே நிகழ்ந்த நினைவு விழா ஒன்றில் இதனையும் பிறிதொன்றையும் ஐயர் வழி முறையில் வந்த பதிப்பாசிரியர் வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுகிறார்:

1 "ஐயர் பதிப்புப் பற்றிப் பல கண்டனப் பிரசுரங்கள் வெளிப்பட்டன. இப்பிரசுரங்களில் தமக்குச் சரி எனத் தோன்றியவற்றைத் தமது பிற்பதிப்புக்களில் உடன்பட்டுக் கொள்ளலாயினர். ஆனால் ஐயர் ஓரிடத்தேனும் இக்கண்டன வுரைகளால் இத்திருத்தமடைந்தது என்று தெரிவிக்கவே இல்லை. இதுவேயுமன்றி, தமக்கு முன்பு பிறர் பரிசோதித்து வெளியிட்ட பதிப்புக்களைப் பற்றியும் பெரும்பாலும் இவர் குறித்ததே இல்லை, உதாரணமாக சீவக சிந்தாமணியை இவர் வெளியிடுவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் 1868-இல் இக்காவியத்தின் நாமகள் இலம்பகத்தை அழ கான முறையிலே சிறந்த முன்னுரையோடு ரெவரெண்ட் பவர் (Rev Bower) என்பவர் பதிப்பித்துள்ளார். இதனைத் தெரிவித்திருந்தால் மிகவும் நலமாயிருக்கும். இங்ஙனம் தெரிவித்தல் பதிப்பாசிரியரின் கடமை."

ஐயர் பதிப்பின்மேல் எழுந்த கண்டனங்களையும், சாது சேசையா வலியுறுத்திப் பெற்றுக் கொண்ட உறுதி மொழியையும் முன்னர்க் கண்டுள்ளோம். அவ்வுறுதிமொழி யைப் பதிப்பிலும் காட்டினர் என்றே அமைதி கொள்ள லாம் என் சரித்திரத்தில் கண்டனங்களில் உண்மையான வற்றை ஏற்றுத் திருத்திக் கொண்டதைக் குறிப்பிடுகிறார். ஆனால் பதிப்பில் சுட்டுவது இல்லை! அதனைச் சுட்டுதல் வேண்டா என வெறுத்து விலக்கினர் என்றே கொள்ள வேண்டியுள்ளது. வேண்டாதவற்றை விரித்துக் கொண்டி ருக்க வேண்டா என்பது ஐயர் நோக்கு என அமையலாம். ஆனால் பதிப்பினைச் சுட்டாமை அவ்வகையினதன்று எனலே சால்பு.

இனி இவர் நூலாய்தலை மறைவாகச் செய்தமையும், சுவடிகள் எவருக்கும் வழங்க விரும்பாமையையும், பிறர் வழங்குவதையும் விரும்பாமையையும் தெளிவாக அறிந்து கூறுகிறார் வையாபுரிப் பிள்ளை. இக்குறைகளையும் எங்கோ கூறாமல் அவர்தம் நினைவுப் பொழிவிலேயே கூறியுள்ளார்.

---

1. தமிழ்ச் சுடர்மணிகள் பக். 295 - 6.

"இவர் தாம் அறிந்த இலக்கிய விஷயங்களை அச்சில் வெளியிடும்வரை அடக்கமாக வைப்பார் ஆயினர். தாம் செய்துவரும் தொண்டுகளிலும் அடக்கத்தையே கைக் கொண்டனர். இவர் இல்லத்திலுள்ள சுவடி நிலையத்தைக் கண்டுகளிக்கும் பேறுகூடக் கவி ரவீந்திரநாதர் முதலிய ஒரு சிலரே பெற்றுள்ளனர். பிறர் கண்களில் படும்படியாக நூல் ஆராய்ச்சி செய்வதை அறவே விட்டுவிட்டனர். அடக்கமாக பிறரால் ஒன்றும் காணமுடியாதபடி தனியாக அமைந்த ஓர் அறையில் தாமும் தமது சிஷ்யர்களுமிருந்து நூற் பரிசோதனையைச் செய்து வரலாயினர். ஆகவே, பெரும்பாலும் இன்ன காலத்தில் இன்ன நூல் வெளிவரும் என்பது இவர் சிஷ்யர்களுக்கன்றி ஏனையோர்களுக்குத் தெரியமாட்டாது. சிஷ்யர்களும் இந்த அடக்கத்தையே பெரும்பாலும் கையாண்டு வந்தனர். ஏட்டுப் பிரதிகளை அன்றி இவர்கள் படித்துவந்த அச்சுப் புத்தகங்களைக் கூட இரவல் வாங்க முடியாது. ஒருவேளை நூலின் பரிசோதனையில் தாம் ஈடுபட்டிருக்கும் சமயங்களிலே பிறர் வலிதின்வந்து தமது தொண்டு இடையீடின்றி நிகழ்வதற்குத் தடையாவர் என்ற அச்சத்தினால் இவ்வடக்கம் மேற்கொள்ளப் பட்டதாகவும் இருத்தல் கூடும். அல்லது அக்காலத்தில் இவரோடு பழகியவர்களில் சிலர் நேர்மையற்ற நோக்கத்துடன் இவரை அடிக்கடி தொந்தரவு செய்ததன் காரணமாக இந்த அடக்கமுறை கையாளப் பட்டிருக்கலாம். ஆனால் திறந்த மனத்துடன் தமது முயற்சியில் பிறர் மகிழ்வதைக் கண்டு உற்சாகத்துடன் தமிழாராய்ச்சி செய்யும் இன்பம் எல்லார்க்கும் எளிதில் வாய்ப்பதாகுமா? இல்லை. கல்வியாளர் பால் நம்பிக்கை கொண்டு அளவளாவுதலின் மகிழ்ச்சியும் எல்லார்க்கும் கிடைப்பதாகுமா? இல்லை!"

"இங்ஙனமே, பிரதிகள் தேடிப் பண்டை நூல்களைப் பதிப்பிடுவதில் முயன்றுவரும் அறிஞர்களுக்குப் பிரதிகளை ஈந்து உவக்கும் இன்பமும் எளிதில் கிடைப்பதா? இல்லை. ஐயருக்கு இந்த நல்லூழும் விதிக்கப் படவில்லை. இதனால் ஒருவருக்கும் இவர் தம்முடமுள்ள பிரதிகளைக் கொடுத்ததில்லை என்பது என் கருத்தல்ல. எனக்குச் சில பிரதிகள் உதவி

யிருக்கிறார்கள் என்பதை நன்றியுடன் பாராட்டுகிறேன். நானும் இவர்களுக்குப் பிரதிகள் உதவியுள்ளேன் கேட்போர் தகுதியையும் நோக்கத்தின் தூய்மையையும் மாத்திரம் கருதி இவர் பிரதிகள் உதவுவதில்லை விலக்கமுடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டால்தான் இவர் உதவுவார். அவ்வாறு தரும் பிரதிகளும் பெரும் பயனற்றனவாகவே இருக்கும். தாம் பல ஆண்டுகளாக அரிதில் தேடிவைத்த பொருளை ஒருவர் கேட்ட உடனே கொடுத்துவிட எளிதில் மனம் வருமா?''

வீட்டின் முகட்டில் இருக்கும் சிறுவெடிப்பும் கீறலும் வெளியேயிருந்து நோக்குவார்க்குப் புலப்படுவதில்லை. வீட்டின் உள்ளே புகுவார்க்கே புலப்படும் புறத்தே நின்று பார்க்கும் பார்வைக்கும் அகத்தே புகுந்து பார்க்கும் பார்வைக்கும் வேறுபாடு உண்டு. வெளியே அணிந்த சட்டைக்கும் உள்ளே அணிந்த உட்சட்டைக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டு! உட்சட்டை அழுக்காக இருந்தாலும் புறச்சட்டை மறைத்து விடுவது இல்லையா! அதுபோல் ஊடாடியிருந்து நெருங்கிப் பழகுவார்க்கே ஒவ்வொருவர் உண்மையும் புலப்படும். மற்றைப் பேச்சு எழுத்துகளால் புலப்படா! இதனை அறிஞர் வையாபுரிப் பிள்ளையின் உரை மெய்ப்பிக்கிறது, இவ்வுரை போலியுரை என்றோ, பொருந்தாவுரை என்றோ தூரவிட வேண்டுவதில்லை. ஏனெனில் அவர் நினைவு நாளில் அவர்தம் உழுவலன்பர்-உறவினர்-உடனுய்ந்தோர் மையத்தில் பேசிய உரை. ஆகலின்!

ஏடுகளை மூலைமுடுக்கெல்லாம் தேடித்தேடிக் கண்டு பயன்படுத்திக்கொண்ட ஐயருக்கு விரிவான எண்ணம் இவ்வகையில் ஏற்பட்டிருக்கவேண்டும். பிறர் பிறர் உதவியாலே செயற்கரியன செய்து முடித்த இச்செம்மலுக்குப் பிறர்க்கு உதவும்பான்மை கட்டாயம் இருநதிருக்கவேண்டும். அப்படி இருந்திருப்பின் தமிழன்னை இன்னும் எத்துணையோ அணிகலங்களை அணிந்து திருவோலக்கம் கொண்டிருக்க வாய்த்திருக்கும்.

தம் அன்புக்கு உரியவரும், முன்னைப் பதிப்பாசிரியரும், ஏடுகள் இறவாமல் காப்பதையே நோன்பாகக்

கொண்டு பதிப்பித்தவரும் ஆகிய தாமோதரனார் தம்மிடம் சிந்தாமணிச் சுவடி வேண்டி வந்ததையும், மறுத்து மறுத்துப் பின்னே தந்ததையும் விடியுமுன்னே சென்று உறுதிப் பிடியாகப் பெற்று வந்ததையும் என் சரித்திரத்தில் ஐயர் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தைப் பற்றி அரிய நூல் எழுதிய கனகசபைப் பிள்ளைக்குப் பெருங் கதைக் கையெழுத்துச் சுவடி வழங்கியதையும், அச்சுவடி வாராதே ஒழிந்ததையும் அதற்குப்பின் தமக்குச் சுவடிகளைத் தருதலில் அச்சம் உண்டாகியதையும் பெருங்கதை முகவுரையில் குறிப்பிடுகிறார். சிந்தாமணிப பதிப்புக்கு உதவிய துணை நீதிபதி கனகசபை முதலியார், தாமோதரனார்க்கு ஏடு தொகுத்து உதவ நேர்ந்ததை ஐயரிடம் உரைக்கும்போது ஐயருக்கு உவகையுண்டாகவில்லை; வரவேற்கவும் மனமில்லை [1]என்பதை அறியமுடிகின்றது அதே பொழுதில் அனந்தராமையரின் கலித்தொகைப் பதிப்புக்கு ஏட்டுச் சுவடிகள் தந்ததுடன், அச்சிடும் வகைக்குப் பொருளுதவியும் செய்ததையும் அறிகின்றோம். "சுவடிகள் தேடும் யாத்திரையை அப்பொழுது (1880) தொடங்கினேன்: இன்னும் ஓயவில்லை" என்று 'என் சரித்திர'த்தில் குறிப்பிடும் ஐயர் பிறர் பதிப்புக்கு ஏடு உதவாமை குறையேயாம். 'பெரிதால் உலகம் பேணுநர் பலரால்' என்னும் எண்ணத்தால் கலித்தொகையை வெளிக் கொணர்ந்ததாக அனந்தராமையர் கூறவில்லையா! அது போல் ஐயரும் எண்ணிப் பல பதிப்புகள் வருதற்கு வாய்ப்புச் செய்திருக்கலாமே என்று எவரும் எண்ணவே செய்வர். தமக்கு மட்டும் எவரும் ஏடு உதவவேண்டும் தாம் எவருக்கும் உதவமுடியாது என்பது நன்றேக்கன்று! ஐயர் பதிப்புக்குத் தாமோதரனார் பல சுவடிகளை வழங்கியுள்ளார். கனகசபைப் பிள்ளை வழங்கியுள்ளார்; இரா. இராகவ ஐயங்கார் உதவியுள்ளார். இன்னும் பதிப்புத்துறையில் பட்டழுந்தியிருந்தாரும் தாம் வைத்திருந்த சுவடிகளைப் பெருமையோடும் பெருந்தன்மையோடும் உதவியுள்ளனர்.

1. நல்லுரைக்கோவை II, 94 - 96.

வையாபுரிப் பிள்ளை வழங்கிய சுவடிகளும் உண்டு இவற்றை எண்ணிப் பார்க்கும் ஒருவர் தாம் மட்டும் பிறர்க்கு வழங்காதிருக்க வேண்டுமெனின் உள்ளத்தில் 'இறுக்கம்' இருக்கவே வேண்டும் என்பது ஒருதலை ஒருவேளை வையாபுரிப் பிள்ளை கூறியவாறு ஏமாற்றுவார் ஓரிருவர் இருந்திருக்கலாம். எல்லாரையும் அவ்வாறே எண்ணி ஒரு முடிவுக்கு வந்துவிடுவது நன்றன்றாம். 'ஈத்துவக்கும் இன்பம்' பொருளுக்கு மட்டுமன்றி, ஏட்டுக்கும் பொருந்துவதுதானே! "வானம் பொழியுது பூமி விளையுது; மன்னவனுக்கேன் காணி" எனக் கட்டபொம்மன் முழங்கிய முழக்கத்தை அவன் நாட்டு மக்களும் முழங்கியிருந்தால் விளைவு என்ன? ஏடு கொடாத கருமிகளைப் பற்றி வருந்திக்கூறும் ஐயர் அவ்வகையில் வள்ளன்மை காட்டாதொழிந்தது பெருமைதரும் செயலன்றாம் என்க.

இன்னும் குறிப்பிடத்தக்க இரண்டு செய்திகள் உள. அவற்றுள் ஒன்று வையாபுரிப் பிள்ளையால் குறிக்கப் பெறுவது. ஐயரிடம் எவரும் எதிர்பார்த்திருக்கவே இயலாத ஒன்று அது பிறர் பதிப்புக்கு ஏடு தருவாரையும தராதவாறு தடுக்க முனைந்ததாம். 'கொடுப்பது அழுக்கறுக்கும்' குற்றத்தைத் தெள்ளிதின் ஆராய்ந்த ஐயரா இவ்வாறு செய்வார்? எனத் திகைப்பே ஏற்படும்.

"தாம் உதவாதது மாத்திரமே அன்றி, பிற பேரறிஞர்களும் நூலைப் பதிப்பிடுவோர்க்கு உதவுதல் கூடாது என்று இவர் கடிந்துரைத்ததை நான் நன்கு அறிவேன். கம்பர் விலாசம் இராஜகோபாலையங்கார் அகநானூற்றைப் பதிப்பிட எடுத்துக்கொண்டபொழுது அவருக்கு சேது சமஸ்தான மகாவித்துவான் ரா. ராகவையங்கார் பிரதிகள் கொடுத்துப் பிறவாறும் உதவக்கூடாது என்று இவர் தடை செய்தனர். அகநானூற்றை ஐயர் தாமே பதிப்பிடக் கருதியிருந்தனர். ஒருவேளை, இக்கருத்து இவரைக் கடுமை உள்ளத்தாராகச் செய்திருக்கலாம் எனினும் இவ்வகையான மனப்பான்மைகள் ஐயருக்கு இருந்தமை தமிழ் மக்களது துர்ப்பாக்கியமே" என்று இதனைக் குறிப்பிடுகிறார் அறிஞர் வையாபுரியார்.

இக்குறிப்பை உரைக்கும் வையாபுரியார் எத்தகையர்? பதிப்புத் துறையில் பட்டறிவு மீக்கூர்ந்தவர் அரிய பதிப்புகள் பலவற்றை என்றும் நின்று நிலவப் படைத்தவர். புறத் திரட்டு, களவியல் காரிகை, சங்க இலக்கியம் முதலாய அரிய பதிப்புகளைப் பலரும் பாராட்டச் செய்தவர். முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்ததுடன் பல்கலைக் கழகத் தமிழகராதியின் தலைமையாளராக இருந்து நிறைவேற்றியவர். இவர்தம் ஏடுகள் பலப்பல பதிப்பாளர்களுக்கும் உதவப்பட்டுள்ளன. ஆராய்ந்து படியெடுத்துப் பதிப்பிக்கும் அளவிலும் பெருந்தன்மையுடன் வழங்கப் பட்டுள்ளன இவ்வாறே இரா. இராகவையங்கார் பெருந்தன்மையும் தலைமேல் தாங்கத்தக்கதாம். அரிதின் முயன்று தொகுத்த ஏடு எனினும், ஆராய்ந்து படியெடுத்து அச்சிடும் நிலையில் வைக்கப்பெற்ற கையெழுத்துப் படி எனினும் அந் நூல் வெளிவருதல் ஒன்றே கருதி உதவப்பெற்ற குறிப்புகள் பல உண்டு. ஆகலின் இவர்கள் பார்வையில் டாக்டர் ஐயர் செயல் குறையெனத் தோன்றுதலில் வியப்பில்லையன்றோ!

இன்னொரு குறிப்பு வருமாறு: ஐயர் பதிப்பித்த நூல்களின் முகவுரையில் மூன்றுவகைப் பெருமக்கள் பட்டியல் உண்டு. அவற்றுள் ஒன்று, ஏடு தந்தவர்கள் பட்டியல்; மற்றொன்று பொருளுதவியவர்கள் பட்டியல்; இன்னொன்று பதிப்பித்தற்குத் துணையாக இருந்து உதவியவர்கள் பட்டியல். இம்மூவகைப் பட்டியல்களுள் முன்னிரண்டு பட்டியல்களுள் இனங்கடந்த ஒரு பெருநிலையைக் காண முடிகின்றது மூன்றாவது பட்டியலில் பெரிதும் அந்நிலையைக் காண்டற்கு இயலவில்லை. [1]பிறர் ஏமாற்றிவிடுவர் என்று அவர் அஞ்சித் தம்மவரையே உடன் வைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால், இம்முடிபுக்கு வந்ததோ, இம்முறையைச் சிக்கெனக் கொண்டதோ தமிழ் ஐயர் தகுதிக்கு உதவுவதாக இல்லை! அவரிடமே காணற்கியலாத தன்மையைப் பிறரிடம் காண்டற்கு

1. அச்சுத் திருத்தம் செய்த சோடசாவதானம் சுப்பராய செட்டியார் நாமகள் இலமபகத்தைத் தனியே அச்சுப் போட்டுவிட்டார் என்பது ஐயர் குறிப்பு. ஆனால் அப்பகுதி நெடுங் காலத்துக்கு முன்னரே அச்சில் வந்ததுண்டு. என் சரித்திரம் - 832.

எவ்வாறு இயலும் என்னும் எண்ணம் அருப்புதல் இயற்கை! வளர்ந்தவர்கள் வழிகாட்டியாகத் திகழவில்லை என்றால் வழியெல்லாம் கல்லும் கரடும் முள்ளும் முடலுமேயாம்!

நிறையை நெஞ்சாரப் பாராட்டவேண்டும் குறையையும் துணிந்து கூறவேண்டும். இரண்டும் வேண்டுவனவே. "பிறர் பிறர் சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்தல்" தனிவாழ்வின் அமைதிக்குத் தக்கது ஆகலாம். ஆனல் பொது வாழ்வுக்குப் பொருந்தியது ஆகாது." குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளலே" பொது வாழ்வுக்கு நலம் பயக்கும்.

இப்பகுதியில் நிறையும் கண்டோம்; குறையும் கண்டோம். ஆயினும் இவர்கள் செய்த பணியைக் குறைத்து மதிப்போம் அல்லோம். செயற்கரிய செய்த செயல்வீரர்கள் என்று போற்றிப் புகழ்வோம். இதற்கு முடிவுரையாக வையாபுரியார் சாமிநாதையர்க்குக் கூறிய உரையையே கூறலாம். [1]நிறைமதியின் ஒளி, மறுவினல் குறைந்துவிடுமா? குறைகள் அனைத்தும் இவரது அரும்பெருந் தொண்டுகளுக்குமுன் மறைந்து விடுகின்றன."

1, தமிழ்ச் சுடர் மணிகள் பக். 299.

13. செய்யத்தக்கன

பழஞ்சுவடிகளை ஆராய்தல், செவ்விதிற் பதிப்பித்தல் ஆகிய இரண்டு பணிகளும் உடனடியாகச் செய்யத்தக்கன ஆகும். இவை, அரசும், தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும் இணைந்து ஆராய்ந்து செய்யத் தக்கனவாம். 'அரசு செய்க' எனப் பல்கலைக் கழகங்கள் வாளா' இருப்பதோ, 'பல்கலைக் கழகங்கள் செய்க' என அரசு புறக்கணிப்பதோ தமிழ் உலகுக்குக் கேடு பயப்பதேயாம். அதிலும் குறிப்பாக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையும், பல்கலைக் கழகங்களின் தமிழ் ஆராய்ச்சித் துறையும் இவற்றை மடியின்றிச் செயலாற்றுதல் வேண்டும்.

"குடிசெய்வார்க் கில்லை பருவம்' மடிசெய்து
மானம் கருதக் கெடும்"

என்பது குடிமைக்கு மட்டுமின்றி, மொழிக்கும் பொருந்திய மணிமொழியேயாம்.

பழஞ்சுவடிப் பயனைக் கிடைக்கும் அளவிலேனும் பழுதின்றிப் பெறுதற்கு முதற்கண் இரண்டு குழுக்களை அமைத்தல் வேண்டும் ஒன்று: பழஞ்சுவடி ஆய்வுக்குழு; மற்றொன்று பதிப்புக்குழு.

பழஞ்சுவடி ஆய்வுக் குழுவின் கடமைகள சிலவற்றை முறையே காண்போம்:

க. பழஞ் சுவடிகள் தொகுத்தல் :

இப்பொழுது சுவடிகள் தொகுத்து வைக்கப் பெற்றுள்ள இடங்களாக இருப்பன நான்கே. அவை சென்னை அரசினர் கையெழுத்துச் சுவடி நிலையம், தஞ்சை சரசுவதி மகால், மதுரைத் தமிழ்ச் சங்கம், திருவான்மியூர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் என்பன இன்னும் சில மடங்களிலும் புலமையாளர் இல்லங்களிலும், சில

அமைப்புகளிலும் உளவாயினும் அவற்றுள்ள சுவடிகள் ஏவையெென விளங்கத்தக்க குறிப்புகள் இல்லை; பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புடையனவும் அல்ல.

நாட்டில் உள்ள சுவடிகளெல்லாம் தொகுக்கப்பட்டு விட்டன என்று கூறுவதற்கு இல்லை இது பழந்தமிழ்ச் சுவடி களையும் மனத்துக்கொண்டு கூறுவதேயாம். சி. வை. தாமோ தரம் பிள்ளைக்குக் கிடையாத கலித்தொகைச் சுவடிகள் இ. வை. அனந்தராமையர் பதிப்புக்குக் கிடைத்துள்ளன. அரங்கனார் குறுந்தொகைப் பதிப்புக்குக் கிடையாத பல சுவடிகள் டாக்டர் ஐயருக்குக் கிடைத்துள்ளன அவர் பதிப் புக்குக் கிடையாத புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்துச் சுவடிகள் ஒளவை துரைசாமிப் பிள்ளைக்குக் கிடைத் துள்ளன. இவர்கள் அனைவர் பதிப்புக்கும் கிடையாத சுவடி களும் வையாபுரிப் பிள்ளைக்குக் கிடைத்துள்ளன. மைசூர், கேரளப் பகுதிகளிலும் பழஞ்சுவடிகள் கிடைத்தற்குண் மையை அவர் தெரிவிக்கிறார் இவ்வனைவர் பதிப்புகளுக்கும் எட்டாத குறுந்தொகைச் சுவடி ஒன்று பேராசிரியர் கந்த சாமியார்க்குக் கிடைத்துள்ளது. அச்சுவடியைக் கொண்டு அரங்கனார் குறுந்தொகைப் பதிப்பைச் செப்பப்படுத்திப் பாடவேறுபாடும், ஒப்புமைப் பகுதிகளும் குறித்துள்ளார். அதன் தலைப்பில், "இராமசாமிபுரம் [1]மூவரையர் வண்ணம பாடிய பூண்டியப்பப் புலவர் ஏடு பார்த்துத் திருத்தியது" என்று எழுதியுள்ளார். இதன் விளக்கம் மேலே காண்போம்.

இங்குக் கூறியவற்றால் சுருக்கமாக அறியும் செய்தி ஒன்றேயாம். ஏடுகள் அனைத்தும் இன்னும் தொகுக்கப் பெற்றில தொகுத்தற்கு இன்னும் வாய்ப்பு உண்டு என்ப தேயாம். இதனை இக்காலத்திலேனும் தவறவிடாமல் தொகுத்தல் வேண்டுமல்லவா! கண் காணக் கண்ட வளையா பதியும், இருந்த அடையாளம் குறித்த தகடூர் யாத்திரை யும் ஒழிந்ததை முன்னே கண்டுள்ளோம். புறத்திரட்டில் சுட்டப்பெறும் இரும்பல் காஞ்சி, குண்டலகேசி, தகடூர்

1. இப்படியொரு புலவர் பெயரும், நூலும் இலக்கிய வரலாறுகளிலும் புலவர் வரலாறுகளிலும் இதுகாறும் இடம் பெற்றில.

யாத்திரை, பெரும்பொருள் விளக்கம், முத்தொள்ளாயிரம், வளையாபதி, ஆசிரிய மாலை, சாந்தி புராணம், நாரதசரிதை என்பன சில பாடல்கள் கிடைத்த அளவில் ஒழிந்தன களவியல் காரிகையால் அறியப்பெறும் அகத்திணை, அரையர் கோவை, இன்னிசை மாலை, ஐந்திணை, கண்டன் அலங்காரம். கிளவித் தெளிவு, கிளவி மாலை, கிளவி விளக்கம், கோயில் அந்தாதி, சிற்றெட்டகம், தில்லையந்தாதி, நறையூர் அந்தாதி, பல்சந்தமாலை, மழவை எழுபது, வங்கர் கோவை முதலாயின காணக்கிடைத்தில. இன்னும் சிலப்பதிகார உரை, யாப்பருங்கல விருத்தியுரை இவற்றால் அறியப்பெற்று நாம் காணும் பேறு வாய்க்காத நூல்கள் மிகப்பல. இவையெல்லாம பலங்காலத்தே மறைந்துபோன நூல்கள் அல்ல; இடைக் காலத்தும் பிற்காலத்தும் பதிப்புமுறை வந்த கடைக்காலத்தும் மறைந்தனவே. இவற்றுள் சில, ஏடுகளைத் தொகுத்தலால் கிடைக்கக்கூடும். அவ்வாறு எந்நூலையோ தேடிச் சென்ற இடத்தில் எந்நூலோ அருமையாகக் கிடைத்துள்ளது என்பதை முன்னர் அறிந்துள்ளோம்.

"ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கலாம்" "அன்றி அது வரினும் வந்து" எய்தலாம் அல்லவா! ஆதலால் ஆய்வுக் குழுவினர் செய்யவேண்டிய முதற்பணி பட்டி தொட்டிகளிலும், நாடு நகரங்களின் மூலை முடுக்குகளிலும் இருக்கும் ஏட்டுச் சுவடிகளைத் தொகுக்கும் கடமை மேற்கொள்ளவேண்டும். அதற்கு வேண்டும் வாய்ப்புகளையெல்லாம் அரசு வழங்குதல் வேண்டும்.

உ. பழஞ்சுவடி பட்டியல் அமைத்தல் :

பழஞ்சுவடி ஆய்வுக் குழுவினர் செய்யத்தக்க இரண்டாவது செயல் இஃதாகும். தாம் தொகுத்த நூல்களைப் பட்டியலிட்டு விளக்கத்துடன் குறிப்பெழுதுதல் வேண்டும் ஏட்டின் பெயர், பக்க எண்ணிக்கை, பாடல் முதலியவற்றின் அளவு, பாடியவர் - உரையெழுதியவர் - படி எடுத்தவர் - பேணிப் போற்றியவர் - வழங்கியுதவியவர் - காலம் ஆகியனவெல்லாம் அக்குறிப்பில் தவறாமல் இடம்பெறச் செய்தல் வேண்டும். மற்றும் தம் தொகுப்புள் இடம்பெறாமல் மற்றை மற்றை அமைப்புகளில் இருக்கும் சுவடிகளின் பட்டியலும்

தொகுத்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வமைப்பினர் பட்டியல் வைத்திருப்பினும், வைக்காதிருப்பினும் பழஞ் சுவடி ஆய்வுக் குழுவினர் ஆங்குச் சென்று பட்டியல் செய்து கொள்ளுதல் வேண்டும். தொல்காப்பியத்தைப் பற்றியோ, திருக்குறளைப் பற்றியோ எத்தனை சுவடிகள் இந்நாட்டில் உண்டு என்பதை அறுதியிட்டு உரைக்கும் அளவில் அவ் வெண்ணிக்கை தெளிவு செய்யப் பெறுதல் வேண்டும் ஊரவர் பதிவுப் பத்திரங்களின் படிகள் அனைத்தும் பதிவகத்தில் இருக்கின்றன அல்லவா! அவ்வாறு இல்லையாயினும், எங் கெங்கு எவ்வெச் சுவடிகள் இருக்கின்றன என்னும் விளக்கமேனும் தெரிய வேண்டுவதாம் அதற்குப் பட்டியல் படைத்து வைத்துக் கொள்ளாமல் இயலாதே.

க. படி எடுத்தல்:

பழஞ்சுவடி ஆய்வுக் குழுவினரின் மூன்றும் கடமை படி எடுத்தலாகும். சுவடிகள் காலத்தின் வாய்ப்பட்டு அழிந்துபோதல் இயற்கை. அந்நிலைப்பட்ட சுவடிகளைப் படி யெடுக்காமல் வைத்துவிட்டால் தாமோதரனார் கூறியது போல, 'கம்பையும் நாராசமுமே' மிஞ்சும்! ஆதலால் படி யெடுப்புப் பணி தொடர்ந்து நடந்துகொண்டே இருத்தல் வேண்டும். இன்ன நூலைப் படியெடுக்க இவ்வளவு பணம் அல்லது இவ்வளவு தவசம் என்று பேசி அதற்கேற்ப எழுதும் கூலி எழுத்தாளர்கள் முன்னே இருந்ததுண்டு சில செல்வர் கள் அத்தகையவர்களுக்குக் கூலி தந்து படியெடுத்து வைத் துப் படிப்பார்க்கு இலவசமாக வழங்கியதும் உண்டு. மங்கல மான விழாக்களின்போது சுவடிக்கொடை கொடுப்பதும் வழக்கத்தில் இருந்தது. இத்தகைய வகையில் கிடைத்த படி கள் செவ்விதின் அமைந்திருக்கும் என்பது அரிதேயாம். எழுதுபவரும் தமக்கென எழுதார். எழுதுவிப்பவரும் தமக் கெனக் கருதார். கூலியும் கொடைப் பெருமையுமே அவர் கள் நோக்கங்களாக அமைந்து விடுதலின் படியெடுப்பில் முழு அக்கறையும் செப்பமும் காட்ட இடமில்லா தொழி கின்றன ஆனால் இவ்வறிஞர்குழு அத்தகையதன்று. ஆகலின், பிறவிக் கடமை என மகிழ்ந்தும் தெய்வத் திருப்பணி எனத் தெளிந்தும் கடமை புரிவர் எனக் கொள்ளலாம். ஏனெனில்

அத்தகைமையாளரே இடம் பெற்றிருத்தல் பயன்படும் ஆகலின், இனி அறிவியல் வளர்ச்சி மீக்கூர்ந்த காலம் இஃது ஆகலின், அதனை ஒன்றுக்கு மூன்று நான்காகத் தட்டச்சிட்டுக் கோப்பாக்கி வைத்துக்கொள்ளலும் கூடுவதே. இதற்குரிய வாய்ப்பும் பழஞ்சுவடி ஆய்வுக் குழுவினர்க்கு வேண்டுவதேயாம்.

ச. ஒப்பிட்டு ஆராய்தல்:

ஒப்பிட்டு ஆராய்தல் என்னும் இப்பணி இருகூறுபட்டதாகும் ஒன்று ஏடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து பாடவேறுபாடு காணல். மற்றொன்று அச்சிட்ட சுவடிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து பாடவேறுபாடும், திருத்தமும் காணல்

"ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்பதுபோல ஒன்றின் ஒன்று உயர்ந்து செல்லும் செயன்மையுடையது பழஞ்சுவடி ஆய்வுப் பணியாகும். அதில் ஒப்பிட்டு ஆராய்தல் என்பது ஒத்த உள்ளத்தாரும் உணர்வாரும் விரும்பிச் செய்யும் பணியாகும். ஒப்புக்குச் செய்வார் பணி பயன் தருவதாகாது. ஒருவரே பல படிகளை ஒருங்கு வைத்துக்கொண்டு ஆராய்தலும் இடர்ப்பாடுடையது மட்டுமல்லாமல் செப்பமான பணியும் ஆகாது 'கல்விக்கு இருவர்' என்பது இவ்வகையால் மிகக் கருதத்தக்கது. இன்னும் ஏட்டுச் சுவடிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இருவர் என்ற எண்ணும் மாறுபடக் கூடியதாம்.

[1]"ஒரே சமயத்தில் நாலைந்து மாணுக்கர்கள் ஆளுக்கு ஒரு பிரதி வைத்துக்கொண்டு பாடபேதம் பார்க்கும்போது வேலை மிகவும் வேகமாக நடைபெறும் அதில் சிறிதும் சிரமமே தோன்றாது. பகலோ இரவோ ஏதாயிருந்தாலும் சலிப்பின்றி ஆராய்ச்சி செய்து வந்தேன்" என்று ஐயர் எழுதுவது அறியத்தக்கது.

1. என் சரித்திரம் பக், 752,

"சிந்தாமணியைப் பரிசோதிக்கையில் நான் படித்த ஒவ்வொரு வரியும் பாட்டும் சரியாக உள்ளன என்றே ஐய்யில்லாமல் ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார். அவர்பால் ஐயமுற்றுச் சிந்தாமணியில் இராத வேறு நூலிலுள்ள பாட்டொன்றைச் சொல்லிச் சரியாக இருக்கிறதா என்று கேட்டேன். அவர் சரியென்று மிக்க துணிவாகச் சொன்னார். அதன்பின் அவரை மெல்ல விலக்கிவிட்டேன்" என அவரே [1] எழுதுகின்றார். இதனால் ஏடு ஒப்பிட்டுப் பார்க்கக் கிடைக்கும் துணையின் அருமை புலப்படும். அத்துணை நயமாக வாயக்காவிடின் ஏடு தொகுத்தும் ஆவதென்ன? காத்தும் ஆவதென்ன? ஒப்பிட்டுப் பார்த்தும் படியெடுத்தும் தாம் ஆவதென்ன?

ஒப்பிடுதற்கு முன்னே செப்பமான ஒரு சுவடியைப் படியெடுத்து வைத்திருத்தல் வேண்டும். அதில் ஒப்பிட்டுக் காணுங்கால் அறியவரும் பாடவேறுபாடுகளையும் திருத்தங்களையும் குறித்துக் கொண்டு வருதல்வேண்டும் விடுபெற்ற பாடல்களோ, அடிகளோ சில அரிய சுவடிகளால் நிரப்பப் பெறுதலும் உண்டு. இதுவே பொருந்துவது என்று கொள்ளத்தக்க திருத்தங்களும இடைக்கக்கூடும். அவற்றை இச் சுவடி வழியே பெற்றதென்று குறிப்பிடுதலும் வேண்டும். அத்தகைய குறிப்பு மீண்டும் ஆய்வார்க்கும துணையாகும். நூலின் முன்னும் பின்னும, இடை இடையேயும் ஏடு எழுதியோர்தம் பெயர், எழுதிய காலம், எழுதுவித்தோர் ஆகிய குறிப்புகளைப் பொறித்தலும் உண்டு. அத்தகையவற்றையும் விடாமல் குறித்துக்கொள்ளல் வரலாற்றுக்குப் பயன்தரும். படி எடுத்தல் ஒருவர் செப்பத்தால் கைகூடும். ஆனல் ஒப்பிட்டுப் பார்த்தல் பலரின் ஒருமித்த நன்னோக்கால் நிறைவேறுவதாம். இதற்கேற்பப் பதிப்புக குழு அமைதல் வேண்டும் இதுகாறும் கூறியவை ஏட்டுச் சுவடிகளை ஒப்பிட்டுக் காணுதற்கே இனி அச்சுப் படிகளைக் காணுதற்கும் இந் நிலைமை தகும். ஆனல் அச்சுப்படிகளை, ஏட்டுப் படிகளை ஒப்ப ஒப்பிட்டுக் காணுதலால் பயனுண்டோ என்று நினைப்

1. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் பக். 174.

யாரும் உளராகலாம் ஆனுல் பழம்பதிப்புத் தொடர்புடையார் அவ்வாறு கருதார். முதற் பதிப்புக்கும் ஏடுகளை மீண்டு ஆராய்ந்து வெளியிட்ட மறு பதிப்புக்கும் உள்ள வேறுபாடுகளை ஒப்பிட்டுக் கண்டாரும் அவ்வாறு கருதார். ஏடுகளுடன் ஒப்பிட்டுக் காணல் எவ்வளவு முதன்மையானதோ அவ்வளவு முதன்மையானது அச்சிட்ட நூல்களுடன் ஒப்பிட்டுக் காண்பது என்க. இதனை எடுத்துக் காட்டால் விளக்குதல் பயன்படும்; குறுந்தொகையைச் சான்ருகக் கொள்வோம். அதன் 266-ஆம் பாடல்,

"நமக்கொன் றுரையா ராயினும் தமக்கொன்
றின்னா விரவி னின்றுணை யாகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே"

என அரங்கனுர் பதிப்பில் உள்ளது. அதன் அடிக்குறிப்பாக "இப்பாட்டு ஆறடியினதாதல் உணர ஒரு பிரதியில் ச, ரு, அடிகளுக்கு இடம் விடப்பட்டிருக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் பதிப்புக்குப் பின்னே 1930-இல் புரசபாக்கம் டி. என். சேசாசல ஐயரின் கலா நிலையப் பதிப்பு வெளிவந்தது. அதில் அரங்கனுர் குறிப்பு கொள்ளப் பெறவில்லை. செய்யுளில் குறையுள்ளதென்பதனை ஒருவகையானும் வெளிப்படுத்தாமல் உரையெழுதிச் சென்றனர். அதன் பின்னே வந்த அருணுசல தேசிகர் பதிப்பிலும் (1933) இப்பாடல் இவ்வாறே இருந்தது. சாமிநாதையரின் குறுந்தொகைப் பதிப்பு 1937-இல் வெளிவந்தது. அது, ஒன்பது சுவடிகள் கொண்டு ஆராய்ந்த பதிப்பு. ஆயினும் அரங்கனுர் குறிப்பு நிரம்பவில்லை அரங்கனுரும் ஒரு பிரதியில் இடம் விடப் பெற்றிருந்ததைத்தானே குறிப்பிடுகிருர். அத்தகையதொரு பிரதி கிடைத்தால்தானே விடுபட்டது கிட்டும்! இப்பதிப்புகளையெல்லாம் ஒருங்கு வைத்தாராய்ந்த வையாபுரிப் பிள்ளை ஏட்டுச் சுவடிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தார். அப்பொழுது விடுபெற்ற ஓரடியைக் கண்டார். அவ்வடி, 'மறப்பரும் பணைத்தோள் மரீஇ' என்பது எனக் குறிப்பிடுகிருர். அச்செய்யுளை,

"நமக்கொன் றுரையா ராயினும் தமக்கொன்
றின்னா விரவி னின்றுணை யாகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
மறப்பரும் பணைத்தோள் மரீஇத்
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே"

என்றிருத்தல் வேண்டுமென அறிந்தேன்" என்று[1] குறிப்பிடு கிறார்.

குறுந்தொகையுள் 113-ஆம் பாட்டு,

"ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குரு கல்ல தியாவதும்
துன்னல்போ கின்றாற் பொழிலே யாமெம்
கூழைக் கேர்மணம் கொணர்கம் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே"

என அரங்கனார் பதிப்பில் உள்ளது. இதே பாடல் 5-ஆம் அடி "கூழைக் கெருமண் கொணர்கம் சேறும்" என ஐயர் பதிப்பில் உள்ளது. 'கூழைக்கேர் மணங்குறுகம்' 'கூழைக் கேரு மணங்குணர்கம்' என்பன பாடவேறுபாடுகளாகக் காட்டப் பெற்றுள்ளன அரங்கனார், 'ஏர்மணங் கொணர் கம்' என்பதற்கு, 'அழகிய மணமுள்ள மலரைக் கொள்ள' எனப் பொருள் எழுதினார். இராமரத்தினம் ஐயரும் அவ் வாறே எழுதினார். சாமிநாதையர், "கூந்தலுககு இட்டுப் பிசையும் பொருட்டு எருமண்ணைக் கொணர்வேமாய்" என்று பொருளும், "எருமண் என்றது களிமண்ணை கூந்தலி லுள்ள எண்ணெய்ப்பசை சிக்கு முதலியன போகும் பொருட் டுக் களிமண்ணைத் தேய்த்துக் கொண்டு மகளிர் நீராடுதல் வழக்கு; இதனைச் சிற்றூர்களில் இன்றுங் காணலாம்" என விளக்கமும்.

"கூழைபெய் எக்கர்" (குறுந். 372;5)
"கூந்தல் நறுமண்" (பெருங். 1.40:28)

1. தமிழ்ச் சுடர்மணிகள்,

என்பவற்றைப் பார்க்க என மேற்கோளும் எழுதுகின்றார். இயற்கையொடு பொருந்தியது என எண்ணுமாறும், பிறரும் கூறியது எனக் கொள்ளுமாறும் ஐயர் உரை, விளக்க, மேற்கோள்கள் அமையக் காணினும் பழஞ்சுவடி ஒன்று அதிலுள்ள தவற்றைத் தெள்ளிதில் காட்டுதலைக் காண்கின்றார் வையாபுரியார். "எருமண் கொணரச் செல்வதாகக் கூறுவது. பெருமையன்று; தகுதியும் அற்றது" என்று குறிப்பிடுகிறார். 'எருமணம்' என அஃதிருக்கவேண்டும் எருமணம் - செங்கழுநீர்.

அரத்த முற்பலம் செங்குவளை யெருமணம்
கல்லா ரமும்செங் கழுநீரும் அதன்பெயர்"

என்பது பிங்கலந்தை. கூந்தலில் முடிவதற்குச் செங்கழுநீர் கொணரச் செல்வதாகக் குறிப்பதே தகுதி என்கிறார். "எரிப்பு-சிவப்பு; எருப்பு-சிவப்பு; எரிபு நிறத்தவன்-சிவந்தவன்; எர்ரப் பிறக்கடை-சிவந்தான். எர-தெலுங்கு; கன்னடம்" எனச் சொல் விளக்கம் காட்டியும்[1] நிறுவுகின்றார். இப்பொழுது நாம் ஐயர் காட்டிய பாடவேறுபாடுகளை ஊன்றி நோக்குவோமாயின் 'எருமணம்' என்பதை ஏற்போம். 'கூழைக் கேருமணம்' என்பதிலுள்ள 'கே' என்பது ஏட்டில் ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு இரண்டற்கும் பொதுக் குறியீடுதானே. அதனை 'கெ' எனவும் படிக்கலாம் அல்லவா! பொருள் புலப்பாடு பாடத்தைச் செவ்வைப்படுத்துகின்றது என்க இத்திருத்தங்கள் சமாசம் பதிப்பித்த சங்க இலக்கியப் பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

குறுந்தொகை 372-ஆம் பாடல் இரண்டாம் அடி, "கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பை" என்று அரங்கனார் பதிப்பிலும் ஐயர் பதிப்பிலும் உள்ளன இப்பகுதிக்குப் பாடவேறுபாடும் காட்டினர் அல்லர் இப்பாடற்குப் பொருள் விளங்காமையால் எழுதவில்லை எனக் குறிப்பிடுகிறார் அரங்கனார். ஐயர், "விரைவையுடைய காற்றுக் கூட்டிய உயர்ந்த வெள்ளிய மணற்குவியல்" எனப் பொருள்

1. இலக்கிய தீபம்.

எழுதுகிறார். 'அடும்பிவர் மணற்கோடு' என்பதை (குறுந். 248) மேற்கோளும் காட்டுகிறார். 'நெடுவெண் குப்பை' என்பதற்குக் கானலைநோக்கி இப்பொருள் கொண்டார் என்றே சொல்லவேண்டியுள்ளது. 'மணற்கோடு' போல 'வெண் குப்பை' பொருள் தரவில்லை. இதற்குரிய செவ்விய பாடம் மூவரையர் வண்ணம் பாடிய பூண்டியப்பப் புலவர் ஏட்டில் இருக்கக்கண்ட கந்தசாமியார், அரங்கனார் குறுந்தொகைப் பதிப்பில் திருத்தியுள்ளார். "கடுவளி தொகுத்த நெடுமணற் குப்பை" என்பது [1]அத்திருத்தம் இவ்வாறு அவ்வோர் ஏட்டிற் கண்டு தாம் பயின்ற நூலிலே பாடவேறுபாடும், திருத்தமும், மேற்கோளும், ஒப்புமையும் குறிப்பிட்டுள்ளார். அவை மிகப் பலவாம். அவற்றைப் பல்வேறு பதிப்புகளுடன் ஆயுங்கால் பல நல்ல பாடங்கள் கிடைக்கக்கூடும். இத்தகைய நிலையில் அறிஞர்கள் வைத்துப் பயின்ற நூல்களும் ஏடுகளே போலப் பயன்மிக்கனவாம். மறைமலையடிகளார் பயின்ற நூல்களில் குறிப்புகள் மிக்குள. ஆகலின் பதிப்பிட்ட நூல் என்ற அளவில் அமையாது ஏட்டுப் படிகளுடன் ஒப்பிட்டு ஆராய்தல் வேண்டும். அவ்வாறு ஆராய்ந்து குறிப்புகள் எழுதப்பெற்ற நூல்கள் கிடைக்குமாயின் அவற்றையும் பொன்னேபோல் போற்றிப் பயன்கொள்ள வேண்டும். இன்னொன்றையும் இவ்விடத்தே குறிப்பிடல் வேண்டும். ஒரு திருந்திய ஏட்டுச்சுவடியின் பயன் அந்த நூலைப் பொறுத்த அளவில் அமையாது. தொல்காப்பியம், முதலான நூல்களில் மேற்கோளாக அமைந்த பாடல்கள் மிகப்பல. அவற்றைச் செவ்விய சுவடி கொண்டு ஆராயுங்கால் கிடைக்கும் திருத்தம் மூல நூலுக்குச் சிறப்பளிக்கும்

புறத்திரட்டு என்னும் அருமையான நூலை முதற்கண் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து பதிப்பித்தவர் அறிஞர் வையாபுரிப் பிள்ளை. அப்பதிப்பின் ஆய்வால் பிற நூல் பாடங்கள் திருந்திய சிறப்பினை விளக்கியுள்ளார்.

"ஓர்த்த கருத்தும் உணர்வும் உணராத
மூர்க்கர்க்கு யாதும் மொழியற்க - மூர்க்கன்றான்

1. இத்திருத்தம் இதுகாறும் எப்பதிப்பிலும் இடம் பெறவில்லை,

கொண்டதே கொண்டு விடாணுகும் ஆகாதே
உண்டது நீலம் பிற''

என்னும் பழமொழிப் பாட்டு பதிப்புதோறும் வேறுபாடற இவ்வாறே வந்துளது. ஆனால், இதன் பழையவுரை, "தான் ஓர்த்த கருத்தினையும் உலகொழுக்கத்தினையும் அறியாத மூர்க்கர்க்கு" என்று வருகின்றது உணர்வும் என்பதற்கு உலக ஒழுக்கத்தினையும் என்று பொருள் கூறப்பட்டதாகல் வேண்டும்! "ஓர்த்த கருத்தும் உலகும் உணராத மூர்க் கர்க்கு" என்பது இப்போது பிரதிகளால் அறியப்படுகிறது. இது மிகவும் பொருத்தமாயுள்ள தென்பதை அறிஞர்கள் எளிதின் உணர்வார்கள்." என்று குறிப்பிடுகிறார். இன்னும்,

"மாடம் அழிந்தக்கால் மற்று மெடுப்பதோர்
கூட மரத்திற்குத் துப்பாகும்''

என்னும் பழமொழிப் பாடலையும் குறிப்பிடுகிறார். இதன் பழையவுரையில் 'மாடம் செய்கையின்றி அழிந்தக்கால் அதன்கண் மரமுதலாயின உறுப்புக்கள் பின்னையும் எடுப்ப தொரு கூடத்துக்கு உதவும் எனப் பொருள் 'காணப்படு கிறது... பாடமே பிழையாதல் வேண்டும். உண்மையான பாடம்:

"[1]மாட மழிந்தக்கால் மற்று மெடுப்பதோர்
கூடகா ரத்துக்குத் துப்பாகும்''

என்பதாகும். இதில் [2]கூடகாரம் என்பது கூடம் எனப் பொருள்படும்'' என்கிறார் இத்திருத்தங்கள் புறத்திரட்டுச் சுவடியால் பெற்றவையாகும். இப்பயன்களை நோக்குவார் நாம் குறிப்பிட்ட இருவகை ஆய்வுகளையும் ஏற்பர் என்பது தெளிவு.

ரு. பாடவேறுபாடும் திருத்தமும் தொகுத்தல் :

ஏட்டுச் சுவடியொடும் நூற் சுவடியொடும் ஆய்ந்து பாடவேறுபாடுகாண்டலாலும், திருத்தங்கள்பெறுதலாலும்

1. மாடமிடிந்தக்கால், மாடமடிந்தக்கால் என்பன பா, வே.
2. பாண்டியன் கூடகாரத்துத்துஞ்சிய.

பயனென்ன? அவை அவ்வளவில் அமைதலும், ஆராயாமல் விடுதலும் ஒப்பானவையே. ஆராய்ந்த பாடவேறுபாடு களும் திருத்தங்களும் நூல் வரிசையில் தனித்தனியே தொகுத்தல் வேண்டும். அத்தொகுப்பு பதிப்பாளர்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் பயன்படும் வகையில் அச்சிடப்பட வேண்டும். இத்தகைய முயற்சி இந்நூற்றாண்டின் தொடக் கத்திலேயே மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது. உருப்படியான செயலும் செய்திருக்கிறது. பாடவேறுபாடு செந்தமிழ் இதழில் முறையே வெளிப்படுத் தவும் பெற்றுள்ளது. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடு வோம். ஒன்று இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம் என்பது. மற்றொன்று மகாபாரதச் செய்யுட் பாடாந்தரம் என்பது. முன்னது யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவன் சி.கணேசையரால் ஆய்ந்துதரப்பெற்றது பின்னது சேற்றூர் இரா. சுப்பிரமணியக் கவிராயரால் ஆய்ந்து வெளியிடப் பெற்றது.

"இராமாவதாரம் என்பது இராமனுடைய அவதா ரத்தை உணர்த்துவதாகிய ஒரு நூல். இதுகாப்பியங் களுள்ளே சிறந்ததாகத் தமிழ்நாட்டு அறிஞர்கள் எல்லாரா னும் மதிக்கப்படுவது. இதனைச் சிலர் மூலபாடமும், சிலர் மூல பாடத்தோடு உரையுமாகப் பலர் அச்சிட்டிருக்கின்றார்கள். அச்சிட்ட பிரதிகளையும் சில ஏட்டுப் பிரதிகளையும் ஒருங்கு வைத்து ஆராய்ந்து பார்த்தவிடத்து, ஏட்டுப் பிரதிகளிலே அச்சுப் பிரதிகளிலுள்ள பாடங்களினும் சிறப்பும் பொருட் பொருத்தமு முடையனவாய்ப் பலபாடங்கள் காணப்படு கின்றன. அவற்றுள்ளே சில கற்போர்க்கு உபயோகமாகு மெனக் கருதி இங்கே எழுதப்படுகின்றன" என்னும் முன்னு ரையுடன் பாலகாண்டம் - நாட்டுப்படலம் முதல் பாடாந் தரம் (பாடவேறுபாடு) செவ்விதில் குறிப்பிடப் பெறுகின் றது. பாடவேறுபாட்டின் சிறப்பும் முறையே எடுத்தோத வும் பெறுகின்றது. செந்தமிழ் இரண்டாம் தொகுதி பன்னி ரண்டாம் பகுதியில் இதன் தொடக்கம உள்ளது. (1903) ஐந்தாம் தொகுதியளவும் வெளிவந்துள்ளது.

மகாபாரதச் செய்யுள் பாடாந்தரம் இவ்வாறு தொடங்குகின்றது.

"மகாகவியாகிய வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தை, இத்தமிழ்ச் சங்கத்திற்குத் தமிழ்நாட்டிற் பலவிடங்களிலுமிருந்து வந்த பதினைந்து பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து இதற்கு முன்னுள்ள அச்சுப்பிரதிகளிற் காணப்படும் வழுக்களைந்து பாடபேதங்களைச் சேர்த்து அரும்பதவுரையுடன் அச்சிறுவித்துத் தமிழாய்வோர்க்குபகாரமாகும் வண்ணம் புரியவேண்டுமென்று சங்கத்தின் அக்கிராசனதிபதியும் விவேகவிதரண சிந்தாமணியும் ஆகிய பாலவனத்தம் ஜமீந்தார் ஸ்ரீமாந் பாண்டித்துரைச் சாமித்தேவரவர்கள் நியமித்த வண்ணம் எனது சிற்றறிவாலியன்ற மட்டும் பரிசோதித் தச்சிடுவித்து வருகின்றேன். இப்பொழுது பத்தாம் போர்ச்சுருக்கம் அச்சுப்பதிப்பாகி வருகின்றது. பல வழுஉக்களும் பல பாடபேதங்களும் காணப் படினும் அவற்றில் முக்கியமானவற்றை மட்டும் இச்செந்தமிழ் வாயிலாக வெளியிடத் தொடங்கினேன். இங்ஙனம் இரா. சுப்பிரமணியக் கவிராயர்."

மகாபாரதச் செய்யுட் பாடாந்தரம் செந்தமிழ் நான்காம் தொகுதி முதற்பகுதியில் இருந்து தொடங்குகின்றது (1905) இதே தொகுதியில் 'பெரியபுராண அரும்பத விளக்கமும்' தொடக்கமாகின்றது ஏட்டில்கண்ட அரும்பத விளக்கம் அது அதனை, "யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் மருகரும் மாணுக்கருமாகிய காலம் கடந்துபோன பிரபல வித்துவான் ஸ்ரீமத் பொன்னம்பலப் பிள்ளை அவர்களின் பனையேட்டுப் பிரதி ஒன்று நீண்ட நாளாய் எம்மிடத்துள்ளது. இதைச் செந்தமிழ்ப் பத்திரிக்கையில் வெளியேற்றினுல் அதன் சந்தாதார்களிற் சிலருக்கேனும் பயன்படும் எனக் கருதிப் பெயர்த்தெழுதத் தொடங்கினேம்" என "நாகை நீலலோசனிப் பத்திராதிபர் ஜி சதாசிவப்பிள்ளை" குறிப்பிட்டுக் காப்புச் செய்யுள் முதலாக எழுதுகின்ருர். இதனுல் பழம் பாடமேயன்றிப் பழைய உரையும் பலரும் அறிய வெளிப்படுத்தும் முயற்சியை மதுரைத் தமிழ்ச் சங்கம் மேற்கொண்டமை தெளிவாம். இம்முயற்சியைப் பழஞ்சுவடி ஆய்வுக் குழுவினர் மேற்கொள்ள வழிவகை காணல் வேண்டும் அவர்கள் கண்டு பதிப்பித்த பாடங்களை மேல்வரும் பதிப்பாளர் அனைவரும்

கட்டாயம் ஏற்றுப் போற்றுதலும் வேண்டும். ஏனெனில் செந்தமிழிலும் சரி.அறிஞர் வையாபுரிப்பிள்ளை குறிப்பிலும் சரி. பிறர் பிறர் கட்டுரைகளில் வரைந்தனவும், முகவுரைகளில் சுட்டியனவும் சரி, பதிப்பாளர்களால் போற்றப் பெறவில்லை. அந்நாள் குறைகள் இந்நாள் கூளவும் தொடரவே செய்கின்றன ஆதலால் கட்டாயப்படுத்துதல் அல்லாமல் அவரவர் கருதிச் செய்வர் என்பது இந்நாட்டில் காணற்கு அரிதாம் என்க.

கூ. பதிப்பாக்கம் செய்தல் :

பதிப்பாக்கம் செய்தல் இருவகையாம். ஒருவகை இதுகாறும் அச்சுக்கு வாராத சுவடிகளை ஆராய்ந்து அச்சுக்குக் கொண்டு வருதல்; மற்றொருவகை அச்சிட்ட அரியநூல்கள் மீண்டும் பதிப்பின்றி அழிந்து ஒழியாவண்ணம் மறுபதிப்புக்குக் கொண்டு வருதல்.

முன்னைதில் இன்னும் எண்ணற்ற சுவடிகள் உள்ளன. சிற்றிலக்கிய வகைகளில் பெயர் தானும் அறியாத பலவற்றைப் பிரபந்தத் திரட்டு என்னும் பாட்டியல் நூலால் அறிந்து கொள்ள முடிகின்றது. துனிவிசித்திரம், இலட்சுமி விலாசம், கூடல்மாலை, குலோதயமாலை, சூடாமணி, தடாக சிங்காரம், சடானனம், ஏகாங்கிரி, பொய்ம்மொழி அலங்காரம், மெய்ம்மொழி அலங்காரம், தெய்வக்கையுறை, ஆண்கூடல். குறியறிசிந்து, தசப்பிரா துற்பவம், புறநாட்டுச் செய்கை, தாமரை நோன்பு, வாடாதமாலை, கனகாபிடேகம், நட்சத்திர மாலை, முரண்வஞ்சி, மஞ்சரி, மாதிரக் கட்டு, மதனவிசையம், வச்சிராங்கி, சகத்திராங்கி, அண்டகோசம், சிந்துமோகினி, உத்தியாபனம், மதன சிங்காரம், தமிழ்சொரி சிந்தாமணி, கலியாண சுந்தரம், தளசிங்காரம் விசயவித்தாரம், மானதவம், கானவேட்டம், சுயவரம் பிரிவுசுரம், சமசங்கிரமம், வேடர் வினோதம், கன்னிமயக்கம், வசனசம்பிரதாயம், கதைமொழிமாற்று, கற்பனை விலாசம், நதிவிசேடம், வதன சந்திரோதயம், திருப்பெயர் பொறி, தேவாங்கசிலோச்சயம், பட்டாபிஷேகம், களவு கன்னி, என்பனவும் பிறவும் பிற பாட்டியல்களில் அறியமுடியாதன சில புதுப்பெயரின. 96 வகைச் சிறுநூல்களையும்

அடைவு செய்து பிரபந்தத் திரட்டு உரைக்கின்றது. இவ்வாறே பிரபந்த தீபம் என்பதும் 96 வகைச் சிறுநூல்களையும் செவ்விதில் விளக்குவதேயாம். இன்னும் வெளிவராத நிகண்டு நூல்கள் பல உள்ளன சாமிநாதையர் தொகுத்து வைத்துள்ள அரிய சுவடிகளைத் திருந்திய முறையிற் பதிப்பிப்பதானுல் சிறந்த தமிழறிஞர்களுக்குப் பலதலைமுறைக்காலம் உளங்கூர்ந்த வேலை இருந்துகொண்டே இருக்கும்'' என்று [1]அறிஞர்கள் கூறுவர். அகப்பொருள்விளக்கநூல், சண்முகப்பாட்டியல், சரநூல், சாமிநாதம், சொற்சேர்வை பொருட்சேர்வை, தனிக்கவித் தொகுதிகள் பண்டாரப் பாட்டியல், பாஞற்றுப்படை பாரதி தீப நிகண்டு, வடமலை நிகண்டு, முதலியவை தமிழ்ச் சொல் வளத்தைப் பெருக்குதற்கும் கலைத்திறம் பெருக்குதற்கும் தக்க சுவடிகள். இவை இன்னும் அச்சில் வெளிப்படவில்லை, வீரமாமுனிவர் இயற்றிய கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம் ஆகியனவும், வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் அருளிய எழுவகை இலக்கணமும் உவமான சங்கிரகம், இரத்தினச் சுருக்கம் கஞநூல், அரும்பொருள் விளக்க நிகண்டு முதலினவும் காணற்கு அரியனவாயின. எடுத்துக் காட்டாக எண்ணிப் பார்த்த அளவில் தோன்றிய நூல்கள் இவையேயன்றித் தொகைப்படுத்தி யுரைத்தன வல்ல. தொகைப்படுத்தி ஆய்ந்து தக்கனவற்றைத் தேர்ந்து பதிப்பாக்கப் பணிபுரிதல் வேண்டும். இல்லையேல் சுவடிகள் மறைந்தொழிந்தவாறே. அச்சிட்ட அரிய நூல்களும் மறைந்தொழிதற்கும் இடனுகிவிடும். இவ்வகைக்காக, அச்சிட்ட நூல்களின் பட்டி ஒன்றும் இவ்வறிஞர் குழுவுக்கு வேண்டியதாகும். அரிய நூல்களையெல்லாம் தன்னகத்துக் கொண்ட பெரிய நூல் நிலையங்களிலுள்ள சீரிய நூல்களுக்கெல்லாம் பட்டியலிட்டு வைத்துக்கொள்ளல் இவர்கள் பணிக்கு உதவியாகும்.

இனிப் பதிப்புக்குழுவின் பணிக்கெனத் தனியே ஓர் அச்சகம் இருத்தல்வேண்டும். ஆராய்ச்சிக் குழுவினர் ஆய்ந்து

1. தமிழ்ச் சுடர்மணிகள் பக். 285.

தந்த பாடவேறுபாடு, திருத்தம், சேர்க்கை, நீக்கம் ஆகிய வற்றை நூல் வரிசையில் சிறுசிறு வெளியீடுகளாக வெளி யிடுதல் ஒருபணி; மற்றொரு பணி, ஆய்வுக் குழுவினர் வெளி யிடுதற்கெனத் தேர்ந்து வழங்கிய பழஞ் சுவடி நூலையும், பாடவேறுபாடும் திருத்தமும் அமைத்துத்தந்த பழம்பதிப்பு நூலையும் பிழையின்றி அச்சிட்டுத் தருதல், இங்கு இலக்கண இலக்கியப் பழஞ் சுவடிகளுக்குக் கூறிய குறிப்புகள், செயல் முறைகள் மருத்துவச் சுவடிகள், கல்வெட்டுகள் ஆய்வுக்கும் பெரிதும் பொருந்துவனவேயாம். அவற்றுக்கெனத் தனித் தனி குழு அமைந்து பணியாற்றினால் தமிழ் மொழியின் வளம் சிறக்கும். நாம் செய்யும் பயன்மிக்க தொண்டாகவும் அமையும்.

இந்நடைமுறை சில காலங்களுக்கேனும் தொடர்ந்து நடைபெறுதல் வேண்டுவதாம். ஆகலின் இசை, நாடகம் முதலியவற்றைத் தனித்துறை எனத் தேர்ந்து பயில்வார்க் குப் பட்டம் தருதலும், பயிற்சியளித்தலும் பல்கலைக் கழகங் களும் அரசும் மேற்கொண்டிருத்தல் போலவே, சுவடிக் கலையையும் ஒரு பாடமாக்கிப் பயிற்றுவித்தலும், பட்டம் வழங்குதலும் வேண்டும். இவ்வாறு செய்யின் ஆர்வமும் தேர்ச்சியும் மிக்கார் இத்துறைக்குக் கிடைத்து இனிய தொண்டாற்ற இயலும். 'தமிழ் வாழ்க' 'ஓங்குக' 'உயர்க' என்பன கேட்க இனிக்கலாம்! சொல்ல இனிக்கலாம்! ஆனால் உருப்படியான நன்மையைத் தாரா! உருப்படியான நன்மை வழிதுறை ஆய்ந்து செயலாற்றுதலிலேதான் உள்ளது. ''செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமை யானும் கெடும்'' அல்லவா!

''அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்''

இணைப்பு - 1.

இந்நூலில் குறிக்கப்பெற்ற இலக்கண இலக்கிய நூல் பதிப்புகள்

ஆண்டு	நூல்	ஆராய்ந்து பதிப்பித்தவர்
1812	திருக்குறள் - நாலடியார் மூலம்	அம்பலவாண கவிராயர்
1812	திருக்குறள். (Tirukkural on Virtue)	எல்லிஸ் F. W. Ellis
1833	திருக்குறள்	சரவணப் பெருமாளையர், விசாகப பெருமாளையர்
1839	திருமுருகாற்றுப் படை	அர. இலட்சுமணன்
1840	திருக்குறள்	முகவை. இராமாநுச கவிராயர்
1841	நாலடியார் (நீதிமொழித் திரட்டு)	J. வாக்கர்
1843	நாலடியார் மூலமும் உரையும்	காஞ்சி லட்சுமண முதலியார்
1844	நாலடியார் மூலமும் உரையும்	புதுவை. நயநப்ப முதலியார்
1847	தொல் எழுத்து. நச்.	மழவை மகாலிங்கையர்
1849	திருக்குறள் - மூலமும் உரையும்	வேதகிரி முதலியார்
1852	திருக்குறள் மூலமும் உரையும்	முகவை இராமாநுச கவிராயர்
1852	நாலடியார் மூலமும் உரையும்	சேதனப்பட்டு இராமசாமிக் கவிராயர்
1853	திருமுருகாற்றுப்படை (உரை)	ஆறுமுக நாவலர்
1855	நாலடியார் (உரையுடன்) (1860, 1863. 1869 ஆகிய ஆண்டுகளிலும் வெளிவந்துள்ளன)	வேதகிரி முதலியார்
1856	திருக்குறள் (உரையுடன்)	வேதகிரி முதலியார்
1858	தொல்காப்பிய நன்னூல்	சாமுவேல் பிள்ளை
1861	திருக்குறள் - பரிமே. உரை.	ஆறுமுக நாவலர்
1863	திருக்குறளதிகார ஸ்வரூப சூசகம்	திருவல்லிக்கேணி வரதப்ப முதலியார்

1868	சிந்தாமணி - நாமகள் இலம்பகம்	பவர் துரை
1868	தொல். சொல். சேனாவரையம்	ஆறுமுக நாவலர்
1868	,, எழுத் இளம்பூரணம்	சுப்பராய செட்டியார்
1868	,, .. ,,	கன்னியப்ப முதலியார்
1868	,, சொல். சேனாவரையம்	இராசகோபால பிள்ளை
1876	சிலப்பதிகாரம் புகார்க்காண்டம்	சீனிவாச ராகவாசாரியார்
1880	,, ,,	தி. க. சுப்பராய செட்டியார்
1883	சிந்தாமணி (முதல் ஐந்து இலம்பகங்கள்)	ப. அரங்கசாமி பிள்ளை
1885	தொல். பொருள் நச்.	சி. வை. தாமோதரம் பிள்ளை
1887	கலித்தொகை. நச் உரையுடன்	,,
1887	சிந்தாமணி - நச். உரையுடன்	உ. வே. சாமிநாதையர்
1889	சூளாமணி	சி. வை. தாமோதரம் பிள்ளை
1889	பத்துபபாட்டு நச். உரையுடன்	உ. வே. சாமிநாதையர்
1891	தொல் எழுத் நச்.	சி. வை தாமோதரம் பிள்ளை
1891	மணிமேகலை (மூலம்)	திருமயிலை சண்முகம் பிள்ளை
1892	சிலப்பதிகாரம். அடியார்க். அரும்.	உ. வே. சாமிநாதையர்
1894	புறநானூறு (பழைய உரையுடன்)	,,
1898	மணிமேகலை	,,
1901	தொல் எழுத். நச்.	சி. வை. தாமோதரம் பிள்ளை
1902	,, சொல். ,,	,,
1903	ஐங்குறுநூறு - (பழைய உரையுடன்)	உ வே. சாமிநாதையர்
1904	பதிற்றுப்பத்து (பழைய உரையுடன்)	,,

1904	அகநானூறு (பழைய உரை)	இரா. இராகவையங்கார்
1914	நற்றிணை - உரையுடன்	பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்
1915	குறுந்தொகை - உரையுடன்	சௌரிப் பெருமாளரங்கனார்
1916	தொல். பொருள நச் (அகத்திணை, புறத்திணை)	சரவண பவானந்தம் பிள்ளை
1916	,, ,, (களவு, கற்பு, பொருள்)	,, ,,
1917	,, ,, பேராசிரியம்	,, ,,
1917	,, , செய் நச்.	இரா. இராகவையங்கார்
1917	திருக்குறள். மணக்குடவருரை	வ உ. சிதம்பரம் பிள்ளை
1918	பரிபாடல். பரிமேலழகர் உரை	உ. வே. சாமிநாதையர்
1920	பத்துப்பாட்டு மூலம்	கா. நமச்சிவாய முதலியார்
1920	தொல். பொருள். இளம்.	கா. நமச்சிவாய முதலியார்
1923	அகநானூறு	கம்பர் விலாசம் இராசகோபாலாசாரியார்
1923	தொல் சொல். சேனா.	சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
1924	பெருங்கதை	உ. வே சாமிநாதையர்
1924	தொல். மூலம்.	கா. நமச்சிவாய முதலியார்
1924	கலித்தொகை - (நச். உரையுடன்)	இ. வை. அனந்தராமையர்
1925	திருக்குறள் மணக்குடவருரை	பொன்னுசாமி நாட்டார்
1927	தொல் சொல். இளம்பூரணம்	கா. நமச்சிவாய முதலியார்
1928	தொல் எழுத். இளம்பூரணம்	வ. உ சிதம்பரம் பிள்ளை
1928	,, பொருள் அகம். புறம். இளம்.	,,
1929	,, சொல். தெய்வச்சிலையார்	கரந்தை அரங்க வேங்கடாசலம் பிள்ளை
1930	குறுந்தொகை (மூலம் உரை)	இராமரத்தின ஐயர்

1931	பத்துப்பாட்டு மூலம்	உ. வே. சாமிநாதையர்
1933	குறுந்தொகை	சோ. அருணசல தேசிகர்
1933	தொல். பொருள். களவு, கற்பு, பொருள் இளம்.	வ. உ. சிதம்பரம் பிள்ளை
1934	தொல். பொருள். நச் பேரா	வையாபுரிப் பிள்ளை
1936	,, ,, பின்னான்கியல் (இளம்)	வ உ. சிதம்பரம் பிள்ளை
1937	குறுந்தொகை (உரையுடன்)	உ. வே. சாமிநாதையர்
1937	தொல். பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி.	ம ஆ. நாகமணி
1937	தொல் எழுத். நச்.	சி. கணேசையர்
1938	தொல். சொல். சேன	சி. கணேசையர்
1940	சங்க இலக்கியம்	வையாபுரிப் பிள்ளை
1942	தொல் சொல் நச்.	மே வி. வேணுகோபாலப் பிள்ளை
1947-51.	புறநானூறு (விளக்கவுரை)	ஔவை சு துரைசாமிப்பிள்ளை
1948	தொல். பொருள். நச்	சி. கணேசையர்
1950	பதிற்றுப்பத்து (விளக்கவுரை)	ஔவை துரைசாமிப்பிள்ளை
1950	திருக்குறள் உரைவளம்	தண்டபாணி தேசிகர்
1954	சூளாமணி - குறிப்புரை.	உ. வே சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு
1957	திருக்குறள் உரைக்கொத்து.	பட்டுசாமி ஓதுவார்
1957-58.	ஐங்குறுநூறு	ஔவை துரைசாமிப் பிள்ளை
1962	சூளாமணி விளக்கவுரை	பொ. வே. சோமசுந்தரனார்
1964	தொல். சொல். கல்லாடம்	கு. சுந்தரமூர்த்தி
1966	நற்றிணை - விளக்கவுரை	ஔவை துரைசாமிப்பிள்ளை
1970	பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூற்பேழை	சை. சி. நா. கழகம்

இணைப்பு - 2

இடைக்கால பிற்கால இலக்கண இலக்கிய நூல் பதிப்புகள்

காலவரிசையில்

(இப்பட்டியல் எல்லாப் பதிப்புகளையும் அடக்கியது அன்று. குறிப்பிட்ட சிலநூற்பதிப்புகளே இடம் பெற்றுள; விடுபெற்றவை உண்டு)

1820	இலக்கண வினா விடை	தாண்டவராய முதலியார்
1824	சதுரகராதி	ஷி, இராமச்சந்திர கவிராயர்
1828	இலக்கணச் சுருக்க வினா விடை	விசாகப் பெருமாளையர்
1830	நீதிநெறி விளக்கம்	எச். தோக்கசு (Stokes)
1834	தஞ்சைவாணன் கோவை	நயனப்ப முதலியார்
1835	இலக்கண பஞ்சகம்	தாண்டவராய முதலியார்
1835	தாயுமானவர் பாடல்	சரவணப் பெருமாளையர்
1835	திவாகர நிகண்டு	தாண்டவராய முதலியார்
1836	சூடாமணி நிகண்டு	நயனப்ப முதலியார்
1837	பரஞ்சோதி திருவிளையாடல்	சரவணப் பெருமாளையர்
1839	திவாகரம்	இராமசாமிப் பிள்ளை
1839	நளவெண்பா	கல்வி விளக்கச் சங்கம்
1840	உரிச்சொல் நிகண்டு	துத்தென் துரை
1840	தாயுமானவர் பாடல்	சரவணப் பெருமாளையர்
1841	திருக்கோவையார்	நயனப்ப முதலியார்

1841	வாக்குண்டாம், நல்வழி	சரவணப் பெருமாளையர்
1842	நைடதம்	,,
1842	சமுத்திர விலாசம்	தமிழ் விளக்க அச்சுக்கூடம்
1842	நைடதம்	குமாரசாமி தேசிகர், காஞ்சி
1842	வேதகிரியார் சூடாமணி	வேதகிரி முதலியார்
1843	தாயுமானவர் பாடல்	அருணாசல தேசிகர், கீழ்வேளூர்
1844	கந்தசுவாமியம் நிகண்டு	சுப்பிரமணிய தேசிகர்
1845	நன்னூல்	முகவை இராமாநுச கவிராயர்
1845	திருத்தொண்டர் புராணம் (ஆறுயர் முடிய)	மழவை மகாலிங்கையர்
1845	திருவாசகம்	இராமசாமி முதலியார்
1845	,,	சாரம் குமரப்ப முதலியார்
1846	தமிழ் இலக்கண நூற் சுருக்க வினா விடை (இரண்டாம் பதிப்பு)	ஜி. யு. போப்
1847	நன்னூல் விருத்தியுரை	முகவை இராமாநுச கவிராயர்
1847	இலக்கண நூற் சுருக்கம்	,, ,,
1847	இலக்கணச் சுருக்கம்	,, ,,
1848	நன்னூல்	ஜோயஸ்; சாமுயல் பிள்ளை
1849	தொகைப் பெயர் விளக்கம்	வேதகிரி முதலியார்
1849	இலக்கண நூலாதாரம்	புதுவை
1851	யாப்பருங்கலக் காரிகை	வேதகிரி முதலியார்
1851	நன்னூல்-சங்கர நமச்சிவாயர்	ஆறுமுக நாவலர்
1852	பாலபோத இலக்கணம்	விசாகப் பெருமாளையர்
1853	யாப்பருங்கலக் காரிகை	சந்தரசேகர பண்டிதர்

1853 தமிழ் இலக்கணம் அருணுசலம் பிள்ளை பாளை
1853 இலக்கண நூற் சுருக்கம் நாகர்கோயில்
1855 இலக்கணச் சுருக்க விஞ விடை வேதக்கண்
1855 திருவாசகம் சரவணப் பெருமாளையர்
1855 நன்னூல் சங்கர நமச்சிவாயர்
சந்திரசேகர பண்டிதர்
1855 கணக்கதிகாரம் அருணகிரி உபாத்தியாயர்
1857 திருவாசகம் விசாகப் பெருமாளையர்
1857 தண்டியலங்காரம் -சுப்பிரமணிய
தேசிகர் உரை சந்திரசேகர பண்டிதர்
1858 உரிச்சொல் நிகண்டு அருணுசலம் சதாசிவம் பிள்ளை
1858 நன்னூல் ஆங்கில விளக்கம் ஜி. யு. போப்பையர்
1859 நைடதம் வேதகிரி முதலியார்
1859 பெரிய புராணம் காஞ்சி சபாபதி முதலியார்
1860 சதுரகராதி பொன்னம்பல முதலியார்
1860 திருக்கோவையார் ஆறுமுக நாவலர்
1860 இலக்கணச் சுருக்கம். மயிலை சவேரிமுத்துப் பிள்ளை
1861 பெரியபுராணம் சபாபதி நாவலர், புரசை
1861 ஆசிரிய நிகண்டு ஆண்டிப் புலவர்
1863 திருஞானசம்பந்தர் தேவாரம்
காஞ்சி சபாபதி முதலியார்
1864 ஐந்திலக்கண மூலம் வீராசாமி முதலியார்
1864 திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
காஞ்சி சபாபதி முதலியார்
1864 நன்னூற் சுருக்கம் சவுந்திரநாயகம் பிள்ளை
1865 நாலாயிர திவ்விய பிரபந்தம் அப்பாவு முதலியார்
1866 திருநாவுக்கரசர் தேவாரம்
காஞ்சி சபாபதி முதலியார்
1867 திருவருட்பா தொழுவூர் வேலாயுத முதலியார்
1867 பதார்த்தகுண சிந்தாமணி
சுப்பிரமணிய பவானந்தர்
1868 கல்லாடம் மீனுட்சி சுந்தரம் பிள்ளை
1868 பட்டினத்தார் பாடல்
சோட. சுப்பராயச் செட்டியார்
1868 வில்லிபாரதம் (சபா பருவம்) கோவிந்தப் பிள்ளை
1868 திரிகடுகம் ,,

1869 திருமந்திரம் கொ. சண்முகசுந்தர முதலியார்
1869 யசோதர காவியம் பாகுபலி நாயனார்
1869 பதினொன்றும் திருமுறை
சோடட. சுப்பராயச் செட்டியார்
1869 உரிச்சொல் நிகண்டு ,, ,,
1869 கந்தபுராணம் ஆறுமுக நாவலர்
1869 அரிச்சந்திர புராணம் வேங்கடாசல முதலியார்
1870 பெரியபுராணம் திருமயிலை சுப்பராய முதலியார்
1870 நளவெண்பா சோடட சுப்பராயச் செட்டியார்
1870 நளவெண்பா தி. ஈ சீநிவாச ராகவாச்சாரியார்
1870 யாப்பிலக்கணச் சுருக்கம்
கொட்டையூர் சாமிநாத தேசிகர்
1872 சிவப்பிரகாசம் ,,
1872 கல்லாடம் புதுவை சுப்பராயப் பிள்ளை
1873 பெரியபுராணம் ஆறுமுக நாவலர்
1874 பட்டினப்பாலை சோடட. சுப்பராயச் செட்டியார்
1874 சிந்தாமணி நிகண்டு வைத்தியலிங்கம் பிள்ளை
(யாழ்ப்பாணம்)
1874 வில்லிபாரதம் ஆறுமுக நாவலர்
1875 சிவஞான போதம் முருகேச முதலியார்
1875 சூடாமணி நிகண்டு வைத்தியலிங்கம் பிள்ளை
1875 அரிச்சந்திர புராணம் அருணாசல முதலியார்
1875 சுந்தரர் தேவாரம் காஞ்சி சபாபதி முதலியார்
1875 நைடதம் சரவணப் பெருமாளையர்
1876 நல்லாப்பிள்ளை பாரதம் ,,
1877 களவழி நாற்பது சோடட சுப்பராயச் செட்டியார்
1877 பதினொன்றும் திருமுறை ,, ,,
1878 நன்னூல்-ஆங்கில மொழி பெயர்ப்பு இலாசரசு
1878 நம்பி அகப்பொருள் விளக்கம்
வைத்தியலிங்கம் பிள்ளை
1878 தனிப்பாடல் சந்திரசேகர கவிராயர்
1878 அபிதானத் தனிச் செய்யுள் நிகண்டு
வீ. கோபாலசாமி நாயகர், கீழ்வேளூர்
1879 நான்மணிக் கடிகை கோ. இராசகோபால பிள்ளை
1879 இலக்கணச் சுருக்கம் வாசுதேவ முதலியார்
1879 இலக்கணச் சுருக்கம் மழவை மகாலிங்கையர்

1887	யசோதர காவியம்	பாகுபலி நயினார்
1887	நன்னூல் சங்கரநமச்சிவாயர்	ஆறுமுகநாவலர்
1887	பாலகாண்டம் (கம்பர்)	இராமசாமி நாயுடு
1888	அயோத்தியா காண்டம்	சேசாத்திரி
1888	யாப்பிலக்கணசூசனம்	முத்துத்தம்பிப்பிள்ளை
1888	தனிப்பாடல்	சந்திரசேகர கவிராயர்
1888	ஒழிவிலொடுக்கம்	கோயிலூர் ராமசாமி சுவாமிகள்
1888	கம்பராமாயணம்	கவித்தலம் அரைசாமி மூப்பனார்
1889	முத்துவீரியம்	டாக்டர் பழனியாண்டி
1889	இலக்கண விளக்கம்	சி. வை. தாமோதரம்பிள்ளை
1889	உரிச்சொல் நிகண்டு	சு. சதாசிவம்பிள்ளை
1889	பாட்டியல்	தியாகராசதேசிகர்
1889	கிட்கிந்தாகாண்டம்	வை. மு. சடகோப ராமாநுசாச்சாரியார்
1890	சீறு—நபிகளவதாரப் படலம் உரைகடிலகம்	காதிரசஞுமரைக்காயர்
1890	உரிச்சொல் நிகண்டு	சிவன்பிள்ளை
1891	இலக்கணதீபிகை	சேம்சு T. அப்பாபிள்ளை
1892	தமிழ் இலக்கணச் சுருக்கம்	சீனிவாசமுதலியார்
1893	தஞ்சை வாணன் கோவை	நயனப்ப முதலியார்
1893	ஆசாரக் கோவை	செல்வ கேசவராய முதலியார்
1893	தமிழ் இலணக்கச் சிந்தாமணி	ஞானமணி நாடார்
1894	சிவரகசியம்	சே. அருணாசல கவிராயர்
1894	இளைஞர் பயில் இலக்கணம்	மோசூர் வேங்கடசாமி ஐயர்
1895	புறப்பொருள் வெண்பாமாலை	உ. வே. சாமிநாதையர்
1895	குவலயாநந்தம்	முகவை மீனாட்சிசுந்தரக் கவிராயரும் சங்கர நாராயணசாத்திரியும்
1895	கோடீசுரக் கோவை	கருணாநந்த சுவாமி

1880	நன்னூல்-காண்டிகை	ஆறுமுக நாவலர்
1880	நன்னூல்-காண்டிகை	இராசகோபால் பிள்ளை
1880	இலக்கண சிந்தாமணி	ஜகராவ் முதலியார்
1880	நூலாதாரத்தின் மேலாதாரம்	முத்துசாமி முதலியார்
1880	திருவிளையாடல் அரும்பதவுரை	,,
1880	வினைமர விளக்கம்	,,
1881	வீரசோழியம்	சி. வை. தாமோதரம் பிள்ளை
1881	கட்டளைக் கலித்துறை	,,
1882	பிரயோக விவேகம்	ஆறுமுக நாவலர்
1882	யாப்பருங்கலக் காரிகை	பரப்பிரம முத்திராட்சரசாலை
1883	இறையனார் களவியல்	சி. வை. தாமோதரம் பிள்ளை
1883	இலக்கண சூடாமணி	கிருஷ்ண பிள்ளை
1883	சிவஞான போதம் சுபக்கம்	கைலாச பிள்ளை
1883	திரிகடுகம், நீதிமஞ்சரி தருப்பண வரிசை	,,
1884	இலக்கணச் சுருக்கம்	வரதாச்சாரி
1884	இலக்கணச் சுருக்கம்	சீனிவாச முதலியார்
1884	நன்னூல் ஆங்கில மொழி பெயர்ப்பு	இலாசரசு
1884	கம்பர். பால; அயோத்தி	சித்தூர் வீராசாமி நாயுடு
1884	பெரியபுராணம்	ஆறுமுக நாவலர்
1884	வில்லிபாரதம்	சதாசிவம் பிள்ளை
1884	கூர்மபுராணம் I	சிதம்பரநாத கவிராயர்
1885	கூர்மபுராணம் II	,, ,,
1885	சிவஞான போதம் சிற்றுரை	ஆறுமுக நாவலர்
1885	சமுத்திரவிலாசம்	இளசை வித்தியாவிலாசினி
1885	வினையுருவ விளக்கம்	சீனிவாசாச்சாரி
1885	விருத்தப்பாவியல்	வீரபத்திரமுதலியார்
1886	பஞ்சலட்சணம்மூலம்	இராமசுவாமிகள்
1886	ஏரெழுபது திருக்கை வழக்கம்	ஆறுமுகநாவலர்
1886	கம்பர் பால. அயோத்தியா.	கிருஷ்ணசாமி முதலியார்
1886	இலக்கணச் சுருக்கம்	தியாகராசஐயர்
1886	,,	முத்துசாமிமுதலியார்
1887	நல்லாப்பிள்ளை பாரதம்	தியாகராசஐயர்

1896	கூர்ம புராணம்	சிதம்பரசாமி உரையுடன்
1896	கம்பராமாயணம்	திருமயிலை சண்முகம்பிள்ளை
1897	முதல் இலக்கணம்	முனிசாமிநாயுடுவும் பார்த்தசாரதி ஐயங்காரும்
1897	மெய்கண்ட சரித்திரம்	பூவை. கலியாண சுந்தர முதலியார்
1898	யாப்பிலக்கணச் சுருக்கம்	முத்தி சிதம்பரம்பிள்ளை
1898	சுந்தரகாண்டம்	இராமநுசபிள்ளை
1898	பன்னூற்றிரட்டு	பாண்டித்துரைத்தேவர்
1898	கலிங்கத்துப்பரணி	பரிதிமாற் கலைஞர்
1898	நளவெண்பா	,,
1898	நாலாயிர திவ்விய பிரபந்தம்	சீனிவாசராகவாச் சாரியார்
1899	மெய்கண்ட சாத்திரம் மூலம்	ஆ. சிங்காரவேலு முதலியார்
1899	யாப்பருங்கலக்காரிகை	அ. குமாரசாமிபிள்ளை
1899	நம்பியகப் பொருள்	,,
1899	தண்டியலங்காரம்	,,
1900	வச்சணந்திமாலை	சென்னை
1900	ஆரணிய காண்டம்	மு. ரா. கந்தசாமிக் கவிராயர்

இணைப்பு 3

சிறப்புப் பெயர் அகராதி

அகநானூறு 264
அச்சுச்சட்டம் 49
அடியார்க்கு நல்லார் 10, 19 23, 60, 222, 224
அடையாறு 151
அண்ணாசாமி உபாத்தியாயர் 85, 88, 223
அண்ணாமலை அரசர் 151
அண்ணாமலை முதலியார் 179
அந்தகக்கவி வீரராகவர் 59
அநபாய சோழன் 40
அப்பாசாமி நயினார் 237
அம்பலவாண கவிராயர் 82, 167, 169,
அம்பலவாண தம்பிரான் 169, 226, 270
அம்மை ஆண்டியப்ப கிராமணி 88
அமுத கவி 104
அரங்கசாமிப்பிள்ளை 211
அரசியல் மாநாடு 118
அரிச்சந்திரவெண்பா 45

அருணகிரி உபாத்தியாயர் 313
அருணாசல சுவாமி 184
அருணாசலத் தொண்டைமான் 187
அருணாசல தேசிகர் 287, 327
அரும்பதவுரை 100, 224
அருள் நந்தித் தம்பிரான் 181
அனந்தராமையர் 85, 230, 232
அனந்தாசாரிலு 118
ஆசாரக்கோவை 85
ஆண்டாள் 51
ஆபிரகாம் அருளப்பர் 207
ஆரியச்சக்கரவர்த்திகள் 47
ஆரியப்பப் புலவர் 149
ஆவணம் 10
ஆழ்வார் திருநகரி 92
ஆழிப்பேரலை 21
ஆறுமுக நாவலர் 134, 165, 176, 188, 242, 310, 314, 324
இரகுநாத சேதுபதி 79
இரத்தினம் 205
இராகவஐயங்கார் இரா. 38, 194, 264, 293, 331,
இராகவ ஐயங்கார் மு. 71
இராசகோபாலையங்கார் 264, 268
இராசகோபாலப்பிள்ளை 43, 140, 149, 189
இராச கோபாலாச்சாரியார் 147, 148, 150, 214
இராமசாமிப்பிள்ளை 322
இராமசாமிப் புலவர் 240
இராமசாமி முதலியார் 127, 183,
இராமரத்தினம் 286
இராமாநுச கவிராயர் 174, 184
இலக்கணபஞ்சகம் 187
இலக்குமணன் 241,
இலட்சுமண கவிராயர் 9, 244
இலட்சுமண முதலியார் 182
இளங்கோவடிகள் 15, 40
இளம்பூரணர் 67
இளையதம்பி 238
இறையனார் களவியல் 23, 55, 59
இன்னிலை 85
ஈசுவரமூர்த்தியாபிள்ளை 2, 82, 296
உமாபதிசிவனார் 41
உமாமகேசுவரர் 198
உருத்திரங்கண்ணனார் 54
உருத்திரசன்மன 53
உரைக்கொத்து 181
உலகநாத பிள்ளை 198
ஊர்க்காட்டுவாத்தியார் 36
எல்லீசு 165, 169 170, 171
எழுத்தாணி 15-16
எழுதுபொருள் 9
என் சரித்திரம் 2, 58,
ஏரெழுபது 57.
ஐங்குறுநூறு 92, 259
ஐயர்பதிப்பு 326
ஓலை 9—11
ஓலைச்சுவடி நூலகம் 110—2
ஔவையார் 18, 51, 76
கடல்கோள் 22
கடியலூர்
உருத்திரங்கண்ணனார் 28

கடையநல்லூர் 160
கண்ணெழுத்து 72
கணக்கதிகாரம் 312
கணேசையர் 201, 203, 205
கந்தசாமிப்புலவர் 172
கந்தசாமி முதலியார் 184
கந்தசாமியார் 59, 196, 344
கந்தையாபிள்ளை 206
கபிலர் 42
கம்பர் 57
கர்னல் காலின் மெக்கென்சி 110, 172
கரிவலம் வந்த நல்லூர் 33
கருணானந்தசுவாமி 185
கலித்தொகை 9, 228
கலியாண சுந்தரஐயர் 226
கவிராச வரோதயன் 56
கழகப் பதிப்பு 326
கழுதைவிடு தூது 79
களப்பிரர் 45—6
கறையான் 26
கன்னியப்ப முதலியார் 189
கனகசபைப் பிள்ளை 256
கனகசபை முதலியார் 86, 87
கனகசுந்தரம்பிள்ளை 94, 153, 178, 245
காரி 31
கால்டுவெல் 61
காளமேகப்புலவர் 16
கிருஷ்ணையர் 214
கிறித்தவ வேதபுத்தகம் 49
குடவோலை 10
குண்டலகேசி 41
குமாரசாமிஐயர் 243
குமாரசாமி முதலியார் 294
குழந்தைக்கவிராயர் 79
குறுந்தொகை 280
குறுநிலமன்னர் 60
கூட்டன்பர்க்கு 48
கூடலூர்கிழார் 53
கேசவமுதலியார் 185
கைந்நிலை 85
கைலாசம்பிள்ளை 230
கொங்குவேள் மாக்கதை 83, 87
கொடுங்குன்றப் புராணம் 198
கொண்டப்பவாத்தியார் 103
கொல்லிமலை 79
கோட்டி 58
கோபாலகிருஷ்ணமாச்சாரியார் 308, 310
கோபால ரகுநாத ராசாளியார் 198
கோவிந்தசாமி ரெட்டியார் 262
சகசானந்தர் 178
சங்கஇலக்கியம் 299
சங்கச்சான்றோர் 52
சங்கரநமச்சிவாயப்புலவர் 14
சண்முகம்பிள்ளை 43, 89, 247
சத்தியமுற்றப்புலவர் 25
சதாசிவ பண்டாரத்தார் 47
சந்திரசேகர பண்டிதர் 187
சந்திரநாதசெட்டியார் 214
சபாபதி முதலியார் 89-91, 165, 213, 214

சரசுவதி மகால் நூல்நிலையம் 114, 198
சரபோசி 114
சரவணபவானந்தம்பிள்ளை 124, 193
சரவணப்பெருமாளையர் 173, 177
சாத்தனார் 40
சாம்பசிவம் 162
சாமிநாதையர் 2, 32, 33, 43, 80, 84, 87, 88, 91. 93, 96, 108, 109, 116, 127, 142, 158 162, 212, 224, 242, 248, 251, 259, 269, 287, 291, 295, 306, 325
சாமுவேல்பிள்ளை 187
சாவேரிநாதபிள்ளை 43
சிங்களமன்னன் 48
சிதம்பர உபாத்தியாயர் 172
சிதம்பரனார் வ.உ 153, 177, 319
சிந்தாமணி 14, 41, 58, 209
சிந்தாமணித்தெரிவு 83
சிராமலை அந்தாதி 56
சிலப்பதிகாரம் 9, 44, 220
சிலி 20
சிவக்கொழுந்து தேசிகர் 172
சிவஞான முனிவர் 41, 59
சிவ தருமோத்திரம் 156
சிவப்பிரகாச சுவாமிகள் 283
சிவராம சேதுபிள்ளை 290
சிற்றம்பூர் 43
சிற்றிலக்கியம் 348
சின்னடைஞ்சான் 298
சீட்டுக்கவி 10
சீவகன் 15
சீனிவாச ராகவாச்சாரியார் 220
சுந்தரபாண்டியனூர் 199
சுந்தரம் பிள்ளை 90, 157
சுந்தர மூர்த்தி 199
சுப்பராய செட்டியார் 176, 188, 222
சுப்பிரமணிய கவிராயர் 38, 347
சுப்பிரமணியம் தேசிகர் 214, 315
சுப்பிரமணிய தேசிக விலாசம் 146
சுப்பிரமணியம் வி. ஐ. 207
சுப்பிரமணியமுதலியார் 297
சுப்பையாபிள்ளை 36, 206, 233
சுவடி 11
சுவடி உதவியோர் 97
சுவடிச் சாலை 13
சுவாமிநாதேதேசிகர் 41, 42
சூளாமணி 215
செந்தமிழ் 119, 346
செல்வக் கேசவராய முதலியார் 85, 178
செவ்வைச் சூடுவார் 149
சென்னைக் கல்விச் சங்கம் 112, 171, 174
சேக்கிழார் 15, 29, 41
சேசைய சாத்திரி 229
சேசையர் 216-217
சேது வேந்தர் 60, 106
சேம்சு பிரின்செப் 6
சேற்றூர் 107

செனுவரையர் 17, 135
சைவசித்தாந்த கழகம் 196, 199, 206, 233, 256, 272 304
சைவசித்தாந்த சமாசம் 83, 153
சைவமடம் 60, 107—8
சோமசுந்தரப்புலவர் 206
சோமசுந்தரம்பிள்ளை 123
ஞானசம்பந்தர் 56
ஞானப்பிரகாசன் 49, 167
தக்கயாகப்பரணி 109
தண்டபாணி தேசிகர் 179
தண்டியலங்காரம் 69
தமிழ்க்கோயில் 2, 3
தமிழ்ச்சொல்லகராதி 38
தமிழ்ப் பொழில் 181
தமிழ்விடுதூது 163
தருமபுரம் 108,--9, 244
தனிசிங்கமாலை 79
தாண்டவராய சுவாமிகள் 186
தாண்டவராய முதலியார் 172, 187, 322
தாமோதரம்பிள்ளை 31, 74, 87, 137, 140, 159, 188 228, 231, 235, 317, 325, 331, 338
தியாகராசச் செட்டியார் 146, 151, 176, 260,
திரிகூட ராசப்பக்கவிராயர் 36
திருக்குடந்தைப்புராணம் 146
திருக்குறள் 49, 135, 166, 181
திருக்கைக்கோட்டி 56-8
திருக்கோணேசுவரர் 56
திருநாராயணையங்கார் 119
திருநெல்வேலி 2, 36
திருப்பனந்தாள் 109
திருப்பாற்கடனுதன் கவிராயர் 82, 86, 244, 297
திருப்பூவணநாதருலா 37
திருமுருகாற்றுப்படை 241
திருவம்பலத்தின்னமுதனார் 82, 84, 88
திருவரங்கனார் 196
திருவனந்தபுரம் 45
திருவாய்மொழி 70
திருவாவடுதுறை 44
திருவான்மியூர் 151
திரு வி.க. 61, 62, 91, 142, 145, 153
திருவேங்கட முதலியார் 140
தில்லைச்சிற்றம்பலம் 28, 55
திவாகரம் 15
தினவர்த்தமானி 138
துக்காராம்கோல்கார் 159
துரைசாமி ஐயர் 252
துரைசாமிப்பிள்ளை ஔவை. சு 240, 250, 262, 272 276
துறுஐயர் 174, 210
தெய்வநாயகம்பிள்ளை 176
தேவாரம் 28--30
தொல்காப்பியம் 4, 6, 13, 63, 66, 186, 207
நக்கீரர் 42
நச்சினார்க்கினியர் 10, 42, 306
நம்பியாண்டார் நம்பி 28, 42

நமச்சிவாயமுதலியார் 195, 232, 246
நயனப்பமுதலியார் 172,182
நயினுன் அமுதகவி 104
நற்றிணை 273
நன்னூல் 68
நாகமணி 203
நாராயணசாமிஐயர் 273
நாலடியார் 15, 49, 181
நிட்டானுபூதி 165
நீலகேசி 41
நெல்லையப்பபிள்ளை 82, 296
நேப்பியர் பெருமகனுர் 110
பட்டினப்பாலை 54
பத்துப்பாட்டு 2, 87, 100, 241
பதிற்றுப்பத்து 44, 269
பர்னல்துரை 116
பரணர் 42
பரிதிமாற்கலைஞர் 61
பரிபாடல் 92, 291
பல்லவர் 44
பவர் எச் 209
பழந்தமிழ் இலக்கியப்பேழை 304
பழனியப்பபிள்ளை 180
பனம்பாரர் 44
பாகவதம் 149
பாட்டுதொகை 207
பாண்டிக்கவிராயர் 79
பாண்டித்துரைத் தேவர் 37, 39, 117, 270
பாண்டியன் மாறன் 53
பாராயணம் 58
பாவாணர் 61
பாற்கரசேதுபதி 226
பிசி 17
பிரசித்தப்பத்திரிகை 173
புத்தகம் 14, 15
புறநானூறு 60, 251
புறப்பொருள் வெண்பாமாலை 44
புன்னைக்காயல் 49
புனல்வாதம் 41
பூண்டியப்பப்புலவர் 344
பூரணசந்திர நயினுர் 241
பூரிக்கோ 52
பெருங்கதை 24, 44, 295
பேராசிரியர் 93
பொல்லாப்பிள்ளையார் 28
பொன்னுசாமித்தேவர் 176
பொன்னுசாமிநாட்டார் 179
பொன்னையன் 265
பொன்னையாபிள்ளை 201
மணவிற்கூத்தன் 55
மணிமேகலை 58, 247
மதுரைத்தமிழ்ச் சங்கம் 37, 46, 90, 117, 205, 346
மயிலைசீனி வேங்கடசாமி 75
மராட்டிய அரசு 47
மருது பாண்டியர் 107
மலைச்சாலை 188
மழவைமகாலிங்கையர் 140 185, 186
மறைந்துபோனதமிழ் நூல்கள் 47-8
மறைமலையடிகள் 61
மாசத்தினச்சரிதை 49, 167
மாம்பழக்கவிச்சிங்க நாவலர் 59

மான்விடுதூது 79
மிதிலைப்பட்டி 3, 78
மீனாட்சிசுந்தரம்பிள்ளை 43, 60, 84, 95, 129, 156, 176, 243
மீனாட்சிசுந்தரனார் 179, 240
மீனாட்சி தமிழ்க்கல்லூரி 151
முகவூர் கவிராயர் 107
முத்துசாமிப்பிள்ளை 172
முத்துப்பிள்ளை 68
முத்துரத்தினமுதலியார் 122, 286
முத்தையாபிள்ளை 209, 211
முத்தொள்ளாயிரம் 15
முருகேசசெட்டியார் 248
முல்லைப்பாட்டு 99
மூனியப்பமுதலியார் 183
மூவர்முதலிகள் 29, 30
யாப்பருங்கலவிருத்தி 70
யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரல் இரும்பொறை 53
வடிவேலு செட்டியார் 179
வடுகநாததேசிகர் 191
வடுகநாதபண்டாரம் 169
வரகுணபாண்டியர் 33, 35
வரதப்பமுதலியார் 177, 192
வலைவீசுபுராணம் 45
வனையாபதி 41, 108
வாக்கர் 182
வாகனமாலை 92
விசயநகரஅரசு 47
விசாகப்பெருமாளையர் 140, 173
வில்சன் 112
வீரமாமுனிவர் 71, 72
வெங்கலப்ப நாயகர் 79
வெள்ளைவாரணர் 240
வேங்கடசாமிநாட்டார் 267, 273
வேங்கடாசலம்பிள்ளை 31, 198 267, 273
வேணுகோபால நாயகர் 179
வேணுகோபாலபிள்ளை 204
வேதகிரிமுதலியார் 140, 175 183
வேலப்பபூபன் 104
வேலாயுதமுதலியார் 320
வேலுப்பிள்ளை 75
வையாபுரிப்பிள்ளை 139, 145, 153, 199, 286, 299, 332, 343

அரிமாப் பதிப்பகத்தார்
அளிக்கும் நூல்கள்

பாவேந்தர் பிள்ளைத்தமிழ் (புலவர் புலமைப்பித்தன்)	32	00
கரும்பு (குழந்தை மலர்)	4	00
வீணை (குழந்தை மலர்)	4	00
ஊஞ்சல் (குழந்தை மலர்)	4	00
கலியின் நலிவு	4	00
இன்னிசை இருநூறு	6	00
சூரிய விழுதுகள்	4	00
முதுகலைப் பூந்துணர்	12	50
நோயின்றி வாழ முடியாதா?	2	25
இயற்கை மருத்துவ அடிப்படை	4	50
இனியசாறுகளும் இனிக்கும் பயன்களும்	1	00
'புற்றுநோய்' பச்சை உணவால் நலம் பெற்ற வரலாறு	1	25
வாருங்கள் பேசுவோம் உடல்நலம் பற்றி	2	25